சீவக சிந்தாமணி

சைவ சித்தாந்த மகா சமாஜம்

உ

திருத்தக்கதேவர்

இயற்றிய

சீவக சிந்தாமணி

சைவ சித்தாந்த மகா சமாஜம்

22-A, கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர்,

சென்னை

1941

உரிமை
பதிவு செய்யப்பட்டது

தனிப்பிரதி விலை ரூ. 1-8-0
ஏழுபிரதிகள் ,, 10-0-0

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை. சென்னை

உரிமையுரை

திருவையாற்றுக் கல்லூரியைத் தமிழ் வண்ணமாக்க
உழைத்தவரும்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை வளர்த்தவரும்,
அச்சங்கச் சார்பில் பலதிற அமைப்புக்களை நிறுவினவரும்,
சென்னைப் பல்கலைக் கழகத்திலும்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும்
தமிழ்க் கலங்கரை விளக்கமெனத் திகழ்ந்தவரும்,
தமிழ் நாட்டின் ஆக்கத்துக்கென்று
தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அளித்தவரும்

ஆகிய

செந்தமிழ்ப் புரவலர் - தமிழவேள் - ராவ்சாகிப்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின்

இன்ப அன்புத் தொண்டுக்கு
நினைவுக் குறியாக
இப்பதிப்பு

உரிமையாக்கப்படுகிறது

உள்ளுறை

		பக்கம்
அபிதான விளக்கம்	... ...	479
அரும்பதவுரை	... ...	502
அவையடக்கம்	... ...	1
இலக்கணையார் இலம்பகம்	... ...	334
உரிமையுரை	... ...	3
ஓம்படை	... ...	447
கடவுள் வாழ்த்து	... ...	1
கனகமாலையார் இலம்பகம்	... ...	217
காந்தருவ தத்தையார் இலம்பகம்	...	69
குணமாலையார் ,,	...	119
கேமசரியார் ,,	...	196
கோவிந்தையார் ,,	...	57
சில பிரதிகளில் காணும் தனிச் செய்யுட்கள்	...	448
சுரமஞ்சரியார் இலம்பகம்	... ...	279
திருத்தக்கதேவர் சரித்திரம்	... ...	25
தோத்திரப் பாடல்களும் வரிப் பாடல்களும்	...	513
நரிவிருத்தம்	... ...	514
நாமகள் இலம்பகம்	... ...	5
நூற்பொருள்	... ...	48
பதிகம்	... ...	2
பதுமையார் இலம்பகம்	... ...	162
பாட்டு முதற்குறிப்பு	... ...	449
பிழை திருத்தம்	... ...	522
பூமகள் இலம்பகம்	... ...	326
மண்மகள் ,,	... ...	294
முகவுரை	... ...	5
முத்தி இலம்பகம்	... ...	366
விமலையார் இலம்பகம்	... ...	264
ஸ்ரீ புராணத்துள்ள சீவக சரித்திரம்	...	29

முகவுரை

சிந்தா மணிதெண் கடலமிர் தம்தில்லை யானருளால்
வந்தா விகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேனியனை யானகன் குற்றுவனே
சிந்தா குலமுற்றென் னேளென்னை வாட்டந் திருத்துவதே.

—திருக்கோவையார்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக இன்று சீவக சிந்தாமணி மூலமும், ஆராய்ச்சிக்குப் பயன் தரக்கூடிய அபிதான விளக்கம் முதலியனவும், சிந்தாமணி யாசிரியரியற்றிய நரிவிருத்தமும் வெளிவருகின்றன. சென்ற ஆண்டில் "சங்க இலக்கியம்" என்ற சமாஜ வெளியீட்டை அன்போடு வரவேற்று ஆதரித்த பேரறிஞர் பலர், சிந்தா மணி சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய பெருங்காப்பியங் களும் விரைவில் சமாஜப் பதிப்புக்களாக வெளிவருதல் வேண்டுமென்று விரும்பினர். அவர்கள் விருப்பத்துக் கிணங்கவே இப்பதிப்பு வெளிவந்துள்ளது.

இனி இந்நூலைப்பற்றியும், இந்நூல் இயற்றப்பட்ட காலத்தைப்பற்றியும், இந்நூலை இயற்றிய ஆசிரியரைப் பற்றியும், இப்பதிப்பிற் காணப்படும் சில பாடங்களின் பொருத்தத்தைப்பற்றியும் சில குறிப்புக்களைத் தொகுத் துக் கூறுதல் பயன்தருவதாகும்.

I

திருத்தக்க தேவர் இயற்றிய இச்சிந்தாமணி தமிழி லுள்ள ஐம்பெருங் காவியங்களில் ஒன்று. ஐம்பெருங்காவி யம் என்னும் வழக்கு மயிலை நாதரால் ஆளப்பட்டுள்ளது. "இவ்வாறே ஆண்பாற் பொருட் பெயரும் பெண்பாற் பொருட்பெயரும், ஏனையபாற் பொருட்பெயரும், இடப் பெயரும் காலப்பெயரும் சினைப்பெயரும் பண்புப்பெயரும் தொழிற்பெயரும் மரபுப்பெயரும் வழுவாமல் ஐம்பெருங் காவியம் எண்பெருந் தொகை பத்துப்பாட்டு பதினெண்

கீழ்க்கணக்கு என்னும் இலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச் சொற்பனுவலுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக' என்று இவ்வுரைகாரர் (நன் - சூ - 387) கூறுகின்றார். தமிழ் விடுதூது என்னும் பிரபந்தத்திலும்,

> 'பற்றுமிலக்கண நூற் பாவுநூற் பாவறிந்து
> கற்றூர் வழங்குபஞ்ச காப்பியமும்'

என்று கூறப்படுகிறது. ஐம்பெருங் காப்பியங்கள் இன்னை வென்பது,

> 'சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்
> கந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா
> வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
> திளையாத குண்டலகே சிக்கும்...'

என்றுவரும் திருத்தணிகையுலாப் பகுதியால் விளங்கும்.

சிந்தாமணி தன்மையாற் பெயர்பெற்றது என்பது மயிலைநாதர் (சூ. 48, உரை) 'தன்மையாற்பெயர்பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின' என்று கூறுவது கொண்டு அறியலாம். சிந்தாமணி என்னும் தெய்வ மணி கருதியனவெல்லாம் அளிக்கும் இயல்பையுடைய தென்று கூறுவர். அதுபோல, சிந்தாமணி என்னும் காவிய மும் அதனைக் கற்றூர் விரும்பும் உறுதிப் பொருள்களனைத் தையும் அளிக்கும் இயல்பையுடையது என்பது மயிலைநாதர் கருத்தாதல் வேண்டும். இவ்வுரைக்காரர் சைனரென்பது மனங்கொள்ளத்தக்கது. புலவர்களுக்கும் கவிஞர்களுக்கும் சிந்தாமணிபோன்று உதவுதலின் இப்பெயர் இந்நூலுக்கு வாய்ந்தது என்று கூறினும் பொருந்துவதாகலாம். காவிய நாயகனுகிய சீவகன் பிறந்தபொழுது அவன் தாய் விசயை, 'சிந்தாமணியே! கிடத்தியால்' என்று அழைத்தது பற்றி இக்காவியத்திற்குச் சிந்தாமணி என்ற பெயர் வழங்க லாயிற்று என்று கூறுவாரும் உளர்.

மணநூலென்றும் இக்காப்பியத்திற்கு ஒரு பெயர் வழங்குகிறது. கதாநாயகனுகிய சீவகன் காந்தருவதத்தை

முதலிய எட்டுப் பெண்களை மணஞ் செய்துகொண்ட வரலாற்றினை எட்டு இலம்பகங்களிற் கூறுதல்பற்றி இப்பெயர் இந்நூலுக்கு எய்திற்று.

இக்காப்பியத்தின் கண்ணேயே ஓம்படைச் செய்யுட்களிரண்டிலும், 'சிந்தாமணி ஓதியுணர்ந்தார் கேட்டார் இந்நீரராயுயர்வர்' (3152) என்றும், 'சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்' (3153) என்றும் வரும் பகுதிகள் இந்நூற்கு ஆசிரியர் இட்டபெயர் இன்னதென்பதை விளக்குகின்றன. பிற்காலத்தும் சிந்தாமணி என்ற இப்பெயரே வழங்கிற்றென்பது மேலே காட்டிய பிரயோகங்களால் நன்கு விளங்கும். ஆனால் விவேக சிந்தாமணி போன்ற வேறு பல நூல்களும் இக்காலத்து இருத்தல்பற்றி இக்காப்பியம் சீவக சிந்தாமணி என வழங்கப்படுகிறது.

இக்காப்பியத்தின் முதல் இலம்பகமாகிய நாமகள் இலம்பகத்தைக் கி. பி. 1868ல் ரெவரெண்ட். எச். பவர் என்பவர் திரு. இ. முத்தைய பிள்ளை என்பவரது உதவி கொண்டு பதிப்பித்து வெளியிட்டனர்.* இப்பதிப்பிற்குப் பூர்வாங்கமாக ஓர் அழகிய முன்னுரையும் ஆங்கிலத்திலே எழுதிச் சேர்த்துள்ளார். அதிலே ஜைனசமயக் கோட்பாடுகளனைத்தும் மிக விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. இப்பதிப்பு மிகவும் அழகாகவும் செவ்வையாகவும் அமைந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது. இன்றும் இப்பதிப்புப் பயன்தரத்தக்கதாகவே உள்ளது.

---

*The Chintamani. First Book, called Namagal Ilambam; with The Commentary of Nachinarkiniyar; and with analysis and notes in English, Tamil and English Indexes, and an English introduction explaining the Jaina system upon which the work is based; by Rev. H. Bower, with the assistance of E. Muttaiya Pillai. Madras. Printed by H. W. Laurie, at the Christian Knowledge Society's Press, No. 18, Church Street, Vepery. 1868.

பின்னர் நாமகளிலம்பகம், கோவிந்தையா ரிலம்பகம், காந்தருவதத்தையா ரிலம்பகம் என்ற மூன்று பகுதிகளும் பீ. ஏ. வகுப்புப் பாடங்களாகச் சென்னை ஸர்வ கலா சாலையாரால் பல வருஷங்களில் நியமனஞ் செய்யப்பட்டன. இப்பகுதிகளில் ஒவ்வொன்றையும், சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியாரவர்கள் நன்கு பரிசோதித்து, பதவுரை நச்சினார்க்கினியருரை முதலியவற்றோடு வெளி யிட்டார்கள். திரு. செட்டியாரவர்கள் மரணமான பின் பும் அவர்கள் பதிப்பிற்கிணங்க ஒரு சில பதிப்புக்கள் அச்சிடுவிக்கப்பட்டன.

சிந்தாமணியின் முதல் ஐந்து இலம்பகங்கள் மூலபாட மாக **1883-ம்** ஆண்டில் புதுக்கோட்டை சமஸ்தான வித்துவான் ப. முருகேச கவிராயர் சகோதரராகிய ப. அரங்கசாமி பிள்ளை யவர்களால் பல பிரதி ரூபங் களைக் கொண்டு பரிசோதிக்கப்பெற்று, சென்னபட்டணம் அஷ்டலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட் டது. இதன் முகப்புப் பக்கத்தில் முதற்பாகம் என்று காணப்படுதலால், இரண்டாம் பாகமொன்று வெளிப் படுத்தி, பதிப்பைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற கருத்து பதிப்பாளருக்கு இருந்ததென்று கொள்ளக் கிடக்கி றது. ஆனால் இவ்விரண்டாம் பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை. மூலப் பதிப்பிற்குச் சென்னை இராஜதானி வித்தியாசாலையில் பிரதம தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீ. தி. ஈ. சீனிவாச ராகவாச்சாரியாரும், சென்னை புரசைப்பாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும், சர்வகலாசாலைத் தமிழ்த்தலைமைப் புலவர் கோமளபுரம் இராஜகோபால பிள்ளையும், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரான வேங்கடசுப்பு பிள்ளையும் 'சாற்றுக்கவிகள்' அளித்துள்ளார்கள்.

இவ்வாறாக, அபூர்த்தியான பதிப்புக்கள் வெளிவந்த னவே யொழிய, நூல் முழுதும் அடங்கிய பதிப்பு வெளிவர

வில்லை. 1887 - ம் ஆண்டில் மகா மகோபாத்தியாய் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நூல் முழுவதும் அடங்கிய பதிப்பு வெளியிட்டார்கள். அக்காலத்தில் அவர்கள் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார்கள். இப்பதிப்பில் அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமமும் ஊக்கமும் அதற்கு நேர்ந்த இடையூறுகளும் 'ஆனந்த விகட'னில் இப்போது எழுதப்பட்டு வருகின்றன. ஐயரவர்கள் முதல் முதலிலே பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல் சிந்தாமணியே யாகும். ஆதலால், இப்பதிப்பு வெளிவந்தது அவர்களுக்குப் பெரும்புகழ் விளைப்பதாயிற்று. ஆனால், இப்பதிப்பிலே பல குறைகள் இருந்தன வென்பது உண்மையே. இதில் குணமாலையாரிலம்பகம் வரையி லுள்ள பிழைகளை யெல்லாம் திரட்டி ஒரு சிறு புத்தகமாக யாழ்ப்பாணத்திலிருந்து பொன்னம்பலதேசிகர் என்பவர் வெளியிட்டனர். 'ஞானமிர்தம்' என்ற பத்திரிகையிலும் இப்பதிப்பிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டிய நீண்ட மதிப்புரையொன்று வெளிவந்ததாகத் தெரிகிறது. இவ் வெளியீடுகளால் ஐயரவர்கள் பின்பு வெளியிட்ட பதிப்புக்கள் பயனடைந்தன என்று கூறுதல் மிகையாகாது.

இவற்றாலும், பின்னர்க் கிடைத்த ஏட்டுப்பிரதிகளின் உதவியாலும் பல திருத்தப்பாடுகளைச் செய்து, முதற்பதிப்பு வெளிவந்து சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது 1907-ல் ஐயரவர்கள் சிந்தாமணியின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்கள். பின்னர் 1922-ல் மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. இப்பதிப்பின் முன்னுரையில், 'இரண்டாம் பதிப்பு வெளிவந்த பின்பு கிடைத்த சில கையெழுத்துப் பிரதிகளாலும், செய்து வந்த நூல்களின் ஆராய்ச்சிகளாலும் இந்நூலும் இவ்வுரை முதலியனவும் சில சில திருத்தங்களையும் பொருட்பெருக்கத்தையும் விளக்கத்தையும் இப்போது அடைந்துள்ளன' என்று எழுதப்பட்டுள்ளது.

மூன்றும் பதிப்புச் சிலசில திருத்தங்களைப் பெற்றிருந்த போதிலும், இன்னும் திருத்தப்பாடு எய்த வேண்டும் இடங்கள் பலவுள்ளன. ஆராய்ச்சிக்கு முடிவில்லை. முயற்சி மிகுந்தோறும், பிரதிகளின் உதவி பல்குந்தோறும், திருத்தங்கள் ஏற்பட்டுக்கொண்டிருத்தல் இயல்புதான். தமிழ்க் கல்வி மேன்மேலும் பரவ வேண்டுமாயின், பிழைகளைப் பிழையென வுணர்தல் வேண்டும். அவற்றைப் பொதிந்து வைத்தலைக் காட்டினும் தமிழன்னைக்குச் செய்யும் பெருந்தீங்கு ஒன்றுமில்லை. பிழையுளதெனக் காட்டிய மாத்திரையில், பதிப்பினைக் குறைகூறியதும் ஆகாது. பதிப்பு மேன்மேலும் திருந்த வேண்டுமென்னும் ஒரு நோக்கம் பற்றியே சில பிழைகள் இங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன.

87-ம் செய்யுளின் முதலடி 'பாத்தரும் பசும்பொனின் மாடத் துச்சிமேல்' என்று மூன்றும் பதிப்பிற் காணப்படுகிறது. உரையில் 'மாற்றற்ற பொன்' என்று உள்ளது. 'பாத்தரும்' என்பது 'மாற்றற்ற' என்று பொருளாதல் இல்லை. 'பாத்தரும் பசும்பொற் றூலம்' (398) என்ற பிரயோகத்தைக் காட்டுவாருளரேல், அங்கே கொடுக்கப்பட்டுள்ள பொருள் 'ஓடின பொன்' என்பது; 'மாற்றற்ற' என்பதன்று. பா தரும் என்று பிரித்துப் 'பரவு (ஓடு) தலைத் தரும்' என்று கொண்டு, 'ஓடின' எனப் பொருள் செய்துள்ளமை தெளிவாம். ஆகவே 87-ம் செய்யுளில் 'மாற்றற்ற' என்பதற்குரிய மூலமேயிருத்தல் வேண்டும். 'மாற்றறு பசும் பொனின்' என்ற பாடம் பிரதிகளிற் காணப்படுகின்றது. பொருளுக்கும் மோனைநயத்திற்கும் இப்பாடமே சிறந்ததாதல் தெளியலாம். ஒரே செய்யுளில் எதுகை வேறுபட்டு வருதல் சிந்தாமணியில் வேறிடங்களிலும் காணலாம். உதாரணமாக 172-ம் செய்யுளைக் காண்க. இதுபோன்ற செய்யுட்களை ஐயரவர்களே 'நூலைப் பற்றிய சில குறிப்புக்கள்' என்ற தலைப்பிற் கொடுத்துள்ளார்கள்.

94-ம் செய்யுளின் மூன்றுமடியின் இறுதிச்சீர் 'பார்ப் பெனுங்' என்று மூன்றும் பதிப்பிற் காணப்படுகிறது. 'பார்ப்பை அக் கிளிக்கு எண்ணிக் காட்டுதற்குக் காரணமாகிய' என்பது உரை. எனவே மூலபாடம் 'பார்ப் பெனும்' என்றே இருக்க வேண்டும். இப்பாடமே ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுவது. ஐயரவர்கள் பதிப்பிலுள்ளது அச்சுப் பிழையுமன்று. ஏனெனின் 'பிழையும் திருத்தமும்' என்ற பகுதியில் அது காட்டப் பெறவில்லை.

619-ம் செய்யுளின் முதலடியில் 'ஓரைவில் அகலமாக' என மூன்றும் பதிப்பில் தரப்பட்டுள்ளது. உரையில் 'ஓரைந்து விற்கிடை அகலமாக எங்குந் திருத்தி' என்ற பொருள் காணப்படுகிறது. மேற்குறித்த பாடத்தில் 'எங்கும்' என்பதற்குரிய சொல் இல்லை. இப்பொழுது கிடைத்த ஒரு பிரதியில் 'அகலமெங்கும்' என்ற பாடமிருந்தது. 'அகலம்' என்பதை 'அகலமாக' என்று பொருள் பண்ணிக் கொள்வதில் யாதோர் இடர்ப்பாடுமில்லாமை உணரத்தக்கது.

686-ம் செய்யுளில் முதலடியின் இறுதிச்சீர் 'நிலை கலங்குவார்' என மூன்றும் பதிப்பில் உள்ளது. இது பாடமன்மை 'இன்னனென்ன' (698) என்ற செய்யுளின் கீழ்க் காணப்படும் வினைமுடிபுப் பகுதியால் விளங்கும். அங்கே 'நிறை கலங்குவாரும்' என்று காணப்படுகிறது. இப்பாடமே பிரதிகளாலும் ஆதரிக்கப்படுகிறது. இச் செய்யுளிலே ஈற்றடியில் 'நெஞ்சுருகிக் காம' என்ற பாடத்தை ஐயரவர்கள் கொண்டுள்ளார்கள். இப்பாடம் கொள்ளத்தக்க தன்றென்பதும் 'நெஞ்சுருகித்தாம்' என் பதே உண்மைப்பாடமென்பதும் எளிதின் உணரத்தகும்.

746-ம் செய்யுளில் மூன்றுமடி 'கள்ளரிற் புலியை வேறு காணிய' என மூன்றும் பதிப்பிலுள்ளது. இதற்கு நேருரை எழுதப்படவில்லை. பழமொழியாற் கருதப்பட்ட பொருளையே நச்சினார்க்கினியர் கூறிச்சென்றார். இதற்கு

உரிய பொருளை ஐயரவர்களே 'கள்ளா வா புலியைக் குத்து' என்ற நவீன வழக்கினால் புலப்படுத்திவிட்டார்கள். ஆகவே மேற்குறித்த தொடருக்கு 'கள்ளராற் புலியைக் குத்துதல்' என்பதே பொருளாதல் வேண்டும். இப்பொருளிற்கேற்ப 'கள்ளராற் புலியை யேறு காணிய' என்பதே மூலமாதலும் வேண்டும். ஏறு என்பது எறிதல் என்னும் பொருட்டு. இம்மூலபாடம் இப்பொழுது கிடைத்த ஒரு பிரதியிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரதியொன்றிலும் காணப்பட்டது. 'வேறு' என்பதற்குப் பொருளில்லை. அது வெற்றியென்னும் பொருளது எனக் கூறுவாருளரேல், அப்பொருட்கு ஆதாரம் இலக்கிய வழக்கில் யாண்டும் இல்லை.

1078-ம் செய்யுளில் முதலடியின் மூன்றுஞ்சீர் 'சோர' என மூன்றும் பதிப்பில் உள்ளது. ஆனால் உரையில் 'இறுக' எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இப்பொருளுக்குச் 'சோரா' என்ற பாடமே நேரிது. இந்நேரிய பாடம் சோராது என்று பொருள்பட்டு, 'இறுக' என்பதை உணர்த்தும். இப்பாடம் ஒரு பிரதியில் காணப்பட்டது.

இங்ஙனமாக மூலபாடம் திருந்த வேண்டிய இடங்கள் பலவுள்ளன. மீண்டும் பிரதிகளைப் பரிசோதித்துத் திருந்திய பாடங்களமைந்த பதிப்பு வெளிவரவேண்டும் அவசியம் இதனால் விளங்கும். இன்றியமையாத இவ்வேலையில் நமது சமாஜம் முனைந்து ஈடுபடத் தொடங்கிற்று.

இம் மூலப்பதிப்பிற்கு உதவிய ஏட்டுப் பிரதிகள் மூன்று. ஒரு பிரதி திருநெல்வேலி சாலிவாடீசுர ஓதுவார் மூர்த்திகளுக்கு உரியது. இதனை உபகரித்த அன்பர் ஸ்ரீ சுந்தர ஓதுவார்மூர்த்திகளாவர். பிறிதொரு பிரதி (இரண்டு ஏட்டுப் புத்தகம்) கோயிற்பட்டிக்குப் பக்கத்துள்ள மந்தித்தோப்பு ஸ்ரீசங்கரபாரதி சுவாமிகளின் ஆதீனத்திற்குரியது. இதனை வாங்கியுபகரித்தவர் திருநெல்வேலி ஸ்ரீவைகுண்டத்

தில் தாசீல்தாராக இருக்கும் ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமா னவர்கள். பிறிதொரு பிரதி ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ M. P. S. துரைசாமி முதலியாரவர்கள் பெற்றுவைத்திருந்தது. இவற் றைத் தவிர, சென்னை அரசாங்கீ நூல் நிலயீத்துப் பிரதிகள் சிலவும் அப்போதைக்கப்போது அவசியம் நேர்ந்தவிடத்து ஒப்புநோக்கப்பட்டன.

இங்ஙனம் பெரு முயற்சியெடுத்துப் பிரதிகளை ஒப்பு நோக்கியபோதினும், புறத்திரட்டில் காணப்படும் இரண்டு செய்யுட்கள் ஒரு பிரதியிலும் உள்ளனவாகத் தெரியவில்லை. அவை வருமாறு :

மலங்கிமதி யின்றியயர் வெய்திமயல் கூர
நலங்கியறி யாதுதுய ரெய்திநனி வாடும்
விலங்குறு கடுந்துயர் விலங்குதல் விரும்பிற்
புலன்கொள்வழி பொய்யுரை புறத்திடுமி னென்றான்.

(புறத். 315)

உள்ளமொழி செய்கைகளி னொன்றியுல கேத்துந்
தள்ளரிய தன்மைவழி நிற்றலுறு நல்லீர்
எள்ளுநர்கள் தன்மையிது நிற்கவிடர் செய்யுங்
கள்ளுமுணல் குற்றங் கடைப்பிடிமி னென்றான்.

(புறத். 1064)

இந்நூலின் உரைகாரராகிய நச்சினார்க்கினியர் தாமே சில செய்யுட்களின் முதற் குறிப்புக்களைத் தந்து 'அவை பயில வழங்கா' (442-ஆம் செய்யுளின் பின்) என்று எழுதினர். இவையே யன்றிப் பல செய்யுட்கள் உரை யின்றிக் காணப்படுவனவாகவுங் குறிக்கப்பட்டுள்ளன. (சிந்தா. மூன்றாம் பதிப்பு, பக். 138, 187, 191, 211, 298, 424, 548, 584). இங்ஙனம் மிகையாகப் பிரதிகளிலுள்ள செய்யுட்களென மேற்காட்டிய இரண்டனையும் கொள்ளு தல் கூடும்.

மேலும், ஐயர் அவர்கள் மூன்றும் பதிப்பின் முக வுரையில்;

'எட்டுப் புத்தகங்களைச் சோதித்த பொழுது இரண்டு பழம் பிரதிகளில் 'தெருளிற் பொருள்வா னுலகு' (2881) என்ற செய்யுளின் உரைக்குப் பின் மூன்று செய்யுட்களின் உரைகள் மட்டும் மிகப் பிழைபட்ட உருவத்துடன் எழுதப் பட்டிருந்தன. ஒரு பிரதியில் தனித்தனியே செய்யுட் களுக்கு இடம் விட்டும் மற்றொன்றில் இடம் விடாமலும் அவ்வுரைகள் இருந்தன. அவ்வுரைகளுக்குரிய 3 பாட்டல் களும் வேறு எந்தப் பிரதியிலும் கிடைக்கவில்லை. திருத்த மாக அவைகளும் பாடல்களும் கிடைத்தபின் வெளியிடப் படும்'

என்று எழுதியுள்ளார்கள்.

இம்மூன்று செய்யுட்களின் உரைகளும் வருமாறு:

1. '. . . பெருமற்[1] கள்ளுண்டார் தம்முள்ளே மறைக்கும் பொருளையும் ஈதென்று வெளியாக்குவர்; அவர்க்குத் தம்மா லெள்ளப்படுவாருந் தம்மை யெள்ள நவையு முண் டாம்; அதனை நுகரவேண்டில், உயிர்க் கொலையும் வேண்டும்; ஆதலால் உணர்வழிக்குங் கள்ளுண்டலும் நுமக்கு வேண்டா; அதனை யிகழ்ந்து தவிர்க' என்று கூறினு னென்று னென்க.

2. தான ... ...
... ...
... ...
... ...

'தான... ...மிடைந்த வூனிற் சீர் - என்பை நிரைத்து நரம்பாற் பின்னினவுடம்பின் கனம்; என்றது நிண[2] நெய்யை. உண்ட ஈக்கள் பரந்து, மாம்பூவின் மதுவை யுஞ் சீரையும் ஒரு நிகராக[3] ஈட்டி, அவையிற்றினின்று

[1]பெருமா. [2]பிண. [3]ஒரு சிறைக.

நுகராதே பறந்துபோன பின்பு, [1]கண்டு ஆய்வார் கொணர்ந் தோம்பிவைத்த தேனை யுண்டலும் வேண்டா; அதன் தீங்கைத் தெரிந்தறியின்' என்று கூறினு னென்ரு னென்க.

இழித ஈட்டியவை - இருல் இழித்ததல்...

3. அழுந்திளையர் - ஆடவர்; அழுத்திளையரென் விகாரம்; என்றது ஊனை நுகர்தற்கு அழுந்தும் உணர்வில்லா தாரை. சார்தற்கு - நுகர்தற்கு அரிகாயர் - ஐய வுடம் பினர்; என்றது மகளிரை. புல்லுதல் - சமைத்தல்; 'வெங்கருனை புல்லுதற்கு' (சீவக சிந். (2790) என்ருற் போல.

'அழுத்திளையர் அரிகாயராகிய அவரை நோக்கி, இழிக் குந் தகையவாகி ஈ மொய்த்துப் புழுப்பயிலுதலை யுடைத் தாகிய புண்ணுகிய பிணத்தை யாம் நுகர்தற்கு இணை யில்லாவா யுவக்கும்படி கறியாகச் சமையென்று கூற... ... ...பட்ட வூனை யுண்டலை உணர்ந்தவர்கள் தவிர்வீ ராக' என்று கூறினு னென்ரு னென்க.

இனி 'வழுத்திளையர்' என்று பாடமோதி, 'தம்மை யெப்பொழுதும் வழுத்து மடவார் நுகர்தற்குத் தசையை அரிகின்ற வுடம்பினை யுடையர்' என்று மகளிர்க்குப் பெயராக்கலு மொன்று. 'என்ருன்' என்பதனை முன் னர்க் கவிகட்குங் கூட்டுக.

இவ்வுரைகளுக்குரிய மூலங்களும் பிரதிகளில் அகப்பட வில்லை.

பரிசோதித்த பிரதிகளில் மிகையாய்க் காணும் செய் யுட்களனைத்தும் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனல் கீழ்வருஞ் செய்யுட்கள் மிகவும் பிழைபட்டிருத் தலின் அவை அங்ஙனம் சேர்க்கப்படவில்லை.

---

[1]கண்டாராவாராகருணாந.

1814-ம் பாட்டின் பின்

• முன்னைப் பருபமட்கண் மூடிய பாவத்தா
லென்னைப் பிரிந்து என்மகனே தீதிலனற்
றன்னையீன் காணப் பெறேனுசிற் றெவிர்த்தா
னென்னையான் செய்த பிழையேனங் கூறீரே.

2625-ம் பாட்டின் பின்

... ... றுடம்புகெட் டதனினும்பர்
முழவுத்தோள் மொய்ம்பனுகத் தோன்றினு னதனி னீங்
விழவுதீர் கிழவனுகி வெண்ணரைச் சென்னி தூங்கி [கி
அழியுமால் யாக்கை யின்னே அறத்திறமறவலென்ருள்.

நச்சினுர்க்கினியர் கருத்தின்படி திருத்தக்கதேவர் அருளிச்செய்த செய்யுட்கள் இரண்டாயிரத்து எழுநூரும். இவரது ஆசிரியர் செய்யுட்கள் இரண்டும் நீக்கி, எஞ்சியுள்ள மிகைச் செய்யுட்கள் கந்தியாரால் இடைமடுக்கப் பட்டன என்று கூறுகின்றனர்.

இங்குக் காட்டியவற்ருல் இன்னும் பல சிந்தாமணிப் பிரதிகளை ஒப்புநோக்கவேண்டும் அவசியமுண்மை தெளியப்படும்.

II

இனி, சிந்தாமணி இயற்றப்பெற்ற காலம் இன்னதென வரையறுக்க முயலுதல் வேண்டும். திருத்தொண்டர் புராண வரலாற்றில்,

'கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்
றுலகிலுளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணு
துமிக்குத்திக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார். 20

வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச் சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசை கூறி
உளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க
உபயகுல மணிவிளக்காஞ் சேக்கி ழாரங்கண்
டிளவரசன் றனைநோக்கிச் சமணர் பொய்ந்நூல்
இதுமறுமைக் காகாதிம் மைக்கு மற்றே
வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கும்
மறுமைக்கும் உறுதியென வளவன் கேட்டு' 21

என வருகின்றது. அனபாயனுகிய குலோத்துங்கசோழன் சிந்தாமணியைக் கற்றுக் காலத்தைப் போக்கினுனென்பதும், சிவகதையைக் கேட்டு உய்யும்படி அவனைச் சேக்கிழார் அறிவுறுத்தினரென்பதும், இவ்வறிவுறுத்தலின் விளைவாகத் திருத்தொண்டர் புராணம் இயற்றப்பட்டதென்பதும் இங்கே குறித்துள்ள சரிதம். இதனுல் கி. பி. 1133 - 1146 வரை அரசாண்ட குலோத்துங்கசோழதேவர்க்கு முற்பட்டது சிந்தாமணியெனல் வெளிப்படை.

யாப்பருங்கல வுரையில் சிந்தாமணி பெயராற் குறிப்பிடப்படுவதோடு அதன்கணின்று சில செய்யுட்களும் மேற்கோளாக எடுத்தாளப்படுகின்றன. 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி என்றிவற்றின் முதற்பாட்டு வண்ணத்தான் வருவன. அவற்றில் நேரசை முதலாய் வரின் ஓரடி பதினுன்கெழுத்தாம்; நிரையசை முதலாய்வரின் ஓரடி பதினைந்தெழுத்தாம்' என்று அந்நூலின் ஒழிபியலிறுதிச் சூத்திரவுரையில் வருகின்றது. (யாப். வி. இரண்டாம்பகுதி. பக். 511). யாப்பருங்கலமும் அதன் உரையும் 11-ம் நூற்றுண்டில் இயற்றப்பட்டவை. இந் நூற்றுண்டினரான உரையாசிரியர் எனப்படும் இளம் பூரணரும் ஆசெதுகைக்கு உதாரணமாக 'காய்மாண்ட தெங்கின்' என்ற சிந்தாமணிச் (31) செய்யுளைத் தந்துள்ளார். ஆகவே சிந்தாமணி 11-ம் நூற்றுண்டுக்கு முற்பட்ட

தெனல் தெளிவாம். இக்காலத்தைப் பின்னெல்லையாக வைத்துக் கொள்ளலாம்.

உதயணன் கதை என்பது கொங்குவேளிர் என்ற ஜைனரால் இயற்றப் பெற்றதொரு தமிழ்க் காவியம். பைசாசி பாஷையிலுள்ள ப்ருஹத் கதையைக் கங்க அரசனாகிய துர்விநீதன் மொழிபெயர்த்தியற்றிய வடமொழிப் [1]பெருங்கதை யொன்று இருந்தது. துர்விநீதன் ஜைன சமயத்தைச் சார்ந்தவன். ப்ருஹத் கதை சார்பாக வடமொழியிலுள்ள மற்றைய நூல்களையெல்லாம் இயற்றியவர்கள் ஜைனர்களல்லர். ஆதலால் துர்விநீதன் இயற்றிய காவியமே தமிழிலுள்ள பெருங்கதைக்கு முதனூலாகும். டாக்டர் - உ. வே. சாமிநாதையரவர்களும் இக்கருத்தினையே ஆதரிக்கிறார்கள். (பெருங்கதை முன்னுரை பார்க்க.) துர்விநீதனது ஆட்சியின் தொடக்கம் 6-ம் நூற்றாண்டின் இறுதி; அவன் மொழிபெயர்த்தது சுமார் கி. பி. 600 என்று கொள்ளலாம். இம்மொழிபெயர்ப்புப் பிரசாரமெய்திய பின்னரே தமிழ் மொழிபெயர்ப்பு ஆக்கப்பட்டிருத்தல் கூடுமாகலின், தமிழிலுள்ள பெருங்கதை தோன்றிய காலம் சுமார் கி. பி. 700 என்று கொள்ளுதல் தகுதியாம். இப்பெருங்கதையைச் சிந்தாமணி பல இடங்களில் எடுத்தாளுகின்றது. கருத்தும், தொடர்களும், சொல்லும் பலவிடங்களில் ஒற்றுமைப்பட்டுச் செல்லுகின்றமை டாக்டர் சாமிநாதையரவர்களுடைய சிந்தாமணிப் பதிப்பின் ஒப்புமைப் பகுதியால் அறியலாம். பெருங்கதை நின்று நிலவிய பின்னரே இங்ஙனம் எடுத்தாளுதல் கூடுமாகலின், கி. பி. 800-ம் ஆண்டைச் சிந்தாமணி தோன்றிய காலத்திற்கு முன்னெல்லையாகக் கொள்ளலாம்.

---

[1]Deva - bharati - nibadda Vadda-Kathena... Durvinita-Namadheyana (Uttanur plates l. 25-26, Mysore A. R. 1916. p. 36)

எனவே கி. பி. 800 முதல் 1000 வரையுள்ள காலப் பகுதியில் சிந்தாமணி இயற்றப்பட்டிருக்கவேண்டும்.

ஜைனுசாரியர்கள்[1] பற்பல சங்கத்தாராகப் பிரிக்கப் பட்டிருந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் பல கணங்கள் இருந்தன ; இக்கணங்க ளொவ்வொன்றிலும் பல கச்சை கள் அடங்கியிருந்தன. தென் தேசத்துச் சங்கங்களில் மிகப் பிரபலமாயிருந்தது திரமிள சங்கம். இத்திரமிள சங்கத்தில் பிரசித்தி யடைந்தது நந்திகணம் ; நந்திகணத் தில் மிகச் சிறந்தது அருங்கலான்வயம். இந்த அன்வயத் தோர் முதன் முதல் தீபங்குடியிலுள்ளோரா யிருந்தனர். இவர்கள் தமிழரேயாயினும், தமிழ், கன்னடம், சம்ஸ் கிருதம் என்ற மொழிகளில் புலமையுடையராய் விளங்கி ஞர்கள்.

இங்குக் குறித்த திரமிள சங்கத்தைச் சார்ந்தவர் குணபத்திர முனிவர். இவர் தம் ஆசிரியராகிய ஜினசேன ரால் தொடங்கப்பட்டுச் செம்பாதி முடிவு பெற்ற மஹா புராணத்தின் பிற்பாகமாகிய உத்தர புராணத்தை இயற்றியவர். இவ்வுத்தர புராணம் இயற்றி முற்றியது கி. பி. 897.

குணபத்திரமுனிக்குப் பின் [2]குமரசேனரென்ருெருவ ரும், அவர்க்குப் பின் சிந்தாமணியாசார்யரும், அவர்க்குப் பின் ஸ்ரீவர்த்ததேவரும் இருந்தார்கள். சிந்தாமணியா சார்யர்,

தர்மார்த்த காம பரிநிர்வ்ருதி சாருசிந்தஸ்
சிந்தாமணி : ப்ரதி நிகேதம் அகாரியேந ।
ஸஸ்தூயதே ஸரஸ ஸௌக்ய புஜாஸுஜாதஸ்
சிந்தாமணிர்முநி வ்ரிஷோ நகதம்ஜநேந ॥

என்று வர்ணிக்கப்படுகிருர். 'தர்மார்த்த காம மோக்ஷங் களைக் குறித்து விவரிக்கும் சிந்தாமணியை வீடுகள்தோறும்

[1]செந்தமிழ், தொகுதி 5, பக். 95-102. [2]யாப். வி. பக். 486.

பரவச் செய்த அப்பெரும் புகழ்படைத்த சிந்தாமணி முனி யைச் சிந்தாமணியால் மிக்க நன்மையை அடையு மாந்தர்கள் எவ்வாறு புகழாதிருப்பர்' என்பது இதன் கருத்து. இங்கே குறித்த சிந்தாமணி நூல் ஒரு காப்பியமென்பது,

க்ருத்வா சிந்தாமணிம் காவ்யம் அபீஷ்டார்த்த ஸமர்த்தகம் ।
சிந்தாமணிரபூந் நாம்நா பவ்ய சிந்தாமணிர்குரு ॥

(ஸர்வாபீஷ்டங்களையும் தரவல்ல சிந்தாமணியென்னுங் காவ்யத்தைச் செய்த சிந்தாமணி குருவானவர் பவ்யர்கட்கு ஒரு சிந்தாமணியைப்போன்று விளங்கினர்.)

என்ற சுலோகத்தால் புலனும். சிந்தாமணி யாசாரியரை யடுத்து ஸ்ரீவர்த்ததேவர் வைக்கப்பட்டிருக்கிறார். இவர்,

சூடாமணி : கவீநாம் சூடாமணி நாம ஸேவ்ய காவ்யகவி : ।
ஸ்ரீவர்த்ததேவ ஏவஹி க்ருதபுண்ய : கீர்த்திம் ஆஹர்த்தும் ॥

என்று வியந்து கூறப்பட்டுள்ளார். கீர்த்தியடையவேண்டிய அளவு பெருமையுடைய சூடாமணியியற்றிய ஸ்ரீவர்த்த தேவரானவர் புலவர்கட்கெல்லாம் ஒரு தலைச்சூடாமணி யைப்போன் றிருக்கிறார் என்பது இதன் பொருள்.

இவ்வாறு சிந்தாமணியையும் சூடாமணியையும் அடுத் தடுத்துக் கூறுவதனாலும், இரண்டுங் காவியங்க ளென்பத னாலும், இரண்டும் சைன சமயத்துக்குரியனவாதலானும், இவைகளை இயற்றியவர்கள் திரமிள சங்கத்தாரா யிருத்த லானும், இவைகள் முறையே 'நான்கு புருஷார்த்தங்களை யுந் தருவன', 'தலைமேலணியத் தக்கன' என்று வர்ணிக் கப்பட்டிருத்தலானும், இவை தமிழ்க் காவியங்களாகிய சிந்தாமணியும் சூளாமணியுமா யிருக்கவேண்டு மென்று கொள்ளலு தகும். நன்னூற்கு உரையிட்ட மயிலைநாதர் 'தன்மையாற் பெயர்பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன் னூல் முதலாயின' (48 உரை) என்று எழுதியது மேலே தந்துள்ள சுலோகங்களின் கருத்தொடு பொருந்தியிருப்ப

தும் தமிழ்க் காவியங்களே அச் சுலோகங்களாற் குறிக்கப் பட்டன வென்பதற்குப் பிறிதுமொரு சான்ரும். இவற்றை யெழுதிய ஆசாரியர்கள் மஹா புராணத்திற்குப் பிற்காலத் தவர்களாகவும் இருக்கிருர்கள். ஆதலால் ஏற்கெனவே குறித்துள்ள காலப்பகுதியைக்காட்டினும் இன்னும் திட்ட மாய் இந்நூல்களின் காலத்தை வரையறுக்க முடிகின்றது. உத்தர மஹா புராணம் இயற்றப்பெற்ற காலமாகிய கி பி. 897-க்குப் பின் சிந்தாமணி தோன்றி யிருத்தல்வேண்டும்.

சிந்தாமணியின் உரைச் சிறப்புப்பாயிரத்தில்,

'வையகம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்ன'

என வருகின்றது. இதிலே கூறப்பட்டுள்ள பொய்யாமொழி என்னும் தொடர் 'சத்திய வாக்கியன்' என்பதன் மொழி பெயர்ப்பு. கங்க ராஜ்யத்தை கி. பி. 908 முதல் 950 வரை யில் ஆண்டவன் சத்தியவாக்கிய கொங்குணி வர்ம பூதுக பெருமானடி என்பவன். கங்கர்களிற் பலர் ஜைன மதாபி மானிகள். எனவே உரைப்பாயிரத்திற் குறித்த பொய்யா மொழி இவனேயாக இருத்தல் கூடும்.*

---

*கங்கர்களும் பழைய காலத்தில் தங்களை வஞ்சிப் பிர தேசத்திலிருந்து வந்தோர்களாகக் கருதினரென்று தோன்று கிறது. கங்கநாட்டுத் தகடூரிலுள்ள சிற்றரசனொருவன்,

'வஞ்சியர் குலபதி யெழினி வகுத்த இயக்க ரியக்கியரோ
டெஞ்சியவழிவுதிருத்திவ்வெண்குணவிறைதிருமேலைவைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன்வழி முதலிக லதிகன்வ......
... ... விடுகா தழகிய பெருமாளே'

என்று கூறிக்கொள்வது இதனை ஆதரிக்கிறது.

இவன் காலமும் மேலே ஆராய்ந்துகண்ட காலத்தோடு பொருந்தியிருப்பது கவனிக்கத்தக்கது.

அன்றியும், இக்காப்பியத்திற்கு முதனூல் வாதீபஸிம்மன் என்னும் ஜைனகவி வடமொழியிற் செய்த க்ஷத்ர சூடாமணியும் கத்ய சிந்தாமணியும் என்று கூறுவர். இது உண்மையென்பது சிந்தாமணியிற் சிற்சில செய்யுட்கள் முற்கூறிய நூல்களின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளமையால் தெளியலாம். உதாரணமாக :

> ஜீவாநாம் பாபவைசித்ரீம் ஸ்ருதவந்த : ஸ்ருதௌ புரா।
> பஞ்யேயு ரதுநேதிவ ஸ்ரீகல்பா பூதகிஞ்சநா ॥

என்ற சுலோகம்,

> ' ஊண்டென உரையிற் கேட்பா ருயிருறு பாவ மெல்லாங்
> கண்டினித் தெளிக என்று காட்டுவாள் போல வாகி '

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்று பல இடங்கள் உள்ளன. இதனுல், வாதீபஸிம்மன் காலத்திற்குப் பின் சிந்தாமணி தோன்றியிருத்தல்வேண்டும். வாதீபஸிம்மன் காலம் 8 அல்லது 9-ம் நூற்றுண்டாகலாமென்பது கத்யசிந்தாமணியின் முன்னுரையால் விளங்கும்.

ஆகவே 10-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சிந்தாமணி இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

சீவக சிந்தாமணியை முதனூலாகக்கொண்டு 'சீவக சிந்தாமணிச் சுருக்கம்' எனப் பெயரிய நூலொன்று பகழிக்கூத்தர் இயற்றியுள்ளார். இது,

> மாரனீ மெனவடிவு கொண்டசீ வகசரிதை
> மாமுனி யுரைத்தசிந்தா
> மணியிற் பெருங்கதை யெவர்க்குமள விடவொணு
> மற்றது தனைச்சுருக்கிச்

சேரநா னென்னுடைய புன்சொற்க ளாயினும்
செப்புவ னெனவிரும்பிச்
செந்தமிழ்ப் பாவாணர் திருவுளக் கருணையென்
சென்னியுற வைத்துரைத்தேன்
ஆரநாண் மலர்நெட் டிதழ்க்குவளை யகவயலி
லகடுநொந் தொருகோடிசங்
கடைகிடைக் கக்குருகு பெடையெனச் சிறகா
லணைத்திடுஞ் செம்பிநாட்டு
வீரநா ராயணச் சதுர்வேதி மங்கலம்
விளங்கவே வந்தநெடுமால்
வேதியர் குலாதிபதி தர்ப்பா தனன்புலவன்
மிக்கபக ழிக்கூத்தனே. (பெருந்தொகை. 1665)

என்ற செய்யுளால் விளங்கும்.

அன்றியும் சிந்தாமணி மாலை யென்ற ஒரு நூலும் உள்ளது. சிந்தாமணி அம்மானை என்ற ஒரு நூலும் ஏட்டுப் பிரதியிலுள்ளது. சிந்தாமணித் தெரிவு என்ற திரட்டு நூலொன்றும் உண்டு. இவையனைத்தும் சிந்தாமணிச் சரித்தைத் தமிழ் மக்களிடையே பரப்புதற்குப் பெரிதும் பயன்பட்டன.

சமாஜப் பதிப்புக்கள் பலவற்றுக்கு ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்துதவும் நற்பழக்கமுடைய ஸ்ரீ ராவ்சாஹேப்- எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் இப்பதிப்பிற்கும் ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்துத் தந்ததோடு பாடங்களைச் செப்பஞ் செய்யுங்கால் ஏற்பட்ட பல ஐயங்களையும் தீர்த்து உபகரித்தார்கள். சங்க இலக்கிய வெளியீட்டுக்குத் துணைசெய்த பல அறிஞர்கள் இப்பதிப்புக்கும் உதவி புரிந்தனர். இப் பதிப்பைச் சமாஜ வெளியீடாகத் தமது சொந்தச் செலவில் கிழக்குமருதூர் சைவ இளைஞர் திலகம் - திரு. தி. கி. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் அச்சிட்டு உபகரித்தனர்.

வழக்கம்போல் சாது அச்சுக்கூடத்தினர் மிகச் செம்மையாகவும் திருத்தமாகவும் அச்சிட்டுள்ளனர். இப்பெரியார்கட்கெல்லாம் நமது சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது.

இப்பதிப்பு உம்பர்தருதேனு மணியேபோல் அறிஞர் நினைந்தவற்றையெல்லாம் தந்து காவியச்சுவையில் திளைத்து அன்னார் தமிழ்ப்பணி செய்தற்குதவிபுரியுமாறு முழுமுதற் கடவுளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்

திரிசிராப்பள்ளி விஷு மார்கழிமீ ௧0உ 24—12—1941	ம. பாலசுப்பிரமணியன் காரியதரிசி சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருத்தக்கதேவர் சரித்திரம்

ஆசிரியர் திருத்தக்கதேவர்தம் வரலாறு ஏனைய தமிழ் நூலாசிரியர்களின் வரலாறுகளைப் போலவே தெளிவாகவில்லை. நச்சினார்க்கினியர், இந்நூலின் கடவுள் வாழ்த்தான "மூவா முதலா" என்ற செய்யுளினுரையை, "இத்தொடர் நிலைச்செய்யுள் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமு மாதலானும், 'முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணி' என்றதனால், அகத்தியத்தின் வழிநூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையானும், அந்நூலிற் கூறிய இலக்கணமே, இதற்கிலக்கண மென்றுணர்க" என்று தொடங்குதலான், தொல்காப்பியர் முதலியோர் கூறிய இலக்கணமே இந்நூலுக்கும் இலக்கணமாம் என்பது இவ்வுரைகாரர் கருத்து.

இந்நூலுக்கு ஓம்படையாக, ஆசிரியரின் குரு, "முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து" என்ற செய்யுளைப் பாடியளித்தனர் என்றும், "முந்நீர் வலம்புரி" என்பதன் பொருள் "சோழகுலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி" என்றும் உரைகாரர் கூறுகின்றனர். இந்நூலுரைக் கமைந்த சிறப்புப்பாயிரத்தில், "வண்பெரு வஞ்சிப் பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித் திருத்தகு முனிவன்" என ஓர் குறிப்புங் காணப்படுகின்றது. இவற்றால், ஆசிரியர் சோழர்குடிப் பிறப்பினரென்றும், வஞ்சிநாட்டுப் பொய்யாமொழி யென்பவர் ஒருவரால் புகழப்பட்டாரென்றும் கொள்ளக் கிடக்கின்றது. இப் பொய்யா மொழி 'சத்தியவாக்கியன்' என்றதன் மொழி பெயர்ப் பாகலாம் என்பது மேலே கூறப்பட்டது. பொய்யா மொழிப் புலவரே இங்குக் குறிக்கப்பட்டுள்ளார் எனக் கொள்வாருமுண்டு.

இனி, சைனர்களிடையே இவ்வாசிரியரைப் பற்றி வழங்கும் வரலாறு கொண்டு நோக்கின், இந்நூலை இவர்பாடியது பற்றிய செய்திகள் மட்டுமே சிறிது தெளிவாக அறியக்கிடக்கின்றது. அதையும் உறுதியாகத் துணிதற்குச் சான்றுகளில்லையேனும், அவ்வளவிலேனும் ஓர் குறிப்புக்கிடைக்கின்றது என்று மகிழலாம். அக்குறிப்பாவது :

திருத்தக்கதேவர், சோழர்குடியில் தோன்றி இளமையிலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து தமிழ் இலக்கண இலக்கியங்களிற் புலமை நிரம்பியபின், வடமொழிப் பயிற்சியும் குறைவறப் பெறுவாராயினர். இதனுடன் அமையாது, ஆருகதமதத்து மெய்ப்பொருளெல்லாவற்றையும் நூலுணர்ச்சியுடன் பயின்று, ஐவகைச் சீலமும் அமைந்து விளங்கினர். மணப்பருவமடைந்தும், மணஞ்செயவிரும்பாது, இளமையிலேயே துறவுமேற்கொண்டொழுகினர். தமது தொண்டெல்லாம் சீலம் பிழையா தொழுகுதலும் ஆசிரியர் குறிப்பின்வழி நிற்றலுமே எனக் கொள்வாராயினர்.

ஓர்கால், தம் ஆசிரியருடன், மதுரை மாநகர் சென்று தங்கியபொழுது, சங்கப்புலவர்களுடன் கூடிப்பழகும் பெரும்பேற்றை விரும்பித் தம்மாசிரியர் உடன்பாடுபெற்றுச், சென்று அவர்களோடு அளவளாவி, அவர்களால் இவரும், இவரால் அவர்களும் தமிழின் சுவைகளைப் புதிது புதிதே நுகரலாயினர்.

இங்ஙனம் பழகுநாளில், சங்கப்புலவர்கள், திருத்தக்க தேவரை நோக்கி, "நம் சமயத்தார் துறவறம் பாடவல்லாரேயன்றி, இன்பம் விளைய அகப்பொருட்சுவைகளைப் பாடவல்லாரல்லர்" என்று கூற, அதற்கு மறுமொழியாகத் திருத்தக்க தேவர், "ஆருகத சமயத்தார் காதற்சுவையும் பாடமாட்டுவார்; எனினும் அதனை வெறுப்பவராவர்; ஆதலின் பாடாது போயினர்" என்றனர்.

இதுகேட்ட புலவர்கள், "ஆருகதர் அங்ஙனம் பாடவல்லாராயின், தேவரே ஓர் நூலியற்றலாம்" என்றனர்.

இந்நிகழ்ச்சிகளைப் பின்னர் தம்மாசிரியர்பால் தெரிவித்தனர் தேவர். ஆசிரியர் இவர்தம் திறமையை அறிந்து வைத்தும், இவருளத்தை ஆராய்தற்கு எண்ணிய காலையில் நரியொன்று அங்குக் குறுக்கே யோடிற்று. ஆசிரியர், தேவரின் முகத்தை நோக்கி, "இந்நரியினத்தின் பண்புகளைக் கொண்டு ஓர் சிறுநூல் இயற்றுதிர்" என்றுகூற, 'நரிவிருத்தம்" எனப்பெயரிய சிறு நூல் ஒன்றைப் பாடி உடனீந்தனர் தேவர். அந்நூலில் துறவின் மேன்மையை வற்புறுத்திய தேவர் தம் திறமையை வியந்து, "சீவகன் பொருளாக அகப்பொருட் சுவைநிரம்பப் பெருங்காவிய மொன்றை நீவிர் இயற்றுக"

என ஆசிரியர் விடையளித்தனர். அன்றியும், "செம்பொன் வரை மேல்" என்ற பாடலை யெழுதி, இதனைக் கடவுள் வணக்கமாகக் கொண்டு நூலைத் தொடங்குக என்றுதவினர்.

திருத்தக்கதேவர், ஆசிரியர் உவந்தீத்த செய்யுளை எற்று, சித்தனைத் துதிக்கு முகத்தான், தாமும் ஓர் பாடற் பாடினர். அது "மூவா முதலா" என்னுந் தொடக்கத்தது. அதனுரையில், நச்சினார்க்கினியர், "குருக்கள் கூறுதலானும், அருகனை வணங்குதலானும் அதனை முன்வைக்கவெனின், அவர், 'இது நன்று, இதனை முன்னே வைக்க' என்றலின், முன் வைத்தார்" என்று கூறுதலான், தேவரின் ஆசிரியர், தாம் பாடிய செய்யுளினும், மாணுக்கருடையது சிறப்புமிக்கிருந்தமையின், அவர் பாடலையே முன்வைத்துத் தம் பாடலைப் பின்னே வைக்க எனக் களங்கமின்றிக் கூறினர் என்று அறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் நூலைத் தொடங்கிய ஆசிரியர், எல்லாச் சுவைகளும் நிரம்ப, தொடர்நிலைச் செய்யுட்கேற்ற எவ்வகையிலக்கணமும் நன்கமைய எட்டே நாட்களில் சீவகன் கதையைப் பெரு நூலாக எழுதி முடித்துத் தம் ஆசிரியர்க்குக் காட்ட, அவர் அதன் சிறப்புக்களைக் கண்டு வியந்துரைத்துத் தாம் ஓர் ஒம்படைச் செய்யுளும் பாடித் தந்தனர். தந்து, தேவரை நோக்கி, "இதனைச் சங்கத்தாரிடஞ் சென்று அரங்கேற்றுக" என, தேவர் அவ்வண்ணமே செய்தனர்.

பாண்டியவேந்தன் அவைக்களத்தே சங்கப்புலவர் சூழத் தேவர் தமது நூலை அரங்கேற்றியபொழுது, அதன் திட்பநுட்பம், அழகு, அமைப்பு, நடை முதலிய பலவுங் கண்டு புலவர்கள் அனைவரும் மிக வியந்து பாராட்டினர். இதனிடையில் புலவர் சிலர், அந் நூலிலுள்ள அகப்பொருளும் அதன் இனிமையும் விரிவுங் கண்டு, "இவ்வளவும்பாட வேண்டுமாயின், இவ்வாசிரியர் இளமையில் அந் நுகர்ச்சி நன்கு பெற்றவராதல் வேண்டும்" என்று இழுக்குரைப்ப, அது பொறுததேவர், அங்ஙனம் ஆகாது என்று கூறிக் கையிலே, எரிமழு எந்தித் தமது அகப்புறத் தூய்மையை அனைவரும் அறிய விளக்கினர். இது கண்டு திடுக்கிட்ட அப்புலவோர், அவர்பால் தம்பிழை பொறுக்க வேண்டினர். தேவர், "நீவிர் செய்தது பிழை

யன்று; அது என் துறவறத்தின் தூய்மையை வெளிக்காட்டிற்றுதலால்" என்று மறு மொழி கூறினர். இவையெல்லாங் கண்ட அவையோரும், பாண்டிய மன்னனும் திருத்தக்க தேவரின் அருந் திறலை வியந்து வியந்து புகழ்வாராயினர்.

இங்ஙனம் சிறப்புற்ற சிந்தாமணியாசிரியர், தம்மாசிரியர்பால் சென்று, நிகழ்ந்தனகூறி, அவர் ஆசியும் பெற்று அமைவாராயினர்.

திருத்தக்கதேவர்க்குச் சிந்தாமணியாசார்யர் என்ற காரணப் பெயரும் வழங்கியதென்பது முன் காட்டிய 'க்ருத்வா சிந்தாமணிம் காவ்யம்' என்ற சுலோகத்தால் அறியக்கிடக்கின்றது.

இனி, விருத்தப் பாட்டால் பெருங்காவிய மெழுதியோர்களில் ஆசிரியர் திருத்தக்கதேவரே முதல்வராவர். இவர் காலத்தே பல வேறு சமயங்கள் தோன்றித் தமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்தன. இவர்தம் அருகசமயக் கொள்கைகளை இடம்பெற்றுழி வற்புறுத்தி, இறுதியில் விளங்க எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வாசிரியர், புதுவகைப் பாவால், தொடர்நிலைச் செய்யுளாக நூல் செய்தமையின், சொற்களும், சொற்றொடர்களும் பற்றிப் பெரிதும் ஆய்ந்து, இவர் காலத்திற்கு முன்பு வழங்காத புதிய பல சொற்களையும் நூல் நெடுகப் படைத்திருக்கின்றனர்; சொற்றொடர்களும் அவ்வாறே. இப்பொழுது காணப்படும் நூல்களில் 'இலம்பகம்' என்ற பிரிவை இந்நூலாசிரியரே முதன்முதல் எடுத்தாண்டார் எனத் தெரிகிறது. இந்நூல் இதற்கு முன்னுள்ள நூல்களின் விளைவாய், பின்வந்த நூல்களின் கருவாய் அமைந்த பெருங்காவியம். சமயக் கொள்கைகளில் சிலர் மாறுபடினும், எஞ்சிய நூற்பொருள், அமைப்பு, அழகு முதலியவற்றில் இந்நூலைப் பாராட்டாத உரையாசிரியரும் புலவரும் இல்லை. இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள்ள "நரிவிருத்தம்" ஆசிரியர் முதலிற் பாடிய சிறுநூலாம். இவர் புலமையை இவர்தம் நூல்களே நன்கு உணர்த்தவல்லன.

ஸ்ரீபுராணத்துள்ள சீவக சரித்திரம்

மற்றொருநாள், ஸ்ரேணிக மகாராஜன், ஸமவஸரண மடைந்து, அசோக வனத்துள் அசோகவிருக்ஷ மூலத்து ரூபயௌவந சுபலக்ஷண ஸகிதராகித் தியாநாரூடராகியிருந்த ஜீவந்தர முனிகளைக் கண்டு அத்தியந்தம் விஸ்மிதனாகி, ஸுதர்மணதரரை யடைந்து, "பகவானே! ஈதிருச லக்ஷணசகிதராகிய இந்தத் தபோதனர் யார்?" என்று வினவ, அவரும் அருளிச்செய்வார்:

"ஜம்பூத்வீப பரத க்ஷேத்திர ஹேமாங்கத விஷய ராஜமஹாபுரத்து ராஜா, ஸத்தியந்தரன்; தேவி, விஜயை யென்பாள். இவன் மந்திரி காஷ்டாங்காரிகன், புரோகிதன் ருத்திரதத்தனென்பான். ராஜா விஜயாதேவியுடன் அனவரதம் போகாபிலாஷியாகையினால், மந்திரிபக்கலே ராஜ்ய காரியநிருவாஹத்தினை நியோகித்து, இஷ்டவிஷய காமபோகங்களை அனுபவித்துச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள், விஜயை, ஓர் அசோக விருக்ஷத்தினைப் பரசுவினாற் சேதிக்க, வீழ்ந்தபின், அதன் மூலத்தே ஒரு பாலாசோகம் அஷ்டமாலாலங்கிருதமாகித் தோற்றவும் ஸ்வப்நங் கண்டு இராஜாவுக்கு ஸ்வப்நத்தை நிவேதிப்ப, இராஜாவும் சொல்லுவான்: "எட்டுக் கல்யாணத்தை யுடையனாகி எனக்குப் பின் ஸகலபுவன ராஜ்ய யோக்கியனாயினானொரு புத்திரனைப் பெறுதி" என்றனன். அதன்பின், சுவர்க்கவாஸியாயினானொரு தேவன் ஸ்வஜீவிதாந்தத்து அவதரித்து விஜயாதேவி கருப்பத்தை யடைந்தனன்.

அந்நகரத்துக் கந்தோத்கடனென்பான் ஒரு வைசியன், மனோஹரோத்தியானத்து எழுந்தருளியிருந்த சீலகுப்தரென்னுந் தபோதனரை நமஸ்கரித்து, "பகவானே! எனக்கு இதற்குமுன் ஆயுஷ்யஹீனராகிய புத்திரரே ஜனித்தனர்; இனி ஆயுஷ்மானாகிய புத்திரன் உளனாகுவனோ?" என்றுவினவ, முனிவரனும் அவதிஞானத்தாற் பார்த்து, "இதன்மேல், ஆயுஷ்மான்களாயினார் பல புத்திரரையும் பெறுவை; அதற்கு உபாயமும்; பிறந்து மிருதனாகிய புத்திரனை ஸ்மசானபூமியுள் ஸம்ஸ்கரித்தற்காகச் சென்றவிடத்து அங்கே ஒரு பிள்ளையைப் பெறுவை. அவனும் ஸகலபுவந ராஜாவாகித் தபப்பிரபாவத்தால் முக்திபதமடைகுவன்" என்று சீலகுப்த தபோதனர் அருளிச்செய்யக் கேட்டுப் போயினன். ஒரு யக்ஷி

தேவனீத, சரமதேகதரனொருவன் விஜயாதேவிக்குப் புத்திரனகு மேனு நினைத்து, அவனுக்கு உபசாரஞ் செய்வேனென்று ராஜகிருகத்தில் ஒரு கருடயந்திரத்திலே ஸன்னிகிதமாய் நின்றனள்.

மற்றொரு நாள் பிரபாதசமயத்து, ருத்திரதத்தன், ராஜகிருகமடைந்து அலங்காரஹீனையாகிய தேவியைக் கண்டு, "தேவி! ஸ்வாமி எங்கே யெழுந்தருளியிருக்கின்றனர்?" என்று கேட்ப, அவளும், "இப்போது பள்ளிகொண்டருளுகின்றன ராதலிற் காணமுடியாது" என்று சொல்லக்கேட்டு, இவ்வசனம் துர்நிமித்தமென்று நிச்சயித்து மீண்டுபோகிக் காஷ்டாங்காரிகனையடைந்து இரகஸ்யமாகச் சொல்லுவான்: "உனக்குச் சகலபுவன ராஜ்யமுண்டாகுமாதலின், அரசனை லோகாந்தரமடைவிப்பாயாக" என்று சொல்லக் கேட்ட காஷ்டாங்காரிகன், தனது கரங்களால் சிரவணங்களைப் புதைத்து, "முன்பு காஷ்டபாரவாகியாகிய எனக்கு ராஜ்யபாரம் பிரஸாதித்த ஸ்வாமிக்கு ஈதிருச துஷ்கருமத்தைச் செய்கவென்று சொல்லிப் பிழை செய்தனையே" என, புரோகிதனும், "தத்புத்திரனாலே உனக்கு மரணம் அவசியம் பாவியாகுமாதலின், உனக்கு உறுவது செய்வாயாக" என்று சொல்லிப் போயினன். பின், ருத்திரதத்தனும் மூன்றுநாள், அஸாத்ய வியாதிபீடிதனுகி மரணமடைந்து நரகம் புக்கனன். அதற்பின், காஷ்டாங்காரிகன் தனது மரணபயத்தால் ராஜாவுக்கு மரணத்தைப் பண்ணுவேனென நிச்சயித்துப் பகுவித சம்மானங்களால் இரண்டாயிரம் ராஜாக்களை ஸ்வவசராக்கி அவர்களோடுங்கூட ராஜபவனத்தை வளைய, ராஜாவும் அதனைக் கேட்டுத் தேவியைக் கருடயந்திரத்தின்மேற் போகவிட்டு யுத்த ஸன்னத்தனுகிப் புறப்பட்டு யுத்தம்பண்ணப் பராஜயமெய்திய காஷ்டாங்காரிகன், காளாங்காரகனென்னுந் தன் புத்திரனேடுங்கூட வந்து யுத்தம் பண்ணி ராஜாவை லோகாந்தரமடைவித்து இராஜ்யத்தை அடைந்தனன்.

விஜயமாதேவியும் கருடயந்திரத்தின்மேற் போகி யக்ஷியின் பிரபாவத்தாற் சரீரபாதையின்றியே ஸ்மசானப் பிரதேசமடைந்து ஸர்வாங்கோபாங்க ஸுந்தரனுகிச் சந்திராதித்தரை அதிசயிக்குங் காந்திதீப்தியினை யுடையனுகிய புத்திரனைப் பயந்தபின், யக்ஷிதேவதை, அநித்தியத்துவாதி ஸம்ஸார ஸ்வபாவ வர்ணநபூர்வகமாக, "சரமதேகியாகிய நின் புத்திரன் ஸகலபுவன ராஜ்யந் தாங்கித் தபப்ரபாவத்தால் முக்திபதமடைகுவன்" என்று தேவிக்குச் சொல்லித் தத்காலயோக்யமாகிய தேவியது துக்கங்களை நீக்கியிருந்தபின், கந்தோத்கடன், மிருதனுகிய புத்திரனைக்

கொடுவந்து தத்பிரதேசத்தே வைத்துத் தத்ஸமீபத்தே பிள்ளையது ஸ்வரத்தினைக் கேட்டு, "ஜீவ" என்னும் ஆசீர்வாதஞ் சொல்லிப் பிள்ளையையெடுப்ப, தேவியும் அதனைக்கண்டு மிகவும் சந்தோஷித்த பின்னை, பிள்ளையை அப்பிரகாசமாகக் கொண்டுபோகி, ஸுநந்தையென்னுந் தன் பாரியையைக் குறுகி, "ஸஜீவனாகிய பிள்ளையைப் பரீக்ஷியாது தந்தனை" என்று க்ருத்திரிம கோபத்தாற் கொடுப்ப, அவளும் ஆநந்தத்துடன் வாங்கி வளர்ப்ப, வளர்கின்ற பிள்ளைக்குச் சீவகனென்னும் நாமகரணம் பண்ணியதற் பின், ஸுநந்தை நந்தாட்யனென்னும் புத்திரனைப் பெற்றனள். விஜயமாதேவியும் யக்ஷிதேவியுடன்கூடக் கருடயந்திரத்தாற் போகி ஒரு தாபஸாச்ரமத்தே வஸித்தனள்.

ஸத்யந்தரமஹாராஜனுக்குத் தேவிமார் பாமரதியும், அநங்கபதாகையுமென்பா ரிருவ ருளர். அவர்கட்குப் புத்திரர் மதுரனும் வகுளனு மென்பார். அந்நகரத்து விசயனென்னும் சேனாபதிக்கும் ஜயவதி யென்னும் பாரியைக்கும் புத்திரன் தேவஸேனன்; சாகரஸேன னென்னும் புரோகிதனுக்கும் ஸ்ரீமதிக்கும் புத்திரன் புத்திஷேனன். தனபால சிரேஷ்டிக்கும் ஸ்ரீதேவிக்கும் புத்திரன் வரதத்தன். மதிஸாகரமந்திரிக்கும் அனுபமைக்கும் புத்திரன் மதுமுகன்.

ஸ்ராவகதரும ஸகிதராகியமதுராதிகள் அறுவரும் ஜீவந்தரனுடன் வளர்ந்து மித்திரராகிச் செல்கின்ற நாளகத்து ஒரு நாள், நகரபாஹ்யோத்தியானத்து மித்திரருடன் வனக்கிரீடைபண்ணு நின்ற குமாரனைக் குறுகிப் பஸ்மகவியாதி பீடிதனாகித் தாபஸவேஷதாரியாயினன் ஒருவன், "குமாரனே! ஸமீபமாக இவ்விடத்து நகரமுண்டோ?" என்றனன். குமாரனும், முறுவல் கொண்ட முகத்தனாகி, "பாலராகிய எங்களைக் கண்டால் நகரம் ஆஸன்னமேயென்பது அநுபதேசமாகவே பிரவிதமாக இருப்ப, இவ்வண்ணங்கேட்கின்றீர்; மோகவியாகுல சித்தத்தினீர் போலும்" என்று குமாரன் சொன்ன பரிணத வசனங்களைக்கேட்டு, இராஜ்யார்ஹமாகிய சரீரகதசுபலக்ஷணாதிகளைக் கண்டு இவன் இராஜகுமாரனென நிச்சயித்து க்ஷுத்பீடாபரவசனாகிய தாபஸன் போஜனார்த்தியாயினன். குமாரனும் அதனை ஸம்வதித்து அவனுடனே போகி ஸ்பவனமடைந்து, போஜனஸமயத்துக் குமாரன் ஸ்வஹஸ்தத்தால் தாபஸனுக்கு ஆஹாரங் கொடுப்பத் ததாஹாரபுக்திக்ஷணத்திலே ரோகபீடையெல்லாம் போயின. அதற்பின், சந்தோத்கடஸமீபமடைந்து, "மஹாவியாதிவிநாசகாரணனாகி மஹோபகாரியா

கிய குமாரனுக்கு யான் சாஸ்திராப்பியாசம் பண்ணப் பெறுவேனாக வேண்டும்" என்று சொல்ல, கந்தோத்கடனும், "சாஸ்திர குரு வாயினார்க்கு நமஸ்காராதி விநயங்கள் செய்யவேண்டுமே; நீர் அந்ய லிங்கிகளாகின்றீராதலின், அது ஸம்பவிப்பதன்று போலும்" என்று சொல்ல, தாபஸனும் சொல்லுவான்: "ஸிஹ்மபுரமென்னும் நகரத்து ராஜா ஆர்யநந்தியென்பேன். வீரநந்திமுனிவரன் சமீபத்தே தரும ஸ்ரவணாநந்தரம் த்ருதிக்ஷண புத்திரனுக்கு இராஜ்யபதம் கொடுத்துத் தீக்ஷாப்ராப்தனாகியபின், காலாந்தரத்துப் பஸ்மக மென்பதொரு மஹாரோகம் தோன்றுதலின், தீக்ஷாப்பிரச்சுதனாகித் தாபஸவேஷதாரியாகின்றேன்; யான் ஸம்யக் த்ருஷ்டியாதலின், உனக்கு ஸத்தர்மவானாகின்றேன்" என்று சொல்லக்கேட்டு, கந் தோத்கடன் மிகவும் பிரீதனாகித் தருமவாத்ஸல்யத்தினாற் குமார விருத்தாந்தத்தினை ரகஸ்யமாக அறிவித்துத் தாபஸ ஸமீபத்தே குமாரனைச் சாஸ்திராப்பியாசம்பண்ண விட்டனன். குமாரனும் போதாதிசயத்தால் அல்பகாலத்தே ஸகலவியவகார சாஸ்திர பாரங்கதனாயினன். அதற்பின், ஆர்யநந்திகள் ஸம்யமத்தினைப் பிராபித்துத் தபப்ர பாவத்தால் முக்திபதமடைந்தருளினர்.

குமாரனும், யௌவனாவஸ்தையினை அடைந்து செல்கின்ற காலத்துக் காளகூட னென்பான் ஒரு வியாதபதி, அந்நகரத்தே நிரைதுரந்து கொண்டுபோக, அந்நிரைக்கு அதிபதியான கோபாலன் கோபேந்திரனென்பான்; இவன் பார்யை கோபஸ்ரீயென்பாள்; "இவள் புத்திரியாகிய கோதாவரியினை இந்நிரைமீட்கவல்ல வீர புருஷனுக்குக் கொடுத்தும்" என்று காஷ்டங்காரிகள் நகரத்திலே கோஷணைபண்ணுவிப்ப, அதனைக்கேட்டு ஜீவந்தரன் மித்திரரோடு கூடப்போகி வியாதபலமடைந்து யுத்தம் பண்ணிச் சயித்துமீட்டுக்கொண்டு வந்து நகரமடைந்து யுத்தமுகத்துப் பராக்கிரமம் பண்ணிய நந்தாட்டியனுக்குக் கோதாவரியினைக் கொடுப்பித்தனன்.

இப்பால், ஜம்பூத்வீப பரதக்ஷேத்திரத்து விஜயார்த்தபர்வத தக்ஷிண ஸ்ரேணியில், ககனவல்லப நகராதிபதி கருடவேகனென்னும் வித்யாதரன், தாயாதியாயினானொருவனாற் பராஜிதனாகிப் போந்து ரத்நத்வீபத்து மனுஜோதயமென்னும் பர்வதத்து ரமணீயமென்ப தொரு நகரம் பண்ணுவித்திருந்தனன். இவன் பார்யை, தாரணி யென்பாள்; இவர்கட்குப் புத்ரி, கந்தர்வதத்தை யென்பாள். இவள், ஒருநாள் உபவாஸ விதியால் நோற்று முடிவின்கண் ஜினபதிபூஜை பண்ணித் திவ்ய சேஷை கொடுவந்து ராஜாவுக்குக் கொடுப்ப, அவனும் அதனை வாங்கிச் சிரஸாவகித்து உபவாச பரிஸ்ராந்தையாகிய

புத்ரியை, "பாரணை பண்ணுவாயாக" என்று விடுத்தபின், "பெண் பிள்ளையை யாவர்க்குக் கொடுத்தும்" என்று மதிஸாகரனை வினவ, அவனும் சொல்லுவான் : "ஒருநாள் மஹா மேருபர்வத நந்தன வனத்துப் பூர்வதிக்ஜினபவன மடைந்து, ப்ரதக்ஷிணீகரண ப்ரணும ஸ்தவநஅப்யர்ச்சனம் பண்ணியபின், அங்கே, ஸந்நிஹிதராகிய விபுல மதிசாரண தபோதனரை நமஸ்கரித்து தர்மஸ்ரவணாநந்தரம், 'என் ஸ்வாமி புத்திரியாகிய கந்தர்வதத்தை, யாவர்க்கு யோக்யை' என்று யான் வினவ, அவரும் அவதிஞானத்தாற் பார்த்து அருளிச்செய் வார் : 'ஜம்பூத்வீப பரதக்ஷேத்ர ஹேமாங்கதவிஷய ராஜமஹா நக ரத்து ஸத்யந்தர மஹாராஜ புத்ரனுக்கு வீணாஸ்வயம்வரத்தால் தேவி யாகும்' என்று அருளிச்செய்தனர்" என்று மந்திரி சொல்லக் கேட்டு, ராஜாவும், "பூதலத் துள்ளாருடன் அபூர்வமாகிய ஸம்பந் தத்தினை யாங்ஙனஞ் செய்தும்" என்று வினவ, மந்திரி சொல்லு வான் : "ராஜமஹாபுரத்து வ்ருஷபதத்த ஸ்ரேஷ்டிக்கும் பத்மா வதிக்கும் புத்திரன், ஜினதத்தனென்பான்; அவனால் நமது அபிப் ரேத கார்யம் ஸித்திக்கும். அஃது எவ்வண்ணமென்னின், ராஜ மஹாபுர ஸமீபமாகிய ப்ரீதிவர்த்தனமென்னும் உத்யானத்து ஸாகர சேன கேவலிகளுக்குக் கேவலபூஜார்த்தமாக நின் பிதாவினோடுங் கூடச்சென்று கேவலபூஜை பண்ணியபின், தர்மவாத்ஸல்யத்தால் வ்ருஷபதத்த ஜினதத்தர்களோடு பாந்தவமுண்டாயிற்று. அதன்பின், வ்ருஷபதத்தன், புத்ரனுக்கு ஸ்ரேஷ்டிபதங் கொடுத்துக் குணபால முனி ஸமீபத்தே தீக்ஷித்தனன். பத்மாவதியும் ஸுவ்ரதையென்னும் ஆர்யாங்கனைபக்கல் தீக்ஷித்தனள். ஸ்ரேஷ்டிபத ப்ராப்தனாகிய ஜின தத்தனும் வாணிஜ்யார்த்தமாக ஜலயாத்திரையால் இங்கே வருவன்" எனக்கேட்டு, ராஜாவும் அவனை உபாயத்தாற்கொண்டு வருவதற்குப் பலாதிகனென்னும் வித்யாதரனையேவ, அவனும் ஸ்வவித்தையால் மரக்கலமுடைந்ததாகக் காட்டியபின், ஜினதத்தனும் ஒரு பலகை அவலம்பனமாகப்போந்து ஸமுத்ரத்துள் ஒரு கரையினையடைந்து, பின் பலாதிகனுடன்சென்று விநயபூர்வகமாக ராஜஸமீபமடைந்த பின், மாயையால் உடைவித்த மரக்கலத்தைக் காட்டி, மிகவும் ஸம்ப்ரீதனாகிய ஜினதத்தனுக்குப் பூர்வவ்ருத்தாந்தத்தினையறிவித்து, "கந்தர்வதத்தையைக் கொடுபோகி ராஜமஹாபுரத்து வீணாஸ்வயம் வர கல்யாணவிதியாற் கொடுப்பாயாக" என்று பெண்பிள்ளையைக் கொடுப்ப, அவனும் கொண்டுபோகித் தன்னகரமடைந்தபின், காஷ் டாங்காரிகனுக்கு ஸ்வயம்வரவ்ருத்தாந்தத்தினை யறிவித்துச் சுபதிவ ஸத்து ஜினபதிபூஜாபுரஸ்ஸரமாக ஸ்வயம்வர கோஷணைபண்ணிய

பின், மனோஹரோத்யானத்து ஸ்வயம்வர மண்டபத்து ஸமுதித ராஜபுத்ரைவர்ணிகரும் கந்தர்வதத்தைக்கு வீணையிற்றோற்றபின், ஜீவந்தர குமாரன் மித்ரரோடுங்கூட ஸ்வயம்வரமண்டபமடைந்த பின், இவனுக்கு வீணைகள் பலவுங் கொடுப்ப அவற்றுள், நரம்பு முதலானவற்றுள் உரோமமுதலான தோஷங்களைக் காட்டி, "வித்யாதர குலத்துட் பரம்பரையால் வருகின்ற ஸுகோஷணை யென்னும் வீணையைத் தருக" என்று வாங்கிக்கொண்டு மதுரமாக வாசித்தபின், வீணையிற்றோற்ற கந்தர்வதத்தை ஜீவந்தரகுமாரன் மிசை மாலையிட்டனன். அதனைக்கண்டு, காஷ்டாங்காரகன் முதலான ராஜகுமாரர்கள் அஸஹமானர்களாகி யுத்தஸந்நத்தராகியபின், ஜீவந்தரகுமாரன் ஜயகிரியென்னும் மதஹஸ்தியினையேறி, மித்ரரோடும் பலாதிக வித்யாதரனோடுஞ் சென்று யுத்தம்பண்ணி ஜயித்தபின், கந்தர்வதத்தையைக் கல்யாணவிதியால் விவாகம்பண்ணி, இஷ்ட விஷய காமபோகங்களை அனுபவித்துச் செல்லாநின்ற காலத்து, ஒருநாள் :

வஸந்தகாலத்து, நகரஜனங்கள் வஸந்தவினோதார்த்தமாக ஸுரமலயமென்னும் உத்யானமடைந்து வஸந்தோத்ஸவமனுபவித்திருப்ப, அந்நகரத்து வைஸ்ரவணதத்தனென்னும் வைச்யனுக்கும் சூதமஞ்சரி என்னும் பார்யைக்கும் புத்ரி, ஸுரமஞ்சரியென்பாள் ; குமாரதத்தனென்னும் வைச்யனுக்கும் விமலைக்கும்புத்ரி, குணமாலையென்பாள்; இவர்களிருவர் கன்யகைகளும் வஸந்தக்ரீடை பண்ணித் தமது சூர்ணங்காட்டி, "அதனில் இதுநன்று" என்று பரஸ்பரவாதமுண்டானவிடத்து, ஸுரமஞ்சரி சந்திரோதயமென்னும் தனது சூர்ணத்தை சியாமலதையென்னும் சேடி கையிலும், குணமாலை ஸூர்யோதயமென்னும் தனது சூர்ணத்தை வித்யுர்லதையென்னுஞ் சேடி கையிலும்கொடுத்து, "கந்தயுக்தி நிபுணராயினோர்க்குக் காட்டிக் கொடுவருக" என்று விடுப்ப, அவர்களும் போகிப் பலரையுங் கேட்ப, பலரும் தர்சன ஸ்பர்சன கந்தங்களாற் பார்த்துச் சந்த்ரோதயத்தை ஸ்துதிப்பாரும் ஸூர்யோதயத்தை ப்ரசம்ஸிப்பாரும் ஸமானமென்பாரும் ஜீவந்தரகுமாரனே அறிவானென்பாருமாயினபின், ஜீவந்தரகுமாரனுக்குக்காட்ட, அவனும், சந்த்ரோதயத்தை "அழகிது" என்றுசொல்லி, அவர்களுக்கேற்ற யுக்தியினாற் காட்டுவான்வேண்டி அவ்விரண்டினையும்வாங்கி, ஆகாசத்துவீச, அவற்றுள் சந்த்ரோதயத்தைவண்டுகள் சூழ்ந்துகொண்டன. இவ்வண்ணம்யுக்தியினால் கந்தாதிசயத்தை அறிவித்தபின், ஸுரமஞ்சரி குணமாலைகள் பரஸ்பரம் மாத்ஸர்யத்தின் நீங்கினர்.

அங்கே அஞ்ஞானராகிய ஜனங்களால் பாதிதமாகி ஓடி நீருள் வீழ்ந்து கண்டகதப்ராணனுயிற்றொரு ச்வாவினைக் கண்டு, ஜீவந்தர குமாரன் எடுப்பித்து அதன் செவியுள், பஞ்சநமஸ்கார மங்கல பதங்களைச் சொல்ல, அதுவும் ஸாவதானமாகக் கேட்டுச், சரீரம்விட்டு அதன் மாஹாத்மியத்தால், சந்த்ரோதயமென்னும் பர்வதத்து ஸுதர்சனனென்னும் யக்ஷனுயிற்று ; ஸுதர்சனன், தத்காலத்து அவதி ஞானத்தாற் பூர்வபவ ஸம்பந்தத்தினை யறிந்து இங்குவந்து ஜீவந்தரகுமாரனைக் கண்டு, "குமாரனே! நின்ப்ரபாவத்தால் ஈத்ருசவிபவத்தைப் பெற்றேன்" என்று பூஜித்து "வ்யஸநோத்ஸவ காலங்களில் என்னை நினைக்கப்பெற வேண்டும்" என்று சொல்லிப் போயினன்.

அதற்பின், வன விஹரணம்பண்ணிப் போதுகின்ற நகரஜன கோலாஹலத்தினுற் ப்ரமித்து ஓடிவருகின்ற அசனிவேகமென்னும் மதஹஸ்தி, ஸுரமஞ்சரி யேறிய ரதத்தினைக் குறுகுதலும், அதனைக் கண்டு, குமாரன் கருணை பரவசனுகித் தனது பலப்ரபாவத்தினுல் அதனை ப்ரஹரித்து நிவாரித்து மீண்டு நகரமடைந்தபின், ரூப யௌவன விஞ்ஞானுதி குணலங்க்ருதனுகிய குமாரனை ஸுரமஞ்சரி அனுராகித்தமையை இங்கிதசேஷ்டைகளாலறிந்து வைஶ்ரவணதத்தாதி பந்துஜனங்கள் கந்தோத்கடனுக்கு அறிவிப்ப, அவனும் அதிப்ரீதனுகிச் சுபதிவஸத்து ஜீவந்தரகுமாரனுக்கு விவாஹ விதியால் ஸுரமஞ்சரியைக் கொடுத்தபின், அவளுடன் இஷ்ட விஷய காம போகங்களால் இனிது செல்கின்ற காலத்து, குமாரபீடிதமாகி க்ஷீணசக்திகமாகிய அசனிவேகமென்னும் மதஹஸ்தி கவளங்கொள்ளாது நின்றமையறிந்து காஷ்டாங்காரிகன் மிகவும் கோபித்து, "வைச்யோசிதமாகிய வாணிஜ்ய வ்யாபாரமின்றி ராஜபுத்ரா னுரூபமாக ஆசரிக்கின்ற கர்விதனுகிய ஶ்ரேஷ்டிபுத்ரனை லோகாந்தரமடைவிக்க" என்று சண்டதண்டனென்னும் தளவரனை நியோகிப்ப, அவனும் தத்ர பலஸஹிதனுகிச் சென்றுகுறுக, அதனை யறிந்த குமாரன் புறப்பட்டு யுத்தம் பண்ணிச்சண்டதண்ட பலத்தையெல்லாம் பங்கம்பண்ணி, "காஷ்டாங்காரிகன் ஸந்நிஹிதனுகின்றிலன் ; இந்த க்ஷுத்ர ஜனங்களை வதிப்பது கர்மமன்று" என்று கருதி, ஸுதர்சன யக்ஷனை நினைந்தனன். அவனும் தத்க்ஷணத்திலே வந்து விஜயகிரி யென்னும் மதஹஸ்தியிலேற்றிக் கொண்டுபோகித் தனதிடமடைந்தனன். ஜீவந்தரகுமாரன், யக்ஷநிர்மிதமாகிய பூஜாதிசயங்களை அனுபவித்திருந்தனன். ஜீவந்தரகுமாரன் அபாயமின்றி யிருந்ததைக் கந்தர்வதத்தை வித்யாப்ரபாவத்தா லறிந்து, குமாரவ்ருத்தாந்தத்தினை

யறியாது பயசலிதராகிய நந்தாட்யன் முதலாகிய பந்துஜனங்களை உள்ளபடி யறிவித்தலின், அவர் பயத்தினீங்கினர்.

குமாரனும் யக்ஷாவாஸத்தே சிலகாலங் கழித்தபின் அபூர்வ தேசங்களைக் காண்பான்வேண்டிக் கமனோன்முகனுகியபின், அவனுக்குக் காமரூபிணியென்னும் முத்திரிகை முதலாயின கொடுத்து விடுப்ப, அநேக தேசங்களைக் கடந்துபோகிச் சந்த்ராபமென்னும் நகரங் குறுகுதலும், அந்நகரத்துத் தனபதியென்னும் ராஜாவுக்கும் திலோத்தமையென்னுந் தேவிக்கும் புத்ரி, பத்மோத்தமை; ராஜா, ஆதித்யமுனிகளென்பாரொரு தபோதனரை நமஸ்கரித்து, "இவள் யாவர்க்குப் பார்யையாகும்" என்றுவினவ, அவரும், "ஒருகாலத்தில் இவளுக்கு விஷஸ்பர்சனமுண்டாம்; அதனைத் தீர்க்குமவனுக்கு யோக்யை" என்றனர். இவளும் யௌவனவஸ்தையினையடைந்து, வனவிஹரணம் பண்ணுகின்றபொழுது இவளை ஒரு ஸர்ப்பங்கடிப்ப மோகித்தனள். இதனையறிந்து, "விஷஹரணம் பண்ணினவனுக்குக் கந்யகையோடுகூட அர்த்தராஜ்யங் கொடுப்பன்" என்று அரசன் கோஷணபண்ண, அதனைக்கேட்ட வித்யாநிபுணராகிய ஜனங்கள், விஷஹரணம்பண்ணமாட்டாது நீங்கியபின், விஷவித்யா நிபுணராயினுரைத் தேடித்திரிகின்ற பரிஜனங்கள், ஜீவந்தர குமாரனைக் குறுகி, "பூஜ்யனே! உனக்கு விஷவித்யா கௌசல்யமுண்டோ" என்று வினவ, குமாரனும், "சிறிது உண்டு போலும்" என, ஸந்துஷ்டராகிய பரிஜனங்கள், குமாரனைக் கொண்டுபோகி ராஜஸமீபமடைவிப்ப, குமாரனும், யக்ஷோபதிஷ்ட மந்த்ரானுஸ்மரணத்தால் விஷவிநாசம்பண்ணியபின், ராஜ்யார்ஹமாகிய லக்ஷணகுணுதிசயங்களைக் கண்டு, "இவன் ராஜகுமாரன்" என நிச்சயித்துப் பத்மோத்தமையினைக் குமாரனுக்கு விவாஹவிதியாற் கொடுத்து அர்த்த ராஜ்யத்தினையும் கொடுத்தபின், அவளுடன் இஷ்ட விஷய காமபோகங்களை அனுபவித்து, லோகபாலன் முதலாகிய முப்பத்திருவர் மைத்துனரோடுங்கூட இனிது செல்கின்ற காலத்து:

தேசாந்தர கமனோன்முகனுகி ஒருவருமறியாதபடி பல்லவ தேசத்தைக்கடந்தபின், க்ஷேமவிஷயத்து க்ஷேமபுரமென்பதொரு ஜினபவனத்தைக் குறுகினுகை, தத்க்ஷணத்திலே ஜினபவனஸமீபமாகியதொரு சம்பகவ்ருக்ஷம் புஷ்பித்தது; உத்யான ஸகலகோகிலங்களும் கூவின; நகரஸமீபமாகிய மனோஹரமென்னும் உத்யானத்து ஸஹஸ்ரகூட மென்னும் தடாகமும் ஸலிலபரிபூர்ணமாயிற்று; தத்கத ஸகலகுவலயாதி புஷ்பங்களும் மலர்ந்தன; ப்ரமரநிகரங்களும்

பரிப்ரமித்தன; ஜினபவன கோபுர கவாடங்கள் தாமே நீங்கின. அவ்வவ்வதிசயங்களைக்கண்டு விஸ்மிதனாகித் தடாகத்தையடைந்து ஸ்நானபுரஸ்ஸரமாகப் புஷ்பங்களைக் கைக்கொண்டு ஜினபதிஸமீப மடைந்து அர்ச்சனாபுரஸ்ஸரமாக ஸ்துதித்திருந்தனன். தந்நகர ஸ்ரேஷ்டி ஸுபத்ரனுக்கும் நிஸ்பருதியென்னும் பார்யைக்கும் புத்ரி, க்ஷேமஸுந்தரியென்பாள்; ஸுபத்ரஸ்ரேஷ்டி, வினயந்தரரென்னும் தபோதனரையடைந்து, "க்ஷேமஸுந்தரி யாவர்க்குப் பார்யை யாகும்?" என்று வினவ, அவரும் அருளிச்செய்வார்: "கந்யகா யோக்கியனாகியபர்த்தா ஸஹஸ்ரகூட ஜினபவனத்தையடைதலும் சம்பகவிகாஸமும் கோகிலகோலாஹலமும் தடாகபூர்ணமும் தத்கத குமுதவிகாஸமும் மதுகரஸஞ்சாரமும் கோபுர கவாடவிகடனமுமாகிய அதிசயங்களுளவாகும்" என்று ஆதேசித்தனர். ஆதலின், தத்பரீக்ஷார்த்தமாக நாள்வழிபார்த்திருக்கின்ற ஸுபத்ரன் பரிஜனங்கள் ஜீவந்தரகுமாரனையும் அவ்வவ்வாச்சர்யங்களையும் கண்டு, ஸம்ப்ரமத்துடன்சென்று ஸ்ரேஷ்டிக்கு அறிவிப்ப, அவனும்வந்து குமாரனை எதிர்கொண்டுபோற்றித் தனது பவனமடைந்து சுபதிவஸத்துக் கல்யாணவிதியாற் குமாரனுக்கு க்ஷேமஸுந்தரியைக் கொடுப்ப, அவளுடன் இனிது அனுபவத்துச் சிலகாலங்கழிந்தபின், முன்பு ஸத்யந்தரமஹாராஜனால் தனக்கு ப்ரஸாதஞ் செய்யப்பட்ட சாபபாணங்களைக் குமாரனுக்கு யோக்யமென்று கொடுப்ப, அவற்றைக்கொண்டு;

அங்கு நின்றும் அப்ரகாசமாகப் போந்து பல நாடுங் கடந்து ஸுஜநவிஷய ஹேமாபநகரத்து ஸமீபமாகிய மனோஹரோத்யானமடைந்தனனாக, தந்நகராதிபதி த்ருடமித்ரனென்னும் ராஜாவுக்குத் தேவி, நளினையென்பாள்; இவளுக்குப் புத்ரி, ஹேமாபை யென்பாள்; ராஜா தன்புத்ரியை யாவர்க்குக் கொடுத்துமென்று ஒரு நைமித்திகனைக் கேட்ப, அவனும், "மனோஹரோத்யானத்து ஒரு லக்ஷ்யத்தினைநோக்கி எய்தபின், யாவனது சரம் லக்ஷ்யத்திற் சென்று மீண்டுவந்து விழுவதாகும், அவன் கந்யாபதியாகும்" என்றனன். அன்று தொடங்கி, ராஜபுத்ரர்கள், அந்த உத்யானத்தே யந்த்ரத்திலே தனுர்வியாயாமம் பண்ணுகின்றவிடத்தே, ஜீவந்தர குமாரனும் குறுக, அவர்களும் "குமாரனே! தனுர்வேத சிக்ஷையில் அப்யாஸமுண்டாயின், எய்வாயாக" என்ன, குமாரனும் அவர்களுடைய சாபபாணங்களைக் கண்டு, "லக்ஷண ஹீனங்கள்" என்று தூஷித்து, மத்யம லக்ஷணத்ததாகியதொரு பாணத்தினை வாங்கிக்கொண்டு எய்ய, அது லக்ஷ்யத்திற் செல்லாது

மீண்டுவந்தது கண்டு, விஸ்மிதராகி, "குமாரனுக்குத் தனுர்வேதாப்யாஸம் இப்பெற்றியதோ" என்று மித்தியாபஹாஸம் பண்ணியபின், குமாரனும் லஜ்ஜிதனுகி, ஸ்வஹஸ்தகத பாணத்தினுலே எய்தவிடத்து லக்ஷ்யத்திலே வீழ்ந்தது. அதனைப் பரீக்ஷிப்பான்வேண்டி ராஜநியுக்தராகிய பரிஜனங்கள் ஸம்ப்ரமத்துடன் கொண்டுசென்று ராஜாவுக்குக் காட்ட, அவனும் இவனுடைய ராஜயோக்ய மாஹாத்ம்யத்தினைக் கண்டு ரஜபுத்ரனென நிச்சயித்துக் கல்யாண விதியால் ஜீவந்தர குமாரனுக்கு ஹேமாபையைக் கொடுத்தனன். குணமித்ர பகுமித்ர தனமித்ர ஸுமித்ரர் முதலாகிய கந்யகாப்ராதாக்களைத் தனுர்வித்யாதி ஞானகுசலராகப் பண்ணி, குமாரன் இனிதிருந்தனன். கந்தர்வதத்தை தனது வித்தையால் அப்ரகாசமாக வந்து ஜீவந்தகுமாரன் குசலவ்ருத்தியினை யறிந்து தனது வரவினையறிவித்துச் செல்கின்ற காலத்து, ஒருநாள் நந்தாட்யன் கந்தர்வதத்தா ஸமீபமடைந்து, "ஸ்வாமினீ! அப்ரகாசமாகப் பலநாளும் போகின்ற தேசம் யாது" என்று வினவ, அவளும் மந்தஸ்மிதஞ் செய்து, "குமாரனே! தத்ப்ரதேச மடையவேண்டுதியாயின், ஸ்நானபவித்ரனுகி ஸ்மரதாங்கிணீ யென்னுஞ் சயனதலத்து நின்ப்ராதாவினை ஸ்மரித்துச் சயனம் பண்ணத் தத்ஸமீபமடையலாகும்" என்றபின், நந்தாட்யனும் அவ்வண்ணஞ் செய்ய, கந்தர்வதத்தா நியோகத்தால் ஆபோகினீ யென்பதொரு வித்யை, சயனதலத்தோடுங் கொண்டுபோகி ஜீவந்தரகுமார ஸமீபமடைவிப்ப அடைந்து ஜீவந்தரகுமாரனை நமஸ்கரிப்ப, ஜீவந்தர குமாரனும் ஆனந்தத்தோடு நந்தாட்யனை ஆலிங்கனம் பண்ணியபின், கந்தோத்கடாதி பந்துஜன வ்ருத்தாந்தத்தினையுங் கேட்டுப் பரஸ்பரம் ப்ரீதராயிருந்தனர். மற்றென்று சொல்லுதும் :

ஸுஜநவிஷய சோபாநகரத்து ராஜா த்ருடமித்ரனுக்கு ப்ராதாவாகிய ஸுமித்ரனுக்குத் தேவி, வசுந்தரை ; இவர்கட்குப் புத்ரி, ஸ்ரீசந்த்ரை யென்பாள். இவள் யௌவநாவஸ்தையினை யடைந்தபின், ஒருநாள், தன் மாளிகையில் விளையாடுகின்ற கபோதமிதுனங்களைக்கண்டு ஜாதிஸ்மரணமுடையளாகி மூர்ச்சித்தனளாக, இவளைப் பரிஜனங்கள் சந்தனுதிகளால் தேற்றியபின், மாதாபிதாக்கள் அதனைக்கேட்டுப் பரவசராகித் திலகசந்திரிகை மகள் அநங்கஸுந்தரி யென்னுஞ் சேடியை, "பெண்பிள்ளையின் மூர்ச்சாகாரணத்தை யறிந்து வருவாயாக" என்று போகவிட, அவளும் ஜாதிஸ்மரணத்தால் மூர்ச்சைவந்தமை கந்யகைபக்கல் கேட்டுவந்து சொல்லுவாள்:

"இதற்கு மூன்றும்பவத்து ஹேமாங்கதவிஷய ராஜமஹாபுரத்து வைச்யன், ரத்நதேஜனென்பான் ; பார்யை, ரத்நமாலையென்பாள் ;

இவர்கட்குப்புத்ரி, அநுபமையென்பாள்; அந்நகரத்துக் கனகதேஜ னென்னும் வைச்யனுக்கும் சந்த்ரமாலைக்கும் புத்ரன் ஸ்வர்ண தேஜன்; மைத்துனனாகிய இவனுக்கு அநுபமையைக் கொடுத்து மென்றிசைந்த மாதாபிதாக்கள் பின் அவனை அவமதித்து, மணிகார னென்னும் வைச்யபுத்ரனாகிய குணமித்ரனுக்குக் கொடுத்துச் செல் கின்றகாலத்து, அவன் அம்போநிதியென்னும் ஓராற்றின் சுழியுள் அகப்பட்டு மரித்தபின், அநுபமையும் பர்த்ருமரண துக்கிதையாகித் தத்ப்ரதேசத்தே வீழ்ந்து மரித்தனள்; பின்பு அவர்களிருவரும் அந் நகரத்து ஒரு வைச்யன் க்ருஹத்தே பவனவேகனும் ரதிவேகையு மென்னும் கபோதமிதுனங்களாகப் பிறந்து போதாதிசயத்தாற் பிற ருபதேசிப்ப அக்ஷராப்யாஸ முதலாகிய ஸாமர்த்யத்தினை யடைந்து ஶ்ராவகயோக்யாசாரங்களை ஆதரித்துப் பூர்வபவ ஸம்பந்தத்தினாற் பரஸ்பரம் அநுராகித்து வளர்கின்றகாலத்து, அநுபமைக்கு மைத் துனனாகிய ஸ்வர்ணதேஜன் மரித்து மார்ஜாரமாகப் பிறந்தனன்; மார்ஜாரம்பூர்வ வைரத்தால், அநுபமையாகிய ரதிவேகையைப் பிடிப் பப் பவனவேகனென்னும் புரு, நக துண்டங்களால் மார்ஜாரத்தைப் பாதித்துச் செல்லாநின்ற காலத்து, ஒருநாள் பர்வதபார்ச்வத்தே கபோதமிதுனங்கள் விளையாடப் போகியவிடத்து வலையிலே பவன வேகனகப்படக் கண்ட ரதிவேகை சோகத்தினோடுகூடவந்துஶ்ரேஷ் டிக்குத் தத்பர்த்ரு மரணத்தினை மூக்கினாலெழுதிக் காட்டி, சோகத் தால் மரித்து ஸ்ரீசந்த்ரையாகிப் பிறந்தது" என்று சேடி சொல்லக் கேட்டு, ஸ்ரீசந்த்ரையுடைய பூர்வ பர்த்தாவைத் தேடுவான்வேண்டி ஒருப்பட்டகன்று, இவள் பூர்வ வைபவங்களை யெழுதுவித்து ரங்க தேஜனென்னும் நர்த்தகனையும் மதனலதை யென்னும் நர்த்தகியினை யும் அழைத்து ஸம்மான பூர்வகமாக, ஏதத்வ்ருத்தாந்தத்தினை நாடக மாகப் பண்ணி அபிநயித்துப் பலதேசங்களிலும் ரங்கஸ்தானத்துப் பட்டகத்தை விரித்துக் கூத்தாடுக" என்று சொல்லி விடுத்தனர். அவர்களும் போகி அவ்வண்ணஞ் செய்கின்ற காலத்து, ஒருநாள், ராஜா, புஷ்பவனமென்ப தோருத்யானத்து ஸமாதிகுப்தரென்னுந் தபோதனரை நமஸ்கரித்துத் தர்மஶ்ரவணாந்தரம், "என் புத்ரி பூர்வபவ பர்த்தாவைக் காணலாவது எங்கே" என்று வினவ, அவ ரும், "இப்பொழுது ஹேமாப நகரத்தில்" என்றருளிச் செய்யக் கேட்டு, நர்த்தகரோடு கூடப்போகி ஹேமாப நகரமடைந்து ரங்கஸ் தானத்தே கூத்தாடுவிப்ப, தத்தர்சனார்த்தமாக நகரஜனங்களோடு வந்து நந்தாட்யன் கண்டு, ஜாதிஸ்மரணத்தினால் மூர்ச்சிப்ப, ஜீவந்

தரகுமாரன் சீதக் கிரியைகளால் மூர்ச்சைநீக்கி, "மூர்ச்சாகாரணம் என்" என்று வினவ, அவனும் பட்டகத்து எழுதிய பூர்வபவ ஸம்பந்தத்தினை யெல்லாஞ் சொல்லி, "பூர்வபவத்து நின் மாளிகையிலே பவனவேகனென்னும் கபோதமாகி, ஜீவிதாவஸானத்து நந்தாட்யனுயினேன்" என்று சொல்லக்கேட்டு, அத்யந்தம் விஸ்மிதனுகி ஜீவந்தர குமாரன் ஸ்ரீசந்த்ராநந்தாட்யர்களுக்குக் கல்யாணவிதியினைத் தொடங்குவானெருப்பட்டனன். மற்றென்று சொல்லுதும் :

ஹரிவிக்ரனென்பானெரு வ்யாதபதி தன் தாயாதியாயினனெருவனுற் பீடிதனுகிப்போந்து கபித்தவன ஸமீபமாகியதோரு பர்வதபார்ச்வத்தே ஒரு நகரம் பண்ணியிருந்தனன். இவனுக்கும் வனகிரியென்னும் பார்யைக்கும் புத்திரன், வநராஜனென்பான்; ஹரிவிக்ரமனுக்கு ஸாமந்தர், அதிபலனும் வடவ்ருக்ஷனும் சித்ரஸேனனும் ஸைந்தவனும் அரிஞ்சயனும் சத்ருமர்த்தனனும் என்பார். வனராஜனுக்கு ஸகாயர், லோகஜங்கனும் ஸ்ரீஷேணனும் என்பாரிருவர். ஒருநாள், நகரசோபையென்னும் நகரமடைந்து ஒருத்யானத்து விளையாடாநின்ற ஸ்ரீசந்த்ரையது ரூபயௌவன ஸௌந்தர்யாதிசயத்தினைக்கண்டு விஸ்மிதராகிப் போகின்றவர் ஸ்நானர்த்தமாகக் கொடுபோகின்ற ராஜவாகனமாகிய ப்ரதான துரகத்தினைப் பலத்தாற் பிடித்துக் கொண்டுபோகி ஹரிவிக்ரமனுக்குக் கொடுப்ப, அவனும் அவர்களுக்கு ஸம்மானம் பண்ணியபின், வநராஜனுக்கு ஸ்ரீசந்த்ரையது ரூபசௌந்தர்யாதிசயத்தை யறிவிப்ப, அவனும் பூர்வபவஸ்நேஹானுபந்தத்தினல் மிகவும் அனுரக்தனுகி, "அவளை யாதானும் ஒருபாயத்தாற் கொடுவந்து தரவேண்டும்" என்று பகுவித ஸம்மானங்களாலிரப்ப, அவர்களும் நகரமடைந்து நிவாஸஸ்தானமறிந்து அதற்கு அநுரூபமாக நிலவறைபண்ணி அவளையுங்கொண்டு அங்கேகி, "இன்னர் இவ்வண்ணஞ் செய்தனர்" என்று ஓலையெழுதி வைத்துப் போனவிடத்து மற்றைநாள், பெண்பிள்ளையைக்காணுது பந்துஜனங்கள் அதிதுக்கிதராகியபின், கின்னரமித்ரனும் யக்ஷமித்ரனுமென்னும் கந்யகாப்ராதாக்கள் அவ்வோலையை வாசித்து அவ்வழியே தொடர்ந்துசென்று யுத்தம்பண்ண, அவர்களும் இவர்களை ஜயித்துக் கொண்டுபோகி வநராஜனுக்குக் கொடுத்தனர். அவளும், "என்னுடைய நகரத்து ஜினபவனம் நமஸ்கரித்தல்லது வார்த்தை பேசேன்" என்று மௌனவிரதங் கைக்கொண்டனள். வநராஜனும் இவளது விரக்தசித்தமறிந்து, "யாதானுமோருபாயத்தால் என்கண்

அனுராகிப்பாளாகப் பண்ணவேணும்" என்று தன்பரிசாரக ஸ்திரீகளையேவ, அவர்களும் நாநாப்ரகாரத்தாற் பேதிப்பவும் அவள் முன்போலச் சலியாதிருந்தனள்; இந்தவ்ருத்தாந்தத்தினை ஹரிவிக்ரமன் கேட்டு, "இவ்வண்ணஞ் செய்துபிழைசெய்தனை" என்று வநராஜனை மிகவுங் கோபித்து ஸ்ரீசந்த்ரையினைத் தன்புத்ரிகளோடு கூட வர்த்திப்பாளாகப் பண்ணியபின், த்ருடமித்ரன் ஸுமித்ரன் முதலாகிய ஸகலபந்துஜனங்களோடுங் கூட ஜீவந்தரகுமாரன் யுத்தஸன்னத்தனாகிச் சென்று ஹரிவிக்ரமனுடைய நகரத்தைவளைந்து யுத்தஞ்செய்யத் தொடங்கியபின், "பகுஜனவிநாச காரணமாகிய யுத்தஞ் செய்யுமது காரியமன்று" என்று கருதி ஜீவந்தரகுமாரன் ஸுதர்சனயக்ஷனை நினைந்தனன்; அவனும் தத்க்ஷணத்திலே ஸ்ரீசந்த்ரையைக் கொடுவந்து கொடுத்துப் பின்னும் யுத்தோன்முகனாகிய ஹரிவிக்ரமனையும் வநராஜனையும் கட்டிக் கொடுவந்து குமார ஸன்னிதானத்திவிட்டனன். தத்காலத்தே சர்யாமார்க்கமெழுந்தருளினரொரு சாரணரைக் கண்டு ஜீவந்தரகுமாரன், நவபுண்யக்ரமத்தா லெதிர்கொண்டு அமுது செய்வித்துப் பஞ்சாச்சர்யமடைய, அது கண்டு வநராஜன் ஜாதிஸ்ம்ருதியடைந்து, "யான் முன்பு ஸ்வர்ணதேஜ னென்னும் வைச்யனாகிப் பிறந்து அதற்பின் மார்ஜார பவத்துக் கபோதத்தினை யடர்த்துப் பிடித்தபின், மற்றொருநாள் ஒரு தபோதனர் ஆகமாத்தியயனம்பண்ணக் கேட்டிருந்து உபசம பாவத்தால் வைராநுபவந்தத்தினீங்கி வநராஜனாயினேனாதலிற் பூர்வபவஸ்நேகத்தால் இவ்வண்ணஞ் செய்தேன்; என் பல பராக்கிரமத்தாலன்று" என்று சொல்லியபின், அவர்களைப் பந்தத்தினீக்கிப் போகவிட்டபின் சோபா நகரமடைந்து கல்யாண விதியால் ஸ்ரீசந்த்ரையினை நந்தாட்யனுக்குக் கொடுத்தபின்,

ஹேமாப நகரத்தேற வருகின்றவன் ஒரு பொய்கைக் கரையில் விட்டிருந்தபொழுது, அப்பொய்கையுள் ஸ்நானபானாதிகளைச் செய்கின்ற பரிஜனங்களைச் சில மக்ஷிகங்கள்வந்து பாதிப்ப, "இது க்ருதகமாக விருந்தது" என்று அறிந்து, "இதற்குக் காரணமென்ன" என்று யக்ஷனை ஸ்மரிப்ப, அவனும் அதுபொழுதே வந்து அப்பொய்கையுள் ஒரு வித்யாதரன்செய்த அம்மாயத்தினை நீக்கி அவனைக் குமாரஸந்நிதானத்துவைப்ப, அவனும், "நீயார்" என்று வினவச் சொல்லுவான்: "பூர்வபவத்து மாலாகார னென்னும் வைச்யனுக்கும் குஸுமஸ்ரீயினுக்கும் புத்ரன்; ஜாதபட னென்பேன்; தனதத்தனென்னும் வைச்யனுக்கும் நந்தியென்னும் பார்யைக்கும் புத்

ரன் சந்த்ராபனென்னும் மித்திரனேடுங்கூட நின்கண்ணே ஸத்தா் மங்கேட்டு மதுமாம்ஸ நிவ்ருத்திவ்ருதம் கைக்கொண்டு முடித்து வித்யாதரனுயினேன். ஒருநாள், வித்தகூடத்து ஸந்நிஹிதராகிய சாரணரை நமஸ்கரித்துப் பூர்வ பவஸம்பந்தத்தினைக் கேட்டு பவத் தர்சனர்த்தமாக வந்தேன். நின்பூர்வ பவஸம்பந்தமாவது: தாதகீ ஷண்ட பூர்வமந்தர பூர்வவிதேக புஷ்கலாவதீவிஷய புண்டரீகிணீ நகராதிபதி, ஜயந்தரன்; தேவி, ஜயதேவி; இவர்கட்குப் புத்ரன், ஜயத்ருடன். இவன் ஒருநாள், மனேஹரோத்யான மடைந்து வன விஹரணம் பண்ணி ஒரு பொய்கையுள் விளையாடா நின்றதொரு அன்னக்குஞ்சைக் கண்டு ஆதரித்து, ஒரு சேடகனை விடுத்துப் பிடிப்பித்துக்கொண்டு போந்து வளராநிற்ப. இதன் மாதாபிதா வாகிய அன்னங்கள் இதன் பின்றொடர்ந்து சென்று மாளிகையிலே அநவரதமும் சோகஸ்வரத்தால் அரற்றுகின்றவிவற்றுள்,பிதாவாகிய அன்னத்தைச் சேடகன் எய்துவீழ்த்தினன்; ஜயதேவி கண்டு, "இஃது என்" என்றவினவ, சேடகனும் உள்ள பெற்றிசொல்லிய பின், குமாரனைநோக்கி, "இந்தப் பாபக்ரியை செய்து பிழைசெய் தனை; இனி இதனைத்தாயோடே கூடவிடுவாயாக" என்றுசொல்ல, அவனும், "அஞ்ஞானனுகிய என்னுல் இப்பாபக்ரியை செய்யப்பட் டது" என்று ஆத்மநிந்தையோடுங் கூடிப் பிரித்த பதினுறுநாளிற் கூட்டியபின், ஸம்ஸாரவிரக்த தபப்ரபாவத்தால் ஸஹஸ்ராரகல்பத் துத்தேவனுகி அஷ்டாதசாஸகரோபமகாலம் திவ்யஸுக மனுபவித் துப்போந்து ஜீவந்தரகுமாரனுயினை. முன்பு சேடகனுலெய்யப்பட்ட அன்னம் நின்சத்ருவாகிய காஷ்டாங்காரிகனுயிற்று.முன்பு அன்னக் குஞ்சைக் கிளையிற் பிரித்தனையாதலிற் பதினுறு ஸம்வத்ஸரம் நீயும் நின்கிளையிற் பிரிந்தனை" என்று இவ்வண்ணம் வித்யாதரன் சொல் லக் கேட்டு, அவனுக்கு ப்ரியவசனஞ் சொல்லிவிட்டு ஹேமாபநகர மடைந்து இஷ்டவிஷயங்களை யனுபவித்துச் செல்கின்றகாலத்து, மற்றென்று சொல்லுதும் :

ராஜபுரத்துநின்றும் நந்தாட்யன்போகி, ஜீவந்தரகுமாரனை யடைந்தபின், வகுளமதுராதிகள் கந்தர்வதத்தையைக்குறுகி, விந யோபசாரஸஹிதமாக, "ஸ்வாமியும் நந்தாட்யனும் எந்தத்தேசத்தே வர்த்திக்கின்றனர்" என்று வினவ, அவளும் "ஸுஜநஜிஷயஹேமாப நகரத்துள்ளார்" என்றுசொல்லக் கேட்டு மிகவும் ப்ரீதராகி ஸ்வபந்து ஜனங்களுக்கு அறிவித்து, ஹேமாபநகரத்து ஏறப்போகின்றவர்கள் தண்டகாரண்யத்துத் தாபஸாச்ரமத்து விட்டனர்; அவ்விடத்து

யத்ருச்சையாய் விஜயமஹாதேவி அவர்களைக் கண்டு, "நீங்கள் எங்குள்ளீர், எங்குப்போகின்றீர்" என்று வினவ, யதாவ்ருத்தாந்தம்றிவித்தபின், புத்ரவிரஹ துக்கபீடிதையாகிய தேவி சோகபாஷ்பம் வீழ்தர, "அப்பிள்ளையை இங்கேயும் கொண்டு வருவீராக" என்று சொல்லிவிடுத்தபின், அவர்களும், "தேவியது சோகாவஸ்தையினுலும் ரூப ஸாத்ருச்யத்தாலும் ஸ்வாமிக்கு மாதாவேபோலும்" என்று ஸந்தேஹமெய்திப்போகி ஹேமாபநகரமடைந்து சௌர்யப்ரகாசநபுரஸ்ஸரமாக ஸ்வாமியைக் காண்பான் வேண்டி, ஒருவ்யாதபதியோடுங்கூடி ஸார்த்தத்தினைச் சூறைகொண்டனர். ஸார்த்தத்துள்ளவர்கள் சிரோகதஹஸ்தராகி ஆக்ரோசபூர்வகம் ஜீவந்தரகுமாரனுக்கு அறிவிப்ப, அவனும் வ்யாதபலத்தோடும் யுத்தம்பண்ணுகின்றவிடத்து வருளாதிகளும் தமது வீர்யப்ரகாச பூர்வமாக ஸ்வநாமாக்ஷரஸஹிதமாகிய சரங்களைவிட, அவற்றைக்கண்டு பந்துஜனங்களாவதறிந்து, அவர்களுடன் கூடிக் கந்தோத்கடாதி பந்துஜனவ்ருத்தாந்தநிவேதநாந்தரம் தண்டகாரண்ய வ்ருத்தாந்தத்தினையறிவித்தபின், அப்போதே ராஜபுர கமனோன்முகனுகி த்ருடமித்ராதி பந்துஜனங்களுக் கறிவித்து, சாதுரங்கபல விபூதியோடும் கூட்டப்போகித் தண்டகாரண்யத்துத் தன்வரவு பார்த்திருந்த விஜயமஹாதேவியை நமஸ்கரித்திருப்ப, தத்க்ஷணத்தே ஸுதர்சன யக்ஷன் சந்நிகிதனுகித் திவ்யாபரண வஸ்த்ரகந்த மால்ய போஜனுதிகளாற் பூஜித்து மதுர வசனங்களாற் குமார மாதாக்களுடைய சோகதுக்கங்களைக் கெடுத்துப் போயினபின், குமாரனது புண்ய மஹிமையினைக் கண்டு மிகவும் பிரஸன்னையாகி ரஹஸ்யமாகப் புத்திரனை நோக்கி, "ஸ்வாமியை லோகாந்தரமடைவித்து நம்குல ராஜதானியாகிய ராஜபுரத்தே ராஜ்யபதமெய்தி வர்த்திக்கின்ற காஷ்டாங்காரிகன் நமக்குச் சத்துருவாயினன். தேஜஸ்வியாகிய உன்னால் உபேக்ஷிக்கப்படுவா னல்லன்" என்று சொல்ல, "அவ்வண்ணஞ் செய்கின்றேன்" என்று சொல்லி, காலானுரூபமாக அபிப்ரேத கார்ய முடிந்தபின் நந்தாட்யனோடே எழுந்தருளுமளவு, மிவ்வனப்பிரதேசத்தே இருந்தருளுவீராக" என்று சொல்லி, மஹாதேவிக்கு ரக்ஷார்த்தமாகச் சில பரிஜனங்களையு மிருத்திப்போகி:

முன்பே, பரிஜனங்களையடைவித்து அப்ரகாசமாக ராஜமாபுரமடைந்து யக்ஷனுற் கொடுக்கப்பட்ட காமமுத்திரிகா ப்ரபாவத்தினுல் ஒரு வைச்யவேஷங் கொண்டுபோகி ஆபணப்ரதேசத்திருப்ப, அந்த நகர ஶ்ரேஷ்டி ஸாகரதத்தன் பார்யை, அமலையென்பாள்;

புத்திரி விமலை யென்பாள்; "இவளை யாவர்க்குக் கொடுத்தும்" என்று நைமித்திகனை வினவ, "கன்யகா யோக்கிய பர்த்தா ஸந்நிஹிதனாகிய பொழுது ஸ்வர்ணரதாதி ஸகல தனங்களும் அதிக லாபத்தவாகும்" என்று ஆதேசமுண்டாதலின், ஜீவந்தரகுமாரன் ஸந்நிஹிதனாகியபொழுதே அவ்வண்ணமாகியபின் ஆனந்தத்துடன்கூடி ஜீவந்தரகுமாரனுக்கு விமலையை விவாஹவிதியாற் கொடுக்க அனுபவித்துச் சிலகாலங் கழித்தபின்பு பரிவ்ராஜக வேஷங்கொண்டு போகிக் காஷ்டாங்காரிக ஸமீபமடைந்து, "அதிதியாகிய வெனக்குப் போஜனதானம் பண்ணவேண்டும்" என்ன, அவனும் உபசார ஸஹிதமாகப் போசனம் பண்ணுவித்தபின், அதுவே காஷ்டாங் காரிகவிநாச நிமித்தமாகக் கொண்டு புறப்பட்டு:

ஒரு வ்ருத்த ப்ராஹ்மண வேஷங் கொண்டு போகி ராஜ புத்ராதி விசிஷ்ட ஜனங்களிருந்த ஸபையையடைந்து, "த்ருஷ்ட பலமாகிய வசீகரண சூர்ணாஞ்சனாதி ஔஷதவித்தைகளுள; வேண்டுவீர்களாயின், உபதேசங் கொள்வீராமின்" என்ன, அவர்களும், "என்னே! இந்த வார்த்திக்யானுரூப மாகின்ற தில்லை, இவன் வசனம்" என்று சொல்லி, அபஹஸித்து, "இந் நகரத்தே குணமாலை யென்பாள் ஒரு வைச்யபுத்ரி, சூர்ணத்தினை ஜீவந்தரகுமாரன் ஸ்துதியாமையாற் புருஷ த்வேஷியாகி வர்த்திக்கின்றனள்; அவளை வசீகரணம்பண்ண வல்லீராயிற் பின்பு யாங்களும் அப்யஸித்தும் என்று சொல்லியபின், மாயா வ்ருத்தனும், "அவ்வண்ணம் செய்குவன்" என்று ப்ரதிஞ்ஞை பண்ணி, குணமாலை பவனமடைந்து, "அதிதியாயினா னொருவன் வந்துநின்றனன்" என்று சேடிமுகத்தாலறிவித்து, குணமாலையின் அனுமதியாலடைவிக்க அடைந்து பத்ராஸனத்திருப்ப, "எங்கு நின்றும் வருகின்றீர், எங்குப் போகின்றீர்" என்று குணமாலை வினவ, ஸ்கலிதவசனத்தனாகி, "பின்னின்றும் வருகின்றேன்; முன்னேக்கிப் போகின்றேன்" என்ற பரிஹாஸ வசனங்களைப் பரிஜனங்கள் அபஹஸித்தபின், "வார்த்திக்யம் சித்தவிகாரம் பண்ணுமென்பது தகுவதன்றே" என்று அவர்களை நிவாரித்து, "முன்னேக்கிப் போகின்ற தேசம் யாது" என்றுவினவ, "ஜராவிநாசகாரணமாகிய கந்யாதீர்த்தத் தேறப்போகின்றேன்" என்ன, அவளும், "என்னே! இவனது சரீரம் வார்த்திக்யானுரூபமாயினும், வசனம் யௌவனலங் கிருதமாகின்றவாறு" எனநினைந்து உபசாரஸஹிதமாக அவனுக்குப் போஜனம் பண்ணுவித்தனள். அதற்பின், "அபிலஷித தேசத்தேறப்

போவீராமின்" என்ன, அவனும், "அவ்வண்ணஞ் செய்வேன்" என்று ஸ்கலிதவசனத்தனாகி அவளது சயனத்தலத்தை யடைய, குணமாலை, பரிசாரகஜனங்கள் அதனையறிந்து கரங்களைப்பற்றி யீர்க்கின்றவர்களை நிவாரித்து, "சயனதலத்தே வஸிப்பிக்க" என்று நியோகித்தபின், இரவுவஸித்து ப்ரபாதகாலத்து அதிமதுரமாகப் பாடிய இவனது ஸ்வரத்தைக்கேட்டு, "காந்தர்வதத்தா விவாஹ காலத்து ஜீவந்தரகுமார கீதமே போன்றிருந்தது" என்று விஸ்மிதையாகி, குணமாலை அவனையடைந்து, "என்ன என்ன வித்தைகள் அப்யஸித்தீர்" என்றுகேட்ப, தர்மார்த்தகாமசாஸ்திர பாரங்கதனாகின்றேன்; தர்மார்த்தபலங்களைப் பிரதிபாதிப்பது காமசாஸ்த்ரம்; அதன் பேதத்தனவாகிய ஸகலகலாவித்தைகளும் அறிவேன்" என்ன, அவளும் ஆதரித்து, "கந்தயுக்தி முதலாகிய வித்தைகளை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து அப்யஸியாநின்றவிடத்து, மற்றொருநாள் வித்யாதி தேவதாபூஜா வ்யாஜத்தினால் ஒருத்யானமடைந்து ஏகாந்தமாகத் தனது ஸ்வரூபத்தைக் காட்டிப் பின்னரும் விச்வாஸார்த்தமாகச் சூர்ணவிவாதவ்ருத்தாந்தத்தினையுஞ்சொல்லிக் கரதலஸ்பர்சனஸுக மனுபவித்தபின், அவளும் லஜ்ஜாஸ்நேகபரவசையாகிநிற்ப, பின்னும் தனது வ்ருத்தவேஷங்கொண்டு வித்யாதேவதா பூஜைபண்ணியபின், இந்தவ்ருத்தாந்தத்தினைப் பந்துஜனங்களறிந்து மிகவும் ப்ரீதராகி, ஜீவந்தரகுமாரனுக்குக் குணமாலையை விவாக விதியாற்கொடுத்தபின், அவளுடன் இஷ்டவிஷய காமபோகங்களையனுபவித்துச் சிலநாள் கழிந்தபின், ஒருநாள்:

ஸமஸ்தபந்துஜனங்களோடும் சாதுரங்க பலஸஹிதனாகி விஜயகிரியென்னும் மதஹஸ்தியினையேறி ராஜ பரிச்சதம் புடைசூழ்தரக் கந்தோத்கட பவனத்தினை யடைந்தனன். அதனைக் காஷ்டாங்காரிகன் கேட்டு மிகவுங் கோபித்தவிடத்து ஆப்தராகிய மந்த்ரிஜநங்கள், ஜீவந்தரகுமாரன், மகானுபாவனும் ஸுதர்சன யக்ஷமித்ரனும் வித்தியாதர பலஸகிதனும் மதுரவகுளாதி ஸஹாயனும் ஆதலின், அவன் அபேத்ய பராக்ரமன்; அவனுடன் விரோதிக்குமது விநாசஹேதுவாகும்" என்று சொல்ல அடங்கினன்; மற்றொன்று சொல்லுதும் :

விதேஹவிஷயத்து ராஜா, கோபேந்த்ரன்; தேவி, ப்ருத்விஸுந்தரி; புத்ரி, ரத்னவதி; "இவள், சந்த்ரகவ்யதனமென்னும் யந்த்ரம் வீழ்தரச் சரந்தூரந்திட்டவனுக்கு யோக்யை" என்று நியதியுண்டாதலின், ததர்த்தமாகக் கோபேந்த்ர மஹாராஜன், ராஜமகாபுர

மடைந்து,ஸ்வயம்வர கோஷணு பூர்வகமாக ராஜாக்களையழைப்பித்த பின், அவர்களும் ஸமுதிதராகிவந்து யந்த்ரத்திலெய்து, அஸமர்த்த ராகியபின் ஜீவந்தரகுமாரன் வித்தநமஸ்காரானந்தரம் ஆசார்யரா கிய ஆர்யநந்திகளை நமஸ்கரித்து யந்த்ரத்தை ஸ்கலிதமாக வெய்த னன்; அதனைக்கண்டு ராஜவீத்யாதர ஜனங்கள் ஸாதுகார்முகராகி ஸ்துதிப்ப, ரத்னவதி, ஜீவந்தரகுமாரன்மிசை மாலையிட்டனள். காஷ்டாங்காரிகன் முதலிய ராஜாக்கள், கன்யாபஹரணம் பண்ணு வான் வேண்டி யுத்தந் தொடங்குதலும், ஜீவந்தரகுமாரன், ஸத்யந் தர மகாராஜ ஸாமந்தவர்க்கமாகியவர்களுக்குத் தூதமுகத்தால் தனது வ்ருத்தாந்தத்தினையும் க்ருதக்னனாகிய காஷ்டாங்காரிகனது ஸ்வாமித்ரோஹத்தினையும் அறிவித்து ஸாமபேததான தண்டலக்ஷ ணத்தவாகிய சதுர்விதோபாயத்தினால் அவர்களை வசீகரித்து யுத் தோன்முகனாகி விஜயகிரியென்னும் மதஹஸ்தியேறி யுத்தரங்கங்குறு குதலும், காஷ்டாங்காரிகன் அசனிவேகமென்னும் மதஹஸ்தியை மேற்கொண்டு குறுகி யுத்தம்பண்ண, அவனை ஜீவந்தரகுமாரன் லோகாந்தர மடைவித்தனன். ததனந்தரம், ஸகல ராஜபலமும் ஜீவந்தரஸ்வாமியைச் சரணமாக அடைந்தபின், ராஜகோஷணு பூர்வகம் விஜயாதேவ்யாதி ஸகலபந்து ஸஹிதனாகி ஜினபதி பூஜாதி மங்கலக்ரியா பூர்வகமாக ஸுதர்சனயக்ஷ வித்யாதரப்ரப்ருதிகள் ராஜ்யாபிஷேகம்பண்ணியபின் ரத்னவதிகல்யாணானந்தரம், காந்தர்வ தத்தைக்கு மஹாதேவி பட்டங்கொடுத்து, துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன ப்ரகாரத்தினால், ராஜ்ய பரிபாலனம்பண்ணி இஷ்ட விஷய காமபோகங்களை யனுபவித்துச் செல்கின்ற காலத்து, மற் றொரு நாள் :

ஜீவந்தர மஹாராஜன், ஸுரமலயோத்யானத்து வரதர்ம தபோதனர் பார்ச்வத்தே தர்மச்ரவணானந்தரம் நந்தாட்யாதி பந்து ஜனங்களோடுகூட ஸம்யக்தர்சன தான சீலோபவாஸ ஜின பூஜாதி வ்ருதங்களோடு கூடிச் செல்லாநிற்ப, ஒருநாள், அசோகவன மென்னும் உத்யானத்துப் பரஸ்பர யுத்தம் பண்ணுநின்ற வானர ஸமூகத்தைக் கண்டு போகநிர்விண்ணனாகித் தத்ர ஸந்நிஹிதராகிய சாரண தபோதனர் பார்ச்வத்தே தனது பூர்வபவஸம்பந்தத்தினைக் கேட்டு ப்ரதிதிவஸம் ஜிநபதி பூஜாபராயணனாகின்றவன், ஸுரமல யோத்யானத்தேஸ்ரீவர்த்தமானபட்டாரகர் ஸமவஸரணம் ஸந்நிஹித மானமை கேட்டு, விபூதிஸஹிதம்போகி,ஸமவஸரணமடைந்து ஜின பதிபூஜாநந்தரம் கந்தர்வதத்தாபுத்ரனாகியவஸுந்தரபுத்ரனுக்குராஜ்ய

பதங்கொடுத்து ஸத்யந்தர மஹாதேவியோடுங் கூட காந்தர்வதத்தாதி தேவிகளும் அவர்கள் மாதாக்களும் சந்தனார்யை ஸ்ரீமதீதே தீக்ஷித்தபின், ஜீவந்தரமஹாராஜனும் நந்தாட்ய மதுராதிஸஹாய மாதுலாதி மஹீபதிகளோடுகூட ஸர்வஸங்க பரித்யாக ரூபத்ததாகிய ஜினதீக்ஷையினைப் ப்ராபித்து ஜீவந்த்ர முனிகளும் தத்ப்ரபாவத்தால் சுருதகேவலீபத ப்ராப்தராகி விஹரித்து ஸ்ரீவர்த்தமான பட்டாரகர் பரிநிர்வாணனந்தரம் விபுலகிரிமிசை அகாதிகர்மக்ஷயம் செய்து முக்திபதமடைகுவர்"

என்று ஸுதர்மகணதரர் அருளிச்செய்யக்கேட்டு ஶ்ரேணிக மஹாராஜன், அதிஸந்துஷ்டனாகி நமஸ்கரித்துப்போகித் தனது நகரமடைந்தனன்.

நூற் பொருள்

கடவுள் வாழ்த்து 1 - 2 ; தன்ம சரணம், சாது சரணம் 3.
அவையடக்கம் 4 - 5.
பதிகம் 6 - 29.

1. நாமகள் இலம்பகம்

ஏமாங்கத நாடு 30 - 31; நாட்டு வளம் - மழை வளம் 32-41 ; பயிர் வளம் 42 - 64 ; ஊர்களின் சிறப்பு 64 - 77 ; நகர் (இராசமாபுரம்) வளம் - புடைநகர் 78 - 85 ; இடைநகர் 85 - 93 - அகழ் 94 - 99 ; மதில் 100 - 105 ; அகநகர் 106 - 140 ; பரத்தையரிடம் 107 - 111 ; ஆவணம் 112 - 6 ; வீதிகள் - அரசர் வீதி 117 - 124 ; நகர்ச்சிறப்பு 125 -140 ; கோயிற்சிறப்பு 141 - 156 ; சச்சந்த மன்னன் 157 - 161 ; விதையத்தரசன் மகள் விசயமாதேவி 162 - 185 ; இவர்கள் திருமணம் 186 - 7 ; சச்சந்தன் இன்பத்தில் அமிழ்ந்தியிருத்தல் 188 - 199 ; கட்டியங்காரனை அரசு செய்ய வேண்டுதல் 200 - 2 ; கட்டியங்காரன் ஏற்றுக்கொள்ளல் 203 ; நிமித்திகன் மன்னனைத் தடுத்தல் 204 ; சச்சந்தன் அவனுரை கொள்ளாமை 205 ; காமத்தால் அழிந்தாருடைய சரிதையைக்கூறி நிமித்திகன் மீண்டும் தடுத்தல் 206 - 211 ; உருத்திரதத்தன் மன்னனுக்கு அறிவுறுத்தல் 212 ; சச்சந்தன் அவனுரை கொள்ளாமை 213; உருத்திரதத்தன் நீங்கிப் போதல் 214; சச்சந்தன் இன்பம் நுகர்தல் 215 - 7 ; விசயை கனுக்காணல் 218 ; விடிந்து, தெய்வ வழிபாடு செய்து, கணவனிடத்துக் கனவை மொழிதல் 219-224 ; கனவின் பயன் தெரிந்து வருந்திப் பின் தேறுதல் 225- 9 ; விசயை சூலுறுதல் 230 - 1 ; சச்சந்தன் தச்சனை எந்திர ஊர்தி இயற்றச் சொல்லல் 232 - 4 ; தச்சன் மயிற்பொறி செய்து தந்து பரிசு பெறுதல் 235 - 7; விசயை அப்பொறியைச் செலுத்தக் கற்றுக் கொள்ளல் 238 - 9 ; கட்டியங்காரன் அமைச்சரோடு உசாவுதல் 240 - 59 ; தருமதத்தன் அறிவுரை கூறுதல் 242 - 56 ; மதனன் கூறுதல் 256 - 7 ; கட்டியங்காரன் தானே அரசனுவதாக முடிவு கூறுதல் 258 - 9 ; சச்சந்தனைக் கொல்வதற்கு எழுதல் 260-3 ; வாயிலோன் சச்சந்தனுக்கு உணர்த்தல் 264 ; சச்சந்தன்

போருக்கு ஆயத்தஞ் செய்தல் 265 - 6; விசயமாதேவியைத் தேற்றி மயிற் பொறியிலேற்றி அனுப்புதல் 267 - 73; கட்டியங்காரனொடு பொருது படுதல் 274 - 91; மகளிர் அவனைப் பள்ளிபடுத்து இரங்குதல் 292 - 6; கட்டியங்காரன் முடிபுனைதல் 297; அவன் வெற்றி முரசொலி கேட்டு விசயை சோர்தல் 298 - 9; மயிற்பொறி சுடுகாட்டில் இறங்குதல் 300; சீவகன் பிறப்பு 301 - 4; விசயை புலம்பல் 305 - 313; அவள் தோழியாகிய சண்பகமாலை என்னும் கூனிவடிவோடு வனதெய்வம் தோன்றுதல் 314; அத்தெய்வம் கூறுதல் 315 - 6; குழந்தையின் கையில் முத்திரை மோதிரத்தையிட்டு இருவரும் மறைந்து நிற்றல் 317 - 9; இருளில் கந்துக்கடன் வருதல் 320; கீழே கிடந்த குழந்தையைக் கண்டு, மோதிரத்தை எடுத்து மறைத்து விட்டு, அதனைக் கையிலெடுக்கும்போது அது தும்ம, 'சீவ' என்ற வாழ்த்தொலி கேட்டல் 321 - 3; இறந்த தன் குழந்தையைக் காட்டிவிட்டு, சீவகனாகிய குழந்தையை எடுத்துச் சென்று, இறந்த குழந்தை உயிர்பெற்றதெனக் கூறித் தன் மனைவியாகிய சுநந்தையிடம் கொடுத்தல் 324 - 7; அவள் குழந்தையை வாங்கி மகிழ்தல் 328; குழந்தை கிடைத்த மகிழ்ச்சியால் கந்துகன் தானஞ்செய்ய, கட்டியங்காரன் மகிழ்ந்து அவனுக்கு நிதியளித்தல் 329 - 330; தானதருமங்கள் பெருகும்படி சீவகன் வளர்தல் 331; விசயை வருந்த, வனதெய்வம் நிகழப் போவனவற்றைக் கூறுதல் 332 - 3; விசயையைத் தண்டகாரணியத்துத் தாபதப்பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல் 334 - 42; விசயை ஆற்றங்கரையில் தங்கி, சூரியனுதித்தபின் துயிலுணர்ந்து, நடந்து சென்று தவப்பள்ளியை அடைதல் 342 - 7; தவக்கோலங் கொண்டு நோற்றல் 348-55; வனதெய்வம் நீங்கிப் போதல் 356-8; சீவகனைக்கண்டு அதுவருமென்று நம்பி விசயை இருத்தல் 359; கந்துகனும் சுநந்தையும் குழந்தைக்குச் சீவகனென்று பேரிட்டு வளர்த்தல் 360 - 7; சீவகன் கல்விபயிலுதல் 368 - 72; ஆசிரியன் அச்சணந்தி உறுதியுரைத்தல் 373 - 9; சீவகன் அறிவனைச் சரணடைதல் 380 - 2; சீவகனது வரலாற்றினை ஆசிரியன் கூறுதல் 383 - 9; தன் வரலாறறிந்து சீவகன் துயருற, ஆசிரியன் தேற்றல் 390 - 1; சீவகன் கட்டியங்காரனைக் கொல்ல எழவும், ஓராண்டெல்லை பொறுக்குமாறு ஆசிரியன் சொல்ல சீவகன் அதற்கிசைதல் 392-3; ஆசிரியன் தன் வரலாறு கூறி, தனக்கிருந்த ஆனைத்தீ நோய் சீவகனோடு உணவு கொண்டபின் நீங்கிற்றென உரைத்து, துறவு மேற்கொண்டு செல்லுதல் 394 - 408.

2. கோவிந்தையார் இலம்பகம்

அச்சணந்தி பிறவிநீங்குதல் 409; சீவகன் குமாரப்பருவமடைதல் 410 - 2; வேடர் நிரைகவர எண்ணுதல் 413 - 5; நிமித்திகன் தீங்கு வருமென்று கூற, வேடர் அவனை இகழ்ந்து நிரைகொள்ள எழுதல் 415 - 8; நிரைகாவலனாகிய நந்தகோனது வள்ளுவன் தீங்கு வருமெனக் கூற, ஆயர் காவலுக்குத் தக்காராய்ச் செல்லுதல் 419 - 20; வேடர் பொருது நிரைகவர்தல் 421 - 6; வேடர் நிரை கொண்ட செய்தியைக் கட்டியங்காரனுக்கு உணர்த்தல் 427 - 30; அவன் வெகுண்டு தன்படையை ஏவ, படைதோல்வியுறுதல் 431-9; நிரை மீட்போருக்குத் தன் மகளைத் தருவதாக நந்தகோன் முரசறைதல் 440; சீவகன் போருக்கெழுதல் 441 - 6; நிமித்திகன் வேடரைத் தடுத்தல் 447; வேடர் பொருது தோற்றோடுதல் 448 - 55; சீவகன் நிரைமீட்டு வருதல் கண்டு நகரமாந்தர் மகிழ்தல் 456 - 73; நந்தகோன் மகிழ்ந்து தன் மகள் கோவிந்தையை மணம்புரியுமாறு சீவகனை வேண்டல் 474 - 84; அவளைப் பதுமுகனுக்கு மணம் புரிவிக்க நினைந்து, சீவகன் இசைதல் 485 - 6; பதுமுகன்பொருட்டு அவளை ஏற்றல் 487 - 91; இன்பம் நுகர்தல் 492 - 4.

3. காந்தருவதத்தையார் இலம்பகம்

சிறிதத்தன் என்னும் வணிகன் பொருள் ஈட்ட வேண்டிக் கடல் கடந்து பொன்விளைதீப மடைதல் 495 - 505; பொருள் தேடித் திரும்பும் வழியில் புயற் காற்றினாலே கலங் கவிழ்தல் 506 - 14; சிறிதத்தன் தப்பிக் கரையேறிச் சென்று தனியே வருந்தி யிருத்தல் 515 - 8; தரன் என்னும் வித்தியாதரனைக் கண்டு தன் வரலாறு கூறுதல் 519 - 521; சிறிதத்தனது தோழரையும் பொருளையும் தன் விஞ்சையால் மீட்டுத் தருவதாகத் தரன் கூறி, அவனைத் தன் நகருக்கு அழைத்துச் செல்லுதல் 522 - 7; நகர வருணனை 528 - 37; அந்நகர வேந்தன் கலுழவேகன் தேவி தாரணி ஒரு பெண் மகவை ஈன்றாளென்றும், அப்பெண்ணுக்கு நல்வினை யனைத்தும் இராசமாபுரத்தே வருமென நிமித்திகன் சொன்னானென்றும் தரன் கூறி, சிறிதத்தனை அரசவைக்கு அழைத்துச் செல்லுதல் 538 - 543; அரசனும் சிறிதத்தனும் அளவளாவல் 544 - 9; அரசன் தன் மகள் காந்தருவதத்தையைச் சிறிதத்தனிடம் ஒப்புவித்து, இராசமாபுரத்தில் அவளை யாழிலே வெல்வோனுக்கு மணஞ் செய்து கொடுக்குமாறு வேண்டுதல் 550 - 6; வீணாபதி என்னும்

சேடியையும் அணிகலன் முதலியவற்றையும் அரசன் காந்தருவதத்தைக்குக் கொடுத்து விமானத்தில் அனுப்புதல் 557 - 66; படையொடு கடற்கரையை யடைதல் 567 - 73; தோழரையும் பொருளையும் தரன் சிறிதத்தனுக்குச் சேர்ப்பித்தல் 574 - 8; தத்தன் எல்லோரோடும் இராசமாபுர மடைந்து நிகழ்ந்தவற்றைத் தன் மனைவிக்குக் கூறி மகிழ்தல் 579 - 88; தத்தைக்குச் சுயம்வர மண்டபம் அமைத்தல் 589 - 602; முரசறைதல் 603 - 11; சுயம்வரத்துக்கு வந்தோர் 612 - 8; வீணாபதி தத்தைக்கு மணங்களின் இயல்பைக்கூறி, அவளது யாழிசையின் சிறப்பைப் புகழ்தல் 619 - 22; வீணைப்போர் காண வந்தோருக்குத் தத்தன் நிதியளித்தல் 623 - 4; தத்தையைத் தோழிமார் அலங்கரித்தல் 625 - 31; தத்தை மண்டபத்துக்கு வருதல் 632 - 8; கண்டோர் அதிசயித்தல் 639 - 50; தத்தை யாழ் வாசித்தல் 651 - 4; யாழ்ப்போர் 655 - 6; தத்தை திரைப்புறத்திட்ட அணையிலேறிப் பாடுதல் 657 - 62; அரசர் பாடித் தோற்றல் 663 - 4; அந்தணர் தோற்றல் 665 - 6; வணிகர் தோற்றல் 667; வெல்வோரின்மையின், யாழ்ப்போரை நிறுத்துமாறு கட்டியங்காரன் சொல்லல் 668; சீவகன் யாழ்ப்போருக்குச்செல்ல எண்ணிப் புத்திசேனன் வாயிலாகக் கந்துகனுக்கு உணர்த்தல் 669 - 70; கந்துகன் நாகமாலை விடுத்த ஓலையைக் கண்டு, அனங்கமாலை வரலாற்றையும் கட்டியங்காரன் பகைமையையும் அறிவித்து, படையொடு செல்க எனல் 670 - 98; தோழர் சூழ, சீவகன் யாழ்மண்டபத்தை யணுகுதல் 699 - 707; அவன் அழகில் தத்தையுந் தோழிமாரும் ஈடுபடுதல் 708 - 719; வீணாபதி தந்த குற்றமுடைய யாழ்களையெல்லாம் குற்றத்தைக் காட்டி நீக்கி, நல்ல யாழைப் பெற்றுக்கொள்ளுதல் 720 - 5; நரம்பின் குற்றத்தையும் காட்டி, நல்ல நரம்புபெற்று யாழ் வாசித்தல் 726 - 34; தத்தை வாசித்தல் 735 - 740; தோற்றுச் சீவகனுக்கு மாலை சூட்டல் 741 - 5; கட்டியங்காரன் மன்னர்களைச் சீவகன் மேலேவுதல் 746 - 50; மன்னர் போருக் கெழுதல் 751; பதுமுகன் அவர்களை இகழ்ந்து கூறல் 752 - 60; அவன் பொருதல் 761 - 2; சீவகன் தத்தையைத் தேற்றிப் பொர எழுதல் 763 - 70; பதுமுகனைத் தத்தைக்குக் காவலாக நிறுத்துதல் 771; சீவகன் போர் 772 - 810; பதுமுகன் போர் 811 - 5; பகைவர் படையுடைந்தோடல் 816 - 821; சீவகன் வெற்றி கொண்டு மீண்டு, தீர்த்தன் பாதம் வணங்கல் 822 - 6; மணம் 827 - 41; இன்பம் நுகர்தல் 842 - 6; பொழிலிலே சீவகன் கலுழவேகனது ஓலையைப் பெற்று தத்தைக்கு உணர்த்துதல் 847 - 55.

4. குணமாலையார் இலம்பகம்

இளவேனில் 856 - 9; பொழில் விளையாட்டு 860 - 78; குணமாலைக்கும் சுரமஞ்சரிக்கும் சுண்ணம் பற்றிய விவாதம் 879-84; சுண்ணத்தைச் சீவகனிடம் காட்டல் 885 - 91; குணமாலையின் சுண்ணத்தைச் சீவகன் நன்றென்று கூறி, அதற்குச் சான்று காட்டிச் சேடியரை விடுத்தல் 892 - 901; சுரமஞ்சரி அவலமுற்றுச் சூளுறவு செய்தல் 902 - 8; அவள் தந்தையாகிய குபேரமித்திரன் நிகழ்ந்ததை யறிந்து, அவள் சூளுறவுக்குத் தக்கன செய்தல் 909 - 12; சுரமஞ்சரி வருந்தியிருத்தல் 913; அவள் நட்பை யிழந்தமைக்கு வருந்திக் குணமாலை பிண்டியினனடி வணங்கல் 914 - 5; மன்னன் நீர் விளையாடப்போதல் 916; நகரத்தார் நிதி வழங்கல் 916 - 8; புனல்விளையாட்டு 919 - 20; சீவகன் புனல்விளையாட்டுக் காணச் செல்லுதல் 921; புனல் விளையாட்டு வருணனை 922 - 37; அந்தணர்க் காக்கிய சோற்றை ஒரு நாய் கௌவ, அவர்கள் அதை வெருட்டிக் கொல்ல முற்படுதல் 938 - 41; களிமகனொருவன் தோன்றிக் கலாய்த்தல் 942-5; சீவகன் அங்கு வந்து, அவர்கள் துயரைப் போக்கி, நாயைக்கண்டு வருந்தல் 946 - 7; அதற்குப் பஞ்சமந்திர உபதேசம் செய்து, அதன் நவையை அகற்றுதல் 948 - 51; நாய் இறந்து, சுதஞ்சண னென்னுந் தேவனாகத் தோன்றுதல் 952-8; அவன் தன் வரலாறு கூறி, சீவகன் நினைத்தபோது வேண்டிய நன்மையைச் செய்வதாகச் சொல்லிப் பறந்து செல்லுதல் 959-64; சீவகன் வியந்து கூறுதல் 965 - 7; புனல் விளையாட்டு 968 - 75; நகருக்கு மீளுதல் 976 - 7; கட்டியங்காரன் களிறுகிய அசனிவேகம் மதம் பட்டு வர, குணமாலை அதனிடம் சிக்கிக் கொள்ளல் 978 - 81; சேடி யானைமுன் நின்று கதறுதல் 982; சீவகன் அவர்கள் துயரைக் கண்டு, யானைமேற் பாய்ந்து அதை அடக்கல் 983-90; குணமாலையை எண்ணி உய்யான மடைதல் 991; குணமாலை இல்லமடைதல் 992 - 3; நிகழ்ந்தவற்றை யறியாத தாய் அவளது துயரைப்போக்க வேண்டுவன செய்தல் 994-8; கிளி அழைப்பதாகச் சொல்லி அவளை அனுப்புதல் 999; குணமாலை தனியே யிருந்து சீவகனை நினைந்திரங்கல் 1000 - 6; கிளியைத் தூதுவிடல் 1007 - 8; குணமாலையைச் சீவகன் படத்திலெழுதி அவள் நலத்தை வியத்தலைக் கிளி காணுதல் 1009 - 12; தத்தை அங்கு வருதல் 1013 - 8; கிளி கண்டு, அவள் மீண்டபின் அவனைக் காணலாமென்று நினைத்தல் 1019 - 20; தத்தை சீவகனோடு புலந்து செல்லல் 1021 - 6;

கிளி அவனைக் கண்டு குணமாலையின் தன்மையைக் கூறி, அவளை மணம் புரியுமாறு அவனை வேண்ட, அவன் இசைதல் 1027 - 38; அவன் ஓலையையும் ஆழியையும் பெற்றுக் கிளி மீளுதல் 1039; சீவகன் தத்தையின் ஊடலைத் தணித்தல் 1040 - 1; கிளியின் வரவு பார்த்துக் குணமாலை யிருக்க, கிளி ஓலை கொண்டு வருதல் 1042 - 7; ஓலையின் செய்திகண்டு மகிழ்தல் 1048 - 52; மைத்துனன் வரைவு நேர்ந்தானென்று செவிலி குணமாலைக்குக் கூறி, அவளை மதியுட்டம் படுத்தல் 1053 - 8; அறத்தொடு நிற்றல் 1059 - 60; குபேரமித்திரன் மணம் பேசிவிடல் 1061 - 8; குணமாலை மணம் 1069 - 71; இன்பம் நுகர்தல் 1072 - 82; சீவகனடக்கிய யானையுற்ற வருத்தத்தை யறிந்து கட்டியங்காரன் சீவகனைக் கொணர்கெனக் கூறுதல் 1083 - 6; இளையர் சென்று சீவகனுக்கு அரசனாணையைக் கூற, அவன் வெகுண்டெழுதல் 1087 - 95; கந்துக்கடன் சொல்லுக்கடங்கிக் கட்டுண்டு செல்லல் 1096 - 8; சுநந்தையும் குணமாலையும் வருந்த, சீவகன் அவர்களைத் தேற்றிச் செல்லல் 1099 - 1105; நகர மக்கள் வருந்தல் 1106 - 1119; கந்துக்கடன் மனையிலுள்ளார் வருந்த, சீவகன் தனக்குத் தீங்கு நேராதெனக்கூறி அவர்களைத் தேற்றிச் செல்லல் 1120 - 23; கந்துகன் அரசனைப் பணிந்து சீவகனுக்கு அருள் செய்யுமாறு வேண்ட, அவன் சீவகனைத் தான் கொலை செய்யக் கருதியமை கூறல் 1124 - 8; கந்துகன் வருந்தி இல்லமேகுதல் 1129; முனிவனுக்கு வழிபாடாற்றியபோது சீவகனுக்கு அரசனால் துன்பம் வருமென்றும் எட்டுத் திங்கள் சென்று அவன் மீள்வானென்றும் முனிவன் கூறியதைக் கந்துகன் சுநந்தைக்கு உரைப்ப, சுநந்தையும் குணமாலையும் தேறுதல் 1130 - 9; தோழர் வருந்த, சீவகன் சிலையின்றியிருப்பதற்குப் பதுமுகன் கவன்றிருத்தல் 1140 - 2; ஒற்றன் வந்து சீவகன் கட்டுண்டமை கூறல் 1143 - 6; பதுமுகன், புத்திசேனன் முதலிய தோழர் திரண்டு கூடல் 1147-52; தத்தை தன் தெய்வங்களை நினைக்க, அவை தோன்றல் 1153-4; சீவகனைத் தான் சிறைவிடுத்தல் பழியென்று தத்தை எண்ணல் 1155 - 8; இவற்றைச் சீவகன் கருதிச் சுதஞ்சணனை நினைத்தல் 1159 - 61; சுதஞ்சணன் தோன்றிச் சீவகனை ஏந்திச் செல்லுதல் 1162 - 5; தத்தை இதையறிந்து தேவர்களைப் போகவிடுத்தல் 1166 - 7; சீவகனைக் காணாது நின்ற மதனன் வேறொருவனைக் கொன்று கட்டியங்காரனுக்குக் காட்ட, அவன் மதனனுக்குச் சிறப்புச் செய்தல் 1168 - 72.

5. பதுமையார் இலம்பகம்

சுதஞ்சணன் சீவகனைத் தன்னுலகு கொண்டு சென்று தேவியர்க்கு அவன் வரலாறு கூறுதல் 1173 - 9; தேவியர் அவனுக்கு அரசுரிமை தரவேண்டுமென்று கூற, சீவகன் அவர்கட்கு முகமன் கூறி, வேற்றுநாடு காண விரும்பி விடைபெறல் 1180 - 83; சுதஞ்சணன் ஆற்றினதமைதி கூறல் 1184 - 1220; மத்திம தேயத்துக்குச் சென்றபின் அங்குத் தோழர் கூடுவரெனல் 1221 - 3; மூன்று மந்திரங்களை உபதேசித்தல் 1224 - 5; பன்னிரு திங்களில் சீவகன் இராசமாபுரத்துக்கு வந்து கட்டியங்காரனைக் கொன்று அரசு பெறுவானென்று கூறி, காலையில் அவனைப் பூமியில் விடுத்து விடைபெறல் 1226 - 32; சீவகன் நடந்து சென்று ஒரு காட்டையடைதல் 1233 - 6; ஒரு வேடன் தலைப்பட்டு ஊனுங் கள்ளுந்தர, சீவகன் அவனுக்கு உபதேசம் செய்து நல்வழிப்படுத்தல் 1237 - 43; யானைத்திரளைக் காட்டுத் தீயினின்றும் தப்புவித்தல் 1244; அரணபாத மெய்தி அருகனைத் தொழுதல் 1245 - 54; பல்லவ தேயமடைந்து சந்திராப மென்னும் நகருக்குச் செல்லல் 1255 - 9; அந்நகர மன்னன்முன் தேசிகப்பாவை என்பாள் நாடகமாடும்போது, சீவகனைக் கண்டு மயங்கல் 1260 - 8; அரசன் சீவகனைக் கண்டு உபசரித்தல் 1269 - 71; இருவருமிருக்க, புதுவதாகப் பூத்த முல்லைக் கொடியைப் பார்க்கச் சென்ற பதுமையைப் பாம்பு தீண்டிற்றென்று ஒரு காவலன் வந்து கூறல் 1272 - 79; அவள் சகோதரனாகிய உலோகபாலன் விடந்தீர்க்க முயன்று முடியாமை கண்டு, தீர்ப்போருக்கு அவளையும் நிதியையும் தருவதாக முரசறைவித்தல் 1280 - 2; மக்கள் இரங்கல் 1283 - 6; நிமித்திகன் கூறுதல் 1287 - 8; சீவகனை அழைக்க, அவன் சென்று நாகங்களின் இலக்கணம் முதலியன கூறிப் பதுமையை விடந்தீர்த்தல் 1289 - 97; பதுமையும் சீவகனும் ஒருவர் மேல் ஒருவர் காதல் கொள்ளுதல் 1298 - 1302; கண்டோர் கூற்று 1303 - 5; சீவகனுக்கு உபசரணை செய்தல் 1306 - 1310; இரவிலே சீவகன் பதுமையை எண்ணி நைதல் 1311-5; பதுமை வருந்தல் 1316-22; ஆயத்தார் செயல் 1323 - 4; பதுமை ஆயத்தாரோடு பொழிலடைந்து விளையாடல் 1325 - 7; சீவகன் அங்குச் சென்று அவளைக் கண்டு ஐயுற்றுத் தெளிந்து கூடி அவள் நலம் வியத்தல் 1328-40; தமர் பதுமையை அழைத்துச் செல்லுதல் 1341 - 4; சீவகன் உலோகபாலனை யடைதல் 1345; தனபதி சீவகனுக்கும் பதுமைக்

கும் மணம் முடித்தல் 1346 - 1353; சீவகன் இன்பம் நுகர்தல் 1354 - 61; தேசிகப்பாவை பொழிலிற் பாடக்கண்டு அவ ளுக்கு அருளல் 1362 - 5; இரண்டு திங்கள் சென்று சீவகன் பதுமையைப் பிரிதல் 1366 - 7; பதுமை வருந்தல் 1368 - 92; தோழி அறிவுரை கூறி சீவகன் மீள்வா னென்று சொல்லவும், அவள் தேறியிருத்தல் 1393-1404; தாயர் வருந்த நற்றாய் பதுமைக்கு ஆறுதல் கூறவும் அவள் மகிழ்தல் 1405 - 12; பொழுது புலரவும், தனபதி சீவகனைத் தேடுமாறு செய்தல் 1413 - 4; சீவகன் வேற் றுருக்கொண்டு தன் அணிகலன்களை மற்றொருவனிடம் கொடுத்துச் செல்லல் 1415 - 6; தனபதியின் வீரர் இவனைக் கண்டு வினவ, சீவகன் ஒன்பது திங்களில் மீள்வானென்று இவன் கூறல் 1417 - 8.

6. கேமசரியார் இலம்பகம்

சீவகன் காட்டு வழியே சென்று ஒரு மலையை யடைந்து அங்குள்ள அருகனை வணங்குதல் 1419 - 27; சித்திரகூடமடைந்து அங்கிருந்த முனிவர்களுக்குத் தருமத்தைப் போதித்து அவர்களை நன்னெறியுய்த்தல் 1428 - 44; அங்கிருந்து போந்து, தக்கநாட்டின் தலைநகராகிய கேமமாபுர மடைதல் 1445 - 54; அந்நகர மன்னன் நரபதி 1455; வணிகன் சுபத்திரன் பெற்ற மகள் கேமசரி 1456 - 7; அவள் யாரைக் கண்டு நாணுகின்றாளோ அவனே அவளுக்கு நாயகன் என்று கணி கூற, சுபத்திரன் விருந்தளித்து, வருவோரை அவள் காணுமாறு செய்து வர, பன்னிரண்டாண்டு கழிதல் 1458-60; தாய் வருந்தலும் அவளை ஆற்றுவித்தலும் 1461 - 3; சுபத்திரன் சீவக னைக் கண்டு வியந்து தன் இல்லத்துக்கு அவனை அழைத்து வருதல் 1464-72; பாடிக்கொண்டிருந்த கேமசரி சீவகனைக் கண்டு நாணல் 1473 - 8; இருவரும் காதலித்தல் 1479 - 80; சுபத்திரன் சீவகனை உபசாரணை செய்தல் 1481 - 7; கேமசரி நலத்தை அவன் நினைத் திருக்க, சுபத்திரன் கணி கூறியதை அறிவித்தல் 1488 - 96; மணம் 1497 - 1502; மலர்க்கா புகுதல் 1503; இன்புறுதல் 1504 - 11; பிரிதல் 1512; கேமசரி வருந்திச் சோர்தல் 1513 - 33; இல்லுறை தெய்வம் கண்டு இரங்கல் 1534 - 6; தெய்வம் வண்டாய்ச் சேர, அவள் ஆவி தாங்குதல் 1537 - 8; சூரியோதயம் 1539; நற்றாயாகிய நிப்புதி தேற்ற, கேமசரி தேறுதல் 1540 - 6; பிரிந்து சென்ற சீவகன் வழிப்போக்க னொருவனைக் கண்டு தன் அணிகலன்களை அவனுக்குத் தந்து, அறவுரை போதித்துச் செல்லுதல் 1547 - 63.

7. கனகமாலையார் இலம்பகம்

பாலை 1564 - 5; குறிஞ்சி 1566 - 9; முல்லை 1570 - 1; சீவகன் வனகிரியையும் சுனையையும் காண, அங்கு அநங்கமா வீணை தோன்றுதல் 1572 - 3; அவள் சீவகனை மயக்கல் 1576 - 9; சீவகன் தன் நெஞ்சைத் தேற்றல் 1580 - 5; அவள் தன் வரலாறு கூறித் தனக்கருளுமாறு சீவகனை வேண்டல் 1586 - 8; சீவகன் யாக்கையின் இயல்பைக்கூறி மறுத்தல் 1589-92; பவதத்தன் அவளைக் காணாது அரற்றல் 1593 - 9; சீவகன் அவளை விட்டுப் பவதத்தனை யடைதல் 1600; பவதத்தன் தான் யாவனென்றறிவித்து, அநங்கமா வீணையின் அருமையை யுரைத்து வருந்த, சீவகன் அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து அனுப்பல் 1601 - 9; அவன் சென்று அவளைக் கூடுதல் 1609 - 10; சீவகன் மலையிலுள்ள அருகன் கோயிலைத் தொழுது, பாலையைக் கடந்து மருதத்தையடைதல் 1611 - 20; மருதம் 1621 - 3; நரபதி நகரையடைதல் 1624; புறநகரில் ஒருவனைக் கண்டு அந்நாடு மத்திமதேயமென்றும் நகர் ஏமமாபுரமென்றும் உசாவியறிதல் 1625-7; நகரையடைந்து அன்னங்களின் ஊடலைக்கண்டு காந்தருவதத்தையை நினைத்தல் 1628 - 33; இரங்கல் 1634 - 41; அரசன் தடமித்தனுடைய குமாரனான விசயன் சீவகனைக் காணல் 1642 - 3; அவனை விசாரித்து விசயன் முகமன் கூறல் 1644 - 6; சீவகன் மாங்கனி எய்த விற்றிறலைக் கண்டு மகிழ்ந்து அவனை விசயன் தன் இல்லத்துக்கு அழைத்துப் போதல் 1647 - 50; மன்னன் தடமித்தன் சீவகனைக் கண்டு மகிழ்ந்து தன் புதல்வர்க்கு வில்வித்தை பயிற்றச் செய்தல் 1651 - 4; சீவகன் ஒருநாள் பொழிலடைதல் 1655; பொழில் வருணனை 1656 - 8; அவன் தொடுத்த மாலையை ஒரு குறளி கனகமாலைக்காகப் பெற்றுச் செல்லல் 1659 - 61; கனகமாலை அதைப் பெற்று, அதனுள் சீவகன் எழுதியிருந்ததை வாசித்து, அவன்மேற் காதல் கொண்டு புலம்புதல் 1662 - 72; கிளி தேற்றல் 1673; கனகமாலை தன் மாலையை அநங்கவிலாசினி மூலமாகச் சீவகனுக்கு அனுப்பல் 1674 - 5; அவன் அதை வாங்காதிருக்க, தோழி அவளியல்பைக் கூறிக் கொடுக்க அவன் வாங்கல் 1676-7; கனகமாலைக்குச் சைத்தியோபசாரம் செய்தல் 1678 - 81; மன்னன் புதல்வர்கள் வில்வித்தையிற் கரைகாணல் 1682 - 6; மக்கள் கல்வியைக் கண்டு அரசன் மகிழ்தல் 1686 - 9; சீவகனை அழைத்துப் புகழ்ந்து தன் மகளைக் கொடுத்தல் 1689-93; சீவகன் கனகமாலையை மணந்து அவ

ளோடு இன்பந்துய்த்தல் 1694 - 1701; நந்தட்டன் இராசமாபுரத்தே சீவகனைக் காணாது தத்தை யில்லத்தையடைதல் 1702 - 3; தத்தை யாழ் வாசித்து வருந்தி யிருக்க, நந்தட்டன் சென்று வணங்கி, சீவகன் பொன்றி விட்டானாயின் அவள் அணி சுமந்திருப்பதென்ன எனக் கேட்டல் 1704 - 13; அவள் சீவகன் அயல் நாடுகளிலே மணமுடித்து இன்பந் துய்த்திருக்கும் தன்மையைக் கூறி, தன் விஞ்சையாலே அனைத்தையும் அவனுக்குக் காட்டல் 1714 - 7; அவன் சீவகனடியைச் சேர விரும்பவும், தத்தை தன் விஞ்சையால் அவன் ஏமமாபுரமடையுமாறு செய்தல் 1718 - 23; அவனைக் கண்டு விசயன் ஐயுற்று, சீவகனுக்கு அறிவிக்குமாறு செய்தல் 1724 - 9; சீவகன், அவன் நந்தட்டனெனத் துணிந்து, சென்று அவனைக்காணல் 1730; நந்தட்டன் தன் வருத்தத்தை யுரைத்து வணங்க, சீவகன் தேற்றல் 1731 - 6; கனகமாலை விருந்து செய்தல் 1736 - 8; சீவகன் விஞ்சையனோடு மறைந்தபின் நிகழ்ந்தவற்றை நந்தட்டன் கூறுதல் 1739 - 54; சீவகன், தான் பிடிபட்டபோது தோழர் சீற்றத்தையும் தத்தை நிலையையுங் கண்டு விஞ்சையனுதவியால் வெளிப்போந்து, பதுமையையும் கேமசரியையும் கனகமாலையையும் மணந்தமை கூறல் 1755 - 67; இராசமாபுரத்தில் சீவகன் தோழர் தத்தையை யடைந்து, அவள் நிலைமையை யறிதல் 1768 - 72; தத்தை ஓலை கொடுத்து அவர்களைச் சீவகன்பால் விடுத்தல் 1773 6; தோழர் படையொடு புறப்பட்டு, மாதவர்பள்ளியை யடைந்து விசயையைக் காணல் 1777 - 89; கண்டு வியந்து வணங்கி அவள் வரலாறு கேட்க, அவள் இவர்கள் வரலாறு கூறுமாறு பணித்தல் 1790 - 4; தோழருள் தேவதத்தன் தங்கள் வரலாறும் சீவகன் வரலாறும் கூறி, அவன் பிடிபட்டமை சொல்ல, விசயை மூர்ச்சித்தல் 1795 - 1805; அவர்கள் பனிநீர் தெளித்துத் தேற்ற, விசயை தெளிந்தெழுந்து அரற்றுதல் 1806 - 14; அவள் அரற்றிலிருந்து சீவகன் பிறப்பையும் விசயை அவன் தாய் என்பதையும் தோழர் அறிதல் 1815 - 6; சீவகன் தப்பிச் சென்றமை அவர்கள் கூற, அவள் அவனை அழைத்துவரச் சொல்லுதல் 1817 - 23; தோழர் படையொடு சென்று பொழிலிற் றங்குதல் 1824 - 30; பதுமுகன், நிரை கொள்ளலாமென ஆலோசித்தல் 1831-3; புத்திசேனன், ஆராய்ந்து துணியுமாறு கூறல் 1834 - 6; வளையசுந்தரமென்ற யானையைச் சீவகன் மதமடக்கியமை ஒற்றர் கண்டு வந்து கூறல் 1836 - 51; பதுமுகன் முதலாயினர் நிரை கவர எழுதல் 1852 - 4; ஆயர் போரைக் கைவிட்டுச் சென்று அரசனுக் குணர்த்தல் 1855-8;

அரசவையில், அரசன் நந்தட்டன் வரலாறு வினவல் 1859; நந்தட்டன் கூறல் 1860-3; நிரை கவரப்பட்டமை ஒற்றர் கூற, மன்னன் படை எழுதல் 1863 - 6; சீவகன் எழுதல் 1867 - 8; பதுமுகன் எய்த அம்பின் வாசகங் கண்டு, சீவகன் படை விலக்கல் 1869 - 70; தோழரோடு மீளல் 1871 - 3; மன்னனைப் பணிதல் 1874 - 5; கனக மாலை விருந்து செய்தல் 1876 - 8; புத்திசேனன் தத்தையின் ஓலையைத் தருதல் 1879; கலுழவேகன் தரனை வரவிடுத்தமையும், குணமாலை சீவகனைப் பிரிந்து வருந்துவதையும் தத்தை ஓலையிலெழுதியிருத்தல் 1880 - 7; சீவகன் தோழரை வினவித் தன் தாயான விசயை தாபதப்பள்ளியிலிருப்பதை யறிதல் 1888 - 91; மன்னனுக்குச் சீவகன் பிறப்பை யறிவித்தல் 1892; கனகமாலையிடத்து விடைபெற்றுப் புறப்படுதல் 1893 - 5.

8. விமலையார் இலம்பகம்

நந்தட்டன், சீவகனைக் காக்க வேண்டுமெனப் பதுமுகனுக்குக் கூறல் 1896 - 1902; சீவகன் கூறல் 1903; படை செல்லல், மலைவளம் 1904 - 12; பள்ளியை யடைந்து விசயைக்கு அறிவித்தல் 1913 - 6; விசயையைக் காணல் 1917 - 8; விசயை கூறல் 1919 - 23 விருந்து செய்தல் 1924; நீதி அறிவுறுத்திச் சீவகன் கருத்தை வினவல் 1925 - 31; சீவகன் விடை 1932; நந்தட்டனை விசயை பாராட்டல் 1933; செய்வினை கூறல் 1934 - 5; பதுமுகன் உரைத்தல் 1936; மற்றைத்தோழர் கூறல் 1938; மாமனைக் கலந்துகொள்ளுமாறு விசயை கூறுதல் 1939; சீவகன் அவனை மாமன் வீட்டுக்கு அனுப்பல் 1940 - 1; ஏமாங்கத மடைதல் 1942; இராசமாபுரமடைதல் 1943 - 58; விமலை பந்தாடுதல் 1959 - 64; பந்து சீவகன் முன் வந்து வீழ்தலும், விமலை அதனை எடுக்க வந்து சீவகனைக் கண்ணுறுதலும் 1965 - 7; ஒருவரை யொருவர் காமுறுதல் 1968 - 73; அவளுடைய தந்தையின் கடையிற் சென்று சீவகன் புலம்பியிருத்தல் 1974 - 81; தந்தையாகிய சாகரதத்தனுடைய சரக்கெல்லாம் விற்கக்கண்டு, அவன் சீவகனை உபசரித்தல் 1981 - 2; நிமித்திகன் கூறியதைச் சொல்லி, விமலையை மணம்புரிய வேண்டல் 1983 - 6; விமலை மணம் 1987 - 8; இன்பம் நுகர்தல் 1989 - 99; சீவகன் விமலைக்குத் தன் பிரிவுணர்த்திப் பிரிதல் 2000 - 2.

9. சுரமஞ்சரியார் இலம்பகம்

சீவகன் மணக்கோலங் கண்ட தோழர், தையல் பெயர் கேட்கச் சீவகன் கூறல் 2003 - 4; தோழர் அவனை அனங்கனெனல் 2005 - 6; சுரமஞ்சரியை மணந்தால் அனங்கமா திலகனுவா னெனல் 2007 - 9; சீவகன் அவளை மணப்பேனெனச் சூளுரைத்தல் 2010 - 11; அவளழகை எண்ணி வருந்தி, முதிர்ந்த அந்தணக் கோலத்தோடு அவள் வாயிலை யடைதல் 2012 - 20; கடைகாவலைக் கடந்து மகளிரைக் காண, அவர்கள் சுரமஞ்சரியிடம் சொல்லல் 2021 - 26; அவள் வந்து அவனைக் கண்டு இரங்கி உரையாடி, பசி தீர்க்கக் கருதி அழைத்துச் செல்லல் 2026 - 32; அடிசிலூட்டல் 2033 - 5; அவன் வருத்தங் கண்டு தன் அமளியிற் படுக்கவைத்தல் 2036 - 9; மாலை 2040 - 3; சீவகன் பாட, பெண்கள் சூழ்தல் 2044 - 8; சுரமஞ்சரி அவன் இசைவயப்பட்டு நிற்றல் 2049 - 51; மீண்டும் அவனைப் பாடச் சொல்ல, அவன் பாடுதல் 2052 - 60; காமன் கோட்டத்தில் சீவகனைப் பெறவேண்டுமென வரங் கேட்பதாகச் சுரமஞ்சரி கூறல் 2061; காலையில் சீவகனோடு காமன் கோட்டமடைந்து, அவனை மறையவைத்துக் காமனை வேண்டல் 2062 - 6; புத்திசேனன் மறைந்திருந்து, வரந்தந்ததாகக் கூற, சுரமஞ்சரி கேட்டு மீளல் 2067; தன் சுயவடிவத்தோடே நின்ற சீவகன் அவளைக் கூடி, அவள் நலத்தைப் பாராட்டி விடுத்தல் 2068 - 78; தோழர் சீவகனைப் புகழ்தல் 2079; நிகழ்ந்ததறிந்து குபேரதத்தன் சுரமஞ்சரியைச் சீவகனுக்கு மணமுடித்தல் 2080-8; இன்பநுகர்ச்சி 2089 - 100; தன் பிரிவைச் சுரமஞ்சரிக்குணர்த்தி, சீவகன் அவளைப் பிரிந்து தன் மனையடைதல் 2101 - 4; தாய் தந்தையரை மகிழ்வித்தல் 2105 - 6; தத்தையையும் குணமாலையையும் மகிழ்வித்தல் 2107 - 9; மேல் ஆகவேண்டுவன கூறிப் பிரிந்து கரந்து செல்லல் 2110.

10. மண்மகள் இலம்பகம்

ஐந்திணை நிலங்களுங் கடந்து விதையமடைதல் 2111 - 8; மன்னனைச் சேர்ந்தவர் எதிர்கொள்ளல் 2119; நகர மாந்தர் பாராட்டச் சென்று, சீவகன் அரசன் கோயிலையடைதல் 2120-40; இலக்கணை அவனைக் கண்டு விரும்பல் 2141 - 3; சீவகன் மாமனாகிய கோவிந்தனை வணங்கல் 2144; கண்ட மாமன் நிகழ்ந்ததறிந்து வருந்த, விசயை தேற்றல் 2145 - 7; கோவிந்தன் தன் மக

னிடத்து நாட்டை ஒப்புவித்துப் புறப்படல் 2148 - 51; கட்டியங்காரனனுப்பிய ஓலை காணல் 2152 - 7; கட்டியங்காரனுறவானமையின், நாட்டில் நெல்லும் பொன்னும் வழங்குகவென முரசறைவித்தல் 2158 - 9; வீரர் படையொடு வந்துகூடிச் செல்லுதல் 2160 - 80; ஏமாங்கத மடைதல் 2181; கட்டியங்காரன் போகமகளிர் தீய கனுக் காணுதல் 2182; கட்டியங்காரன் கோவிந்தனுக்குக் கையுறையனுப்ப, அவனும் இவனுக்கு அனுப்பல் 2183 - 4; திரிபன்றி எய்தவன் கோவிந்தன் மகள் இலக்கணையை மணக்கலாமென முரசறைவித்தல் 2185 - 6; அரசர் வந்துகூடி, விற்பயிலல் 2187 - 9; வினிதை வேந்தன், குஞ்சரநகரத்தார்கோன், காம்பிலி மன்னன், கோசலத்திறைவன், அவந்திமன், மகதராசன், கலிங்கர்கோன், வாரணவாசி மன்னன், போதனபுரத்து வேந்தன், தென்னன், விசயன் முதலான மன்னர் திரிபன்றி எய்ய இயலாது நாணுதல் 2190 - 2202; சீவகன் யானைமேல் வருதல் 2203 - 4; கட்டியங்காரன் கண்டு சோர்தல் 2205 - 6; சீவகன் வந்துநின்று திகிரிமீதேறிப் பன்றியைஎய்தல் 2207 - 2213; கோவிந்தன் சீவகன் குலத்தை அறிவித்தல் 2214; கட்டியங்காரனைச் சீவகன் கொல்வானென்று அசரீரி கூறல் 2215; கட்டியங்காரன் சீற்றம் 2216-7; படையமைத்தல் 2218-9; படைவந்து கூடுதல் 2220 - 7; படையின் தொகை 2228 - 9; போர் 2230 - 53; மதனன் படுதலும் விசயன் வெற்றியும் 2254; மன்மதன் விசயனொடு பொருதுபடுதல் 2255 - 7; புத்திசேனன் போர் 2258; தேவதத்தன் போர் 2259; சிறிதத்தன் போர் 2260; கோவிந்தன் போர் 2261; உலோகபாலன் போர் 2262 - 5; நபுலன் போர் 2266 - 8; விபுலன் போர் 2269 - 74; பதுமுகன் போர் 2275 - 86; சிங்கநாதன் போர் 2287 - 8; கட்டியங்காரன் படைத்தலைவனான பூரணசேனன் செயல் 2289 - 93; இருவரும் பொர, பூரணசேனன் படுதல் 2294 - 6; நந்தட்டனுடைய சேவகன் போர் 2297 - 300; சலநிதி போர் 2301 - 3; சீவகன் போர் 2304 - 31; கட்டியங்காரன் அமைச்சனான அரிச்சந்தன் படைகளை உற்சாகப்படுத்தல் 2308 - 11; கட்டியங்காரன் புதல்வர் பொருது படுதல் 2315 - 8; பதும வியூகத்தில் கட்டியங்காரன் வருதல் 2319 - 20; கட்டியங்காரன் கூற்று 2322 - 6; வஞ்சினங் கூறல் 2327 - 8; பொருது படுதல் 2329 - 31; சீவகன் வென்றி 2332 - 3; விசயை மகிழ்தல் 2334; வீராபிடேகம் 2335.

11. பூமகள் இலம்பகம்

சீவகன், மைந்தரும் மகளிரும் ஏத்த அரண்மனை யடைதல் 2336 - 46; கட்டியங்காரன் மகளிர் வெளிப்போதல் 2347 - 51; அவன் பட்டத் தேவி யாரெனக் கேட்டு, அவள் இறந்தமையைச் சீவகன் அறிதல் 2352 - 3; பிற போக மகளிர் வெளிப்போந்து தம் பதிகளுக்குச் செல்லல் 2354 - 8; சீவகனும் பிற வீரரும் அயா வுயிர்த்தல் 2359 - 63; துயிலெழுந்து சேக்கை நீதிருத்தல் 2364 - 7; மன்னர், தோழர், விஞ்சையர் முதலாயினர் சூழ்தல் 2368 - 71; சுதஞ்சணன் தேவியரோடு வருதல் 2372 - 4; சீவகனுக்கு முடிகவித்து மீளுதல் 2375 - 7; சித்திரமண்டபஞ் சேர்ந்து சிங்காதனத்திருந்து சிறைக்கோட்டஞ் சீப்பித்துக் கடமை நீக்குதல் 2378 - 86.

12. இலக்கணையார் இலம்பகம்

தேவியர் வந்து சேர்தல் 2387 - 93; இலக்கணை மணத்துக்குரிய நல்லோரையைக் கணி கூறுதல் 2394 - 5; முரசறைவித்தல் 2396 - 2401; நகரமக்கள் அலங்கரித்து மகிழ்தல் 2402 - 14; மணத்துக்கான செயல்கள் 2415 - 9; மயிர்வினைக் கலியாணம் 2420 - 2; மஞ்சனநீர் கொணர்தல் 2423 - 4; நெய் யேற்றல் 2425 - 6; சீவகனை நீராட்டல் 2427 - 30; குஞ்சிக்கு அகிற்புகை யூட்டி, கண்ணி சூட்டி, கலனணிந்து, அச்சுதந் தெளித்து, கவரிவீசி அட்டமங்கலம் ஏந்தல் 2431 - 7; இலக்கணைக்கு நெய்யணி செய்து நீராட்டல் 2438 - 48 அவளைப் புனைவதற்காகத் தோழியர் சூழ்தல் 2441 - 4; விலாசி கோலஞ் செய்தல் 2445 - 54; அலங்காரமாலை கோலஞ் செய்தல் 2455; இலக்கணையின் அழகைத் தோழியர் வியந்து நிற்றல் 2456 - 61; அவள் வேள்விச்சாலை யடைதல் 2462 - 4; கண்டோர் கூற்று 2465 - 70; மணச்சடங்கு 2471 - 8; பாவைமார் பள்ளியமைத்தல் 2479 - 84; இன்பநுகர்ச்சி 2485 - 91; மயிர்களைதல் 2492 - 509; நீராட்டி அணிவித்தல் 2510 - 1; இன்பநுகர்ச்சி 2512-29; சீவகன் வீதியில் வருதல் 2530-4; கண்டமகளிர் வேட்கை பிறந்து மயங்கல் 2535-54; மயங்கினுர் செயல் 2555 - 66; சீவகன் அருகன் கோயிலையடைந்து தொழுதல் 2567 - 72; கோயிலுக்குப் பொன் முதலியன அளித்து மீளல் 2573 - 4; சுநந்தை, நந்தன், தோழர், கைத்தாயர், மைத்துன மன்னர், கோவிந்தன் முதலியோர்க்குச் சிறப்புச் செய்தல் 2575 - 81; சுதஞ்சணனைச்

சிறப்பித்து அவன் சரிதையைக் கூத்துச்செய்தல் 2582; தான் விளையாடியிருந்த ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்தல் 2583; தேவியர் பட்ட மெய்தல் 2584; தத்தையை மற்றைத் தேவியர் வணங்கல் 2585; தேவியர்க்கு நாடுகளையளித்தல் 2586; பார் செழித்தல் 2587 - 90; கொற்றச் சிறப்பு 2591 - 2; தேசிகப்பாவை அனங்க மாலையின் தோழியாக நடித்துச் சீவகனுக்கு ஓலை கொடுத்தல் 2593 - 9; சீவகன் அவளை யறிந்து புல்லிக்கூடல் 2600 - 7.

13. முத்தி இலம்பகம்

விசயை அருசுனுக்கும், கூட வந்த தாபத மகளிருக்கும், சுடுகாட்டிலுதவிய தெய்வத்துக்கும், மயிலுக்கும், சுடுகாட்டுக்கும் சிறப்புச் செய்தல் 2608 - 13; சுநந்தையையும் சீவகன் தேவியரையும் வாழ்த்தல் 2614 - 5; சீவகனை யழைத்து, சச்சந்தன் காமத்தாற் பட்டமை கூறி, தான் துறக்க விரும்புவதை யறிவிக்க, சீவகன் மயங்கி வீழ்தல் 2616 - 23; விசயை அவனைத் தேற்றி, தான் துறப்பதன் அவசியத்தை விளக்கல் 2624 - 35; யாக்கை நிலையாமை 2625 - 31; செல்வநிலையாமை 2632 - 4; இளமை நிலையாமை 2635; சுநந்தையும் துறவு பூணல் 2636; நகர மாந்தர் புலம்ப, இருவரும் சென்று பம்மையின் பள்ளியையடைதல் 2637 - 9; உயக்கொள்ளுமாறு வேண்டித் தீக்கை பெறுதல் 2640 - 3; வெண்துகிலுடுத்து முடிகளைந்து துறவுக்கோலம் கொண்டிருத்தல் 2643-9; சீவகன் வந்து வணங்கி, விசயையைத் தன் நகரிலேயே தங்குமாறு கேட்க, பம்மை அவள் ஏதிலாளெனல் 2650 - 2; துறவுக் கோலங் கண்டு தான் அன்பு செலுத்துவதாகச் சீவகன் மீட்டும்கூற, விசயை அவன் நகரில் தங்க இசைதல் 2653 - 4; சுநந்தையைக் கண்டு வருந்த, அவள் சீவகனைத் தேற்றல் 2655 - 6; நந்தட்டனை விசயை தேற்றல் 2657; சீவகன் தன் தேவியரோடு மீள, விசயை நோற்றிருத்தல் 2658 - 60; அமைச்சர் சீவகனையும் தேவியையும் நீர் விளையாட்டுக்குப் போகச் செய்தல் 2661 - 3; நீர்விளையாட்டு 2664 - 76; இருது நுகர்வு 2677; முதுவேனில் 2678 - 80; கார் 2681 - 3; கூதிர் 2684 - 8; முன்பனி 2689 - 93; பின்பனி 2694 - 8; இளவேனில் 2699 - 2709; புதல்வர்ப்பேறு 2710 - 3; தேவியர் எண்மரும் பெற்ற எட்டுப் புதல்வர்களுக்கும் பெயரிடல் 2714; சீவகனுக்கு முப்பதாண்டு நிறைதல் 2715; சோலை காணுமாறு மல்லிகைமாலை அழைக்க, சீவகன் செல்லுதல்

2716 - 22; மகளிரைச் சீவகன் கூடியிருத்தல் 2723 - 8; குரங்குகளின் செயல் 2729 - 34; சீவகன் கண்டு விரத்தியடைந்து மீள்ல் 2734-8; போகத்தில் மனம்பற்றுதிருத்தல் 2739-41; தேவியரோடு அருகன் கோயிலுக்குச் சென்று தொழுதல் 2742 - 51; சாரணரைக் கண்டு வணங்கல் 2752 - 4; அவர்கள் அறவுரை கூறல் 2755 - 7; யாக்கை முதலியன பெறுதற்கருமை 2758 - 62; நிலையாமை 2763 - 70; நரக கதித்துன்பம் 2771 - 85; விலங்கு கதித்துன்பம் 2786 - 98; மக்கட்கதித் துன்பம் 2799 - 2808; தேவ கதித்துன்பம் - 2809 - 20; நற்காட்சி 2821 - 6; சீலம் 2827-31; தானம் 2832 - 7; தானப்பயன் 2838 - 51; தலையாய தானம் - இருப்புயிர் 2838 - 50; இடையாய தானம் 2850; கடையாய தானம் 2851; சீலப்பயன், காட்சிப்பயன் 2852; வீட்டின் இயற்கை 2853 - 6; சீவகன் முதலியோர் பிறவிகளைப் பற்றிய அறவுரை 2857 - 2902; சீவகன் முற்பிறப்பு - அசோதரன் வரலாறு: தாதகி நாடு 2860; பூமிமாதிலக மென்னும் நகர் 2861 - 4; பவணமாதேவனுக்கும் சயமதிக்கும் புதல்வனுய் அசோதரன் பிறத்தல் 2865; இன்பம் நுகர்ந்திருந்தபோது, ஓர் அன்னப்பார்ப்பைத் தடாகத்திலிருந்து பிடித்துவைத்தல் 2866 - 71; பவண மாதேவன் அதையறிதல் 2872 - 3; அதனால் அவனுக்கு விளையவிருக்கும் தீமையைக் கூற, அசோதரன் அதை விட்டு விடல் 2874-89; தந்தையின் கட்டளைப்படி அசோதரன் அரசாளல் 2890 - 1; பின்துறத்தல் 2892-7; சாசாரனென்னும் இந்திரனுதல் 2898; பழைய தீவினை காரணமாகப் பூவுலகிலே சிறைப்பட்டான் என்று சாரணர் கூறிச் செல்லல் 2899 - 2902; சீவகன் தன் அரண்மனை சென்று தேவியரோடு கூடாது இருந்து நந்தட்டனை அழைத்தல் 2903-2908; நந்தட்டன் அரசேற்க மறுத்தல் 2909 - 12; தத்தை புதல்வனுன சச்சந்தனுக்கு அரசளித்தல் 2913 - 20; குணமாலை புதல்வனுன சுதஞ்சணனை இளவரசாக்கல் 2921; இலக்கணை புதல்வனுன கோவிந்தனைப் பெருநம்பியாக்கல் 2922; நந்தட்டன் புதல்வனைக் குறுநிலமன்னனுக்கல் 2923; மற்றைக்குமரர்க்கு நிதியும் நாடுந்தருதல் 2924; தோழர் மக்களை அமைச்சராக வைத்தல் 2925; சீவகன் தேவியரை யழைத்துத் தான் துறக்கப் போவதை யறிவித்தல் 2926 - 52; அந்தப்புர விலாவணை 2952 - 72; அரண்மனையிலுள்ளார் வருந்தல் 2973 - 8; நகரமாந்தர் வருந்தல் 2979 - 89; முதியோர் துறத்தல் 2990; சீவகன் துறவு வலியுறுத்தித் தேவியரைக் துறக்கச் சொல்லல் 2991-7; தேவியர் துறக்க உடன்படல் 2998 - 99; துறத்தல் 3000 - 3; சீவகன் தானஞ் செய்து சிவிகையேறிச் செல்லல் 3004 - 8; சமவசரண

வருணனை 3008 - 15; சீவகன் வழிபடல் 3016 - 23; அவன் துறத்தலை இறைவன் அங்கீகரித்தல் 3024 - 5; சீவகன் தொழுதல் 3026 - 32; துறத்தல் 3033 - 44; அவனைச் சுதஞ்சணன் வாழ்த்திச் செல்லல் 3045 - 7; நந்தட்டன் முதலியோர் துறத்தல் 3048 - 9; சேணிகன் வரலாறு: மகதநாடு 3050 - 1; இராசகிருக நகர் 3052; சேணிகமன்னன் முரசறைவித்தல் 3053; புரவி முதலியன பலி சுமந்துசெல்லல் 3054 - 9; எயிற்புறத்துத் தொழுதல் 3060 - 1; முனிக்குழாத்திடை ஓர் ஒளியைக் கண்டு, சேணிகன் இது விண்ணவன் கொல் எனக் கூறி, சுதன்மரென்னும் கணதரரை வணங்கல் 3062 - 4; இறைவனருளாலேயே அவன் துறந்துளனென அவர் கூற, அவ் வொளிவடிவமே இறைவன் பெருமையை உரைக்குமெனச் சேணிகன் கூறல் 3065 - 6; சீவகன் அழகொளியை வியந்து, அவன் தவங்களையும் சரிதத்தையும் சேணிகன் கேட்க, சுதன்மர் கூறுதல் 3067 - 70; சீவகன் குன்றினுச்சியில் நான்கு திங்கள் நின்று தவமுடித்தல் 3071 - 82; தவச் சிறப்பு 3083 - 90; அவன் அருகனுந்தன்மை யடைதல் 3091 - 5; மணியுயிர் என்னும் வீடுபெற்ற உயிராகிய அரும்பதம் பெறுதல் 3096 - 3109; தேவியர் அருகனிலையடைந்த அவனைத் தொழுதல் 3103 - 13; அவன் அருளல் 3114 - 3121; பரிநிர்வாணம் 3122 - 7; தேவியர் நோற்று இந்திரராகிச் சுவர்க்கமடைதல் 3128 - 30; அங்கு இன்பம் நுகர்தல் 3131 - 40; நந்தட்டனும் தோழரும் நோற்றுத் தேவராதல் 3141-3; இன்பம் நுகர்தல் 3144-50; அருகன் துதி 3151.

ஓம்படை 3152 - 4.

உ

சீவக சிந்தாமணி

கடவுள் வாழ்த்து

1 மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத இன்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே. க

2 செம்பொன் வரைமேற் பசும்பொன்னெழுத் திட்ட தேபோ
அம்பொன் பிதிர்வின் மறுவாயிரத் தெட்ட ணிந்து [ல்
வெம்புஞ் சுடரிற் சுடருந்திரு மூர்த்தி விண்ணோர்
அம்பொன் முடிமே லடித்தாமரை சென்னி வைப்பாம். உ

3 பன்மாண் குணங்கட் கிடனாய்ப்பகை நண்பொ டில்லான்
தொன்மாண் பமைந்த புனைநல்லறந் துன்னி நின்ற
சொன்மாண் பமைந்த குழுவின்சரண் சென்று தொக்க
நன்மாண்பு பெற்றே னிதுநாட்டுதல் மாண்பு பெற்றேன். ௩

அவையடக்கம்

4 கற்பா லுமிழ்ந்த மணியுங்கழு வாது விட்டால்
நற்பா லழியும் நகைவெண்மணி போல்நி றைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும்மதி யாற்க ழூஉவிப்
பொற்பா இழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார். க

5 முந்நீர்ப் பிறந்த பவழத்தொடு சங்கு முத்தும்
அந்நீ ருவர்க்கு மெனின்யாரவை நீக்கு கிற்பார்
இந்நீர என்சொற் பழுதாயினுங் கொள்ப வன்றே
பொய்ந்நீர வல்லாப் பொருளால்விண் புகுது மென்பார். உ

பதிகம்

6 மீனே றுயர்த்த கொடிவேந்தனை வென்ற பொற்பின்
தானே றனையா னுளன்சீவக சாமி யென்பான்
வானேற நீண்ட புகழான்சரி தம்மி தன்னைத்
தேனூற நின்று தெருண்டாரவைச் செப்ப லுற்றேன். க

7 கோடாத செங்கோற் குளிர்வெண்குடைக் கோதை வெள்வே
ஓடாத தானை யுருமுக்குர லோடை யானை [ல்
வாடாத வென்றிமிகு சச்சந்த னென்ப மன்னன்
வீடாத கற்பி னவன்றேவி விசையை யென்பாள். உ

8 சேந்தொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கட்
பூந்தொத் தலர்ந்த பசும்பொற்கொடி யன்ன பொற்பின்
ஏந்தொத் தலர்ந்த முலையின்னமிர் தன்ன சாயல்
வேந்தற் கமுதாய் விளையாடுதற் கேது வாமே. ௩

9 கல்லார் மணிப்பூ ணவன்காமங் கனைந்து கன்றிச்
சொல்லாறு கேளான் நனிசூழ்ச்சியிற் றேற்ற வாறும்
புல்லார் புகலப் பொறிமஞ்ஞையிற் றேவி போகிச்
செல்லா றிழுக்கிச் சுடுகாடவள் சேர்ந்த வாறும். ச

10 நாளூற்று நம்பி பிறந்தான் திசைபத்து நந்தத்
தோளூற்றொர் தெய்வந் துணையாய்த்துயர் தீர்த்த வாறும்
கோளூற்ற கோன்போ லவன்கொண்டு வளர்த்த வாறும்
வாளூற்ற கண்ணாள் மகன்வாழ்கென நோற்ற வாறும். ரு

11 நெஞ்சம் புணையாக் கலைமாக்கடல் நீந்தி யாங்கே
வஞ்சம் மறவர் நிரைவள்ளல் விடுத்த வாறும்
விஞ்சைக் கிறைவன் மகள்வீணையிற் றேற்ற வாறும்
நஞ்சற்ற காமம் நனிநாகரிற் றுய்த்த வாறும். சா

12 முந்நீர்ப் படுசங் கலறம்முர சார்ப்ப மூதூர்ச்
செந்நீர்க் கடியின் விழவாட்டினுட் டேங்கொள் சுண்ணம்
மைந்நீர் நெடுங்க ணிருமங்கையர் தம்முள் மாறு
இந்நீர்ப் படியே மிவைதோற்றன மென்ற வாறும். எ

13 சுண்ணம் உடைந்து சுரமஞ்சரி சோர்ந்து தோழி
வண்ணாங் நெடுங்கட் குணமாலையை வைது மாறிப்
புண்மேற் புகையிற் புகைந்தாளுரு வியாது நோக்காள்
கண்ணேக் குடைந்து கடிமாட மடைந்த வாறும். அ

14 பொன்றுஞ்சு மார்பன் புனலாட்டிடைப் புன்க ணெய்தி
நின்றெஞ்சு கின்ற ஞமலிக்கமிர் தீந்த வாறும்
அன்றைப் பகலே குணமாலையை யச்சு றுத்த
வென்றிக் களிற்றை விரிதாரவன் வென்ற வாறும். ௯

15 தேனூறு தீஞ்சொற் குணமாலையைச் சேர்ந்த வாறும்
கோனூறு செய்வான் கருதிச்சிறை கொண்ட வாறும்
வானூ றிழிந்து மழைமின்னென வந்தோர் தேவன்
ஊனூ றொளிவே லுரவோற்கொண் டெழுந்த வாறும். ௧௦

16 தேங்காத மள்ளர் திரள்தோளிணை சிக்க யாத்த
பூங்கச்சு நீக்கிப் புனைமாண்கலம் நல்ல சேர்த்தி
நீங்காத காத லுடையாய்நினைக் கென்று பின்னும்
பாங்காய விஞ்சை பணித்தாங்கு விடுத்த வாறும். ௧௧

17 பைந்நாகப் பள்ளி மணிவண்ணனிற் பாயல் கொண்டு
கைந்நாகந் துஞ்சு கமழ்காந்தளஞ் சாரல் போகி
மைந்நாக வேலி மலிபல்லவ தேயம் நண்ணிக்
கொய்ந்நாகச் சோலைக் கொடியந்நகர் புக்க வாறும். ௧௨

18 அத்தம் அனைய களிற்றந்நகர் மன்னன் மங்கை
முத்தம் உரிஞ்சு முகிழ்மென்முலை மின்ன னாளைப்
பைத்தங்கோர் நாகம் பணிமாமதி யென்று தீண்டச்
சித்தங் குழையற் கெனத்தீர்த்தவட் சேர்ந்த வாறும். ௧௩

19 பொற்பூண் சுமந்த புணர்மென்முலைக் கோடு போழ
நற்பூங் கழலா னிருதிங்கள் நயந்த வாறும்
கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான்
வெற்பூ டறுத்து விரைவின்னெறிக் கொண்ட வாறும். ௧௪

20 தள்ளாத சும்மை மிகுதக்க நாடு நண்ணி
விள்ளா விழுச்சீர் வணிகன்மகள் வேற்கண் நோக்கம்
உள்ளாவி வாட்ட வுயிரொன்றொத் துறைந்த வாறும்
கள்ளாவி நாறுங் கமழ்கோதையிற் போய வாறும். ௧௫

21 இன்னீ ரமிர்தன் னவள்கண்ணிணை மாரி கற்பப்
பொன்னூர் கழலான் பொழிமாமழைக் காடு போகி
மின்னீர வெள்வே லவன்மத்திம தேய மன்னன்
கொன்னூர் கொடுவெஞ் சிலைகண்டெதிர் கொண்ட வாறும்.

22 திண்டே ரரசர் திறற்சிங்கங்கள் வில்லும் வாளுங்
கண்டாங் குவந்து கடிபெய்திவட் காத்து மென்று
கொண்டார் குடங்கை யளவேயுள கண்ணி னாளைப்
புண்டாங் கெரிவே லிளையோற்குப் புணர்த்த வாறும். ௧௭

23 மதியங் கெடுத்த வயமீனெனத் தம்பி மாழாந்(து)
உதிதற் குரியாள் பணியாலுட னுய வாறும்
நிதியின் னெறியி னவன்றோழர் நிரந்த வாறும்
பதியின் அகன்று பயந்தாளைப் பணிந்த வாறும். ௧௮

24 கண்வா ளறுக்குங் கமழ்தாரவன் தாயொ டெண்ணி
விண்வா ளறுக்கும் நகர்வீதி புகுந்த வாறும்
மண்மேல் விளக்காய் வரத்திற்பிறந் தாளோர் கன்னிப்
பெண்ணா ரமிர்தின் பெருவாரியுட் பட்ட வாறும். ௧௯

25 துஞ்சா மணிப்பூட் சுரமஞ்சரி யென்னு நாமத்
தஞ்சாயல் பூத்த அகிலார்துகி லாய்பொ னல்குல்
எஞ்சாத இன்பக் கொடிதாழ்த்ததும் பன்றி யெய்து
நஞ்சூறு வேலான் பகைநாமறக் கொன்ற வாறும். ௨௦

26 புண்தோய்த் தெடுத்த பொருவேலெனச் சேந்து நீண்ட
கண்போன்ற மாமன் மகள்கண்மணிப் பாவை யன்ன
பெண்பா லமிர்தின் னலம்பெற்றதும் பொற்பச் செங்கோல்
தண்பால் மதிதோய் குடைதண்ணிழற் பாய வாறும். ௨௧

27 திறைமன்ன ருய்ப்பத் திருநிற்பச் செங்கோல் நடப்பக்
குறைவின்றிக் கொற்ற முயரத் தெவ்வர் தேர்பணிய
உறைகின்ற காலத் தறங்கேட்டுரு முற்ற பாம்பின்
அறிவன் அடிக்கீ ழரசஞ்சித் துறந்த வாறும். ௨௨

28 கோணைக் களிற்றுக் கொடித்தே ரிவுளிக் கடல்சூழ்
வாண்மொய்த்த தானை யவன்றம்பியுந் தோழன் மாரும்
பூண்மொய்த்த பொம்மல் முலையாரும் புலந்து றப்ப
வீணைக் கிழவன் விருந்தார்கதிச் சென்ற வாறும். ௨௩

29 தேன்வா யுமிழ்ந்த அமிர்துண்டவன் போன்று செல்வன்
வான்வாய் வணக்கு நலத்தார்முலைப் போகம் வேண்டான்
ஏனோரு மேத்த அவனெய்திய இன்ப வெள்ளம்
ஈனோர்க் குரைப்பாம் பதிகத்து ளியன்ற வாறே. ௨௪

1. நாமகள் இலம்பகம்

நாட்டுவளம்

30 **நா**வீற் றிருந்த புலமாமக ளோடு நன்பொற்
பூவீற் றிருந்த திருமாமகள் புல்ல நாளும்
பாவீற் றிருந்த கலைபாரறச் சென்ற கேள்விக்
கோவீற் றிருந்த குடிநாட்டணி கூற லுற்றேன். க

31 காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய துண்டே. உ

வேறு

32 இலங்க லாழியி னான்களிற் றீட்டம்போற்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை
பொலங்கொள் கொன்றையி னான்சடை போல்மின்னி
விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்ந்தவே. ங

33 தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே. ச

34 குழவி வெண்மதிக் கோடுழக் கீண்டுதேன்
முழவி னின்றதிர் மொய்வரைச் சென்னியின்
இழியும் வெள்ளரு வித்திரள் யாவையுங்
குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே. ரு

35 இலங்கு நீள்முடி யிந்திரன் மார்பின்மேல்
விலங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவை
நலங்கொள் பொன்னொடு நன்மணி சிந்தலாற்
கலன்பெய் பேழை கவிழ்த்தவும் போன்றவே. சா

36 வள்ளற் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை

உள்ள மில்லவர்க் கூர்தொறும் உய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே. ௭

37 மையல் யானையின் மும்மத மார்ந்துதேன்
ஐய பொன்னசும் பாடி யளைந்துராய்ச்
செய்ய சந்தனந் தீம்பழ மாதியா
நைய வாரி நடந்தது நன்றரோ. ௮

38 வீடில் பட்டினம் வெளவிய வேந்தெனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்துபோய்
மோடு கொள்புனல் மூரி நெடுங்கடல்
நாடு முற்றிய தோவென நண்ணிற்றே. ௯

வேறு

39 திரைபொரு கனைகடற் செல்வன் சென்னிமேல்
நுரையெனும் மாலையை நுகரச் சூட்டுவான்
சரவெனும் பெயருடைத் தடங்கொள் வெம்முலைக்
குரைபுனற் கன்னிகொண் டிழிந்த தென்பவே. ௧0

40 பழங்கொள்தெங் கிலையெனப் பரந்து பாய்புனல்
வழங்கமுன் னரியற்றிய சுதைசெய் வாய்த்தலை
தழங்குரற் பம்பையிற் சாற்றி நாடெலாம்
முழங்குதீம் புனலகம் முரிய மொய்த்தவே. ௧௧

41 வெலற்கருங் குஞ்சரம் வேட்டம் பட்டெனத்
தலைத்தலை யவர்கதந் தவிர்ப்பத் தாழ்ந்துபோய்க்
குலத்தலை மகளிர்தங் கற்பிற் கோட்டகம்
நிலைப்படா நிறைந்தன பிறவு மென்பவே. ௧௨

42 கவ்வையுங் கடும்புன லொலியுங் காப்பவர்
செவ்வனா ருயிரஞ் சிலைக்கும் பம்பையும்
எவ்வெலாத் திசைகளும் ஈண்டிக் காரொடு
பவ்வம்நின் றியம்புவ தொத்த என்பவே. ௧௩

43 மாமனு மருகனும் போலு மன்பின
காமனுஞ் சாமனுங் கலந்த காட்சிய
பூமனு மரிசிப்புல் லார்ந்த மோட்டின
தாமின மமைந்துதந் தொழிலின் மிக்கவே. ௧௪

44 நெறிமருப் பெருமையி னெருத்தல் நீளினஞ்
செறிமருப் பேற்றினஞ் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறிவரி வராலின மிரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே. ௧௫

45 சேறமை செறுவினுட் செந்நெல் வான்முளை
வீறொடு விளைகெனத் தொழுது வித்துவார்
நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வார்
கூறிய கடைசியர் குழாங்கொண் டேகுவார். ௧௬

46 முலைத்தடஞ் சேதகம் பொறிப்ப மற்றவர்
குலைத்துடன் பதிந்தலிற் குதித்த வாட்கயல்
புலத்திடைக் கவரிகன் றூட்டப் போந்தபால்
நிலத்திடைப் பாய்ந்தவை பிறழும் நீரவே. ௧௭

47 பாற்சுவை யறிந்தவை பழனத் தாமரை
மேற்செலப் பாய்தலின் வெரீஇய வண்டினம்
கோற்றொடி நுளைச்சியர் முத்தங் கோப்பவர்
ஏற்றிய மாலைத்தேன் இரியப் பாய்ந்தவே. ௧௮

48 இரிந்ததேன் குவளையின் நெற்றி தைவர
முரிந்துபோ தவிழ்ந்துகொங் குயிர்க்கு முல்லையின்
அரும்புசேர்ந் தணிஞிமி றார்ப்ப ஆய்பதம்
விருந்தெதிர் கொண்மெனத் தழுவி வீழ்ந்தவே. ௧௯

49 வளமுடி நடுபவர் வரம்பில் கம்பலை
இளமழை முழக்கென மஞ்ஞை யேங்கலின்
அளமரு குயிலின மழுங்கிப் பூம்பொழில்
உளமெலி மகளிரி னொடுங்கு மென்பவே. ௨௦

50 வளைக்கையாற் கடைசியர் மட்டு வாக்கலின்
திளைத்தவர் பருகிய தேறல் தெற்றுழிக்
களிப்பவுண் டிள அனங் கன்னி நாரையைத்
திளைத்தலிற் பெடைமயில் தெருட்டுஞ் செம்மற்றே. ௨௧

51 கண்ணெனக் குவளையுங் கட்ட லோம்பினர்
வண்ணவாண் முகமென மரையி னுட்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தண்வய லுழவர்தந் தன்மை யின்னதே. ௨௨

52 நித்திலப் பந்துட னீன்று பாதிரி
ஒத்தபூ வுடற்றிய நாவி னாகினால்
தத்துநீர் நாரைமே லெறியத் தண்கடற்
பைத்தெழு திரையெனப் பறவை யாலுமே. ௨௩

53 சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. ௨௪

54 மீன்கணி னளவும்வெற் றிடங்க ளின்மையால்
தேன்கணக் கரும்பியல் காடுஞ் செந்நெலின்
வான்புகழ் களிறுமாய் கழனி யாக்கமும்
ஊன்கணார்க் குரைப்பரி தொல்லென் சும்மைத்தே. ௨௫

55 ஆய்பிழி விருத்துவண் டயிற்றி யுண்டுதேன்
வாய்பொழி குவளைகள் சூடி மள்ளர்கள்
தேய்பிறை யிரும்புதம் வலக்கை சேர்த்தினார்
ஆய்செநெ லகன்றகா டரிகுற் றார்களே. ௨௬

56 வலியுடைக் கைகளான் மலர்ந்த தாமரை
மெலிவெய்தக் குவளைகள் வாடக் கம்பலம்
பொலிவெய்தப் பூம்பொய்கை சிலம்பிப் பார்ப்பெழ
மலைபட வரிந்துகூன் குயங்கை மாற்றினார். ௨௭

57 வாளையி னினந்தலை யிரிய வண்டலர்
தாளுடைத் தாமரை கிழிய வண்சுமை
கோளுடை யிளையவர் குழாங்கொண் டேகலிற்
பாளைவாய்க் கமுகினம் பழங்கள் சிந்துமே. ௨௮

58 சோர்புயல் முகில்தலை விலங்கித் தூநில
மார்புகொண் டார்ந்தது நரல வண்சுளை
யார்வுறு பலாப்பழ மளிந்த நீள்களம்
போர்வினால் மலிந்துடன் பொலிந்த நீரவே. ௨௯

59 ஈடுசால் போர்பழித் தெருமைப் போத்தினான்
மாடுறத் தெழித்துவை களைந்து காலுறீஇச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின் குன்றம் ஒத்தவே. ௩௦

60 கரும்புகண் ணுடைப்பவ் ராலை தோறெலாம்
விரும்பிவந் தடைந்தவர் பருகி விஞ்சிய
திருந்துசா றடுவுழிப் பிறந்த தீம்புகை
பரந்துவிண் புகுதலிற் பரிதி சேந்ததே. ௩௧

61 கிணைநிலைப் பொருநர்தஞ் செல்லல் கீழ்ப்படப்
பணைநிலை யாய்செநெற் பகரும் பண்டியும்
கணைநிலைக் கரும்பினிற் கவரும் பண்டியும்
மணநிலை மலர்பெய்து மறுகும் பண்டியும். ௩௨

62 மல்லலந் தெங்கிள நீர்பெய் பண்டியும்
மெல்லிலைப் பண்டியுங் கமுகின் மேதகு
பல்பழுக் காய்க்குலை பெய்த பண்டியும்
ஒல்குதீம் பண்டம்பெய் தொழுகும் பண்டியும். ௩௩

63 கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்
நெருங்குபு முதிரையி னிறைந்த பண்டியும்
பெருங்கலிப் பண்டிகள் பிறவுஞ் செற்றுபு
திருந்தியெத் திசைகளுஞ் செறிந்த என்பவே. ௩௪

64 கிளிவளர் பூமரு தணிந்து கேடிலா
வளவயல் வைகலு மின்ன தென்பதேன்
துளியொடு மதுத்துளி யறுத சோலைசூழ்
ஒளியமை யிருக்கையூ ருரைக்க நின்றவே. ௩௫

வேறு

65 சேவலன்னந் தாமரையின் தோடவிழ்ந்த செவ்விப்பூக்
காவிற்கூ டெடுக்கிய கவ்விக்கொண் டிருந்தன
தாவில்பொன் விளக்கமாத் தண்குயில் முழவமாத்
தூவிமஞ்ஞை நன்மணம் புகுத்துந்தும்பிக் கொம்பரோ. ௩௬

66 கூடினார்க ணம்மலர்க் குவளையங் குழியிடை
வாடுவள்ளை மேலெலாம் வாளையேறப் பாய்வன
பாடுசால் கயிற்றிற்பாய்ந்து பல்கல ஞெலிப்பப்போந்
தாடுகூத்தி யாடல்போன்ற நாரைகாண்ப வொத்தவே. ௩௭

67 காவியன்ன கண்ணினார் கயந்தலைக் குடைதலின்
ஆவியன்ன பூந்துகி லணிந்தவல்குற் பல்கலை

கேஃவையற் றுதிர்ந்தன கொள்ளுநீர ரின்மையின்
வாவியாவும் பொன்னணிந்து வானம்பூத்த தொத்தவே. ௬அ

68 பாசவல் லிடிப்பவ ருலக்கைவாழைப் பல்பழம்
ஆசினி வருக்கைமா தடிந்துதேங் கனியுதிர்த்(து)
ஊசலாடு பைங்கமுகு தெங்கிணெண் பழம்பரீஇ
வாசத்தாழை சண்பகத்தின் வான்மலர்கள் நக்குமே. ௬௯

69 மன்றல்நா றிலஞ்சிமேய்ந்து மாமுலை சுரந்தபால்
நின்றதாரை யால்நிலம் நனைப்பவேகி நீண்மனைக்
கன்றருத்தி மங்கையர் கலந்நிறை பொழிதர
நின்றமேதி யாற்பொலிந்த நீரமாட மாலையே. ௭௦

70 வெள்ளிப்போழ் விலங்கவைத் தன்னவாய் மணித்தலைக்
கொள்பவளங் கோத்தனைய காலகுன்றிச் செங்கண
ஒள்ளகிற் புகைதிரண்ட தொக்குமா மணிப்புறாக்
கிள்ளையோடு பாலுணுங் கேடில்பூவை பாடவே. ௭௧

71 காடியுண்ட பூந்துகில் கழுமவூட்டும் பூம்புகை
மாடமாலை மேனல்லார் மணிக்குழலின் மூழ்கலிற்
கோடுயர்ந்த குன்றின்மேற் குழீஇயமஞ்ஞை தஞ்சிற(கு)
ஆடுமஞ்சி னுள்விரித் திருந்தவண்ணம் அன்னரே. ௭௨

72 கண்ணுளார் நுங்காதலர் ஒழிககாம மீங்கென
உண்ணிலாய வேட்கையா லூடினாரை யாடவர்
வண்ணமே கலைகளைப் பற்றவற் றுதிர்ந்தன
எண்ணில்பொன் சுடுநெருப் புக்கமுற்றம் ஒத்தவே. ௭௩

73 கோட்டிளந் தகர்களுங் கொய்ம்மலர தோன்றிபோற்
சூட்டுடைய சேவலுந் தோணிக்கோழி யாதியா
வேட்டவற்றி னூறுளார் வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்
காட்டியார்க்குங் கௌவையுங் கடியுங்கௌவை கௌவையே.

74 இறுநுசுப்பி னங்கலா ரேந்துவள்ளத் தேந்திய
நறவங்கொப்பு ளித்தலின் நாகுபுன்னை பூத்தன
சிறகர்வண்டு செவ்வழி பாடமாடத் தூடெலாம்
இறைகொள்வானின் மீனென அரம்பைமுலையி னிருந்தவே.

75 விலக்கில்சாலை யாவர்க்கும் வெப்பில்முப் பழச்சுனைத்
தலைத்தணீர் மலரணிந்து சந்தனஞ்செய் பந்தரும்
கொலைத்தலைய வேற்கணார் கூத்துமன்றி யைம்பொறி
நிலத்தலைய துப்பெலாம் நிறைதுளும்பு மூர்களே. சசு

76 அடிசில்வைக லாயிர மறப்புறமு மாயிரம்
கொடியனார்செய் கோலமும் வைகல்தோறு மாயிரம்
மடிவில்கம்மி யர்களோடு மங்கலமு மாயிரம்
ஒடிவிலவெ ழுயிரம் ஓம்புவாரின் ஓம்பவே. சஎ

77 நற்றவஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்
நற்பொருள்செய் வார்க்கிடம் பொருள்செய்வார்க்கு மஃதிடம்
வெற்றஇன்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தெென
மற்றைநாடு வட்டமாக வைகுமற்ற நாடரோ. சஅ

நகர்வளம்

வேறு

78 கண்வலைக் காமுக ரென்னு மாபடுத்(து)
ஒண்ணிதித் தசைதழீஇ யுடலம் விட்டிடும்
பெண்வலைப் படாதவர் பீடி ஞேங்கிய
அண்ணலங் கடிநக ரமைதி செப்புவாம். சகூ

79 விண்புகு வியன்சினை மெலியப் பூத்தன
சண்பகத் தணிமலர் குடைந்து தாதுக
வண்சிறைக் குயிலொடு மயில்கள் மாறுகூய்க்
கண்சிறைப் படுநிழற் காவு சூழ்ந்தவே. ரு௦

80 கைபுனை சாந்தமுங் கவின்செய் மாலையும்
மெய்புனை சுண்ணமும் புகையும் மேவிய
நெய்யொடு குங்குமம் நிறைந்த நாணிறற்
பொய்கைகள் பூம்படாம் போர்த்த போன்றவே. ருக

81 கடிநலக் கரும்பொடு காய்நெற் கற்றையின்
பிடிநலந் தழீஇவரும் பெருங்கைக் குஞ்சரம்
அடிநிலை யிருப்பெழு வமைந்த கன்மதிற்
புடைநிலை வாரிகள் பொலிந்த சூழ்ந்தவே. ருஉ

82 சலசல மும்மதஞ் சொரியத் தத்தமுள்
கொலைமருப் பிரட்டைகள் குளிப்பப் பாய்ந்திரு
மலைதிளைப் பனவென நாக மான்றபோர்
குலவிய நிலைக்களங் கோல மார்ந்தவே. ௫௩

83 முத்துடை வெண்மருப் பீர்ந்து மொய்கொளப்
பத்தியிற் குயிற்றிய மருங்கிற் பல்வினைச்
சித்திரக் கிம்புரி வயிரஞ் சேர்த்துநர்
ஒத்திய விடங்களும் ஒழுங்கு நீண்டவே. ௫௪

84 ஓடுதேர்ச் சாரிகை யுகுபொற் பூமியும்
ஆடக மாற்றுந்தார்ப் புரவி வட்டமும்
கேடக வாட்டொழி லிடமுங் கேடிலாக்
கோடுவெஞ் சிலைத்தொழி லிடமுங் கூடின்றே. ௫௫

85 புடைநகர்த் தொழிலிடங் கடந்து புக்கபின்
இடைநகர்ப் புறம்பணை யியம்பு மோசையோர்
கடலுடைந் ததுவெனக் கலந்த தக்கடல்
மடையடைத் தனையதம் மாக்க ளீட்டமே. ௫௬

86 சிந்துரப் பொடிகளுஞ் செம்பொற் சுண்ணமுஞ்
சந்தன நீரொடு கலந்து தையலார்
பந்தொடு சிவிறியிற் சிதறப் பார்மிசை
இந்திர வில்லெனக் கிடந்த வீதியே. ௫௭

87 மாற்றறு பசும்பொனின் மாடத் துச்சிமேல்
தூத்திரள் மணிக்குடம் நிரைத்துத் தோன்றுவ
பூத்தன வேங்கைமேற் பொலிந்து கார்நினைந்(து)
ஏத்தரு மயிற்குழா மிருந்த போன்றவே. ௫௮

88 நெடுங்கொடி நிழல்மதி நெற்றி தைவர
உடம்புவேர்த் தினமழை யுரறி நோக்கலின்
நடுங்குபு நல்வரை மாடத் துச்சியில்
அடங்கிவீழ்ந் தருவியின் அழுவ போன்றவே. ௫௯

89 பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதகம்
நற்சிறு ரூர்தலின் நங்கை மார்விரீஇ
உற்றவர் கோழிமே லெறிந்த ஒண்குழை
மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே. ௬௦

90 மாலையும் பசும்பொனும் மயங்கி வார்கணைக்
கோலையுங் குனிசிலை நுதலி னாரொடு
வேலிய லாடவர் விரவி விண்ணவர்
ஆலய மிதுவென ஐயஞ் செய்யுமே. கூக

91 கற்சுணஞ் செய்ததோள் மைந்தர் காதலால்
நற்சுணப் பட்டுடை பற்ற நாணினாற்
பொற்சுணத் தால்விளக் கவிப்பப் பொங்கிய
பொற்சுணம் புறம்பணை தவழும் பொற்பிற்றே. கூஉ

92 நலத்தகு நானநின் றிடிக்கு நல்லவர்
உலக்கையா லுதிர்ந்தன தெங்கி னொண்பழம்
நிலத்தவை சொரிதலின் வெரீஇய மஞ்ஞைபோய்க்
கலத்துயர் கூம்பின்மே லாடுங் கௌவைத்தே. கூ௩

93 இட்டவெண் ணிலப்படா வகையி னீண்டிய
முட்டிலா மூவறு பாடை மாக்களாற்
புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய
மட்டிலா வளநகர் வண்ண மின்னதே. கூ௪

94 தங்கொளி நித்திலத் தாமஞ் சூடிய
வெங்களி யிளமுலை வேற்கண் மாதரார்
பைங்கிளி முன்கைமேற் கொண்டு பார்ப்பெனுங்
கொங்கொளிர் தாமரைக் கிடங்கு கூறுவாம். கூ௫

95 கோட்சுறா இனத்தொடு முதலைக் குப்பைகள்
ஆட்பெறா திரிதர அஞ்சிப் பாய்வன
மோட்டிறாப் பனிக்கிடங் குழக்க மொய்த்தெழுந்(து)
ஈட்டறாப் புள்ளின மிரற்று மென்பவே. கூ௬

96 சிறையனப் பெடையினோ டூடிச் சேவல்போய்
அறுபத வண்டின மார்ப்பத் தாமரை
உறைவது குழுவினின் நீங்கி யோகொடு
கறையற முயல்வதோர் கடவு ளொத்ததே. கூ௭

97 அரும்பொனும் வெள்ளியு மணியு மல்லது
கருங்கலந் தோய்விலாக் காமர் பூந்துறை
குரும்பைமென் முலையின்மேற் குலாய குங்குமம்
விருந்துசெய் திடவெறி மேனி சேந்ததே. கூ௮

98 பட்டவர்த் தப்பலிற் பாவை யேந்தல்குல்
அட்டொளி யரத்தவாய்க் கணிகை யல்லது
மட்டுடை மணமகள் மலர்ந்த போதினுல்
கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே. ௬௯

99 நிரைகதிர் நித்திலங் கோத்து வைத்தபோல்
விரைகமழ் கமுகின்மேல் விரிந்த பாளையும்
குரைமதுக் குவளைகள் கிடங்கிற் பூத்தவும்
உரையினோ ரோசனை யுலவி நாறுமே. ௭0

100 தாய்முலை தழுவிய குழவி போலவும்
மாமலை தழுவிய மஞ்சு போலவும்
ஆய்முகில் தழீஇயசும் பருத நெற்றிய
சேயுயர் மதில்வகை செப்பு கின்றதே. ௭௧

வேறு

101 மாற்றவர் மறப்படை மலைந்துமதில் பற்றின்
நூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியும்
தோற்றமுறு பேய்களிறு துற்றுபெரும் பாம்பும்
கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா. ௭௨

102 விற்பொறிகள் வெய்யவிடு குதிரைதொட ரயில்வாள்
கற்பொறிகள் பாவையன மாடமடு செந்தீக்
கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில்செய் கூகை
நற்றலைகள் திருக்கும்வலி நெருக்குமர நிலையே. ௭௩

103 செம்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும்
வெம்புருகு வட்டுமிழ்வ வெந்நெய்முகந் துமிழ்வ
அம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித்
தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே. ௭௪

104 கரும்பொனியல் பன்றிகத நாகம்விடு சகடம்
குரங்குபொரு தகரினொடு கூர்ந்தரிவ நுண்ணூல்
பரந்தபசும் பொற்கொடி பதாகையொடு கொழிக்குந்
திருந்துமதில் தெவ்வர்தலை பனிப்பத்திருந் தின்றே. ௭௫

105 வயிரவரை கண்விழிப்ப போன்றுமழை யுகளும்
வயிரமணித் தாழ்க்கதவின் வாயின்முக மாக

வயிரமணி ஞாயில்முலை வான்பொற்கொடிக் கூந்தல்
வயிரக்கிடங் காடைமதிற் கன்னியது கவினே. ௭௬

106 செம்பொன்மழை போன்றடிதொ றுயிரங்கள் சிந்திப்
பைம்பொன்விளை தீவினிதி தடிந்துபலர்க் கார்த்தி
அம்பொனிலத் தேகுகுடி யகநகர மதுதான்
உம்பருல கொப்பததன் தன்மைசிறி துரைப்பாம். ௭௭

வேறு

107 துப்புறழ் தொண்டைச் செவ்வாய்த் தோழியர் காமத் தூதின்
ஒப்பவொன் றுதி யாக ஆயிரத் தோரெட் டீறுச்
செப்பித்தஞ் செம்பொ னல்கு னலம்வரை வின்றி விற்கும்
உப்பமை காமத் துப்பி னவரிட முறைத்து மன்றே. ௭௮

108 குங்கும மெழுகிச் சார்வுந் திண்ணையுங் குயிற்றி யுள்ளால்
தங்குமென் சாந்தத் தோடு தாமமுந் தாழ நாற்றி
எங்குநற் சுவர்கள்தோறு நாடக மெழுதி யேற்பப் [டே.
பொங்குமென் மலர்பெய் சேக்கை பொலிந்துவிண் புகற்சியுண்

109 தூசுசூழ் பரவை யல்குல் சுமக்கலா தென்ன வீழ்த்த
காசுசூழ் கோவை முத்தங் கதிர்முலை திமிர்ந்த சாந்தம்
வாசநற் பொடிகள் மாலை வண்டுண வீழ்ந்த முற்றம்
ஆசைப்பட் டரசு வைக அருங்கடி கமழு மன்றே. ௮௦

110 அஞ்சிலம் பொலியோ டல்குற் கலையொலி யணிந்த முன்கைப்
பஞ்சிமெல் விரலிற் பாணி பண்ணொலி பவழச் செவ்வாய்
அஞ்சிநேர்ந் துயிர்க்குந் தேன்சோர் குழலிசை முழவி னோசை
துஞ்சலி லோசை தம்மாற் றுறக்கமும் நிகர்க்க லாதே. ௮௧

111 தேனுலா மதுச்செய் கோதை தேம்புகை கமழ வூட்ட
வானுலாஞ் சுடர்கண் மூடி மாநக ரிரவுச் செய்யப்
பானிலாச் சொரிந்து நல்லா ரணிகலம் பகலைச் செய்ய
வேனிலான் விழைந்து சேரி மேலுல கனைய தொன்றே. ௮௨

112 இட்டநூல் வழாமை யோடி யோசனை யெல்லை நீண்டு
மட்டுவார் மாலை வேய்ந்து சதுக்கங்கள் மலிந்த சும்மைப்
பட்டமும் பசும்பொற் பூணும் பரந்தொளி நிழற்றுந் தீந்தேன்
அட்டுந்தா ரலங்கன் மார்பர் ஆவணங் கிளக்க லுற்றேன். ௮௩

113 மணிபுனை செம்பொற் கொட்டை வம்பணி முத்த மாலைக்
கணிபுனை பவழத் திண்காழ் கம்பலக் கிடுகி னூன்றி
அணிநில மெழுகிச் சாந்தி னகிற்புகைத் தம்பொற் போதில்
திணிநில முணிந்து தேங்கொள் ஐயவி சிதறி னாரே. ௱௪

114 பொன்சொரி கதவு தாழிற் றிறந்துபொன் யவனப் பேழை
மின்சொரி மணியு முத்தும் வயிரமுங் குவித்துப் பின்னும்
மன்பெருங் பவழக் குப்பை வாலணி கலஞ்செய் குப்பை
நன்பக லிரவு செய்யும் நன்கலங் கூப்பி னாரே. ௱௫

115 விழுக்கலஞ் சொரியச் சிந்தி வீழ்ந்தவை யெடுத்துக்கொள்ளா
ஒழுக்கின ரவர்கள் செல்வ முரைப்பரி தொழிக வேண்டா
பழுக்குலைக் கமுகுந் தெங்கும் வாழையும் பசும்பொ னாலும்
எழிற்பொலி மணியி னாலுங் கடைதொறு மியற்றி னாரே.

116 மூசுதே னிறலின் மூச மொய்திரை யியம்பி யாங்கும்
ஓசையென் றுணரி னல்லா லெழுத்துமெய் யுணர்த லாகாப்
பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி
மாசன மிடம்பெ றாது வண்கடை மலிந்த தன்றே. ௱௭

117 மெய்யணி பசும்பொற் சுண்ண மேதகு நான நீரின்
ஐதுபட் டொழுகி யானை யழிமதங் கலந்து சேறாய்ச்
செய்யணி கலன்கள் சிந்தி மாலையு மதுவு மல்கி
வெய்தடி யிடுதற் காகா வீதிகள் விளம்ப லுற்றேன். ௱௮

வேறு

118 முழவணி முதுநகர் முரசொடு வளைவிம
விழவணி மகளிர்தம் விரைகம ழிளமுலை
இழையணி யொளியிள வெயில்செய விடுபுகை
மழையென மறையின பொலிவின தொருபால். ௱௯

119 குடையொடு குடைபல களிறொடு நெரிதர
உடைகட லொலியினொ டுறுபவர் பலிசெல
முடியொடு முடியுற மிடைதலின் விடுசுடர்
கொடியுடை மழைமினிற் குலவிய தொருபால். ௯௦

120 பூத்தலை வாரணப் போர்த்தொழி லிளையவர்
நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயில்தரக்

காய்த்துறு தமனியத் துகளொடு கடிகமழ்
பூத்துகள் கழுமிய பொலிவின தொருபால். கூக

121 மைந்தரொ டூடிய மகளிரை யிளையவர்
ஆந்துகில் பற்றலிற் காசரிந் தணிகிளர்
சுந்தர நிலமிசைச் சொரிதலின் மின்னணிந்(து)
இந்திர திருவிலின் எழிலின தொருபால். கூஉ

122 வளையறுத் தனையன வாலரி யமைபதம்
அளவறு நறுநெயொ டடுகறி யமைதுவை
விளைவமை தயிரொடு மிசைகுவிர் விரைதர்மின்
உளவணி கலமெனு முரையின தொருபால். கூங

123 வரைநிரை யருவியின் மதமிசை சொரிவன
புரைநிரை களிறொடு புனைமணி யியல்தேர்
விரைநிரை இவுளியொ டிளையவர் விரவுபு
குரைநிரை குளிர்புனல் யாற்றின தொருபால். கூச

124 வரிவளை யரவமு மணிமுழ வரவமும்
அரிவளர் கண்ணிய ரணிகல வரவமும்
புரிவளர் குழலொடு பொலிமலி கவினிய
திருவிழை கடிமனை திறவிதின் மொழிவாம். கூரு

வேறு

125 திருவந் நீணகர்ச் செம்பொனி னீடிய
உருவ வொண்கொடி யூழி னுடங்குவ
பரவை வெங்கதிர்ச் செல்வன பைம்மயிர்ப்
புரவி பொங்கழ லாற்றுவ போன்றவே. கூசா

126 பாவை யன்னவர் பந்து புடைத்தலில்
தூவி யன்னம் வெரீஇத்துணை யென்றுபோய்க்
கோவை நித்தில மாடக் குழாமிசை
மேவி வெண்மதி தன்னொ டிருக்குமே. கூஎ

127 இழைகொள் வெம்முலை யீர முலர்த்துவார்
விழைய வூட்டிய மேதகு தீம்புகை
குழைகொள் வாண்முகஞ் சூழ்குளி ருங்கதிர்
மழையுள் மாமதி போன்மெனத் தோன்றுமே. கூஅ

128 செம்பொற் கண்ணி சிறார்களோ டிட்டவும்
அம்பொன் மாலை யவிழ்ந்துடன் வீழ்ந்தவும்
தம்பொன் மேனி திமிர்ந்ததண் சாந்தமும்
வம்புண் கோதையர் மாற்று மயலரோ. ௯௯

129 வேரி யின்மெழுக் கார்ந்தமென் பூநிலத்(து)
ஆரி யாகவுஞ் சாந்தந் தளித்தபின்
வாரி நித்திலம் வைப்பபொற் பூவொடு
சேரி தோறிது செல்வத் தியற்கையே. ௧௦௦

130 கருனை வாசமுங் காரிருங் கூந்தலார்
அருமை சான்ற அகிற்புகை வாசமும்
செருமிச் சேந்துகண் ணீர்வரத் தேம்பொழில்
உரிமை கொண்டன வொண்புற வென்பவே. ௧௦௧

131 நறையும் நானமும் நாறு நறும்புகை
விறகின் வெள்ளி யடுப்பினம் பொற்கலம்
நிறைய ஆக்கிய நெய்பயி லின்னமு(து)
உறையு மாந்தர் விருந்தொடு முண்பவே. ௧௦௨

132 பாளை மென்கமு கின்பழ மெல்லிலை
நீள்வெண் மாடத்து நின்றுகொண் டங்கலார்
ஆளி மொய்ம்பர்க் களித்தணி சண்பகம்
நாள்செய் மாலை நகைமுடிப் பெய்பவே. ௧௦௩

133 எழுது வாள்நெடுங் கண்ணிணை யங்கலார்
மெழுகு குங்கும மார்பிடை வெம்முலை
உழுது கோதையுஞ் சாந்தும் உவந்தவை
முழுதும் வித்தி விளைப்பர் திளைப்பவே. ௧௦௪

134 குஞ்சி மேல்அணிச் சம்மலர் கூட்டுணும்
அஞ்சி லோதிய ரம்மலர்ச் சீறடி
மஞ்சு தோய்மணி மாடத்து மல்குபூம்
பஞ்சி மேலும் பணிக்கும் பணிக்குமே. ௧௦௫

135 தூம மேக மழுந்துகிற் சேக்கைமேல்
காம மேநகர் வார்தம காதலால்
யாம மும்பக லும்அறி யாமையால்
பூமி மாநகர் பொன்னுல கொத்ததே. ௧௦௬

136 அரவு கான்றிட்ட அங்கதிர் மாமணி
உரவு நீர்முத்தும் உள்ளுறுத் துள்ளன
இரவல் மாந்தர்க்கு மின்னவை யீவதோர்
புரவு பூண்டனர் பொன்னகர் மாந்தரே. ௧௦௭

137 முல்லை யங்குழ லார்முலைச் செல்வமும்
மல்லல் மாநகர்ச் செல்வமும் வார்கழற்
செல்வர் செல்வமுங் காணிய என்பர்போல்
எல்லி யும்மிமை யாரிமை யாததே. ௧௦௮

138 முழவுஞ் சங்கமு முன்றின் முழங்குவ
விழவும் வேள்வும் விடுதலொன் றின்மையாற்
புகழ லாம்படித் தன்றிது பொன்னகர்
அகழ்தல் மாக்கட லன்னதோர் சும்மைத்தே. ௧௦௯

139 திங்கள் முக்குடை யான்திரு மாநகர்
எங்கு மெங்கு மிடந்தொறு முண்மையால்
அங்கண் மாநகர்க் காக்கம் அருததோர்
சங்க நீணிதி யாற்றழைக் கின்றதே. ௧௧௦

வேறு

140 தேன்றலைத் துவலை மாலை பைந்துகில் செம்பொன் பூத்து
நான்றன வயிர மாலை நகுகதிர் முத்த மாலை
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத் திராசமா புரம தாமே. ௧௧௧

கோயிற் சிறப்பு

வேறு

141 வேகயானை மீளிவேல் வெய்யதானை யையகோன்
மாகநீள் மணிம்முடி மாரிவண்கை மாசில்சீர்
ஏகவாணை வெண்குடை யிந்நகர்க்கு மன்னவன்
நாகநீர நன்னகர் நன்மைதன்னஞ் செப்புவாம். ௧௧௨

142 நீணிலம் வகுத்துநீர் நிரந்துவந் திழிதரச்
சேணிலத் தியற்றிய சித்திரச் சுருங்கைசேர்
கோணிலத்து வெய்யவாங் கொடுஞ்சுறத் தடங்கிடங்கு
பூணிலத்து வைத்ததோர் பொற்பினிற் பொலிந்ததே. ௧௧௩

143 இஞ்சிமாக நெஞ்சுபோழ்ந் தெல்லைகாண ஏகலின்
மஞ்சுசூழ்ந்து கொண்டணிந்து மாகநீண்ட நாகமும்
அஞ்சும்நின்னை யென்றலின் ஆண்டுநின்று நீண்டதன்
குஞ்சிமான் கொடிக்கையாற் கூவிவிட்ட தொத்ததே. ௧௧௪

144 முத்தமாலை முப்புரி மூரிமா மணிக்கத(வு)
ஒத்தநான்கு கோபுர மோங்கிநின் றொளிர்வன
சத்திநெற்றி சூட்டிய தாமநீள் மணிவணன்
தத்தொளி மணிம்முடித் தாமம்நால்வ போலுமே. ௧௧௫

145 சங்குவிம்மு நித்திலஞ் சாந்தொடேந்து பூண்முலைக்
கொங்குவிம்மு கோதைதாழ் கூந்தலேந்து சாயலார்
இங்கிதக் களிப்பினா லெய்தியாடும் பூம்பொழில்
செங்கணிந் திரன்னகர்ச் செல்வமென்ன தன்னதே. ௧௧௬

146 வெள்ளியானை மென்பிடி மின்னிலங்கு பைம்பொனால்
துள்ளுமா றொருத்தலுஞ் சூழ்ந்தமான் பிணைகளும்
உள்ளுகாம முள்சுட வேந்தனுங் குறைவதோர்
பள்ளிமாட மண்டபம் பசுங்கதிர்ப் பவண்ணமே. ௧௧௭

147 கோழரை மணிம்மடற் கூந்தனெற்றி யேந்திய
மாழையங் திரள்கனி மாமணி மரகதஞ்
சூழ்கதிர்ப் பசுங்குலைச் சூலுபாளை வெண்பொனால்
ஊழ்திரள் மணிக்கமி றாசலாட விட்டதே. ௧௧௮

148 மென்றினைப் பிறங்கலும் மிளிர்ந்துவீ ழருவியும்
குன்றயல் மணிச்சுனைக் குவளைகண் விழிப்பவும்
நின்றுநோக்கு மான்பிணை நீலயானை மன்னவன்
கன்றுகாமம் வெஃகிய காமர்காம பூமியே. ௧௧௯

149 தீங்குயில் மணந்துதேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கைநின்று பொன்னுகுக்கும் வெற்புடுத்த சந்தனம்
ஓங்குபிண்டி சண்பக மூழிநாறு நாகமும்
நீங்கநீங்கு மின்னுயிர் நினைப்பினின் றிளஃகுமே. ௧௨௦

150 முத்தம்வாய்ப் புரித்தன மொய்கதிர்ப் பசும்பொனாற்
சித்திரத் தியற்றிய செல்வமல்கு பன்மணி
பத்தியிற் குயிற்றிவான் பதித்துவைத்த போல்வன
இத்திறத்த பந்தெறிந் திளையராடு பூமியே. ௧௨௧

151 வைத்தபந் தெடுத்தலும் மாலையுட் கரத்தலும்
கைத்தலத்தி னேட்டலுங் கண்ணிநெற்றி தீட்டலும்
பூத்தியிற் புடைத்தலும் பையரவ்வி னுடலும்
இத்திறத்த பந்தினே டின்பமெல்லை யில்லையே. ௧௨௨

152 கூற்றமன்ன கூர்நுதிக் குருதிவான் மருப்பிடைச்
சீற்றமுற்ற மன்னர்தஞ் சென்னிபந் தடிப்பன
ஊற்றிருந்த மும்மதத் தோடையானை பீடுசால்
காற்றியற் புரவிதேர் கலந்துகௌவை மல்கின்றே. ௧௨௩

153 கவ்வையங் கருவிசூழ்ந்து கண்படுக்கு மாடமும்
தெவ்வர்தந்த நீணிதி சேர்ந்தசெம்பொன் மாடமும்
மவ்வலங் குழலினர் மணிக்கலம்பெய் மாடமும்
இவ்வலந்த வல்லவும் மிடங்களெல்லை யில்லையே. ௧௨௪

154 பூத்தகோங்கும் வேங்கையும்பொன்னிணர்செய்கொன்றையும்
காய்த்துநின்று கண்டெறாஉங் காமர்வல்லி மாதரார்
கூத்தரூத பள்ளியுங் கொற்றமன்ன மங்கையர்
ஏத்தல்சான்ற கோயிலு மிடைப்படுத் தியன்றவே. ௧௨௫

155 கந்துமா மணித்திரள் கடைந்துசெம்பொ னீள்சுவர்ச்
சந்துபோழ்ந் தியற்றிய தட்டுவேய்ந்து வெண்பொனல்
இந்திரன் திருநக ருரிமையோடு மிவ்வழி
வந்திருந்த வண்ணமே அண்ணல்கோயில் வண்ணமே. ௧௨௬

156 ஆடலின் அரவ்வமும் அங்கைகொட்டி நெஞ்சுணப்
பாடலின் அரவ்வமும் பணைமுழவ் வரவமுங்
கூடுகோலத் தீஞ்சுவைக் கோலயாழ் அரவ்வமும்
வாடலில்ல ஓசையால் வைகல்நாளும் வைகின்றே. ௧௨௭

சச்சந்தன் சரித்திரம்

வேறு

157 நச்சு நாகத்தி னுரழற் சீற்றத்தன்
அச்ச முற்றடைந் தார்க்கமிர் தன்னவன்
கச்சு லாமுலை யார்க்கணங் காகிய
சச்சந் தன்னெனுந் தாமரைச் செங்கணன். ௧௨௮

158 வண்கை யாற்கலி மாற்றிவை வேலினல்
திண்டிறற் றெவ்வர் தோர்த்தொகை மாற்றினன்
உண்க லேக்கிட னுய்த்திரு மாமகள்
கண்க ளுக்கிட னுங்கடி மார்பனே. கஉ௬

159 கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் தாள்நிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே. கரு௦

160 தருமன் தண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
அருமை யாலழ கிற்கணை பைந்துடைத்
திரும கன்திரு மாநில மன்னனே. கருக

161 ஏனை மன்னர்த மின்னுயிர் செற்றவேற்
றூனை மன்னருட் டானிமி லேறனன்
தேனை மாரியன் னுன்திசை காவலன்
வானந் தோய்புக ழான்மலி வெய்தினன். கருஉ

162 செல்வற் கின்னணஞ் சேறலிற் றீம்புனல்
மல்லல் நீர்விதை யத்தர சன்மகள்
அல்லி சேரணங் கிற்கணங் கன்னவள்
வில்லின் நீள்புரு வத்தெறி வேற்கணள். கருங

163 உருவுஞ் சாயலும் ஒப்ப வுரைப்பதற்(கு)
அரிய வாயினு மவ்வளைத் தோளிகட்
பெருகு காரிகை பேசுவல் பெண்ணணங்(கு)
அரிய தேவரு மேத்தரு நீர்மையாள். கருச

வேறு

164 எண்ணெயும் நானமு மிவைமூழ்கி யிருள்திருக்கிட்(டு)
ஒண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோற்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானுத் தகையவே. கருரு

165 குழவிக்கோட் டிளம்பிறையுங் குளிர்மதியுங் கூடினபோல்
அழகுகொள் சிறுநுதலு மணிவட்ட மதிமுகமும்

தொழுதாற்கு வரங்கொடுக்குந் தொண்டைவாய்த் தூமுறுவல்
ஒழுகுபொற் கொடிமூக்கும் உருப்பசியை யுருக்குமே. கூகூ

166 வண்சிலையை வனப்பழித்து வார்ந்தொழுகி நிலம்பெரு
நுண்கருமை கொண்டொசிந்து நுதலிவர்ந்து போந்துலாய்க்
கண்கூடா கடைபுடைத்துக் கைவல்லா னெழுதியபோல்
பண்பார்ந்த கொடும்புருவம் பழிச்சானுப் படியவே. கூஎ

167 சேலனைய சில்லரிய கடைசிவந்து கருமணியம்
பாலகத்துப் பதித்தன்ன படியவாய் முனிவரையும்
மாலுறுப்ப மகிழ்செய்வ மாண்பில்நஞ் சமுதமுமே
போல்குணத்த பொருகயற்கண் செவியுறப்போந் தகன்றனவே.

168 மயிரெறி கத்தரிகை யனையவாய் வள்ளைவா(டு)
உயிர்செகுத்து முன்னென்றிப் பின்போா துருவமைந்த
செயிர்மகர குண்டலமுந் திளைப்பானு வார்காதும்
வயிரவில் முகஞ்சூடி வண்ணம்வீற் றிருந்தனவே. கூகூ

169 ஈனுத இளங்கமுகின் மரகத மணிக்கண்ணும்
ஆனுதே யிருள்பருகும் அருமணி கடைந்ததூஉம்
தானுகி யிருளொடோர் தாமரைப்பூச் சுமந்தன்ன
கானுர்ந்த திரள்கழுத்துக் கவின்சிறைகொண் டிருந்ததே.

170 மணிமகரம் வாய்போழ்ந்து வாழ்முத்த வடஞ்சூழ்ந்தாங்(கு)
அணியரக்கார் செம்பஞ்சி யணையனைய ஆடமைத்தோள்
துணிகதிர் வளைமுன்கைத் தொகுவிரல் செங்காந்தள்
மணியரும்பு மலரங்கை குலிகமார் வனப்பினவே. கசக

171 தாமச்செப் பிணைமுகட்டுத் தண்கதிர் விடுநீலம்
மாமணிதா பித்தனபோல் மனம்பருகு கருங்கண்ணா
ஏமுற அடிபரந் திளம்பிறை வடஞ்சூடி
ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே. கசஉ

172 அங்கைபோல் வயிறணிந்த வலஞ்சுழி யமைகொப்பூழ்
கங்கையின் சுழியலைக்குங் கண்கொளா நுடங்கிடையை
உண்டெனத் தமர்மதிப்பர் நோக்கினுர் பிறரெல்லாம்
உண்டில்லை யெனவைய மல்லதொன் றுணர்வரிதே. கசங

173 மன்னாக இணைப்படமுந் தேர்த்தட்டும் மதிமயக்கிப்
பொன்னால வட்டமும்போற் கலையிமைக்கும் அகலல்குல்
கொன்னிளம் பரிதியுங் குறுமுயலின் குருதியும்போன்(று)
இன்னரத்தப் பட்டசைத் திந்திரற்கும் புகழ்வரிதே. ௧௪௪

174 வேழவெண் திரள்தடக்கை வெருட்டிமற் றிளங்கன்னி
வாழைத்தண் டெனத்திரண்டு வாலரக்குண் செம்பஞ்சி
தோழமைகொண் டெனமென்மை யுடையவாயொளிதிகழ்ந்து
மாழைகொள் மணிமகரங் கௌவிவீற் றிருந்தனவே. ௧௪௫

175 பக்கத்தாற் கவிழியவாய் மேல்பிறங்காப் பாண்டிலா
ஒக்கநன் குணராமை பொருந்திய சந்தினவாய்
நெக்குப்பின் கூடாது நிகரமைந்த முழந்தாளும்
மக்களுக் கில்லாத மாட்சியின் மலிந்தனவே. ௧௪௬

176 ஆடுதசை பிறங்காது வற்றாது மயிரகன்று
நீடாது குறுகாது நிகரமைந்த அளவினவாய்ச்
சேடாவ நாழிகையிற் புடைதிரண்டு தேனெய்பெய்
வாடாத காம்பேபோல் கணைக்காலின் வனப்பினவே. ௧௪௭

177 பசும்பொன்செய் கிண்கிணியும் பாடகமும் பாடலைப்ப
நயந்தெரி பொற்சிலம்பு முத்தரிபெய் தகம்நக
இயைந்தெழிலார்மணியாமையிளம்பார்ப்பின்கூன்புறம்போல்
அசைந்துணர்வு மடிந்தொழியும் அடியிணை புகழ்வார்க்கே.

178 அரக்கியல் செங்கழுநீ ரகவிதழ்போல் உகிர்சூடிப்
பரப்பின்றி நுதியுயர்ந்து பழிப்பறத் திரண்டுநீண்(டு)
ஒருக்குற நெருங்கிப்பொன் னொளியாழி யகங்கௌவித்
திருக்கவின்கொள் மெல்விரல்கள் தேனார்க்குந் தகையவே.

179 என்பொடு நரம்பின்றி யிலவம்பூ வடரனுக்கி
இன்புற வரம்புயர்ந் திருநில முறப்புல்லி
ஒன்பதின்சாண் நடப்பினும் ஒருகாத மென்றஞ்சு
மென்பஞ்சிச் சிறடிபு மேதக்க விழைவினவே. ௧௫௦

180 இவ்வுருவு நெஞ்சென்னுங் கிழியின்மே லிருந்திலக்கித்(து)
அவ்வுருவு நினைப்பென்னுந் துகிலிகையால் வருத்தித்துக்
கவ்வியதன் நோக்கினாற் கண்விடுத்துக் காதல்நீர்
செவ்விதிற் றெளித்தானாக் காமப்பூச் சிதறினான். ௧௫௧

181 மெய்பெறு எழுத்துயிர்க்கு மழலைவா யிளமுறுவற்
றையலாள் நெடுந்தடங்கண் வலைப்பட்டுச் சச்சந்தன்
ஐயுறான் அணங்கெனவே யகத்தடக்கிச் செல்கின்றான்
மொய்யறுக் களியானை முழங்கித்தே னிமிர்தாரான். கருஉ

வேறு

182 வுண்டின முகபடா மணிந்து வார்மதம்
உண்டுகுத் திடுகளிற் றுழவன் றன்மகள்
பெண்டிர்தம் பெருநலங் கடந்து பெற்றபேர்
விண்டலர் கோதைக்கு விசயை யென்பவே. கருங

183 அருமணி மரகதத் தயங்க ணுறிய
எரிநிறப் பொன்னித ழேந்து தாமரைத்
திருமக ளிவளெனத் திலக வெண்குடைப்
பெருமகன் கோயிலுட் பேதை வைகுமே. கருச

184 கலம்புரி யகலல்குற் றுயர் தவ்வையர்
சிலம்புரி திருந்தடி பரவச் செல்பவள்
வலம்புரி சலஞ்சலம் வளை இய தொத்தனள்
குலம்புரிந் தனையதோர் கொடியி னீர்மையாள். கருரு

185 இன்னகிற் கொழும்புகை யுயிர்க்கும் ஈர்ங்குழல்
மென்மலர்க் கோதைதன் முலைகள் வீங்கலின்
மின்னுருக் குறுமிடை மெலிய மெல்லவே
கன்னிதன் திருநலங் கனிந்த தென்பவே. கருசு

186 முந்துநாம் கூறிய மூரித் தானையக்
கந்துகொல் கடாக்களி யானை மன்னவன்
பைந்தொடிப் பாசிழைப் பரவை யேந்தல்குல்
தந்தைமாட் டிசைத்தனன் தனது மாற்றமே. கருஎ

187 மருமகன் வலந்ததும் மங்கை யாக்கமும்
அருமதிச் சூழ்ச்சியின் அமைச்ச ரெண்ணிய
கருமமுங் கண்டவர் கலத்தற் பான்மையிற்
பெருமகற் சேர்த்தினர் பிணைய னாளையே. கருஅ

வேறு

188 பொனங்கொடி யமிர்த னாளும் பொன்னெடுங் குன்ற னானும்
அனங்கனுக் கிலக்க மாகி யம்புகொண் டழுத்த விள்ளார்
இனந்தமக் கெங்கு மில்லார் இயைந்தன ரென்ப முக்கட்
சினந்திகழ் விடையி னானுஞ் செல்வியுஞ் சேர்ந்த தொத்தே.

189 காதலாற் காம பூமிக் கதிரொளி யவரு மொத்தார்
மாதருங் களிற னானு மாசுண மகிழ்ச்சி மன்றல்
ஆதரம் பெருகு கின்ற அன்பினா லன்ன மொத்துந்
தீதிலார் திளைப்பின் ஆமான் செல்வமே பெரிது மொத்தார்.

190 தன்னமர் காத லானுந் தையலும் மணந்த போழ்திற்
பொன்னனா ளமிர்த மாகப் புகழ்வெய்யோன் பருகி யிட்டான்
மின்னவிர் பூணி னானை வேற்கணார்க் கியற்றப் பட்ட
மன்னிய மதுவின் வாங்கி மாதரும் பருகி யிட்டாள். ௧௯௧

191 பவழவாய் பரவை யல்கு லென்றிவை பருகும் வேலான்
கவழமார் களிறு போன்றான் காதலி கரும்பை யொத்தாள்
தவழ்மதுக் கோதை மாதர் தாமரைப் பூவ தாக
உமிழ்நகை வேலி னானும் ஒண்சிறை மணிவண் டொத்தான்.

192 பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயல்
களிக்கயல் பொருவ போன்று கடைசிவந் தகன்ற கண்ணாள்
ஒளிக்கவின் கொண்ட காமத் தாழுறு கனியை யொத்தாள்
அளித்தயில் கின்ற வேந்தன் அஞ்சிறைப் பறவை யொத்தான்.

வேறு

193 துறுமலர்ப் பிணையலுஞ் சூட்டுஞ் சுண்ணமும்
நறுமலர்க் கண்ணியும் நாறு சாந்தமும்
அறுநிலத் தமிர்தமும் அகிலும் நாவியும்
பெறுநிலம் பிணித்திடப் பெரியர் வைகினார். ௧௯௪

194 துடித்தலைக் கருங்குழற் சுரும்புண் கோதைதன்
அடித்தலைச் சிலம்பினோ டரவ மேகலை
வடித்தலைக் கண்மலர் வளர்த்த நோக்கமோ(டு)
அடுத்துலப் பரிதவ ரூறி லின்பமே. ௧௯௫

195 இழைகிள ரிளமுலை யெழுதா நுண்ணிடைத்
தழைவளர் மதுமலர் தயங்கு பூஞ்சிகைக்
குழைமுகக் கொடியொடு குருதி வேலினான்
மழைமுகில் மாரியின் வைகு மென்பவே. ௧௯௬

196 படுதிரைப் பவழவா யமிர்த மாந்தியும்
கொடிவளர் குவிமுலைத் தடத்துள் வைகியும்
இடியினுங் கொடியினும் மயங்கி யாவதுங்
கடிமணக் கிழமையோர் கடலின் மிக்கதே. ௧௯௭

197 கப்புரப் பசுந்திரை கதிர்செய் மாமணிச்
செப்பொடு சிலதிய ரேந்தத் தீவிய
துப்புமிழ்ந் தலமருங் காம வல்லியும்
ஒப்பரும் பாவைபோன் றுறையு மென்பவே. ௧௯௮

198 மண்ணகங் காவலின் வழுக்கி மன்னவன்
பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்
விண்ணக மிருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற வுரோணியோ டொளித்த தொத்ததே. ௧௯௯

வேறு

199 குங்குமத் தோளி னானுங் கொழுங்கயற் கண்ணி னாளும்
தங்கிய காதல் வெள்ளந் தணப்பறப் பருகு நாளுள்
திங்கள்வெண் குடையி னாற்குத் திருவிழுக் குற்ற வண்ணம்
பைங்கதிர் மதியிற் றெள்ளிப் பகர்ந்தெடுத் துரைத்து மன்றே.

200 களிறனான் அமைச்சர் தம்முட் கட்டியங் கார னென்பான்
ஒளிறுவாட் டடக்கை யானுக் குயிரென ஒழுகு நாளுட்
பிளிறுவார் முரசிற் சாற்றிப் பெருஞ்சிறப் பியற்றி வேந்தன்
வெளிறிலாக் கேள்வி யானை வேறுகொண் டிருந்துசொன்னான்.

201 அசைவிலாப் புரவி வெள்ளத் தரிஞ்சயன் குலத்துட் டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்த மன்னாள்
விசையையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டும் இலங்குபூண் மார்ப என்றான்.

202 அண்ணல்தா னுரைப்பக் கேட்டே யடுகளிற் றெருத்தி னிட்ட
வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமே லிட்ட தொக்கும்
கண்ணகன் ஞாலங் காத்த லெனக்கெனக் கமழுங் கண்ணி
மண்ணகம் வளருந் தோளான் மறுத்துநீ மொழிய லென்றான்.

203 எழுதரு பரிதி மார்பன் இற்றென இசைத்த லோடுந்
தொழுதடி பணிந்து சொல்லுந் துன்னலர்த் தொலைத்த வேலோய்
கழிபெருங் காத லாள்கட் கழிநலம் பெறுக வையம்
பழிபடா வகையிற் காக்கும் படுநுகம் பூண்ப லென்றான். ௧௭௪

204 வலம்புரி பொறித்த வண்கை மதவலி விடுப்ப ஏகிக்
கலந்தனன் சேனை காவல் கட்டியங் கார னென்ன
உலந்தரு தோளி னாய்நீ யொருவன்மேற் கொற்றம் வைப்பின்
நிலந்திரு நீங்கு மென்றோர் நிமித்திகன் நெறியிற் சொன்னான்.

205 எனக்குயி ரென்னப் பட்டான் என்னலாற் பிறரை யில்லான்
முனைத்திற முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்
தனக்கியான் செய்வ செய்தேன் தான்செய்வ செய்கவொன்றும்
மனக்கினா மொழிய வேண்டா வாழிய ரொழிக வென்றான்.

206 காவல குறிப்பன் றேனுங் கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு நன்கலாற் றீங்கு வாரா
பூவலர் கொடிய னார்கட் போகமே கழுமி மேலும்
பாவமும் பழியு முற்றார் பற்பலர் கேளி தென்றான். ௧௭௭

207 பெரும்பெயர்ப் பிரம னென்னும் பீடினாற் பெரிய நீரான்
அரும்பிய முலையி னாளைக் கணிமுகம் நான்கு தோன்ற
விரும்பியாங் கவளை யெய்தான் விண்ணக மிழந்த தன்றித்
திருந்தினாற் கின்று காறுஞ் சிறுசொல்லாய் நின்ற தன்றே.

208 கைம்மலர்க் காந்தள் வேலிக் கணமலை யரையன் மங்கை
மைம்மலர்க் கோதை பாகங் கொண்டதே மறுவ தாகக்
கொய்ம்மலர்க் கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணி யாற்குப்
பெய்ம்மல ரலங்கன் மார்ப பெரும்பழி யாயிற் றன்றே. ௧௭௯

209 நீனிற வண்ணன் அன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னோக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையி னார்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்.

210 காமமே கன்றி நின்ற கழுதைகண் டருளி னாலே
வாமனார் சென்று கூடி வருந்தினீ ரென்று வையத்(து)
ஈமஞ்சேர் மாலை போல இழித்திடப் பட்ட தன்றே
நாமவேற் றடக்கை வேந்தே நாழிது தெரியி னென்றான். ௧௮௬

211 படுபழி மறைக்க லாமோ பஞ்சவ ரன்று பெற்ற
வடுவுரை யாவர் பேர்ப்பார் வாய்ப்பறை யறைந்து தூற்றி
இடுவதே யன்றிப் பின்னும் இழுக்குடைத் தம்ம காமம்
நடுவுநின் றுலக மோம்பல் நல்லதே போலு மென்றான். ௧௮௨

212 ஆரறி விகழ்தல் செல்லா ஆயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடைமை நீயும் பிணையனாட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடைமை யென்றான் உருத்திர தத்த னென்பான்.

213 அளந்துதாங் கொண்டு காத்த அருந்தவ முடைய நீரார்க்(கு)
அளந்தன போக மெல்லாம் அவரவர்க் கற்றை ஞான்றே
அளந்தன வாழு நாளும் அதுவெனக் குரைய லென்றான்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுட ரிமைக்கும் பூணான்.

214 மூரித்தேந் தாரி னாய்நீ முனியினும் உறுதி நோக்கிப்
பாரித்தேன் தரும நுண்ணூல் வழக்கது வாதல் கண்டே
வேரித்தேங் கோதை மாதர் விருந்துனக் காக இன்பம்
பூரித்தேந் திளைய கொங்கை புணர்கயான் போவ லென்றான்.

வேறு

215 இனமாமென் றுரைப்பினு மேதமெனான்
முனமாகிய பான்மை முளைத்தெழலாற்
புனமாமலர் வேய்நறும் பூங்குழலாள்
மனமாநெறி யோடிய மன்னவனே. ௧௮௯

216 கலையார்துகி லேந்தல்கு லுங்கதிர்சூழ்
முலையீர்தட மும்முனி யாதுபடிந்(து)
உலையாத்திரு வின்னமிர் துண்டொளிசேர்
மலையார்மணி மார்பன் மகிழ்ந்தனனே. ௧௮௭

217 விரிமாமணி மாலை விளங்குமுடித்
திருமாமணி சிந்து திளைப்பினராய்

எரிமாமணி மார்பனும் ஏந்திழையும்
அருமாமணி நாகரின் ஆயினரே. ௧௮௮

218 நறவார்ந்ததொர் நாகிளந் தாமரைவாய்
உறவீழ்ந்ததொ ரொண்மணி போன்றுரவோன்
அறவாக்கிய இன்ப மமர்ந்தவிருட்
கறைவேற்கணி னாள்கன வுற்றனளே. ௧௮௯

வேறு

219 பஞ்சி யடிப்புவ ளத்துவர் வாயவள்
துஞ்சு மிடைக்கன மூன்றவை தோன்றலின்
அஞ்சி நடுங்கின ளாயிழை யாயிடை
வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே. ௧௯௦

220 பண்கெழு மெல்விர லாற்பணைத் தோளிதன்
கண்கழூஉச் செய்து கலைநல தாங்கி
விண்பொழி பூமழை வெல்கதிர் நேமிய
வண்புகழ் மாலடி வந்தனை செய்தாள். ௧௯௧

221 இம்ப ரிலாநறும் பூவொடு சாந்துகொண்(டு)
எம்பெரு மானடிக் கெய்துகென் றேத்தி
வெம்பரி மானெடுந் தேர்மிகு தானையத்
தம்பெரு மானடிச் சார்ந்தன என்றே. ௧௯௨

222 தானமர் காதலி தன்னொடு மாவலி
வானவர் போல்மகிழ் வுற்றபின் வார்நறுந்
தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனக்
கானமர் கோதை கனாமொழி கின்றாள். ௧௯௩

223 தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்ததெண்
முத்தணி மாலை முடிக்கிட னாக
ஒத்ததன் தாள்வழி யேமுளை யோங்குபு
வைத்தது போல வளர்ந்ததை யன்றே. ௧௯௪

224 வார்குழை வில்லிட மாமுடி தூக்குபு
கார்கெழு குன்றனை யான்கன வின்னியல்
பார்கெழு நூல்விதி யாற்பயன் தான்தெரிந்(து)
ஏர்குழை யாம லெடுத்துரைக் கின்றான். ௧௯௫

225 நன்முடி நின்மக னாம்நறு மாலைகள்
அன்னவ னாலம ரப்படுந் தேவியர்
நன்முலை நின்மக னுக்கமி தாமெனப்
பின்னத னாற்பயன் பேசலன் விட்டான். ௧௯௬

226 இற்றத னாற்பய னென்னென வேந்திழை
உற்றதின் னேயிடை யூறெனக் கென்றலும்
மற்றுரை யாடல ளாய்மணி மாநிலத்(து)
அற்றதொர் கோதையிற் பொற்றொடி சோர்ந்தாள். ௧௯௭

227 காவி கடந்தகண் ணீரொடு காரிகை
ஆவி நடந்தது போன்றணி மாழ்கப்
பாவி யெனாவி வருத்துதி யோவெனத்
தேவியை யாண்டகை சென்றுமெய் சார்ந்தான். ௧௯௮

228 தண்மலர் மார்புறத் தழீஇயி னானவள்
கண்மலர்த் தாள்கன வின்னியல் மெய்யெனும்
பெண்மய மோபெரி தேமட வாய்க்கெனப்
பண்ணுரை யாற்பர வித்துயர் தீர்த்தான். ௧௯௯

229 காதலன் காதலி னாற்களித் தாய்மலர்க்
கோதையங் கொம்பனை யார்தங் குழாந்தொழத்
தாதுகு தாம மணிந்தகில் விம்மிய
போதுகு மெல்லணைப் பூமகள் சேர்ந்தாள். ௨௦௦

230 பண்கனி யப்பரு கிப்பய னாடகங்
கண்கனி யக்கவர்ந் துண்டுசின் னாள்செல
விண்கனி யக்கவின் வித்திய வேற்கணி
மண்கனிப் பான்வள ரத்தளர் கின்றாள். ௨௦௧

வேறு

231 கரும்பார்தோள் முத்தங் கழன்றுசெவ்வாய்
விளர்த்துக் கண்பசலை பூத்தகாமம்
விரும்பார் முலைக்கண் கரிந்துதிங்கள்
வெண்கதிர்கள் பெய்திருந்த பொற்செப்பேபோல்
அரும்பால் பரந்து நுசுப்புங்கண்ணின்
புலனாயிற் றாய்ந்த அனிச்சமாலை
பெரும்பார மாய்ப்பெரிது நைந்துநற்சூற்
சலஞ்சலம்போல் நங்கை நலந்தொலைந்ததே. ௨௦௨

வேறு

232 தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்
தேம்புடை யலங்கல் மார்பிற் திருமகன் தமிய னாக
ஓம்படை யொன்றுஞ் செப்பாள் திருமக ளொளிந்து நீங்க
ஆம்புடை தெரிந்து வேந்தற் கறிவெனு மமைச்சன் சொன்னான்.

233 காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேறல் தேற்றாய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காம மென்னு மதுவினுட் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் றாயோ ரரும்பொறி புனைவி யென்றான்.

வேறு

234 அந்தரத் தார்மய னேயென ஐயுறுந்
தந்திரத் தாற்றம நூல்கரை கண்டவன்
வெந்திற லான்பெருந் தச்சனைக் கூவியோர்
எந்திர வூர்தி யியற்றுமி னென்றான். ௨௦௫

235 பல்கிழி யும்பயி னுந்துகில் நூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
அல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச்
செல்வதோர் மாமயில் செய்தன னன்றே. ௨௦௬

236 பீலிநன் மாமயி லும்பிறி தாக்கிய
கோலநன் மாமயி லுங்கொடு சென்றவன்
ஞாலமேல் லாமுடை யானடி கைதொழு(து)
ஆலுமிம் மஞ்ஞை யறிந்தரு ளென்றான். ௨௦௭

237 நன்னெறி நூனயம் தானன்று நன்றிது
கொன்னெறி யிற்பெரி யாயிது கொள்கென
மின்னெறி பல்கல மேதகப் பெய்ததோர்
பொன்னறை தான்கொடுத் தான்புகழ் வெய்யோன். ௨௦௮

238 ஆடியல் மாமயி லூர்தியை யவ்வழி
மாடமுங் காவு மடுத்தோர்சின் னாள்செலப்
பாடலின் மேன்மேற் பயப்பயத் தான்துரந்(து)
ஓட முறுக்கி யுணர்த்த வுணர்ந்தாள். ௨௦௯

வேறு

239 பண்டவழ் விரலிற் பாவை பொறிவலங் திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடங் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித் திருக்கு மன்றே. ௨௧௦

வேறு

240 காதி வேல்வல கட்டியங் காரனும்
நீதி யால்நிலங் கொண்டபின் நீதிநூல்
ஓதி னார்களை வேறுகொண் டோதினான்
கோது செய்குணக் கோதினுட் கோதனான். ௨௧௧

241 மன்ன வன்பகை யாயதோர் மாதெய்வம்
என்னை வந்திடங் கொண்டதி ராப்பகல்
துன்னி நின்று செகுத்திடு நீயெனும்
என்னை யான்செய்வ கூறுமி னென்னவே. ௨௧௨

242 அருமை மாமணி நாகம் அழுங்கவோர்
உருமு வீழ்ந்தென வுட்கின ராவவன்
கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்
தரும தத்தனென் பாணிது சாற்றினான். ௨௧௩

243 தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக்
குவளை யேயள வுள்ள கொழுங்கணாள்
அவளை யேயமிர் தாகவவ் வண்ணலும்
உவள கந்தன தாகவொ டுங்கினான். ௨௧௪

244 விண்ணி னோடமிர் தம்விலைச் செல்வது
பெண்ணின் இன்ப மெனப்பெரி தாழ்ந்தவன்
எண்ண மின்றி யிறங்கியிவ் வையகங்
தண்ணங் தாமரை யாளொடு தாழ்ந்ததே. ௨௧௫

245 தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமகள்
அன்ன வன்வழிச் செல்லின்இம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குந ரில்லையே. ௨௧௬

246 திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்க ளொப்பவென் றேதுப

குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர். உகஎ

247 அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ. உகஅ

248 உறங்கு மாயினு மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்(து)
அறங்கள் வெளவ அதன்புறங் காக்கலார். உகக

249 யாவ ராயினும் நால்வரைப் பின்னிடில்
தேவ ரென்பது தேறுமிவ் வையகம்
காவல் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவி னும்முரை யார்நவை யஞ்சுவார். உ௨௦

250 தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்
வேண்டில் இன்னமிர் துங்நஞ்சு மாதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே. உ௨க

251 வேலின் மன்னனை விண்ணகம் ஏற்றியிஞ்
ஞாலம் ஆள்வது நன்றெனக் கென்றியேல்
வாலி தன்றெனக் கூறினன் வாள்ளுமற்(கு)
ஓலை வைத்தன ஒண்டிற லாற்றலான். உ௨௨

வேறு

252 குழற்சிகைக் கோதை சூட்டிக் கொண்டவ னிருப்ப மற்றோர்
நிழற்றிகழ் வேலி னானை நேடிய நெடுங்க ணாளும்
பிழைப்பிலாட் புறந்தந் தானுங் குரவரைப் பேணல் செய்யா(த)
இழுக்கினு ரிவர்கள் கண்டா யிடும்பைநோய்க் கிரைக ளாவார்.

253 நட்பிடைக் குய்யம் வைத்தான் பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத் தீயாற் கன்னியைக் கலக்கி னானும்
அட்டுயி ருடலந் தின்றான் அமைச்சனு யரசு கொன்றான்
குட்டநோய் நரகந் தன்னுட் குளிப்பவ ரிவர்கள் கண்டாய்.

254 பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாள்
குறைபடு மதியந் தேயக் குறுமுயல் தேய்வ தேபோல்
இறைவனைத் தன்னை யாக்கி யவன்வழி யொழுகி னென்றும்
நிறைமதி யிருளைப் போழ நெடும்புகழ் விளக்கு மென்றான்.

255 கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கள் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடி னென்றான்.

256 தார்ப்பொலி தரும தத்தன் தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன்னகலமெல்லாம்பொள்ளென வியர்த்துப்பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய் மதனன்மற் றிதனைச்சொன்னான்.

257 தோளினால் வலிய ராகித் தொக்கவர் கலைகள் பாற
வாளினாற் பேச லல்லால் வாயினாற் பேசல் தேற்றேன்
காளமே கங்கள் சொல்லிக் கருணையாற் குழைக்குங் கைகள்
வாளமர் நீந்தும் போழ்தின் வழுவழுத் தொழியு மென்றான்.

258 நுண்முத்த மேற்றியாங்கு மெய்யெலாம் வியர்த்து நொய்தின்
வண்முத்த நிரைகொள் நெற்றி வார்முரி புருவ மாக்கிக்
கண்ணொரி தவழ வண்கை மணிநகு கடகம் எற்றா
வெண்ணகை வெகுண்டு நக்குக் கட்டியங் காரன் சொன்னான்.

259 என்னலாற் பிறர்கள் யாரே யினையன பொறுக்கு நீரார்
உன்னலாற் பிறர்கள் யாரே யுற்றவற் குறுத சூழ்வார்
மன்னன் போய்த் துறக்க மாண்டு வானவர்க் கிறைவ னாக
பொன்னெலாம் விளைந்து பூமி பொலியயான் காப்ப லென்றான்.

260 விளை இக பொலிக வஃதே யுரைத்திலம் வெகுள வேண்டா
களை இகம் எழுகம் இன்னே காவலற் கூற்றங் கொல்லும்
வளைகய மடந்தை கொல்லுந் தான்செய்த பிழைப்புக் கொல்லும்
அளவறு நிதியங் கொல்லும் அருள்கொல்லுமமைக என்றான்.

261 நிலத்தலைத் திருவ ளாள்தன் நீப்பருங் காதல் கூர
முலைத்தலைப் போகம் மூழ்கி முகிழ்நிலா முடிகொள் சென்னி
வெலற்கருந் தானை நீத்த வேந்தனை வெறுமை நோக்கிக்
குலத்தொடுங் கோறலெண்ணிக் கொடியவன் கடியசூழ்ந்தான்.

262 கோன்றமர் நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்கத் தன்கீழ்
ஏன்றநன் மாந்தர்க் கெல்லாம் இருநிதி முகந்து நல்கி
ஊன்றிய நாட்டை யெல்லாம் ஒருகுடை நீழல் செய்து
தோன்றினான் குன்றத் துச்சிச்சுடர்ப்பழி விளக்கிட் டன்றே.

263 பருமித்த களிறு மாவும் பரந்தியல் தேரும் பண்ணித்
திருமிக்க சேனை மூதூர்த் தெருவுதொ றெங்கு மீண்டி
எரிமொய்த்த வாளும் வில்லும் இலங்கிலை வேலு மேந்திச்
செருமிக்க வேலி னான்றன் திருநகர் வளைந்த தன்றே. ௨௬௪

264 நீணில மன்ன போற்றி நெடுமுடிக் குரிசில் போற்றி
பூணணி மார்ப போற்றி புண்ணிய வேந்த போற்றி
கோணினைக் குறித்து வந்தான் கட்டியங் கார னென்று
சேணிலத்திறைஞ்சிச்சொன்னான் செய்யகோல் வெய்யசொல்லான்.

265 திண்ணிலைக் கதவ மெல்லாந் திருந்துதா ழுறுக்க வல்லே
பண்ணுக பசும்பொற் றேரும் படுமதக் களிறு மாவும்
கண்ணகன் புரிசை காக்குங் காவல ரடைக என்றான்
விண்ணுரு மேறுபோன்று வெடிபட முழங்குஞ் சொல்லான்.

266 புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந் திறங்கு கின்ற
ஒலிக்கழல் மன்ன ருட்கும் உருச்சுடர் வாளை நோக்கிக்
கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங் காரன் நம்மேல்
வலித்தது காண்டு மென்று வாளெயி றிலங்க நக்கான்.

267 நங்கைநீ நடக்கல் வேண்டும் நன்பொருட் கிரங்கல் வேண்டா
கங்குல்நீ யன்று கண்ட கனவெலாம் விளைந்த தென்னக்
கொங்கலர் கோதை மாழ்கிக் குழைமுகம் புடைத்து வீழ்ந்து
செங்கயற் கண்ணி வெய்ய திருமகற் கவலஞ் செய்தாள். ௨௬௮

268 மல்லலைத் தெழுந்து வீங்கி மலைதிரண் டனைய தோளான்
அல்லலுற் றழுங்கி வீழ்ந்த அமிர்தமன் னாளை யெய்திப்
புல்லிக்கொண் டவலம் நீக்கிப் பொம்மல்வெம் முலையி னாட்குச்
சொல்லுவான் இவைகள் சொன்னான் சூழ்கழற் காலி னானே.

269 சாதலும் பிறத்தல் தானுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லாம் அவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும்பொல்லாய் பெய்வளைத் தோளியென்றான்.

270 தொல்லைநம் பிறவி யெண்ணின் தொடுகடல் மணலு மாற்றா
எல்லைய அவற்று ளெல்லாம் ஏதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா. ௨௪௧

271 வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனால் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும் உணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்றா லொழிகநின் கவலை யென்றான். ௨௪௨

272 உரிமைமுன் போக்கி யல்லால் ஒளிமுடி மன்னர் போகார்
கருமமீ தெனக்கும் ஊர்தி சமைந்தது கவல வேண்டா
புரிநரம் பிரங்குஞ் சொல்லாய் போவதே பொருள்மற் றென்றான்
எரிமுயங் கிலங்கு வாட்கை ஏற்றிளஞ் சிங்க மன்னன். ௨௪௩

273 என்புநெக் குருகி யுள்ள மொழுகுபு சோர யாத்த
அன்புமிக் கவலித் தாற்றா ஆருயிர்க் கிழத்தி தன்னை
இன்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணை கூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன் துணைவி சேர்ந்தாள்.

வேறு

274 நீருடைக் குவளையின் நெடுங்கணின்ற வெம்பனி
வாருடைம் முலைமுகந் நனைப்பமாதர் சென்றபின்
சீருடைக் குரிசிலுஞ் சிவந்தழன்றோர் தீத்திரள்
பாருடைப் பனிக்கடல் சுடுவதொத் துலம்பினான். ௨௪௫

275 முழைமுகத் திடியரி வளைத்தவன்கண் மள்ளரிற்
குழைமுகப் புரிசையுட் குரிசில்தா னகப்பட
இழைமுகத் தெறிபடை யிலங்குவாட் கடலிடை
மழைமுகத்த குஞ்சரம் வாரியுள் வளைத்தவே. ௨௪௬

276 அயிலினிற் புனைந்தவாள் அழன்றுருத் துரீஇயுடன்
பயில்கதிர்ப் பருஉமணிப் பன்மயிர்ச்செய் கேடகம்
வெயிலெனத் திரித்துவிண் வழுக்கிவந்து வீழ்ந்ததோர்
கயிலணிக் கதிர்நகைக் கடவுளொத் துலம்பினான். ௨௪௭

277 மாரியிற் கடுங்கணை சொரிந்துமள்ள ரார்த்தபின்
வீரியக் குரிசிலும் விலக்கிவெங் கணைமழை

வரிசியிற் கடிந்துடன் அகற்றமற் றகன்படைப்
பேரியற் பெருங்களிறு பின்னிவந் தடைந்தவே. உ௪௮

278 சிற்றமிக்க மன்னவன் சேர்ந்தகுஞ் சரந்துதற்
கூற்றருங் குருதிவாள் கோடுற அழுத்தலின்
ஊற்றுடை நெடுவ்வரை உருமுடன் றிடித்தென
மாற்றரு மதக்களிறு மத்தகம் பிளந்தவே. உ௪௯

279 வேன்மிடைந்த வேலியும் பிளந்துவெங்கண் வீரரை
வான்மயிர்ச்செய் கேடகத் திடித்துவாள் வலையரிந்(து)
ஊனுடைக் குருதியுள் உழக்குபு திரிதரத்
தேன்மிடைந்த தாரினான் செங்களஞ் சிறந்ததே. உ௫௦

வேறு

280 உப்புடைய முந்நீர் உடன்றுகரை கொல்வ(து)
ஒப்புடைய தானையுள் ஒருதமிய னாகி
இப்படி யிறைமகன் இருங்களிறு நூற
அப்படையுள் அண்ணலும் அழன்றுகளி றுந்தி. உ௫௧

281 நீடக மிருந்தநிழல் நேமிவல னேந்திக்
கேடக மறுப்பநடு வற்றரவு சேர்ந்தாங்(கு)
ஓடுகதிர் வட்டமென ஓய்யென உலம்பிக்
காடுகவர் தீயின்மிகை சீறுபு வெகுண்டான். உ௫௨

282 நெய்ம்முகம் அணிந்துநிழல் தங்கியழல் பொங்கி
வைம்முகம் அணிந்தநுதி வாளழல வீசி
மைம்முகம் அணிந்தமத யானைதவ நூறிக்
கைம்முதல் துணிந்துகளி றுழவது நோனன். உ௫௩

283 மாலைநுதி கொண்டுமழை மின்னென இமைக்கும்
வேலைவலன் ஏந்திவிரி தாமமழ கழியச்
சோலைமயி லார்கள்துணை வெம்முலைகள் துஞ்சுங்
கோலவரை மார்பினுறு கூற்றென எறிந்தான். உ௫௪

வேறு

284 புண்ணிடங் கொண்ட எஃகம் பறித்தலிற் பொன்னனார்தங்
கண்ணிடங் கொண்ட மார்பிற் றடாயின காது வெள்வேல்

மண்ணிடங் கொண்ட யானை மணிமருப் பிடையிட்டம்ம
விண்ணிடை மள்ளர் கொள்ள மிறைக்கொளி திருத்தினானே.

285 ஏந்தல்வேல் திருத்த யானை இரிந்தன எரிபொற் கண்ணி
நாந்தக வுழவர் நண்ணார் கூற்றென நடுங்கி மள்ளர்
சாய்ந்தபின் தறுக ணாண்மைக் கட்டியங் காரன் வேழங்
காய்ந்தனன் கடுக வுந்திக் கப்பணஞ் சிதறி னானே. ௨௫௬

286 குன்றமார் பரிந்து வெள்வேற் குடுமிமா மஞ்ஞை யூர்ந்து
நின்றமால் புருவம் போல நெரிமுரி புருவ மாக்கிக்
கொன்றவன் வேழம் வீழ்ப்ப மற்றுமோர் களிற்றிற் பாய்ந்து
நின்றமா மள்ளர்க் கெல்லா நீண்முடி யிலக்க மானான். ௨௫௭

வேறு

287 நஞ்சுபதி கொண்டவழல் நாகணையி னான்றன்
னெஞ்சுபதி கொண்டபடை மூழ்கநிலம் வீசும்
மஞ்சுதவழ் குன்றனைய தோளொசிந்து மாத்தாட்
குஞ்சரங்கள் நூறிக்கொலை வாளொடித்து நின்றான். ௨௫௮

288 ஆரமருள் ஆண்டகையும் அன்னவகை வீழும்
வீரரெறி வெம்படைகள் வீழஇமை யானைப்
பேரமருள் என்றுபெருந் தாதையொடும் பேராப்
போரமருள் நின்றஇளை யோனிற்பொலி வுற்றான். ௨௫௯

289 போழ்ந்துகதிர் நேமியொடு வேல்பொரு தழுந்தத்
தாழ்ந்துதறு கண்ணிணைகள் தீயழல விழியர்
வீழ்ந்துநில மாமகள்தன் வெம்முலை ஞெமுங்க
ஆழ்ந்துபடு வெஞ்சுடரின் ஆண்டகை யவிந்தான். ௨௬௦

வேறு

290 தோய்ந்த விசும்பென்னுந் தொன்னாட்டகந்
தொழுது புலம்பெய்தி மைந்தர்மாழ்க
ஏந்து முலையா ரினைந்திரங்கக்
கொடுங்கோ லிருள்பரப்ப ஏளபாவம்
ஆய்ந்த குருகுலமா மாழ்கடலினுள்
முளைத்த அறச்செங்கோ லாய்கதிரினை
வேந்தர் பெருமானைச் சச்சந்தனை
மந்திரிமா நாகமுடன் விழுங்கிற்றன்றே. ௨௬௧

291 பாலருவித் திங்கள்தோய் முத்தமாலைப்
பழிப்பில் நெடுங்குடைக்கீழ் பாய்பரிமான்றேர்க்
கோலருவி வெஞ்சிலையான் கூர்வாளொடு
மணிக்கே டகமும் மறமுமாற்றி
வாலருவி வாம னடித்தாமரை
மலர்சூடி மந்திரமென் சாந்துபூசி
வேலருவிக் கண்ணினர் மெய்காப்போம்ப
வேந்தன்போய் விண்ணோர்க்குவிருந் தாயினனே. உகூஉ

292 செந்தீக் கருந்துளைய தீங்குழல்யாழ்
தேந்தே மென்னு மணிமுழவமுந்
தந்தாங் கிளையார்மெல் விரல்கள் தீண்டத்
தாந்தா மென்றிரங்குந் தண்ணுமைகளும்
அந்தீங் கிளவியா ரைஞ்ஞூற்றுவர்
அவைதுறைபோ யாட லரம்பையன்னர்
எந்தாய் வெறுநிலத்துச் சேர்தியோவென்
றினைந்திரங்கிப் பள்ளி படுத்தார்களே. உகூங

293 மடையவிழ்ந்த வெள்ளிலைவேல் அம்புபாய
மணிச்செப் பகங்கடை கின்றவேபோல்
தொடையவிழ்ந்த மாலையும் முத்துந்தோய்ந்த
துணைமுலையி னுள்ளரங்கின் மூழ்கக்காமன்
படையவிழ்ந்த கண்பனிநீர் வாரவிம்மாப்
பருமுத்த நாமமழலைக் கிண்கிணியினர்
புடையவிழ்ந்த கூந்தல் புலவுத்தோயப்
பொழிமழையுள் மின்னுப்போற் புலம்பினரே. உகூச

294 அரிமானேர் மெல்லணைமேல் மஞ்ஞைசூழக்
கிடந்தாங்கு வேந்தன் கிடந்தானைத்தான்
கரிமாலை நெஞ்சினன் கண்டான்கண்டே
கைதொழுதான் கண்ணீர் கலுழ்ந்துகுத்தபின்
எரிமாலை யிமத் திழுதார்குடம்
ஏனைநூறு மேற்பச் சொரிந்தலறியெம்
பெருமானே யெம்மை யொளித்தியோவென்னப்
பெரியகணீர் வாரச் சொரிந்தலறுவார். உகூரு

295 கையார் வளைகள் புடைத்திரங்குவார்
கதிர்முலைமே லாரம் பரிந்தலறுவார்
செய்யார் கருங்குழல்மேல் மாலைசிந்தி
நிலத்திடுவார் நின்று திருவில்வீசும்
மையூர் கடிப்பிணையும் வார்குழையுங்
களைந்திடுவார் கையால் வயிறதுக்குவார்
ஐயாவோ என்றழுவார் வேந்தன்செய்த
கொடுமை கொடிதென்பார் கோல்வளையினார். ௨௬௬

296 பானாட் பிறைமருப்பிற் பைங்கண்வேழம்
பகுவாயோர் பையணல்மா நாகம்வீழ்ப்பத்
தேனார் மலர்ச்சோலைச் செவ்வரையின்மேற்
சிறுபிடிகள் போலத் துயருழந்துதாம்
ஆனா தடியேம்வந் தவ்வுலகில்நின்
அடியடைது மென்றழுது போயினாரெங்
கோனார் பறிப்ப நலம்பூத்தஇக்
கொடியினிப் பூவா பிறர்பறிப்பவே. ௨௬௭

297 செங்கட் குறுநரியோர் சிங்கவேற்றைச்
செகுத்தாங் கதனடியைச் சேர்ந்தாலொப்ப
வெங்கட் களியானை வேல்வேந்தனை
விறலெரியின் வாய்ப்பெய் தவன்பெயர்ந்துபோய்ப்
பைங்கட் களிற்றின்மேற் றன்பெயரினாற்
பறையறைந்தான் வேல்மாரி பெய்தாலொப்ப
எங்க ணவரும் இனைந்திரங்கினார்
இருள்மனத்தான் பூமகளை யெய்தினானே. ௨௬௮

சீவகன் தோற்றம்

வேறு

298 களிமுகச் சுரும்புண் கோதை கயிலெருத் தசைந்து சோர
வளிமுகச் சுடரின் நில்லா மனத்தொடு மயங்கி யிப்பாற்
சுளிமுகக் களிற னான்றன் சொன்னய நெறியிற் போய
கிளிமுகக் கிளவிக் குற்ற திற்றெனக் கிளக்க லுற்றேன். ௨௬௯

299 எஃகென விலங்கு வாட்கண் எறிகட லமிர்த மன்னாள்
அஃகிய மதுகை தன்னால் ஆய்மயி லூரு மாங்கண்

வெஃகிய புகழி னான்றன் வென்றிவெம் முரச மார்ப்ப
எஃகெறி பிணையின் மாழ்கி யிறுகிமெய்ம் மறந்து சோர்ந்தாள்.

300 மோடுடை நகரின் நீங்கி முதுமரந் துவன்றி யுள்ளம்
பீடுடை யவரு முட்கப் பிணம்பல பிறங்கி யெங்கும்
காடுடை யளவை யெல்லாங் கழுதிருந் துறங்கு நீழற்
பாடுடை மயிலங் தோகை பைப்பய வீழ்ந்த தன்றே. உஎக

301 மஞ்சுசூழ் வதனை யொத்துப் பிணப்புகை மலிந்து பேயும்
அஞ்சுமம் மயானந் தன்னுள் அகில்வயி றார்ந்த கோதை
பஞ்சிமேல் வீழ்வ தேபோற் பல்பொறிக் குடுமி நெற்றிக்
குஞ்சிமா மஞ்ஞை வீழ்ந்து கால்குவித் திருந்த தன்றே.உஎஉ

302 வார்தரு தடங்க ணீர்தன் வனமுலை நனைப்ப எல்பெற்(று)
ஊர்கட லனைய காட்டுள் அச்சமொன் றானு முள்ளாள்
ஏர்தரு மயிலஞ் சாயல் இறைவனுக் கிரங்கி யேங்கிச்
சோர்துகில் திருத்தல் தேற்றாள் துணைபிரி மகன்றி லொத்தாள்.

303 உண்டென வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்.
கண்டினித் தெளிக என்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்தலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமிய ளானாள்.

304 இருள்கெட இகலி யெங்கும் மணிவிளக் கெரிய ஏந்தி
அருளுடை மனத்த வாகி அணங்கெலாம் வணங்கி நிற்பப்
பொருகடற் பரிதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே. உஎரு

305 பூங்கழற் குரிசில் தந்த புதல்வனைப் புகன்று நோக்கித்
தேங்கம ழோதி திங்கள் வெண்கதிர் பொழிவ தேபோல்
வீங்கிள முலைகள் விம்மிச் சுரந்துபால் பிலிற்ற ஆற்றாள்
வாங்குபு திலகஞ் சேர்த்தித் திலகனைத் திருந்த வைத்தாள்.

வேறு

306 கறைபன் னீராண் டுடன்விடுமின்
காமர் சாலை தளிநிறுமின்
சிறைசெய் சிங்கம் போல்மடங்கிச்
சேரா மன்னர் சினமழுங்க

உறையுங் கோட்ட முடன்சிமின்
ஒண்பொற் குன்றந் தலைதிறந்திட்(டு)
இறைவன் சிறுவன் பிறந்தானென்
றேற்பார்க் கூர்தோ றுய்த்தீமின். ௨௭௭

307 மாட மோங்கும் வளநகருள்
வரம்பில் பண்டந் தலைதிறந்திட்(டு)
ஆடை செம்பொன் அணிகலங்கள்
யாவும் யாருங் கவர்ந்தெழுநாள்
வீட லின்றிக் கொளப்பெறுவார்
விலக்கல் வேண்டா வீழ்ந்தீர்க்குக்
கோடி மூன்றே டரைச்செம்பொன்
கோமான் நல்கு மெனஅறைமின். ௨௭௮

308 அரும்பொற் பூணு மாரமு மிமைப்பக் கணிக ளகன்கோயில்
ஒருங்கு தொக்குச் சாதகஞ்செய் தோகை யரசற்குடன்போக்கிக்
கருங்கைக் களிறுங் கம்பலமுங் காசுங் கவிகள் கொளவீசி
விரும்பப் பிறப்பாய் வினைசெய்தேன் காண இஃதோஒ பிறக்குமா.

309 வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே.

310 பற்றா மன்னன் நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்றா ரில்லாத் தமியேனால் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய்நீ வளரு மாறும் அறியேனால்
எற்றே யிதுகண் டேகாதே யிருத்தி யாலென் இன்னுயிரே.

311 பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பாற் றுயர்க்கடலை நீந்தும் புணைமற் றாகாக்காற்
சிறந்தா ருளரேல் உரையாயாற் சிந்தா மணியே கிடத்தியால்
மறங்கூர் நங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின் வருந்துகோ.

312 அந்தோ விசயை பட்டனகொண் டகங்கை புறங்கை யானாற்போல்
கந்தார் களிற்றுத் தங்கோமான் கழிய மயிலோர் மயிலூர்ந்து
வந்தாற்போலப்புறங்காட்டுள் வந்தாள் தமியே யெனமரங்கள்
சிந்தித் திரங்கி யழுவனபோற் பனிசேர் கண்ணீர் சொரிந்தனவே.

313 அடர்பொற் பைம்பூ ணரசழிய
அரும்பொற் புதல்வற் பெற்றிருந்த
இடர்கொள் நெஞ்சத் திறைவியும்
இருங்கண் ஞாலத் திருள்பருகிச்
சுடர்போய் மறையத் துளங்கொளிய
குழவி மதிபெற் றகங்குளிர்ந்த
படர்தீ ரந்தி யதுவொத்தாள்
பணைசெய் கோட்டுப் படாமுலையாள். ௨௮௪

வேறு

314 தேனமர் கோதை மாதர் திருமகன் திறத்தை யோராள்
யானெவன் செய்வ லென்றே அவலியா இருந்த போழ்தின்
தானமர்ந் துழையின் நீங்காச் சண்பக மாலை யென்னுங்
கூனிய துருவங் கொண்டோர் தெய்வதங் குறுகிற் றன்றே.

315 விம்முறு விழும வெந்நோய் வனத்துறை தெய்வஞ் சேரக்
கொம்மென வுயிர்த்து நெஞ்சிற் கொட்புறு கவலை நீங்க
எம்மனை தமியை யாகி யிவ்விட ருற்ற தெல்லாஞ்
செம்மலர்த் திருவின் பாவாய் யான்செய்த தீமை யென்றாள்.

316 பூவினுட் பிறந்த தோன்றற் புண்ணிய னனைய நம்பி
நாவினுள் உலக மெல்லாம் நடக்குமோன் றுது நின்ற
கோவினை யடர்க்க வந்து கொண்டுபோ மொருவன் இன்னே
காவியங் கண்ணி னுயாம் மறைவது கரும மென்றாள். ௨௮௭

317 சின்மணி மழலை நாவிற் கிண்கிணி சிலம்பொ டேங்கப்
பன்மணி விளக்கின் நீழல் நம்பியைப் பள்ளி சேர்த்தி
மின்மணி மிளிரத் தேவி மெல்லவே யொதுங்கு கின்றாள்
நன்மணி யீன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள்.

318 ஏதிலா ரிடர்பன் னூறு செய்யினுஞ் செய்த எல்லாம்
தீதில வாக என்று திருமுலைப் பால்ம டுத்துக்
காதலான் பெயர்சு மந்த கதிர்மணி யாழி சேர்த்திக்
கோதைதாழ் குழலி னாளைக் கொண்டுபோய் மறைய நின்றாள்.

319 நல்வினை செய்தி லாதேன் நம்பிநீ தமியை யாகிக்
கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ என்று விம்மாப்

புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்ததேபோல்
ஒல்கியோர் கொம்பு பற்றி யொருகணால் நோக்கி நின்றாள்.

வேறு

320 நாளொடு நடப்பது வழுக்கி மீன்னொடோர்
கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தெனக்
காளக வுடையினன் கந்து நாமனும்
வாளொடு கனையிருள் வந்து தோன்றினன். உ௱௬

321 வாள்கடைந் தழுத்திய கண்ணி னார்தம
தோள்கடைந் தழுத்திய மார்பன் தூங்கிருள்
நீள்சுடர் நிழல்மணி கிழிப்ப நோக்கினன்
ஆள்கடிந் தணங்கிய அணங்கு காட்டுளே. உ௱௨

322 அருப்பிள முலையவர்க் கனங்க னாகிய
மருப்பிளம் பிறைநுதல் மதர்வை வெங்கதிர்
பரப்புபு கிடந்தெனக் கிடந்த நம்பியை
விருப்புள மிகுதியின் விரைவொ டெய்தினான். உ௱௩

323 புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினன் மறைத்து வண்கையால்
துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினன்
சினைமறைந் தொருகுரல் சீவ என்றதே. உ௱௪

324 என்பெழுந் துருகுபு சோர ஈண்டிய
அன்பெழுந் தாசனுக் கவலித் தையனை
நுன்பழம் பகைதவ நூறு வாவென
இன்பழக் கிளவியின் இறைஞ்சி யேத்தினான். உ௱௫

325 ஒழுக்கியல் அருந்தவத் துடம்பு நீங்கினார்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனொடும் விரைவின் ஏகினான். உ௱௬

326 மின்னடு கனையிருள் நீந்தி மேதகு
பொன்னுடை வளநகர் பொலியப் புக்கபின்
தன்னுடை மதிசுடத் தளருந் தையலுக்(கு)
இன்னுடை யருள்மொழி யினிய செப்பினான். உ௱௭

327 பொருந்திய உலகினிற் புகழ்கண் கூடிய
அருந்ததி யகற்றிய ஆசில் கற்பினாய்
திருந்திய நின்மகன் தீதின் நீங்கினான்
வருந்தல்நீ யெம்மனை வருக என்னவே. ௨௯௮

328 கள்ளலைத் திழிதருங் களிகொள் கோதைதன்
உள்ளலைத் தெழுதரும் உவகை யூர்தர
வள்ளலை வல்விரைந் தெய்த நம்பியை
வெள்ளிலை வேலினான் விரகின் நீட்டினான். ௨௯௯

329 சுரிமுக வலம்புரி துவைத்த தூரியம்
விரிமுக விசும்புற வாய்விட் டார்த்தன
எரிமுக நித்திலம் ஏந்திச் சேந்தபோற்
கரிமுக முலையினார் காய்பொன் சிந்தினார். ௩௦௦

330 அழுகுரல் மயங்கிய அல்ல லாவணத்(து)
எழுகிளை மகிழ்ந்தெம தரசு வேண்டினான்
கழிபெருங் காதலான் கந்து நாமனென்(று)
உழிதரு பெருநிதி யுவப்ப நல்கினான். ௩௦௧

331 திருமகற் பெற்றெனச் செம்பொற் குன்றெனப்
பெருநல நிதிதலை திறந்து பீடுடை
இருநிலத் திரவலர்க் கார்த்தி யின்னணஞ்
செருநிலம் பயப்புறச் செல்வன் செல்லுமே. ௩௦௨

வேறு

332 நல்லுயிர் நீங்கலும் நன்மாண் புடையதோர்
புல்லுயிர் தன்னொடு நின்றுழிப் புல்லுயிர்
கல்லுயர் காட்டிற் கரப்பக் கலங்கவிழ்த்(த)
அல்லலுற் றாளுற்ற தாற்ற வுரைப்பாம். ௩௦௩

333 பொறியறு பாவையிற் பொம்மென விம்மி
வெறியுறு கோதை வெறுநில மெய்த
இறுமுறை யெழுச்சியி னெய்துவ தெல்லாம்
நெறிமையிற் கூற நினைவின் அகன்றாள். ௩௦௪

334 பெருமகற் காக்கம் பிறழ்வின்றிக் கேட்டே
திருமகள் தானினிச் செய்வதை யெல்லாம்

ஒருமனத் தன்னு யுரையென லோடுந்
தெருமரு தெய்வதஞ் செப்பிய தன்றே. ௩௦௫

335 மணியறைந் தன்ன வரியற லைம்பாற்
பணிவருங் கற்பிற் படைமலர்க் கண்ணுட்
துணியிருட் போர்வையிற் றுன்னுபு போகி
அணிமணற் பேர்யாற் றமரிகை சார்வாம். ௩௦௬

336 அமரிகைக் கோசனை யைம்பது சென்றால்
குமரிக் கொடிமதிற் கோபுர மூதூர்
தீமரியல் ஓம்புந் தரணி திலகம்
நமரது மற்றது நண்ணல மாகி. ௩௦௭

337 வண்டார் குவளைய வாவியும் பொய்கையும்
கண்டார் மனங்கவர் காவுங் கஞலிய
தண்டா ரணியத்துத் தாபதப் பள்ளியொன்(று)
உண்டாங் கதனுள் உறைகுவ மென்றாள். ௩௦௮

338 பொருளுடை வாய்மொழி போற்றினள் கூற
மருளுடை மாதர் மதித்தன ளாகி
அருளுடை மாதவ ரத்திசை முன்னி
இருளிடை மின்னி னிலங்கிழை சென்றாள். ௩௦௯

வேறு

339 உருவ மாமதி யொண்முகத் தோடிய
இருவி லும்மெறி மாமக ரக்குழைத்
திருவி லும்மிவை தேமொழி மாதரைப்
பொருவில் நீளதர் போக்குவ போன்றவே. ௩௧௦

வேறு

340 சிலம்பிரங்கிப் போற்றிசைப்பத் திருவிற்கைபோய் மெய்காப்ப
இலங்குபொற் கிண்கிணியுங் கலையுமேங்க எறிவேற்கண்
மலங்க மணிமலர்ந்த பவளக்கொம்பு முழுமெய்யுஞ்
சிலம்பி வலந்ததுபோற் போர்வைபோர்த்துச் செல்லுற்றாள்.

341 பஞ்சி யடரனிச்சம் நெருஞ்சி யீன்ற பழமாவென்(று)
அஞ்சு மலரடிகள் அரங்கண்டன்ன அருங்காட்டுள்
குஞ்சித் தசைந்தசைந்து குருதிகான்று வெய்துயிரா
வஞ்சி யிடைநுடங்க மயில்கைவீசி நடந்ததே. ௩௧௨

வேறு

342 தடங்கொள் தாமரைத் தாதுறை தேவியும்
குடங்கை போலுண்கட் கூனியும் கூர்ம்பாற்
கடங்க ளும்மலை யுங்கடந் தார்புனல்
இடங்கொள் யாற்றகம் எய்தின ரென்பவே. ௩௱௧௩

343 எல்லை யெய்திய ஆயிரச் செங்கதிர்
மல்லல் மாக்கடற் றோன்றலும் வைகிருள்
தொல்லை நல்வினை முற்படத் தோன்றிய
அல்லல் வல்வினை போல அகன்றதே. ௩௱௧௪

344 நுணங்கு நுண்கொடி மின்னோர் மழைமிசை
பணங்கொள் வார்பொழில் வந்து கிடந்ததொத்(து)
அணங்கு நுண்துகில் மேலசைந் தாளரோ
நிணங்கொள் வைந்நுதி வேல்நெடுங் கண்ணினாள். ௩௱௧௫

345 வைகிற் றெம்மனை வாழிய போழ்தெனக்
கையி னாடி தைவரக் கண்மலர்ந்(து)
ஐய வோவென் றெழுந்தனள் ஆய்மதி
மொய்கொள் பூமி முளைப்பது போலவே. ௩௱௧௬

346 தூவி யஞ்சிறை யன்னமுந் தோகையும்
மேவி மென்புன மானின மாதியா
நாவி நாறெழின் மேனியைக் கண்டுகண்(டு)
ஆவித் தாற்றுகில் லாதழு திட்டவே. ௩௱௧௭

347 கொம்மை வெம்முலைப் போதிற் கொடியனாள்
உம்மை நின்றதொ ரூழ்வினை யுண்மையால்
இம்மை யிவ்விட ருற்றன ளெய்தினாள்
செம்மை மாதவர் செய்தவப் பள்ளியே. ௩௱௧௮

வேறு

348 வாளுறை நெடுங்க ணாளை மாதவ மகளி ரெல்லாந்
தோளுறப் புல்லு வார்போற் றொக்கெதிர் கொண்டு புக்குத்
தாளுறு வருத்த மோம்பித் தவநெறிப் படுக்க லுற்று
நாளுறத் திங்க ளூர நல்லணி நீக்கு கின்றார். ௩௱௧௯

349 திருந்துதகரச்செந்நெருப்பிற் றேன்றோய்த்தமிர்தங்கொளவுயிர்க்குங்
கருங்கா ழகிலின் நறும்புகையிற் கழுமிக் கோதை கண்படுக்குந்
திருந்து நானக் குழல்புலம்பத் தேனும் வண்டு மிசைபுலம்ப
அரும்பொன் மாலை யலங்கலோ டாரம் புலம்ப அகற்றினாள்.

350 திங்க ளுகிரிற் சொலிப்பதுபோற் றிலகம் விரலிற் றுனீக்கிப்
பைம்பொன் மகர குண்டலமும் பாவை கழுத்தின் அணிகலமும்
வெங்கண் வேந்தற் கமிர்தாகி வேற்கட் பாவை பகையாய
அங்கண் முலையின் அணிமுத்தும் அரும்பொற் பூணும் அகற்றினாள்.

351 பஞ்சி யனைய வேய்மென்றோட் பகுவாய் மகரங் கான்றிட்ட
துஞ்சாக் கதிர துணைமுத்தந் தொழுதேன் நும்மை யெனத்துறந்து
வஞ்சி வருத்து நுசுப்பினாள் வளைகை யுடைத்து மணிக்காந்தள்
அஞ்சச் சிவந்த மெல்விரல்சூழ் அரும்பொ னாழி யகற்றினாள்.

352 பூப்பெய் செம்பொற் கோடிகமும் பொன்னா ரால வட்டமும்
ஆக்கு மணிசெய் தேர்த்தட்டும் அரவின் பையும் அடுமல்குல்
வீக்கி மின்னுங் கலையெல்லாம் வேந்தன் போகி யரம்பையரை
நோக்கி நும்மை நோக்கானீர் நோவா தொழிமி னெனத்துறந்தாள்.

353 பிடிக்கை போலுந் திரள்குறங்கி னணியும் நீக்கிப் பிணையன்னாள்
அடிக்கிண் கிணியு மஞ்சிலம்பும் அவிர்மோ திரத்தோ டகற்றியபின்
கொடிப்பூத்துதிர்ந்ததோற்றம்போற்கொள்ளத்தோன்றியணங்கலற
உடுத்தாள் கற்றோய் நுண்கலிங்கம் உரவோன் சிறுவ னுயர்கெனவே.

வேறு

354 பாலுடை யமிர்தம் பைம்பொற் கலத்தினுட் பாவை யன்ன
நூலடு நுசுப்பி னல்லார் ஏந்தவும் நேர்ந்து நோக்காச்
சேலடு கண்ணி காந்தட் டிருமணித் துடுப்பு முன்கை
வாலட கருளிச் செய்ய வனத்துறை தெய்வம் ஆனாள். ௩௨௫

355 மெல்விரல் மெலியக் கொய்த குளநெல்லும் விளைந்த ஆம்பல்
அல்லியும் உணங்கு முன்றில் அணில்விளித் திரிய ஆமான்
புல்லிய குழவித் திங்கட் பொழிகதிர்க் குப்பை போலும்
நல்லெழிற் கவரி யூட்ட நம்பியை நினைக்கும் அன்றே. ௩௨௬

356 பெண்மைநாண் வனப்புச் சாயல் பெருமட மாது பேசின்
ஒண்மையி னொருங்கு கூடி உருவுகொண் டனைய நங்கை

நண்ணிய நுங்கட் கெல்லாம் அடைக்கல மென்று நாடுங்
கண்ணிய குலனுந் தெய்வங் கரந்துரைத் தெழுந்த தன்றே.

வேறு

357 உறுதி சூழ்ந்திவண் ஓடலின் ஆயிடை
மறுவில் வெண்குடை மன்னவன் காதலஞ்
சிறுவன் தன்மையைச் சேர்ந்தறிந் திவ்வழிக்
குறுக வம்மெனக் கூனியைப் போக்கினாள். ௩௨௮

358 நெஞ்சி னைத்தினி யாளையென் நீர்மையால்
வஞ்சித் தேனென வஞ்சியங் கொம்பனாள்
பஞ்சி மெல்லடிப் பல்கல னார்ப்பச்சென்(று)
இஞ்சி மாநகர்த் தன்னிடம் எய்தினாள். ௩௨௯

359 தானுந் தன்னுணர் விற்றளர்ந் தாற்றவும்
மானி னோக்கி வரும்வழி நோக்கிநின்(று)
ஆனி யம்பல ஆசையிற் செல்லுமே
தேனி யம்புமோர் தேம்பொழிற் பள்ளியே. ௩௩௦

வேறு

360 மட்டவிழ் கோதை வாளன வுண்கண் மயிலன்னாள்
கட்டழ லெவ்வங் கைம்மிக நீக்கிக் களிகூர
விட்டகல் வாற்றா வேட்கையி னோடும் பொழுதிப்பாற்
பட்டதை யெல்லாம் பல்லவர் கேட்கப் பகர்குற்றேன். ௩௩௧

361 கூற்றம் அஞ்சுங் கொன்னுனை யெஃகின் இளையானும்
மாற்றம் அஞ்சும் மன்னிய கற்பின் மடவாளும்
போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத் துப்பிற் சீவகன் என்றே பெயரிட்டார். ௩௩௨

362 மேகம் ஈன்ற மின்னனை யாள்தன் மிளிர்பைம்பூண்
ஆகம் ஈன்ற அம்முலை யின்பா லமிர்தேந்தப்
போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்
மாகம் ஈன்ற மாமதி யன்னான் வளர்கின்றான். ௩௩௩

363 அம்பொற் கொம்பின் ஆயிழை ஐவர் நலனேம்பப்
பைம்பொற் பூமிப் பல்கதிர் முத்தார் சகடம்முஞ்
செம்பொற் றேரும் வேழமும் ஊர்ந்து நிதிசிந்தி
நம்பன் செல்லும் நாளினும் நாளும் நலமிக்கே. ௩௩௪

364 பல்பூம் பொய்கைத் தாமரை போன்றும் பனிவானத்(து)
எல்லார் கண்ணும் இன்புற ஊரும் மதிபோன்றும்
கொல்லுஞ் சிங்கக் குட்டியும் போன்றிவ் வுலகேத்தச்
செல்லும் மன்னே சீவகன் தெய்வப் பகைவென்றே. நந௫

365 மணியும் முத்தும் மாசறு பொன்னும் பவளமும்
அணியும் பெய்யும் மாரியின் ஏற்பார்க் கவைநல்கிக்
கணிதம் இல்லாக் கற்பகங் கந்துக் கடனொத்தான்
இணைவே லுண்கண் நந்தையும் இன்பக் கொடியொத்தாள்.

366 சாதிப் பைம்பொன் தன்னொளி வௌவித் தகைகுன்றா
நீதிச் செல்வம் மேன்மேல் நந்தி நிறைவெய்திப்
போதிச் செல்வம் பூண்டவர் ஏத்தும் பொலிவினால்
ஆதிக் காலத் தந்தணன் காதல் மகனொத்தான். நந௭

வேறு

367 நனந்தலை யுலகின் மிக்க நலனுறு மகளிர் தங்கள்
மனந்தளை பரிய நின்ற மதலைமை யாடு கென்றே
பொனங்கொடி யிறைஞ்சி நின்று பூமகள் புலம்பி வைக
அனங்கனுக் கவலஞ் செய்யும் அண்ணனற் றுயுரைத்தாள்.

368 முழவெனத் திரண்ட திண்டோள் மூரிவெஞ் சிலையி னானும்
அழலெனக் கனலும் வாட்கண் அவ்வளைத் தோளி னாளும்
மழலையாழ் மருட்டுந் தீஞ்சொல் மதலையை மயிலஞ் சாயற்
குழைமுக ஞானம் என்னுங் குமரியைப் புணர்க்க லுற்றார்.

369 அரும்பொனும் மணியும் முத்துங் காணமுங் குறுணி யாகப்
பரந்தெலாப் பிரப்பும் வைத்துப் பைம்பொன்செய் தவிசி னுச்சி
இருந்துபொன் னோலை செம்பொன் னூசியால் எழுதி யேற்பத்
திருந்துபொற் கண்ணி யாற்குச் செல்வியைச் சேர்த்தி னாரே.

370 நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி நன்னூல்
ஏமுத லாய வெல்லாப் படைக்கலத் தொழிலும் முற்றிக்
காமனுங் கனிய வைத்த புலங்கரை கண்டு கண்ணார்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலகம் ஒத்தான்.

371 மின்றெளித் தெழுதி யன்ன விளங்குநுண் ணுசுப்பின் நல்லார்
பொன்றெளித் தெழுதி யன்ன பூம்புறப் பசலை மூழ்கிக்

குன்றொளித் தொழிய நின்ற குங்குமத் தோளி னாற்குக்
கன்றொளித் தகல வைத்த கறவையிற் கனிந்து நின்றார். ௩௪௨

372 விலைபகர்ந் தல்குல் விற்கும் வேலினும் வெய்ய கண்ணார்
முலைமுகந் திளையர் மார்பம் முரிவில ரெழுதி வாழுங்
கலையிகந் தினிய சொல்லார் கங்குலும் பகலு மெல்லாஞ்
சிலைபிகந் துயர்ந்த திண்டோள் சீவகற் கரற்றி யாற்றார். ௩௪௩

373 வான்சுவை யமிர்த வெள்ளம் வந்திவண் டொக்க தென்னத்
தான்சுவைக் கொண்ட தெல்லாந் தணப்பறக் கொடுத்த பின்றை
தேன்சுவைத் தீரற்றும் பைந்தார்ச் சீவக குமர னென்ற [த்
ஊன்சுவைத் தொளிறும் வேலாற் குறுதியொன் றுரைக்க லுற்றான்.

374 நூல்நெறி வகையி னோக்கி நுண்ணிதி னுழைந்து தீமைப்
பால்நெறி பலவும் நீக்கிப் பரிதியங் கடவு ளன்ன
கோன்நெறி தழுவி நின்ற குணத்தொடு புணரின் மாதோ
நால்நெறி வகையி னின்ற நல்லுயிர்க் கமிர்த மென்றான். ௩௪௫

375 அறிவினாற் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி இன்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர ஐவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலுள் நின்றார். ௩௪௬

376 கூற்றுவன் கொடிய னாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி னுலகம் நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்றாம் அளியமோஒ பெரிய மேகாண்.

377 பேரஞ ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்றாம் அதன்பயன் கோடல் தேற்றாம்
ஒருமைம் பொறியு மோம்பி உளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த எல்லாம். ௩௪௮

378 தழங்குரல் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்னர் இருளறச் செப்பி னாலும்
முழங்கழல் நரகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி யுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த லாமோ.

379 பவழவாய்ச் செறுவு தன்னுள் நித்திலம் பயில வித்திக்
குழவிநா றெழுந்து காளைக் கொழுங்கதிர் ஈன்று பின்னைக்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ் கேட்டிரேற் பிணிசெய் பன்மா
உழவிர்காள் மேயுஞ் சீல வேலியுய்த் திடுமின் என்றான்.

380 சூழ்கதிர் மதிய மன்ன சுடர்மணிப் பூணி னானும்
வீழ்தரு கதியி னீங்கி விளங்குபொன் னுலகத் துய்க்கும்
ஊழ்வினை துரத்த லானும் உணர்வுசென் றெறிந்த லானும்
ஆழ்கடற் புணையி னன்ன அறிவனைச் சரண டைந்தான்.

381 காட்சிநன் னிலையின் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சிசா லொழுக்க மென்னும் வயிரத்தாழ் கொளுவிப் பொல்லா
மாட்சியில் கதிக ளெல்லாம் அடைத்தபின் வரம்பிலின்பத்(து)
ஆட்சியி லுலக மேறத் திறந்தனன் அலர்ந்த தாரான். ௩௫௨

382 நல்லறத் திறைவ னாகி நால்வகைச் சரண மெய்தித்
தொல்லறக் கிழமை பூண்ட தொடுகழற் காலி னாற்குப்
புல்லற நெறிக்கண் நின்று பொருள்வயிற் பிழைத்த வாறும்
இல்லறத் தியல்பு மெல்லாம் இருளறக் கூறி யிட்டான். ௩௫௩

383 எரிமுயங் கிலங்கு வைவேல் இளையவர் குழாத்தி னீங்கித்
திருமுயங் கலங்கல் மார்பிற் சீவகற் கொண்டு வேறா
விரிமலர்க் கண்ணி கட்டி விழைதக வேய்ந்த போலுந்
தெரிமலர்க் காவு சேர்ந்து பிறப்பினைத் தெருட்ட லுற்றான்.

384 பூவையுங் கிளியு மன்னர் ஒற்றெனப் புணர்க்குஞ் சாதி
யாவையு மின்மை யாராய்ந் தந்தளிர்ப் பிண்டி நீழற்
பூவியற் றவிசி னுச்சிப் பொலிவினோ டிருந்த போழ்தில்
ஏவியல் சிலையி னானை யிப்பொருள் கேண்மோ என்றான்.

385 வையக முடைய மன்னன் சச்சந்தன் அவற்குத் தேவி
பைவிரி பசும்பொ னல்குற் பைந்தொடி விசயை யென்பாள்
செய்கழல் மன்னன் தோர்ந்து தேவியைப் பொறியிற் போக்கி
மையல்கொள் நெஞ்சிற் கல்லா மந்திரி விழுங்கப் பட்டான்.

386 புலம்பொடு தேவி போகிப் புகற்கருங் காடு நண்ணி
வலம்புரி யுலகம் விற்கு மாமணி யீன்ற தென்ன
இலங்கிழை சிறுவன் தன்னைப் பயந்துபூந் தவிசி னுச்சி
நலம்புரி நங்கை வைத்து நல்லறங் காக்க என்றாள். ௩௫௭

387 வானத்தின் வழுக்கித் திங்கட் கொழுந்துமீன் குழாங்கள் சூழக்
கானத்திற் கிடந்த தேபோற் கடலக முடைய நம்பி
தானத்து மணியுந் தானும் இரட்டுறத் தோன்றி னானே
ஊனத்திற் றீர்ந்த சீர்த்தி உத்திரட் டாதி யானே. ௩௫௮

388 அருந்தவன் முந்து கூற அலங்கல்வேல் நாய்கன் சென்று
பொருந்துபு சிறுவற் கொண்டு பொலிவொடு புகன்று போகத்
திருந்திய நம்பி யாரத் தும்மினன் தெய்வம் வாழ்த்திற்(று)
அரும்பொனாய் கொண்மோஎன்றானலைகடல் விருப்பிற்கொண்டாள்.

389 கரியவன் கன்னற் கன்று பிறப்பினைத் தேற்றி யாங்கப்
பெரியவன் யாவ னென்ன நீயெனப் பேச லோடும்
சொரிமலர்த் தாரும் பூணும் ஆரமுங் குழையுஞ் சோரத்
திருமலர்க் கண்ணீர் சிந்தத் தெருமந்து மயங்கி வீழ்ந்தான்.

390 கற்பகங் கலங்கி வீழ்ந்த வண்ணம்போற் காளை வீழச்
சொற்பகர் புலவன் வல்லே தோன்றலைச் சார்ந்து புல்லி
நற்பல குழீஇய தம்மால் நவையறத் தேற்றத் தேறிக்
கற்புனை திணிதிண் தோளான் கவலைநீர்க் கடலுட் பட்டான்.

391 இனையைநீ யாய தெல்லாம் எம்மனோர் செய்த பாவம்
நினையல்நீ நம்பி யென்று நெடுங்கணீர் துடைத்து நீவிப்
புனையிழை மகளிர் போலப் புலம்பல்நின் பகைவன் நின்றான்
நினைவெலாம் நீங்கு கென்ன நெடுந்தகை தேறி னானே. ௩௬௨

392 மலைபக இடிக்குஞ் சிங்க மடங்கலின் முழங்கி மாநீர்
அலைகடற் றிரையிற் சீறி அவனுயிர் பருக லுற்றுச்
சிலையொடு பகழி யேந்திக் கூற்றெனச் சிவந்து தோன்றும்
இலையுடைக் கண்ணி யானை யின்னணம் விலக்கி னானே. ௩௬௩

393 வேண்டுவல் நம்பி யானோர் விழுப்பொரு ளென்று கூற
ஆண்டகைக் குரவிர் கொண்மின் யாதுநீர் கருதிற் றென்ன
யாண்டுநே ரெல்லை யாக அவன்றிறத் தழற்சி யின்மை
வேண்டுவலென்று சொன்னான் வில்வலான்அதனைநேர்ந்தான்.

394 வெவ்வினை வெகுண்டு சாரா விழுநிதி யமிர்தம் நன்னீர்
கௌவிய எஃகி னின்ற கயக்கமில் நிலைமை நோக்கி
அவ்விய மகன்று பொங்கும் அழல்படு வெகுளி நீக்கி
இவ்விய லொருவற் குற்ற திற்றெனச் செப்பு கின்றான்.

395 வானுறை வெள்ளி வெற்பின் வாரண வாசி மன்னன்
ஊனுறை பருதி வெள்வேல் உலோகமா பால னென்பான்
தேனுறை திருந்து கண்ணிச் சிறுவனுக் கரசு நாட்டிப்
பானிறக் குருகி னுய்ந்து பண்ணவர் படிவங் கொண்டான்.

396 வெஞ்சினங் குறைந்து நீங்க விழுத்தவந் தொடங்கி நோற்கும்
வஞ்சமில் கொள்கை யாற்குப் பாவம்வந் தடைந்த தாகக்
குஞ்சர முழங்கு தீயிற் கொள்கையின் மெலிந்திம் மூதூர்
மஞ்சுதோய் குன்ற மன்ன மாடவீட் டகம்பு குந்தான். ௩௯௭

397 உரைவிளை யாமை மைந்தன் கேட்கிய உவந்து நோக்கி
வரைவிளை யாடு மார்பன் யாரவன் வாழி யென்ன
விரைவிளை யாடுந் தாரோய் யானென விரும்பித் தீம்பால்
திரைவிளை யமிர்த மன்ன கட்டுரை செல்க என்றான். ௩௯௮

398 பூத்தின்று புகன்று சேதாப் புணர்முலை பொழிந்த தீம்பால்
நீத்தறச் செல்ல வேவித் தட்டஇன் னமிர்தம் உண்பான்
பாத்தரும் பசும்பொற் றலம் பரப்பிய பைம்பொற் பூமி
எத்தருந் தவிசில் நம்பி தோழரோ டேறி னானே. ௩௯௯

399 புடையிரு குழையு மின்னப் பூந்துகில் செறிந்த அல்குல்
நடையறி மகளிர் ஏந்த நல்லமிர் துண்ணும் போழ்தின்
இடைகழி நின்ற என்னை நோக்கிப்போந் தேறு கென்றான்
கடல்கெழு பரிதி யன்ன பொற்கலத் தெனக்கு மிட்டார்.

400 கைகவி நறுநெய் பெய்து கன்னலங் குடங்கள் கூட்டிப்
பெய்பெயென் றுரைப்ப யானும் பெருங்கடல் வெள்ளிக்குன்றம்
பெய்துதூர்க் கின்ற வண்ணம் விலாப்புடை பெரிதும் வீங்க
ஐயன தருளி னல்யான் அந்தணர் தொழிலே னானேன். ௩௭௧

401 சுரும்புடை யலங்கல் மாலைச் சுநந்தையுந் துணைவன் தானும்
விரும்பினர் எதிர்கொண் டோம்ப வேழவெந் தீயின் நீங்கி
இருந்தனென் ஏம முந்நீ ரெறிசுற வுயர்த்த தேர்ன்றற்
கரும்புடைக் காளை யன்ன காளைநின் வலைப்பட் டென்றான்.

402 நிலம்பொறுக் கலாத செம்பொன் நீள்நிதி நுந்தை யில்லம்
நலம்பொறுக் கலாத பிண்டி நான்முகன் தமர்கட் கெல்லாம்
உலம்பொறுக் கலாத தோளா யாதலா லூடு புக்கேன்
கலம்பொறுக் கலாத சாய லவருழை நின்னைக் கண்டேன்.

403 ஐயநிற் கண்ணிற் காண யானைத்தீ யதகங் கண்ட
பையணல் நாகம் போல வட்கயான் பெரிதும் உட்கித்
தெய்வங்கொ லென்று தேர்வேற் கமிர்தலாய் நிமிர்ந்த தேபோல்
மொய்குரல் முரசம் நாணுந் தழங்குரல் முழங்கக் கேட்டேன்.

404 கோட்டிளந் திங்கள் சூழ்ந்து குலவிய திருவிற் போல
மோட்டொளி முத்தஞ் சூழ்ந்த முருகுகொப் புளிக்குந் தாரோய்
கேட்டளப் பரிய சொல்லுங் கிளரொளி வனப்பும் நின்னைச்
சேட்டிளஞ் சிங்க மன்னாய் சாதகஞ் செய்த என்றான். ௩௭௫

405 கோளியங் குழுவை யன்ன கொடுஞ்சிலை யுழவன் கேட்டே
தாளியல் தவங்கள் தாயாத் தந்தைநீ யாகி யென்னை
வாளியங் குருவப் பூணோய் படைத்தனை வாழி யென்ன
மீளியங் களிற னாயான் மெய்ந்நெறி நிற்பல் என்றான். ௩௭௬

406 மறுவற மனையின் நீங்கி மாண்தவஞ் செய்வ லென்றால்
பிறவற மல்ல பேசார் பேருணர் வுடைய நீரார் [ன்
துறவறம் புணர்க என்றே தோன்றல்தாள் தொழுது நின்றா
நறவற மலர்ந்த கண்ணி நன்மணி வண்ண னன்னான். ௩௭௭

407 கைவரை யன்றி நில்லாக் கடுஞ்சின மடங்க லன்னான்
தெவ்வரைச் செருக்கு நீதி மனத்தகத் தெழுதிச் செம்பொற்
பைவிரி யல்கு லாட்கும் படுகடல் நிதியின் வைகும்
மைவரை மார்பி னாற்கும் மனமுறத் தேற்றி யிட்டான். ௩௭௮

408 அழலுறு வெண்ணெய் போல அகங்குழைந் துருகி யாற்றாள்
குழலுறு கிளவி சோர்ந்து குமரனைத் தமிய னாக
நிழலுறு மதிய மன்னாய் நீத்தியோ எனவும் நில்லான்
பழவினை பரிய நோற்பான் விஞ்சையர் வேந்தன் சென்றான்.

2. கோவிந்தையார் இலம்பகம்

409 ஆர்வ வேரரிந் தச்ச ணந்திபோய்
வீரன் தாள்நிழல் விளங்க நோற்றபின்
மாரி மொக்குளின் மாய்ந்து விண்டொழச்
சோர்வில் கொள்கையான் தோற்றம் நீங்கினான். க

410 நம்பன் இத்தலை நாக நன்னகர்ப்
பைம்பொன் ஓடைசூழ் பரும யானையும்
செம்பொன் நீள்கொடித் தேரும் வாசியும்
வெம்ப வூர்ந்துலாம் வேனி லானினே. உ

வேறு

411 கலையின தகலமும் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்
மலையினின் அகலிய மார்ப னல்லதிவ்
வுலகினில் இலையென ஒருவ னாயினான். ங

வேறு

412 நாம வென்றிவேல் நகைகொள் மார்பனைக்
காம னேயெனக் கன்னி மங்கையர்
தாம ரைக்கணாற் பருகத் தாழ்ந்துலாங்
கோம கன்திறத் துற்ற கூறுவாம். ச

413 சில்லம் போதின்மேற் றிரைந்து தேனுலாம்
முல்லை காரெனப் பூப்ப மொய்ந்நிரை
புல்லு கன்றுளிப் பொழிந்து பால்படுங்
கல்லென் சும்மையோர் கடலின் மிக்கதே. ரு

414 மிக்க நாளினால் வேழ மும்மதம்
உக்க தேனினோ டூறி வார்சுனை
ஒக்க வாய்நிறைந் தொழுகு குன்றின்மேல்
மக்கள் ஈண்டினார் மடங்கல் மொய்ம்பினார். சு

415 மன்ன வன்னிரை வந்து கண்ணுறும்
இன்ன நாளினாற் கோடும் நாமெனச்
சொன்ன வாயுளே ஒருவன் புட்குரல்
முன்னங் கூறினான் முழுது ணர்வினான். எ

416 அடைதும் நாம்நிரை அடைந்த காலையே
குடையும் பிச்சமும் ஒழியக் கோன்படை
உடையும் பின்னரே ஒருவன் தேரினால்
உடைதுஞ் சுடுவிற்றேன் உடைந்த வண்ணமே. அ

வேறு

417 என்று கூறலும் ஏழை வேட்டுவீர்
ஒன்று தேரினால் ஒருவன் கூற்றமே
என்று கூறினும் ஒருவன் என்செயும்
இன்று கோடும்நாம் எழுகென் றேகினார். கூ

418 வண்டு மூசறு நறவம் ஆர்ந்தவர்
தொண்ட கப்பறை துடியொ டார்த்தெழ
விண்டு தெய்வதம் வணங்கி வெல்கென
மண்டி னார்நிரை மணந்த காலையே. க0

419 பூத்த கோங்குபோற் பொன்சு மந்துளார்
ஆய்த்தி யர்நலக் காசெல் தூணனான்
கோத்த நித்திலக் கோதை மார்பினான்
வாய்த்த அந்நிரை வள்ளு வன்சொனான். கக

420 பிள்ளை யுள்புகுந் தழித்த தாதலால்
எள்ளன் மின்நிரை யின்று நீரென
வெள்ளி வள்ளியின் விளங்கு தோணலார்
முள்கும் ஆயரும் மொய்ம்பொ டேகினார். கஉ

421 காய மீனெனக் கலந்து கானிரை
மேய வெங்தொழில் வேடர் ஆர்த்துடன்
பாயு மாரிபோற் பகழி சிந்தினார்
ஆயர் மத்தெறி தயிரி னாயினார். கங

422 குழலும் நவியமும் ஒழியக் கோவலர்
கழலக் காடுபோய்க் கன்று தாம்பரிந்(து)
உழலை பாய்ந்துலா முன்றிற் பள்ளியுள்
மழலைத் தீஞ்சொலார் மறுக வாய்விட்டார். கச

423 மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவர்
அத்த லைவ்விடின் இத்த லைவ்விடார்

உய்த்த னரென வுடைத யிர்ப்புளி
மொய்த்த தோணலார் முழுதும் ஈண்டினார். கரு

வேறு

424 வலைப்படு மானென மஞ்ஞை யெனத்தம்
முலைப்படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த
தலைப்படு தண்மலர் மாலை பிணங்க
அலைத்த வயிற்றின ராயழு திட்டார். கசு

425 எம்மனை மாரினி யெங்ஙனம் வாழ்குவிர்
நும்மனை மார்களை நோவ அதுக்கி
வெம்முனை வேட்டுவர் உய்த்தன ரோவெனத்
தம்மனைக் கன்றொடு தாம்புலம் புற்றார். கஎ

426 பாறை படுதயிர் பாலொடு நெய்பொரு(து)
ஆறு படப்பள்ளி யாகுல மாக
மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது
சேறு படுமலர் சிந்த விரைந்தே. கஅ

427 புறவணி பூவிரி புன்புலம் போகி
நறவணி தாமரை நாட்டகம் நீந்திச்
சுறவணி சூழ்கிடங் காரெயில் மூதூர்
இறையணி கேட்கவுய்த் திட்டனர் பூசல். ககூ

வேறு

428 கொடுமர எயினர் ஈண்டிக் கோட்டிமி லேறு சூழ்ந்த
படுமணி நிரையை வாரிப் பைந்துகி லருவி நெற்றி
நெடுமலை யத்தஞ் சென்றார் என்றுநெய் பொதிந்த பித்தை
வடிமல ராயர் பூசல் வளநகர் பரப்பி னாரே. உ0

வேறு

429 காசில் மாமணிச் சாமரைக் கன்னியர்
வீச மாமக ரக்குழை வில்லிட
வாச வான்கழு நீர்பிடித் தாங்கரி
ஆச னத்திருந் தான்அடல் மொய்ம்பினன். உக

430 கொண்ட வாளொடுங் கோலொடுங் கூப்புபு
சண்ட மன்னனைத் தாள்தொழு தாயிடை
உண்டொர் பூசலென் றுற்குரை யாயெனக்
கொண்ட னர்நிரை போற்றெனக் கூறினான். உ௨

431 செங்கட் புன்மயிர்த் தோல்திரைச் செம்முக
வெங்கண் நோக்கிற்குப் பாயமி லேச்சனைச்
செங்கண் தீவிழி யாற்றெழித் தான்கையுள்
அங்கட் போது பிசைந்தடு கூற்றனான். உ௩

வேறு

432 கூற்றின் இடிக்குங் கொலைவேலவன் கோவ லர்வாய்
மாற்றம் உணர்ந்து மறங்கூர்கடற் றானை நோக்கிக்
காற்றின் விரைந்து தொறுமீட்கெனக் காவல் மன்னன்
ஏற்றை யரிமான் இடிபோல இயம்பி னானே. உ௪

வேறு

433 கார்விளை மேகம் அன்ன கவுளழி கடாத்த வேழம்
போர்விளை யிவுளித் திண்டேர் புனைமயிர்ப் புரவி காலாள்
வார்விளை முரசம் விம்ம வானுலாப் போந்த தேபோல்
நீர்விளை சுரிசங் கார்ப்ப நிலம்நெளி பரந்த அன்றே. உ௫

434 காலகம் புடைப்ப முந்நீர்க் கடல்கிளர்ந் தெழுந்த தேபோல்
வேலக மிடைந்த தானை வெஞ்சின எயினர் தாக்க
வால்வளை யலற வாய்விட் டிரலையுந் துடியு மார்ப்பப்
பால்வளைந் திரவு செற்றுப் பகலொடு மலைவ தொத்தார்.

435 விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி மைந்தர்
மற்பழுத் தகன்ற மார்பத் திடங்கொண்டு வைகச் செந்நாச்
சொற்பழுத் தவர்க்கும் ஆண்மை சொல்லலாந் தன்மைத்தன்றிக்
கொற்பழுத் தெரியும் வேலார் கொடுஞ்சிலை குழைவித் தாரே.

436 வாட்படை யனுங்க வேடர் வண்சிலை வணங்க வாங்கிக் [ல்
கோட்புலி யினத்தின் மொய்த்தார் கோதிநுனைப் பகழி தம்மா
வீட்டினார் மைந்தர் தம்மை விளிந்தமா கவிழ்ந்த திண்டேர்
பாட்டரும் பகடு வீழ்ந்த பனிவரை குனிவ தொத்தே. உ௮

437 வென்றிநாங் கோடும் இன்னே வெள்ளிடைப் படுத்தென் றெண்ணி
ஒன்றியுள் வாங்கு கென்ன ஒலிகட லுடைந்த தேபோற்
பொன்தவழ் களிறு பாய்மா புனைமயிற் குஞ்சி பிச்சம்
மின்தவழ் கொடியோ டிட்டு வேற்படை யுடைந்த அன்றே.

438* பல்லினாற் சுகிர்ந்த நாரிற் பனிமலர் பயிலப் பெய்த
முல்லையங் கண்ணி சிந்தக் கால்விசை முறுக்கி ஆயர்
ஒல்லென ஒலிப்ப வோடிப் படைபுடைந் திட்ட தென்ன
அல்லலுற் றழுங்கி நெஞ்சிற் கட்டியங் காரன் ஆழ்ந்தான்.

439 வம்புகொண் டிருந்த மாதர் வனமுலை மாலைத் தேன்சோர்
கொம்புகொண் டன்ன நல்லார் கொழுங்கயற் றடங்கண் போலும்
அம்புகொண் டரசர் மீண்டார் ஆக்கொண்டு மறவர் போனார்
செம்புகொண் டன்ன இஞ்சித் திருநகர்ச் செல்வ என்றார்.

440 மன்னிரை பெயர்த்து மைந்தர் வந்தனர் கொள்க வாட்கட்
பொன்னிழை சுடரு மேனிப் பூங்கொடி யனைய பொற்பிற்
கன்னியைத் தருதும் என்று கடிமுர சியம்பக் கொட்டி
நன்னகர் வீதி தோறும் நந்தகோன் அறைவித் தானே. ௩௨

441 வெதிர்ங்குதைச் சாபங் கான்ற வெந்நுனைப் பகழி மூழ்கி
உதிர்ந்தது சேனை யீட்டங் கூற்றொடு பொருது கொள்ளுங்
கருந்தடங் கண்ணி யன்றிக் காயமா றுக எகும்
அரும்பெற லவளு மாகென் றுடவர் தொழுது விட்டார். ௩௩

442 கார்விரி மின்ன னார்மேற் காமுகர் நெஞ்சின் ஓடுந்
தேர்பரி கடாவித் தேந்தார்ச் சீவகன் அருளிற் போகித்
தார்பொலி புரவி வட்டந் தான்புகக் காட்டு கின்றாற்(கு)
ஊர்பரி வுற்ற தெல்லாம் ஒருமகன் உணர்த்தி னானே. ௩௪

443* என்றவ னுரைப்பக் கேட்டே எரிமணிக் கடகக் கையால்
ஒன்றிய தோழர் கைம்மேல் எறிந்துநக் குணர்வின் மிக்கான்
சென்றவற் கோகை யாகச் சிறப்பொடு செம்பொன் சிந்தி
நன்றிதே போல்வதில்லை நாம்தொறு மீட்டும் என்றான்.

444* சேட்டிளம் பரிதி போலுந் திருமகிழ் மாலை மார்பன்
கேட்டலுங் கனன்று வல்லே கிளரொளி நந்த திண்டேர்
நீட்டமில் செய்கை தம்மாற் பண்ணென நினைந்து சொன்னான்
தீட்டரும் பரிதி யன்ன சீவக சாமி யன்றே. ௩௬

வேறு

445 தன்பான் மனையாள் அயலான்றலைக் கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார்பெண்டிர் பாலர் பார்ப்பார்
என்பாரை யோம்பே னெனின்யானவ னாவ னென்றான். ௩௭

446 போர்ப்பண் ணமைத்து நுகம்பூட்டிப் புரவி பண்ணித்
தேர்ப்பண் ணமைத்துச் சிலைகோலிப் பகழி யாய்ந்து
கார்க்கொண்மு மின்னி னிமிர்ந்தான்கலி மான்கு ளம்பிற்
பார்க்கண் ணெழுந்த துகளாற்பகல் மாய்ந்த தன்றே. ௩௮

447 இழுதொன்று வாட்கண் இளையாரிளை யார்கண் நோக்கிற்
பழுதின்றி மூழ்கும் பகழித்தொழில் வல்ல காளை
முழுதொன்று திண்டேர் முகஞ்செய்தவன் தன்னொ டேற்கும்
பொழுதன்று போது மெனப்புள்மொழிந் தான்மொ ழிந்தான்.

448 மோட்டும் முதுநீர் முதலைக்கு வலிய துண்டேற்
காட்டுள் நமக்கு வலியாரையுங் காண்டு நாமென்(று)
வேட்டைப் பசியின் இரைகவ்விய நாக மேபோல்
வேட்டந் நிரையை விடலின்றி விரைந்த தன்றே. ௪௦

வேறு

449 கடற்படை அனுங்க வென்ற கானவ ரென்னுங் கூற்றத்(து)
இடைப்படா தோடிப் போமின் உய்யவென் றிரலை வாய்வைத்(து)
எடுத்தனர் விளியுஞ் சங்கும் விளையும் பறையுங் கோடுங்
கடத்திடை முழங்கக் காருங் கடலுமொத் தெழுந்த அன்றே.

450 கைவிசை முறுக்கி வீசுங் கொள்ளியுங் கறங்கும் ஏய்ப்பச்
செய்கழற் குரிசில் திண்டேர் விசையொடு திசைக ளெல்லாம்
ஐயென வளைப்ப வீர ரார்த்தனர் அவரும் ஆர்த்தார்
மொய்யமர் நாட்செய் தையன் முதல்விளை யாடி னானே. ௪௨

451 ஆழியான் ஊர்திப் புள்ளின் அஞ்சிறை யொலியின் நாகம்
மாழ்கிப்பை யவிந்த வண்ணம் வள்ளல்தேர் முழக்கி னானுஞ்
சூழ்துகள் மயக்கத் தானும் புளிஞருள் சுருங்கிச் சேக்கைக்
கோழிபோற் குறைந்து நெஞ்சின் அறமென மறமும் விட்டார்.

452 புள்ளொன்றே சொல்லு மென்றிப் புன்தலை வேடன் பொய்த்தான்
வெள்ளந்தேர் வளைந்த நம்மை வென்றியீங் கரிது வெய்தா

உள்ளம்போற் போதும் நாமோர் எடுப்பெடுத் துய்யவென்னு
வள்ளல்மேல் அப்பு மாரி யார்ப்பொடு சிதறி னாரே. ௪௪

453 மால்வரைத் தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக்
காலிரைத் தெழுந்து பாறக் கல்லெனப் புடைத்த தேபோல்
மேல்நிரைத் தெழுந்த வேடர் வெந்நுனை யப்பு மாரி
கோல்நிரைத் துமிழும் வில்லாற் கோமகன் விலக்கி னானே.

454 கானவர் இரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த லோடும்
ஆனிரை பெயர்ந்த ஆய ரார்த்தனர் அணிசெய் திண்டோள்
தாமினொன்று முடங்கிற் றொன்று நிமிர்ந்தது சரம்பெய் மாரி
போனின்ற என்ப மற்றப் பொருவரு சிலையி னார்க்கே. ௪௬

வேறு

455 ஐந்நூறு நூறு தலையிட்டவா றுயி ரவ்வர்
மெய்ந்நூறு நூறு நுதிவெங்கணை தூவி வேடர்
கைந்நூறு வில்லுங் கணையும்மறுத் தான்க ணத்தின்
மைந்நூறு வேற்கண் மடவார்மனம் போல மாய்ந்தார். ௪௭

456 வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றிக்
கோள்வாய் மதியம் நெடியான்விடுத் தாங்கு மைந்தன்
தோள்வாய்ச் சிலையி னொலியாற்றொறு மீட்டு மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான். ௪௮

457 ஆளற்ற மின்றி யலர்தாரவன் தோழ ரோடுங்
கோளுற்ற கோவன் நிரைமீட்டன னென்று கூற
வாளுற்ற புண்ணுள் வடிவேலெறிந் திற்ற தேபோல்
நாளுற் றுலந்தான் வெகுண்டான்நக ரார்த்த தன்றே. ௪௯

வேறு

458 இரவிதோய் கொடிகொள் மாடத் திடுபுகை தவழச் சுண்ணம்
விரவிப்பூந் தாமம் நாற்றி விரைதெளித் தாரந் தூங்கி
அரவுயர் கொடியி னான்றன் அகன்படை யனுங்க வென்ற
புரவித்தேர்க் காளை யன்ன காளையைப் பொலிக என்றார். ௫௦

459 இன்னமிர் தனைய செவ்வா யிளங்கிளி மழலை யஞ்சொற்
பொன்னவிர் சுணங்கு பூத்த பொங்கிள முலையி னார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ விடலையைக் காண ஓடி
அன்னமும் மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார். ௫௧

460 சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற்றே ரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழில் நெடுங்கண் அம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன் சேனை செம்மல்மே லெழுந்த தன்றே.

461 நூல்பொர வரிய நுண்மை நுசுப்பினை யொசிய வீங்கிக்
கால்பரந் திருந்த வெங்கட் கதிர்முலை கச்சின் வீக்கிக்
கோல்பொரச் சிவந்த கோல மணிவிரற் கோதை தாங்கி
மேல்வரல் கருதி நின்றார் விண்ணவர் மகளி ரொத்தார். ௫௩

462 ஆகமும் இடையும் அஃக அடிபரந் தெழுந்து வீங்கிப்
போகமும் பொருளு மீன்ற புணர்முலைத் தடங்கள் தோன்றப்
பாகமே மறைய நின்ற படைமலர்த் தடங்கண் நல்லார்
நாகம்விட் டெழுந்து போந்த நாகர்தம் மகளி ரொத்தார். ௫௪

463 வாளரந் துடைத்த வைவே லிரண்டுடன் மலைந்த வேபோல்
ஆள்வழக் கொழிய நீண்ட அணிமலர்த் தடங்கண் எல்லாம்
நீள்சுடர்நெறியை நோக்கும் நிரையிதழ் நெருஞ்சிப்பூப்போற்
காளை தன் தேர்செல் வீதி கலந்துடன் தொக்க அன்றே. ௫௫

464 வடகமும் துகிலும் தோடும் மாலையும் மணியும் முத்துங்
கடகமும் குழையும் பூணும் கதிரொளி கலந்து மூதூர்
இடவகை யெல்லை யெல்லாம் மின்னிரைத் திட்ட தேபோற்
படவர வல்கு லாரைப் பயந்தன மாட மெல்லாம். ௫௬

465 மாதுகு மயிலின் நல்லார் மங்கல மரபு கூறிப்
போதக நம்பி யென்பார் பூமியும் புணர்க என்பார்
தோதக மாக எங்குஞ் சுண்ணமேற் சொரிந்து தண்ணென்
தாதுகு பிணையல் வீசிச் சாந்துகொண் டெறிந்து நிற்பார். ௫௭

466 கொடையுளு மொருவன் கொல்லுங்கூற்றினுங்கொடியவாட்போர்ப்
படையுளு மொருவ னென்று பயங்கெழு பனுவல் நுண்ணூல்
நடைவலார் சொல்லிற் றெல்லாம் நம்பிசீ வகன்கட் கண்டாம்
தொடையலங் கோதை யென்று சொல்லுபு தொழுது நிற்பார்.

467 செம்மலைப் பயந்த நற்றாய் செய்தவ முடைய ளென்பார்
எம்மலைத் தவஞ்செய் தாள்கொல் எய்துவம் யாமு மென்பார்
அம்முலை யமுத மன்னார் அகம்புலர்ந் தமர்ந்து நோக்கித்
தம்முறு விழும வெந்நோய் தந்துணைக் குரைத்து நிற்பார்.

468 சினவுநர்க் கடந்த செல்வன் செம்மல ரகலம் நாளைக்
கனவினில் அருளி வந்து காட்டியாம் காண என்பார்
மனவிரி யல்கு லார்தம் மனத்தொடு மயங்கி யொன்றும்
வினவுந ரின்றி நின்று வேண்டுவ கூறு வாரும். கூ௦

469 விண்ணகத் தளர்கொல் மற்றிவ் வென்றிவேற் குரிசி லொப்பார்
மண்ணகத் திவர்கள் ஒவ்வார் மழகளி றனைய தோன்றல்
பண்ணகத் தனைய சொல்லார் நன்னலம் பருக வேண்டி
அண்ணலைத் தவத்திற் றந்தார் யார்கொலோ அளியர் என்பார்.

470 வட்டுடைப் பொலிந்த தானை வள்ளலைக் கண்ட போழ்தே
பட்டுடை சூழ்ந்த காசு பஞ்சிமெல் லடியைச் சூழ
அட்டரக் கனைய செவ்வாய் அணிநலங் கருகிக் காமக்
கட்டழல் எறிப்ப நின்றார் கைவளை கழல நின்றார். கூஉ

471 வார்செலச் செல்ல விம்மும் வனமுலை மகளிர் நோக்கி
ஏர்செலச் செல்ல ஏத்தித் தொழுதுதோள் தூக்க இப்பாற்
பார்செலச் செல்லச் சிந்திப் பைந்தொடி சொரிந்த நம்பன்
தேர்செலச் செல்லும் வீதி நீர்செலச் செல்லும் அன்றே. கூ௩

472 வாள்முகத் தலர்ந்த போலு மழைமலர்த் தடங்கண் கோட்டித்
தோள்முதற் பசலை தீரத் தோன்றலைப் பருகு வார்போல்
நாண்முதற் பாசந் தட்ப நடுங்கினர் நிற்ப நில்லான்
கோள்முகப் புலியோ டொப்பான் கொழுநிதிப் புரிசை புக்கான்.

473 பொன்நுகம் புரவி பூட்டு விட்டுடன் பந்தி புக்க
மன்னுக வென்றி யென்று மணிவள்ளம் நிறைய வாக்கி
இன்மதுப் பலியும் பூவுஞ் சாந்தமும் விளக்கும் ஏந்தி
மின்நகு செம்பொற் கொட்டில் விளங்குதேர் புக்க தன்றே.

474 இட்டவுத் தரியம் மெல்லென் இடைசுவல் வருத்த ஒல்கி
அட்டமங் கலமும் ஏந்தி ஆயிரத் தெண்மர் ஈண்டிப்
பட்டமுங் குழையும் மின்னப் பல்கலன் ஒலிப்பச் சூழ்ந்து
மட்டவிழ் கோதை மாதர் மைந்தனைக் கொண்டு புக்கார்.

475 தாயுயர் மிக்க தந்தை வந்தெதிர் கொண்டு புக்குக்
காய்கதிர் மணிசெய் வெள்வேற் காளையைக் காவல் ஓம்பி
ஆய்கதிர் உமிழும் பைம்பூண் ஆயிரச் செங்க ணான்தன்
சேயுயர் உலகம் எய்தி யன்னதோர் செல்வம் உற்றார். கூஎ

476 தகைமதி யெழிலை வாட்டுந் தாமரைப் போதின் அங்கட்
புகைநுதி அழல வாட்கட் பொன்னனாள் புல்ல நீண்ட
வணிகமலி வரைசெய் மார்பின் வள்ளலைக் கண்டு வண்தார்த்
தொகைமலி தொறுவை யாளுந் தோன்றல்மற் றின்னகூறும்.

477 கேட்டிது மறக்க நம்பி கேள்முதற் கேடு சூழ்ந்த
நாட்டிறை விசயை யென்னும் நாறுபூங் கொம்ப னாளை
வேட்டிறைப் பார மெல்லாங் கட்டியங் காரன் தன்னைப்
பூட்டிமற் றவன்ற னாலே பொறிமுதல் அடர்க்கப் பட்டான்.

478 கோல்இழுக் குற்ற ஞான்றே கொடுமுடி வரையொன் றேறிக்
கால்இழுக் குற்று வீழ்ந்தே கருந்தலை களைய லுற்றேன்
மால்வழி யுள தன் றாயின் வாழ்வினை முடிப்ப லென்றே
ஆலம்வித் தனைய தெண்ணி அழிவினுள் அகன்று நின்றேன்.

479 குலத்தொடு முடிந்த கோன்தன் குடிவழி வாரா நின்றேன்
நலத்தகு தொறுவின் உள்ளேன் நாமங்கோ விந்தன் என்பேன்
இலக்கணம் அமைந்த கோதா வரியென இசையிற் போந்த
நலத்தகு மனைவி பெற்ற நங்கைகோ விந்தை யென்பாள். ௭௧

480 வம்புடை முலையி னாள்என் மடமகள் மதர்வை நோக்கம்
அம்படி யிருத்தி நெஞ்சத் தழுத்தியிட் டனைய தொப்பக்
கொம்படு நுசுப்பி னாளைக் குறையிரந் துழந்து நின்ற
நம்படை தம்மு ளெல்லாம் நகைமுகம் அழிந்து நின்றேன்.

481 பாடகஞ் சுமந்த செம்பொற் சிலம்படிப் பரவை யல்குற்
சூடகம் அணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணி னாளை
ஆடகச் செம்பொற் பாவை யேழுடன் தருவல் ஐய
வாடலில் வதுவை கூடி மணமக னாகை என்றான். ௭௩

வேறு

482 வெண்ணெய்போன் றூறினியள் மேம்பால்போற் றீஞ்சொல்லள்
உண்ணா உருக்கிய ஆன்நெய்போல் மேனியள்
வண்ணா வனமுலை மாதர் மடநோக்கி
கண்ணுங் கருவிளம் போதிரண்டே கண்டாய். ௭௪

483 சேதா நறுநெய்யுந் தீம்பால் சுவைத்தயிரும்
பாதால மெல்லாம் நிறைத்திடுவல் பைந்தாரோய்

போதார் புனைகோதை சூட்டுன் அடித்திசை
யாதாவ தெல்லாம் அறிந்தருளி என்றான். எரு

484 குலம்நினையல் நம்பி கொழுங்கயற்கண் வள்ளி
நலன்நுகர்ந் தானன்றே நறுந்தார் முருகன்
நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரை நப்பின்னை
இலவலர்வா யின்னமிர்தம் எய்தினான் அன்றே. எசு

வேறு

485 கன்னியர் குலத்தின் மிக்கார் கதிர்முலைக் கன்னி மார்பம்
முன்னினர் முயங்கி னல்லால் முறிமிடைப் படலை மாலைப்
பொன்னிழை மகளிர் ஒவ்வா தவரைமுன் புணர்தல் செல்லார்
இன்னதால் முறைமை மாந்தர்க் கெனமனத் தெண்ணி னானே.

486 கோட்டிளங் களிறு போல்வான் நந்தகோன் முகத்தை நோக்கி
மோட்டிள முலையி னாள்நின் மடமக ளெனக்கு மாமான்
சூட்டொடு கண்ணி யன்றே என்செய்வான் இவைகள் சொல்லி
நீட்டித்தல் குணமோ என்று நெஞ்சகங் குளிர்ப்பச் சொன்னான்.

487 தேன்சொரி முல்லைக் கண்ணிச் செந்துவ ராடை ஆயர்
கோன்பெரி துவந்து போகிக் குடைத்தயிர் குழுமப் புக்கு
மான்கறி கற்ற கூழை மௌவல்சூழ் மயிலைப் பந்தர்க்
கான்செறி முல்லைத் தாரான் கடிவினை முடிக என்றான். எகூ

488 கனிவளர் கிளவி காமர் சிறுநுதல் புருவம் காமன்
குனிவளர் சிலையைக் கொன்ற குவளைக்கண் கயலைக் கொன்ற
இனியுள ரல்லர் ஆய ரெனச்சிலம் பிரங்கத் தந்து
பனிவளர் கோதை மாதர் பாவையைப் பரவி வைத்தார். அ0

489 நாழியுள் இழுது நாகான் கன்றுதின் றொழிந்த புற்றோய்த்(து)
ஊழிதொ றுவுந் தோழும் போன்றுடன் மூக்க என்று
தாழிருங் குழலி னாளை நெய்தலைப் பெய்து வாழ்த்தி
மூழைநீர் சொரிந்து மொய்கொள் ஆய்ச்சியர் ஆட்டி னாரே.

490 நெய்விலைப் பசும்பொற் றோடும் நிழல்மணிக் குழையும் நீக்கி
மைவிரி குழலி னாளை மங்கலக் கடிப்புச் சேர்த்திப்
பெய்தனர் பிணையல் மாலை ஓரிலைச் சாந்து பூசிச்
செய்தனர் சிறுபுன் கோலம் தொறுத்தியர் திகைத்து நின்றார்.

491 ஏறங்கோள் முழங்க ஆய ரெடுத்துக்கொண் டேகி மூதூர்ச்
சாறெங்கும் அயரப் புக்கு நந்தகோன் தன்கை ஏந்தி
வீறுயர் கலச நன்னீர் சொரிந்தனன் வீரன் ஏற்றான்
பாறுகொள் பரிதி வெள்வேற் பதுமுக குமரற் கென்றே. ௮௩

492 நலத்தகை யவட்கு நாகான் ஆயிரத் திரட்டி நன்பொன்
இலக்கணப் பாவை யேழுங் கொடுத்தனன் போக இப்பால்
அலைத்தது காமன் சேனை அருநனை யம்பு மூழ்க
முலைக்குவட் டிடைப்பட் டாற்றான் முத்துக முயங்கி னானே.

வேறு

493 கள்வாய் விரிந்த கழுநீர்ப்பிணைந் தன்ன வாகி
வெள்வேல் மிளிர்ந்த நெடுங்கண்விரை நாறு கூந்தல்
முள்வா யெயிற்றா றமிர்தம்முனி யாது மாந்திக்
கொள்ளாத இன்பக் கடற்பட்டனன் கோதை வேலான். ௮௫

494 தீம்பாற் கடலைத் திரைபொங்கக் கடைந்து தேவர்
தாம்பாற் படுத்த அமிர்தோதட மாலை வேய்த்தோள்
ஆம்பாற் குடவர் மகளோஎன் றரிவை நைய
ஓம்பா ஒழுக்கத் துணர்வொன்றின னாயி னானே. ௮௬

3. காந்தருவதத்தையார் இலம்பகம்

495 இங்கிவர்கள் இவ்வா றிருந்தினிது வாழச்
சங்குதரு நீள்நிதியஞ் சாலவுடை நாய்கன்
பொங்குதிரை மீதுபொரு மால்களிறு போன்றோர்
வங்கமொடு போகிநிதி வந்துதர லுற்றான். க

496 மின்னெழுகு சாயல்மிகு பூண்பதுமை கேள்வன்
கொன்னெழுகு வேலுயவ தத்தன்குளிர் தூங்குந்
தன்வழிய காளைசிறி தத்தனவன் தன்போற்
பொன்னெழுகு குன்றிலுறை போர்ப்புலியொ டொப்பான்.

497 இம்மியன நுண்பொருள்கள் ஈட்டிநிதி யாக்கிக்
கம்மியரும் ஊர்வர்களி றோடைநுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சால்கென்(று)
உம்மைவினை நொந்துபுலந் தூடலுணர் வன்றே. ௩

498 உள்ளமுடை யான்முயற்சி செய்யஒரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலஇனி தன்றே. ௪

499 செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லைஇருந் தேயுயிரும் உண்ணும்
ஐயமிலை இன்பம்அற னோடெவையும் ஆக்கும்
பொய்யில்பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே. ௫

500 தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுலம் நையஅத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கள்கடன் என்றெழுந்து நேர்ந்தான். ௬

501 மோதுபடு பண்டமுனி யாதுபெரி தேற்றி
மாதுபடு நோக்கினவர் வாட்கண்வடு வுற்ற
தாதுபடு தார்கெழிய தங்குவரை மார்பன்
கோதுபட வில்லகுறிக் கொண்டெழுந்து போந்தான். ௭

502 வானமுற நீண்டபுகழ் மாரிமழை வள்ளல்
தானமென வேண்டுநர்கள் வேண்டுவன நல்கி

நானமிக நாறுகமழ் குஞ்சியவன் ஏறி
ஊனமெனு மின்றியினி தோடுகஇ தென்றான். ௮

503 ஆடுகொடி யுச்சியணி கூம்பின்உயர் பாய்மூன்(று)
ஈடுபடச் செய்திளையர் ஏத்தஇமிழ் முந்நீர்க்
கோடுபறை யார்ப்பக்கொழுந் தாட்பவழங் கொல்லை
ஓடுகளி றொப்பஇனி தோடியதை அன்றே. ௯

504 திரைகள்தருஞ் சங்குகலந் தாக்கித்திரள் முத்தங்
கரைகடலுட் காலக்கணை பின்னொழிய முந்நீர்
வரைகிடந்து கீண்டதெனக் கீறிவளர் தீவின்
நிரையிடறிப் பாய்ந்திரிய ஏகியதை மாதோ. ௧௦

505 மின்னுமிளிர் பூங்கொடியும் மென்மலரும் ஒப்பார்
அன்னமொடு தோகைநடை சாயலமிர் தன்னார்
துன்னியினி தாகவுறை துப்புரவின் மிக்க
நன்மையுடை நன்பொன்விளை தீவமடைந் தஃதே. ௧௧

வேறு

506 தீவினுள் இழிந்து தேந்தார்ச் செம்மலுந் திருமுத் தாரம்
கோவினைக்குறிப்பிற் கண்டுகொடுத்தருள் சுமந்து செம்பொற்
பூவினுள் ளவளை யன்ன பொங்கிள முலையி னார்தம்
நாவினுள் அமிர்தங் கேட்டு நாடகம் நயந்து சின்னாள். ௧௨

507 புணர்ந்தவர் பிரித லாற்றாப் போகம்ஈன் றளிக்குஞ் சாயல்
அணங்கினுக் கணங்க னாரோ டறுமதி கழிந்த பின்றைக்
கொணர்ந்தன பண்டம் விற்ற கொழுநிதிக் குப்பை யெல்லாம்
உணர்ந்துதன் மதலை யேற்றி ஒருப்படுத் தூர்க்கு மீள்வான்.

508 அரசனைக் கண்டு கண்ணுற் றவர்களை விடுத்து நன்னாள்
இரெவதி வியாழ வோரை யிருஞ்சிலை முளைப்ப ஏறிக்
கரைகடல் அழுவம் நீந்திக் காற்றினுங் கடுகி ஐஞ்ஞூ(று)
உரையுடைக் காதம் ஓடி யோசனை யெல்லை சார்ந்தே. ௧௪

509 களித்தலை மயங்கி இப்பா லிருத்தலும் கலந்தோர் காற்றிற்
றுளித்தலை முகில்கள் ஈண்டித் தூங்கிருள் மயங்கி யான்று
விளித்தலைப் போல மின்னி வெடிபட முழங்கிக் கூற்றும்
ஒளித்துலைந் தொழிய வெம்பி யுரறிநின் றிடிப்ப நாய்கன். ௧௫

510 எண்டிசை வளியும் ஈண்டி எதிரெதிர் கலாவிப் பவ்வங்
கொண்டுமே லெழுவ தொப்பக் குளிறிநின் றதிர்ந்து மேகம்
தண்டுளி பளிக்குக் கோல்போற் றுரையாய்ச் சொரிந்து தெய்வங்
கொண்டதோர் செற்றம் போலுங் குலுங்கன்மின் என்று கூறும்.

511 இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானும் இன்றி நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை அரியும் எஃகாம் இருந்தழு தியாவர் உய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்கள் அன்றே.

512 ஆடகச் செம்பொற் கிண்ணத் தேந்திய அலங்கற் றெண்ணீர்
கூடகங் கொண்ட வாழ்நாள் உலந்ததேற் கொல்லும் பவ்வத்(து)
ஊடகம் புக்கு முந்நீ ரழுந்தினும் உய்வர் நல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தின் என்றான். ௧௮

513 வினையது விளைவின் வந்த வீவருந் துன்ப முந்நீர்க்
கனைகட லழுவம் நீந்திக் கண்கனிந் திரங்கல் வேண்டா
நனைமலர்ப் பிண்டி நாதன் நாண்மலர்ப் பாத மூலம்
நினைமின்கள் நீவி ரெல்லாம் நீங்குமின் அச்சம் என்றான். ௧௯

514 பருமித்த களிற னானும் பையெனக் கவிழ்ந்து நிற்பக்
குருமித்து மதலை பொங்கிக் கூம்பிறப் பாய்ந்து வல்லே
நிருமித்த வகையின் ஓடி நீர்நிறைந் தாழ்ந்த போழ்தில்
உருமிடித் திட்ட தொப்ப உள்ளவர் ஒருங்கு மாய்ந்தார். ௨௦

வேறு

515 ஓம்பிப் படைத்த பொருளும்முறு காத லாரும்
வேம்புற்ற முந்நீர் விழுங்கவ்விரை யாது நின்றான்
கூம்பிற்ற துண்டந் தழுவிக்கிடந் தான்கொ ழித்துத்
தேம்பெற்ற பைந்தா ரவனைத்திரை யுய்த்த தன்றே. ௨௧

516 நாவா யிழந்து நடுவாருமில் யாமம் நீந்திப்
போவாய் தமியே பொருளைப்பொரு ளென்று கொண்டாய்
வீவா யெனமுன் படையாய்ப்படைத் தாய்வி னையென்
பாவா யெனப்போய்ப் படுவெண்மணற் றிட்டை சேர்ந்தான்.

வேறு

517 பொரியரை ஞாழலும் புன்னையும் பூத்து
வரிதரு வண்டொடு தேனினம் ஆர்க்குந்

திருவிரி பூம்பொழிற் செவ்வனஞ் சேர்ந்தாங்(கு)
அருவரை மார்பன் அவலித் திருந்தான். ௨௩

518 ஓடுந் திரைகள் உதைப்ப உருண்டுருண்(டு)
ஆடும் அலவனை அன்னம் அருள்செய
நீடிய நெய்தலங் கானல் நெடுந்தகை
வாடி யிருந்தான் வருங்கலம் நோக்கா. ௨௪

519 ஆளிய மொய்ம்பன் இருந்தஅப் பூம்பொழிற்
றுள்வலி யானோர் மகனைத் தலைப்பட்டுக்
கேளிர் எனக்குற்ற கேண்மினம் நீரென்று
தோள்வலி மிக்கான் தொடர்ந்துரைக் கின்றான். ௨௫

520 கருங்கடற் போயிற்றுங் காற்றிற் கவிழ்ந்து
திருந்திய தன்பொருள் தீதுற்ற வாறும்
அரும்புணை சார்வா அவனுய்ந்த வாறும்
இருந்தவற் கெல்லாம் எடுத்து மொழிந்தான். ௨௬

521 மானும் மரனும் இரங்க மதவலி
தானுற்ற துன்பந் தரனுக் குரைத்தபின்
தேனும் அமிழ்துந் திளைத்தாங் கினியன
ஊனமில் கட்டுரைக் குள்ளங் குளிர்ந்தான். ௨௭

522 விஞ்சைகள் வல்லேன் விளிந்தநின் தோழரோ(டு)
எஞ்சிய வான்பொரு ளெல்லாம் இமைப்பினுள்
வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவன்
நெஞ்சிற் குழைந்து நினையன்மின் என்றான். ௨௮

523 உரையகங் கொள்ள உணர்த்தின னாகி
வரையகம் ஏற வலிமினம் என்னா
விரைசெலல் வெம்பரி மேழகம் ஏற்றிக்
குரைகழல் மைந்தனைக் கொண்டு பறந்தான். ௨௯

524 விசும்பிவர் மேகம் விரைவனர் போழ்ந்து
பசும்புயற் றண்துளிப் பக்கம் நனைப்ப
நயந்தனர் போகி நளிர்மலர்ச் சோலை
அசும்பிவர் சாரல் அருவரை சார்ந்தார். ௩௰

525 கண்டால் இனியன காணற் கரியன
தண்டா மரையவள் தாழுந் தகையன
கொண்டான் கொழுங்கனி கோட்டிடைத் தூங்குவ
உண்டான் அமிழ்தொத் துடம்பு குளிர்ந்தான். ௩௧

526 மழைதவழ் சோலை மலைமிசை நீண்ட
குழைதவழ் குங்குமங் கோழரை நாகம்
தழைதவழ் சந்தனச் சோலையின் னோக்கி
இழைதவழ் மார்பன் இனிதின் உவந்தான். ௩௨

527 கோதை யருவிக் குளிர்வரை மேல்நின்று
காதங் கடந்தபின் கன்னிக் கொடிமதில்
நாதன் உறைவதொர் நன்னகர் உண்டங்குப்
போதும் எழுகெனப் போயினர் சார்ந்தார். ௩௩

வேறு

528 மேகமே மிடைந்து தாழ இருள்கொண்ட வெள்ளிக் குன்றம்
மாகத்து விளங்கித் தோன்றும் வனப்புநாம் வகுக்க லுற்றால்
நாகந்தான் கரிய தொன்று கீழ்நின்று நடுங்கக் கவ்விப்
பாகமே விழுங்கப் பட்ட பால்மதி போன்ற தன்றே. ௩௪

529 துளங்குபொன்னகரின்தன்மைசொல்லலாஞ்சிறிதோர்தேவன்
விளங்குபொன் னுலகத் துள்ள துப்புர விடங்க ளெல்லாம்
அளந்துகொண் டின்பம் பூரித் தணிநக ராக்கி மேலால்
இளங்கதிர்ப் பருதி சூட்டி யியற்றிய தென்ன லாமே. ௩௫

வேறு

530 பொங்கி ஆயிரந் தாமரை பூத்தபோற்
செங்கண் ஆயிரஞ் சேர்ந்தவன் பொன்னகர்
கொங்கு தோய்குழ லாரொடுங் குன்றின்மேற்
றங்கு கின்றது போற்றகை சான்றதே. ௩௬

531 கிடங்கு சூழ்மதிற் கேழ்கிளர் பூங்கொடி
மடங்கண் நோக்கியர் வாண்முகம் போலுமென்(று)
உடங்கு வெண்மதி யுள்ளங் குளிரத்தம்
குடங்கை யாற்கொம்மை கொட்டுவ போன்றவே. ௩௭

532 திருவ மேகலை தெள்ளரிக் கிண்கிணி
பரவை யாழ்குழல் பண்ணமை மென்முழா
உருவம் யாருடை யாரென் றொளிர்நகர்
அரவம் வாய்திறந் தார்ப்பது போன்றதே. ௩௮

533 செம்பொன் மாடங்கள் சென்னி யழுத்திய
வம்பொற் றிண்ணிலை ஆய்மணித் தூவிகள்
வெம்பு நீள்சுடர் வீழ்ந்து சுடுதலிற்
பைம்பொற் கொப்புள் பரந்தன போன்றவே. ௩௯

534 உருளி மாமதி யோட்டொழித் தோங்கிய
வெருளி மாடங்கள் மேற்றுயில் எய்தலின்
மருளி மான்பிணை நோக்கின்நல் லார்முகத்(து)
அருளி னாலழல் ஆற்றுவ போன்றவே. ௪௦

535 தேக்கண் இன்அகில் தேனொடு கூட்டமைத்(து)
ஆக்கப் பட்ட அளவில் கொழும்புகை
வீக்கி மாடந் திறந்திட மெல்லவே
ஊக்கி வாய்விட் டுயிர்ப்பன போன்றவே. ௪௧

536 தப்பில் வாய்மொழித் தானவர் வைகிய
ஒப்பில் மாநகர் ஒண்மைமற் றியாதெனில்
கப்பத் திந்திரன் காமுறு மாமணிச்
செப்பு வாய்திறந் தன்னதோர் செம்மற்றே. ௪௨

537 அசும்பு பொன்வரை யாய்மணிப் பூண்களும்
பசும்பொன் மாலையும் பட்டுழிப் பட்டவை
நயந்து கொள்பவர் இன்மையின் நன்னகர்
விசும்பு பூத்தது போன்றன வீதியே. ௪௩

வேறு

538 நன்னகர் நோக்கி நாய்கன் நாகங்கொல் புகுந்த தென்னப்
பொன்னகர் பொலியப் புக்குப் பொங்குமா மழைகள் தங்கும்
மின்னவிர் செம்பொன் மாடத் திருவரும் இழிந்து புக்குப்
பின்னவன் விருந்து பேணிப் பேசினன் பிறங்கு தாரான். ௪௪

539 மாடியந் தானை மன்னர் மாமணி நாக மாகக்
கேடில்சீர்க் கலுழ னாய கலுழவே கற்குத் தேவி

தோடலர் கோதைத் தொல்சீர்த் தாரணி சுரும்புண் கண்ணி
ஆடவ ரறிவு போழும் அணிமுலை யணங்கின் அன்னாள். சடு

540 விண்ணகம் வணங்க வெண்கோட் டிளம்பிறை முளைத்த தேபோற்
பண்ணகத் தினிய சொல்லாள் பாவையைப் பயந்த ஞான்றே
எண்ணிலி டின்றி மன்னர் இம்மலை இறைகொண் டீண்டி
அண்ணலங் களிற்றி னுச்சி அருங்கல வெறுக்கை ந்தார். சகூ

541 மந்திரத் தரசன் வல்லே நிமித்திகன் வருக என்றாற்(கு)
அந்தரத் தோடு கோளிற் சாதகம் அவனுஞ் செய்தான்
இந்திர திருவில் ஏய்ப்பக் குலவிய புருவத் தாட்கு
வந்தடை பான்மை மண்மேல் இராசமா புரத்த தென்றான்.

542 அவனுரை தெளிந்து வேந்தன் ஆசையுள் அரசர் நிற்பக்
கவனங்கொள் புரவிக் கொட்பிற் காதலுங் கரந்து வைத்தான்
அவனதே கருத்திற் றங்கொல் அன்றுகொல் அறிய லாகா(து)
இவணதும் அறிது மென்று கோயிலுக் கேகி னானே. சஅ

543 பால்பரந் தன்ன பட்டார் பூவணைப் பசும்பொற் கட்டிற்
கால்பரந் திருந்த வெங்கட் கதிர்முலைக் கச்சின் வீக்கி
வேல்பரந் தனைய கண்ணார் விரிமதிக் கதிர்பெய் கற்றை
போல்இவர் கவரி வீச மன்னவன் இருந்த போழ்தின். சகூ

544 என்வர விசைக்க என்ன வாயிலோன் இசைப்ப ஏகி
மன்னர்தம் முடிகள் வேய்ந்த வயிரம்போழ்ந் தழுது சேந்த
பொன்னவிர் கழல்கொள் பாதம் பொழிமழைத் தடக்கை கூப்ப
இன்னுரை முகமன் கூறித் தானத்தில் இருக்க என்றான். ருo

545 முதிர்பெயல் மூரி வானம் முழங்கிவாய் விட்ட தொப்ப
அதிர்குரல் முரசம் நாண அமிர்துபெய் மாரி யேய்ப்பக்
கதிர்விரி பூணி னாற்குத் தந்தைதாய் தாரங் காதல்
மதுரமா மக்கள் சுற்றம் வினவிமற் றிதுவுஞ் சொன்னான்.

546 இன்றைய தன்று கேண்மை எமர்நும ரெழுவர் காறும்
நின்றது கிழமை நீங்கா வச்சிர யாப்பி னாழால்
அன்றியும் அறனும் ஒன்றே அரசன்யான் வணிகன் நீயே
என்றிரண் டில்லை கண்டாய் இதுநின தில்லம் என்றான். ருஉ

547 மந்திர மன்னன் சொல்நீர் மாரியால் வற்றி நின்ற
சந்தனந் தளிர்த்த தேபோற் சிறிதத்தன் தளிர்த்து நோக்கி
எங்கிதக்குத் தந்தை சொன்னான் இன்னணம் என்று கேட்ப
முந்தைத்தான் கேட்ட வாறே முழுதெடுத் தியம்பு கின்றான்.

548 வெள்ளிவே தண்டத் திங்கண் வீறுதென் சேடிப் பாலாற்
கள்ளவிழ் கைதை வேலிக் காசில்காந் தார நாட்டுப்
புள்ளணி கிடங்கின் விச்சா லோகமா நகரிற் போகா
வெள்ளிவேற் கலுழ வேகன் வேதண்ட வேந்தர் வேந்தன்.

549 சங்குடைந் தனைய வெண்தா மரைமலர்த் தடங்கள் போலும்
நங்குடித் தெய்வங் கண்டீர் நமரங்காள் அறிமின் என்னக்
கொங்குடை முல்லைப் பைம்போ திருவடங் கிடந்த மார்ப
இஃகடி பிழைப்ப தன்றால் எங்குலம் என்று சொன்னான். ௫௫

550 பெருந்தகைக் குரிசில் தோழன் பெருவிலைக் கடக முன்கை
திருந்துபு செறியப் பற்றிச் சென்றுதன் உரிமை காட்டப்
பொருந்துபு பொற்ப ஓம்பிப் பொன்னிழை சுடர நின்ற
கருங்கண்ணி திறத்து வேறாக் கட்டுரை பயிற்று கின்றான்.

551 எரிமணிப் பளிக்கு மாடத் தெழுந்ததோர் காம வல்லி
அருமணிக் கொடிகொல் மின்கொல் அமரர்கோன் எழுதிவைத்த
ஒருமணி குயின்ற பாவை யொன்றுகொல் என்று நாய்கன்
திருமணிக் கொடியை யோரான் தெருமர மன்னன் சொன்னான்

552 தூசுலாய்க் கிடந்த அல்குற் றப்புறழ் தொண்டைச் செவ்வாய்
வாசவான் குழலின் மின்போல் வருமுலைச் சாந்து நக்கி
ஊசல்பாய்ந் தாடிக் காதிற் குண்டலம் இலங்க நின்றாள்
காசில்யாழ்க் கணங்கொள் தெய்வக் காந்தர்வ தத்தை யென்பாள்.

553 விளங்கினாள் உலக மெல்லாம் வீணையின் வனப்பி னாலே
அளந்துணர் வரிய நங்கைக் கருமணி முகிழ்த்த வேபோல்
இளங்கதிர் முலையும் ஆகத் திடங்கொண்டு பரந்த மின்னிற்
றுளங்குநுண் ணுசுப்புந் தோன்றா துருவரூ வென்ன வுண்டே.

554 நின்மகள் இவளை நீயே நின்பதி கொண்டு போகி
இன்னிசை பொருது வெல்வான் யாவனே யானு மாக
அன்னவற் குரியள் என்ன அடிப்பணி செய்வல் என்றான்
தன்னமர் தேவி கேட்டுத் தத்தைக்கே தக்க தென்றாள். ௬௦

555 முனிவரும் போகபூமிப் போகம் முட்டாது பெற்றுந்
தனியவ ராகி வாழ்தல் சாதுயர் அதனின் இல்லை
அனிபடு கிளவி யார்தங் காதலர் கவானிற் றுஞ்சிற்
பனியிரு விசும்பிற் றேவர் பான்மையிற் றென்று சொன்னான்.

556 நாற்படு புலவன் சொன்ன நண்பொருள் நுழைந்து யானும்
வேற்கடற் றானை மன்னர் வீழ்ந்திரந் தாலும் நேரேன்
சேற்கடை மதர்வை நோக்கிற் சில்லரித் தடங்கண் நங்கை
பாற்படு காலம் வந்தாற் பான்மையார் விலக்கு கிற்பார். ௬௨

557 படைப்பருங் கற்பி னாள்தன் பாவையைப் பரிவு நீக்கிக்
கொடைக்குரிப் பால எல்லாங் கொடுத்தபின் கூற்று முட்கும்
விடைப்பருந் தானை வேந்தன் வேண்டுவ வெறுப்ப நல்கித்
தொடுத்தலர் கோதை வீணை பதிக்கிது சொல்லி னானே. ௬௩

558 உடம்பினொ டுயிரிற் பின்னி ஒருவயின் நீங்கல் செல்லா
நெடுங்கணுந் தோளும் போலும் நேரிழை யரிவை நீநின்
தடங்கண்ணி தனிமை தீரத் தந்தையுந் தாயும் ஆதி
அடங்கலர் அட்ட வேலான் ஆணையி ராமின் என்றான். ௬௪

559 அருமணி வயிரம் வேய்ந்த அருங்கலப் பேழை ஐஞ்ஞூ(று)
எரிமணி செம்பொன் ஆர்ந்த இராயிரம் மீவனப் பேழை
திருமணிப் பூணி னாற்குச் சினந்தலை மழுங்க வின்றிக்
குருமணி முடியிற் றேய்த்த தரன்தமர் கொள்க என்றான். ௬௫

560 பல்வினைப் பவழப் பாய்காற் பருமணி யிழிகை வம்பார்
நல்லகில் விம்முங் கட்டில் தவிசொடு நிலைக்கண் ணாடி
மெல்லிய தூப முட்டி மேதகு நானச் செப்போ(டு)
அல்லவுங் கொள்க என்றான் அணங்குடை நிணங்கொள் வேலான்.

561 விளக்கழல் உறுத்த போலும் விசியுறு போர்வைத் தீந்தேன்
துளக்கற ஒழுகி யன்ன துய்யறத் திரண்ட திண்கோற்
கொளத்தகு திவவுத் திங்கட் கோள்நிரைத் தனைய ஆணி
அளப்பருஞ் சுவைகொள் நல்யாழ் ஆயிர மமைக என்றான்.

562 அரக்கெறி குவளை வாட்கண் அவ்வளைத் தோளி னாளைப்
பரப்பமை காதற் றாயர் பற்பல்காற் புல்லிக் கொண்டு
திருப்புறக் கொடுத்த செம்பொற் றாமரை போன்று கோயில்
புரிக்குழல் மடந்தை செல்லப் புலம்பொடு மடிந்த தன்றே. ௬௮

563 காம்புபொன் செய்த பிச்சங் கதிர்மணிக் குடையோ டேந்தித்
தாம்பலர் கவரி வீசக் கிண்கிணி ததும்ப நாகப்
பாம்புவைத் தனைய அல்குற் பல்கலை மிழற்ற எகி
ஆம்பல்நா றமிர்தச் செவ்வாய் அரசனைத் தொழுது நின்றாள்.

564 அடிக்கலம் அரற்ற எகி அரும்பெறற் றாதை பாதம்
முடிக்கலஞ் சொரியச் சென்னி யிறைஞ்சலு முரிந்து மின்னுக்
கொடிப்பூல நடங்கி யாங்குத் தோழியர் குழாத்துள் நிற்ப
அடுத்தனன் புல்லி வேந்தன் ஆற்றுகி லாது சொன்னான்.

565 வலம்புரி ஈன்ற முத்தம் மண்மிசை யவர்கட் கல்லால்
வலம்புரி பயத்தை யெய்தா தனையரே மகளிர் என்ன
நலம்புரிந் தனைய காதற் றேவிதன் நவையை நீங்கக்
குலம்புரிந் தனைய குன்றிற் கதிபதி கூறி னானே. ௭௧

566 இன்சுவை யாழோ டன்னம் இளங்கிளி மழலை மஞ்ஞை
பொன்புனை பூக மந்தி பொறிமயிர்ப் புறவம் பொன்னார்
மென்புன மருளின் நோக்கின் மானினம் ஆதி யாகத்
தன்புறஞ் சூழப் போகித் தளிரியல் விமானஞ் சேர்ந்தாள்.

வேறு

567 வெற்றிவேல் மணிமுடிக்
கொற்றவன் ஒருமகள்
அற்றமில் பெரும்படைச்
சுற்றமோ டியங்கினாள். ௭௩

568 கண்ணயற் களிப்பன
அண்ணல்யானை யாயிரம்
விண்ணகத் தியங்குதேர்
எண்ணவற் றிரட்டியே. ௭௪

569 விற்படை விலக்குவ
பொற்புடைப் புரவியும்
முற்படக் கிளந்தவற்றின்
நற்புடைய நாற்றியே. ௭௫

570 பாறுடைப் பரிதிவேல்
வீறுடை யிளையரும்

ஆறிரட்டி யாயிரர்
கூறுதற் கரியரே. எசு

571 மாகநீள் விசும்பிடை
மேகம்நின் றிடித்தலின்
நாகம்நின் றதிர்ந்தவர்க்(கு)
ஏகலாவ தில்லையே. எஎ

572 வெஞ்சின வெகுளியிற்
குஞ்சரம் முழங்கலின்
மஞ்சுதம் வயிறழிந்(து)
அஞ்சிநீர் உகுத்தவே. எஅ

573 வேழமும் மதத்தொடு
தாழ்புயல் கலந்துடன்
ஆழ்கடல் அகம்புறம்
வீழ்தர விரைந்ததே. எகூ

574 மல்லல்மாக் கடலிடைக்
கல்லெனக் கலங்கவிழ்த்(து)
அல்லலுற் றழுங்கிய
செல்வனுற்ற செப்புவாம். அ0

575 பால்நிறப் பனிவரை
மேல்நிற மிகுத்தன
நீல்நிற நிழல்மணி
தான்நிறைத் ,தகமெலாம். அக

576 வஞ்சமில் மனத்தினன்
நெஞ்சகம் புகன்றுக
விஞ்சையம் பெருமகன்
வஞ்சமென் றுணர்த்தினன். அஉ

577 நங்கைதன் நலத்தினல்
மங்குல்வெள்ளி மால்வரை
எங்கும்மன்னர் ஈண்டினர்
சங்குவிம்மு தானையார். அ௩

578 ஈரலங்கல் ஏந்துவேல்
ஆரலங்கல் மார்பினன்
கார்விலங்கு கைக்கணி
சீர்கலந்து செப்பினன். ௮௪

579 மாதர்வாழ்வு மண்ணதே
ஆதலால் அலங்கலந்
தாதவிழ்ந்த மார்பநின்
காதலன் கடவுளான். ௮௫

580 என்றுகூற என்னையே
துன்றுகாதற் றோழனைச்
சென்றுநீ கொணர்கென
அன்றுவந்த வண்ணமே. ௮௬

581 துன்பமுற் றவர்க்கலால்
இன்பமில்லை யாதலின்
அன்பமற்று யான்நினைத்
துன்பத்தாற் றொடக்கினேன். ௮௭

582 பீழைசெய்து பெற்றனன்
வாழியென்று மாக்கடல்
ஆழ்வித்திட்ட அம்பியைத்
தோழர்ச்சுட்டிக் காட்டினன். ௮௮

வேறு

583 தேன்தரு மாரி போன்று தீவிய கிளவி தம்மால்
ஊன்தரு குருதி வேலான் உள்ளகங் குளிர்ந்து விஞ்சைக்
கோன்தரு துன்பம் மற்றென் குலத்தொடு முடிக என்றான்
கான்றுவில் வயிரம் வீசுங் கனமணிக் குழையி னானே. ௮௯

584 தோமலர் தெரிய லான்தன் தோழரைக் கண்டு காதல்
ஊடலர்ந் தெழுந்து பொங்க உருவத்தார் குழையப் புல்லிப்
பாடிரும் பௌவ முந்நீர்ப் பட்டது பகர்த லோடும்
நாடகம் நாங்க ளுற்ற தென்றுகை யெறிந்து நக்கார். ௯௦

585 கட்டழற் கதிய புண்ணிற் கருவரை யருவி யாரம்
பட்டது போன்று நாய்கன் பரிவுதீர்ந் தினியர் சூழ

மட்டவிழ் கோதை யோடு மண்கனை முழவ மூதூர்க்
கட்டவிழ் தாரி னான்தன் கடிமனை மகிழ்ந்து புக்கான். கூக

586 பெருமனை குறுக லோடும் பிறையென விலங்கித் தோன்றுந்
திருநுதல் மனைவி செம்பொற் கொடியென இறைஞ்சி நிற்ப
வருமுலை பொதிர்ப்ப வாங்கி வண்டினம் இரியப் புல்லிக்
கதிர்நகை முறுவல் மாதர் கண்ணுறு கவலை தீர்த்தான். கூஉ

587 சந்திர காந்தம் என்னுந் தண்மணி நிலத்தி னங்கண்
வெந்தெரி பசும்பொன் வெள்ளி பளிங்கொடு பவளம் பாய்த்திக்
கந்தெரி மணியிற் செய்த கன்னியா மாடம் எய்திப்
பைந்தொடிப் பாவை ஒன்றும் பரிவிலள் வைகி னாளே. கூந

588 பாசிழை பரவை யல்குற் பசுங்கதிர்க் கலாபம் வீங்கக்
காசுகண் பரிய வைகிக் கடன்தலை கழிந்த பின்னாத்
தூசணி பரவை யல்குற் றுளங்குநுண் நுசுப்பிற் பாவை
ஆசறு வரவுந் தந்தை வலித்ததும் அறியச் சொன்னான். கூச

589 வண்டுணா மலர்ந்த கோதை வரவொருப் பட்டு நேரத்
தெண்கட லமிர்தம் பெய்த செப்பெனச் செறிந்து வீங்கிப்
பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறு முலையி னாளைக்
கண்டவர் மருள நாளைக் கடிவினை முடித்தும் என்றான். கூரு

590 மால்வரை வயிறு போழ்ந்து வல்லவர் மதியிற் றந்த
பால்வரை மணியும் பொன்னும் பற்பல கொண்டு புக்குக்
கால்பொரு கழலி னானுங் காவலற் கண்டு சொன்னான்
வேல்பொரு தானை யானும் வேண்டுவ விதியின் நேர்ந்தான்.

வேறு

591 மையல்மத யானைநிரை மன்னன்மகிழ்ந் தானாப்
பொய்யில்புகழ் நாய்கன்மத வொளியினொடு போகி
நொய்தின்மனை எய்தியிது செய்கென நொடித்தான்
மொய்கொள்முலை பாயமுகை விண்டலர்ந்த தாரான். கூஎ

592 நானக்கிடங் காடைநகர் நாகத்திடை நன்பொன்
வான்நக்கிடு மாட்சியதொர் மண்டபஞ்செய் கென்ன
மீனத்திடை நாள்கிழமை வெள்ளிசயை பக்கம்
கானத்திடை வேங்கையெழக் கண்ணினர்கள் அன்றே. கூஅ

593 நட்புப்பகை யுட்கினொடு நன்பொன்விளை கழனி
பட்டினொடு பஞ்சுதுகில் பைம்பொனொடு காணம்
அட்டசுவை வல்சியினொ டியாதுமொழி யாமை
ஒட்டிப்பதி னுயிரவர் உற்றுமுயல் கின்றார். ௯௯

594 வண்டுபடு தேறல்நற வாய்விடொடு பருகிக்
கண்டொழிற் கணிச்சிகளிற் கயம்படநன் கிடித்தாங்(கு)
எண்டிசையும் எற்பப்படுத் தெற்றியதன் மேலாற்
கண்டுருகு பொன்னின்நிலங் காமுறுவ புனைந்தார். ௧௦௦

595 பொன்செய்குடங் கோத்தனைய எருத்திற்பொலி பொற்றாண்
மின்செய்பசும் பொன்னிலத்து வீறுபெற நாட்டி
மன்பவள மேல்நவின்று பளிக்கலகு பரப்பி
நன்செய்வெளி வேய்ந்துசுவர் தமனியத்தின் அமைத்தார்.

596 பாவையவள் இருக்குமிடம் பளிக்குச்சுவர் இயற்றிக்
கோவைகுளிர் முத்தினியல் கோதையொடு கொழும்பொன்
மாலையொடு மாலைதலை மணந்துவர நாற்றி
ஆலையமி தோவியர்கட் கென்னஅணி யமைத்தார். ௧௦௨

597 ஆயிதழ பொன்னலங்கல் காலலைப்ப ஒல்கி
வாயருகு வ்தொசிந்து மறியமழை மின்போற்
சேயவர்க்குந் தோன்றியதொர் திலகமெனுந் தகைத்தாய்ப்
பாயதிரை முத்தமணல் பரந்துபயின் றுளதே. ௧௦௩

598 காமர்களி றும்பிடியுங் கன்றுங்கலை மானுந்
தாமரைய வாவிகளும் புள்ளுந்தகை நலத்தின்
எமுறுவ பாவையினொ டியக்கிநிலை எழுதி
ஆமொரையங் காண்பவர்கட் ககம்புறமி தெனவே. ௧௦௪

599 உழந்தவரும் நோக்கிமகிழ் தூங்கஒளி வாய்ந்து
விழுங்குமெனப் பறவைகளும் பிறவிலங்கும் அடையா
முழங்குதிரை வேலியினில் இல்லையென மொய்கொண்(டு)
எழுந்துகொடி யாடுமிதவ் வெழில்நகரின் இயல்பே. ௧௦௫

600 ஒடுமுகில் கீறியொளிர் திங்கள்சிகை வைத்தே
மாடமது வார்சடைய வள்ளலையும் ஒக்கும்
நாடிமுகம் நான்கதனின் நான்முகனை யொக்கும்
நேடிநிமிர் தன்மையினில் நேமியையும் ஒக்கும். ௧௦௬

601 கண்டவர்கள் காமுறலிற் காமனையும் ஒக்கும்
கொண்டுலகம் ஏத்தலின்அக் கொற்றவனை ஒக்கும்
வண்டெரிய லாரமுலை மாதர்மகி ழமிர்தம்
உண்டவர்கள் எவ்வகையர் அவ்வகைய தொன்றே. கoஎ

வேறு

602 முகிற்றலை மதியம் அன்ன முழுமணி மாடத் திட்ட
அகிற்புகை தவழ்ந்து வானத் திருவிசும் பறுத்து நீண்டு
பகற்கதிர்ப் பரப்பிற் றாகிப் பஞ்சவர் விமான முட்டிப்
புகற்கரும் அமரர் கற்பம் புக்கயா வுயிர்த்த தன்றே. கoஅ

வேறு

603 அரைசன தருளினொ டகன்மனை அவனெய்தி
உரைசெலல் வகையினொ டுலகமும் அறிவுற
முரைசதிர் இமிழிசை முதுநகர் அறைகென
விரைசெல விளையரை வியவரின் விடவே. கoகூ

604 விடுகணை விசையொடு வெருவரு தகையவர்
படுபணை யவருறை பதியது குறுகி
நெடுமதி யகடுற நிழல்தவழ் கொடியுயர்
கடிநகர் இடிமுரச சறைமினம் எனவே. ககo

605 மங்கல அணியினர் மலர்கதிர் மதியன
புங்கவன் அறநெறி பொலிவொடு மலிகென
அங்கதிர் மணிநகை அலமரு முலைவளர்
கொங்கணி குழலவள் கோடணை அறைவாம். கசுக

வேறு

606 வான்தரு வளத்த தாகி வையகம் பிணியிற் றீர்க
தேன்தரு கிளவி யாருங் கற்பினிற் றிரித லின்றி
ஊன்றுக ஊழி தோறும் உலகினுள் மாந்த ரெல்லாம்
ஈன்றவர் வயத்த ராகி இல்லறம் புணர்க நாளும். ககஉ

607 தவம்புரிந் தடக்கி நோற்குந் தத்துவர்த் தலைப்பட் டோம்பிப்
பவம்புரி கெமக்கும் என்று பணிந்தவ ருவப்ப ஈமின்
அவம்புரிந் துடம்பு நீங்கா தருந்தவ முயல்மின் யாரும்
சிவம்புரி நெறியைச் சேரச் செப்புமிப் பொருளுங் கேண்மின்.

608 அழ்மல ரனிச்சத் தம்போ தல்லியோ டணியின் னொந்து
விம்முறு நுசுப்பு நைய வீற்றிருந் தணங்கு சேர்ந்த [தோட்
வெம்முலைப் பரவை யல்குல் மிடைமணிக் கலாபம் வேய்த்
செம்மலர்த் திருவின் சாயற் றேமொழி தத்தை யென்பாள்.

609 மற்றவள் தந்தை நாய்கன் வண்சிறி தத்த னென்பான்
கொற்றவன் குலத்தின் வந்தான் கூறிய பொருளி தாகும்
முற்றவும் உடைய ளாகி மூரிநூற் கலைகள் யாவுங்
கற்றவள் கணங்கொள் நல்யாழ் அனங்கனைக் கனிக்கும் நீராள்.

610 தீந்தொடை மகர வீணைத் தெள்விளி எடுப்பித் தேற்றிப்
பூந்தொடி யரிவை தன்னிற் புலமிகுத் துடைய நம்பிக்(கு)
ஈந்திடும் இறைவ ராதி மூவகைக் குலத்து ளார்க்கும்
வேந்தடு குருதி வேற்கண் விளங்கிழை தாதை என்றான்.

611 மண்ணக மடந்தை யாகம் மார்புற முயங்கி நின்ற
அண்ணலை யாதி யாக அருங்கடி நகரை வாழ்த்தி
விண்ணக முழக்கின் ஏய்ப்ப வீதிதோ றெருக்கி எங்கும்
கண்ணொளிர் கடிப்பின் ஓச்சிக் கடிமுர சறைந்த காலை. ககஎ

612* இசைபட அறைந்த ஓசை எண்திசை வேந்து மல்லால்
விசையுடை யெவரும் ஈண்டி வெறுநிலம் நெளியத் தோற்றிப்
பசைபடு மாறு வந்தார் பான்மையும் பண்பு மெல்லாம்
நசைபட நல்ல நாட்டி நாஞ்சிறி துரைத்தும் அன்றே. ககஅ

613 வணக்கருந் தானை மன்னர் மத்தகம் பிளந்து வாய்த்த
நிணக்கொழுங் குருதி வாட்கை நிலம்புடை பெயர்க்கும் ஆற்றல்
அணைப்பருங் களிகொள் வேழத் தத்தின புரத்து வேந்தன்
கணைக்கவின் அழித்த உண்கட் கன்னியைக் கருதி வந்தான்.

614 சிதைப்பருஞ் சீற்றத் துப்பிற் செய்கழல் நரல வீக்கி
மதக்களி றடர்த்துக் குன்றம் மணிவட்டின் உருட்டும் ஆற்றற்
கதக்கரி யொளிறு வைவேற் காம்பிலிக் காவல் மன்னன்
பதைப்பரும் பரும யானைப் பாலமா குமரன் வந்தான்.

615 இலைபொர எழுதி யன்ன எரிமணிக் கடக முன்கைச்
சிலைபொரத் திரண்ட திண்தோட் சில்லரிச் சிலம்பி னார்தம்
முலைபொர உடைந்த தண்தார் மொய்ம்மதுத் துளிப்ப வந்தான்
மலைபொர அரிய மார்பின் வாரண வாசி மன்னன். கஉக

616 கதிர்முடி மன்னர் சூழ்ந்து கைதொழு திறைஞ்சி மாலைத்
திருமுடி வயிர வில்லாற் சேவடி திளைப்ப ஏத்தி
அருமுடி அணிந்த கொற்றத் தவந்தியன் முரசம் ஆர்ப்ப
ஒருபிடி நுசுப்பி னாளை உள்ளுபு வந்து விட்டான். கஉஉ

617 வெள்ளணி அணிந்த ஞான்றே வேந்தர்தம் முடியிற் கொண்ட
கள்ளணி மாலை மோந்து கனைகழல் இலங்கு நோன்றாட்
புள்ளணி கொடியி னானிற் போர்பல தொலைத்த ஆற்றல்
அள்ளிலை யணிந்த வைவேல் அயோத்தியர் இறையும் வந்தான்.

618 நீணிதி வணிகர் ஈறு நிலமிசை யவர்க ளெல்லாம்
வீணையிற் பொருது வெல்வான் விரைவினர் துவன்றி மூதூர்க்
கோணமும் மறுகு மெல்லாங் குச்சென நிறைத்தம் மாந்தர்
மாண்மது நசையின் மொய்த்த மதுகர ஈட்டம் ஒத்தார்.

619 உருக்கமைந் தெரியுஞ் செம்பொன் ஓர்ஐவில் அகல மெங்குந்
திருக்குழல் மடந்தை செல்லத் திருநிலந் திருத்திப் பின்னர்
விரைத்தகு நானம் நீரால் வெண்ணிறப் பொடியை மாற்றிப்
பரப்பினர் படுவண் டார்ப்பப் பன்மலர் பக்க மெல்லாம்.

620 விலைவரம் பறிதல் இல்லா வெண்துகில் அடுத்து வீதி
அலர்தலை யனிச்சத் தம்போ தைம்முழ அகல மாகப்
பலபடப் பரப்பிப் பாவை மெல்லடிப் பரிவு தீர
நிலவரைத் தன்ன னாரை நிதியினால் வறுமை செய்தான்.

621 மண்டிலம் நிறைந்த மாசில் மதிப்புடை வியாழம் போன்றோர்
குண்டலம் இலங்க நின்ற கொடியினைக் குறுகித் தோழி
விண்டலர் கோதை விம்மும் விரைகுழல் தொழுது நீவிப்
பண்டியல் மணங்க ளெல்லாம் பரிவறப் பணிந்து சொன்னாள்.

622 எரிமணி நெற்றி வேய்ந்த இளம்பிறை இதுகொ லென்னப்
புரிமணி சுமந்த பொற்பூண் பொறுக்கலா நுசுப்பிற் பாவை
திருமணி வீணைக் குன்றத் திழிந்ததீம் பாலை நீத்தத்(து)
அருமுடி அரசர் ஆழ்ப அம்மனை அறிவல் என்றாள். கஉஅ

623 மண்ணிடம் மலிர எங்கும் மாந்தரும் வந்து தொக்கார்
ஒண்ணிற வுரோணி ஊர்ந்த ஒளிமதி ஒண்பொ னாட்சித்
தெண்ணிற விசும்பின் நின்ற தெளிமதி முகத்து நங்கை
கண்ணிய வீணை வாட்போர்க் கலாமின்று காண்டும் என்றே.

624 பசுங்கதிர்க் கடவுள் யோகம் பழிப்பற நுனித்து வல்லான்
விசும்பிவர் கடவு ளொப்பான் விரிச்சிகன் அறிந்து கூற [ன்
அசும்புதேன் அலங்கல் ஐம்பால் அரிவையோ டாய்ந்து நாய்க
விசும்புபோல் மாந்தர் ஆர விழுநிதி சிதறி னானே. ௧௬௦

625 வாசநெய் வண்டு மூச மாந்தளிர் விரல்கள் சேப்பப்
பூசிவெள் ளிலோத்தி ரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்தின்
காசறு குவளைக் காமர் அகவிதழ் பயில மட்டித்(து)
ஆசறத் திமிர்ந்து மாதர் அணிநலங் திகழ்வித் தாரே. ௧௬௧

626 கங்கையின் களிற்றி னுச்சிக் கதிர்மணிக் குடத்திற் றந்த
மங்கல வாச நன்னீர் மணிநிறங் கழீஇய தொப்ப
நங்கையை நயப்ப எல்லாம் விரையொடு துவருஞ் சேர்த்தி
ஆங்கர வல்கு லாளை ஆட்டினார் அரம்பை யன்னார். ௧௬௨

627 வெண்ணிற மழையின் மின்போல் வெண்துகிற் கலாபம் வீக்கிக்
கண்ணிற முலையுந் தோளுஞ் சந்தனத் தேய்வை கொட்டித்
தெண்ணிறச் சிலம்பு செம்பொற் கிண்கிணி பாதஞ் சேர்த்திப்
பண்ணிறச் சுரும்பு சூழும் பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார்.

628 எரிமணிச் சுண்ண மின்னும் இருஞ்சிலை முத்தஞ் சேர்த்தித்
திருமணி முலையி னெற்றிச் சிறுபுறஞ் செறியத் தீட்டிப்
புரிமணி ஆகத் தைதா விரல்நுதி கொண்டு பூசி
விரிமணி வியப்ப மேனி ஒளிவிட்டு விளங்கிற் றன்றே. ௧௬௪

629 அருங்கயம் விசும்பிற் பார்க்கு மணிச்சிறு சிரலை யஞ்சி
இருங்கயந் துறந்து திங்கள் இடங்கொண்டு கிடந்த நீலம்
நெருங்கிய மணிவிற் காப்ப நீண்டுலாய்ப் பிறழ்வ செங்கேழ்க்
கருங்கய லல்ல கண்ணே எனக்கரி போக்கி னாரே. ௧௬௫

630* இதுமெயென் றின்னுந் தேறார் இருநிலத் துறையு மாந்தர்
புதுமையைப்பொருளிதென்னார் பழமையைப்பொருளிதென்
மதுமய மாலைத் தோழி பழமையைப் பழித்து மாதோ [பர்
புதுமையே பொருளி தாதல் பூங்கண்ணி னுணர்த்தி னாளே.

631 பொருந்துபொற் றூண்கள் நான்கிற் பொலிந்துநூற் புலவர்
வருந்தியும் புகழ்த லாகா மரகத மணிசெய் கூடத்(து) [செங்கா
இருந்திளை யார்கள் கோலம் இந்திரன் நிருமித் தாற்போல்
திருந்தச்செய் ததற்பின் நங்கை திருவிற்கோர் திலகம் ஒத்தாள்.

632 மண்கனை முழவம் விம்ம வரிவளை துவைப்ப வள்வார்க்
கண்கனைந் திடியின் வெம்பிக் கடலென முரசம் ஆர்ப்ப
விண்கனிந் துருகு நீர்மை வெள்வளைத் தோளி போந்தாள்
பண்கனிந் துருகு நல்யாழ்ப் படைபொரு துடைக்க லுற்றே.

633 பரந்தொளி யுமிழும் பைம்பொற் கண்ணடி பதாகை தோட்டி
விரிந்திருள் மேயுஞ் செம்பொன் விளக்குவெண் முரசு கும்பஞ்
சுரந்தவெண் மதியைச் சூன்று கதிர்கொண்டு தொகுத்தபோலும்
பொருந்துபொற் கதிர்பெய் கற்றை புணர்கயல் போந்த அன்றே.

634 வென்றவன் அகலம் பூட்ட விளங்கொளி மணிசெய் செப்பின்
நின்றெரி பசும்பொன் மாலை போந்தது நெறியிற் பின்னர்
ஒன்றிய மணிசெய் நல்யாழ் போந்தன உருவ மாலை
தின்றுதேன் இசைகள் பாடத் திருநகர் சுடர அன்றே. க௪௰

வேறு

635 ஆரந் துயல்வர அந்துகில் சோர்தர
வீரம் படக்கையை மெய்வழி வீசித்
தேரை நடப்பன போற்குறள் சிந்தினொ(டு)
ஊரும் நடந்தன ஒண்டொடி முன்னே. க௪௧

வேறு

636 வட்டச் சூறையர் வார்முலைக் கச்சினர்
பட்டு வீக்கிய அல்குலர் பல்கணை
விட்ட தூணியர் வில்லினர் வாளினர்
ஒட்டி யாயிரத் தோரெண்மர் முன்னினார். க௪௨

637 வம்பு வீக்கி வருமுலை யுட்கரந்(து)
அம்பின் நொய்யவர் ஆணுடைத் தானையர்
பைம்பொற் கேடகம் வாளொடு பற்றுபு
செம்பொற் பாவையைச் சேவித்து முன்னினார். க௪௩

638 ஆணை யாணை அகலுமின் நீரென
வேணுக் கோலின் மிடைந்தவர் ஒற்றலின்
ஆணை யின்றெம தேயென் றணிநகர்
காணுங் காதலிற் கண்ணெருக் குற்றவே. க௪௪

639 கண்ணி னோடு பிறந்தது காரிகை
வண்ணங் காண்டற்கன் றேவென வைதவர்

விண்ணும் மண்ணும் விருந்துசெய் தாலொப்ப
எண்ணின் எண்ணிட மின்றி நெருங்கினர். கசரு

வேறு

640 இனஞ்சேரா வாகி யிளையா ருயிரின்மேல்
எண்ணங் கொள்வான்
புன்ஞ்சேர் கொடிமுல்லை பூம்பவளத் துள்புக்குப்
பூத்த போலும்
வனஞ்சேர் துவர்ச்செவ்வாய் வாளெயிறுங் கண்மலரும்
வனைய லாகாக்
கனஞ்சேர் கதிர்முலையுங் கண்டார்கள் வீட்டுலகங்
காணார் போலும். கசசு

641 மீன்சேர் குழாமனைய மேகலையும் வெம்முலையுங்
கூற்றங் கூற்றம்
ஊன்சே ருயிருய்யக் கொண்டோடிப் போமின்கள்
உரைத்தே மென்று
கான்சேர் கமழ்கோதை கால்தொடர்ந்து கைவிடா
தகற்று கின்ற
தேன்சேர் திருவடிமேற் கிண்கிணிபொன் னுவதற்கே
தக்க தென்பார். கசஎ

642 கள்வாய்ப் பெயப்பட்ட மாலைக் கருங்குழல்கள்
கண்டார் நைய
உள்வாய்ப் பெயப்பட்ட வெம்மதுச்செப் போரிணைமெல்
லாக மீன்ற
புள்வாய் மணிமழலைப் பொற்சிலம்பின் இக்கொடியை
ஈன்றாள் போலும்
கொள்வான் உலகுக்கோர் கூற்றீன்றாள் அம்மவோ
கொடிய வாறே. கசஅ

வேறு

643 செய்ய தாமரை மேற்திரு வேகொலோ
வெய்ய நோக்கின்விச் சாதரி யேகொலோ
மையில் வானவர் தம்மக ளேகொலென்(று)
ஐய முற்றலர் தார்மன்னர் கூறினர். கசகூ

644 வீணை வென்றிவள் வெம்முலைப் பூந்தடம்
ஆணை தோய்வதல் லாற்பிறன் வெளவுமேற்
கோணைப் போருட் குளிக்குவம் அன்றெனின்
மாண நற்றவஞ் செய்குவம் என்மரும். கருo

645 குலிகச் செப்பன கொம்மை வரிமுலை
நலியும் எம்மையென் பார்நல்ல கண்களால்
வலிய வாங்கியெய் தாளெம்மை வாழ்கலேம்
மெலிய ஆவி விடுக்குமற் றென்மரும். கருக

646 ஊட்டி யன்ன உருக்கரக் காரடி
நீட்டி மென்மலர் மேல்வந்து நின்நலங்
காட்டி யெம்மைக்கொன் றாயெனக் கைதொழு(து)
ஓட்டை நெஞ்சின ராயுழல் வார்களும். கருஉ

வேறு

647 திங்கள் மதிமுகத்த சேலும் பவளமுஞ்
சிலைபு முத்துங்
கொங்குண் குழலாள்மெல் லாகத்த கோங்கரும்புங்
கொழிப்பில் பொன்னும்
அங்கை குழியா அரக்கீத்த செந்தளிர்நெய்
தோய்த்த போலும்
மங்கை மலரடிபுந் தாமரையே யாமறியேம்
அணங்கே என்பார். கருங

648 பொன்மகரம் வாய்போழ்ந்த முத்தநூல் தோள்யாப்பிற்
பொலிந்த வாறும்
மின்மகரங் கூத்தாடி வில்லிட் டிருங்குழைக்கீழ்
இலங்கு மாறும்
மன்மகர வெல்கொடியான் மால்கொள்ளக் கால்கொண்ட
முலையி னாளை
என்அரம்பை யென்னுவா றென்பார் இமைக்குங்கண்
இவையோ என்பார். கருச

649 கோள்வயிர நீளருவிக் குன்றிவர்ந்த செஞ்சுடர்போற்
கொலைவேல் மன்னர்
நீள்வயிரம் வெண்மருப்பின் நீலக் களிற்றின்மேல்
நிரைத்தார் பொங்கத்

தோள்வயிரந் தோன்றத் தொழுவார் அழுதுநைவார்
தொக்கோர் கோடி
வாள்வயிரம் விற்கும் மடநோக்கி யார்கொலோ
பெறுவா ரென்பார். ௧௫௫

650 பைம்பொன் நிமிர்கொடி பாவை வனப்பென்னுந்
தளிரை யீன்று
செம்பொன் மலர்ந்திளையார் கண்ணென்னுஞ் சீர்மணிவண்
டுழலச் சில்லென்(று)
அம்பொற் சிலம்பரற்ற அன்னம்போல் மெல்லவே
ஒதுங்கி அம்பூஞ்
செம்பொற் புரிசை அடைந்தாள்செந் தாமரைமேற்
றிருவொ டொப்பாள். ௧௫௬

651 பட்டியன்ற கண்டத் திரைவளைத்துப் பன்மலர்நன்
மாலை நாற்றி
விட்டகலாச் சாந்தின் நிலமெழுகி மென்மலர்கள்
சிதறித் தூமம்
இட்டிளையார் ஏத்த இமையார் மடமகள்போல்
இருந்து நல்யாழ் [ந்து
தொட்டெழீஇப் பண்ணெறிந்தாள் கின்னரரும் மெய்ம்மற
சோர்ந்தார் அன்றே. ௧௫௭

வேறு

652 புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண்(டு)
அன்புகொள் மடப்பெடை அலம்வந்தாங் ககல்வதனை
என்புருகு குரலழைஇ யிருஞ்சிறகர் குலைத்துகுத்துத்
தன்பெடையைக் குயில்தழுவத் தலைவந்த திளவேனில். ௧௫௮

653 தண்காஞ்சித் தாதாடித் தன்னிறங் கரந்ததனைக்
கண்டானா மடப்பெடை கிளியெனப்போய்க் கையகல
நுண்தூவி இளஞ்சேவல் நோக்கோடு விளிபயிற்றித்
தண்சிறகாற் பெடைதழுவத் தலைவந்த திளவேனில். ௧௫௯

654 குறுத்தாள குயிற்சேவல் கொழுங்காஞ்சித் தாதாடி
வெறுத்தாங்கே மடப்பெடை விழைவகன்று நடப்பதனை
மறுத்தாங்கே சிறகுளர்ந்து மகிழ்வானுக் கொளத்தேற்றி
உறுப்பினால் அடிபணியத் தலைவந்த திளவேனில். ௧௬௦

வேறு

655 தளையவிழ் கோதை பாடித் தானமர்ந் திருப்பத் தோழி
விளைமதுக் கண்ணி வீணா பதியெனும் பேடி வேற்கண்
இளையவள் பாட வீரர் எழால்வகை தொடங்கல் அன்றேல்
வளையவள் எழாலின் மைந்தர் பாடுக வல்லை என்றாள். கசுக

வேறு

656 வேயே திரள்மென்தோள் வில்லே கொடும்புருவம்
வாயே வளர்பவளம் மாந்தளிரே மாமேனி
நோயே முலைசுமைப்ப தென்றார்க் கருகிருந்தார்
ஏயே இவளொருத்தி பேடியோ என்றார்
எரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ என்றார். கசுஉ

657 பலிகொண்டு பேராத பாசம் இவள்கண்
ஒலிகொண் டுயிருண்ணுங் கூற்றமென் றெல்லே
கலிகொண்டு தேவர் முலைகரந்து வைத்தார்
இலைகொண்ட பூணினீர் என்றெழினி சேர்ந்தாள்
இலங்குபொற் கிண்கிணியாள் நக்கெழினி சேர்ந்தாள்.

வேறு

658 நுண்துகில் அகலல்குல் கொசித்த வெம்முலை
உண்டிவள் நுசுப்பென உரைக்கு மல்லது
கண்டுணர் கிலாஇடைக் காம வல்லியாழ்
கொண்டவர் குழாத்திடைக் கொடியின் ஒல்கினாள். கசுச

659 பளிக்கொளி மணிச்சுவர் எழினி பையவே
கிளிச்சொலின் இனியவர் நீக்கக் கிண்கிணி
ஒளிக்குமின் றாடவர் உயிர்கள் என்னநொந்(து)
அளித்தவை இரங்கச்சென் றணையில் ஏறினாள். கசுரு

660 உறைகழித் திலங்குவாள் உடற்றுங் கண்ணினாள்
மறையொளி மணிச்சுவர் இடையிட் டித்தலை
இறைவளை யாழ்தழீஇ யிருப்ப அத்தலைக்
கறைகெழு வேலினார் கண்ணி தீந்தவே. கசுசு

661 சிலைத்தொழிற் சிறுநுதற் றெய்வப் பாவைபோற்
கலைத்தொழிற் படஎழீஇப் பாடி னாள்கனிந்(து)

இலைப்பொழில் குரங்கின ஈன்ற தூண்டளிர்
நிலத்திடைப் பறவைமெய்ம் மறந்து வீழ்ந்தவே. ௧௬௭

வேறு

662 கருங்கொடிப் புருவம் ஏறா கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா அணிமணி யெயிறுந் தோன்றா
இருங்கடற் பவழச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார்.

வேறு

663 இசைத்திறத் தனங்கனே அனைய நீர்மையார்
வசைத்திற மிலாதவர் வான்பொன் யாழெழீஇ
விசைத்தவர் பாடலின் வெருவிப் புள்ளெலாம்
அசிப்பபோன் றிருவிசும் படைந்த என்பவே. ௧௬௯

664 மாதர்யாழ் தைவர வந்த மைந்தர்கைக்
கீதத்தால் மீண்டன கேள்விக் கின்னரம்
போதரப் பாடினாள் புகுந்த போயின
தாதலர் தாரினார் தாங்கள் பாடவே. ௧௭௦

665 சுரும்பெழுந் திருந்துணுந் தொங்கல் வார்குழல்
அரும்பெற லவட்கிசை அரசர் தோற்றபின்
நரம்புறு தெள்விளி நவின்ற நான்மறை
வரம்பெறு நெறியவர் மலைதல் மேயினார். ௧௭௧

வேறு

666 திருமலர்க் கமலத் தங்கட் டேனினம் முரல்வ தொப்ப
விரிமலர்க் கோதை பாட எழால்வகை வீரர் தோற்றார்
எரிமலர்ப் பவழச் செவ்வா யின்னரம் புளர மைந்தர்
புரிநரம் பிசைகொள் பாடல் உடைந்தனர் பொன்ன னாட்கே.

667 வால்அரக் கெறிந்த காந்தள் மணியரும் பனைய வாகிக்
கோல்பொரச் சிவந்த கோலக் குவிவிரல் மடந்தை வீணை
நூல்பொரப்புகுந்த நுண்ணூல் வணிகருந் தொலைந்து மாதோ
கால்பொரக் கரிந்த காமர் பங்கயப் பழனம் ஒத்தார். ௧௭௩

668 தேனுயர் மகர வீணைத் தீஞ்சுவை யிவளை வெல்வான்
வானுயர் மதுகை வாட்டும் வார்சிலை யனங்க னாகும்
ஊனுயர் நுதிகொள் வேலீர் ஒழிகஈங் கில்லை யென்றான்
கானுயர் அலங்கல் மாலைக் கட்டியங் காரன் அன்றே. கஎச

669 மறுமுயற் கிவர்ந்த வேக மாசுணம் அடையப் பட்ட
நிறைமதி போன்று மன்னர் ஒளிகுறைந் துருகி னார்
அறுபகல் கழிந்த பின்றை அங்கர்க் காதி நாய்கன்
சிறுவனோர் சிங்க வேற்றை சீவக சாமி என்பான். கஎரு

670 தம்பியுந் தோழன் மாருந் தானுமற் றெண்ணிச் சூழ்ந்து
வெம்பிய வீணைப் போருட் செல்குவம் யாமும் இன்னே
தும்பறப் புத்தி சேனன் சொல்லிது சூரவர்க் கென்னக்
கந்துகற் கவனுஞ் சொன்னான் அவனிது விளம்பி னானே.

671 ஐயனுக் கமைந்த நீரார் அறுபத்து நால்வர் அம்பொன்
வையகத் தமிர்த மன்னார் வாக்கமை பாவை யொப்பார்
எய்திய இளமை மிக்கார் இயைந்தனர் என்று பின்னுங்
கையமை சிலையி னாற்குக் கந்துகன் இதுவுங் கூறும். கஎஎ

672 மறைவல்லாற் குரைக்கும் போழ்தே கோயிலுள் நின்று மாலைப்
பிறைவெல்லும் நுதலி னாளோர் பெண்கொடி வந்து கூந்தல்
உறைசெல நீக்கிப் பைந்தாள் ஒண்மணிக் குவளை நீட்ட
நறைவெல்லு நாக மாலை நோக்கொடு பூக்கொண் டானே.

673 நல்லவள் நோக்கம் நாய்கன் தேர்ந்துபூங் குவளைப் போதின்
அல்லியுட் கிடந்த ஓலை தாளது சலாகை யாதல்
சொல்லுமென் றாய்ந்து கொண்டு துகிலிகைக் கணக்கு நோக்கி
வல்லிதிற் சலாகை சுற்றி ஓலையை வாசிக் கின்றான். கஎசு

674 நம்பனை நகரின் நீக்கிச் சேமத்தால் வைக்க தீயுட்
செம்பொன்போற் பெரிதுஞ் சேர்ந்து செகுத்திட லுற்று நின்றான்
வெம்பினன் காரி யுண்டிக் கடவுளிற் கனன்று வேந்தன்
இம்பரின் றெனக்குச் சொன்னான் இதுபட்ட தடிகள் என்றாள்.

675 ஓலையை அவட்கு நீட்டி ஒண்மணிக் குழையும் முத்து
மாலையும் படுசொ லொற்றி வம்மென மறைய நல்கி
வேலைநெய் பெய்த திங்கள் விரவிய பெயரி னாற்கு
மேலைநாட் பட்ட தொன்று விளம்புவல் கேளி தென்றான்.

676 கடியரங் கணிந்து மூதூர்க் கடல்கிளர்ந் தனைய தெழிப்ப
நடையறி புலவர் ஈண்டி நாடகம் நயந்து காண்பான்
குலையுடை யவனோ டெண்ணிச் சீவகற் கொணர்மின் என்னத்
தொடையல்சூழ் வேலி னானுந் தோழருங் காணச் சென்றார்.

677 நிலம்அறிந் தணிக ஐயன் சீவகன் நெறியின் என்ன
நலை நுதற் பட்டங் கட்டி நகைமுடிக் கோதை சூட்டி
அலர்முலைக் குருதிச் சாந்தும் ஆரமும் பூணுஞ் சேர்த்திக்
குலவிய் குருதிப் பட்டிற் கலைநலங் கொளுத்தி யிட்டான்.

678 திருவிலே சொரிந்து மின்னுங் குண்டலஞ் செம்பொன் ஓலை
உருவுகொள் மதிய மென்ன ஒளிமுகஞ் சுடர ஆக்கிப்
பரியகஞ் சிலம்பு செம்பொற் கிண்கிணி பாதஞ் சேர்த்தி
அரிவையை அரம்பை நாண அணிந்தனன் அனங்கன் அன்னான்.

679 தோற்பொலி முழவும் யாழும் துளைபயில் குழலும் ஏங்கக்
காற்கொசி கொம்பு போலப் போந்துகைத் தலங்கள் காட்டி
மேற்பட வெருவி நோக்கித் தானையை விட்டிட் டொல்கித்
தோற்றினாள் முகஞ்செய் கோலம் துளக்கினாள் மனத்தை யெல்லாம்

680 தெண்மட்டுத் துவலை மாலை தேனொடு துளிப்பத் திங்கள்
உள்நட்ட குவளை போலும் உருவக்கண் வெருவி யாட
விண்விட்டுக் கடவுள் வீழ நுடங்கின புருவம் நெஞ்சம்
பண்விட்ட திருந்து காணும் பன்மணிக் கழலி னார்க்கே. கஅசு

681 செங்கதிர்ச் சிலம்பு செம்பொற் கிண்கிணி சிலம்பக் கோதை
பொங்கப்பொன் னோலை வட்டம் பொழிந்துமின் னுகுப்பப் போர்த்த
குங்குமஞ் சாந்து வேய்ந்து குண்டலந் திருவில் வீச
அங்கதி ராரம் மின்ன அரிவைகூத் தாடு கின்றாள். கஅஎ

682 மருங்குலும் ஒன்று தாய்க்கும் ஒருமக ளாதல் ஓர்ந்தும்
இரும்பினால் இயன்ற நெஞ்சத் திவர்களோ இருந்து காண்க
அரங்கின்மேல் இவளைத் தந்த தாய்கொலோ கயத்தி அன்றேற்
சுரும்புசூழ் கண்ணி சூட்டி யவர்கொலோ கயவர் சொல்லீர்.

வேறு

683 அகிலார் புகைபலாற் சாந்தணியாள் பூச்சாரச்
செல்லாள் செல்விற்
பகலே பகைவளர்த்த பாவை சிறுநுசுப்பொன்
றுண்டே பாவம்

இகலேந் திளமுலைமேற் சாந்தெழுதி முத்தணிந்து
பூவுஞ் சூட்ட
முகிலேந்து மின்மருங்குல் மொய்குழற்றாய் இதுகண்டும்
உளளே பாவம். கஅசூ

வேறு

684 தேந்தாமஞ் செம்பவழத் தாமஞ்செம்பொன்
எரிதாம மின்னுத் திரள்தாமங்கள்
தாந்தா மெனத்தாழ்ந்த பொன்மேகலைத்
தாம வரங்கின்மேல் தாதார்முல்லைப்
பூந்தாமக் கொம்பாடக் கண்டாரெல்லாம்
புனமயிலே அன்னமே பொன்னங்கொம்பே
ஆந்தா மரைமகளே யல்லளாயின்
அமரர்மக ளென்பாரும் ஆயினரே. கசூ௦

685 கொடியார் குளிர்முத்தஞ் சூட்டிவைத்தார்
கொல்வானே குங்குமச்சே றூட்டினார்கள்
அடிசார்ந்து வாழ்வாரையம் முலைகள்தாமே
அழிந்திடுமேற் றாமே யழித்திடுகவென்(று)
ஒடியாத மாத்திரையா னுண்டேநசுப்(பு)
இருந்து காண்பாரும் உளரேசெங்கண்
நெடியான் மகன்சிலையும் அம்பும்வைத்த
நிழல்மதியோ வாண்முகமோ நோக்கிக்காணீர். கசூக

686 நெய்பருகி நீண்டஇருட் கற்றைபோலுங்
குழற்கற்றை கண்டு நிறைகலங்குவார்
மைபருகி நீண்டு மதர்த்தவுண்கண்
வாளேறு பெற்றுனைவார் மாநாகத்தின்
பைபருகும் அல்கு லிலயம்பற்றிப்
பதனமைத்த பாவை நிருத்தம்நோக்கி
மெய்யுருகிக் கண்ணுருகி நெஞ்சுருகித்தாம்
வெயில்வெண்ணெய்ப் பாவைபோல் மெலிகின்றாரே.

வேறு

687 ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல் அனங்க மாலை
ஆடினாள் முறுவல் என்னுந் தோழியை ஐயன் காண

ஓடரி நெடுங்கண் என்னும் ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும் உரைத்துவார் கொடிய னாளே. ௧௯௩

688 வளமலர் அணியப் பெற்றேன் வால்வளை திருத்தப் பெற்றேன்
களனெனக் கரையும் அல்குல் கையினாற் றீண்டப் பெற்றேன்
இளமுலை சுமந்து பெற்ற வருத்தமும் இன்று தீர்ந்தேன்
உளமலி மகளிர் எய்தும் இன்பமும் இன்று பெற்றேன்.

689 என்றவள் அரசன் தன்னை நோக்கலள் இவன்கண் ஆர்வஞ்
சென்றமை குறிப்பிற் றேறிக் கூத்தெலாம் இறந்த பின்றை
நின்றது மனத்துட் செற்றம் நீங்கித்தன் கோயில் புக்கான்
மன்றலர் மடந்தை தன்னை வலிதிற்கொண் டொலிகொள் தாரான்.

690 தேனுடைத் தொழுகுஞ் செவ்வித் தாமரைப் போது புல்லி
ஊனுடை யுருவக் காக்கை யிதழுகக் குடைந்திட் டாங்குக்
கானுடை மாலை தன்னைக் கட்டியங் காரன் சூழ்ந்து
தானுடை முல்லை யெல்லாந் தாதுகப் பறித்திட் டானே.

691 கலையினிற் கன்னி நீக்கித் தாமரைக் கண்கள் தம்மால்
முலையினின் எழுதிச் செவ்வாய் பயந்ததேன் பருகி முள்குஞ்
சிலைவலாய் புல்லு நம்பி சீவக சாமி யோவென்(று)
அலைகடற் புலம்பின் ஓவா தரற்றுமால் அணங்கி னன்னாள்.

692* இந்நகர் தனக்கு மன்னன் யாரெனக் கியம்பு மாதே
மன்னிய வணிகன் மைந்தன் சீவகன் தானே என்னே
உன்னிய நெஞ்சுங் கண்ணும் ஒருங்குடன் அவனுக் காணாய்
என்னைநீ மனத்துள் வையாக் காரணம் யாதோ என்றான்.

693 பிறன்நலம் அரற்றக் கேட்டும் பீடினாற் கனிந்த காம
நறுமல ரணிந்த மாலை நாற்றக்கோர் நான்கு காதம்
உறநடந் தறித லில்லான் ஒண்டொடிக் குருகிப் பின்னுந்
திறனல தமர்க்குச் செப்புந் தீயுமிழ்ந் திலங்கும் வேலான்.

வேறு

694 விலங்கலன்ன வேகவேழம் நான்குவெல்லும் ஆற்றலன்
கலங்கலந் திலங்குமார்பிற் கந்துகன் மகன்னென
நலங்கலந் துரைக்குமாலிந் நன்னகர்க்கு மன்னனே
உலங்கலந்த தோளினீர் உரைமின்நீவிர் என்னவே. ௨௦௦

695 மட்டலர்ந்த தாரினான்இம் மாநகர்க்குள் ஆயிரர்
தொட்டெடுக்க லாவலம்மொர் தோளின்ஏந்தி ஆடினான்
ஒட்டிநாகம் ஓரிரண்டெ டுக்கலாத கல்லினை
விட்டலர்ந்த போதுபோல ஏந்தல்ஏந்தி நீக்கினான். ௨௦௧

696 வெஞ்சிலையின் வேடர்வெள்ளம் அப்புமாரி தூவலின்
எஞ்சலின்றி நம்படை இரும்முறை யுடைந்தபின்
மஞ்சுசூழ் கணைம்மழை பொழிந்துமா நிரைபெயர்த்(து)
அஞ்சிலோதி யார்புனைந்த செஞ்சொல்மாலை சூடினான்.

697 தீம்பய றியன்றசோறு செப்பின்ஆயி ரம்மிடா
நீங்கலா நறுநெய்வெள்ளங் கன்னல்ஆயி ரங்குடம்
ஏந்துவித்து நாமிசைய வந்துதந்து நீக்கினான்
ஆங்குநாம் பசித்தசைந்த காலையன்றவ் வண்ணலே. ௨௦௩

698 இன்னனென்ன இன்புறான் இழந்தனன் அரசென
என்னைவௌவும் வாயில்தான் என்னுஞ்சூழ்ச்சி தன்னுளான்
அன்னதால் அரில்தப அறிந்துகூத்தி கூறினாள்
இன்னதாற் படையமைத் தெழுமினென் றியம்பினான். ௨௦௪

வேறு

699 தாதைதான் உரைத்த எல்லாந் தன்னுயிர்த் தோழன் கூறக்
கோதைமுத் தணிந்த மார்பன் கூறெயி றிலங்க நக்காங்(கு)
ஏதமொன் றில்லைச் சேறும் என்றலும் இலங்கு வாட்கைப்
போதுலாங்கண்ணி மைந்தர் போர்ப்புலிக் குழாத்திற் சூழ்ந்தார்.

700 கண்ணுதற் கடவுள் சீறக் கனையெரி குளித்த காமன்
மண்மிசைத் தோன்றி யன்ன வகைநல முடைய காளை
தெண்மணி யார மார்பன் திருநுதல் மகளிர் நெஞ்சத்(து)
உள்நிறை பருகும் வண்தார் உருவமை திருவின் மிக்கான்.

701 கருநெறி பயின்ற குஞ்சிக் காரகில் கழும வூட்டி
வரிநிற வண்ண மாலை வலம்பட மிலைச்சி வாளார்
திருநிற முகத்திற் கேற்பச் செம்பொனோர் ஓலை சேர்த்தி
எரிநிறக் குழையோர் காதிற் கிருளறச் சுடர வைத்தான்.

702 தென்வரைப் பொதியிற் றந்த சந்தனத் தேய்வை தேங்கொள்
மன்வரை யகலத் தப்பி வலம்புரி யாரந் தாங்கி

மின்விரித் தனைய தொத்து விலைவரம் பறிய லாகா
இன்நுரைக் கலிங்கம் ஏற்ப மருங்கினுக் கெழுதி வைத்தான்.

703 இரும்பறக் கழுவி யெஃகின் இருளற வடிக்கப் பட்ட
அரும்பெறற் சுரிகை அம்பூங் கச்சிடைக் கோத்து வாங்கிப்
பெருந்தகைக் குரிசில் கொண்டு பெருவலஞ் சுடர வீக்கித்
திருந்திழை மகளிர் வெஃகுந் தேவிளங் குமரன் ஒத்தான்.

704 வரைவிழித் திமைப்ப தொக்கும் வாலொளி யார மார்பின்
விரைவழித் தினைய ரெல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி
நுரைகிழித் தனையநொய்ம்மை நுண்துகில்மருங்குல் சேர்த்தி
உரைகிழித் துண்ணும் ஒப்பின் ஓவியப் பாவை ஒத்தார்.

705 அரக்குநீர் எறியப் பட்ட அஞ்சனக் குன்றம் அன்ன
திருக்கிளர் ஓடை சூழ்ந்த செம்புகர் நெற்றித் தாகி
உருக்கியூன் உண்ணும் வேகத் துறுபுலி யனைய நாகம்
அருக்கனோர் குன்றஞ் சேர்ந்தாங் கண்ணல்தான் ஏறி னானே.

706 விடுகணை விசையின் வெய்ய விளங்கொளி இவுளித் திண்தேர்
கடுநடைக் கவரி நெற்றிக் காலியற் புரவி காய்ந்து
வடிநுனை யொளிறு மாலை வாட்படை மறவர் சூழ
அடுதிரைச் சங்கம் ஆர்ப்ப அணிநகர் முன்னி னானே. உகஉ

707 தோற்றனள் மடந்தை நல்யாழ் தோன்றலுக் கென்று நிற்பார்
நோற்றனள் நங்கை மைந்தன் இளநலன் நுகர்தற் கென்பார்
கோற்றொடி மகளிர் செம்பொற் கோதையுங் குழையும் மின்ன
ஏற்றன சொல்லி நிற்பார் எங்கணும் ஆயி னாரே. உகஙு

வேறு

708 சுருநிறக் கொடுங்குழை சுழன்றெருத் தலைத்தர
அருமலர்த் தெரியலான் அழன்றுநோக்கி ஐயெனப்
பொருபனப் பொலிவெனும் மணிக்கைமத்தி கையினால்
அருவிவந்து தோன்றினான் அனங்கனன்ன அண்ணலே.

709 குனிகொள்பாக வெண்மதிக் கூரிரும்பு தானுறீஇப்
பனிகொள்மால் வரையெனப் படுமதக் களிறிரீஇ
இனிதிழிந் தினையரேத்த இன்னகிற் கொழும்புகை
முனியவுண்ட குஞ்சியான் முரண்கொள்மாட முன்னினான்.

710 புதிதினிட்ட பூந்தவிசின் உச்சிமேல் நடந்தவண்
புதிதினிட்ட மெல்லணைப் பொலிந்தவண்ணம் போகுயூர்
மதியமேறி வெஞ்சுடர் வெம்மைநீங்க மன்னிய
உதயமென்னும் மால்வரை உவந்திருந்த தொத்ததே. ௨௧௬

711 முருகுவிம்மு கோதையார் மொய்யலங்கல் வண்டுபோற்
பருகுவான் இவள்நலம் பாரித்திட்ட இந்நகர்
உருகுமைங் கணையொழித் துருவிளைய காமனார்
கருதிவந்த தென்றுதங் கண்கள்கொண்டு நோக்கினார். ௨௧௭

712 முனைத்திறத்து மிக்கசீர் முனைவர்தம் முனைவனார்
வனப்புமிக்க வர்களின் வனப்புமிக் கினியனா
நினைத்திருந் தியற்றிய நிருமித மகனிவன்
கனைத்துவண் டுளர்ந்ததார்க் காளைசீவ கன்னரோ. ௨௧௮

713 பொன்னைவிட்ட சாயலாள் புணர்முலைத் தடத்தினால்
மின்னைவிட் டிலங்குபூண் விரைசெய்மார்பம் ஒலையா
என்னைபட்ட வாறரோ எழுதிநங்கை யாட்கொள்வான்
மன்னும்வந்து பட்டனன் மணிசெய்வீணை வாரியே. ௨௧௯

714 இனையகூறி மற்றவள் தோழிமாரும் இன்புற
வனையலாம் படித்தலா வடிவிற்கெல்லை யாகிய
கனைவண்டோதி கைதொழுங் கடவுள்கண்ணிற் கண்டவர்
எனையதெனைய தெய்தினார் அனையதனைய தாயினார். ௨௨௦

வேறு

715 குட்டநீர்க் குவளை யெல்லாங் கூடிமுன் நிற்ற லாற்றாக்
கட்டழகுடையகண்ணாள் நிறையெனுஞ் சிறையைக்கைபோய்
இட்டநாண் வேலி யுந்திக் கடலென எழுந்த வேட்கை
விட்டெரி கொளுவ நின்றாள் எரியுறு மெழுகின் நின்றாள்.

716 நலத்தைமத் தாக நாட்டி நல்வலி யிளமை வாராக்
குலப்பிறப் பென்னுங் கையாற் கோலப்பா சங்கொ ளுத்திக்
கலக்கியின் காமம் பொங்கக் கடைந்திடு கின்ற காளை
இலைப்பொலியலங்கல்மார்பம் இயைவதென் றுருகுங்கொல்லோ.

717 தீங்கரும் பெருத்திற் றாங்கி ஈயின்றி யிருந்த தீந்தேன்
நாம்கணாற் பருகி யிட்டு நலனுணப் பட்ட நம்பி

பூங்குழல் மகளிர் முன்னர்ப் புலம்பல்நீ நெஞ்சே யென்றாள்
வீங்கிய காமம் வென்றார் விளைத்தஇன் பத்தொ டொப்பாள்.

718 கண்ணெனும் வலையி னுள்ளான் கையகப் பட்டிருந்தான்
பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப் புடைய நம்பி
எண்ணின்மற் றியாவ னுங்கொல் என்னிதற் படுத்த எந்நல்
ஒண்ணிற வுருவச் செந்தீ யுருவுகொண் டனைய வேலான்.

719 யாவனோ யானு மாக அருநிறைக் கதவம் நீக்கிக்
காவல்என் நெஞ்ச மென்னுங் கன்னிமா டம்பு குந்து
நோவஎன் உள்ளம் ய்ாத்தாய் நின்னையும் மாலை யாலே
தேவரிற் செறிய் யாப்பென் சிறிதிடைப் படுக என்றாள்.

720 கழித்தவே லேறுபெற்ற கடத்திடைப் பிணையின் மாழ்கி
விழித்துவெய் துயிர்த்து மெல்ல நடுங்கித்தன் தோழி கூந்தல்
இழுக்கிவண் டிரியச் சேர்ந்தோர் கொடிப்புல்லுங் கொடியிற் புல்லி
எழிற்றகை மார்பற் கின்யா ழிதுவுய்த்துக் கொடுமோ என்றாள்.

வேறு

721 தடங்கணாள் பணியினாற் றானவ்வீணை யொன்றினை
நெடுங்கணாள் எழினியை நீக்கியுய்த்து நீட்டினாள்
மடங்கலன்ன மொய்ம்பினான் வருகவென்று கொண்டுதன்
கிடந்தஞானத் தெல்லையைக் கிளக்கலுற்று நோக்கினான். உஉஎ

வேறு

722 சுரந்து வானஞ் சூல்முதிர்ந்து
மெய்ந்நொந் தீன்ற துளியேபோல்
பரந்த கேள்வித் துறைபோய
பைந்தார் மார்பன் பசும்பொன்யாழ்
நரம்பு தேனார்த் தெனத்தீண்டி
நல்லாள் வீணை பொல்லாமை
இருந்த முலையாள் நின்றாளை
நோக்கி யிசையின் இதுசொன்னான். உஉஅ

723 நீர்நின் றிளகிற் றிதுவேண்டா
நீரின் வந்த திதுபோக
வார்நின் றிளகு முலையினாய்
வாட்புண் ணுற்ற திதுநடக்க

ஒரு முருமே ஹுண்ட திது
ஒழிக ஒண்பொ னுகுகொடியே
சீர்சால் கணிகை சிறுவன்போற்
சிறப்பின் றம்ம இதுஎன்றான். உஉகூ

724 கல்சேர் பூண்கொள் கதிர்முலையாய்
காமத் தீயால் வெந்தவர்போற்
கொல்லே யுழவர் சுடப்பட்டுக்
குரங்கி வெந்த திதுகளிறு
புல்ல முரிந்த தெனப்போக்கித்
தூம மார்ந்த துகிலுறையுள்
நல்யாழ் நீட்ட அதுகொண்டு
நங்கை நலத்த திதுஎன்றான். உநூ0

வேறு

725 இருநில மடந்தை ஈன்ற திருவிசும் பென்னுங் கைத்தாய்
திருநல மின்னுப் பொன்ஞாண் முகில்முலே மாரித் தீம்பால்
ஒருநலங் கவினி யூட்ட வுண்டுநோய் நான்கும் நீங்கி
அருநலங் கவினி வாள்வா யரிந்திது வந்த தென்றான். உநூக

726 தீந்தொடை நரம்பின் தீமை சிறிதலாப் பொழுதும் ஓதிப்
பூந்தொடை அரிவை காணப் புரிநெகிழ்த் துரோமங் காட்டத்
தேங்கமழ் ஓதி தோற்றாள் செல்வனுக் கென்ன மைந்தன்
வாங்குபு நபுலன் கையுள் வார்புரி நரம்பு கொண்டான். உநூஉ

727 பணிவரும் பைம்பொற் பத்தர் பல்வினேப் பவள ஆணி
மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற ஒழுகி யன்ன அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்
கணிபுகழ் காளே கொண்டு கடலகம் வணக்க லுற்றான். உநூந

728 குரல்குர லாகப் பண்ணிக் கோதைதாழ் குஞ்சி யான்தன்
விரல்கவர்ந் தெடுத்த கீதம் மிடறெனத் தெளிதல் தேற்றார்
சுரரொடு மக்கள் வீழ்ந்தார் சோர்ந்தன புள்ளும் மாவும்
உருகின மரமுங் கல்லும் ஓர்த்தெழீஇப் பாடு கின்றான்.

வேறு

729 கன்னி நாகங் கலங்க மலங்கி
மின்னும் இரங்கும் மழைஎன் கோயான்

மின்னும் மழையின் மெலியும் அரிவை
பொன்ஞாண் பொருத முலைஎன் கோயான். உ௬௫

730 கருவி வானங் கான்ற புயலின்
அருவி அரற்றும் மலைஎன் கோயான்
அருவி அரற்று மலைகண் டழுங்கும்
மருவார் சாயல் மனம்என் கோயான். உ௬௬

731 வான மீனின் அரும்பி மலர்ந்து
கானம் பூத்த கார்என் கோயான்
கானம் பூத்த கார்கண் டழுங்கும்
தேனார் கோதை பரிந்தென் கோயான். உ௬௭

வேறு

732 அண்ணல்யாழ் நரம்பை யாய்ந்து மணிவிரல் தவழ்ந்த வாறும்
பண்ணிய இலயம் பற்றிப் பாடிய வனப்பும் நோக்கி
விண்ணவர் வீணை வீழ்த்தார் விஞ்சையர் கனிந்து சோர்ந்தார்
மண்ணவர்மருளின் மாய்ந்தார் சித்தரும் மனத்துள்வைத்தார்.

733 வீழ்மணி வண்டு பாய்ந்து மிதித்திடக் கிழிந்த மாலைச்
சூழ்மணிக் கோட்டு வீணைச் சுகிர்புரி நரம்பும் நம்பி
ஊழ்மணி மிடறும் ஒன்றாய்ப் பணிசெய்த வாறு நோக்கித்
தாழ்மணித் தாம மார்பிற் கின்னரர் சாம்பி னாரே. உ௬௯

734 விண்ணவர் வியப்ப விஞ்சை வீரர்கள் விரும்பி ஏத்த
மண்ணவர் மகிழ வான்கட் பறவைமெய்ம் மறந்து சோர
அண்ணல்தான் அனங்கன் நாணப் பாடினான் அரசரெல்லாம்
பண்ணமைத் தெழுதப் பட்ட பாவைபோ லாயி னாரே. உ௭௦

வேறு

735 பருந்தும் நிழலும்போற் பாட்டும் எழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தனஎன் றெண்ணி
விருந்தாக யாழ்பண்ணி வீணைதான் தோற்பான்
இருந்தாள் இளமயில்போல் ஏந்திலைவேற் கண்ணாள். உ௭௧

736 கோதை புறந்தாழக் குண்டலமும் பொற்றோடும்
காதின் ஒளிர்ந்திலங்கக் காமர் நுதல்வியர்ப்ப
மாதர் எருத்தம் இடங்கோட்டி மாமதுர
கீதங் கிடையிலாள் பாடத் தொடங்கினாள். உ௭௨

வேறு

737 இலையார் எரிமணிப்பூண் ஏந்து முலையும்
சிலையார் திருநுதலும் செம்பசலை மூழ்க
மலையார் இலங்கருவி வாள்போல மின்னும்
கலையார்தீஞ் சொல்லினைக் காணார்கொல் கேள்வர். உசங

738 பிறையேர் திருநுதலும் பேரமருண் கண்ணும்
பொறையார் வனமுலையும் பூம்பசலை மூழ்க
நிறைவாள் இலங்கருவி நீள்வரைமேல் மின்னும்
கறைவேலுண் கண்ணினைக் காணார்கொல் கேள்வர். உசச

739 அரும்பேர் வனமுலையும் ஆடமைமென் தோளும்
திருந்தேர் பிறைநுதலும் செம்பசலை மூழ்க
நெருங்கார மணியருவி நீள்வரைமேல் மின்னும்
கரும்பார்தீஞ் சொல்லினைக் காணார்கொல் கேள்வர். உசரு

வேறு

740 பண்ணொன்று பாட லதுவொன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும் வாள்நரம்பின் மேல்நடவா
விண்ணின் றியங்கி மிடறு நடுநடுங்கி
எண்ணின்றி மாதர் இசைதோற் றிருந்தனளே. உசசு

741 மையார் நெடுங்கண்ணாள் மாமணியாழ் தானுடைந்து
கையா நடுங்கா நனிநாண மீதூராப்
பொய்யாதோர் குன்றெடுப்பாள் போல்மெலிந்து பொன்மாலை
பெய்பூங் கழலாற்குப் பெண்ணரசி ஏந்தினளே. உசஎ

742 மெல்லென் சிலம்பரற்ற மேகலைகள் மின்னுமிழ
நல்ல பெடையன்னம் நாண அடியொதுங்கி
ஒல்லென் உயர்தவமே செய்ம்மின் உலகத்தீர்
எல்லீரும் என்பாள்போல் ஏந்தல்மேல் வீழ்த்தனளே. உசஅ

வேறு

743 நாகத்துப் படங்கொள் அல்குல் நலங்கிளர் செம்பொன் மாலை
மேகத்துப் பிறந்தோர் மின்னு மணிவரை வீழ்ந்த தேபோல்
ஆகத்துப் பூட்டி மைந்தன் அடிதொழு திறைஞ்சி நின்றாள்
போகத்து நெறியைக் காட்டும் பூமகள் புணர்ந்த தொப்பாள்.

744 செம்மல ரடியும் நோக்கித் திருமணி அல்குல் நோக்கி
வெம்முலைத் தடமும் நோக்கி விரிமதி முகமும் நோக்கி
விம்மிதப் பட்டு மாதோ விழுங்குவான் போல வாகி
மைம்மலர்த் தடங்கண் நங்கை மரைமலர்த் தேவி யென்றான்.

745 கோதையுந் தோடு மின்னக் குண்டலந் திருவில் வீச
மாதரம் பாவை நாணி மழைமினின் ஒசிந்து நிற்பக்
காதலந் தோழி மார்கள் கருங்கயற் கண்ணி னாளை
ஏதமொன் றின்றிப் பூம்பட் டெந்திர எழினி வீழ்த்தார்.

746 வெள்ளிலை வேற்க ணாளைச் சீவகன் வீணை வென்றான்
ஒள்ளியன் என்று மாந்தர் உவாக்கடல் மெலிய ஆர்ப்பக்
கள்ளராற் புலியை யேறு காணிய காவல் மன்னன்
உள்ளகம் புழுங்கி மாதோ உரைத்தனன் மன்னர்க் கெல்லாம்.

747 வடதிசைக் குன்றம் அன்ன வான்குலம் மாசு செய்தீர்
விடுகதிர்ப் பருதி முன்னர் மின்மினி விளக்கம் ஒத்தீர்
வடுவுரை என்று மாயும் வாளமர் அஞ்சி னீரேல்
முடிதுறந் தளியிர் போகி முனிவனம் புகுமின் என்றான்.

748 முல்லைப்பூம் பந்து தன்னை மும்மதக் களிற்று வேலிக்
கொல்லைப்பூங் குன்றஞ் செய்தீர் குங்குமக் குழங்கல் மாலை
மல்லுப்பூத் தகன்ற மார்பீர் புகழெனும் போர்வை போர்த்துச்
செல்வப்பூ மகளும் நாளை அவனுழைச் செல்லும் என்றான்.

749 திருமக ளிவளைச் சேர்ந்தான் தெண்டிரை யாடை வேலி
இருநில மகட்குஞ் செம்பொன் நேமிக்கும் இறைவன் ஆகும்
செருநிலத் திவனை வென்றீர் திருவினுக் குரியீர் என்றான்
கருமன நச்சு வெஞ்சொற் கட்டியங் காரன் அன்றே. ௨௫௫

750 அனிச்சப் பூங்கோதை சூட்டின் அம்மனை யோஎன் றஞ்சிப்
பனிக்குநுண் ணுசுப்பிற்பாவை யொருத்திநாம் பலரென் றெண்ணித்
துனித்துநீர் துளங்கல் வேண்டா தூமணிச் சிவிறி நீர்தூய்த்
தனிக்கயத் துழக்கி வென்றீர் தையலைச் சார்திர் என்றான்.

751 வெந்திற லாளன் கூற வேகமோ டுரறி மன்னர்
பந்தணி விரலி னாள்தன் படாமுலைப் போகம் வேண்டி
கந்தெனத் திரண்ட திண்டோட் கந்துகன் சிறுவன் காயும்
ஐந்தலை அரவின் சீற்றத் தாரழற் குளிக்க லுற்றார். ௨௫௭

752 பண்ணியல் யானை மேலான் பதுமுகன் பரவைத் தானை
கண்ணிய துணர்ந்து கல்லாக் கட்டியங் காரன் நெஞ்சில்
எண்ணிய தெண்ணி மன்னர் இகல்மலைந் தெழுந்த போழ்தில்
தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்று கின்றான்.

753 இசையினில் இவட்குத் தோற்றும் யானையால் வேறும் என்னின்
இசைவதொன் றன்று கண்டீர் இதனையான் இரந்து சொன்னேன்
வசையுடைத் தரசர்க் கெல்லாம் வழிமுறை வந்த வாறே
திசைமுகம் படர்க வல்லே தீத்தொட்டாற் சுடுவ தன்றே.

754 தோளினான் மிடைந்து புல்லுந்தொண்டைவா யமிர்தம் வேட்டோர்
வாளினான் மலைந்து கொள்ளின் வாழ்கநுங் கலையும் மாதோ
கோளுலாஞ் சிங்கம் அன்னான் கொடியினை யெய்தப் பெற்றீர்
தாளினான் நொய்யி ராகித் தரணிதா விடுமின் என்றான். ௨௬௦

755 நாறுமும் மதத்தி னாலே நாகத்தை யிரிக்கும் நாகம்
ஆறிய சினத்த தன்றி அதிங்கத்தின் கவளங் கொண்டால்
வேறுநீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகா
நாறித்தேன் ஒழுகுங் கோதை நம்பிக்கும் அன்னள்என்றான்.

756 இளவள நாகு புல்லி யினத்திடை யேறு நின்றால்
உளவளங் கருதி யூக்கல் உழவெரு துடைய தாமே
தளவள முகைகொள் பல்லாட் சீவகன் தழுவி நின்றாற்
கொளவுளைந் தெழுவ தல்லாற் கூடுதல் நுங்கட் காமோ. ௨௬௨

757 எழுந்துவிண் படருஞ் சீயம் பெட்டைமேல் இவர்ந்து நின்றால்
மழுங்கமேற் சென்று பாய்தல் மறப்புலி தனக்கும் ஆகா
கொழுங்கயற் கண்ணி னாளைச் சீவக குமரன் சூழ்ந்தால்
அழுங்கச்சென் றணைதல் பேய்காள் அனங்கற்கும் ஆவ துண்டோ.

758 மத்தரிப் புடைய நாகம் வாய்நிறை கடாத்த தாகி
உத்தமப் பிடிக்கண் நின்றால் உடற்றுதல் களபக் காமே
பத்தினிப் பாவை நம்பி சீவகன் பால ளானால்
அத்திறங் கருதி யூக்கல் அரசிர்காள் நுங்கட் காமோ. ௨௬௪

759 தூமத்தாற் கெழீஇய கோதை தோட்டுணை பிரித்தல் விண்மேற்
றாமத்தாற் கெழீஇய மார்பின் இந்திரன் தனக்கு மாகா(து)
ஏமுற்றீர் இன்னுங் கேண்மின் இரதியைப் புணர்தும் என்று
காமத்தாற் கெழுமி னார்க்குக் காமனிற் பிரிக்க லாமே. ௨௬௫

760 எம்மைநீர் வெல்லப் பெற்றீர் வென்றபின் இருந்த வேந்தன்
உம்மையும் வேறு செய்து நும்முளே பொருது வீந்தால்
வெம்மைசெய் துலக மெல்லாம் ஆண்டிட விளைக்கும் நீதி
அம்மமற் றதனை ஓரீர் அவன்கருத் தன்ன தென்றான். ௨௬௬

761 சொற்றிறல் அன்றி மன்னீர் தொக்குநீர் காண்மின் எங்கள்
விற்றிறல் என்று வில்வாய் வெங்கணை தொடுத்து வாங்கிக்
கற்றிரள் கழிந்து மண்ணுட் கரந்தது குளிப்ப எய்திட்(டு)
இற்றெமர் கல்வி என்றான் இடியுரு மேற்றோ டொப்பான்.

762 ஆழியங் கழனி தன்னுள் அம்பொடு கணையம் வித்திச்
சூழ்குடர்ப் பிணங்கள் மல்க விளைத்தபின் தொழுதிப் பல்பேய்க்(கு)
ஊழ்படு குருதி நெய்யின் இறைச்சிச்சோ றாட்டி வென்றி
வீழ்தர வேட்டு நின்றார் எய்துப வெகுளல் வேண்டா. ௨௬௮

763 போர்ப்பறை முழங்கி எங்கும் பொருவளி புடைக்கப் பட்ட
கார்க்கடல் போன்று சேனை கலக்கமோ டரறி யார்ப்பத்
தார்ப்பொலி மார்பன் ஓர்த்துத் தன்கையில் வீணை நீக்கி
வார்ப்பொலி முலையி னாட்கு வாய்திறந் திதனைச் சொன்னான்.

வேறு

764 தேய்ந்து நுண்ணிடை நைந்துகச் செப்பினைக்
காய்ந்த வெம்முலை யாய்நின கண்கள்போல்
ஆய்ந்த அம்பினுக் காரிரை யாகிய
வேந்தர் வேண்டிநின் றார்விம்மல் நீயென்றான். ௨௭௦

765 அண்ணல் கூறலும் அம்மனை யோவெனாத்
துண்ணென் நெஞ்சின ளாய்த்துடித் தாயிழை
கண்ணின் நீர்முலை பாயக் கலங்கினாள்
வண்ண மாக்கவின் சொல்லொடு மாய்ந்ததே. ௨௭௧

766 மேவி நம்பிக்கு வெம்பகை யாக்கிய
பாவி யேனுயிர் பாழுடல் பற்றுவிட்(டு)
ஆவி யோநட வாயென் றழுதுதன்
காவி வாட்கண் கலங்க அதுக்கினாள். ௨௭௨

767 பாழி நம்படை மேலதிப் பாரெலாம்
நாழி லாட்டி நடக்கிக் குடித்திடும்

வாழி நங்கைகண் டாயென்று வாட்கணீர்
தோழி பூந்துகிற் றானையில் நீக்கினாள். ௨௭௩

768 எங்கள் பெண்மையும் ஈர்ம்மலர்த் தார்மன்னர்
தங்கள் ஆண்மையுஞ் சால்வது காண்டுமென்(று)
இங்கு வார்முர லுங்கலை யேந்தல்குல்
நங்கை வாட்படை நங்கையைச் சூழ்ந்தவே. ௨௭௪

வேறு

769 கூன்களுங் குறளும் அஞ்சிக் குடர்வெந்து கொழும்பொற் பேழை
தான்கொளப் பாய ஓடிச் சாந்துக்கோய் புகிய செல்வ
தேன்கொள்பூ மாலை சூடித் தாமமாய்த் திரண்டு நிற்ப
வான்பளிங் குருவத் தூணே மறைபவு மாய அன்றே. ௨௭௫

770 இங்கித நிலைமை நோக்கி முறுவலித் தெரிபொன் மார்பன்
நங்கையைக் காக்கும் வண்ணம் நகாநின்று மொழிந்து பேழ்வாய்ச்
சிங்கந்தான் கடிய தாங்கோர் செழுஞ்சிங்க முழக்கிற் சீறிப்
பொங்கிமேற் செல்வ தேபோற் பொலங்கழல் நரலச் சென்றான்.

771 பதுமுக குமரன் மற்றிப் பாவையைக் காவ லோம்பி
மதுமுக மாலை நெற்றி மதகளி றுந்தி நிற்ப
நுதிமுக வாளும் வில்லும் நுண்ணிலை வேலும் ஏந்திச்
சதுமுக மாகச் சேனை நமர்தலைப் பெய்க என்றான். ௨௭௭

772 வட்டுடை மருங்கிற் சேர்த்தி வாளிரு புடையும் வீக்கித்
தட்டுடைப் பொலிந்த திண்டேர் தனஞ்சயன் போல ஏறிக்
கட்டளைப் புரவி சூழ்ந்து கால்புடை காப்ப ஏவி
அட்டுயிர் பருகுங் கூற்றங் கோளெழுந் தனைய தொத்தான்.

773 புள்ளிரைப் பன்ன பொற்றார்ப் புரவித்தேர் இரவி போல
உள்ளுருத் தெழுந்து பொங்கி யுடல்சினங் கடவ நோக்கி
முள்ளெயி றிலங்க நக்கு முடிக்குழா மன்னர் கேட்பக்
கள்ளவிழ் அலங்கல் மார்பன் கார்மழை முழக்கிற் சொன்னான்.

774 முருகுலா முல்லை மாலை மூப்பிலா முலையி னார்தம்
அருகுலாம் புலவி நோக்கத் தமிர்தம்இன் றுகுப்பர் கொல்
கருதலாம் படிய தன்றிக் கலதியம் பிவையுங் காய்ந்த [லோ
பொருதுலாம் புகழை வேட்டிவ் வெஃகமும் புகைந்த தென்றான்.

775 வாணிகம் ஒன்றுந் தேற்றாய் முதலொடுங் கேடு வந்தால்
ஊணிகந் தீட்டப் பட்ட ஊதிய வொழுக்கின் நெஞ்சத்(து)
ஏணிகந் திலேசு நோக்கி யிருமுதல் கெடாமை கொள்வார்
சேணிகந் துய்யப் போகின் செறிதொடி யொழிய என்றார்.

776 தம்முடைப் பண்டந் தன்னைக் கொடுத்தவருடைமை கோடல்
எம்முடை யவர்கள் வாழ்க்கை எமக்குமஃ தொக்கும்அன்றே
அம்முடி யரசிர்க் கெல்லாம் என்கையில் அம்பு தந்து
நும்முடைத் திருவுந் தேசும் நோக்குமின் கொள்வல் என்றான்.

777 மட்டுலாந் தாரி னாய்நின் வனப்பினோ டிளமை கல்வி
கெட்டுலாய்ச் சிலம்பு செம்பொற் கிண்கிணி மகளிர் கோங்க
மொட்டுலா முலைகள் பாய்ந்த அகலத்துச் சரங்கள் பாயப்
பட்டுலாய்க் கிடக்க லுற்றாய் என்சொலாய் பாவி யென்றார்.

778 எரிசுடர்ப் பரிதி முன்னர் இருளென உடைந்து நீங்கப்
பொருபடை மன்னர் நுங்கள் புறக்கொடை கண்டு மற்றிம்
முருகுடைக் குழலி னாள்தன் முகிழ்முலை கலப்பல் அன்றேல்
இருசுடர் வழங்கும் வையத் தென்பெயர் கெடுக என்றான்.

வேறு

779 ஆள்மர வாள்நிலத் தப்பு வேல்செய்முட்
காண்வரு காட்டினக் களிற்று நீள்வரை
நீள்நில வேந்தெனும் வேழப் பேரினம்
பூண்முலைப் பிடிக்கவாய்ப் போர்செய் குற்றவே. ௨௮௫

780 தாழிருந் தடக்கையும் மருப்புந் தம்பியார்
தோழர்தன் தாள்களாச் சொரியு மும்மதம்
ஆழ்கடற் சுற்றமா அழன்று சீவக
ஏழுயர் போதகம் இனத்தோ டேற்றதே. ௨௮௬

781 ஓடையுடை வேந்தெனுங் குழாங்கொள் நாகமுங்
கொடியெனும் பிடியுடைக் குமர வேழமும்
வெடிபடு போர்த்தொழில் காண விஞ்சையர்
இடியுடை யிளமழை நெற்றி யேறினார். ௨௮௭

782 கரைபொரு கடலொடு கார்க ளுற்றென
முரசொடு வரிவளை முழங்கி யார்த்தன

அரசரும் அமர்மலைந் தரணம் வீசினர்
குரைகடற் றனைபோர்க் கோலஞ் செய்தவே. உஅஅ

783 தெய்வதம் வணங்குபு செம்பொன் வாயுளிட்(டு)
எய்கணைப் படுமழை சிதறி எங்கணும்
மொய்யமர் மலைந்தனர் முருகு விம்முதார்ச்
செய்கழற் சீவகன் வாழ்க என்னவே. உஅகூ

784 கலந்தது பெரும்படை கணைபெய்ம் மாரிதூஉய்
இலங்கின வாட்குழாம் இவுளி ஏற்றன
விலங்கின தேர்த்தொகை வேழங் காய்ந்தன
சிலம்பின இயமரம் தெழித்த சங்கமே. உகூ0

785 சுற்றணி கொடுஞ்சிலை மேகந் தூவிய
முற்றணி பிறையெயிற் றம்பு மூழ்கலின்
அற்றுவீழ் குழைமுகம் அலர்ந்த தாமரை
மற்றவை சொரிவதோர் மாரி யொத்தவே. உகூக

786 மறப்படை பசித்தன வயிறின் றூர்கெனக்
குறைத்தனர் குஞ்சரங் கூந்தல் மாத்துணித்(து)
இறக்கினர் ஒடுதேர் மைந்த ரின்னுயிர்
துறக்கம்போய்ப் புகுகெனத் துணிய நூறினர். உகூஉ

வேறு

787 ஆற்றுவீர் வம்மின் எம்மோ டாண்மைமேம் படீஇயஎன்பார்
ஏற்றவர் மார்பத் தல்லால் இரும்புமேல் விடாது நிற்பார்
கூற்றம்போற் கொடிய யானைக் கோடுமூழ் தகன்ற மார்பங்
கீற்றுப்பட் டழகி தாகக் கிடக்கெனக் கொடுத்து நிற்பார்.

788 கழித்துவாள் அமலை யாடிக் காட்டுவார் கண்கள் செந்தீ
விழித்துமேற் சென்ற வேழம் வேலினால் விலக்கி நிற்பார்
தெழித்துத்தேர்க்கயிறு வாளால்அரிந்திட்டுப்புரவிபோக்கிப்
பழிப்பில கொணர்ந்து பூட்டு பாகநீ யென்று நிற்பார். உகூச

789 ஐங்கதிக் கலினப் பாய்மாச் சிறிதுபோர் களையீ தென்பார்
வெங்கதிர் வேலிற் சுட்டி வேந்தெதிர் கொண்டு நிற்பார்
நங்கைகல் யாணம் நன்றே நமக்கென நக்கு நிற்பார்
சிங்கமும் புலியும் போன்றார் சீவகன் தோழன் மாரே. உகூரு

790 ஒருங்கவன் பிறந்த ஞான்றே பிறந்தவர் உதயத் துச்சி
இரும்பினாற் பின்னி யன்ன எறுழ்வலி முழவுத் தோளார்
விரும்புவார் வேழ வேற்போர் நூற்றுவர் நூறுகோடிக்(கு)
இருந்தனம் வருக என்பார் இன்னணம் ஆயி னாரே. ௨௯௬

791 கூட்டுற முறுக்கி விட்ட குயமகன் திகிரி போல
வாட்டிறற் றேவதத்தன் கலினமா மாலை வெள்வேல்
ஈட்டம்போழ்ந் தியானை நெற்றி யிருங்குளம் பழுத்தி மன்னர்
சூட்டொடு கண்ணி சூளா மணிசிந்தித் திரியு மன்றே. ௨௯௭

792 பாய்ந்தது கலின மாவோ பறவையோ என்ன உட்கி
வேந்தர்தம் வயிறு வேவ நபுலமா விபுல ரென்பார்
காய்ந்துதம் புரவிக் காமர் குளம்பினாற் களிற்றி னோடை
தேய்ந்துகச் சேர்த்தி மாலைத் திருமுடித் திலகங் கொண்டார்.

793 காயத்தின் குழம்பு தீற்றிக் காரிரும் பெறிய மேகந்
தோயுமுள்ளிலவின்கூன்காய் சினைதொறும் உதிர்வ வேபோல்
மாயங்கொல் மறவர் மாலைப் பைந்தலை யுதிர்ந்த செங்கட்
சேயனான் திருவின் பேரான் செழுஞ்சிலைப் பகழி யாலே.

794 நீல்நிறப் பௌவம் மேய்ந்து சூல்முற்றி நீல மேகம்
வால்நிற விசும்பி னின்ற மாரியின் மறைவ லாளன்
போல்நிறப் புத்தி சேனன் பொன்னணி பகழி சிந்தி
வேல்நிற மன்னர் சேனை கூற்றிற்கு விருந்து செய்தான். ௩00

வேறு

795 வீரவேல் உடம்பெலாஞ் சூழ வெம்புலால்
சோருஞ்செங் குருதியுள் மைந்தர் தோன்றுவார்
ஒருமேல் ஒண்மணிச் சூட்டு வைக்கிய
ஆரமே யமைந்ததேர்க் குழிசி ஆயினார். ௩0௧

796 பொன்னனாள் புணர்முலைப் போகம் வேண்டிய
மன்னரோ டிளையவர் மறலி வாளமர்
இன்னணம் இத்தலை மயங்க அத்தலைக்
கொன்னவில் வேலினான் நிலைமை கூறுவாம். ௩0௨

797 தம்பியைச் சீவகன் நோக்கிச் சாமரை
வெம்பரி மான்செவி வீர மந்திரம்

இம்பர்நம் இடர்கெட இரண்டும் வல்லையாய்
நம்பிநீ மொழிகென நயந்து கூறினன். ௩௦௬

வேறு

798 மந்திரங் கேட்டு நான்கும் வான்எட்டிப் புகுவ வேபோல்
அந்தரத் திவர்ந்த ஆழிக் கால்நிலம் விட்ட மாலைச்
சுந்தரச் சுண்ண மேனி மகளிர்தங் கண்ணு ளிட்ட
மைந்தரும் இரும்பும் ஒவ்வா வான்புலங் காவல் கொண்டார்.

799 வடிகயி றுய்ந்து முட்கோல் வலக்கையாற் றாங்கி வென்றி
முடிகெனப் புரவி முள்ளால் உறுத்தினன் மொழிதல் தேற்றேன்
கடுகிய வண்ணம் மாவின் தாரொலி காமர் பொற்றேர்
படையது செவியுங் கண்ணும் பற்றிநின் றிட்ட அன்றே.

800 அண்ணல்தேர் பறவை யென்பார் அருவமே யுருவம் என்பார்
மண்ணதே வான தென்பார் மனத்ததே முகத்த தென்பார்
கண்ணதே செவிய தென்பார் கலங்கநூல் கழிய நோக்கிப்
பண்ணிய வீதி பற்றி மண்டிலம் பயிற்றி னானே. ௩௦௪

801 அகில்கொண்ட கொள்ளி வட்டம் ஆருயிர் மேயும் நேமி
முகில்கொண்ட மின்னுத் தோற்ப முறுகிய விசையிற் றாகி
மிகல்கொண்ட இகலைத் தானே விழுங்கிய சிறகர்த் தோற்றிப்
பகல்கொண்டு பறக்குந் தோராற் காளைதன் பைம்பொற்றேரே.

802 காலற்ற வயிர மாலை வெண்குடை கவிழ்ந்த பிச்சம்
மேலற்ற கவசம் வீழ்ந்த சாமரை அற்ற வில்நாண்
மாலுற்ற மன்னர் தங்கள் மனங்கையற் றெழுந்த வள்ளல்
கோலொற்றக் குனிந்த வாறே சிலைகுனிந் தொழிந்த தன்றே.

803 நுங்களை வீணை வென்ற நூபுர வடியி னாள்தன்
வெங்களித் தடங்கண் கண்டீர் விருந்தெதிர் கொண்மி னென்று
அங்களி யரசர்க் கெல்லாம் ஓரொன்றும் இரண்டு மாகச்
செங்களிப் பகழி யொப்பித் துள்ளவா றாட்டி னானே. ௩௦௬

804 நன்மன வேந்தர் தங்கள் நகைமணி மார்பம் நக்கிப்
புன்மன வேந்தர் தங்கள் பொன்னணிக் கவசங் கீறி
இன்னுயிர் கவர்ந்து தீமை யினிக்கொள்ளும் உடம்பி னாலுந்
துன்னன்மின் என்ப வேபோற் சுடுசரம் பரந்தஅன்றே. ௩௧௦

805 மீனெறி தூண்டில் போன்ற வெஞ்சிலை நாண்கள் அற்ற
தேனெறி குன்ற மொத்த திண்கச்சை துணிந்த வேழம்
மானெறி காட்டுந் திண்தேர் கயிறற்று மறிய வேந்தர்
ஊனெறி ஆழி யேந்தி ஒய்யென உராறி யார்த்தார். ௬௧௧

806 ஆர்ப்பெதிர் மாரி பெய்யும் அணிநெடுங் குன்றம் போலப்
போர்க்கெதிர் தவருந் ஆர்த்தார் ஆர்த்தலும் பூண்ட வல்விற்
கார்க்கெதிர் மேகம் போலக் கணைமழை கான்ற திப்பால்
ஈர்த்தது குருதி வெள்ளம் இறைச்சிக்குன் றாக்கி னானே.

807 மன்னவர் வெகுண்டு விட்ட மறப்படை யழுவ மாரி
கொன்னுனை யெஃகின் நீக்கிக் குனித்துவிற் பகழி கான்ற
மின்னவிர் இலங்கும் ஒள்வாள் விழித்துயிர் விழுங்க இன்ன
தன்மையாற் றானை நீந்தித் தான்விளை யாடு கின்றான். ௬௧௩

808 வேழவெண் கோட்டுமெல்கோல் தின்றுகூன் குருதி வாளால்
ஆழநா வழித்து நெய்த்தோர் கொப்புளித் தழிந்த மாவின்
சூழ்குடர்க் கண்ணி சூடி நிணத்துகி லுடுத்து வெள்ளென்(பு)
ஊழ்பெற அணிந்து சூற்பேய் ஆடக்கண் டுவந்து நக்கான்.

809 வெளிற்றுடற் குருதி வெள்ள நிலையிது என்ப வேபோற்
களிற்றுகிர்ப் பிறழ்பற் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி
அளித்தவை பாடி யாடக் குறுநரி நக்கு வேழம்
விளித்தன கழுகும் பாறும் விலாவிற்றுக் கிடந்த அன்றே.

810 கடல்விளை யமிர்தங் கண்ட பொழுதின்நெய் கனிந்த தீஞ்சோற்(று)
அடிசிலஞ் சுவையின் மிக்காங் கண்ணலங் குமரன் ஒன்னார்
உடலின்மேற் றிரியுந் திண்தேர் காண்டலும் மைந்தர்நெஞ்சத்
திடல்பிளந் திட்ட எஃகஞ் சுமந்தமர்த் திறத்தின் மிக்கார்.

811 கடாந்திறந் திட்டு வானிற் களகள முழங்கும் வேழம்
படாந்திறந் தாழித் தீயிற் பதுமுகன் காட்டி யிட்டான்
தடாம்பிறை மருப்புத் திண்கை யபராகத் திரங்கள் தம்மாற்
கொடாம்பிற குமரிப் போருட் பிறர்க்கெனக் கொன்ற தன்றே.

812 மருப்பினால் வேழம் வீழா மன்னரை வாலிற் சீறா
முருக்கித்தேர் தடக்கை தன்னால் முழங்கிப்பாய் மாக்கள் காலின்
நெரித்திடாக் கண்ணுட் டீயாற் சுட்டுநீ றாக்கி நெய்த்தோர்
ஒருக்குப்பேய் பாடி யாட உறுசிலை யுடன்று கொண்டான்.

வேறு

813 கொண்டான் பகழி தொடுத்தான்சிலை கால்கு னிந்த(து)
ஒண்டேர் மிசையும் உருவக்களிற் றுச்சி மேலும்
வண்தார்ப் புரவி நிறத்தும்மற மன்னர் மேலுங்
கண்டான் சொரிந்தான் கணைமாரி கலந்த தன்றே. ௩௧௯

814 பைம்பொற் புளகப் பருமக்களி யானை யீட்டஞ்
செம்பொன் நெடுந்தேர்த் தொகைமாக்கடற் சேனை வெள்ளம்
நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லால்
அம்பொன் மணிப்பூ ணரசும்மிலை யென்று நக்கான். ௩௨௦

வேறு

815 ஒருவனே சிலையும் ஒன்றே யுடையதோர் களிற்றின் மேலான்
அருவரை மார்பிற் சென்ற தறிந்திலன் எஃகம் இன்னும்
பொருவரோ மன்ன ரென்றான் பொருசிலை மடக்கி யிட்டார்
வருகளி யானை மீட்டார் வாட்படை வாங்கிக்கொண்டார். ௩௨௧

816 செங்கண்மால் தெழிக்கப் பட்ட வலம்புரித் துருவங் கொண்ட
சங்கம்வாய் வைத்து நம்பன் தெழித்தலுந் தறுக ணாளி
பொங்கிய முழக்கின் வேழப் பேரினம் புலம்பி னாற்போல்
தங்குதார் மன்ன ரெல்லாந் தளர்ந்துகண் சாம்பி னாரே. ௩௨௨

817 அருவரை நாகஞ் சுற்றி ஆழியான் கடைய அன்று
கருவரை குடையப் பட்ட கடலெனக் கலங்கி வேந்தர் [(று)
திருவரை மார்பன் திண்டேர் மஞ்ஞையே முருகன் தானென்
ஒருவரோ டொருவர் கூடா வண்ணமே உடைய லுற்றார்.

818 முளிமரக் காடு மேய்ந்த முழங்கழல் போன்று மைந்தன்
தெளிநலக் குமரர் கூற்றிற் றெழித்தனர் பகழி சிந்தி
ஒளிநல வுப்புக் குன்றம் ஊர்புனற் குடைந்த தேபோற்
களிநல மன்னர் தங்கள் கடற்படை உடைந்த தன்றே. ௩௨௪

819 உறுபடை மன்னர் தம்மை யுடற்றியோன் றானும் இன்றிச்
சிறுபடை யவர்கள் வென்று செகுப்பவோ என்ன வேண்டா
செறியெயிற் றாளி வேழப் பேரினஞ் செகுத்த தன்றே
உறுபுலி யொன்று தானே கலையினம் உடற்றிற் றன்றே. ௩௨௫

820 நல்லவை புரியு மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
அல்லவை புரியு மாந்தர்க் கத்திரம் ஒன்றும் வாயா

வெல்வதோ குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும் வேலாம்
இல்லையே வென்றி தீமை இடங்கொண்ட மனத்தி னார்க்கே.

821 குழையுடை முகத்தி னாள்கட் கோணைப்போர் செய்த மன்னர்
மழையிடை மின்னின் நொய்தா மறைந்தனர் விஞ்சை வேந்தர்
முழையிடைச் சிங்க மன்னன் மொய்யம ரேத்தி யார்த்தார்
விழவுடை வீதி மூதூர் விருப்பொடு மலிந்த தன்றே. ௩௨௭

822 பார்மிசை யுலகம் ஏத்தும் படுகளங் கண்டு பற்றார்
போர்முகக் களிற்று வெண்கோ டுழுதசெஞ் சால்கொள் மார்பிற்
சீர்முகத் தோழர் சூழ்ச் சீவகன் திருவின் சாயல்
வார்முக முலையி னாளை மனைவயிற் கொண்டு புக்கான். ௩௨௮

823 நெய்க்கிழி வைக்கப் பட்டார் நெய்ப்பத்தற் கிடத்தப் பட்டார்
புக்குழி எஃகம் நாடி இரும்பினாற் போழப் பட்டார்
மைக்கிழிந் தொழுகுங் கண்ணீர் மாநிலத் துகுக்கப் பட்டார்
கைக்கிழி கொடுக்கப் பட்டார் கலம்பல நல்கப் பட்டார். ௩௨௯

824 முதுமரப் பொந்து போல முழுமெயும் புண்க ளுற்றார்க்(கு)
இதுமருந் தென்று நல்லார் இழுதுசேர் கவளம் வைத்துப்
பதுமுகன் பரவை மார்பின் நெய்க்கிழி பயிலச் சேர்த்தி
நுதிமயிர்த் துகிற்குப் பாயம் புகுகென நோக்கி னானே. ௩௩௦

825 பார்கெழு பைம்பொன் தன்னாற் பண்ணவ னுருவம் ஆக்கி
ஊர்கெழு விழவுச் செய்தாங் குறுபொரு ளுவப்ப நல்கித்
தார்கெழு மின்னு வீசித் தனிவடந் திளைக்கு மார்பன்
போர்கெழு களத்துப் பாவம் புலம்பொடு போக்கி னானே.

826 செய்தஅப் பாவ மெல்லாந் தீர்த்திடுந் தீர்த்தன் பாதம்
எய்திய சேடங் கூவித் திறைஞ்சுபு தொழுது வாழ்த்தி
மையறு மணியிற் செய்த வலம்புரி யதன்நீர் கொண்டான்
வையகம் அளிக்க நீண்ட வலம்புரித் தடக்கை யானே. ௩௩௨

வேறு

827 கருமணி அழுத்திய காமர் செங்கதிர்த்
திருமணிச் செப்பெனச் செறிந்த வெம்முலை
அருமணி அலம்வரும் அம்பொற் கொம்பனாள்
பெருமணக் கிழமையாம் பேசு கின்றதே. ௩௩௩

828 நான்குநூ றாயிரங் குடத்து நல்லன
வான்தயிர் பால்நெய்யோ டழகி தாநிறைத்(து)
ஊன்திகழ் வேலினான் வேள்விக் கூர்மருள்
கோன்தொறுக் காவலன் கொண்டு முன்னினான். ௫௫௪

829 வளைநிற வார்செநெல் அரிசிப் பண்டியோ(டு)
அளவறு சருக்கரைப் பண்டி ஆர்ந்தன
பிளவியல் பயறுபெய் பண்டி யுப்புநீர்
விளைவமை பண்டியின் வெறுத்த தாங்கோர்பால். ௫௫௫

830 சினைத்துணர் முழவன பலவின் தீங்கனி
கனைத்துவண் டுழல்வன வாழை மாங்கனி
எனைத்துள கிழங்குகாய் குருகொ டேந்திய
சனத்தினாற் றகைத்திடம் பெறாது தானோர்பால். ௫௫௬

831 மரகத மணிப்பசுங் காய்கொள் வான்குலை
கவர்பழுக் காய்க்குலை கனியக் காவுநீஇ
இவர்தரு மெல்லிலைக் கரகம் ஏந்திய
உவரியாய்ச் சொரிந்திடம் பெறாது தானோர்பால். ௫௫௭

832 சண்பகந் தமநகந் தமால மல்லிகை
தண்கழு நீரொடு குவளை தாமரை
வண்டின மிசைகொள வாசப் பூச்சுமை
கொண்டவர் குழாம்பொலி வுற்றதாங் கோர்பால். ௫௫௮

833 ஆர்கெழு குறடுசூட் டாழி போன்றவன்
சீர்கெழு வளமனை திளைத்து மாசனங்
கார்கெழு கடலெனக் கலந்த அல்லதூஉம்
பார்கெழு பழுமரப் பறவை ஒத்தவே. ௫௫௯

834 கையுறை யெழுதினர் கைந்நொந் தேடறுத்(து)
ஐயென இருப்பமற் றன்ன தாதலான்
வையக மருங்கினின் வாழ்நர் மற்றிவன்
செய்தவம் நமக்கிசை கென்னச் சென்றதே. ௫௬௦

835 வாலரி கழுவிய வண்ணச் செம்புனல்
காலியல் இவுளியுங் களிறும் ஆழ்ந்தவட்
கோலநீர்க் குவளையும் மரையும் பூத்துவண்(டு)
ஆலிவெண் குருகுபாய் தடங்க ளானவே. ௫௬௧

836 உடுப்பன துகில்களும் உரைக்கும் நானமும்
தொடுத்தன மாலையுங் குழையுஞ் சாந்தமுங்
கொடுப்பவர் கொள்பவர் வீழ்த்த பல்கலம்
அடுத்துவிண் பூத்ததோ ரழகின் மிக்கதே. ௩௪௨

837 கலங்கழும் அரவமுங் கருனை யாக்குவார்
சிலம்பொலி அரவமும் மிச்சில் சீப்பவர்
இலங்குபொற் கிண்கிணி யிரங்கும் ஓசையும்
உலம்புமால் உவர்க்கடல் ஒலியின் மிக்கவே. ௩௪௩

வேறு

838 முழிவாய் முல்லை மாலை முருகுலாங் குழலி னாளும்
ஊழிவாய்த் தீயோ டொக்கும் ஒளிறுவாட் டடக்கை யானும்
ஆழிவாய் விரலிற் காமன் அம்பொடு சிலைகை யேந்தத்
தாழிவாய்க் குவளை வாட்கட் டையலார் பரவச் சார்ந்தார்.

839 இன்னியம் முழங்கி யார்ப்ப ஈண்டெரி திவள வேதந்
துன்னினர் பலாசிற் செய்த துடுப்பின்நெய் சொரிந்து வேட்ப
மின்னியல் கலச நன்னீர் சொரிந்தனன் வீரன் ஏற்றான்
முன்னுபு விளங்கு வெள்ளி முளைத்தெழ முருகன் அன்னான்.

840 இட்டவுத் தரியம் மின்னும் எரிமணிப் பருமுத் தாரம்
மட்டவிழ் கோதை வெய்ய வருமுலை தாங்க லாற்றா
நெட்டிருங் குழலி னாள்தன் நேர்வளை முன்கை பற்றிக்
கட்டழல் வலங்கொண் டாய்பொற் கட்டில்தான் ஏறி னானே.

841 மந்திரத் தரசன் காதல் மாதரம் பாவை தன்னைக்
கந்துகன் சிறுவன் வேட்ட கடிவினை நொடியின் மற்றோர்
அந்தர விசும்பிற் றேவர்க் கதிபதி யாய கோமான்
இந்திரன் தனக்கு மாகா தென்பது நடந்த தன்றே. ௩௪௭

842 அடிமனை பவள மாக அரும்பொனால் அலகு சேர்த்தி
முடிமணி யழுத்திச் செய்த மூரிக்காழ் நெற்றி மூழ்கக்
கடிமலர் மாலை நாற்றிக் கம்பல விதானங் கோலி
இடுபுகை மஞ்சிற் சூழ மணவறை இயற்றி னாரே. ௩௪௮

843 ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளிமுன் றியற்றிப் பூம்பட்(டு)
எந்திர எழினி வாங்கி யின்முக வாசச் செப்புஞ்

சந்தனச் சாந்தச் செப்புந் தண்மலர் மாலை பெய்த
இந்திர நீலச் செப்பும் இளையவ ரேந்தி னாரே. ௩௪௯

844 கடைந்திடு மணிக்கைச் செம்பொற் காசறு தட்டிற் சூழ்ந்து
மிடைந்துபெய் மணிக்கட் பீலி மின்னுசாந் தாற்றி பொன்னார்
அடைந்துவீ சால வட்டம் அரிவையர் ஏந்தி யாற்றத்
தடங்கண்கள் குவளை பூப்பத் தையலோ டாடும் அன்றே.

845 பஞ்சுசூழ் பரவை யல்குற் பசுங்கதிர்க் கலாபம் வீங்கச்
செந்தளிர்க் கோதை சோரக் கிண்கிணி சிலம்பொ டேங்க
மைந்தரிற் காம னன்னான் மகளிரிற் றிருவன் னாளை
அந்தரத் தமரர் பெற்ற அமிர்தெனப் பருகி னானே. ௩௫௧

846 இளமுலை மணிக்கண் சேப்ப எழுதுவிற் புருவம் ஏறக்
கிளைநரம் பனைய தீஞ்சொற் பவளவாய் திகழத் தேன்சோர்
வளமலர்க் கோதை தன்னை வாய்விடான் குழையப் புல்லி
அளமர விலாத இன்பக் கடலகத் தழுந்தி னானே. ௩௫௨

847 இன்னணம் ஒழுகு நாளுள் இளமரக் காவு காண்பான்
பொன்னணி மார்பன் சென்று புகுதலும் ஒருவன் தோன்றித்
துன்னியோ ரோலை நீட்டித் தொழுதனன் பெயர்ந்து நிற்ப
மன்னிய குரிசில் கொண்டு மரபினால் நோக்கு கின்றான். ௩௫௩

வேறு

848 உருமுக்கதிர் வேற்கலுழன் ஓலைஉல கென்னும்
பருமைக்குருப் பளிங்கிற்புகழ்ப் பஞ்சிமுழு தடுத்த
திருமிக்குடைச் செல்வன்திறற் சாமிநனி காண்க
அருமையறன் இன்பம்பொரு ளாகென விடுத்தேன். ௩௫௪

849 தத்தையொடு வீணைமன்னர் தாம்பொருது தோற்ப
மொய்த்தகலை நம்பிமுகிழ் முலையையிசை வெல்ல
வைத்தகதிர் வேலின்வலி யார்க்குரியள் என்னச்
சித்தங்கரிந் தாங்குக்கொடி யான்செருவி ளைத்தான். ௩௫௫

850 தேன்முழங்கு தார்க்குரிசில் செம்பொன்நெடுந் தேர்மேல்
வான்முழங்கு வெஞ்சிலையின் வாளிமழை தூவி
ஊன்முழங்கு வெங்குருதி வேழமுடன் மூழ்க
வேல்முழங்கு தானைவிளை யாடியதுங் கேட்டேன். ௩௫௬

851 வந்துதரன் கூறியஇவ் வாய்மொழியும் அன்றி
முந்துவரன் மொழிந்தபொருள் முற்றும்வகை நாடிப்
பந்துபுடை பாணியெனப் பாயுங்கலி மான்தேர்
எந்தைதிறம் முன்னமுணர்ந் தின்னணம் விடுத்தேன். ௩௫௭

852 எள்ளுநர்கள் சாயவென் தோளிரண்டும் நோக்கி
வெள்ளிமலை முழுதுங்கொடி யெடுத்ததிக லேத்தி
கள்செய்மலர் மார்பனுறு காப்பிகழ்த லின்றி
உள்ளுபொரு ளெம்முணர்த்தி யன்றியுள வேண்டா. ௩௫௮

853 ஆம்பொருள்க ளாகுமது யார்க்குமழிக் கொண்ணுப்
போம்பொருள்கள் போகுமவை பொறியின்வகை வண்ணம்
தேம்புனலை நீர்க்கடலுஞ் சென்றுதர லின்றே
வீங்குபுனல் யாறுமழை வேண்டியறி யாதே. ௩௫௯

854 மன்பெரிய மாமனடி மகிழ்ந்துதிசை வணங்கி
அன்பினக லாதவனை விடுத்தலர்ந்த கோதைக்(கு)
இன்பநிலத் தியன்றபொருள் இவையிவைநுங் கோமான்
தந்தவெனச் சொல்லிநனி சாமிகொடுத் தானே. ௩௬௦

855 குங்குமமுஞ் சந்தனமுங் கூட்டியிடு கொடியா
வெங்கணிளமுலையின்மிசை யெழுதிவிளை யாடிக்
கொங்குண்மலர்க் கோதையொடு குரிசில்செலும் வழிநாள்
அங்கண்நகர்ப் பட்டபொரு ளாகியதை மொழிவாம். ௩௬௧

4. குணமாலையார் இலம்பகம்

856 காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை அயணம் உன்னி
ஆசறு நடக்கும் நாளுள் ஐங்கணைக் கிழவன் வைகிப்
பாசறைப் பரிவு தீர்க்கும் பங்குனிப் பருவஞ் செய்தான். க

857 தோடணி மகளிர் போன்ற துணர்மலர்க் கொம்பர் கொம்பின்
ஆடவர் போல வண்டும் அடைந்தன அளியிற் கொல்கி
ஊடிய மகளிர் போல ஒசிந்தன ஊடல் தீர்க்குஞ்
சேடரிற் சென்று புல்லிச் சிறுபுறந் தழீஇய தும்பி. உ

வேறு

858 நான மண்ணிய நன்மண மங்கையர்
மேனி போன்றினி தாய்விரை நாறிய
கானங் காழகி லேகமழ் கண்ணிய
வேனி லாற்கு விருந்தெதிர் கொண்டதே. ங

859 கொம்ப ரின்குயில் கூய்க்குடை வாவியுள்
தும்பி வண்டொடு தூவழி யாழ்செய
வெம்பு வேட்கை விரும்பிய வேனில்வந்(து)
உம்பர் நீள்துறக் கத்தியல் பொத்ததே. ச

860 நாக நாண்மலர் நாறு கடிநகர்
ஏக இன்பத் திராச புரத்தவர்
மாகம் நந்து மணங்கமழ் யாற்றயற்
போகம் மேவினர் பூமரக் காவினே. ரு

861 முழவங் கண்துயி லாத முதுநகர்
விழவு நீர்விளை யாட்டு விருப்பினால்
தொழுவிற் றோன்றிய தோமறு கேவலக்
கிழவன் மூதெயில் போற்கிளர் வுற்றதே. சு

862 வள்ள நீரர மங்கையர் அங்கையால்
உள்ளங் கூரத் திமிர்ந்துகுத் திட்டசாந்(து)
அள்ள லாயடி யானை யிழுக்கின
வெள்ள நீர்வளை வெள்ள முரன்றவே. எ

863 நீந்து நித்தில வூர்தி நிழல்மருப்(பு)
ஏந்து கஞ்சிகை வையம் இளவெயிற்
போந்து சாய்பொற் சிவிகைநற் போதகங்
கூந்தல் மாலைக் குமரிப் பிடிக்குழாம். அ

864 ஏறு வாரொலி ஏற்றுமி னோவெனக்
கூறு வாரொலி தோடு குலைந்துவீழ்ந்(து)
ஆறி னார்ப்பொலி அஞ்சிலம் பின்னொலி
மாறு கொண்டதோர் மாக்கட லொத்தவே. கூ

865 பொன்செய் வேய்த்தலைப் பூமரு மண்டிலம்
மின்செய் வெண்குடை பிச்ச மிடைந்தொளி
என்செய் கோவென் றிரிந்த திழைநிலா
மன்செய் மாணகர் வட்டமிட் டிட்டதே. க0

866 திருந்து சாமரை வீசுவ தெண்கடல்
முரிந்த மொய்திரை போன்ற அகிற்புகை
புரிந்த தாமங்க ளாகஅப் பூந்துகள்
விரிந்து வானின் விதானித்த தொத்ததே. கக

867 சோலை சூழ்வரைத் தூங்கரு வித்திரள்
மாலை யூர்திகள் வையம் இவற்றிடைச்
சீலக் கஞ்சிநற் போதகஞ் செல்வன
நீல மேகம் நிரைத்தன போன்றவே. கஉ

868 வழங்கு வங்கக் கலிங்கக் கடகமும்
அழுங்கு மாந்தர்க் கணிகலப் பேழையும்
தழங்கு வெம்மதுத் தண்டுந் தலைத்தலைக்
குழங்கல் மாலையுங் கொண்டு விரைந்ததே. கங

869 வாச வெண்ணெயும் வண்டிமிர் சாந்தமும்
பூசு சுண்ணமும் உண்ணும் அடிசிலும்
காசில் போகக் கலப்பையுங் கொண்டவண்
மாசில் மாசனம் வாயில் மடுத்ததே. கச

870 பாட லோசையும் பண்ணொலி யோசையும்
ஆட லோசையும் ஆர்ப்பொலி யோசையும்
ஓடை யானை யுரற்றொலி யோசையும்
ஊடு போயுயர் வானுல குற்றதே. கரு

871 பூக்கண் நீர்விளை யாடிய பொன்னுல(கு)
ஓக்க நீள்விசும் பூடறுத் தொய்யென
வீக்க மாநகர் வீழ்ந்தது போன்றவண்
மாக்கள் மாக்கடல் வெள்ளம் மடுத்ததே. க௬

872 மின்னு வாட்டடங் கண்ணியர் வெம்முலைத்
துன்னு வாட்டந் தணித்தலிற் றாநிறத்(து)
அன்ன ஆட்டத் தணிமலர்ப் பூம்பொழில்
என்ன வாட்டமு மின்றிச்சென் றெய்தினர். க௭

873 அள்ளு டைக்குவ ளைக்கயம் நீடிய
கள்ளு டைக்கழு நீர்ப்புனற் பட்டமும்
புள்ளு டைக்கனி யிற்பொலி சோலையும்
உள்ளு டைப்பொலி விற்றொரு பாலெலாம். க௮

874 செம்பு றக்கனி வாழையுந் தேன்சொரி
கொம்பு றப்பழுத் திட்டன கோழரை
வம்பு றக்கனி மாத்தொடு வார்சுளைப்
பைம்பு றப்பல விற்றொரு பாலெலாம். க௯

875 கள்ள வானர முங்கன்னி யூகமும்
துள்ளு மானொடு வேழத் தொகுதியும்
வெள்ளை அன்னமுந் தோகையும் வேய்ந்தவண்
உள்ளு மாந்தரை உள்ளம் புகற்றுமே. ௨0

876 கோக்க ணங்கொதித் தேந்திய வேலென
நோக்க ணங்கனை யார்நகர் வெய்தலின்
தாக்க ணங்குறை யுந்தடந் தாமரைப்
பூக்க ணம்பொழிற் பட்டது போன்றதே. ௨௧

877 கூறப் பட்டஅக் கொய்ம்மலர்க் காவகம்
ஊறித் தேன்துளித் தொண்மது வார்மணம்
நாறி நாள்மலர் வெண்மணற் றாய்நிழல்
தேறித் தெண்கயம் புக்கது போன்றதே. ௨௨

878 காவிற் கண்டத் திரைவளைத் தாயிடை
மேவி விண்ணவர் மங்கையர் போன்றுதம்
பூவை யுங்கிளி யும்மிழற் றப்புகுந்(து)
ஆவி யந்துகி லார்அமர்ந் தார்களே. ௨௩

879 பௌவ நீர்ப்பவ ளக்கொடி போல்பவள்
மௌவ லங்குழ லாள்சுர மஞ்சரி
கொவ்வை யங்கனி வாய்க்குண மாலையோ(டு)
எவ்வந் தீர்ந்திருந் தாள்இது கூறினாள். ௨௪

880 தாமஞ் சூடிய தூத்துகி லேந்தல்குற்
றாமஞ் சூடிய வேற்றடங் கண்ணினாள்
நாமஞ் சூடிய நன்னுதல் நீட்டினாள்
காமஞ் சூடிய கண்ணொளிர் சுண்ணமே. ௨௫

881 சுண்ண மென்பதோர் பேர்கொடு சோர்குழல்
வண்ண மாலை நுசுப்பு வருத்துவான்
எண்ணி வந்தன கூறிவை யோவென
நண்ணி மாலையை நக்கனள் என்பவே. ௨௬

882 பைம்பொன் நீளுல கன்றிஇப் பார்மிசை
இம்பர் என்சுண்ணம் ஏய்ப்ப உளவெனிற்
செம்பொற் பாவையன் னாய்செப்பு நீயெனக்
கொம்ப னாளுங் கொதித்திது கூறினாள். ௨௭

883 சுண்ணாந் தோற்றனந் தீம்புனல் ஆடலம்
எண்ணில் கோடிபொன் ஈதும்வென் றாற்கென
வண்ண வார்குழல் ஏழையர் தம்முளே
கண்ணற் றார்கமழ் சுண்ணத்தின் என்பவே. ௨௮

வேறு

884 மல்லிகை மாலை மணங்கமழ் வார்குழற்
கொல்லியல் வேல்நெடுங் கண்ணியர் கூடிச்
சொல்லிசை மேம்படு சுண்ண வுறழ்ச்சியுள்
வெல்வது சூதென வேண்டி விடுத்தார். ௨௯

885 இட்டிடை யாரிரு மங்கையர் ஏந்துபொற்
றட்டிடை யந்துகில் மூடி யதன்பினர்
கெட்டிடை நீந்துபு சென்றனர் தாமரை
மொட்டன மென்முலை மொய்குழ லாரே. ௩௦

வேறு

886 சீர்தங்கு செம்பொற் கொடிமல்லிகை மாலை சேர்ந்து
வார்தங்கு பைம்பொற் கழல்மைந்தர்கை காட்ட மைந்தர்
ஏர்தங்கு சுண்ண மிவற்றின்நலம் வேண்டின் வெம்போர்க்
கார்தங்கு வண்கைக் கழற்சீவகற் காண்மின் என்றார். ௩௧

887 வாள்மின்னு வண்கை வடிநூற்கடற் கேள்வி மைந்தர்
தாள்மின்னு வீங்கு கழலான்றனைச் சூழ மற்றப்
பூண்மின்னு மார்பன் பொலிந்தாங்கிருந் தான்வி சும்பிற்
கோள்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித் தோற்ற மொத்தே.

வேறு

888 காளை சீவகன் கட்டியங் காரனைத்
தோளை யீர்ந்திட வேதுணி வுற்றநல்
வாளை வெளவிய கண்ணியர் வார்கழற்
றாளை யேத்துபு தங்குறை செப்பினார். ௩௩

889 சுண்ணம் நல்லன சூழ்ந்தறிந் தெங்களுக்(கு)
அண்ணல் கூறடி யேங்குறை என்றலும்
கண்ணிற் கண்டிவை நல்ல கருங்குழல்
வண்ண மாலையி னீரெனக் கூறினான். ௩௪

890 மற்றிம் மாநகர் மாந்தர்கள் யாவரும்
உற்றும் நாறியுங் கண்டுமு ணர்ந்திவை
பொற்ற சுண்ண மெனப்புகழ்ந் தார்நம்பி
கற்ற தும்மவர் தங்களோ டேகொலோ. ௩௫

891 ஐய னேயறி யும்மென வந்தனம்
பொய்ய தன்றிப் புலமை நுணுக்கிநீ
நொய்திற் றேர்ந்துரை நூற்கட லென்றுதங்
கையி னாற்றொழு தார்கமழ் கோதையார். ௩௬

892 நல்ல சுண்ணம் இவையிவற் றிற்சிறி(து)
அல்ல சுண்ணம் அதற்கென்னை யென்றிரேல்
புல்லு கோடைய பொற்புடைப் பூஞ்சுண்ணம்
அல்ல சீதஞ்செய் காலத்தின் ஆயவே. ௩௭

893 வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்
தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்
ஓரும் வையத் தியற்கையன் றோவென
வீர வேல்நெடுங் கண்ணி விளம்பினாள். ௩௮

894 உள்ளங் கொள்ள வுணர்த்திய பின்னலால்
வள்ளல் நீங்கப் பெறுய்வளைத் தேனெனக்
கள்செய் கோதையி னாய்கரி போக்கினால்
தெள்ளி நெஞ்சிற் றெளிகெனச் செப்பினான். ௩௯

895 கண்ணின் மாந்தருங் கண்ணிமை யார்களும்
எண்ணின் நின்சொல் இகந்தறி வாரிலை
நண்ணு தீஞ்சொல் நவின்றபுள் ளாதியா
அண்ணல் நீக்கினஃ தொட்டுவல் யானென்றாள். ௪௦

896 காவில் வாழ்பவர் நால்வ ருளர்கரி
போவர் பொன்னனை யாயெனக் கைதொழு(து)
ஏவல் எம்பெரு மான்சொன்ன வாறென்றாள்
கோவை நித்தில மென்முலைக் கொம்பனாள். ௪௧

897 மங்கை நல்லவர் கண்ணு மனமும்போன்(று)
எங்கும் ஓடி யிடறுஞ் சுரும்புகாள்
வண்டு காள்மகிழ் தேனினங் காள்மது
உண்டு தேக்கிடும் ஒண்மிஞிற் றீட்டங்காள். ௪௨

898 சோலை மஞ்ஞை சுரமைதன் சுண்ணமும்
மாலை யென்னு மடமயில் சுண்ணமும்
சால நல்லன தம்முளு மிக்கன
கோல மாகக்கொண் டுண்மி னெனச்சொன்னான். ௪௩

899 வண்ண வார்சிலை வள்ளல்கொண் டாயிடை
விண்ணிற் றாவியிட் டான்வந்து வீழ்ந்தன
சுண்ணம் நங்கை சுரமைய மாலைய
வண்ண வண்டொடு தேன்கவர்ந் துண்டவே. ௪௪

900 தத்து நீர்ப்பவ ளத்துறை நித்திலம்
வைத்த போல்முறு வற்றுவர் வாயினீர்
ஒத்த தோவென நோக்கிநும் நங்கைமார்க்(கு)
உய்த்து ரைம்மின்இவ் வண்ண மெனச்சொன்னான். ௪௫

901 நீலம் நன்கு தெளித்து நிறங்கொளீஇக்
கோல மாக எழுதிய பொற்குலாய்
ஞாலம் விற்கும் புருவத்து நங்கைகண்
போலும் வேலவ னேபுகழ்ந் தேனென்றாள். ௪௬

வேறு

902 சோலையஞ் சுரும்பிற் சுண்ணந் தேற்றிய தோன்றல் தன்னை
வேலையம் படுத்த கண்ணார் தொழுதனர் விரைந்து போகி
மாலைக்கு வென்றி கூற மழையிடிப் புண்டோர் நாகம்
ஆலையத் தழுங்கி யாங்கு மஞ்சரி அவல முற்றாள். ௪௭

வேறு

903 திங்க ளங்கதிர் செற்றுழக் கப்பட்ட
பங்க யப்படு ஒத்துளை பாவாய்
நங்கை யென்னொ டுரையாய் நனியொல்லே
இங்கண் என்றடி வீழ்ந்திரந் திட்டாள். ௪௮

904 மாற்றம் ஒன்றுரை யாள்மழை வள்ளலென்
ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்றசொற்
றேற்று வந்தென் சிலம்படி கைதொழ
நோற்பன் நோற்றனை நீயென ஏகினாள். ௪௯

905 கன்னி மாநகர்க் கன்னியர் சூழ்தரக்
கன்னி மாடம் அடையக் கடிமலர்க்
கன்னி நீலக்கட் கன்னிநற் றாய்க்கவள்
கன்னிக் குற்றது கன்னியர் கூறினார். ௫௦

906 கண்கள் கொண்ட கலப்பின வாயினும்
பெண்கள் கொண்ட விடாபிற செற்றமென்(று)
ஒண்க ணாளவள் தாயவள் தந்தைக்குப்
பண்கொள் தேமொழி யாற்பயச் செப்பினாள். ௫௧

907 விண்ணிற் றிங்கள் விலக்குதல் மேயினார்
எண்ணம் நும்மக ளெண்ணமற் றியாதெனிற்
கண்ணி னாடவர்க் காணினுங் கேட்பினும்
உண்ண லேனினி யென்றுரை யாடினாள். ௫௨

908 இன்று நீர்விளை யாட்டினுள் ஏந்திழை
தொன்று சுண்ணத்திற் றோன்றிய வேறுபா(டு)
இன்றென் ஆவிக்கோர் கூற்ற மெனநையா
நின்று நீலக்கண் நித்திலஞ் சிந்தினாள். ௫௩

வேறு

909 பட்டதென் நங்கைக் கென்னப் பாசிழைப் பரவை யல்குல்
மட்டவிழ் கோதை சுண்ண மாலையோ டிகலித் தோற்றாள்
கட்டவிழ் கண்ணி நம்பி சீவகன் திறத்திற் காய்ந்தாள்
அட்டுந்தேன் அலங்கல் மார்ப அதுபட்ட தறிமோ என்றாள்.

910 பள்ளிகொள் களிறுபோலப் பரிவுவிட் டுயிர்த்தென் பாவை
உள்ளிய பொருள்மற் றஃதேல் ஓபெரி துவப்பக் கேட்டேன்
வள்ளிதழ்க் கோதை மற்று நகரொடுங் கடியும் மேனும்
வெள்ளநீள் நிதியின் இன்னே வேண்டிய விளைப்பல் என்றான்.

911 இன்னதோர்காலத் தின்னான் ஒருமகள் இன்னதொன் றிற்(கு)
இன்னதோ ரிடத்தின் எல்லை யாட்கடிந் தொழுகி னாள்போல்
இன்னதோர் நகரி லென்றுங் கென்பெயர் நிற்க வேண்டும்
இன்னதோ ராரந் தம்மோ என்றுகொண் டேகி னானே.

912 வையகம் மூன்றும் விற்கும் மாமணி ஆரம் ஏந்திச்
செய்கழல் மன்னர்க் குய்த்துத் தன்குறை செப்ப லோடும்
ஐயென மன்ன னேவ ஆள்வழக் கற்ற தென்ப
கைபுனை பாவை யெல்லாங் கதிர்முலை யாக்கி னானே. ௫௭

வேறு

913 சென்று காலங் குறுகினுஞ் சீவகன்
பொன்றுஞ் சாகம் பொருந்திற் பொருந்துக
அன்றி யென்னிறை யாரழிப் பாரெனா
ஒன்று சிந்தைய ளாகி யொடுங்கினாள். ௫௮

914 இன்பக் காரண மாம்விளை யாட்டினுள்
துன்பக் காரண மாய்த்துறப் பித்திடும்
என்ப தேநினைந் தீர்மலர் மாலைதன்
அன்பி னாலவ ளித்தழு திட்டாள். ௫௯

915 தண்ணந் தீம்புன லாடிய தண்மலர்
வண்ண வார்தளிர்ப் பிண்டியி னானடிக்(கு)
எண்ணி யாயிர மேந்துபொற் றாமரை
வண்ண மாமல ரேற்றி வணங்கினாள். ௯௦

916 ஆசை மாக்களொ டந்தணர் கொள்கென
மாசை மாக்கடன் மன்னவன் ஆடலின்
மீசை நீள்விசும் பிற்றலைச் சென்றதோர்
ஓசை யாற்சனம் ஒண்ணிதி யுண்டதே. ௯௧

917 மகர வெல்கொடி மைந்தனை வாட்டிய
சிகரச் செவ்வரைத் தீநிறப் பொன்னெயில்
நிகரில் நேமிதன் நீள்நகர்க் காகெனா
நகரம் நாவிரு கோடி நயந்ததே. ௯௨

வேறு

918 உவாமுத விரவலர்க் குடைமை யுய்த்தவர்
கவான்முதற் கூப்பிய கனக மாழையால்
தவாவினை யடைகரை தகைந்த சிந்தைநீர்
அவாவெனும் உடைகடல் அடைக்கப் பட்டதே. ௯௩

வேறு

919 சீரர வச்சிலம் பேந்துமென் சீறடி
ஆரர வக்கழ லாடவ ரோடும்
போரர வக்களம் போன்றுபொன் னார்புனல்
நீரர வம்விளைத் தார்நிக ரில்லார். ௯௪

920 கார்விளை யாடிய மின்னனை யார்கதிர்
வார்விளை யாடிய மென்முலை மைந்தர்
தார்விளை யாட்டொடு தங்குபு பொங்கிய
நீர்விளை யாட்டணி நின்றதை யன்றே. ௯௫

வேறு

921 விடாக்களி வண்டுண விரிந்த கோதையர்
படாக்களி யிளமுலை பாய விண்டதார்க்
கடாக்களிற் றெறுழ்வலிக் காளை சீவகன்
அடாக்களி யவர்தொழில் காண ஏகினான். ௯௬

வேறு

922 ஒன்றே யுயிரை யுடையீர் ஒருவிப் போமின் இவள்கண்
அன்றே கூற்ற மாகி யருளா தாவி போழ்வ(து)
என்றே கலையுஞ் சிலம்பும் இரங்க இனவண் டார்ப்பப்
பொன்தோய்கொடியின் நடந்து புனல்சேர் பவளைக்காண்மின்.

923 அழல்செய் தடத்துள் மலர்ந்த அலங்கல் மாலை யதனை
நிழல்சேய் நீர்கொண் டீர்ப்ப நெடுங்கண் ணிணையின் நோக்கிக்
குழையும் பூணும் நாணுங் கொழுநன் உவப்ப அணிகென்(று)
இழைகொள் புனலுக் கீயும் இளையோள் நிலைமை காண்மின்.

924 கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பி யிருப்பப்
பீலி மஞ்ஞை நோக்கிப் பேடை மயிலென் றெண்ணி
ஆலிச் சென்று புல்லி அன்மை கண்டு நாணிச்
சோலை நோக்கி நடக்குந் தோகை வண்ணங் காண்மின். சுகூ

925 மின்னெப் புடைய பைம்பூண் நீருள் வீழக் காணாள்
அன்னப்பெடையேதொழுதேன் அன்னை கொடியள்கண்டாய்
என்னை யடிமை வேண்டின் நாடித் தாவென் றிறைஞ்சிப்
பொன்னங்கொடியின் நின்றாள் பொலிவின் வண்ணங்காண்மின்.

926 தூமங் கமழுங் கோதை தொடுத்த துயரின் முலையாத்
தேமென் கிதம் பாலாச் சுரந்து திறத்தின் ஊட்டிக்
காமக் குழவி வளர்ப்பக் கணவன் புனலின் நீங்கிப்
பூமென் பொழிலுக் கிவர்வான் புகற்சி காண்மின் இனிதே.

927 கடலம் பவளம் மணையிற் கனபொற் கயிற்றிற் கனக
மடலங் கமுகின் ஊசல் மடந்தை யாட நுடங்கி
நடலைந் நடுவின் மகளிர் தூக்கப் பரிந்த காசு
விடலில் விசும்பின் மின்போல் மின்னி வீழ்வ காண்மின்.

928 நான நீரிற் கலந்து நலங்கொள் பூம்பட் டொளிப்ப
மேனி தோன்ற விளங்கி வெளிப்பட் டதற்கு நாணி
மான மகளிர் போல மணிமே கலைகள் பேசா
தானந் தழுவிக் கிடப்பச் செல்வோள் தன்மை காண்மின்.

929 தீம்பாற் பசியி னிருந்த செவ்வாய்ச் சிறுபைங் கிளிதன்
ஓம்பு தாய்நீர் குடைய ஒழிக்கும் வண்ணம் நாடிப்

பாம்பா லென்ன வெருவிப் பைம்பொற் றோடு கழலக்
காம்பேர் தோளி நடுங்கிக் கரைசேர் பவளைக் காண்மின்.

930 துணையில் தோகை மஞ்ஞை ஈயற் கிவரும் வகைபோல்
மணியார் வளைபெய் கையின் வலனும் இடனும் போக்கி
இணையில் தோழி மார்கள் இறுமால் இடையென் றிரங்க
அணியார் கோதை பூம்பந் தாடு மவளைக் காண்மின். ௭௫

931 திருவின் சாய லொருத்தி சேர்ந்த கோலங் காண்பான்
குருதித் துகிலின் உறையைக் கொழும்பொன் விரலின் நீக்கி
அரவ முற்றும் விழுங்கி யுமிழும் பொழுதின் மதிபோன்(று)
உருவத் தொண்க ணுடி காண்மின் தோன்றும் வகையே. ௭௬

932 பலகை செம்பொ னாகப் பளிங்கு நாயாப் பரப்பி
அலவன் ஆடும் வகைபோல் அரும்பொற் கவறங் குருளக்
குலவும் பவழ வுழக்கிற் கோதை புரளப் பாடி
இலவம் போதேர் செவ்வா யிளையோர் பொருவார்க் காண்மின்.

933 தீம்பால் அடிசில் அமிர்தஞ் செம்பொன் வண்ணப் புழுக்கல்
ஆம்பால் அக்கா ரடலை யண்பல் நீரூ றமிர்தந்
தாம்பா லவரை நாடித் தந்தூட் டயர்வார் சொரிய
ஓம்பா நறுநெய் வெள்ளம் ஒழுகும் வண்ணங் காண்மின்.

934 அள்ளற் சேற்றுள் அலவன் அடைந்தாங் கனைய மெய்யிற்
கள்செய் கடலு ளிளமைக் கூம்பிற் கடிசெய் மாலைத்
துள்ளு தூமக் கயிற்றிற் பாய்செய் துயரி நிதியம்
உள்கு காற்று வுழலுங் காமக் கலனுங் காண்மின். ௭௯

935 தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கின் எறிய
ஆய்பொன் னமளித் துஞ்சும் அணியார் குழவி போலத்
தோயுந் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும் வெள்ளை யன்னங் காண்மின். ௮௦

936 நீலத் துகிலிற் கிடந்த நிழலார் தழலம் மணிகள்
கோலச் சுடர்விட் டுமிழக் குமரி யன்னங் குறுகிச்
சாலந் நெருங்கிப் பூத்த தடந்தா மரைப்பூ வென்ன
ஆலிச் சுடர்கள் கௌவி யழுங்கும் வண்ணங் காண்மின். ௮௧

937 வடிக்கண் மகளிர் வைத்த மரக தங்கன் மணிகள்
ஒடிக்கச் சுடர்விட் டுமிழ உழையம் பிணையொன் றணுகிக்
கொடிப்புல் லென்று கறிப்பான் நாவிற் குலவி வளைப்பத்
தொடிக்கட் பூவை நோக்கி நகுமா றளிதோ காண்மின். ௮௨

938 இலையின் னனவும் பிறவும் எரிபொன் னார மார்பன்
கவிஞர் மதியின் அகன்று காட்சிக் கினிய விழவிற்
சுவையின் மிகுதி யுடைய சோர்வில் பொருளொன் றதுதான்
நவையின் அகல நோக்கி நயந்த வண்ணம் மொழிவாம். ௮௩

வேறு

939 அந்தணர்க் காக்கிய சோற்றுக் குவாலினை
வந்தொரு நாய்கது விற்றது கண்டவர்
உய்ந்தினிப் போதி யெனக்கனன் றோடினர்
சிந்தையி னின்றுளிர் தீயன நீரார். ௮௪

940 கல்லொடு வன்தடி கையினர் காற்றினும்
வல்விரைந் தோடி வளைத்தன ராகிக்
கொல்வது மேயினர் கொன்றிடு கூற்றினும்
வல்வினை யார்வலைப் பட்டதை யன்றே. ௮௫

941 வேள்வியின் உண்டி விலக்கிய நீவிர்கள்
ஆளெனக் கென்ற தறைவதும் ஓரார்
தாளிற மூர்க்கர் அதுக்கலிற் றண்டுறை
நீள்கயம் பாய்ந்தது நீந்துத லோடும். ௮௬

வேறு

942 மட்குட மல்லன மதியின் வெள்ளிய
கட்குடக் கன்னிய ரிருவ ரோடுடன்
திட்கென யாவரும் நடுங்கத் தூய்மையில்
உட்குடைக் களிமக னொருவன் தோன்றினன். ௮௭

943 தோன்றிய புண்செய்வே லவற்குத் தூமது
வான்திகழ் கொடியனார் வெள்ளி வட்டகை
ஊன்றிவாய் மடுப்பவோர் முழையுட் டீங்கதிர்
கான்றிடு கதிர்மதி யிரண்டு போன்றவே. ௮௮

வேறு

944 அழலம் பூநற வார்ந்தழல் ஊர்தரச்
சுழலுங் கண்ணினன் சோர்தரு மாலையன்
கழலன் காழகம் வீக்கிய கச்சையன்
குழலைச் சொற்களின் வைதிவை கூறினன். ௮௯

945 புடைத்தென் னையினைப் பொன்றுவித் தீருயிர்
கடுக்கப் பேர்த்தனிர் தம்மின் கலாய்க்குறின்
தடக்கை மீளிமை தாங்குமின் அன்றெனின்
உடைப்பென் கட்குடம் என்றுரை யாடினன். ௯௦

வேறு

946 நல்வினை யொன்றுமி லாதவன் நான்மறை
வல்லவர் தம்மை வருத்தலின் வல்லே
செல்சுடர் வேல்வல சீவக சாமிசென்(று)
அல்லல் அகற்றி யருந்துயர் தீர்த்தான். ௯௧

947 மீண்டவர் ஏகுத லும்விடை யன்னவன்
ஈண்டிய தோழரொ டெய்தின னாகி
மாண்ட எயிற்றெகி னம்மற மில்லது
காண்டலுங் கட்கினி யான்கலுழ்ந் திட்டான். ௯௨

948 நாயுடம் பிட்டிவண் நந்திய பேரொளிக்
காய்கதிர் மண்டிலம் போன்றொளி கால்வதோர்
சேயுடம் பெய்துவை செல்கதி மந்திரம்
நீயுடம் பட்டு நினைமதி யென்றான். ௯௩

949 என்றலுந் தன்செவி ஓர்த்திரு கண்களுஞ்
சென்றுகு நீரொடு செம்மலை நோக்கி
ஒன்றுபு வால்குழைத் துள்ளுவப் பெய்தலுங்
குன்றனை யான்பதங் கூற வலித்தான். ௯௪

வேறு

950 நற்செய்கை யொன்று மில்லார் நாளுலக் கின்ற போழ்தின்
முற்செய்த வினையின் நீங்கி நல்வினை விளைக்கும் வித்து
மற்செய்து வீங்கு தோளான் மந்திரம் ஐந்தும் மாதோ
தற்செய்கை தளிர்ப்பத் தாழ்ந்தாங் கதன்செவிச் செப்புகின்றான்.

951 உறுதிமுன் செய்த தின்றி யொழுகினே னென்று நெஞ்சின்
மறுகல்நீ பற்றே டார்வம் விட்டிடு மாண அச்சத்(து)
இறுகல்நீ யிறைவன் சொன்ன ஐம்பத அமிர்தம் உண்டாற்
பெறுதிநற் கதியை யென்று பெருநவை யகற்றி னானே. கூசு

952 மனத்திடைச் செறும்பு நீக்கி மறவலை யாகி ஐந்தும்
நினைத்திடு நின்கண் நின்ற நீல்நிற வினையின் நீங்கி
எனைப்பகல் தோறும் விள்ளா இன்பமே பயக்கும்என்றூற்(கு)
அனைப்பதம்அமிர்தம்நெஞ்சின் அயின்றுவிட்டகன்றதன்றே.

வேறு

953 பாடு பாணி முகமெனும் பான்மையின்
ஓடி யாங்கோர் உயர்வரை யுச்சிமேற்
கூடிக் கோலங் குயிற்றிப் படங்களைங்(து)
ஆடு கூத்தரின் ஐயெனத் தோன்றினான். கூஅ

954 ஞாயில் சூடிய நன்னெடும் பொன்னகர்க்
கோயில் வட்டமெல் லாங்கொங்கு தோய்குழல்
வேயின் அன்னமென் தோளியர் தோன்றியங்(கு)
ஆயி னார்பரி யாளம் அடைந்ததே. கூகூ

955 மிடைந்த மாமணி மேகலை யேந்தல்குற்
றடங்கொள் வெம்முலைத் தாமரை வாண்முகத்(து)
அடைந்த சாயல் அரம்பையர் தம்முழை
மடங்க லேறனை யான்மகிழ் வெய்தினான். க00

வேறு

956 கற்ற ஐம் பதங்கள் நீராக் கருவினை கழுவப் பட்டு
மற்றவன் தேவ னாகி வானிடு சிலையிற் றோன்றி
இற்றவவ் உடம்பும் இன்னா இடரொழித் தினிய னாகி
உற்றவன் நிலையுமெல்லாம் ஓதியின்உணர்ந்து கண்டான். க0க

வேறு

957 இரும்பின் நீர்மை கெடுத்தெரி தன்னிறத்(து)
அரும்பொன் ஆக்கிய ஆருயிர்த் தோழனை
விரும்பி விண்ணிறுத் தொய்யெனத் தோன்றினான்
சுரும்புண் கண்ணிச் சுதஞ்சணன் என்பவே. க0உ

வேறு

958 ஓசனை நறும்புகை கமழ ஒண்ணிலா
வீசிய கதிர்பரந் திமைக்கு மேனியன்
மாசறு மணிமுடி மிடைந்த மாலையன்
பூசுறு பரிதியிற் பொலிந்து தோன்றினான். ௧௦௩

வேறு

959 குன்றெனத் திரண்ட தோளான் குறுகலுங் குமரன் நோக்கி
நின்றவன் நெடுங்க ணொன்றும் இமைப்பில நிழலில் யாக்கை
அன்றியுங் கண்ணி வாடா தமரனே யாதல் தேறி
நன்றவன் வரவு கேட்பான் நம்பிநீ யாரை யென்றான். ௧௦௪

960 குங்குமக் குவட்டின் வீங்கிக் கோலம்வீற் றிருந்த தோளாய்
இங்குநின் னருளிற் போகி இயக்கருள் இறைவன் ஆகிச்
சங்கவெண் மலையின் மற்றுச் சந்திரோ தயத்தின் உச்சி
அங்குயா னுறைவல் எந்தை அறிகமற் றென்று சொன்னான்.

961 என்றவ னுரைப்பக் கேட்டே இமயமும் நிகர்க்க லாற்றாப்
பொன்தரு மாரி வண்கைப் புரவலன் புகன்று நோக்கி
வென்றவ ருலகம் பெற்ற வேந்துடை யின்ப மெல்லாம்
இன்றெனக் கெதிர்ந்த தென்றான்எரியுமிழ்ந் திலங்கும்வேலான்.

962 சூடுறு கழலி னாற்குச் சுதஞ்சணன் இதனைச் சொன்னான்
பாடல்வண் டரற்றும் பிண்டிப் பகவன திறைமை போல
மூடியிவ் வுலக மெல்லாம் நின்னடித் தருவல் இன்னே
ஆடியுட் பாவை போல்நீ யணங்கிய தணங்க என்றான். ௧௦௭

963 வாளொடு வயவர் ஈண்டி வாரணத் தொழுவின் முற்றி
மீளிமை செய்யின் வெய்ய நண்பநின் நினைப்ப தல்லால்
நாளொடு பக்கம் நைந்து வீழினும் வீழ்த லில்லாக்
கோளுநடைக் கிழமை யொப்பாய் குறைவிலன் பிறவி னென்றான்.

964 இன்நிழல் இவரும் பூணான் இருவிசும் பேற லுற்றுப்
பொன்எழு அனைய தோளாற் புல்லிக்கொண் டினிய கூறி
நின்நிழல் போல நீங்கேன் இடர்வரின் நினைக என்று
மின்எழூஉப் பறப்ப தொத்து விசும்பிவர்ந் தமரன்சென்றான்.

965 சொல்லிய நன்மை யில்லாச் சுணங்கன்இவ் வுடம்பு நீங்கி
எல்லொளித் தேவ னாகிப் பிறக்குமோ என்ன வேண்டா
கொல்லுலை யகத்திட் டூதிக் கூரிரும் பிரதங் குத்த
எல்லையில் செம்பொ னாகி யெரிநிறம் பெற்ற தன்றே. ௧௧௦

வேறு

966 எரிமாலை வேல்நுதியின் இறக்கிக் காமன் அடுகணையால்
திருமாலை வெம்முலைமேற் றிளைக்குந் தேவர் திருவுறுக
வருமாலை யெண்வினையும் அகற்றி யின்பக் கடலாக்கித்
தருமாலை யல்லதியான் தலையிற் றாழ்ந்து பணிவலோ. ௧௧௧

967 ஒன்றாய ஊக்கவேர் பூட்டி யாக்கைச் செறுவுழுது
நன்றாய நல்விரதச் செந்நெல் வித்தி யொழுக்கநீர்
குன்றாமற் றாங்கொடுத்தைம் பொறியின்வேலி காத்தோம்பின்
வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோ ருலகின்றே.

வேறு

968 இத்தலை இவர்க ளேக இமையம்நட் டரவு சுற்றி
அத்தலை அலற முந்நீர் கடைந்தவர் அரவம் ஒப்ப
மைத்தலை நெடுங்க ணாரும் மைந்தரும் மறலி யாட
மொய்த்திள வன்ன மார்க்கு மோட்டிரும் பொய்கை புக்கார்.

969 கலந்தெழு திரை நுண் ணுடைக் கடிக்கய மடந்தை காமர்
இலங்குபொற் கலாபத் தல்குல் இருகரைப் பரப்பு மாக
அலர்ந்ததண் கமலப் பூம்போ தணித்தக்க முகத்திற்கேற்ப
நலங்கெழு குவளை வாட்கண் நன்னுதல் நலத்தை உண்டார்.

970 தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவும் ஓசை
எண்ணிய விரலோ டங்கை புறங்கையின் இசைய ஆக்கித்
திண்ணிதிற் றெறித்தும் ஓவார் கொட்டியுங் குடைந்தும்ஆடி
ஒண்ணுதல் மகளிர் தம்மோ டியர்மிசை யவர்க ளொத்தார்.

971 சிவிறியின் மாறு தூயுங் குங்குமம் எறிந்துந் தேங்கொள்
உவறுநீ ருழக்கி யோட்டி யுடைபுறங் கண்டு நக்குத்
தவறெனத் தாமம்பூட்டித் தருதிறைகொண்டும்இன்பத்(து)
இவறினர் காம வெள்ளத் தேத்தருந் தன்மை யாரே. ௧௧௬

972 சாந்தகம் நிறைந்த தோணி தண்மலர் மாலைத் தோணி
பூந்துகில் ஆர்ந்த தோணி புனைகலம் பெய்த தோணி
கூந்தல்மா மகளிர் மைந்தர் கொண்டுகொண் டேறியி ஓடித்
தாந்திரைக் கலங்கள் போலத் தாக்குபு திரியும் அன்றே.

973 கலிவலார் களிறு கைந்நீர் சொரிவபோல் முத்த மாலை
பொலிவொடு திவண்டு பொங்கிப் பூஞ்சிகை யலமந் தாடக்
குலிகநீர் நிறைந்த பந்திற் கொம்பனார் ஓச்ச மைந்தர்
மெலிவுகண் டுவந்து மாதோ விருப்பொடு மறலி னாரே. ககஅ

974 வண்ணவொண் சுண்ணம் பட்டு மாலையுஞ் சாந்தும் ஏந்தி
எண்ணருந் திறத்து மைந்தர் எதிரெதிர் எறிய ஓடி
விண்ணிடை நுடங்கு மின்னும் மீன்களும் பொருவ போல
மண்ணிடை அமரர் கொண்ட மன்றலொத் திறந்த தன்றே.

வேறு

975 உரைத்த எண்ணெயும் ஒண்ணறுஞ் சுண்ணமும்
அரைத்த சாந்தமும் நானமும் மாலையும்
நுரைத்து நோன்சிறை வண்டொடு தேனினம்
இரைத்து நீர்கொழித் தின்பம் மிகுந்ததே. கஉ0

வேறு

976 கத்திகைக் கண்ணி நெற்றிக் கைதொழு கடவு ளன்ன
வித்தக இளைய ரெல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி
முத்தணிந் தாவி யூட்டி முகிழ்முலை கச்சின் வீக்கிப்
பித்திகைப் பிணையல் சூழ்ந்து பெண்கொடி பொலிந்த அன்றே.

977 திருந்துபொற்றேருஞ்செம்பொற்சிவிகையுமிடைந்துசெற்றிக்
கருங்கயக் களிறும் மாவுங் காலியற் பிடியும் ஈண்டி
நெருங்குடி மள்ளர் தொக்கு நெடுவரைத் தொடுத்த வெள்ளம்
கருங்கடற் கிவர்ந்த வண்ணங் கடிநகர்க் கெழுந்த வன்றே.

வேறு

978 கடலெனக் காற்றெனக் கடுங்கட் கூற்றென
உடல்சின வுருமென ஊழித் தீயெனத்
தொடர்பிணி வெளில்முதல் முருக்கித் தோன்றிய(து)
அடலருங் கடாக்களிற் றசனி வேகமே. கஉரு

வேறு

979. பொருதிழி யருவி போன்று பொழிதரு கடாத்த தாகிக்
குருதிகொள் மருப்பிற் றாகிக் குஞ்சரஞ் சிதைந்த தென்னக்
கருதிய திசைக ளெல்லாம் கண்மிசைக் கரந்த மாந்தர்
பருதியின் முன்னர்த் தோன்றாமறைந்தபல் மீன்கள் ஒத்தார்.

980* இரும்பனைத் தடக்கைச் செங்கோட் டெரிதவழ் குன்றம்போல
வருந்துயிர் பருகு வன்கட் கூற்றெனச் செல்லு மாங்கண்
அரும்பன முறுவற் செவ்வாய் அணிமுத்த மணங்கு சாயற்
கரும்பன மொழியி னாளைக் கதுமெனக் கண்ட தன்றே.

981 கருந்தடங் கண்ணி தன்மேற் காமுகர் உள்ளம் போல
இருங்களி றெய்த வோடச் சிவிகைவிட் டிளைய ரேக
அரும்பெற லவட்குத் தோழி ஆடவ ரில்லை யோஎன்(று)
ஒருங்குகை யுச்சிக் கூப்பிக் களிற்றெதிர் இறைஞ்சி நின்றாள்.

982 என்னைக்கொன் றிவள்க ணோடுமெல்லையின் ஒருவன் தோன்றி
இன்னுயி ரிவளைக் காக்கும் அன்றெனி லென்கண் மாய்ந்தாற்
பின்னைத்தா னாவ தாக என்றெண்ணிப் பிணைகொள் நோக்கி
மின்னுப்போல் நுடங்கி நின்றாள் வீததை பொற்கொம் பொப்பாள்.

983 மணியிரு தலையுஞ் சேர்த்தி வான்பொனின் இயன்ற நாணால்
அணியிருங் குஞ்சி யேறக் கட்டியிட் டலங்கல் சூழ்ந்து
தணிவருந் தோழர் சூழத் தாழ்குழை திருவில் வீசப்
பணிவருங் குரிசில் செல்வான் பாவைய திடரைக் கண்டான்.

984 பெண்ணுயி ரவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்விற் சாதல்
எண்ணினன் எண்ணி நொய்தா இனமலர் மாலை சுற்றா
வண்ணப்பொற் கடக மேற்றா வார்கச்சிற் றானை வீக்கா
அண்ணலங் களிற்றை வையா ஆர்த்துமே லோடி னானே.

985 குண்டலங் குமரன் கொண்டு குன்றின்மேல் வீழும் மின்போல்
ஒண்டிறற் களிற்றின் நெற்றி யெறிந்துதோ டொலித்து வீழ
மண்டில முத்துந் தாரும் மாலையுங் குழலும் பொங்க
விண்டலர் கண்ணி சிந்த மின்னிற்சென் றெய்தி னானே. கஙo

986 படம்விரி நாகஞ் செற்றுப் பாய்தரு கலுழன் போல
மடவர லவளைச் செற்று மதக்களி றிறைஞ்சும் போழ்திற்

குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று வேழத்(து)
உடல்சினங் கடவக் குப்புற் றுருமென உரறியார்த்தான். ௧௱௧

987 கூற்றென முழங்கிக் கையாற் கோட்டிடைப் புடைப்பக் காய்ந்து
காற்றென வுரறி நாகங் கடாம்பெய்து கனலிற் சீறி
ஆற்றலுங் குமரன் தன்மேல் அடுகளி றோட அஞ்சான் [ன்.
கோற்றொடிப் பாவை தன்னைக் கொண்டுயப் போமின் என்றா

988 மதியினுக் கிவர்ந்த வேக மாமணி நாகம் வல்லே
பதியமை பரிதி தன்மேற் படம்விரித் தோடி யாங்குப் [க்
பொதியவிழ் கோதை தன்மேற் பெருகளி றகன்று பொற்றா
கதியமை தோளி னானைக் கையகப் படுத்த தன்றே. ௧௱௩

989 கையகப் படுத்த லோடுங் கார்மழை மின்னின் னொய்தா
மொய்கொளப் பிறழ்ந்துமுத்தார் மருப்பிடைக் குளித்துக்காற்
ஐயென அடங்கி வல்லான் ஆடிய மணிவட் டேய்ப்பச் [கீழ்
செய்கழற் குரிசில் ஆங்கே கரந்துசே ணகற்றி னானே. ௧௱௪

வேறு

990 மல்லல் நீர்மணி வண்ணனை முன்னோர்நாள்
கொல்ல ஓடிய குஞ்சரம் போன்றதச்
செல்வன் போன்றனன் சீவகன் தெய்வமீபோற்
பில்கு மும்மத வேழம் பெயர்ந்ததே. ௧௱௫

வேறு

991 ஒருகை யிருமருப்பின் மும்மதத்த தோங்கெழிற்குன்
றனைய வேழந்
திருகு கனைகழற்கால் சீவகன் வென்றியையாட்
குடைந்து தேனார்
முருகு தமழலங்கல் முத்திலங்கு மார்பினரைஞ்
ஞாற்று நால்வர்
அருகு கழல்பரவத் தனியேபோய் உய்யானம்
அடைந்தா னன்றே. ௧௱௬

வேறு

992 மணிசெய் கந்துபோல் மருள வீங்கிய
திணிபொற் றோளினான் செல்லல் நீக்கிய

அணிபொற் கொம்பினை அழுங்க லென்றுதன்
தணிவில் காதலார் தாங்கொ டேகினார். ௧௩௭

வேறு

993* ஆடவர்க் கூட அனங்கனு மம்மதி
வாடிய வாட்கண் நிரைத்தலும் வார்குழைச்
சேடியர் கைதொழத் தேற்றிய ஒண்சுடர்
ஊடிய மாடம் ஒளியிழை புக்காள். ௧௩௮

வேறு

994 முழங்கு தெண்டிரை மூரி நீள்நிதி
வழங்க நீண்டகை வணிகர்க் கேறனான்
விழுங்கு காதலாள் வேற்கட் பாவைதாய்
குழைந்த கோதையைக் கண்டு கூறினாள். ௧௩௯

995 நெய்பெய் நீளெரி நெற்றி மூழ்கிய
கைசெய் மாலைபோற் கரிந்து பொன்னிறம்
நைய வந்ததென் நங்கைக் கின்றென
உய்தல் வேட்கையால் உரைத்த லோம்பினார். ௧௪௦

996 முருகு விண்டுலாம் முல்லைக் கத்திகைப்
பருகுவண்டுலாம் பல்கு ழலினாள்
வருக என்றுதாய் வாட்கண் நீர்துடைத்(து)
உருகு நுண்ணிடை யொசியப் புல்லினாள். ௧௪௧

997 கடம்பு சூடிய கன்னி மாலைபோல்
தொடர்ந்து கைவிடாத் தோழி மாரொடும்
குடங்கை யுண்கணாள் கொண்ட பண்ணையுள்
அடைந்த துன்பமென் றறிவின் நாடினாள். ௧௪௨

998 கம்மப் பல்கலங் களைந்து கண்டெறாஉம்
விம்மப் பல்கலம் நொய்ய மெய்யணிந்(து)
அம்மென் மாலையும் அடைச்சிக் குங்குமங்
கொம்மை மட்டித்தார் கொடிய னாளையே. ௧௪௩

999 அம்பொன் வள்ளத்துள் அமிர்த மேந்துமெங்
கொம்பின் அவ்வையைக் கொணர்மின் சென்றெனப்
பைம்பொ னல்குலைப் பயிரும் பைங்கிளி
செம்பொற் கொம்பினெம் பாவை செல்கென்றாள். ௧௪௪

வேறு

1000 நிறத்தெ றிந்து பறித்த நிணங்கொள்வேற்
றிறத்தை வெளவிய சேயரிக் கண்ணினாள்
பிறப்பு ணர்ந்தவர் போற்றமர் பேச்செலாம்
வெறுத்து யாவையு மேவல ளாயினாள். ௧௪௫

1001 குமரி மாநகர்க் கோதையங் கொம்பனாள்
தமரின் நீங்கிய செவ்வியுட் டாமரை
அமரர் மேவரத் தோன்றிய அண்ணல்போற்
குமர னுக்கிய காதலிற் கூறினாள். ௧௪௬

1002 கலத்தற் காலங்கல் லூரிநற் கொட்டிலா
முலைத்த டத்திடை மொய்யெருக் குப்பையா
இலக்கம் என்னுயி ராஎய்து கற்குமால்
அலைக்கும் வெஞ்சரம் ஐந்துடை யானரோ. ௧௪௭

1003 பூமி யும்பொறை யாற்றருந் தன்மையால்
வேமென் நெஞ்சமும் வேள்வி முளரிபோற்
றூம மார்பனைச் சீவக சாமியைக்
காம னைக்கடி தேதம்மின் தேவிர்காள். ௧௪௮

1004 கையி னாற்சொலக் கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேன்
செய்த வம்புரி யாச்சிறி யார்கள்போல்
உய்ய லாவதோர் வாயிலுண் டாங்கொலோ. ௧௪௯

1005 கண்ணும் வாளற்ற கைவளை சோருமாற்
புண்ணும் போன்று புலம்புமென் நெஞ்சரோ
எண்ணில் காமம் எரிப்பினு மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணல தில்லையே. ௧௫௦

1006 சோலை வேய்மருள் சூழ்வளைத் தோளிதன்
வேலை மழக்கடல் வேட்கைமிக் கூர்தலின்
ஓலை தாழ்பெண்ணை மாமட லூர்தலைக்
கால வேற்றடங் கண்ணி கருதினாள். ௧௫௧

1007 உய்யு மாறுரை யுன்னை யலாலிலேன்
செய்ய வாய்க்கிளி யேசிறந் தாயென

மையல் நங்கையிந் நாட்டகத் துண்டெனின்
தைய லாய்சம மூரதுரை யென்றதே. கருஉ

1008 தெளிக யம்மலர் மேலுறை தேவியின்
ஒளியுஞ் சாயலும் ஒப்புமை யில்லவள்
களிகொள் காமத்திற் கையற வெய்தித்தன்
கிளியைத் தூதுவிட் டாள்கிளந் தென்பவே. கருந

1009 பூணொ டேந்திய வெம்முலைப் பொன்னனாள்
நாணுந் தன்குல னும்நலங் கீழ்ப்பட
வீணை வித்தகற் காணிய விண்படர்ந்(து)
ஆணுப் பைங்கிளி ஆண்டுப் பறந்ததே. கருச

வேறு

1010 கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்
தீட்டினான் கிழிமிசைத் திலக வாள்நுதல்
வேட்டமால் களிற்றின்முன் வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே. கருரு

1011 நெகிழ்ந்துசோர் பூந்துகில் நோக்கி நோக்கியே
மகிழ்ந்துவீழ் மணிக்குழை மாலை கால்தொடும்
முகிழ்ந்துவீங் கிளமுலை முத்தந் தைவரும்
புகழ்ந்துதன் தோள்களிற் புல்லும் மெல்லவே. கருசு

1012 படைமலர் நெடுங்கணாள் பரவை யேந்தல்குல்
மிடைமணி மேகலை நோற்ற வெந்தொழிற்
புடைதிரள் வனமுலைப் பூணும் நோற்றன
அடிமலர்த் தாமரைச் சிலம்பும் நோற்றவே. கருஎ

1013 மின்னணங் குறுமிடை மேவர் சாயலுக்(கு)
இன்னணம் இறைமகன் புலம்ப யாவதுந்
தன்னணங் குறுமொழித் தத்தை தத்தையை
மன்னணங் குறலொடு மகிழ்ந்து சுண்டதே. கருஅ

1014 ஆடுபாம் பெனப்புடை யகன்ற அல்குல்மேற்
சூடிய கலைப்புறஞ் சூழ்ந்த பூந்துகில்
ஓடிய எரிவளைத் துருவ வெண்புகை
கூடிமற் றதன்புறங் குலாய கொள்கைத்தே. கருகூ

1015 கொன்வளர் இளமுலைக் கோட்டிற் றாழ்ந்தன
மின்வளர் திரள்வடம் விளங்கு பைங்கதிர்
இன்வள ரிளம்பிறை யெழுதப் பட்டன
பொன்வளர் செப்பின்மேற் பொலிந்த போன்றவே.

1016 குண்டலம் ஒருபுடை குலாவி வில்விட
விண்டலர்ந் தொருபுடை தோடு மின்செய
மண்டிலம் நிறைந்ததோர் மதியம் அன்னதே
ஒண்டொடி திருமுகத் துருவ மாட்சியே. ௧௱௧

1017 பூணிற முலையவள் பொருவில் பூநுதல்
மாணிறக் கருங்குழல் மருங்கிற் போக்கிய
நாணிற மிகுகதிர்ப் பட்டம் நல்லொளி
வாணிற மின்னிருள் வளைத்த தொத்ததே. ௧௱௨

1018 கடிகமழ் பூஞ்சிகை காமர் மல்லிகை
வடிவுடை மாலைகால் தொடர்ந்து வாய்ந்தது
நடுவொசிந் தொல்கிய நாறு மாமலர்க்
கொடியின்மேற் குயில்குனிந் திருந்த தொத்ததே. ௧௱௩

1019 சிலம்பொடு மேகலை மிழற்றத் தேனினம்
அலங்கலுண் டியாழ்செயும் அம்பொற் பூங்கொடி
நலம்பட நன்னடை கற்ற தொக்குமிவ்
விலங்கரித் தடங்கணாள் யாவ ளாங்கொலோ. ௧௱௪

1020 யாவளே யாயினும் ஆக மற்றிவள்
மேவிய பொருளொடு மீண்ட பின்னலால்
ஏவலாற் சேர்கலேன் என்று பைங்கிளி
பூவலர் சண்பகம் பொருந்திற் றென்பவே. ௧௱௫

1021 மதுக்களி நெடுங்கணாள் வான்பொற் கிண்கிணி
ஒதுக்கிடை மிழற்றச்சென் றெய்தி ஊன்கவர்
கதக்களி வேலினாற் கண்டு காமநீர்ப்
புதுத்தளி ரனையவள் புலந்து நோக்கினாள். ௧௱௬

1022 இதுவென வுருவென இயக்கி என்றலும்
புதிதிது பூந்துகில் குழல்கள் சோர்தலால்
மதுவிரி கோதையம் மாலை நின்மன
மதுமுறை இயக்கலின் இயக்கி யாகுமே. ௧௱௭

1023 முளைத்தெழு மதியமுத் தரும்பி யாங்கென
விளைத்தது திருமுகம் வியர்ப்பு வெஞ்சிலை
வளைத்தன புருவமு முரிந்த வல்லையே
கிளைக்கழு நீர்க்கணுஞ் சிவப்பிற் கேழ்த்தவே. ௧௬௮

1024 பாவைநீ புலவியின் நீடல் பாவியேற்(கு)
ஆவியொன் றிரண்டுடம் பல்ல தூற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விளைந்த அன்னமே. ௧௬௯

1025 பேரினும் பெண்டிரைப் பொருது சீறுவாள்
நேர்மலர்ப் பாவையை நோக்கி நெய்சொரி
கூரழல் போல்வதோர் புலவி கூர்ந்ததே
ஆர்வுறு கணவன்மாட் டமிர்தின் சாயற்கே. ௧௭௰

1026 புலந்தவள் கொடியென நடுங்கிப் பொன்னரிச்
சிலம்பொடு மேகலை மிழற்றச் சென்னிமேல்
அலங்கல்வா யடிமல ரணிந்து குண்டலம்
இலங்கப்பேர்ந் தினமலர் சிதறி யேகினாள். ௧௭௧

1027 துனிப்புறு கிளவியாற் றுணைவி யேகலும்
இனிப்பிறர்க் கிடமிலை யெழுவ லீங்கெனக்
கனிப்புறு சொல்லளைஇப் பறந்து காளைதன்
பனிக்கதிர்ப் பகைமலர்ப் பாதஞ் சேர்ந்ததே. ௧௭௨

1028 வாழ்கநின் கழலடி மைந்த என்னளக்
தோழியர் சுவாகதம் போது கீங்கெனச்
சூழ்மணி மோதிரஞ் சுடர்ந்து வில்விட
யாழறி வித்தகன் அங்கை நீட்டினான். ௧௭௩

1029 பொன்னியல் குரும்பையிற் பொலிந்த மென்முலைக்
கன்னியர் தூதொடு காமர் பைங்கிளி
முன்னமே வந்தென முறுவல் நோக்கமோ(டு)
என்னைகொல் வரவென இனிய செப்பினான். ௧௭௪

1030 மையலங் களிற்றொடு பொருத வண்புகழ்
ஐயனைச் செவ்விகண் டறிந்து வம்மெனப்
பையர வல்குலெம் பாவை தூதொடு
கையிலங் கெஃகினாய் காண வந்ததே. ௧௭௫

வேறு

1031 வெஞ்சின வேழ முண்ட வெள்ளிலின் வெறிய மாக
நெஞ்சமும் நிறையும் நீல நெடுங்கணாற் கவர்ந்த கள்வி
அஞ்சனத் துவலை யாடி நடுங்கினாள் நிலைமை யென்னை
பைஞ்சிறைத்தத்தையென்னப் பசுங்கிளிமொழியுமன்றே.

வேறு

1032 பூவணை யழலின்மேற் சேக்கும் பொன்செய்தூண்
பாவைதான் பொருந்துபு நிற்கும் பற்பல்கால்
ஆவியா அழலென வுயிர்க்கும் ஐயென
மேவிப்பூ நிலமிசை யிருக்கும் மெல்லவே. களஎ

1033 பணித்தகு கோலமும் பந்தும் பார்ப்புறாள்
மணிக்கழங் காடலள் மாமை தான்விளர்த்(து)
அணித்தகை யாழினோ டமிர்தம் விட்டொரீஇத்
துணைப்பெரு மலர்க்கணிற் றுயிலும் நீங்கினாள். களஅ

1034 திருந்துவேற் சீவக சாமி யோவெனுங்
கருங்கடல் வெள்வளை கழல்ப வோவெனும்
வருந்தினேன் மார்புறப் புல்லு வங்தெனும்
பொருந்துபூங் கொம்பன பொருவின் சாயலே. களகூ

1035 கன்னியர் உற்றநோய் கண்ண ணார்க்குமஃ(து)
இன்னதென் றுரையலர் நாணி னாதலான்
மன்னும்யான் அறியலேன் மாத ருற்றநோய்
துன்னிநீ யறிதியோ தோன்றல் என்றதே. கஅ0

வேறு

1036 புள்ளின் வாயுரை கேட்டலும் பொன்செய்வேல்
எள்ளி நீண்டகண் ணாள்திறத் தின்னுரை
உள்ளி னார்உழைக் கண்டதொத் தானரோ
வள்ளல் மாத்தடிந் தானன்ன மாண்பினான். கஅக

1037 சொல்ம ருந்துதந் தாய்சொல்லு நின்மனத்(து)
என்ன மர்ந்த துரைத்துக்கொள் நீயென
வில்நி மிர்ந்தநின் வீங்கெழிற் றோளவட்(கு)
இன்ம ருந்திவை வேண்டுவல் என்றதே. கஅஉ

1038 பொற்குன் றாயினும் பூம்பழ னங்கள்சூழ்
நெற்குன் றம்பதி நேரினுந் தன்னையான்
கற்குன் றேந்திய தோளிணை கண்ணுறீஇச்
சொற்குன் றாபுணர் கேன்சொல்லு போஎன்றான். கஅந

1039 சேலை வென்றகண் ணாட்கிவை செப்பரி(து)
ஓலை யொன்றெழு திப்பணி நீயென
மாலை மார்பன் கொடுப்பத் தினைக்குரல்
ஓலை யோடுகொண் டோங்கிப் பறந்ததே. கஅச

1040 திருந்து கோதைச் சிகழிகைச் சீறடி
மருந்தின் சாயல் மணங்கமழ் மேனியாள்
பொருந்து பூம்பொய்கைப் போர்வையைப் போர்த்துடன்
கருங்கட் பாவை கவின்பெற வைகினாள். கஅரு

1041 மறங்கொள் வெங்கதிர் வேலவன் வார்கழல்
கறங்க ஏகித்தன் காதலி யூடலை
உறைந்த வொண்மலர்ச் சென்னியின் நீக்கினான்
நிறைந்த தின்பம் நெடுங்கணிக் கென்பவே. கஅசு

வேறு

1042 தன்துணைவி கோட்டியினில் நீங்கித் தனியிடம்பார்த்(து)
இன்துணைவற் சேர்வான் இருந்ததுகொல் போந்ததுகொல்
சென்றதுகொல் சார்ந்ததுகொல் செவ்வி யறிந்துருகும்
என்துணைவி மாற்றமிஃ தென்றதுகொல் பாவம். கஅஎ

வேறு

1043 செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரைதான்
தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்தாந் தாராரேல்
அந்தோ குணமாலைக் காதகா தென்றுலகம்
நொந்தாங் கழமுயன்று நோற்றானும் எய்துவனே. கஅஅ

1044 சென்றார் வரைய கருமஞ் செருவேலான்
பொன்றாங் கணியகலம் புல்லப் பொருந்துமேற்
குன்றாது கூடுகென வெண்முத்த வார்மணல்மேல்
அன்றாங் கணியிழையாள் ஆழி யிழைத்தாளே. கஅகூ

1045 பாக்வரை வாங்கிப் பழுதாகிற் பாவியேற்(கு)
ஏகுமால் ஆவி யெனநினைப்பப் பைங்கிளியார்
மாகமே நோக்கி மடவரலே அவ்விருந்தாள்
ஆகும்யான் சேர்வல் எனச்சென் றடைந்ததே. ௧௧௯௦

1046 கண்டாள் நெடிதுயிர்த்தாள் கைதொழுதாள் கையகத்தே
கொண்டாள் தினைக்குரல்தான் சூடினாள் தாழ்குழல்மேல்
நுண்தார்ப் பசுங்கிளியை நோவ அகட்டொடுக்கி
வண்தாரான் செவ்விவாய்க் கேட்டாள்தன் மெய்ம்மகிழ்ந்தாள்.

1047 தீம்பா லமிர்தூட்டிச் செம்பொன் மணிக்கூட்டிற்
காம்பேர் பணைத்தோளி மென்பறவை கண்படுப்பித்(து)
ஆம்பால் மணிநாம மோதிரந்தொட் டையென்னத்
தேம்பா எழுத்தோலை செவ்வனே நோக்கினாள். ௧௧௯௨

1048 கொடுஞ்சிலையான் ஓலை குணமாலை காண்க
அடுந்துயரம் உள்சுடவெந் தாற்றாதேன் ஆற்ற
விடுந்த சிறுகிளியால் விம்மல்நோய் தீர்ந்தேன்
நெடுங்கணாள் தானும் நினைவகலா ளாக. ௧௧௯௩

1049 ஈட்டஞ்சால் நீள்நிதியும் ஈர்ங்குவளைப் பைந்தடஞ்சூழ்
மோட்டு வளஞ்சுரக்கும் ஊரும் முழுதீந்து
வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோட்
பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேனே. ௧௧௯௪

1050 குங்குமஞ்சேர் வெம்முலைமேற் கொய்தார் வடுப்பொறிப்பச்
செங்கயற்கண் வெம்பனியாற் சிந்தை யெரியவித்து
மங்கை மகிழ வுறையேனேல் வாளமருட்
பங்கப்பட் டார்மேற் படைநினைந்தேன் ஆகென்றான். ௧௧௯௫

1051 நூல்புடைத்தாற் போன்றினிய வித்தகஞ்சேர் நுண்வரிகள்
பால்மடுத்துத் தீந்தேன் பருகுவாள் போல்நோக்கிச்
சேல்படுத்த கண்ணீர் சுமந்தளைஇ மெய்ம்மகிழ்ந்து
மால்படுத்தான் மார்பின் மணந்தாளே போல்மகிழ்ந்தாள்.

1052 பாலவியும் பூவும் புகையும் படுசாந்தும்
காலவியாப் பொன்விளக்குந் தந்தும்மைக் கைதொழுவேன்
கோலவியா வெஞ்சிலையான் சொற்குன்றா தாகெனவே
நூலவையார் போல்நீங்கள் நோக்குமினே யென்றாள். ௧௧௯௭

வேறு

1053 மவ்வலங் குழலி னாளை மதியுடம் படுக்க லுற்றுச்
செவ்விதிற் செவிலி சொல்லுஞ் சிலைபிவர் நுதலி னாய்நின்
அவ்வைக்கு மூத்த மாம னொருமகற் கின்றான் தாதை
நவ்வியம் பிணைகொள் நோக்கி நகைமுக விருந்து செய்தான்.

1054 பண்டியாற் பண்டி செம்பொன் பல்வளை பரிய மாகக்
கொண்டுவந் தடிமை செய்வான் குறையுறு கின்ற தன்றிக்
கண்டவர் கடக்க லாற்றாக் கிழிமிசை உருவு தீட்டி
வண்டிமிர் கோதை நின்னை வழிபடும் நாளும் என்றாள்.

1055 மைத்துனன் வனப்பின் மிக்கான் வளநிதிக் கிழவன் காளை
உத்தமன் உனது நாமம் அல்லதொன் றுரைத்தல் தேற்றான்
இத்திறத் திவன்கண் நின்னை எண்ணினர் என்ற லோடும்
தத்தையங் கிளவி கையாற் செவிமுதல் அடைச்சிச் சொன்னாள்.

1056 மணிமதக் களிறு வென்றான் வருத்தச்சொற் கூலி யாக
அணிமதக் களிற னானுக் கடிப்பணி செய்வ தல்லால்
துணிவதென் சுடுசொல் வாளாற் செவிமுதல் ஈரல் என்றாள்
பணிவரும் பவளப் பாவை பரிவுகொண் டனைய தொப்பாள்.

1057 கந்துகப் புடையிற் பொங்குங் கலினமா வல்ல காளைக்(கு)
எந்தையும் யாயும் நேரா ராய்விடின் இறத்த லொன்றே
சிந்தனை பிறிதொன் றாகிச் செய்தவ முயற லொன்றே
வந்ததால் நாளை யென்றாள் வடுவெனக் கிடந்த கண்ணாள்.

1058 தேன்நெய்போன் றினியசொல்லாள் சிறுமுதுக்குறைமைகேட்டே
ஊனைநைந் துருகிக் கைத்தாய் உள்நிறை உவகை பொங்க
ஆன்நெய்பாற் கிவர்ந்த தொத்த தழேற்களன்பாவையென்று
தானையாற் றடங்கண் நீரைத் துடைத்துமெய் தழுவிக்கொண்டாள்.

1059 துக்ள்மனத் தின்றி நோற்ற தொல்வினைப் பயத்தின் அன்றே
தகண் இலாக் கேள்வி யான்கட் டங்கிய தென்று பின்னும்
மகள்மனங் குளிர்ப்பச் சொல்லி மறுவலும் புல்லிக் கொண்டாங்(கு)
அகல்மனைத்தாய்க்குச்சொன்னாள் அவளுந்தன்கேட்குச்சொன்னாள்.

1060 வினையமா மாலை கேள்வன் குபேரமித் திரற்குச் சொல்ல
அனையதே பட்ட தென்றால் ஐயனே நங்கைக் கொத்தான்

வனையவே பட்ட போலும் மணிமருள் முலையி னாளைப்
புனையவே பட்ட பொற்றூர்ப் புண்ணியற் கீதும் என்றான்.

வேறு

1061 கற்றார் மற்றுங் கட்டுரை வல்லார் கவியென்னும்
நற்றேர் மேலார் நால்வரை விட்டாற் கவர்சென்றார்
சுற்றார் வல்விற் சூடுறு செம்பொற் கழல்நாய்கன்
பொற்றார் மார்பீர் போதர்மி னென்றாங் கெதிர்கொண்டான்.

1062 சிந்தா நின்ற தீமுக வேலான் மணிச்செப்பில்
ஈந்தான் கொண்டார் இன்முக வாசம் எரிசெம்பொன்
காந்தா நின்ற கற்பக மன்னீர் வரப்பெற்றேன்
சேர்ந்தேன் இன்றே வீடென நாய்கற் கவர்சொன்னார். உ0எ

1063 யாமகள் ஈதும் நீர்மகட் கொண்மின் எனயாருந்
தாமகள் நேரா ராயினுந் தண்ணென் வரைமார்பிற்
பூமகள் வைகும் புண்ணியப் பொற்குன் றனையானுக்(கு)
யாமகள் நேர்ந்தே மின்றென நாய்கற் கவர்சொன்னார். உ0அ

1064 சுற்றார் வல்விற் சூடுறு செம்பொற் கழலாற்குக்
குற்றேவல் செய்துங் காளையும் யானுங் கொடியாளை
மற்சேர் தோளான் தன்மரு மானுக் கருள்செய்யப்
பெற்றே னென்னப் பேசினன் வாசங் கமழ்தாரான். உ0கூ

1065 விடைசூழ் ஏற்றின் வெல்புக ழான்தன் மிகுதாதை
கடல்சூழ் வையங் கைப்படுத் தான்போன் றிதுகூறக்
குடர்சூழ் கோட்ட குஞ்சரம் வென்ற வகையும்அப்
படர்சூழ் நெஞ்சிற் பாவைதன் பண்பும் அவர்சொன்னார்.

1066 மறையார் வேள்வி மந்திரச் செந்தீக் கொடியேபோற்
குறையாக் கற்பிற் சீவகன் தாயுங் கோலவேற்கட்
பொறையொன் றாற்றாப் போதணி பொற்கொம் பனையாளை
நறையார் கோதை நன்றென இன்புற் றெதிர்கொண்டாள்.

1067 பொற்கச் சார்த்த பூணணி பொம்மன் முலையாளை
அற்கச் செய்த யாப்பின ராகி அவண்வந்தார்
பொற்பக் கூறிப் போகுது மென்றார்க் கெழுகென்றார்
வற்கம் மிட்ட வண்பரி மாவின் அவர்சென்றார். உகஉ

வேறு

1068 மடந்தை திறத்தின் இயையம்மகட் பேசி வந்தார்
விடந்தைத்த வேலாற் குரைத்தாற்கவன் மெய்ம்ம கிழ்ந்தான்
நுடங்குங் கொடிப்போல் பவள்நூபுரம் ஆர்ப்ப வந்து
துடங்கண் ணவள்தாய் அதுகேட்டலுந் தக்க தென்றாள்.

1069 திருவிற் கமைந்தான் திசைபத்தும் மலிந்த தொல்சீர்
உருவிற் கமைந்தாற் கமைந்தாளென யாரும் ஒட்டப்
பெருகுங் கணியிற் கணிபேசிய பேதில் நாளாற்
பருகற் கமைந்த அமிர்தின்படர் தீர்க்க லுற்றார். ௨௧௪

1070 கரைகொன் றிரங்குங் கடலிற்கலி கொண்டு கல்லென்
முரசங் கறங்க முழவிம்மவெண் சங்கம் ஆர்ப்பப்
பிரசங் கலங்கிற் றெனமாந்தர் பிணங்க வேட்டான்
விரைசென் றடைந்த குழலாளையவ் வேனி லானே. ௨௧௫

1071 மழைமொக்கு ளன்ன வருமென்முலை மாதர் நல்லார்
இழைமுற் றணிந்தார் எழுநூற்றுவர் கோடி செம்பொன்
கழைமுத்தந் தீந்தேன் கரும்பார்வய லைந்து மூதூர்
குழைமுற்று காதின் மணிக்கொம்பொடு நாய்கன் ஈந்தான்.

வேறு

1072 பண்ணார்கிள விப்பவ ழம்புரை செவ்வாய்க்
கண்ணார்கதிர் மென்முலைக் காம்படு மென்றோள்
விண்ணோருல கின்னொடும் இந்நிலத் தில்லாப்
பெண்ணாரமிர் தேஅவன் பெற்ற அமிர்தே. ௨௧௭

1073 தேதாவென வண்டொடு தேன்வரி செய்யப்
போதார்குழ லாள்புணர் மென்முலை பாய்த்
தீதார்கமழ் தார்மது விண்டு துளிப்ப
ஈதா மவரெய் தியஇன் பமதே. ௨௧௮

1074 முந்நீர்ப்பவ ளத்துறை நித்தில முத்தம்
அந்நீரமிர் தீன்று கொடுப்ப அயின்றான்
மைந்நீர்நெடுங் கண்புரு வங்கள் மலங்கப்
பொன்னாரிக் கிண்கிணி பூசல் இடவே. ௨௧௯

1075 கம்பார்களி யானை கலக்க மலங்கி
அம்பேரரி வாள்நெடுங் கண்புதைத் தஞ்சிக்
கொம்பேகுழை வாயெனக் கேகுழைந் திட்டாய்
வம்பேயிது வையகத் தார்வழக் கன்றே. உ௨௰

1076 பூவார்புன லாட்டினுட் பூநறுஞ் சுண்ணம்
பாவாய்பணைத் தோட்சுர மஞ்சரி தோற்றாள்
காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோஅமிர் தோவெனக் கின்றிது சொல்லாய். உ௨க

1077 நற்றோ ளவள்சுண் ணநலஞ் சொல்லுவான்
உற்றீர்மறந் தீர்மனத் துள்ளுறை கின்றாள்
செற்றாலரி தாற்சென்மின் போமின் தீண்டா(து)
எற்றேயறி யாதவொ ரேழையெ னேயான். உ௨௨

1078 தூமங்கமழ் பூந்துகில் சேரா அசையாத்
தாமம்பரிந் தாடுதண் சாந்தந் திமிர்ந்திட்(டு)
ஏமன்சிலை வாணுதல் ஏற நெருக்காக்
காமன்கணை யேர்கண் சிவந்து புலந்தாள். உ௨௩

1079 மின்னேரிடை யாளடி வீழ்ந்தும் இரந்துஞ்
சொன்னீரவள் அற்பழ லுட்சொரிந் தாற்ற
இந்நீரன கண்புடை விட்டகன் றின்பம்
மன்னார்ந்து மதர்ப்பொடு நோக்கினள் மாதோ. உ௨௪

1080 இன்னீரெரி மாமணிப் பூண்கிடந் தீன்ற
மின்னாரிள மென்முலை வேய்மருள் மென்தோட்
பொன்னார்கொடி யேபுக ழிற்புகழ் ஞாலம்
நின்வாள்நெடுங் கண்விலை யாகும் நிகர்த்தே. உ௨௫

1081 தோளாற்றமுழு வித்துவர்த் தொண்டையஞ் செவ்வாய்
மீளாமணி மேகலை மின்னின் மிளிர
வாளார்மணிப் பூணவன் மாதரம் பாவைதன்னை
நாளாற்பெற்ற நல்லமிர் தென்ன நயந்தான். உ௨௬

வேறு

1082 சித்திர மணிக்குழை திளைக்கும் வாண்முகத்(து)
ஒத்தொளிர் பவளவா யோவக் கைவினைத்

தத்தரி நெடுங்கணாள் தன்னொ டாடுநீர்
வித்தகற் குற்றது விளம்பு கின்றதே. ௨௨௭

வேறு

1083 அரும்பெறற் குரிசிற் கஞ்ஞான் றேடிய நாகம் நாணிக்
கரும்பெறி கடிகை யோடு நெய்ம்மலி கவளங் கொள்ளா(து)
இரும்புசெய் குழவித்திங்கள் மருப்பிடைத் தடக்கைநாற்றிச்
சுரும்பொடு வண்டு பாடச் சுளிவொடு நின்ற தன்றே. ௨௨௮

1084 பகைபுறங் கொடுத்த வேந்திற் பரிவொடு பகடு நிற்பத்
தகைநிறக் குழைகள் தாழ்ந்து சாந்தின்வாய் நக்கி மின்னப்
புகைநிறத் துகிலிற் பொன்னாண் துயல்வரப் போந்துவேந்தன்
மிகைநிறக் களிற்றை நோக்கி வேழமென் னுற்றதென்றான்.

1085 கொற்றவன் குறிப்பு நோக்கிக் குஞ்சரப் பாகன் கூறும்
இற்றென வுணர்தல் தேற்றேன் இறைவநின் அருளி னாற்கொல்
செற்றமிக் குடைமை யாற்கொல் சீவகன் இன்ன நாளால்
மற்றிதற் குடற்சி செய்ய மதமிது செறித்த தென்றான்.

1086 ஈண்டழற் குட்டம் போல எரியெழத் திருகி நோக்கிக்
கோண்தரு குறும்பர் வெம்போர் கோக்குழாம் வென்றதுள்ளி
மாண்டதில் செய்கை சூழ்ந்த வாணிகன் மகனை வல்லே
ஆண்திறங் களைவென் ஓடிப் பற்றுபு தம்மின் என்றான்.

1087 கன்றிய வெகுளி வேந்தன் கால்வலி இளையர் காய்ந்து
கொன்றுயிர் கொணர வோடுங் கொழுங்குடர்க் கண்ணி மாலை
ஒன்றிய வுதிரச் செச்சை யொண்ணிண மீக்கொள் தானைத்
தென்திசைக் கிறைவன் தூதிற் செம்மலைச் சென்று சேர்ந்தார்.

1088 சண்பக மாலை வேய்ந்து சந்தனம் பளிதந் தீற்றி
விண்புக நாறு சாந்தின் விழுமுலைக் காம வல்லி [தோள்மேல்
கொண்டெழுந் துருவு காட்டி முகத்திடைக் குளித்துத்
வண்தளி ரீன்று சுட்டி வாணுதல் பூட்ட வைத்தான். ௨௩௩

1089 பண்ணடி வீழுந் தீஞ்சொற் பாவைநின் வனப்பிற்கெல்லாங்
கண்ணடி கருங்கண் என்னும் அம்பறாத் தூணி தன்னாற்
புண்ணுடை மார்பத் தோவா தெய்தியால் எங்குப் பெற்றாய்
பெண்ணுடைப் பேதை யென்றோர் நாள்முற்றும் பிதற்றி னானே.

1090 திங்கள்சேர் முடியி னானுஞ் செல்வியும் போன்று செம்பொ
இங்குவார் கழலி னானுங் கோதையும் இருந்த போழ்திற்[ன்
சிங்கவே றெள்ளிச் சூழ்ந்த சிறுநரிக் குழாத்திற் சூழ்ந்தார்
அங்கது கண்ட தாதி ஐயனுக் கின்ன தென்றாள். ௨௯௫

1091 என்றவ ளுரைப்பக் கேட்டே இடிபட முழங்கிச் செந்தீ
நின்றெரி வதனை யொத்து நீள்முழைச் சிங்க ஏறு
தன்துணைப் பெட்டை யோடு தான்புறப் பட்ட தொத்தான்
குன்றிரண் டிருந்த போலுங் குங்குமக் குவவுத் தோளான்.

1092 பொன்அரி மாலை தாழப் போதணி கூந்தல் ஏந்திப்
பன்அரு மாலை யாற்குப் பட்டதை யெவன்கொ லென்னாப்
பின்னரு மாலை யோராள் பெருநடுக் குற்று நின்றாள்
மன்அரு மாலை நாக மழையிடிப் புண்ட தொத்தாள். ௨௯௭

1093 கடுகிய இளையர் நோக்கும் கண்ணிய பொருளும் எண்ணி
அடுசிலை யழல ஏந்தி ஆருயிர் பருகற் கொத்த
விடுகணை தெரிந்து தானை வீக்கற விசித்து வெய்தாத்
தொடுகழல் நரல வீக்கிச் சொல்லுமின் வந்த தென்றான்.

1094 அடிநிழற் றருக என்றெம் ஆணைவேந் தருளிச் செய்தான்
வடிமலர்த் தாரி னாய்நீ வருகென வானின் உச்சி
இடியுரு மேற்றிற் சீறி இருநிலஞ் சுடுதற் கொத்த
கடிமதில் மூன்று மெய்த கடவுளிற் கனன்று சொன்னான்.

1095 வாள்இழுக் குற்ற கண்ணாள் வருமுலை நயந்து வேந்தன்
கோள்இழுக் குற்ற பின்றைக் கோத்தொழில் நடாத்து கின்றான்
நாள்இழுக் குற்று வீழ்வ தின்றுகொல் நந்த திண்தேர்
தோள்இழுக் குற்ற மொய்ம்ப பண்ணெனச் சொல்லி னானே.

1096 வேங்தொடு மாறு கோடல் விளிகுற்றார் தொழில தாகுங்
காய்ந்தடு வெகுளி நீக்கிக் கைகட்டி யிவனை யுய்த்தால்
ஆய்ந்திடும் அழற்சி நீங்கும் அதுபொரு ளென்று நல்ல
சாந்துடை மார்பன் தாதை தன்மனத் திழைக்கின் றானே.

1097 ஊன்பிறங் கொளிறும்வேலான் ஓர்த்துத்தன் உவாத்தி சொல்லால்
தான்புறங் கட்டப் பட்டுத் தன்சினந் தணிந்து நிற்பத்
தேன்பிறங் கலங்கல் மாலைச் சுநந்தையுந் துணைவன் தானும்
கோன்புறங் காப்பச் சேறல் குணமெனக் கூறி னாரே.

1098 ஈன்றதாய் தந்தை வேண்ட இவ்விட ரூற்ற தென்றால்
தோன்றலுக் காண்மை குன்று தென்றசொ லிமிழிற்பூட்டி
மூன்றனைத் துலக மெல்லா முட்டினு முருக்கு மாற்றல்
வான்தரு மாரி வண்கை மதவலி பிணிக்கப் பட்டான். உசங

வேறு

1099 குழலுடைச் சிகழிகைக் குமரன் தோளிணை
கழலுடை யிளையவர் கச்சின் வீக்கலின்
அழலுடைக் கடவுளை அரவு சேர்ந்தென
விழவுடை முதுநகர் விலாவிக் கின்றதே. உசச

வேறு

1100 தோளார் முத்துந் தொன்முலைக் கோட்டுத் துயல்முத்தும்
வாளா ருண்கண் வந்திழி முத்தும் இவைசிந்தக்
காளாய் நம்பி சீவக சாமி யெனநற்றாய்
மீளாத் துன்ப நீள்கடல் மின்னின் மிசைவீழ்ந்தாள். உசரு

1101 பாலா ராவிப் பைந்துகி லேந்திப் படநாகம்
போலாம் அல்குற் பொற்றொடி பூங்கட் குணமாலை
ஏலா தேலா தெம்பெரு மானுக் கிஃதென்னா
நூலார் கோதை நங்கெரி வாய்ப்பட் டதுவொத்தாள். உசசு

வேறு

1102 எரிதவழ் குன்றத் துச்சி யிரும்பொறிக் கலாப மஞ்ஞை
இரிவன போன்று மாடத் தில்லுறை தெய்வ மன்னார்
பரிவுறு மனத்தின் ஓடிப் பட்டதை யுணர்ந்து பொற்றார்
அரியுறழ் மொய்ம்ப ஓவென் றுகுலப் பூசல் செய்தார். உசஎ

1103 கங்கையின் சுழியிற் பட்ட காமரு பிணையின் மாழ்கி
அங்கவர்க் குற்ற துள்ளி யவலநீ ரழுந்து கின்ற
குங்குமக் கொடியொ டேந்திக் கோலம்வீற் றிருந்த கொம்மைப்
பொங்கிள முலையி னார்க்குப் புரவலன் இதனைச் சொன்னான்.

1104 கட்டுயி லனந்தர் போலக் கதிகளுட் டோன்று மாறும்
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயரு மாறும்
உட்பட வுணர்ந்த யானே யுள்குழைந் துருகல் செல்லேன்
எட்பக வனைத்தும் ஆர்வம் ஏதமே இரங்கல் வேண்டா.

1105 நன்மணி யிழந்த நாகர் நல்லிளம் படியர் போல
இல்மணி யிழந்து சாம்பி யிருநிலம் இவர்க ளெய்த
மின்அணி மதியங் கோள்வாய் விசும்பிடை நடப்ப தேபோற்
கல்மணி யுமிழும் பூணான் கடைபல கடந்து சென்றான்.

வேறு

1106 வெந்தனம் மனம்மென வெள்ளைநோக்கின் முள்ளெயிற்(று)
அந்துவர்ப் பவளவா யம்மழலை யின்சொலார்
பந்துபாவை பைங்கழங்கு பைம்பொன்முற்றில் சிற்றிலுள்
நொந்துவைத்து நூபுரம் ஒலிப்பவோடி நோக்கினார். ௨௫௧

1107 மல்லிகைம் மலிந்தமாலை சோரவார்ந்த குண்டலம்
வில்விலங்க மின்னுக்கோட்ட வீணைவிட்டு வெய்துராய்
ஒல்லெனச் சிலம்பரற்ற வீதிமல்க ஓடினார்
சில்சுணங் கிளம்முலைச் செழும்மலர்த் தடங்கணார். ௨௫௨

1108 நெய்த்தலைக் கருங்குழல் நிழன்றெருத் தலைத்தர
முத்தலைத் திளம்முலை முகஞ்சிவந் தலம்வரக்
கைத்தலங் கடுத்தடித்த பந்துநீக்கி வந்தவண்
மைத்தலை நெடுந்தடங்கண் மங்கையர் மயங்கினார். ௨௫௩

1109 கோதைகொண்ட பூஞ்சிகைக் கொம்மைகொண்ட வெம்முலை
மாதுகொண்ட சாயலின் மடந்தையர் மனங்கசிந்(து)
ஓதம்முத் துகுப்பபோல் உண்கண்வெம் பனியுகுத்(து)
யாதுசெய்கம் ஐயஎன் றன்புமிக் கரற்றினார். ௨௫௪

1110 செம்பொனோலை வீழவுஞ் செய்கலன்கள் சிந்தவும்
அம்பொன்மாலை யோடவிழ்ந் தசைந்துகூந்தல் சோரவும்
நம்பனுற்ற தென்னெனா நாடகம் மடந்தையர்
வெம்பிவீதி யோடினார் மின்னினன்ன நுண்மையார். ௨௫௫

1111 பூவலர்ந்த தாரினான் பொற்புவாடு மாயிடின்
போவுடம்பு வாழுயிர் பொன்றுநீயும் இன்றெனா
வீகலந்த மஞ்ஞைபோல வேல்நெடுங்கண் நீர்மல்க
ஆகுலத் தரிவையர் அவ்வயி றதுக்கினார். ௨௫௬

1112 தேன்மலிந்த கோதைமாலை செய்கலம் உகுத்துராய்க்
கால்மலிந்த காமவல்லி யென்னவன்ன ராயரோ

பரல்மலிந்த வெம்முலைப் பைந்துகி லரிவையர்
நூல்மலிந்த நுண்ணுசுப்பு நோவவந்து நோக்கினார். ௨௫௭

1113 மாதரார்கள் கற்பினுக் குடைந்தமா மணிக்கலைத்
தீதிலார நூற்பெய்வார் சிதர்ந்துபோகச் சிந்துவார்
போதுலாம் அலங்கலான்முன் போந்துபூந் தெரிவையர்
ஆதீகா தெனக்கலங்கி அவ்வயி றதுக்கினார். ௨௫௮

1114 வட்டிகை மணிப்பலகை வண்ண நுண் துகிலிகை
இட்டிடை நுடங்கநொந் திரியலுற்ற மஞ்ஞையிற்
கட்டழ லுயிர்ப்பின்வெந்து கண்ணிதீந்து பொன்னாக
மட்டவிழ்ந்த கோதைமார்கள் வந்துவாயில் பற்றினார்.

வேறு

1115 வினையது விளைவு காண்மின் என்றுகை விதிர்த்து நிற்பார்
இனையனாய்த் தெளியச் சென்றால் இடிக்குங்கொ லிவனையென்பார்
புனைநலம் அழகு கல்வி பொன்றுமால் இன்றொ டென்பார்
வனைகலத் திகிரி போல மறுகுமெம் மனங்கள் என்பார்.

1116 நோற்றிலர் மகளிரென்பார் நோங்கண்டீர் தோள்களென்பார்
கூற்றத்தைக்கொம்மைகொட்டிக்குலத்தொடுமுடியுமென்பார்
ஏற்றதொன் றன்று தந்தை செய்தஇக் கொடுமை யென்பார்
ஆற்றலள் சுநந்தை யென்பார் ஆதகா தறனே யென்பார்.

1117 தூக்குமின் காளை சீறின் துற்றிவன் உளனோ என்பார்
காக்குமால் வைய மெல்லாங் காவல னாகி யென்பார்
பாக்கியம் பெரிது மேகாண் இதுவுமோர் பான்மை யென்பார்
நோக்கன்மின் நாணுங் கண்டீர் நுதிகொள்நா கரிக னென்பார்.

1118 பூவரம் பாய கோதைப் பொன்னனார் புலவி நீக்கி
நூபுரந் திருத்திச் சேந்த நுதிவிரல் நொந்த என்பார்
யாவரும் புகழும் ஐயன் அழகுகெட் டொழியு மாயிற்
கோபுர மாட மூதூர் கூற்றுண விளிக என்பார். ௨௬௩

1119 கருஞ்சிலை மறவர் கொண்ட கணைநிரை விடுக்க வல்ல
இருஞ்சிலை பயின்ற திண்டோட் கிதுதகா தென்று குன்றிற்
கருங்கடல் துளுப்பிட் டாங்குக் கல்லெனக் கலங்கிக் காமர்
அருங்கடி யாணர் மூதூர் ஆகுலம் மயங்கிற் றன்றே. ௨௬௪

1120 இங்ஙனம் இவர்க ளேக எரியகம் விளைக்கப் பட்ட
வெங்கணை விடலை தாதை வியனகர் அவல மெய்தி
அங்கவ ருகுத்த கண்ணீர் அடித்துக ளவிப்ப நோக்கிப்
பொங்கமருழக்கும்வேலான்புலம்புகொண் டழேற்களென்றான்.

1121 மின்னினான் மலையை யீர்ந்து வேறிரு கூறு செய்வான்
துன்னினான் துளங்கி னல்லால் துளங்கல்அம் மலையிற்குண்டே
அன்னதே துணிந்த நீதி அருநவை நமனும் ஆற்றான்
என்னைநேர் நின்று வாழ்தல் இருநிலத் தாவ துண்டே. ௨௯௯

1122 வளைகடல் வலையிற் சூழ்ந்து மால்வரை வேலி கோலி
உளையரி படுக்க லுற்றான் படுப்பினும் படுக்க மற்றென்
கிளையழ என்னை வாள்வாய்க் கீண்டிட லுற்று நின்றான்
தளையவிழ் கண்ணி சிந்தத் தன்தலை நிலத்த தன்றே. ௨௯௭

1123 நீரகம் பொதிந்த மேக நீல்நிற நெடுநல் யானைப்
போரகத் தழலும் வாட்கைப் பொன்னெடுங் குன்றம் அன்னான்
ஆர்கலி யாணர் மூதூர் அழுதுபின் செல்லச் செல்வான்
சீருறு சிலம்பின் நூலாற் சிமிழ்ப்புண்ட சிங்கம் ஒத்தான்.

1124 மன்னர்தம் வெகுளி வெந்தீ மணிமுகில் காண மின்னிப்
பொன்மழை பொழியின் நந்தும் அன்றெனிற் புகைந்து பொங்கித்
துன்னினார் தம்மையெல்லாஞ் சுட்டிடும் என்று செம்பொன்
பன்னிரு கோடி யுய்த்துக் கந்துகன் பணிந்து சொன்னான்.

1125 மன்னவ அருளிக்கேண்மோ மடந்தையோர்கொடியைமூதூர்
நின்மதக் களிறு கொல்ல நினக்கது வடுவென் றெண்ணி
என்மகன் அதனை நீக்கி இன்னுயி ரவளைக் காத்தான்
இன்னதே குற்ற மாயிற் குணமினி யாது வேந்தே. ௨௭௦

1126 நாண்மைகொண் டீட்டப் பட்டார் நடுக்குறு நவையை நீக்கல்
ஆண்மக்கள் கடனென் றெண்ணி யறிவின்மை துணிந்த குற்றம்
பூண்மெய்க்கொண்டகன்றமார்பபொறுமதியென் றுபின்னும்
நீண்மைக்க ணின்று வந்த நிதியெலாந் தருவல் என்றான்.

1127 வாழியர் இறைவ தேற்றான் மாநிரை பெயர்த்த காளை
பீழைதான் பொறுக்க என்னப் பிறங்கிணர் அலங்கல் மாலை
சூழ்கதி ராரம் வீழ்நூல் பரிந்தற நிமிர்ந்து திண்தோள்
ஊழ்ப்பிணைந் துருமிற் சீறி யுடல்சினங் கடவச் சொன்னான்.

1128 ஆய்களிற் றசனி வேகம் அதன்மருப் பூசி யாகச்
சீவகன் அகன்ற மார்பம் ஓலையாத் திசைகள் கேட்பக்
காய்பவன் கள்வ ரென்ன எழுதுவித் திடுவல் இன்னே
நீபரி வொழிந்து போய்நின் அகம்புகு நினைய லென்றான்.

1129 கஞ்சனான் உரைப்பக் கேட்டே நாய்கனும் நடுங்கி யுள்ளம்
வெஞ்சின வேழம் உண்ட விளங்கனி போன்று நீங்கி
எஞ்சினான் போல நின்றான் ஏத்தருந் தவத்தின் மிக்க
வஞ்சமில் கொள்கை யான்சொல் அமிர்தினால் வற்புற் றானே.

1130 மின்னிலங் கெஃகி னானைப் பெறுகலான் தந்தை மீண்டு
தன்இலங் குறுக லோடுந் தாயழு தரற்று கின்றாள்
என்னிலை ஐயற் கென்ன யாவதுங் கவல வேண்டா
பொன்னலங் கொடியனாயோர் பொருளுரை கேளி தென்றான்.

1131 மதுமடை திறந்து தீந்தேன் வார்தரு கோதை நீமுன்
செதுமகப் பலவும் பெற்றுச் சிந்தைகூர் மனத்தை யாகி
இதுமக வழியின் வாழேன் இறப்பல்யான் என்னு மாங்கண்
கதுமெனக் கடவுள் தோன்றிக் கடைமுகங் குறுக வந்தான்.

1132 கறவைகாண் கன்றின் வெஃகிக் கண்டடி பணிந்து காமர்
நறவயா வுயிர்க்கு மாலை நாற்றிய இடத்து ளேற்றி
அறவியாற் காறு மூன்றும் அமைந்தநா லமிர்த மேந்தப்
பறவைதா துண்ட வண்ணம் பட்டினிப் பரிவு தீர்ந்தான்.

1133 ஆய்மணிப் பவளத் திண்ணை அரும்பெறற் கரகத் தங்கண்
தூமணி வாச நன்னீர் துளங்குபொற் கலத்துள் ஏற்று
வேய்மணித் தோளி நிற்ப விழுத்தவன் நியமம் முற்றி
வாய்மணி முறுவல் தோன்ற வந்தனை விதியிற் செய்தேன்.

1134 ஆறெலாங் கடலுள் வைகும் அருந்தவத் திறைவன் நூலுள்
வேறெலாப் பொருளும் வைகும் விழுத்தவ அறிதி நீயே
ஊறிலா வுணர்வின் நோக்கி யுரைமதி யெவன்கொல் மக்கட்
பேறிலா ளல்லள் பெற்ற வுயிர்சென்று பிறக்கு மென்றேன்.

1135 வம்பவிழ் கோதை தந்த வான்துவர்க் காயை வீழ்த்தோர்
செம்பழுக் காயை வாங்கித் திருநிலத் தெடுத்துக் கொண்டாங்(கு)
அம்பவிழ் நீண்ட வாட்கண் அலமரு மணிசெ யம்பூங்
கொம்படு நுசுப்பினாய்க்குத் தந்தனென் பேணிக் கொண்டாய்.

1136 பெற்றஅந் நிமித்தத் தானும் பிறந்தசொல் வகையி னானும்
அற்றமில் மணியை யங்கைக் கொண்டவர் கண்டு காட்டக்
கற்பகங் காம வல்லி யனையநீர் கேண்மின் என்று
முற்றுபு கனிந்த சொல்லால் முனிவரன் மொழியும் அன்றே.

1137 ஒன்றும்நீர் கவல வேண்டா உலகெலாம் ஆளுஞ் சீர்த்திப்
பொன்திக ழொளியி னானோர் புண்ணியற் பெறுதிர் என்ன
நின்றநீ யுவந்து நீங்க நிகழ்பொருள் எனக்குச் செப்பிப்
பின்றையும் நிகழ்வ துண்டு பேசுவல் கேளி தென்றான்.

1138 நிலவுறழ் பூணி னானை நெடுநகர் இரங்கக் கையாத்(து)
அலபல செய்து கொல்வான் அருளிலான் கொண்ட போழ்தில்
குலவிய புகழி னானைக் கொண்டுபோம் இயக்கன் அஞ்சல்[ற்
சிலபகல் கழிந்து காண்டி சிந்தியே தென்று சொன்னான்.

1139 வசையற நிமிர்ந்த கற்பின் மாலையும் மாமி தானுந்
தசையற வுருகி வெந்து தம்முயிர் நீங்கும் ஆங்கண்
நொசிதவன் சொற்க ளென்னும் நோன்புணை தழுவி நெஞ்சிற்
கசிவெனுங் கடலை நீந்திக் கரையெனுங் காலை கண்டார்.

1140 திருக்குழை மகளிர் நையச் சீவக சாமி திண்தோள்
வரிக்கச்சிற் பிணிக்கப்பட்டான் மன்னனா லென்னக்கேட்டே
தருக்குடை வேழம் வாளார் ஞாட்பினுட் டகைமை சான்ற
மருப்புடன் இழந்த தொத்தார் மன்னுயிர்த் தோழன் மாரே.

1141 நட்டவற் குற்ற கேட்டே பதுமுகன் நக்கு மற்றோர்
குட்டியைத் தின்ன லாமே கோட்புலி புறத்த தாகக்
கட்டியங் கார னென்னுங் கழுதைநம் புலியைப் பாய
ஒட்டியிஃ துணர லாமே உரைவல்லை அறிக என்றான். உஅகூ

1142 சிலையொடு செல்வன் நின்றாற் றேவரும் வணக்க லாற்றார்
முலையுடைத் தாயோ டெண்ணித் தந்தையிக் கொடுமை செய்தான்
கலைவல்லீர் இன்னுங் கேண்மின் இன்னதென் றுரைக்கு மாங்கண்
விரைவொடு சென்ற ஒற்றுள் விளைந்தவா பேசு கின்றான்.

1143 இட்டிவேல் குந்தங் கூர்வாள் இருஞ்சிலை இருப்புச் சுற்றார்
நெட்டிலைச் சூலம் வெய்ய முளைத்தண்டு நெருங்க ஏந்தி
எட்டெலாத் திசையும் ஈண்டி யெழாயிரத் திரட்டி மள்ளர்
கட்டழற்கதிரை ஊர்கோள் வளைத்தவா வளைத்துக்கொண்டார்.

1144 பிடியொடு நின்ற வேழம் பெருவளைப் புண்ட வண்ணம்
வுடிமலர்க் கோதை யோடும் வளைத்தலின் மைந்தன் சீறி
விடுகணை சிலையொ டேந்தி வெருவரத் தோன்றலோடும்
அடுபுலி கண்ட மான்போல் ஆறல வாயி னாரே. ௨௮௯

1145 சூழ்கழல் மள்ளர் பற்றச் சூழ்ச்சியிற் றந்தைபுல்லி [றென்
வீழ்தரு கண்ணள் தம்மோய் விளங்குதோள் பிணிப்ப மற்
றோழரை வடுச்செய் திட்டே னென்றுதான் துளங்கி நின்றான்
ஊழ்திரைப் பாம்பு சேர்ந்த ஒளிமிகு பரிதி யொத்தான்.

1146 ஒற்றன்வந் துரைப்பக் கேட்டே ஒத்ததோ என்சொ லென்னாச்
சுற்றினார் முகத்தை நோக்கிச் சூழிமால் யானை யன்னான்
உற்றஇவ் விடரைத் தீர்க்கும் உபாயம்நீ ருரைமின் என்றான்
பொற்றிரட் குன்றம் போலப் பொலிவுகொண் டிருந்த தோளான்.

1147 நிறைத்திங்களொளியொடொப்பான்புத்திசேன்நினைந்துசொல்லும்
மறைத்திங்கண் நகரை வல்லே சுடுதும்நாஞ் சுடுத லோடும்
இறைக்குற்றேல் செய்தலின்றி எரியின்வாய்ச் சனங்கள்நீங்கச்
சிறைக்குற்றநீக்கிச்செற்றாற்செகுத்துக்கொண்டெழுதுமென்றான்.

1148 காலத்தீ நகரை மேயக் கடியரண் கடந்த அம்பிற்
சாலத்தீச் சுவரார் கோலஞ் செய்துநம் மறவர் ஈண்டிக்
கோலத்தீ வேலி னானைக் கோயிலுள் வளைப்ப இப்பால்
ஆலைத்தீ யிடங்கள் தோறும் ஆகுலஞ் செய்தும் என்றான்.

1149 சிறைப்புறங் காத்துச் செல்லும் மதனனைத் தெருவில் வீழப்
பிறைத்தலை யம்பிற் சென்னி பெருநிலத் திடுவல் இட்டால்
மறுக்குற்று மள்ளர் நீங்க மைந்தனைக் கொண்டு போகி
அறைத்தொழி லார்க்குஞ்செல்லா அருமிளை புகுமினென்றான்.

1150 மாற்றவர் மலைப்பின் ஆங்கே வாட்கடாக் கொண்டு கொய்தா
வேற்றுல கேற்றி நம்பின் விரைதர்வேன் உலகிற் கெல்லாம்
ஆற்றிய நட்பு வல்லே வலிப்புறீஇ யிடுமின் என்றான்
கூற்றங்கள் பலவுந் தொக்க கூற்றத்திற் கூற்றம் ஒப்பான்.

1151 காலனைச் சூழ்ந்த நோய்போல் நபுலமா விபுலர் சூழ
வேலினை யேந்தி நந்தன் வெருவரத் தோன்ற லோடும்
மாலைதன் தாதை தானும் மக்களும் வந்து கூடிப்
பாலவர் பிறரும் ஈண்டிப் பாய்புலி யினத்திற் சூழ்ந்தார்.

1152 மட்டுவாய் அவிழ்ந்த தண்டார்த் தாமரை நாமன் சொன்ன
கட்டமை நீதி தன்மேற் காப்பமைந் திவர்கள் நிற்பப்
பட்டுலாய்க் கிடந்த செம்பொற் கலையணி பரவை யல்குல்
இட்டிடைப் பவழச்செவ்வாய்த்தத்தையு மிதனைக்கேட்டாள்.

1153 மணியியல் யவனச் செப்பின் மங்கலத் துகிலை வாங்கிக்
கணைபுரை கண்ணி யேற்ப வுடுத்தபின் செம்பொற் செப்பிற்
பிணையலும் நறிய சேர்த்திப் பெருவிலை யாரந் தாங்கித்
துணைவனுக் குற்ற துன்பஞ் சொல்லிய தொடங்கி னாளே.

1154 பொன்னணி மணிசெ யோடை நீரின்வெண் சாந்து பூசித்
தன்னுடை விஞ்சை யெல்லாந் தளிரியல் ஓத லோடும்
மின்னடு வாளும் வேலுங் கல்லொடு தீயுங் காற்றும்
மன்னுடன் ஏந்தித் தெய்வ மாதரைச் சூழ்ந்த அன்றே.

வேறு

1155 ஆரமின் னும்பணை வெம்முலை யாடமைத் தோளினுள்
வீரனுற் றதுயர் மின்னென நீக்கிய மெல்லவே
நேரமன் னும்வரு கென்றுநின் றாள்நினைந் தாளரோ
பாருள்மன் னும்பழி பண்பனுக் கின்று விளைந்ததே. ௨௦௦

1156 மன்னன்செய் தசிறை மாகட லுட்குளித் தாழ்வுழித்
தன்னையெய் திச்சிறை மீட்டனள் தன்மனை யாளெனின்
என்னையா வதிவன் ஆற்றலுங் கல்வியு மென்றுடன் [வமே.
கொன்னும்வை யங்கொழிக் கும்பழிக் கென்செய்கோ தெய்

1157 செல்வனுற் றசிறை செய்யவள் நீக்குமென் றுற்பழி
இல்லையா யின்னவள் யானெனும் வேற்றுமை யில்லையே
சொல்லின்வெள் ளிம்மலை தோடவிழ் தாமரைப் பொன்மலர்
எல்லையா கும்பொதுப் பெண்ணவள் யான்குல மங்கையே.

1158 ஆவதா கப்புக ழும்பழி யும்மெழு நாளவை
தேவர்மாட் டும்முள மக்களு ளில்வழித் தேர்கலேன்
நோமென்நெஞ் சம்மென நோக்கிநின் றுள்சிறைப்பட்டதன்
காவற்கன் றிற்புனிற் றுவன கார்மயிற் சாயலே. ௨௦௫

வேறு

1159 மாநகர் சுடுத லொன்றே மதனனை யழித்த லொன்றே
வானிக ரில்லா மைந்தர் கருதிய ததுவும் நிற்க
வேய்நிக ரில்ல தோளி விஞ்சையால் விடுத்துக் கொள்ளப்
போயுயிர் வாழ்தல் வேண்டே னெனப்பொருள் சிந்திக்கின்றான்.

1160 கச்சற நிமிர்ந்து மாந்தர்க் கடாவிடு களிறு போல
உச்சியும் மருங்கும் பற்றிப் பிளந்துயிர் பருகிக் கோண்மா
அச்சுற அழன்று சீறி யாட்டினம் புக்க தொப்பக்
குச்சென நிரைத்த யானைக் குழாமிரித் திடுவல் என்றான்.

1161 மின்னிலங் கெயிற்று வேழம் வேழத்தாற்புடைத்துத்திண்தேர்
பொன்னிலங் கிவுளித் தேராற் புடைத்துவெங் குருதிபொங்க
இன்னுயி ரிவனை யுண்ணு மெல்லைநாள் வந்த தில்லை
என்னையிக்கிருமிக்கொன்றென் தோழனைநினைப்பலென்றான்.

1162 தோழனுந் தேவி மார்தங் குழாத்துளான் தளும்பு முந்நீர்
எழ்தரு பருதி தன்மேல் இளம்பிறை கிடந்த தேபோல்
தாழ்தகை யார மார்பிற் சீவகன் குணங்கள் தம்மை
யாழெழீஇப் பாடக் கேட்டோ ரரம்பையைச் சார்ந்தி ருந்தான்.

வேறு

1163 வயிரம் வேய்ந்தமணி நீண்முடி வாலொளி வானவன்
செயிரிற் றீர்ந்தசெழுந் தாமரைக் கண்ணிடன் ஆடலும்
உயிரி னானைநினைந் தானுற்ற தோதியின் னோக்கினான்
மயில னார்க்குப்படி வைத்தவன் மால்விசும் பேறினான்.

1164 இடியு மின்னுமுழக் கும்மிவற் றானுல கம்நிறைந்(து)
ஒடியும் ஊழியிவ ணின்றுறு கால்வரை கீழ்ந்தென
நடலை நோக்கிக்கதிர் நாணுவ தொப்ப மறைந்தபின்
கடலை யேந்திநிலத் திட்டென மாரி கலந்ததே. ௨௦௬

1165 விண்ணு மண்ணுமறி யாது விலங்கொடு மாந்தர்தங்
கண்ணும் வாயுமிழந் தாங்கடல் கொண்டது காண்கெனப்
பெண்ணும் ஆணுமிரங் கப்பெரு மான்மகன் சாமியை
அண்ண லேந்தியக லம்புல்லிக் கொண்டெழுந் தேகினான்.

1166 குன்றுண் டோங்குதிரள் தோளவற் கொண்டெழுந் தேகலும்
நன்றுண் டாங்கென நன்னுதல் வாழ்த்தினள் வாழ்த்தலும்
ஒன்றுண் டாயிற்றவ ளுள்ளழி நோயுயர் காமனை
என்றுண் டாங்கொல்லினிக் கட்படு நாளெனுஞ் சிந்தையே.

1167 சந்த மாலைத்தொகை தாழ்ந்துசாந் தங்கமழ் பூமியுள்
வந்த விண்ணோர்களை வாழ்த்தியேத் திம்மலர் மாலைதூய்
எந்தை மார்களெழு கென்னவே கவிடுத் தாள்குரல்
சிந்தை செய்யுஞ்சிற கர்க்கிளி தோற்குமந் தீஞ்சொலாள்.

வேறு

1168 மலைத்தொகை யானைமன்னன் மைத்துனன்மதன னென்பான்
கொலைத்தொகைவேலினானைக்கொல்லியகொண்டுபோந்தான்
நலத்தகை யவனைக் காணான் நஞ்சுயிர்த் தஞ்சி நோக்கிச்
சிலைத்தொழிற்றடக்கைமன்னற் கிற்றெனச்செப்புகின்றான்.

1169 மன்னனாற் சிறப் பட்ட மைந்தனைக் கொல்லப் போந்தேம்
என்னினிச் சொல்லிச் சேறும் என்செய்தும் யாங்களெல்லாம்
இன்னது பட்ட தென்றால் எரிவிளக் குறுக்கும் நம்மைத்
துன்னுபுசூழ்ந்துதோன்றச் சொல்லுமின்செய்வதென்றான்.

1170 வாழ்வதோ ருபாயம் நாடி மதியுடம் பட்டு வல்லே
சூழ்வினை யாள ராங்கண் ஒருவனைத் தொடர்ந்து பற்றிப்
போழ்படப் பிளந்து வாளிற் புரட்டிபிட் டரியக் கண்டே
ஆழ்கல மாந்தர் போல அணிநகர் அழுங்கிற் றன்றே. ௲௱௭௰

1171 காய்சின வெகுளி வேந்தே களிற்றொடும் பொருத காளை
மாசனம் பெரிது மொய்த்து மழையினோ டிருளுங் காற்றும்
பேசிற்றன் பெரிதுந் தோன்றப் பிழைத்துய்யப் போத லஞ்சி
வாசங்கொள் தாரி னானை மார்புபோழ்ந் துருட்டி யிட்டேம்.

1172 அருள்வலி யாண்மை கல்வி யழகறி விளமை யூக்கந்
திருமலி ஈகைபோகந் திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவரிவ் வுலகில் யாரே சீவகன் ஒக்கு நீரார்
பெரிதரிதிவனைக்கொன்றாய் பெறுகெனச்சிறப்புச்செய்தான்.

5. பதுமையார் இலம்பகம்

1173 வீட்டருஞ் சிறையிற் றேவன் விடுத்துயக் கொள்ளப் பட்ட
கோட்டமில் குணத்தினன்போ யென்செய்கின்றன்கொலென்னிற்
கூட்டரக் கெறிந்த பஞ்சிற் கூடிய பளிங்கிற் றோன்றுந்
தீட்டரும் படிவ மன்னன் திறங்கிளந் துரைத்து மன்றே. க

1174 விலங்கிவில் லுமிழும் பூணன் விழுச்சிறைப்பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னன்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலு மகிழ்வுநெஞ்சிற் பொலிதலு மின்றிப்பொன்னார்ந்(து)
உலங்கலந் துயர்ந்த தோளான் ஊழ்வினை யென்று விட்டான். உ

1175 வானரம் உகள நாகம் மலர்துதைந் தொழுக அஞ்சித் [ந்
தேனிரைத் தெழுந்து திங்கள் இருளெனச்சென்று மொய்க்கு
கானமர் அருவிக் குன்றிற் காய்கதிர் சுமந்து திங்கள்
மேல்நிமிர்ந் தேறி யாங்குத் தேவன்வெற் பேறி னனே. ங

1176 திங்களைத் தெளித்திட் டன்ன பாற்கடற் றிரைசெய் தெண்ணீர்
வெங்கள்விட் டலர்ந்த கண்ணி விண்ணவன் உரிமை தன்னன்
மங்கல வகையின் ஆட்டி மணியணி கலங்கள் சேர்த்திப்
பங்கய நெடுங்க ணானைப் பவித்திர குமர னென்றான். ச

1177 பொன்னணி காம்பு செய்த பொழிகதிர்த் திங்கள் போலும்
பின்னிய முத்த மாலைப் பிணையல்தாழ் குடையின் நீழற்
கன்னியர் கவரி வீசக் கனமணிக் குழையில் வீச
இன்னிசைக் கூத்து நோக்கி யிருந்தனன் திலக மன்னன். ரு

1178 இருமலர்க் குவளையுண்கண் இமைப்பிலாப்பயத்தைப்பெற்ற
அரிமலர்த் தாரி னன்றன் அழகுகண் டளிய வென்னத்
திருமலர்க் கோதை யைம்பாற் றேவியர் தொடர்பு கேட்ப
எரிமணிப் பூணி னனும் இன்னணம் இயம்பி னனே. சு

வேறு

1179 பிணிக்குலத் தகவயிற் பிறந்த நோய்கெடுத்(து)
அணித்தகை யுடம்பெனக் கருளி நோக்கினன்
கணிப்பருங் குணத்தொகைக் காளை யென்றனன்
மணிக்கலத் தகத்தமிர் தனைய மாண்பினன். எ

1180 கட்டிற்சுற வுயிரிய காளை யன்னவன்
அடற்கரும் பகைகெடுத் தகன்ற நீணில
மடத்தகை யவளொடும் வதுவை சூட்டிநாங்
கொடுக்குவ மெனத்தெய்வ மகளிர் கூறினர். அ

1181 செருநிலத் தவனுயிர் செகுத்து மற்றெனக்(கு)
இருநில மியைவதற் கெண்ணல் வேண்டுமோ
திருநிலக் கிழமையுந் தேவர் தேயமுந்
தருநிலத் தெமக்கெனிற் றருகுந் தன்மையீர். கூ

1182 மண்மிசைக் கிடந்தன மலையுங் கானமும்
நண்ணுதற் கரியன நாடும் பொய்கையுங்
கண்மணி குளிர்ப்பன யாறுங் காண்பதற்(கு)
எண்ணமொன் றுளதெனக் கிலங்கு பூணினாய். க0

1183 ஊற்றுநீர்க் கூவலு ளுறையும் மீனனார்
வேற்றுநாட் டதன்சுவை விடுத்தல் மேயினார்
போற்றுநீ போவல்யா னென்று கூறினாற்(கு)
ஆற்றின தமைதியங் கறியச் செப்பினான். கக

வேறு

1184 இம்மலைக் கிரண்டு காதம் இறந்தபின் இருண்டு தோன்றும்
அம்மலை யரண பாத மென்பதன் றாள்வாய்த் தோன்றுந்
தம்வினை கழுவு கின்றார் சாரணர் தரணி காவல்
வெம்மையி னகன்று போந்து விழைவறத் துறந்து விட்டார்.

1185 சிந்தையிற் பரிதி யன்னார் சேவடி யிறைஞ்ச லோடும்
வெந்திற லியக்கி தோன்றி விருந்தெதிர் கொண்டு பேணித்
தந்தவள் அமிர்த மூட்ட உண்டவட் பிரிந்த காலைச்
சந்துடைச் சாரல் சேறி தரணிமேற் றிலக மன்னாய். கரு

வேறு

1186 அங்குநின் றகன்றபின் ஐயைங் காவதம்
வெங்களி விடுமத வேழப் பேரினந்
தங்கிய காடது தனிச்செல் வாரிலை
கங்கையின் கரையது கடலிற் றேன்றுமே. கசா

1187 புனலெரி தவழ்ந்தெனப் பூத்த தாமரை
வனமது வாளென வாளை பாய்வன
மனமகிழ் பெருந்தடம் வலத்திட் டேகுதி
இனமலர்த் தாரினுய் இரண்டு காதமே. கரு

1188 காந்திய மணியொடு வயிரம் பொன்கலந்(து)
ஏந்தல்நின் தோளென இரண்டு குன்றுபோய்ப்
பூந்துகில் மகளிரிற் பொலிந்து போர்த்ததோர்
பேந்தரு பேய்வனம் பெரிய காண்டியே. கசு

1189 இளவெயில் மணிவரை யெறித்த தன்னதோர்
அளவறு குங்குமத் தகன்ற மார்பினுய்
களவினின் அணிகலங் கவர்ந்த கள்வவென்(று)
உளர்மணிக் கொம்பனுர் உருகி நைபவே. கஎ

1190 பழங்குழைந் தனையதோர் மெலிவிற் பையென
முழங்கழல் வேட்கையின் முறுகி யூர்தரத்
தழும்பத மிதுவெனச் சார்ந்து புல்லலும்
பிழிந்துயி ருண்டிடும் பேய்க ளாபவே. கஅ

வேறு

1191 கண்டபேய் நகரின் நீங்கிக் காவதங் கடந்து தோன்றும்
வெண்டலைப் புணரி வீசிக் கிடந்தபொற் றீவிற் ருகிக்
கோண்டுலப் பரிய செங்நெற் கொடிக்கரும் புடுத்த வேலி
நுண் துகில் நுழைந்த அல்குற் பவழமொத் தினிய தொன்றே.

1192 படுமழை பருவம் பொய்யாப் பல்லவ தேய மென்னுந்
தடமலர்க் குவளைப் பட்டந் தழுவிய யாணர் நன்னுட்(டு)
இடைநெறி யசைவு தீர இருந்தவண் ஏக லுற்ருற்
கடநெறி கடத்தற் கின்னுக் கல்லத ரத்த முண்டே. உ0

வேறு

1193 நுதிகொண்டன வெம்பரல் நுண்ணிலைவேல்
பதிகொண்டு பரந்தன போன்றுளவால்
விதிகண்டவ ரல்லது மீதுசெலார்
வதிகொண்டதொர் வெவ்வழல் வாய்சொலின்வேம். உக

1194 குழவிப்பிடி குஞ்சர மாழ்குமெனத்
தழுவிச்சுடு வெவ்வழல் தாங்குவன
கெழுவிப்பெடை யைக்கிளர் சேவல்தழீஇத்
தொழுதிச்சிற கிற்றுய ராற்றுவன. ௨௨

1195 கலையின்பிணை கன்றிடு மென்றுகசிந்(து)
இலையின்நிழல் அவ்வயின் இன்மையினால்
நிலையின்நிழல் தானது நின்றுகொடுத்(து)
உலையும்வெயில் நின்றுரு கும்உரவோய். ௨௩

1196 கடநாக மதங்கலந் துக்கநிலத்(து)
உடைநாணென மின்னென ஒண்மணியம்
படநாகம் உழன்று பதைத்துவரும்
மடனும்அய லார்மனம் வைப்பதுவே. ௨௪

1197 நெறியிற்றளர் வார்தம நெஞ்சுருகிப்
பொறியிற்றளர் வார்புரி வார்சடையார்
அறிமற்றவர் தாபதர் அவ்வழியார்
கறைமுற்றிய காமரு வேலவனே. ௨௫

1198 குலைவாழை பழுத்த கொழும்பழனும்
நிலைமாத்தன தேமுறு தீங்கனியும்
பலவீன்றன அள்ளுடை யள்ளமிர்தும்
மலையாற்றயல் யாவும் மடுத்துளவே. ௨௬

1199 வளர்பைம்பொனும் வாளொளி நீண்மணியும்
ஒளிர்கின்றன ஓசனை நீள்நிலமுந்
தளர்வொன்றிலர் தாபதர் தாம்விழையுங்
குளிர்கொண்டதொர் சித்திர கூடமதே. ௨௭

1200 முழவின்னிசை மூரி முழங்கருவி
கழையின்துணி சந்தொடு கல்லெனஈர்த்(து)
இழியும்வயி ரத்தொ டினம்மணிகொண்(டு)
அழியும்புனல் அஞ்சன மாநதியே. ௨௮

1201 இதுபள்ளி யிடம்பனி மால்வரைதான்
அதுதெள்ளறல் யாறுவை தேமரமாக்
கதிதள்ளியி ராது கடைப்பிடிநீ
மதிதள்ளி யிடும்வழை சூழ்பொழிலே. ௨௯

வேறு

1202 வருந்து நீர்மையம் மாதவர் பள்ளியுட்
குருந்தம் ஏறிய கூரரும் பார்முல்லை
பொருந்து கேள்வரைப் புல்லிய பொன்னனார்
மருங்கு போன்றணி மாக்கவின் கொண்டதே. ௫௦

1203 குரவம் நீடிய கொன்றையங் கானின்வாய்
வரகு வாளிற் றொலைச்சுநர் பாடலின்
அரவ வண்டொடு தேனினம் யாழ்செயும்
பரவை மாநிலம் பன்னிரு காதமே. ௫௧

1204 ஆங்கவ் வெல்லை யிகந்தடு தேறலும்
பூங்கட் பொற்குட முந்நிறைத் தீண்டிய
ஏங்கு கம்பலத் தின்னிசை சூழ்வயற்
றூங்கு சீர்த்தக்க நாட்டணி காண்டியே. ௫௨

வேறு

1205 பாளைவாய்க் கமுகின் நெற்றிப் படுபழ முதிர விண்டு
நீள்கழைக் கரும்பி னெற்றி நெய்ம்முதிர் தொடையல் கீறி
வாளைவா யுறைப்ப நக்கி வராலொடு மறலு மென்ப
காளைநீ கடந்து செல்லுங் காமரு கவின்கொள் நாடே. ௫௩

வேறு

1206 அங்கதன் றனதிடங் கடந்து போம்வழிப்
பொங்குபூஞ் சண்பகப் போது போர்த்துராய்
அங்கணுட் டரிவையர் கூந்தல் நாறித்தேன்
எங்குமொய்த் திழிவதோர் யாறு தோன்றுமே. ௫௪

1207 மின்னுடை மணிபல வரன்றி மேதகு
தன்னுடை நலம்பகிர்ந் துலக மூட்டலின்
பொன்னுடைக் கலையல்குற் கணிகைப் பூம்புனல்
மன்னுடை வேலினாய் வல்லை நீந்தினால். ௫௫

1208 யானைவெண் மருப்பினால் இயற்றி யாவதும்
மானமாக் கவரிவெண் மயிரின் வேய்ந்தன
தேனெயூன் கிழங்குகாய் பழங்கள் செற்றிய
கானவர் குரம்பைசூழ் காடு தோன்றுமே. ௫௬

1209 கடுந்துடிக் குரலொடு கடையுங் கட்குரல்
நெடுங்கைமான் குரல்மணி யருவி வீழ்குரல்
அடும்புலிக் குரலொடு மயங்கி யஞ்சிய
இடும்பைமான் குரல்விளி எங்கும் மிக்கவே. ௩௭

1210 பொன்னணி திகிரியஞ் செல்வன் பொற்புடைக்
கன்னியர் மகளிரிற் காண்டற் காயின
நன்மணி புரித்தன வாவி நான்குள
கல்நவில் தோளினாய் காட்டு வாயவே. ௩௮

1211 அருங்கலச் சேயித மார்ந்த வாவியொன்(று)
இரும்பெரி பொன்செயும் இரத நீரதொன்(று)
ஒருங்குநோய் தீர்ப்பதொன் றமிர்த மல்லதொன்(று)
அரும்பவிழ் குவளைநீர் வாவி யாகுமே. ௩௯

1212 கையடு சிலையினர் காட்டுள் வாழ்பவர்
பையுடை யாக்கையர் பாவ மூர்த்தியர்
ஐயெனத் தோன்றுவர் தோன்றி ஆளழித்(து)
உய்வகை யரிதென உடலங் கொள்பவே. ௪௦

1213 அண்ணல்மேல் அரிவையர் கண்ணின் மொய்த்தவண்
மண்ணின்மேல் மாந்தர்கள் மொய்க்கும் வாவியை
எண்ணமொன் றின்றியே யிடத்திட் டேகினாற்
றுண்ணெனச் சிலையவர் தொழுது காண்பவே. ௪௧

1214 பாடல்வண்டு யாழ்செயும் பசும்பொற் கிண்கிணித்
தோடலர் கோதையின் துளும்பு மேகலை
ஆடிய கூத்திதன் அசைந்த சாயல்போன்(று)
ஊடுபோக் கினியதங் கோரைங் காதமே. ௪௨

1215 கோதைவீழ்ந் ததுவென முல்லை கத்திகைப்
போதுவேய்ந் தினமலர் பொழிந்து கற்புடை
மாதரார் மனமெனக் கிடந்த செந்நெறி
தாதின்மேல் நடந்ததோர் தன்மைத் தென்பவே. ௪௩

1216 மணியியற் பாலிகை யனைய மாச்சுனை
அணிமணி நீள்மலர் அணிந்த தாயிடை

இணைமலர்ப் படலிகை போலும் ஈர்ம்பொழிற்
கணையுமிழ் சிலையினாய் கண்டு சேறியே. ௪௪

1217 இலைப்பொலி பூண்முலை யிரங்கல் மேகலைக்
குலத்தலை மகளிர்தங் கற்பிற் றிண்ணிய
அலைத்துவீழ் அருவிகள் ஆர்க்குஞ் சோலைசூழ்
வலத்தது வனகிரி மதியிற் றோன்றுமே. ௪௫

1218 கரியவன் திருமுடி கவிழ்த்த சேவடிப்
பெரியவன் திருமொழி பிறழ்த லின்றியே
மரியவ ருறைதலின் மதன கீதமே
திரிதரப் பிறந்ததோர் சிலம்பிற் றென்பவே. ௪௬

1219 ஏற்றரு மணிவரை யிறந்து போயபின்
மாற்றரு மணநெறி மகளிர் நெஞ்சமே
போற்பல கவர்களும் பட்ட தாயிடை
ஆற்றல்சால் செந்நெறி அறியக் கூறுவாம். ௪௭

1220 சுரும்புசூழ் குவளையோர் சுனையுண் டச்சுனை
மருங்கிலோர் மணிச்சிலா வட்ட முண்டவண்
விரும்பிவண் டிமிர்வதோர் வேங்கை வேங்கையின்
மருங்கிலோர் செந்நெறி வகுக்கப் பட்டதே. ௪௮

வேறு

1221 கைம்மலர்த் தனைய காந்தட் கடிமலர் நாறு கானம்
மொய்ம்மலர்க் குவளைக் கண்ணி மொய்ம்பநீ முழுதும் நீந்தி
வைம்மலர்ந் திலங்கு வெள்வேல் மத்திம தேயம் ஆளுங்
கொய்ம்மலர்த் தாரி னானைக் கண்ணுறு குணம தென்றான்.

1222 மண்ணகங் காவல் வேந்தன் மாதரம் பாவை மாசில்
ஒண்ணுதல் மகளைத் தந்தீங் குறைகென வொழுகு நாளுள்
வெண்மதி யிழந்த மீன்போற் புல்லென வெய்தி நின்ற [ன்.
அண்ணல்நின் தோழ ரெல்லாம் அவ்வழி யடைவ ரென்றா

வேறு

1223 நெட்டிடை நெறிகளும் நிகரில் கானமும்
முட்டுடை முடுக்கரும் மொய்கொள் குன்றமும்
நட்புடை யிடங்களும் நாடும் பொய்கையும்
உட்பட வுரைத்தனன் உறுதி நோக்கினான். ௫௧

1224 செல்கதி மந்திரஞ் செவியிற் செப்பிய
மல்லலங் குமரனை வாழ்வின் நாட்டவே
வல்லவன் மந்திர மூன்றுங் கொள்கெனச்
சொல்லினன் அவற்றது தொழிலுந் தோன்றவே. ௫௨

1225 சூடுந்தொடைக் கவர்கணைக் காமன் காமுறப்
படுங்குரல் தருமிது பாம்பும் அல்லவுங்
கடுந்திறல் நோய்களுங் கெடுக்கும் வேண்டிய
உடம்பிது தருமென வுணரக் கூறினான். ௫௩

வேறு

1226 கந்தடு களிறு கொல்லுங் கருவரை உழுவை யன்னான்
மந்திர மூன்றும் ஓதி வானவிற் புரையும் பைந்தார்
இந்திரன் றன்னை நோக்கி இயக்கியர் குழாத்தை நோக்கிச்
சிந்தையிற் செல்வ லென்றான் தேவனுஞ் செலவு நேர்ந்தான். ௫௪

1227 மனைப்பெருங்கிழத்திமாசில் மலைமகள்தன்னையான்சென்(று)
எனைத்தொரு மதியி னுங்கொல் எய்துவ தென்று நெஞ்சில்
நினைத்தலுந் தோழன் நக்கு நிழலுமிழ்ந்திலங்கு செம்பொற்
பனைத்திரண் டனைய தோளாய் பன்னிரு மதியின் என்றான்.

1228 ஆறிரு மதியின் எய்தி அரட்டனை யடர்த்து மற்றுன்
வீறுயர் முடியுஞ் சூடி விழுநிலக் கிழமை பூண்டு
சாறயர்ந் திறைவற் பேணிச் சார்பறுத் துயர்தி யென்று
கூறினன் கதிர்கள் பொங்குங் குளிர்மணி முடியி னானே. ௫௬

1229 சொற்றிறற் சூழ்ச்சி மிக்க சுதஞ்சணன் சுருங்க நாடி
விற்றிறற் குரிசிற் கெல்லாம் வேறுவே றுரைப்பக் கேட்டே
சுற்றிய தோழி மாரை விடுத்தனன் தொழுது நின்றான்
கற்பக மரமுஞ் செம்பொன் மாரியுங் கடிந்த கையான். ௫௭

வேறு

1230 சேட்டிளஞ் செழுங்கயல் காப்பச் செய்துவிற்
பூட்டிமேல் வைத்தன புருவப் பூமகள்
தீட்டருந் திருநுதற் றிலக மேயென
மோட்டிருங் கதிர்திரை முளைத்த தென்பவே. ௫௮

வேறு

1231 அழல்பொதிந்த நீளெஃகின் அலர்தார்மார்பற் கிம்மலைமேற்
கழல்பொதிந்த சேவடியாற் கடக்கலாகா தெனவெண்ணிக்
குழல்பொதிந்த தீஞ்சொல்லார் குழாத்தினீங்கிக்கொண்டேந்தி
நிழல்பொதிந்த நீள்முடியான் நினைப்பிற்போகி நிலத்திழிந்தான்.

1232 வண்டளிர்ச் சந்தனமும் வழையுமாவும் வான்தீண்டி
விண்டொழுகுந் தீங்கனிகள் பலவுமார்ந்த வியன்சோலை
மண்கருதும் வேலானை மறித்துங்காண்க வெனப்புல்லிக்
கொண்டெழுந்தான் வானவனுங் குரிசில்தானே செலவயர்ந்தான்.

1233 வாளுழலை பாய்ந்திளைய வளநாகிட் டினமென்னுந்
தாளொழியப் போரேறு தனியேபோந்த தெனவெண்ணி
நீளருவிக் கண்ணீர்வீழ்த் தலறிவண்ணங் கரிந்துருகிக்
கோளுழுவை யன்னாற்குக் குன்றமும்நின் றழுதனவே. ௬௧

1234 மிக்கார்தங் கேட்டின்கண் மேன்மையில்லாச் சிறியார்போல்
நக்காங்கே யெயிறுடைந்த நறவமுல்லை நாள்வேங்கை
தக்கார்போற் கைம்மறித்த காந்தளந்தோ தகாதெனவே
தொக்கார்போற்பன்மாவும்மயிலுந்தோன் றித்துளங்கினவே.

1235 கொல்லை யகடணைந்து குறும்புசேர்ந்து தமியாரை
முல்லை முறுவலித்து நகுதிர்போலும் நகும்நும்மைப்
பல்லை யுகுத்திடுவ மென்றுபைம்போ தலர்சிந்தித்
தொல்லை நிறங்கருகித் தும்பிபாய்ந்து துகைத்தனவே. ௬௩

1236 தோடேந்து பூங்கோதை வேண்டேங்கூந்தல் தொடேலெம்மில்
பீடேந் தரிவையரிற் பெயர்கென்றாடு மடவார்போற்
கோடேந்து குஞ்சரங்கள் தெருட்டக்கூடா பிடிநிற்குங்
காடேந்து பூஞ்சாரல் கடந்தான்காலிற் கழலானே. ௬௪

வேறு

1237 காழகம் ஊட்டப் பட்ட காரிருட் டுணியு மொப்பான்
ஆழளை யுடும்பு பற்றிப் பறித்துமார் பொடுங்கி யுள்ளான்
வாழ்மயிர்க் கரடி யொப்பான் வாய்க்கிலை யறித லில்லான்
மேழகக் குரலி னானோர் வேட்டுவன் தலைப்பட் டானே. ௬௫

1238 கொடிமுதிர் கிழங்கு தீந்தேன் கொழுந்தடி நறவொ டேந்திப்
பிடிமுதிர் முலையி னாள்தன் தழைத்துகிற் பெண்ணி னோடும்
தொடுமரைத் தோலன் வில்லன் மரவுரி யுடையன் தேர்ந்த
வடிநுனை வேலி னான்கண் டெம்மலை யுறைவ தென்றான்.

1239 மாலைவெள் ளருவி சூடி மற்றிதா தோன்று கின்ற
சோலைசூழ் வரையின் நெற்றிச் சூழ்கிளி சுமக்க லாற்றா
மாலையங் தினைகள் காய்க்கும் வண்புன மதற்குத் தென்மேல்
மூலையங் குவட்டுள் வாழுங் குறவருட் டலைவ னென்றான்.

1240 ஊழின்நீ ருண்ப தென்னென் றுரைத்தலும் உவந்து நோக்கி
மோழலம் பன்றி யோடு முளவுமாக் காதி யட்ட
போழ்நிணப் புழுக்கல் தேன்நெய் பொழிந்துகப்பெய்துமாந்தித்
தோழயாம் பெரிது முண்டுங் தொண்டிக்க ளிதனை யென்றான். ௬௮

1241 ஊனொடு தேனுங் கள்ளும்
உண்டுயிர் கொன்ற பாவத்(து)
ஈனராய்ப் பிறந்த தீங்கண்
இனியிவை ஒழிமி னென்னக்
கானில்வாழ் குறவன் சொல்லும்
கள்ளொடுன் தேன்கை விட்டால்
ஏனையெம் உடம்பு வாட்டம்
எவன்பிழைத் துங்கொ லென்றான். ௬௯

1242 ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தி லுறைதல் நன்றோ
ஊன்தினா துடம்பு வாட்டித் தேவரா யுறைதல் நன்றோ
ஊன்றியிவ் விரண்டி னுள்ளும் உறுதிநீ யுரைத்தி யென்ன
ஊன்தினா தொழிந்து புத்தே ளாவதே யுறுதி யென்றான்.

1243 உறுதிநீ யுணர்ந்து சொன்னா யுயர்கதிச் சேறி யேடா
குறுகினா யின்ப வெள்ளங் கிழங்குணக் காட்டு ளின்றே
இறைவனூற் காட்சிகொல்லாவொழுக்கொடுன் துறத்தல்கண்டாய்
இறுதிக்கணின்பங் தூங்கும்இருங்கனி யிவைகொளென்றான்.

1244 என்றலுந் தேனும் ஊனும் பிழியலு மிறுக நீக்கிச்
சென்றடிதொழுது செல்கென் தேம்பெய்நீள் குன்றமென்று
குன்றுறை குறவன் போகக் கூரெரி விளக்கப் பட்ட
பஞ்சவர் போல நின்ற பகட்டினப் பரிவு தீர்த்தான். ௭௨

வேறு

1245 இலங்கொளி மரகதம் இடறி மின்மணி
கலந்தபொன் னசும்புகான் ஞெழுகி மானினம்
சிலம்புபாய் வருடையொ டுகளுஞ் சென்னிநீள்
விலங்கல்சென் றெய்தினன் விலங்கல் மார்பினன். எங

1246 அந்தர அகடுதொட் டணவு நீள்புகழ்
வெந்தெரி பசும்பொனின் விழையும் வெல்லொளி
மந்திர வாய்மொழி மறுவில் மாதவர்
இந்திரர் தொழுமடி யினிதின் எய்தினன். எச

வேறு

1247 முனிவரும் முயன்று வான்கண் மூப்பிகந் துடைய இன்பக்
கனிகவர் கணனு மேத்தக் காதிகண் ணரிந்த காசில்
தனிமுது கடவுள் கோயில் தான்வலங் கொண்டு செல்வான்
குனிதிரை முளைத்த வெய்யோன் குன்றுசூழ் வதனை யொத்தான்.

1248 தண்கயக் குற்ற போதுந் தாழ்சினை யிளிந்த வீயும்
வண்கொடிக் கொய்த பூவும் வார்ந்துமட் டுயிர்ப்ப வேந்தித்
திண்புக ழறிவன் பாதந் திருந்துகைத் தலத்தி னேற்றிப்
பண்புகொள் குணங்கள் கீதம் பாணியிற் பாடு கின்றான்.

வேறு

1249 ஆதி வேதம் பயந்தோய்நீ அலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ நவைசெய் பிறவிக்கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே.

1250 இன்னாப்பிறவி யிகந்தோய்நீ இணையி லின்பமுடையோய்நீ
மன்னு உலக மறுத்தோய்நீ வரம்பில்காட்சிக் கிறையோய்நீ
பொன்னாரிஞ்சிப்புகழ்வேந்தேபொறியின்வேட்கைக்கடலழுந்தி
ஒன்று வினையி னுழல்வேங்கள் உயப்போம் வுண்ண முரையாயே.

1251 உலகமூன்று முடையோய்நீ ஒண்பொ னிஞ்சி யெயிலோய்நீ
திலக மாய திறலோய்நீ தேவ ரேத்தப் படுவோய்நீ
அலகை யில்லாக் குணக்கடலே யாருமறியப் படாயாதி
கொலையி லாழி வலனுயர்த்த குளிர்முக் குடையினிழலோய்நீ.

வேறு

1252 அடியுலக மேத்தி யலர்மாரி தூவ
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் யாரே
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் மூன்று
கடிமதிலுங் கட்டழித்த காவலன்நீ யன்றே. அ0

1253 முரணழிய வென்றுலகம் மூன்றினையும் மூன்றிற்
றரணிமேற் றந்தளித்த தத்துவன்றான் யாரே
தரணிமேற் றந்தளித்தான் தண்மதிபோல் நேமி
அரணுலகிற் காய அறிவரன்நீ யன்றே. அக

1254 தீரா வினைதீர்த்துத் தீர்த்தந் தெரிந்துய்த்து
வாராக் கதியுரைத்த வாமன்றான் யாரே
வாராக் கதியுரைத்த வாமன் மலர்ததைந்த
காரார்பூம் பிண்டிக் கடவுள்நீ யன்றே. அஉ

வேறு

1255 அம்மலைச் சினகரம் வணங்கிப் பண்ணவர்
பொன்மலர்ச் சேவடி புகழ்ந்த பின்னரே
வெம்முலைத் தெய்வதம் விருந்து செய்தபின்
செம்மல்போய்ப் பல்லவ தேயம் நண்ணினான். அங

1256 அரியலார்ந் தமர்த்தலின் அனந்தர் நோக்குடைக்
கரியவாய் நெடியகட் கடைசி மங்கையர்
வரிவரால் பிறழ்வயற் குவளை கட்பவர்
இருவரை வினாய்நகர் நெறியின் முன்னினான். அச

1257 அன்னமு மகன்றிலும் அணிந்து தாமரைப்
பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரிக்
கன்னிமூ தெயில்கட லுடுத்த காரிகை
பொன்னணிந் திருந்தெனப் பொலிந்து தோன்றுமே.

1258 அகில்தரு கொழும்புகை மாடத் தாய்பொனின்
முகில்தலை விலங்கிய மொய்கொள் நீள்கொடிப்
பகல்தலை விலங்குசந் திராபம் பான்மையின்
இகல்தலை விலங்குவேற் காளை யெய்தினான். அசு

1259 மலரணி மணிக்குட மண்ணு நீரொடு
பலர்நலம் பழிச்சுபு பரவ ஏகினான்
அலர்கதிர் கரும்பினை மடுப்ப ஆய்நகர்
உலகளந் தவனென உள்புக் கானரோ. அஎ

வேறு

1260 சந்தனக் காவு சூழ்ந்து சண்பக மலர்ந்த சோலை
வந்துவீழ் மாலை நாற்றி மணியரங் கணிந்து வானத்(து)
இந்திர குமரன் போல இறைமக னிருந்து காண
அந்தர மகளி ரன்னார் நாடக மியற்று கின்றார். அஅ

1261 குழலெடுத்து யாத்துமட்டார் கோதையிற்பொலிந்துமின்னும்
அழலவிர் செம்பொற் பட்டங் குண்டலம் ஆரந் தாங்கி
நிழலவிர் அல்குற் காசு சிலம்பொடு சிலம்ப நீள்தோள்
அழகிகூத் தாடு கின்றாள் அரங்கின்மே லரம்பை யன்னாள்.

1262 தண்ணுமை முழவம் வீணை குழலொடு குயிலத் தண்பூங்
கண்ணொடு புருவங் கைகால் கலையல்குல் நுசுப்புக் காமர்
ஒண்ணுதல் கொண்ட ஆடற் றொட்டிமை யுருவம் நோக்கி
வெண்ணெய்தீ யுற்ற வண்ணம் ஆடவர் மெலிகின் றாரே.

1263 பாடலோ டியைந்த ஆடற் பண்ணமை கருவி மூன்றும்
கூடுபு சிவணி நின்று குழைந்திழைந் தமிர்த மூற
ஓடரி நெடுங்க ணம்பால் உளங்கிழிந் துருவ எய்யா
வீடமை பசும்பொற் சாந்தம் இலயமா ஆடு கின்றாள். கூக

1264 வாணுதற் பட்டம் மின்ன வார்குழை திருவில் வீசப்
பூண்முலைப் பிறழப் பொற்றோ டிடவயின் நுடங்க ஒல்கி
மாணிழை வளைக்கை தம்மால் வட்டணை போக்கு கின்றாள்
காண்வரு குவளைக் கண்ணாற் காளைமேல் நோக்கி னாளே. கூஉ

1265 நோக்கினாள் நெடுங்கணென்னுங் குடங்கையா னுண்டுகொண்டு
வாக்கமை யுருவின் மிக்கான் வனப்பினைப் பருக இப்பால்
ஆக்கிய இலய நீங்கிற் றணங்கனாள் நெடுங்கண் பில்கி
வீக்குவார் முலையினெற்றி வெண்முத்தஞ் சொரிந்த அன்றே.

1266 செருக்கயல் நெடுங்க ணாள்அத் திருமகன் காண்ட லஞ்சி
நெருக்கித்தன் முலையின் மின்னு நிழல்மணி வடத்தைமாதர்
பொருக்குநூல் பரிந்து சிந்தாப் பூவெலாங் கரிந்து வாடத்
தரிக்கிலாள் காமச் செந்தீத் தலைக்கொளச் சாம்பி னாளே.

1267 கன்னிமை கனிந்து முற்றிக்
காமுறக் கமழுங் காமத்(து)
இன்னறுங் கனியைத் துய்ப்பான்
ஏந்தலே பிறர்க ளில்லை
பொன்னினு லுடையுங் கற்பென்
றுரைத்தவர் பொய்யைச் சொன்னார்
இன்னிசை யிவற்க லால்என்
நெஞ்சிட மில்லை யென்றாள். ௬௫

1268 கருஞ்சிறைப் பறவை யூர்திக் காமரு காளை தான்கொல்
இருஞ்சுற வுயர்த்த தோன்றல் ஏத்தருங் குரிசில்தான்கொல்
அரும்பெறற் குமர னென்றுங் கறிவயர் வுற்று நின்றாள்
திருந்திழை யணங்கு மென்றோட் டேசிகப் பாவையன்னாள்.

1269 போதெனக் கிடந்தவாட்கண் புடைபெயர்ந் திமைத்தல்செல்லா
யாதிவள் கண்ட தென்றுங் கரசனும் அமர்ந்து நோக்கி[(து)
மீதுவண் டாற்றுங் கண்ணி விடலையைத் தானுங் கண்டான்
காதலிற் களித்ததுள்ளங் காளையைக் கொணர்மி னென்றான்.

வேறு

1270 கைவளர் கரும்புடைச் கடவு ளாமெனின்
எய்கணை சிலையினே டிவன்கண் இல்லையால்
மெய்வகை யியக்கருள் வேந்த னகுமென்(று)
ஐயமுற் றெவர்களும் அமர்ந்து நோக்கினர். ௬௮

வேறு .

1271 மந்திரம் மறந்து வீழ்ந்து மாநிலத் தியங்கு கின்ற
அந்தர குமர னென்றுங் கியாவரும் அமர்ந்து நோக்கி
இந்திர திருவற்குத்தார்க் கிறைவனுமெதிர்கொண்டோம்பி
மைந்தனை மகிழ்வ கூறி மைத்துனத் தோழன் என்றான்.

1272 போதவிழ் தெரிய லானும் பூங்கழற் கர்லி னானும்
காதலின் ஒருவ ராகிக் கலந்துட னிருந்த போழ்தின்
ஊதுவண் டுடுத்த மாலை யுணர்வுபெற் றிலயந் தாங்கிப்
போதுகண் டனைய வாட்கட் புருவத்தாற் கலக்கு கின்றாள்.

1273 தேனுகுக் கின்ற கண்ணித் திருமக ளாட இப்பால்
ஊனுகுக் கின்ற வைவேல் ஒருமகன் உருமிற் றோன்றி
வானுகுக் கின்ற மீன்போல் மணிபரந் திமைக்கு மார்பிற்
கானுகுக் கின்ற பைந்தார்க் காவலற் றொழுது சொன்னான்.

1274 கொய்தகைப் பொதியிற் சோலைக் குழவிய முல்லை மௌவல்
செய்யசந் திமயச் சாரற் கருப்புரக் கன்று தீம்பூக்
கைதரு மணியிற் றெண்ணீர் மதுக்கலந் தூட்டி மாலை [ளே.
பெய்தொளி மறைத்து நங்கை பிறையென வளர்க்கின்றா

1275 பவழங்கொள் கோடு நாட்டிப் பைம்பொனால் வேலி கோலித்
தவழ்கதிர் முத்தம் பாய்த்தித் தன்கையாற் றீண்டி நன்னாட்
புகழ்கொடி நங்கை தன்பேர் பொறித்ததோர் கன்னி முல்லை
அகழ்கடற் றானை வேந்தே யணியெயி றீன்ற தன்றே. ௧௦௩

1276 வம்பலர் கோதை சிந்த மயிலென ஒருத்தி யோடிக்
கொம்பலர் நங்கை பூத்தாள் பொலிகெனக் குனிந்த விற்கீழ்
அம்பலர் கண்ணி யார நிதியறைந் தோகை போக்கிக்
கம்பலம் போர்த்த போலுங் கடிமலர்க் காவு புக்காள். ௧௦௪

1277 நறவிரி சோலை யாடி நாண்மலர்க் குரவம் பாவை
நிறையப்பூத் தணிந்து வண்டுந் தேன்களும் நிழன்று பாட
இறைவளைத் தோளி மற்றென் தோழியீ தென்று சேர்ந்து
பெறலரும் பாவை கொள்வாள் பெரியதோள் நீட்டி னாளே.

1278 நங்கைதன் முகத்தை நோக்கி நகைமதி யிதுவென் றெண்ணி
அங்குறை யரவு தீண்டி யவ்வையோ வென்று போகக்
கொங்கலர் கோதை நங்கை யடிகளோ வென்று கொம்பேர்
செங்கயற் கண்ணி தோழி திருமகட் சென்று சேர்ந்தாள்.

1279 அடிகளுக் கிறைஞ்சி ஐய னடிகளைத் தொழுது நங்கை
அடிகளைப் புல்லி யாரத் தழுவிக்கொண் டவ்வை மாரைக்
கொடியனாய் என்னை நாளும் நினையெனத் தழுவிக் கொண்டு
மிடைமின்னின் நிலத்தைச்சேர்ந்தாள் வேந்தமற்றருளுகென்றான்.

1280 பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும் பையு ளெய்திக்
கொதிநுனை வேலி னாயிங் கிருக்கெனக் குரிசில் ஏகிக்
கதுமெனச் சென்று நோக்கிக் காய்சினங் கடிதற் கொத்த
மதிமிகுத் தவலம் நீக்கு மந்திரம் பலவுஞ் செய்தான். ௧௦௮

1281 வள்ளல்தான் வல்ல வெல்லா மாட்டினன் மற்றும் ஆங்கண்
உள்ளவ ரொன்ற லாத செயச்செய வூறு கேளா(து)
அள்ளிலைப் பூணி னாளுக் காவியுண் டில்லை யென்னா
வெள்ளெயிற் றரவு கான்ற வேகமிக் கிட்ட தன்றே. ௧௦௯

1282 பைங்கதிர் மதிய மென்று பகையடு வெகுளி நாகம்
நங்கையைச் செற்ற தீங்குத் தீர்த்துநீர் கொண்மின் நாடும்
வங்கமா நிதியும் நல்கி மகட்டரு மணிசெய் மான்றேர்
எங்களுக் கிறைவ னென்றாங் கிடிமுர செருக்கி னானே.

1283 மண்டலி மற்றி தென்பார் இராசமா நாக மென்பார்
கொண்டது நாக மென்பார் குரைவளி பித்தொ டையிற் [சை
பிண்டித்துப் பெருகிற் றென்பார் பெருநவை யறுக்கும்விஞ்
எண்தவப் பலவுஞ் செய்தாம் என்றுகே ளாதி தென்பார்.

1284 சிரையைந்தும்விடுதுமென்பார் தீற்றுதுஞ்சிருங்கியென்பார்
குரைபுன விடுது மென்பார் கொந்தழ லுறுத்து மென்பார்
இரையென வருந்தக் கவ்வி யென்புறக் கடித்த தென்பார்
உரையன்மின் உதிரம் நீங்கிற் றுய்யலள் நங்கை யென்பார்.

1285 கையொடு கண்டங் கோப்பார் கனைசுடர் உறுப்பின்வைப்பார்
தெய்வதம் பரவி யெல்லாத் திசைதொறுந் தொழுது நிற்பார்
உய்வகை யின்றி யின்னே யுலகுடன் கவிழு மென்பார்
மையலங் கோயில் மாக்கள் மடைதிறந் திட்ட தொத்தார்.

1286 வெங்தெரி செம்பொற் பூவும் விளங்குபொன் னாலும்பெற்
மந்திர மறையும் வல்லார் எழாயிரர் மறுவில் வாய்மை [றார்
அந்தரத் தறுவை வைப்பா ரந்தணர் அங்கை கொட்டிப்
பைந்தொடிப் பாவை யின்னே படரொழிந் தெழுக என்பார்.

1287 பாம்பெழப் பாம்பு கொண்டாற் பகவற்கும் அரிது தீர்த்தல்
தேம்பிழி கோதைக் கின்று பிறந்தநாள் தெளிமின் என்று
காம்பழி பிச்ச மாகக் கணியெடுத் துரைப்பக் கல்லென்
தூம்பழி குளத்திற் கண்ணீர் துகள்நிலத் திழிந்த தன்றே.

1288 நங்கைக்கின் றிறத்த லில்லை நரபதி நீயுங் கேண்மோ
கொங்கலர் கோங்கின் நெற்றிக் குவிமுகிழ் முகட்டி னங்கண்
தங்குதே னரவ யாழிற் றானிருந் தாந்தை பாடும் [றான்.
இங்குநம் இடரைத் தீர்ப்பான் இளையவன் உளன்மற் றென்

1289 பன்மணிக் கடகஞ் சிந்தப்
பருஉப்புடைப் பவளத் தூண்மேல்
மன்னவன் சிறுவன் வண்கை
புடைத்துமா ழாந்து சொன்னான்
இன்னுமொன் றீண்டு சூழ்ச்சி
என்னொடங் கிருந்த நம்பி
தன்னைக்கூய்க் கொணர்மி னென்றான்
தரவந்தாங் கவனுங் கண்டான். ௧௧௭

1290 பறவைமா நாகம் வீழ்ந்து பலவுடன் பதைப்ப போன்றுஞ்
சிறகுறப் பரப்பி மஞ்ஞை செருக்குபு கிடந்த போன்றுங்
கறவைகன் றிழந்த போன்றுங் கிடந்தழு கின்ற கண்ணார்
இறைவளை யவரை நோக்கி யென்கொடி துற்ற தென்றான்.

1291 ஊறுகொள் சிங்கம் போல உயக்கமோ டிருந்த நம்பி
கூறினான் கொற்ற வேந்தன் கொழுநிதி நிலத்து மற்றுன்
வீறுயர் புகழை வித்திக் கேண்மையை விளைத்தி யின்னே
நாறுபூங் கொம்ப னாளை நோக்கென நம்பி சொன்னான்.

1292 புற்றிடை வெகுளி நாகம் போக்கறக் கொண்ட தேனும்
மற்றிடை யூறு செய்வான் வானவர் வலித்த தேனும் [ன்
பொற்றொடிக்கிறத்தலில்லை புலம்புகொண் டழேற்கவென்றா
கற்றடிப் படுத்த விஞ்சைக் காமரு காம னன்னான். ௧௨௦

1293 பொழிந்துநஞ் சுகுத்தல் அச்சம் இரைபெரு வெகுளி போக
கழிந்துமீ தாடல் காலம் பிழைப்பென எட்டின் ஆகும் [ங்
பிழிந்துயி ருண்ணுந் தட்டம் அதட்டமாம்பிளிற்றின்உம்பர்
ஒழிந்தெயிறானஞ் செய்யுங் கோளென மற்றுஞ்சொன்னான்.

1294 அந்தணன் நாறும் ஆன்பா லவியினை அலர்ந்த காலை
நந்தியா வட்டம் நாறும் நகைமுடி யரச னாயின்
தந்துயா முரைப்பிற் றாழைத் தடமலர் வணிகன் நாறும்
பந்தியாப் பழுப்பு நாறிற் சூத்திரன் பால தென்றான். ௧௨௨

1295 கன்னியைக் கடித்த நாகங் கன்னியே கன்னி நோக்கம்
அன்னதே யரசர் சாதி மூன்றெயி றழுந்தி யாழ்ந்து [தால்
கொன்னுமாநாகங் கொண்டாற் கொப்புளாம் விரலிற்றேய்த்
மன்னிய தெண்மட் டாயின் மண்டலிப் பால தென்றான்.

1296 குன்றிரண்டனையதோளான் கொழுமலர்க் குவளைப்போதங்
ஒன்றிரண் டுருவம் ஓதி யுறக்கிடை மயில னாள்தன் [(கு)
சென்றிருண் டமைந்த கோலச் சிகழிகை யழுத்திச் செல்ல
நின்றிரண் டுருவம் ஓதி நேர்முகம் நோக்கி னானே. கஉச

1297 நெடுந்தகை நின்று நோக்க நீள்கடற் பிறந்த கோலக்
கடுங்கதிர்க் கனலி கோப்பக் காரிருள் உடைந்த தேபோல்
உடம்பிடை நஞ்சு நீங்கிற் றொண்டொடி யுருவ மார்ந்து
குடங்கையின் நெடிய கண்ணாற் குமரன்மேல் நோக்கினாளே.

1298 நோக்கினாள் நிறையும் நாணு மாமையுங் கவினும் கொய்திற்
போக்கினாள் வளையும் போர்த்தாள் பொன்னிறப் பசலைமூழ்கிற்(று)
ஆக்கினா ளநங்க னப்புத் தூணியை யமருள் ஆனா(து)
ஒக்கிய முருகன் வைவே லோரிரண் டனைய கண்ணாள்.

வேறு

1299 ஆட்சி யைம்பொறி யாளன் உடம்பெனும்
பூட்சி நீள்கொடிப் புற்றின் அகத்துறை
வாட்கண் நோக்கெனும் வையெயிற் றராழல்
வேட்கை நாகத்தின் மீட்டுங் கொளப்பட்டாள். கஉஎ

1300 மாழ்கி வெய்துயிர்த் தாள்மட வாளெனத்
தோழி மார்களுந் தாயருந் தொக்குடன்
சூழி யானையன் னாய்தொடின் நஞ்சறும்
வாழி யென்றனர் வம்பலர் கோதையார். கஉஅ

1301 கண்ணிற் காணினுங் கட்டுரை கேட்பினும்
நண்ணித் தீண்டினும் நல்லுயிர் நிற்குமென்(று)
எண்ணி யேந்திழை தன்னை யுடம்பெலாந்
தண்ணென் சாந்தம்வைத் தாலெனத் தைவந்தான். கஉகூ

1302 மற்றிம் மாதர்தன் வாட்டடங் கண்களால்
உற்ற நோக்க முறாததோர் நோக்கினாற்

சுற்றி வள்ளலைச் சோர்வின்றி யாத்திட்டாள்
அற்ற மில்லமிர் தாகிய அஞ்சொலாள். ௧௩0

வேறு

1303 விஞ்சையர் வீரன் என்பார் விண்ணவர் குமரன் என்பார்
எஞ்சிய வுயிரை மீட்டான் இவனலால் இல்லை என்பார்
மஞ்சுசூழ் இஞ்சி மூதூர் மாமுடிக் குரிசில் நாளை
நஞ்சுசூழ் வேலி னாற்கே நங்கையைக் கொடுக்கும் என்பார்.

1304 விளங்கொளி விசும்பில்வெண்கோட் டிளம்பிறைசூழ்ந்தமின்போல்
வளங்கெழு வடத்தைச் சூழ்ந்து வான்பொனாண் டிளைப்பச்
இளங்கதிர்முலைகள் தம்மாலிவனைமார்பெழுதிவைகின் [சேந்த
துளங்குபெண்பிறப்புந்தோழி யினிதெனச்சொல்லிநிற்பார்.

1305 அருந்தவஞ் செய்து வந்த ஆயிழை மகளிர் யார்கொல்
பெருந்தகை மார்பிற்றுஞ்சிப் பெண்மையாற் பிணிக்குநீரார்
கருங்கணின் யாமுங் கண்டாங் காமனை யென்று சொல்லித்
திருந்தொளிமுறுவற் செவ்வாய்த் தீஞ்சொலார்மயங்கினாரே.

1306 பன்மலர்ப் படலைக் கண்ணிக் குமரனைப் பாவை நல்லார்
மன்னவன் பணியின் வாழ்த்தி வாசநெய் பூசி நன்னீர் [ம்
துன்னினர் ஆட்டிச் செம்பொற் செப்பினுட் டுகிலுஞ் சாந்து
இன்னறும் புகையும் பூவுங் கலத்தொடும் ஏந்தி னாரே.

1307 ஏந்திய ஏற்பத் தாங்கி எரிமணிக் கொட்டை நெற்றி
வாய்ந்தபொன் குயிற்றிச் செய்த மரவடி யூர்ந்து போகி
ஆய்ந்தநன் மாலை வேய்ந்த அரும்பெறற் கூடஞ் சேர்ந்தான்
பூந்தொடி மகளிர் போற்றிப் பொற்கலம் பரப்பி னாரே.

1308 கன்னியர் கரக நீராற் றாமரை கழீஇய தொப்பப்
பொன்னடி கழீஇய பின்றைப் புரிந்துவாய் நன்கு பூசி
இன்மலர்த் தவிசி னுச்சி யிருந்தமிர் தினிதிற் கொண்டான்
மின்விரிந் திலங்கு பைம்பூண் வேற்கணார் வேனி லானே.

1309 வாசநற் பொடியும் நீருங் காட்டலிற் கொண்டு வாய்ப்பப்
பூசறுத் தங்கை நீரை மும்முறை குடித்து முக்காற்
காசறத் துடைத்த பின்றைக் கைவிர லுறுப்புத் தீட்டித்
தூசினால் அங்கை நீவி யிருந்தனன் தோற்ற மிக்கான்.

1310 சீர்கொளச் செய்த செம்பொன் அடைப்பையுட் பாகுசெல்ல
வார்கழற் குரிசில் கொண்டு கவுளடுத் திருந்த வாங்கட் [ட்டு
போர்கொள்வேல் மன்னன் எல்லாக் கலைகளும் புகன்று கே
நீர்கொள்மாக் கடல னூற்கு நிகரில்லை நிலத்தில் என்றான்.

வேறு

1311 பரிதி பட்டது பன்மணி நீள்விளக்(கு)
எரிய விட்டனர் இன்னியம் ஆர்த்தன
அரிய பொங்கணை அம்மென் அமளிமேற்
குரிசில் ஏறினன் கூர்ந்தது சிந்தையே. ௧௩௯

1312 பூங்கண் அவ்வயின் நோக்கம் பொருதபோல்
வீங்கி வெம்மைகொண் டேந்தின வெம்முலை
ஈங்கி தென்னென இட்டிடை நைந்தது
பாங்க லாரிற் பரந்துள தல்குலே. ௧௪௦

1313 முருகு வார்குழ லாள்முகிழ் மென்முலை
பெருகு நீர்மையிற் பேதுற வெய்திநின்(று)
உருகு நுண்ணிடை ஓவியப் பாவைதன்
அருகு நோக்கமென் ஆவி யலைக்குமே. ௧௪௧

1314 புகைய வாவிய பூந்துகில் ஏந்தல்குல்
வகைய வாமணி மேகலை வார்மது
முகைய வாவிய மொய்குழல் பாவியேன்
பகைய வாய்ப்படர் நோய்பயக் கின்றவே. ௧௪௨

1315 போது லாஞ்சிலை யோபொரு வேற்கணோ
மாது லாமொழி யோமட நோக்கமோ
யாதும் நான றியேன்அணங் கன்னவள்
காத லாற்கடை கின்றது காமமே. ௧௪௩

1316 அண்ணல் அவ்வழி ஆழ்துயர் நோயுற
வண்ண மாமலர்க் கோதையும் அவ்வழி
வெண்ணெய் வெங்கனல் மீமிசை வைத்ததொத்(து)
உள்நை யாவுரு காவுள ளாயினள். ௧௪௪

1317 பெயல்ம ழைப்பிற ழுங்கொடி மின்னிடைக்
கயல்ம ணிக்கணின் நல்லவர் கைதொழப்

பயன்இ ழைத்தமென் பள்ளியுட் பைந்தொடி
மயன்இ ழைத்தஅம் பாவையின் வைகினாள். கசரு

1318 வணங்கு நோன்சிலை வார்கணைக் காமனே
மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனே
நிணங்கொண் நெஞ்சம் நிறைகொண்ட கள்வனை
அணங்கு காள்அறி யேன்உரை யீர்களே. கசசு

1319 கிடைகந் தன்னதன் காமரு வீங்குதோள்
அடையப் புல்லினன் போன்றணி வெம்முலை
உடைய வாகத் துறுதுயர் மீட்டவன்
இடைய தாகுமென் ஆருமி லாவியே. கசஎ

1320 இறுதி யில்லமிர் தெய்துநர் ஈண்டியன்(று)
அறிவின் நாடிய அம்மலை மத்தமா
நெறியின் நின்று கடைந்திடப் பட்டநீர்
மறுகு மாக்கடல் போன்றதென் நெஞ்சமே. கசஅ

1321 நகைவெண் திங்களும் நார்மடல் அன்றிலும்
தகைவெள் ளேற்றணற் றாழ்மணி யோசையும்
பகைகொள் மாலையும் பையுள்செய் ஆம்பலும்
புகையில் பொங்கழல் போற்சுடு கின்றவே. கசகூ

1322 பூமென் சேக்கையுள் நாற்றிய பூந்திரட்
டாமம் வாட்டுந் தகைய உயிர்ப்பளைஇக்
காமர் பேதைதன் கண்தரு காமநோய்
யாமத் தெல்லையோர் யாண்டொத் திறந்ததே. கருo

1323 மாது யாழ்மழ லைம்மொழி மாதராள்
தாதி யவ்வையுந் தன்னமர் தோழியும்
போது வேய்குழற் பொன்னவிர் சாயலுக்(கு)
ஏது நாஞ்செயற் பாலதென் றெண்ணினர். கருக

1324 அழுது நுண்ணிடை நைய அலர்முலை
முழுதுங் குங்கும முத்தொ டணிந்தபின்
தொழுது கோதையுங் கண்ணியுஞ் சூட்டினர்
எழுது கொம்பனை யார்இளை யாளையே. கருஉ

1325 வேந்து காயினும் வெள்வளை யாயமோ(டு)
ஏந்தும் பூம்பொழில் எய்தியங் காடுதல்
ஆய்ந்த தென்றுகொண் டம்மயில் போற்குழீஇப்
போந்த தாயம் பொழிலும் பொலிந்ததே. ௧௫௩

1326 அலங்கல் தான்தொடுப் பார்அலர் பூக்கொய்வார்
சிலம்பு சென்றெதிர் கூவுநர் செய்சுனை
கலங்கப் பாய்ந்துட னாடுநர் காதலின்
இலங்கு பாவை யிருமணஞ் சேர்த்துவார். ௧௫௪

1327 தூசு லாநெடுந் தோகையின் நல்லவர்
ஊச லாடுநர் ஒண்கழங் காடுநர்
பாச மாகிய பந்துகொண் டாடுநர்
ஆகி யெத்திசை யும்அமர்ந் தார்களே. ௧௫௫

1328 முருகு விம்மிய மொய்குழ லேழைதன்
உருகு நோக்கம் உளங்கிழித் துள்சுட
அரிவை யாடிய காவகங் காணிய
எரிகொள் வேலவன் ஏகினன் என்பவே. ௧௫௬

1329 மயிலின் ஆடலும் மந்தியின் ஊடலுங்
குயிலின் பாடலுங் கூடி மலிந்தவண்
வெயிலின் நீங்கிய வெண்மணற் றண்ணிழற்
பயிலு மாதவிப் பந்தரொன் றெய்தினான். ௧௫௭

1330 காது சேர்ந்த கடிப்பிணை கையது
தாது மல்கிய தண்கழு நீர்மலர்
ஓத நித்தில வட்டமொர் பொன்செய்நாண்
கோதை மென்முலை மேற்கொண்ட கோலமே. ௧௫௮

1331 விண்பு தைப்பன வெண்மலர் வேய்ந்துளாற்
கண்பு தைப்பன காரிரும் பூம்பொழிற்
சண்ப கத்தணி கோதைநின் றுள்தனி
நண்ப னைந்நினை யாநறு மேனியே. ௧௫௯

1332 கறந்த பாலினுட் காசில் திருமணி
நிறங்கி ளர்ந்துதன் நீர்மைகெட் டாங்கவள்
மறைந்த மாதவி மாமை நிழற்றலிற்
சிறந்த செல்வனுஞ் சிந்தையின் நோக்கினான். ௧௬௦

1333 வரையின் மங்கைகொல் வாங்கிருந் தூங்குநீர்த்
திரையின் செல்விகொல் தேமலர்ப் பாவைகொல்
உரையின் சாயல் இயக்கிகொல் யார்கொல்இவ்
விரைசெய் கோலத்து வெள்வளைத் தோளியே. ககூக

1334 மாலை வாடின வாட்கண் இமைத்தன
காலும் பூமியைத் தோய்ந்தன காரிகைப்
பாலின் தீஞ்சொற் பதுமையிந் நின்றவள்
சோலை வேய்மருள் சூழ்வளைத் தோளியே. ககூஉ

1335 தேவர் பண்ணிய தீந்தொடை யின்சுவை
மேவர் தென்தமிழ் மெய்ப்பொரு ளாதலிற்
கோவத் தன்னமென் சிறடிக் கொம்பனாள்
பூவர் சோலை புகுவலென் றெண்ணினான். ககூங

1336 அல்லி சேர்அணங் கன்னவட் காயிடை
புல்லி நின்றமெய்ந் நாண்புறப் பட்டது
கல்செய் தோளவன் காமுறு பேருணர்(வு)
எல்லை நீங்கிற் றியைந்தனர் என்பவே. ககூச

1337 களித்த கண்ணிணை காம்பென வீங்குதோட்
டெளித்த வெள்வளை சேர்ந்தது மாமையும்
தளித்த சுண்ணஞ் சிதர்ந்தன குங்குமம்
அளித்த பூம்பட் டணிந்து திகழ்ந்ததே. ககூரு

1338 குவளை வேய்ந்த கொடுங்குழை கூந்தலுட்
டிவளும் வாழிய செம்பொறி வண்டுகாள்
இவள கூரெயி றீனுந் தகையவோ
தவள மெல்லிதழ்த் தண்கொடி முல்லையே. ககூகூ

1339 பொன்றுஞ் சாகத்துப் பூங்கண்கள் போழ்ந்தபுண்
இன்றிப் பூண்கொள் இளமுலைச் சாந்தலால்
அன்றித் தீர்ப்பன யாவையு மில்லையே
என்று மாதர் எழில்நலம் ஏத்தினான். ககூஎ

1340 கண்ணி வேய்ந்து கருங்குழல் கைசெய்து
வண்ண மாலை நடுச்சிகை யுள்வளைஇச்
செண்ண அஞ்சிலம் பேறு துகளவித்(து)
அண்ணல் இன்புறத் தாற்றலின் ஆற்றினாள். ககூஅ

1341 திங்க ளும்மறு வும்மெனச் சேர்ந்தது
நங்கள் அன்பென நாட்டி வலிப்புறீஇ
இங்கொ ளித்திடு வேன்நமர் எய்தினர்
கொங்கொ ளிக்குழ லாயெனக் கூறினன். கசுசு

1342 மழையி டைக்குளித் திட்டதோர் வாண்மினின்
தழையி டைக்குளித் தான்நகை வேலினன்
இழையி டைக்குளித் தேந்திய வெம்முலை
வழையி டைக்குளித் தார்வந்து தோன்றினர். கஎ0

1343 மின்னனார் பூம்பொழில் மேதகச் செல்வதொத்(து)
அன்னம் நாண அசைந்து சிலம்படி
மென்மெ லம்மலர் மேல்மிதித் தேகினள்
நன்ம னம்மவற் கேவைத்த நங்கையே. கஎக

1344 திங்கள் சூழ்ந்தபன் மீனெனச் சென்றெய்தி
நங்கை தவ்வையுந் தோழியும் நண்ணினர்
அங்க வாயம் அடிப்பணி செய்தபின்
தங்கள் காதலி னற்றகை பாடினர். கஎஉ

1345 தழையுங் கண்ணியுந் தண்ணறு மாலையும்
விழைவ சேர்த்துபு மெல்லென ஏகினர்
முழையுள் மூரி முழங்கரி யேறனான்
பழைய நண்பனைப் பண்புளி யெய்தினன். கஎங

வேறு

1346 பூமியை யாடற் கொத்த பொறியினன் ஆத லானும்
மாமகள் உயிரை மீட்ட வலத்தினன் ஆத லானும்
நேமியான் சிறுவ னன்ன நெடுந்தகை நேரு மாயின்
நாமவற் கழகி தாக நங்கையைக் கொடுத்து மென்றான். கஎச

1347 மதிதரன் என்னு மாசில் மந்திரி சொல்லக் கேட்டே
உதிதர வுணர்வல் யானும் ஒப்பினும் உருவி னானும்
விதிதர வந்த தொன்றே விளங்குபூண் முலையி னாளைக்
கொதிதரு வேலி னற்கே கொடுப்பது கருமம் என்றான்.

1348 உள்விரித் திதனை யெல்லாம் உரைக்கென மொழிந்துவிட்டான்
தெள்ளிதிற் றெரியச்சென்றுங் குரைத்தலுங் குமரன்தேறி

வெள்ளிலை யணிந்த வேலான் வேண்டியஃ தாக என்றான்
அள்ளிலைவேல்கொள்மன்னற்கமைச்சனஃதமைந்ததென்றான்.

1349 பொன்றிய வுயிரை மீட்டான் பூஞ்சிகைப் போதுவேய்ந்தான்
அன்றியு மாமெய்தீண்டி யளித்தனன் அழகின் மிக்கான்
ஒன்றிய மகளிர் தாமே யுற்றவர்க் குரிய ரென்னு
வென்றிகொள் வேலினாற்கே பான்மையும் விளைந்த தன்றே.

1350 கோப்பெருந் தேவி கொற்றக் கோமகன் இவைகள் நாடி
யாப்புடைத் தையற் கின்றே நங்கையை அமைக்க வென்னத்
தூப்புரி முத்த மாலை தொடக்கொடு தூக்கி யெங்கும்
பூப்புரிந் தணிந்து கோயில் புதுவது புனைந்த தன்றே. கஎஅ

1351 கணிபுனைந் துரைத்த நாளாற் கண்ணிய கோயில் தன்னுள்
மணிபுரை மேனி நல்லார் மங்கல மரபு கூறி
அணியுடைக் கமல மன்ன அங்கைசேர் முன்கை தன்மேற்
றுணிவுடைக் காப்புக் கட்டிச் சுற்றுபு தொழுது காத்தார்.

1352 மழகளிற் றெருத்திற் றந்த மணிக்குட மண்ணு நீரால்
அழகனை மண்ணுப் பெய்தாங் கருங்கடிக் கொத்த கோலந்
தொழுதகத் தோன்றச் செய்தார் தூமணிப் பாவையன்னார்
விழுமணிக் கோடியனாளும் விண்ணவர் மடந்தையொத்தாள்.

வேறு

1353 கயற்க ணாளையுங் காமனன் னானையும்
இயற்றி னார்மணம் ஏத்தருந் தன்மையார்
மயற்கை யில்லவர் மன்றலின் மன்னிய
இயற்கை யன்புடை யாரியைந் தார்களே. கஅக

1354 வாளும் வேலு மலைந்தரி யார்ந்தகண்
ணாளும் வார்கழல் மைந்தனும் ஆயிடைத்
தோளுந் தாளும் பிணைந்துரு வொன்றெய்தி
நாளும் நாகர் நுகர்ச்சி நலத்தரே. கஅஉ

1355 தணிக்குந் தாமரை யாள்நலந் தன்னையும்
பிணிக்கும் பீடினி யென்செயும் பேதைதன்
மணிக்கண் வெம்முலை தாம்பொர வாயவிழ்ந்(து)
அணிக்கந் தன்னவன் தாரங்கு டைந்ததே. கஅ௩

1356 பரிந்த மாலை பறைந்தன குங்குமம்
கரிந்த கண்ணி கலந்த மகிழ்ச்சியின்
அரிந்த மேகலை ஆர்த்தன அஞ்சிலம்(பு)
இரிந்த வண்டிளை யார்விளை யாடவே. கஅச

1357 கொழுமென் இன்னகிற் கூட்டுறு மென்புகை
கழுமு சேக்கையுட் காலையும் மாலையும்
தழுவு காதல் தணப்பிலர் செல்பவே
எழுமை யும்மியைந் தெய்திய அன்பினார். கஅரு

1358 நாறி யுஞ்சுவைத் தும்நரம் பின்னிசை
கூறி யுங்குளிர் நாடகம் நோக்கியும்
ஊறின் வெம்முலை யால்உழப் பட்டும்அவ்
ஏற னான்வைகும் வைகலும் என்பவே. கஅசு

வேறு

1359 விரிகதிர் விளங்கு பன்மீன் கதிரொடு மிடைந்து திங்கட் [ஞ்
டெரிகதிர் திரட்டி வல்லான் தெரிந்துகோத் தணிந்த போலு
சொரிகதிர் முத்த மின்னுந் துணைமுலைத் தடத்தில் வீழ்ந்தான்
புரிகதிர்ப் பொன்செய் மாலைப் புகைநுதிப் புலவு வேலான்.

வேறு

1360 எழில்மாலை யென்னுயிரை யான்கண்டேன் இத்துணையே
முலையிற் றாகிக்
குழல்மாலைக் கொம்பாகிக் கூரெயிறு நாப்போழ்தல்
அஞ்சி யஞ்சி
உழல்மாலைத் தீங்கிளவி யொன்றிரண்டு தான்மிழற்றும்
ஒருநாட் காறும்
நிழல்மாலை வேல்நாண நீண்டகண்ணே நெய்தோய்ந்த
தளிரே மேனி. கஅஅ

1361 மாநீர் மணிமுகிலின் மின்னுக் கொடிநுசுப்பின்
மயிலஞ் சாயல்
ஏநீர் இருபுருவம் ஏறி யிடைமுரிந்து
நுடங்கப் புல்லித்

தூநீர் மலர்மார்பன் தொன்னலந் தான்பருகித்
துளும்புந் தேறற்
றேனீர் மலர்மாலை தேன்துளித்து மட்டுயிர்ப்பச்
சூட்டி னானே. கஅசக

வேறு

1362 தேனடைந் திருந்த கண்ணித் தெண்மட்டுத் துவலை மாலை
ஊனடைந் திருந்த வேற்கண் ஒண்டொடி யுருவ வீணை
தானடைந் திருந்த காவிற் பாடினாள் தனிமை தீர்வான்
கூனடைந் திருந்த திங்கட் குளிர்முத்த முலையி னாளே.

1363 வார்தளிர் ததைந்து போது மல்கிவண் டுறங்குங் காவிற்
சீர்கெழு குரிசில் புக்கான் தேசிகப் பாவை என்னுங்
கார்கெழு மின்னு வென்ற நுடங்கிடைக் கமழ்தண் கோதை
ஏர்கெழு மயிலன் னாளை யிடைவயின் எதிர்ப்பட் டானே.

1364 சிலம்பெனும் வண்டு பாட மேகலைத் தேன்கள் ஆர்ப்ப
நலங்கவின் போது பூத்த பூங்கொடி நடுங்கி நாணக்
கலந்தனன் காம மாலை கலையின தியல்பிற் சூட்டப்
புலம்புபோய்ச் சாய லென்னும் புதுத்தளிர் ஈன்ற தன்றே.

1365 சாந்திடைக் குளித்த வெங்கட் பணைமுலைத் தாம மாலைப்
பூந்தொடி யரிவை பொய்கைப் பூமக ளனைய பொற்பின்
வேந்தடு குருதி வேற்கண் விளங்கிழை யிவர்கள் நாளும்
ஆய்ந்தடி பரவ வைகும் அரிவையர்க் கநங்க னன்னான்.

1366 இங்ஙனம் இரண்டு திங்க ளேகலும் வேக வேலான்
அங்ஙனம் புணர்ந்த அன்பின் அவள்முலைப் போகம் நீக்கி
எங்ஙன மெழுந்த துள்ளம் இருளிடை யேக லுற்றான்
தங்கிய பொறியின் ஆக்கந் தனக்கொர்தே ராக நின்றான்.

1367 தயங்கிணர்க்கோதைதன்மேற்றண்ணெனவைத்தமென்றோ
வயங்கிணர் மலிந்த தாரான் வருந்துறு வகையி னீக்கி [ள்
நயங்கிள ருடம்பு நீங்கி நல்லுயிர் போவ தேபோல்
இயங்கிடை யறுத்த கங்கு லிருளிடை யேகி னானே. கஙகரு

வேறு

1368 நீல்நி றக்குழல் நேர்வளைத் தோளியைத்
தான்உ றக்கிடை நீத்தலுந் தன்பினே

வேல்நி றக்கண் விழித்தன ளென்பவே
பாலி றத்துகிற் பையர வல்குலாள். ௧௯௬

1369 ஆக்கை யுள்ளுறை யாவி கெடுத்தவண்
யாக்கை நாடி யயர்வது போலவுஞ்
சேக்கை நாடித்தன் சேவலைக் காணிய
பூக்கள் நாடுமோர் புள்ளுமொத் தாளரோ. ௧௯௭

1730 புல்லும் போழ்தினும் பூணுறின் நோமென்
மல்லற் காளையை வைது மிழற்றுவாய்
இல்லின் நீக்க முரைத்திலை நீயெனச்
செல்வப் பைங்கிளி தன்னையுஞ் சீறினாள். ௧௯௮

1371 ஓவி யக்கொடி யொப்பருந் தன்மையெம்
பாவை பேதுறப் பாயலின் நீங்கிநீ
போவ தோபொரு ளென்றிலை நீயெனப்
பூவை யோடும் புலம்பி மிழற்றினாள். ௧௯௯

1372 தன்னைப் பாரையில் லானைத் தலைச்சென்றெம்
பொன்னைப் பாளொடும் போகெனப் போகடாய்
துன்னித் தந்திலை நீயெனத் தூச்சிறை
அன்னப் பேடையொ டாற்றக் கழறினாள். ௨௦௦

1373 மையில் வாள்நெடுங் கண்வள ராதன
மெய்யெ லாமுடை யாய்மெய்ம்மை காண்டிநீ
ஐயன் சென்றுழிக் கூறுகென் றாய்மயில்
கையி னாற்றொழு தாள்கயற் கண்ணினாள். ௨௦௧

1374 வளர்த்த செம்மையை வாலியை வான்பொருள்
விளக்கு வாய்விளக் கேவிளக் காயிவண்
அளித்த காதலொ டாடுமென் னாருயிர்
ஒளித்த தெங்கென ஒண்சுடர் நண்ணினாள். ௨௦௨

1375 பருகிப் பாயிருள் நிற்பின் அறாதெனக்
கருகி யவ்விருள் கான்றுநின் மெய்யெலாம்
எரிய நின்று நடுங்குகின் றாயெனக்(கு)
உரிய தொன்றுரைக் கிற்றியென் றாடினாள். ௨௦௩

1376 கோடி நுண்துகி லுங்குழை யும்நினக்(கு)
ஆடு சாந்தமு மல்லவும் நல்குவேன்

மாட மேநெடி யாய்மழை தோய்ந்துளாய்
நாடி நண்பனை நண்ணுக வென்றரோ. உ௦௪

1377 ஆட கக்கொழும் பொன்வரை மார்பனைக்
கூடப் புல்லிவை யாக்குற்றம் உண்டெனா
நீடெ ரித்திரள் நீள்மணித் தூணொடு
சூட கத்திரள் தோளணி வாட்டினாள். உ௦௫

1378 கொலைகொள் வேலவன் கூடலன் ஏகினான்
இலைகொள் பூணுமக் கென்செயும் ஈங்கெனா
மலைகொள் சந்தனம் வாய்மெழுக் கிட்டதன்
முலைகொள் பேரணி முற்றிழை சிந்தினாள். உ௦௬

1379 அருங்க லக்கொடி யன்னவன் ஏகினான்
இருந்திவ் வாகத் தெவன்செய்விர் நீரெனா
மருங்குல் நோவ வளர்ந்த வனமுலைக்
கருங்கண் சேந்து கலங்க அதுக்கினாள். உ௦௭

1380 மஞ்சு சூழ்வரை மார்பனைக் காணநீர்
துஞ்ச லோம்புமின் என்னவுந் துஞ்சினீர்
அஞ்ச னத்தொடு மையணி மின்னெனா
நெஞ்சில் நீள்நெடுங் கண்மலர் சீறினாள். உ௦அ

1381 அரக்குண் தாமரை யன்னதன் கண்மலர்
விருத்தி மாதர் விலக்க வெரீஇக்கோலோ
வருத்த முற்றனள் என்றுகொல் மேகலை
குரற்கொ டாது குலுங்கிக் குறைந்ததே. உ௦௯

வேறு

1382 துனியா யினதுன் னுபுசெய் தறியேன்
தனியே னொருபெண் ணுயிரென் னொடுந்தான்
இனியா னிஙனே யுளனே யுரையீர்
பனியார் மலர்மேற் படுவண் டினமே. உ௧௦

1383 நிரைவீ ழருவிந் நிமிர்பொன் சொரியும்
வரையே புனலே வழையே தழையே
விரையார் பொழிலே விரிவெண் ணிலவே
உரையீர் உயிர்கா வலன்உள் வழியே. உ௧௧

1384 எரிபொன் உலகின் உறைவீர் இதனைத்
தெரிவீர் தெரிவில் சிறுமா னிடரிற்
பரிவொன் றிலிராற் படர்நோய் மிகுமால்
அரிதால் உயிர்காப் பமரீர் அருளீர். ௨௧௨

1385 புணர்வின் இனிய புலவிப் பொழுதுங்
கணவன் அகலின் உயிர்கை யகறல்
உணர்வீர் அமரார் மகளீர் அருளிக்
கொணர்வீர் கொடியே னுயிரைக் கொணர்வீர். ௨௧௩

1386 நகைமா மணிமா லைநடைக் கொடிநின்
வகைமா மணிமே கலையா யினதேல்
அகையா தெனதா விதழைக் குமெனத்
தகைபா டவலாய் தளர்கோ தளர்கோ. ௨௧௪

1387 புனைதார் பொரநொந் துபொதிர்ந் தவென
வினையா ரெரிபூண் முலைகண் குளிர
உனகண் மலரால் உழுதோம் பவலாய்
நினையா துநெடுந் தகைநீத் தனையே. ௨௧௫

1388 அருள்தேர் வழிநின் றறனே மொழிவாய்
பொருள்தேர் புலனெய் தியபூங் கழலாய்
இருள்தேர் வழிநின் றினைவேற் கருளாய்
உருள்தே ருயர்கொற் றவன்மைத் துனனே. ௨௧௬

1389 மிகவா யதொர்மீ ளிமைசெய் தனனே
உகவா உனதுள் ளழுவர்த் ததுவோ
இகவா இடரென் வயினீத் திடநீ
தகவா தகவல் லதுசெய் தனையே. ௨௧௭

1390 குளிர்துன் னியபொன் னிலமே குதலால்
தளிரன் னநடை யவள்தாங் கலளாய்
ஒளிர்பொன் னரிமா லையொசிந் திஙனே
மிளிர்மின் னெனமின் னிலமெய் தினளே. ௨௧௮

1391 தழுமா வலிமைந் தவெனத் தளரா
எழுமே முடியூக் கிநடந் துசெலா
விழுமீ நிலமெய் திமிளிர்ந் துருகா
அழுமால் அவலித் தவணங் கிழையே. ௨௧௯

வேறு

1392 கரப்புநீர்க் கங்கை யங்கட் கடிமலர்க் கமலப் பள்ளித்
திருத்தகு திரைகள் தாக்கச் சேப்புழிச் சேவல் நீங்கப்
பரற்றலை முரம்பிற் சின்னீர் வறுஞ்சுனைப் பற்று விட்ட
அரத்தவாய்ப்பவளச்செந்தாட் பெடையன்னம்அழுவதொத்தாள்.

1393 மெழுகினாற் புனைந்த பாவை வெய்துறுத் தாங்கும் ஓவா(து)
அழுதுளைந் துருகு கின்ற வாயிடைத் தோழி துன்னிக்[ள்
கெழீஇயினாள் கேள்வி நல்யாழ்க் கிளைநரம் பனைய சொல்லா
கழிபெருங் கவலை நீங்கக் காரண நீர சொன்னாள். உஉக

1394 தெள்ளறல் யாறு பாய்ந்த திரைதவழ் கடலின் வெஃகி
அள்ளூற அளிந்த காமம் அகமுறப் பிணித்த தேனும்
உள்ளூற வெந்த செம்பொன் உற்றநீர்ப் புள்ளி யற்றாற்
கள்ளூற மலர்ந்த கோதாய் காதலர் காத லென்றாள். உஉஉ

1395 ஓடரி யொழுகி நீண்ட ஒளிமலர்த் தடங்க ணாரைக்
கூடரி யுழுவை போல முயக்கிடைக் குழையப் புல்லி
ஆடவர் அழுந்தி வீழ்ந்தும் பிரிவிடை அழுங்கல் செல்லார்
பீடழிந் திருகும் பெண்ணிற் பேதையர் இல்லை யென்றாள்.

1396 பேதைமை யென்னும்வித்திற் பிறந்துபின் வினைகளென்னு
வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக் [ம்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்.

1397 தேன்சென்றநெறியுந் தெண்ணீர்ச்சிறுதிரைப் போர்வைபோர்த்து
மீன்சென்ற நெறியும் போல விழித்திமைப் பவர்க்குத்தோன்றா
மான்சென்ற நோக்கின் மாதே மாய்ந்துபோ மக்கள் யாக்கை
ஊன்சென்று தேயச் சிந்தித் துருவதோ தகுவ தென்றாள்.

1398 பிரிந்தவற் கிரங்கிப் பேதுற் றழுதநங் கண்ணின் நீர்கள்
சொரிந்தவைதொகுத்துநோக்கிற் றொடுகடல் வெள்ளமாற்றா
முரிந்தநம் பிறவி மேனாள் முற்றிழை யின்னும் நோக்காய்
பரிந்தழு வதற்குப் பாவாய் அடியிட்ட வாறு கண்டாய்.உஉசு

1399 அன்பினின் அவலித் தாற்றா தழுவதும் எளிது நங்கள்
என்பினின் ஆவி நீங்க இறுவதும் எளிது சேர்ந்த [தாங்கி
துன்பத்தாற் றுகைக்கப் பட்டார் துகைத்தவத் துன்பங்
இன்பமென் றிருத்தல் போலும் அரியதிவ் வுலகி லென்றாள்.

1400 மயற்கையிம் மக்கள்யோனிப் பிறத்தலும் பிறந்துவந்திங்(கு)
இயற்கையே பிரிவு சாதல் இமைப்பிடைப் படாத தொன்றாற்
கயற்கணின் அளவுங் கொள்ளார் கவற்சியுட் கவற்சிகொண்டார்
செயற்கையம் பிறவி நச்சுக் கடலகத் தழுந்து கின்றார்.

1401 இளமையின் மூப்புஞ்செல்வத் திடும்பையும் புணர்ச்சிப்போ
கிளைநரிற் பிரிவும் நோயில் காலத்து நோயும் நோக்கி [ழ்திற்
விளைமதுக் கமழுங் கோதை வேலினும் வெய்ய கண்ணாய்
களைதுயர் அவலம் வேண்டா கண்ணிமைப் பளவும் என்றாள்.

1402 முத்திலங் காகந் தோய்ந்த மொய்ம்மலர்த் தாரி னான்நங்
கைத்தலத் தகன்ற பந்திற் கைப்படுங் கவல வேண்டா [னே
பொத்திலத் துறையுமாந்தை புணர்ந்திருந் துரைக்கும்பொன்
னித்தில முறுவ லுண்டான் நீங்கினான் அல்லன் கண்டாய்.

1403 வடிமலர்க் காவின் அன்று வண்டளிர்ப் பிண்டி நீழல்
முடிபொருள் பறவை கூற முற்றிழை நின்னை நோக்கிக்
கடியதோர் கௌவை செய்யுங் கட்டெயிற் றரவி னென்றேன் [ள்.
கொடியனாய்ப்பிழைப்புக்கூறேன்குழையலென்றெடுத்துக்கொண்டா

1404 அலங்கலுங் குழலுந் தோழி யங்கையின் அடைச்சி அம்பூம்
பொலங்கலக் கொடிய னாள்தன் கண்பொழி கலுழியொற்றிக்
கலந்தகில் நாறும் அல்குற் கவான்மிசைக் கொண்டிருந்தாள்
புலர்ந்தது பொழுது நல்லாள் நெஞ்சமும் புலர்ந்த தன்றே.

1405 பண்கனிந் தினிய பாடற் படுநரம் பிளகி யாங்குக்
கண்கனிந் தினிய காமச் செவ்வியுட் காளை நீங்கத்
தெண்பனி யனைய கண்ணீர்ச் சேயிழை தாய ரெல்லாந்
தண்பனி முருக்கப் பட்ட தாமரைக் காடு போன்றார். உ௫௫

1406 சில்லரிச் சிலம்பு சூழ்ந்த சீறடித் திருவின் நற்றாய்
முல்லையங் குழலி னாய்நின் முலைமுதற் கொழுநன் மேனாட்
சொல்லியும் அறிவ துண்டோ எனக்குழைந் துருகி நைந்து
மெல்லியல் கங்குற் சொல்லிற் றிற்றென மிழற்று கின்றாள்.

வேறு

1407 வினைக்குஞ் செய்பொருட் கீம்வெயில் வெஞ்சுரம்
நினைத்து நீங்குதல் ஆண்கடன் நீங்கினாற்
கனைத்து வண்டுணுங் கோதையர் தங்கடன்
மனைக்கண் வைகுதல் மாண்பொ டெனச்சொனான். ௨௫௫

1408 விரைசெய் தாமரை மேல்விளை யாடிய
அரைச அன்னம் அமர்ந்துள வாயினும்
நிரைசெய் நீலம் நினைப்பில என்றனன்
வரைசெய் கோல மணங்கமழ் மார்பினான். ௨௫௬

1409 பொன்வி ளைத்த புணர்முலை யாள்சொல
இன்ன ளிக்குரற் கேட்ட அசுணமா
அன்ன ளாய்மகிழ் வெய்துவித் தாளரோ
மின்வ ளைத்தன மேகலை யல்குலாள். ௨௫௭

1410 அன்னந் தான்அவன் தாமரைப் போதுநீ
நின்னை நீங்கினன் நீங்கலன் காதலான்
இன்ன தாலவன் கூறிற் றெனச்சொனாள்
மன்ன னாருயிர் மாபெருந் தேவியே. ௨௫௮

வேறு

1411 சொரிபனி முருக்க நைந்து சுடர்முகம் பெற்ற போதே
பரிவுறு நலத்த அன்றே பங்கயம் அன்ன தேபோல்
வரிவளைத் தோளி கேள்வன் வருமென வலித்த சொல்லால்
திருநலம் பிறந்து சொன்னாள் தேனினும் இனியசொல்லாள்.

1412 நஞ்சினை அமுத மென்று நயக்கினும் அமுத மாகா(து)
அஞ்சிறைக் கலாப மஞ்ஞை அணங்கர வட்ட தேனும்
அஞ்சிறைக் கலுழ னாகு மாட்சியொன் றுனு மின்றே
வஞ்சனுக் கினைய நீரேன் வாடுவ தென்னை யென்றாள்.

1413 பொய்கையுட் கமலத் தங்கட் புள்ளெனும் முரசம் ஆர்ப்ப
வெய்யவன் கதிர்க ளென்னும் விளங்கொளித் தடக்கைநீட்டி
மையிருட் போர்வை நீக்கி மண்ணக மடந்தை கோலம்
பையவே பரந்து நோக்கிப் பனிவரை நெற்றி சேர்ந்தான்.

1414 செவ்வழி யாழின் ஊறுந் தீஞ்சொலாட் குற்ற தெல்லாம்
அவ்வழி அரசற் குய்த்தார்க் கரசனும் அவலம் எய்தி
எவ்வழி யானும் நாடி இமைப்பின தெல்லை யுள்ளே
இவ்வழித் தம்மின் என்றான் இவுளித்தேர்த் தானை யானே.

வேறு

1415 மின்னுளே பிறந்ததோர் மின்னின் மேதகத்
தன்னுளே பிறந்ததோர் வடிவு தாங்குபு
முன்னினான் வடதிசை முகஞ்செய் தென்பவே
பொன்னுளே பிறந்தபொன் அனைய பொற்பினான். உசந

1416 வீக்கினான் பைங்கழல் நாலவெண் துகில்
ஆக்கினான் இருதுணி அணிந்த பல்கலன்
நீக்கினான் ஒருமகற் கருளி நீள்நெறி
ஊக்கினான் உவவுறு மதியின் ஒண்மையான். உசச

வேறு

1417 வேந்தனால் விடுக்கப் பட்டார் விடலையைக் கண்டு சொன்னார்
ஏந்தலே பெரிதும் ஒக்கும் இளமையும் வடிவும் ஈதே
போந்ததும் போய கங்குல் போம்வழிக் கண்ட துண்டேல்
யாம்தலைப் படுதும் ஐய அறியின்ஈங் குரைக்க என்றார்.

1418 நெய்கனிந் திருண்ட ஐம்பால் நெடுங்கணாள் காத லானை
ஐயிரு திங்க ளெல்லை யகப்படக் காண்பிர் இப்பாற்
பொய்யுரை யன்று காணீர் போமினம் போகி நுங்கள்
மையலங் களிற்று வேந்தன் மைந்தனுக் குரைமினென்றான்.

6. கேமசரியார் இலம்பகம்

1419 வானின் வழங்கும் வண்கை மணிசெய் யார மார்பின்
தேனும் வழங்கும் பைந்தார் விசயை சிறுவன் தேங்கொள்
நானம் வழங்குங் கோதை நைய வெய்ய வாய
கானம் வழங்கல் மேவிக் காலின் ஏகி னானே. க

1420 சிலைகொள் நாணிற் றீராத் திருந்து கற்பின் னவர்தம்
இலைகொள் பூந்தார் உழுத இன்ப வருத்தம் நீங்க [பன்
முலைகொள் கண்கள் கண்ணின் எழுதி முள்கும் மொய்ம்
மலைகொள் கானம் முன்னி மகிழ்வோ டேகு கின்றான். உ

1421 கனிகொள் வாழைக் காட்டுட் கருமை மெழுகி யவைபோன்
இனிய வல்லா முகத்த முசவுங் குரங்கும் இரியத் (று)
துனிவு தீர நோக்கித் தோன்றல் செல்லு முன்னாற்
பனிவெண் திரைசூழ் கடலிற் பழுவந் தோன்றிற் றவணே.

1422 பருகு வாரிற் புல்லிப் பயங்கண் மாறத் துறக்கும்
முருகு விம்மு குழலார் போல மொய்கொள் தும்பி
உருவப் பூங்கொம் பொசியப் புல்லித் தீந்தேன் பருகி
அருகு வரிவிட் டார்ப்ப அண்ணல் மெல்லச் சென்றான். ச

1423 செல்வர் மனத்தின் ஓங்கித் திருவில் மாந்தர் நெஞ்சின்
எல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதின் ஒழுகிக்
கொல்லும் அரவின் மயங்கிச் சிறியார் கொண்ட தொடர்பிற்
செல்லச் செல்ல அஃகும் நெறிசேர் சிலம்பு சேர்ந்தான். ரு

1424 சுனைகள் கண்க ளாகச் சூழ்ந்த குவளை இமையா
வனைய லாகா உருவம் நோக்கி மைந்தற் கிரங்கி
இனைவ போலும் வரையின் அருவி யினிதின் ஆடி
நனைகொள் போது வேய்ந்து நாதற் பாடு கின்றான். சா

வேறு

1425 செய்தான் இருவினையின் பயத்தைச்சேருஞ் சென்றென்றி
எய்தான் அதன்பயத்தைப் பிறனேதுய்த்தல் இயல்பென்றி
கொய்தாமந் தாழ்ந்தொசிந்த குளிர்பூம்பிண்டிக் கோமானே
இஃதேநின்சொ லியல்பென்றால் அடியேன்நின்னைத்தொழுதேனே.

1426 உண்டே தனதியல்பின் உணருங் காலை யுயிர்என்றீ
உண்டாய அவ்வுயிரே பிறிதி னில்லை யெனவுரைத்தி
வண்டார்த்து நாற்காதம் வண்ண மாலை சுமந்தொசிந்து
கொண்டேந்து பூம்பிண்டிக் கோமான்நின்னைத் தொழுதேனே.

1427 காதலால் எண்வினையுங் கழிப என்றி அக்காதல்
ஆதலால் எண்வினையுங் கழியா என்றும் அறைதியால் [லாங்
போதுலாய்த் தேன்துளித்துப் பொழிந்துவண்டு திவண்டு
கோதைதாழ் பூம்பிண்டிக் கோமான்நின்னைத் தொழுதேனே.

வேறு

1428 இனிதின் இங்ஙனம் ஏத்தி வலங்கொண்டு
முனிவர் சித்திர கூட முனாதெனத்
தனிதின் ஏகுபு தாபதர் வாழ்வதோர்
பனிகொள் பூம்பொழிற் பள்ளிகண் டானரோ. ௧௦

1429 புல்லும் அல்லியும் போகுயர் நீள்கழை
நெல்லும் நீர்விளை கேழலும் தோரையும்
அல்ல தீம்பழங் காய்கிழங் காதியா
நல்ல வேறுகர் வார்பள்ளி நண்ணினான். ௧௧

1430 அரிய கொள்கையர் ஆரழல் ஐந்திடை
மருவி வீடு விளக்குறு மாட்சியர்
விரிய வேதம் விளம்பிய நாவினர்
தெரிவில் தீத்தொழிற் சிந்தையின் மேயினார். ௧௨

1431 வள்ளி யின்னமு தும்வரை வாழையின்
தெள்ளு தீங்கனி யுஞ்சில தந்தபின்
வெள்ள மாரிய னாய்விருந் தார்கென
உள்ள மாட்சியி னாருவந் தோம்பினார். ௧௩

1432 பாங்கின் மாதவர் பால்மதி போன்றிவன்
வீங்கு கல்வியன் மெய்ப்பொருட் கேள்வியன்
ஆங்கு நாமும் அளக்குவம் என்றுதம்
ஓங்கு கட்டுரை யொன்றிரண் டோதினார். ௧௪

1433 ஐயர் கூறலும் அண்ணலும் கூறுவான்
சையம் பூண்டு சமுத்திரம் நீந்துவான்

உய்பு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையும்
எய்தி னார்களும் உய்பளன் றேதினான். கரு

1434 வீடு வேண்டி விழுச்சடை நீட்டல்மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
ஓடு கோடல் உடுத்தலென் றின்னவை
பீடி லாப்பிற விக்குவித் தென்பவே. கசு

1435 ஏம நன்னெறி எம்நெறி அல்நெறி
தூய்மை யில்நெறி யாமுந் துணிகுவம்
காமன் தாதை நெறியின்கட் காளைநீ
தீமை யுண்டெனிற் செப்பெனச் செப்பினான். கஎ

வேறு

1436 தூங்குறிக் கிடந்து காயும் பழங்களுந் துய்ப்ப நில்லா
பாங்கலா வினைக ளென்றார் பகவனார் எங்கட் கென்னின்
ஓங்குசீர் மரத்திற் றூங்கும் ஒண்சிறை யொடுங்கல் வாவல்
பாங்கிற் பழங்கள் துய்ப்பப் பழவினை பரியு மன்றே. கஅ

1437 அல்லியும் புல்லும் உண்டாங் காரழல் ஐந்துள் நின்று
சொல்லிய வகையின் நோற்பத் துணியும்வெவ் வினைக ளென்
கல்லுண்டு கடிய வெம்புங் கானுறை புறவ மெல்லாம் [னிற்
புல்லிய வினைகள் வென்று புறக்கொடை காணு மன்றே. கசு

1438 நீட்டிய சடைய மாகி நீர்மூழ்கி நிலத்தைச் சேர்ந்து
வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைத்தும் என்னிற்
காட்டிடைக் கரடி போகிக் கயமூழ்கிக் காட்டுள் நின்று
வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமி னென்றான்.

1439 கலைவளர் கிளவி யார்தங் காமர்மென் சேக்கை நீங்கி
இலைவளர் குரம்பை யங்கண் இருநிலஞ் சேக்கை யாக
முலைவள ராகந் தோய முழுவினை முரியு மாயின்
மலைவளர் குறவர்க் கம்மா வினைகளும் மாயு மன்றே. உக

1440 வெண்ணிறத் துகிலின் அங்கண் வீழ்ந்துமா சாகி நின்ற
ஒண்ணிற உதிரந் தன்னை உதிரத்தால் ஒழிக்க லாமே
பண்ணிறக் கிளவி யார்தம் பசையினாற் பிறந்த பாவம்
கண்ணிற முலையி னார்தங் கலவியாற் கழிக்க லாமே. உஉ

1441 நுண்துகில் வேதல் அஞ்சி நெருப்பகம் பொதிந்துநோக்கிக்
கொண்டுபோய் மறையவைத்தாற் கொந்தழல் சுடாதுமாமே
கண்டத்தி ஞவி யார்தங் கடிமனை துறந்து காட்டுட்
பண்டைச்செய் தொழிலிற் பாவம் பறைக்குற் ருற்பறைக்கலாமே.

1442 நோய்முதிர் குரங்கு போல நுகர்ச்சிநீர் நோக்கல் வேண்டா
காய்முதிர் கனியின் ஊழ்த்து வீழுமிவ் யாக்கை இன்னே.
வேய்முதிர் வனத்தின்வென்ரு னுருவொடுவிளங்கநோற்றுப்
போய்முதிர் துறக்கத் தின்பம் பருகுதல் புரிமி னென்ருன்.

1443 மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய் பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம் மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்ருன்.

1444 குன்றனுன் உரைப்பக் கேட்டே பாகத்தார் குடும்பம் நீக்கி
இன்றுகண் விடுக்கப் பட்டேம் யாமென எழுந்து போகி [ர்
வென்றவன்நெறியைச்சேர்ந்துவீட்டுநன்னெறியைப்பெற்ரு
சென்றது பரிதி வட்டம் செம்மலும் அசைவு தீர்ந்தான்.

வேறு

1445 அசைவு தீர்ந்திருள் அஃகிய காலையே
வசையின் நீங்கியி ஞர்வழி காட்டலின்
திசையும் யாறுந் தெரிந்துகொண் டேகினன்
மிசையும் இல்லதோர் மெய்ப்பொறி யாக்கையான். உஎ

வேறு

1446 படம்புனைந் தெழுதிய வடிவிற் பங்கயத்
தடம்பல தழீஇயது தக்க நாடது
வடங்கெழு வனமுலை மகளிர் மாமைபோன்(று)
இடம்பெரி தினிததன் எல்லை எய்தினன். உஅ

1447*தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்
பூங்குழல் மடந்தையர் புனைந்த சாந்தமும்
ஆங்கெலாம் அகிற்புகை யளாய வாசமும்
தாங்கலாற் றக்கநா டாய தென்பவே. உகூ

1448 சண்பக நறுமலர் மாலை நாறுசாந்(து)
ஒண்பழுக் காயினோ டுருவ மெல்லிலை
உண்பதம் யாவர்க்கும் ஊன மில்லது
வண்புகழ் நாட்டது வண்ணம் இன்னதே. ௩௦

1449 கரும்பணி வளவயற் காமர் தாமரை
வரம்பணைந் ததன்றுதற் கிடந்த வார்செநெல்
அரங்கணி நாடக மகளிர் ஆய்நுதற்
சுரும்புசூழ் இலம்பகத் தோற்றம் ஒத்ததே. ௩௧

1450 வண்டுவாழ் கொடுந்துறைக் கன்னி வாளைமேல்
நண்டுகி ருற்றென நடுங்கி நாணினால்
விண்டொளித் தூண்துறந் தொடுங்கும் வீழ்புனல்
கொண்டபூங் கிடங்கணி நகரங் கூறுவாம். ௩௨

1451 அகழ்கிடங் கந்துகில் ஆய்பொற் பாம்புரி
புகழ்தகு மேகலை ஞாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரந் திங்கள் வாண்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்பவே. ௩௩

1452 நாட்டிய மணிவரை கடைந்து நல்லமிர்(து)
ஊட்டினும் அதனைவிட் டுறைநர் இன்மையால்
ஈட்டிய வளநிதி இறைகொள் மாநகர்ச்
சூட்டுவைத் தனையதச் சுடர்ப்பொன் இஞ்சியே. ௩௪

1453 எறிசுற விளையவர் ஏந்து பூங்கொடி
மறிதிரை வரைபுரை மாட மாக்கலம்
பெறலருந் திருவனார் அமுதம் பேரொலி
அறைகடல் வளநக ராய தென்பவே. ௩௫

வேறு

1454 மதியக டுரிஞ்சுஞ் சென்னி மாடநீள் மறுகு தோறும்
பொதியவிழ் மாலை வீழ்ந்து பொன்செய்நன் கலன்கள்சிந்தி
நிதியறை திறந்து நோக்கி யன்னதோர் நீர்மை யெய்திப்
புதியவர்க் கியங்க லாகாப் பொற்பொடு பொலிந்த தன்றே.

வேறு

1455 கேமமா புரமெனுங் கேடில் நல்லிசைப்
பூமிமேற் றிலகம்வைத் தனைய பொன்னகர்த்

தாமம்நீள் நெடுங்குடைத் தரணி காவலன்
நாமம்வேல் நரபதி தேவன் என்பவே. ௩எ

1456 அங்கசர்க் கரசனே யனைய ஆண்டகை
மெய்ந்நிக ரிலாதவன் வேத வாணிகன்
கைந்நிக ரமைந்தவேற் கமழுந் தாரினன்
மைந்நிகர் மழைக்கணர் மருட்ட வைகுவான். ௩அ

வேறு

1457 வார்சிலை வடிப்ப வீங்கி வரையெனத் திரண்ட தோளான்
சோர்புயல் தொலைத்த வண்கைச் சுபத்திரன் மனைவி பெற்ற
சீர்நலங் கடந்த கேம சரியெனத் திசைக ளெல்லாம்
பேர்நலம் பொறித்த பெண்மைப் பெருவிளக் காகி நின்றாள்.

1458 மாசிலாள் பிறந்த ஞான்றே மதிவலான் விதியின் எண்ணிக்
காசிலாள் கண்ட போழ்தே கதுமென நாணப் பட்டான்
தூசுலாம் அல்கு லாட்குத் துணைவனும் புணர்மி னென்று
பேசினன் அன்றைக் கொண்டு பெருவிருந் தோம்பு கின்றான்.

1459 தாழ்தரு பைம்பொன் மாலை தடமலர்த் தாம மாலை
வீழ்தரு மணிசெய் மாலை இவற்றிடை மின்னின் நின்று
சூழ்வளைத் தோளி செம்பொற் றாணையே சார்ந்து நோக்கும்
ஊழ்படு காத லானை ஒருபிடி நுசுப்பி னாளே. ௪௧

1460 சேயிழை கணவ னாகுந் திருமகன் திறத்து நாளும்
ஆயிரத் தெட்டு நேர்ந்த ஆரமு தடிசில் ஊட்டி
ஏயின வகையி னாலே ஆறிரண் டெல்லை யாண்டு
போயின என்ப வாட்கட் பூங்கொடிச் சாய லாட்கே. ௪௨

1461 முருக்கிதழ் குலிக மூட்டி வைத்தன முறுவற் செவ்வாய்த்
திருக்கவின் நிறைந்த வெங்கட் பணைமுலைத் தேம்பெய் கோதைப்
புரிக்குழற்பொன்செய் பைம்பூட் புனையிழை கோலம்நோக்கித்
தரிக்கலா தருகி நையுந் தடமலர்க் கோதை நற்றாய். ௪௩

1462 மாவடு மருட்டு நோக்கின் மதிமுக மழைக்கண் மாசில்
பூவொடு புரையுஞ் சாயல் புனைநலந் தனித்து வைக
ஏவடு பிணையின் நோக்கி இறைவளை கழல நின்ற
தாய்படு துயர மெல்லாந் தாரவன் நீக்கி னானே. ௪௪

1463 போதுவாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங்(கு)
ஊதுமே மகளிர்க் கொத்த போகமும் அன்ன தொன்றே
யாதும்நீ கவல வேண்டா ஆரழ குடைய நம்பி
காதலான் தவத்தின் மிக்கான் கண்ணுறும் நாளை என்றான்.

வேறு

1464 பொன்னிலத் தெழுந்ததோர் பொருவில் பூங்கொடி
மின்னுவிட் டெரிவதோர் நலத்தள் வீங்கிருள்
பின்னிவிட் டனகுழற் பெருங்கட் பேதையூர்
துன்னினன் தொடுகழற் குரிசில் என்பவே. ச௬

1465 மல்லிகை மணங்கமழ் மாலை வார்குழற்
சில்சுணங் கிளமுலைச் சிறுமி தந்தையும்
செல்வனைத் திருநகர்ச் சேட்பட் டானரோ
பல்கதிர் மணியொளி பரந்த பூணினான். ச௭

1466 தென்திசை முளைத்ததோர் கோலச் செஞ்சுடர்
ஒன்றிமற் றுத்தரம் வருவ தொத்தவண்
மன்றல்கொள் மார்பினான் வந்தொ ரால்நிழல்
நன்றுவந் திருந்தனன் நாதற் சிந்தியா. ச௮

1467 குடைகவித் தனையது கோல மாமுடி
அடியிணை யாமையின் வடிவு கொண்டன
புடைதிரள் விலாவும்வில் வளைந்த பொற்பின
கடிகமழ் தாமரை கண்ணின் வண்ணமே. ச௯

1468 குறங்கணி மயிரொடு கோலம் ஆர்ந்தன
பிறங்கிய உறுப்பின்மேற் பெரிய நோக்கின
கறங்கிசை மணிமுழா எருத்தங் காண்தகு
மறங்கெழு பெரும்புலி வாயின் வண்ணமே. ௫௦

1469 வரையகல் மார்பிடை வரியும் மூன்றுள
புரைதபு பொன்புரை நாவும் முள்ளுடைத்(து)
அருவரைத் தோள்களும் அமரர் கோன்களிற்(று)
உருவுகொள் தடக்கையின் உருவு கொண்டவே. ௫௧

1470 இலங்குபொன் இறுவரை யனைய ஏந்தலுக்(கு)
அலங்கிதழ்த் தாமரைக் கொட்டை யன்னதாய்

வலஞ்சுழிந் தமைவரக் குழிந்த வாய்ப்பொடு
நலங்கிளர் நாபியும் இனிது நாறுமே. ருஉ

1471 தடித்திறை திரண்டுதம் அளவிற் கேற்றசூற்
கெடிற்றழ கழிப்பன கிளர்பொற் றேரைய
கடிப்பகை நுழைவறக் கதிர்த்த கைவிரல்
அடுத்தமூக் கருமணி வயிரத் தோட்டியே. ருங

1472 வார்ந்திலங் கெயிறணி பவழ மாண்டவாய்
ஆர்ந்தபூ அங்கையும் அடியும் தாமரை
தேர்ந்தனன் திருமகள் கணவ னாமெனத்
தீர்ந்தனன் சொல்லலை இத் தேர்க்கொண் டேறினான்.

1473. தேரிவர் ஊர்ந்தனர் செல்ல இற்றலைக்
கூருகிர் விடுத்ததோர் கோல மாலையைப்
பேரிசை வீணையிற் சூட்டிப் பெண்கொடிக்
காரிகை உலகுணர் கடவுட் பாடுமே. ருரு

வேறு

1474 வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்கோத முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்
தேவர் பெருமானைத் தேனார் மலர்சிதறி
நாவின் நவிற்றாதார் வீட்டுலகம் நண்ணாரே. ருசு

1475 அடல்வண்ண ஐம்பொறியும் அட்டுயர்ந்தார் கோமான்
கடல்வண்ணன் முக்குடைக்கீழ்க் காசின் றுணர்ந்தான்
காசின் றுணர்ந்தான் கமல மலரடியை
மாசின்றிப் பாடாதார் வானுலகம் நண்ணாரே. ருஎ

1476 பூத்தொழியாப் பிண்டிக்கீழ்ப் பொங்கோத வண்ணனை
நாத்தழும்ப ஏத்தாதார் வீட்டுலகம் நண்ணாரே
வீட்டுலகம் நண்ணார் வினைக்கள்வர் ஆறலைப்ப
ஓட்டிடுப எண்குணனுங் கோட்பட் டுயிராவே. ருஅ

வேறு

1477 முத்துமிழு முந்நீர் மணிவண்ணன் மூன்றுலகும்
பத்திமையாற் பாடப் படுவான்தாள் பாடக்கேட்(டு)

ஒத்தரம்பை யன்னாள் உவந்திவளோ டொப்பான்ஓர்
வித்தகனை இன்னே பெறுக எனவுரைத்தாள். ருகூ

வேறு

1478 நிலந்தினக் கிடந்தன நிதியந் நீள்நகர்ப்
புலம்பறப் பொலிவொடு புக்க காலையே
இலங்குபூங் கொடியன ஏழை நோக்கமும்
உலங்கொள்தோள் உறுவலி நோக்கும் ஒத்தவே. கூ௦

வேறு

1479 கண்ணுறீக் காளையைக் காண்டலுங் கைவளை
மண்ணுறத் தோய்ந்தடி வீழ்ந்தன மாமையும்
உண்ணிறை நாணும் உடைந்தன வேட்கையும்
ஒண்ணிறத் தீவிளைத் தாளுருக் குற்றாள். கூக

1480 வாக்கணங் கார்மணி வீணைவல் லாற்கவள்
நோக்கணங் காய்மனம் நோய்செய நொந்தவன்
வீக்கணங் கார்முலை வேய்நெடுந் தோளியோர்
தாக்கணங் கோமக ளோவெனத் தாழ்ந்தான். கூ௨

1481 நல்வளைத் தாமரை நாணிய வாண்முகக்
கொல்வளர் வேற்கணி னாள்குழைந் தாளெனச்
சொல்வளர்த் தார்அவள் தோழியர் சோர்குழல்
மல்வளர் மார்பனை வந்து வளைந்தார். கூ௩

1482 நினைப்பரு நீள்நிறை நிப்புதி சேர்ந்தாங்(கு)
இனத்திடை யேறனை யான்எழில் நோக்கிப்
புனக்கொடி பொற்பொடு புண்ணிய நம்பி
வனப்பினை யேகண்டு வாட்கண் அகன்றாள். கூ௪

1483 வள்ளலை வாசநெய் பூசி மணிக்குடத்
தெள்ளறல் நீர்சொரிந் தாட்டினர் தேம்புகை
உள்ளுற வுண்ட கலிங்கம் உடுத்தபின்
கள்ளவிழ் கண்ணி கலத்தொ டணிந்தார். கூரு

1484 மங்கல வெள்ளை வழித்துமுத் தீர்த்தபின்
கொங்கலர் கோதையர் கொண்டகம் எய்தி
அங்கதிர்ப் பொற்கலத் தாரமிர் தேந்தினர்
செங்கயற் கண்ணியர் சீரின் அயின்றான். கூகூ

வேறு

1485 பத்தியிற் குயிற்றிய பைம்பொற் றிண்ணைமேற்
சித்திரத் தவிசினுட் செல்வன் சீர்பெற
நித்தில மணியுறழ் கரக நீரினால்
அத்துறை விடுத்தனன் அலர்ந்த தாரினான். ௬எ

1486 இளிந்தகாய் கமழ்திரை வாசம் ஈண்டியோர்
பளிங்குபோழ்ந் தருகுபொன் பதித்த பத்தியின்
விளிம்புமுத் தழுத்திய யவனக் கைவினைத்
தெளிந்தபொன் அடைப்பையுட் பரகு சென்றவே. ௬அ

1487 பாசிலை சுருட்டுபு கறித்துப் பல்வினைத்
தேசிகம் படத்துடைத் துமிழ்ந்து தேங்கமழ்
வாசம்வாய்க் கொண்டனன் மணிசெய் குண்டலம்
வீசிவில் விலங்கிவிட் டுமிழ என்பவே. ௬௯

1488 பண்ணுலாங் கிளவிதன் பரவை யேந்தல்குல்
வண்ணமே கலையிவை வாய்ந்த பூந்துகில்
உண்ணிலாய்ப் பசுங்கதிர் உமிழ்வ பாவியேன்
கண்ணையும் மனத்தையுங் களங்கொண் டிட்டவே. எ0

1489 கடிகமழ் குழலினாற் கட்டி மெய்யெலாம்
நடுவொசி நோன்சிலைப் புருவத் தாற்புடைத்(து)
அடுமலர் நெடுங்கணால் ஆவி போழ்ந்திடாக்
கொடியவள் இளமுலை கொல்லுங் கொல்லுமே. எக

1490 கடியன கச்சினாற் கட்டப் பட்டன
கொடியன குங்குமங் கொட்டப் பட்டன
அடிநிலம் பரந்துமுத் தணிந்த வெம்முலை
இடைநிலஞ் செகுப்பன என்னை என்செயா. எஉ

1491 கரியவுள் வெறியன கட்டப் பட்டன
புரிவொடு புறத்திடப் பட்ட பூங்குழல்
தெரியின்மற் றென்செயா செய்ய நீண்டன
பெரியகண் போலவும் பேது செய்யுமே. எ௩

1492 காதன்மை கண்ணுளே யடக்கிக் கண்ணெனுந்
தூதினாற் றுணிபொருள் உணர்த்தித் தான்தமர்க்(கு)

ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கணைக்(கு)
ஓதநீ ரமுதமும் உலகும் விற்குமே. எச

வேறு

1493 மிகுகொடா முத்தஞ் சூட்டி மீளிமைதீர்த்து மின்னு [பொன்
நகுகொடா மணிகள் நல்ல தெளித்துக்கொண் டெழுதி நன்
முகபடாம் வைப்ப ஆட்செற் றழன்றுகண் கரிந்த முல்லைத்
தொகுகடாங் கோதை வெய்ய துணைமணி முலைகள் தாமே.

1494 தேன்கறி கற்ற கூழைச் செண்பக மாலை வேற்கண்
ஊன்கறி கற்ற காலன் ஒண்மணித் தடக்கை வைவேல்
கூன்பிறை நுதலோர் கூற்றங் குவிமுலை நமன்கைப் பாசம்
யான்பிறன் அளியன் வாழ்வான் ஆசைப்பட் டிருக்கின் றேனே.

வேறு

1495 திருவிற்குங் கற்பகத் தெரியல் மாலையார்
உருவிற்கு விளக்கமாம் ஒண்பொற் பூங்கொடி
முருகற்கும் அநங்கற்கும் எனக்கும் மொய்சடை
ஒருவற்கும் பகைத்தியால் ஒருத்தி வண்ணமே. எஎ

1496 கலைத்தொகை நலம்பல கடந்த காளைதான்
நலத்தகை யவள்நலம் நினைப்ப நாய்கனும்
மலைத்தொகை மதந்தவழ் யானை மன்னவன்
நிலத்தவர்க் கறிவுற நெறியிற் செப்பினான். எஅ

1497 இடியுமிழ் எறிதிரை முழக்கிற் பல்லியங்
கொடியணி வியன்நகர்க் குழுமி ஆர்த்தெழக்
கடிமணம் இயற்றினார் கடவுள் நாளினால்
வடிமலர்க் கோதையை மைந்தற் கென்பவே. எகூ

1498 மணிக்குடம் அழுத்திவைத் தனைய தோளினான்
கணிக்கிடங் கொடாநலங் கதிர்த்த காரிகை
அணிக்கிடன் ஆகிய அரிவை தன்னொடும்
பிணித்திடை விடாதவன் பெற்ற இன்பமே. அ0

1499 பூந்துகில் பொருதிரை பொம்மல் வெம்முலை
ஏந்திய மணிவரை இரக்கம் நீர்த்தரங்(கு)
ஆய்ந்தவன் தோளிணை நாக மாகவைத்(து)
ஈந்ததக் கடலவற் கமுதம் என்பவே. அக

1500 சந்தனச் சேற்றிடைத் தாம வார்குழற்
பைந்தொடி படாமுலை குளிப்பப் பாய்தலின்
மைந்தன தார்குழைந் துடைய வாய்திறந்(து)
அஞ்சிலம் பணியல்குற் கலையொ டார்த்தவே. ௮௨

வேறு

1501 கோதையுங்குழலும்பொங்கக் குவிமுலைக் குழங்கன்மாலைப்
போதுகப் பொருது பூணும் பொருகடல் முத்தும் மூழ்கக்
காதலுங் களிப்பும் மிக்குக் கங்குலும் பகலும் விள்ளார்
சாதலும் பிறப்பும் இல்லாத் தன்மைபெற் றவர்களொத்தார்.

1502 புனைமலர்த் தாரி னானும் போதணி கொம்ப னாளும்
நனைமலர்க் காவும் அந்தண் வாவியும் நல்ல ஆடிச்
சுனைமலர்க் குவளை குற்றுச் சூழ்மலர்க் கண்ணி கட்டி
வினைநலம் நுகர்ந்து செல்வார் விதியினான் மிக்க நீரார். ௮௪

1503 பொழிந்துகு காதல் பூண்டு புல்லுகை விடாது செல்லக்
கழிந்தன இரண்டு திங்கள் காளையு மற்றோர் நாளாற் [றோ(டு)
பிழிந்துகொள் வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி தன்
அழிந்துவீ ழருவிக் குன்றில் ஆய்மலர்க் காவு புக்கான். ௮௫

1504 காஞ்சனக் கமுகு காய்பொற் கனிக்குலை வாழை சூழ்ந்து
பூஞ்சினை நாகந் தீம்பூ மரக்கருப் பூரச் சோலை
மாஞ்சினை மயில்கள் ஆடச் சண்பக மலர்கள் சிந்துந்
தீஞ்சுனை யருவிக் குன்றஞ் சீர்பெற ஏறி னானே. ௮௬

1505 தினைவிளை ஏனற் செவ்வாய்ச் சிறுகிளி மாதர் ஓப்பப்
புனைவளைத் தோளி சொல்லைக் கிளியெனக் கிள்ளை போகா
நனைவளர் கோதை நாணிப் பொன்னரி மாலை ஓச்சக்
கனைகழற் குரிசில் நண்ணிக் கவர்கிளி ஓப்பி னானே. ௮௭

1506 கொந்தழல் வேற்க ணால்என் னுவிகூட் டுண்ட கொம்பே
செந்தழை யலங்கல் ஏந்திச் சீறடி பரவ வந்தேன்
உய்ந்தினிப் பணிசெய் வேனோ உடம்பொழித் தேகுவேனோ
பைந்தழை யல்குற் பாவாய் பணியெனப் பரவி னானே. ௮௮

1507 வீணையுங் குழலும் பாலும் அமுதமுங் கரும்புந் தேனும்
பாணியாழ் கனியும் வென்ற பைங்கிளி மழலைத் தீஞ்சொல்

ஞாணிக மகளிர் தாமே வாணிகம் வல்ல ரென்னப்
பூண்முலை பொதிர்ப்பப் புல்லிப் புனைநலம் பருகி னானே.

1508 திங்களங் குழவி செவ்வா னிடைக்கிடந் திமைப்ப தேபோற்
குங்கும மார்பிற் பூண்ட குளிர்கதி ராரம் மின்ன [னான்
மங்கையோ டிருந்த போழ்தோர் மணிவண்டு கண்டு சோன்
கங்குல்தான் நீங்க லுற்றுக் கமழ்மல ரணிந்த தாரான். ௯௦

1509 மணிவண்டிம் மாதர் கோதை மதுவுண வந்த போழ்தின்
இணைவண்டங் கிறந்துபாடின் றிருக்குமே இரங்க லின்றாய்த்
துணைவண்டு துஞ்சின் நீயுந் துஞ்சுவை யென்று நின்கட்
பணிகொண்ட தின்மை யாற்றான் பரிவொடு மிருக்குமன்றே.

1510 குழவியாய்ப் பிறந்து வெய்யோன் குமரனாய் முறுகியிப்பால்
விழைவுதீர் கிழவ னாகி விழுக்கதிர் உலந்து வீழ
மழலைவண் டுழல நக்க மல்லிகை யலங்கல் சூட்டிக்
குழல்புரை கிளவி யோடுங் கொழும்புகை யமளி சேர்ந்தான்.

1511 திருத்துயில் பெற்ற மார்பன் திருந்துதார் உழக்க இன்ப
வருத்தமுற் றசைந்த கோதை வாளொளித் தடங்கண் நீலம்
பொருத்தலும் பொன்ன னாளைப் புறக்கணித் தெழுந்து போகிப்
பருச்சுடர்ப் பவழ நோன்றாழ்ப் பன்மணிக் கதவு சேர்ந்தான்.

1512 அல்லியுட் பாவை யன்னாள் அறிவுறா வகையின் ஒற்றி
மெல்லவே திறந்து நீக்கி மின்னுவிட் டிலங்கு பைம்பூட்
கொல்சின மடங்க லன்னான் கொழுநிதி மாடம் நீந்திப்
பல்கதிர்ப் பரிதி போலப் பாயிருள் ஏகி னானே. ௯௪

1513 தாளுடைத் தடங்கொள்செவ்வித் தாமரைப் போதுபோலும்
வாளுடை முகத்தி னாள்தன் வருமுலைத் தடத்தின் வைகி
நாளினும் பெருகு கின்ற நகைமதி யனைய காதற்
கேள்வனைக் கனவிற் காணாள் கிளர்மணிப் பூணினாளே. ௯௫

1514 அரந்தினப் பிறந்த பைம்பொன் அரும்பிய முலையி னாளைக்
கரந்தவன் கங்குல் நீங்கக் கதிர்வளை யணங்கு மென்றோள்
வரந்தருந் தெய்வ மன்னாள் வைகிருள் அனந்தல் தேறிப்
பரந்தெலாத் திசையும் நோக்கிப் பையவே பரிவு கொண்டாள்.

1515 திருமணி குயின்ற செம்பொற் றிருந்துபூங் கொம்பனாள்தன்
கருமணிப் பாவை யன்னான் கரந்துழிக் காண்டல் செல்லாள்
எரிமணி விளக்க மாடத் திருளறு காறும் ஓடி
அருமணி யிழந்தோர் நாகம் அலமரு கின்ற தொத்தாள்.

வேறு

1516 யாண்டை யாய்ஐய அஞ்சினென் ஆருயிர்
ஈண்டு டம்பொழித் தேக வலிக்குமால்
நீண்ட தோளவ னேநிறை யாளிலேன்
தீண்டு வந்தெனத் தேனின் மிழற்றினாள். கூஅ

1517 கனிகொள் காமங் கலந்துயிர் ஒன்றலின்
இனியர் மங்கையர் என்பது கூறுவாய்
பனிகொள் மாமதி போற்பசப் பூரயான்
தனிய ளாவது தக்கது வோசொலாய். கூகூ

1518 கழலும் நெஞ்சொடு கைவளை சோருமால்
சுழலுங் கண்களுஞ் சூடுறு பொன்னென
அழலும் மேனியும் ஆற்ற லென்ஐயவோ
நிழலின் நீப்பருங் காதலும் நீத்தியோ. கoo

1519 திருந்து மல்லிகைத் தேங்கமழ் மாலையான்
புரிந்து சூடினும் பூங்கொடி நுண்ணிடை
வருந்து மால்மட வாய்எனும் வஞ்சநீ
கரிந்து யான்நையக் காண்டலும் வல்லையோ. கoக

1520 தொண்டை வாயிவள் தொய்யில் வனமுலை
கண்டு தேவர் கனிபவென் றேத்துவாய்
வண்டு கூறிய வண்ணம் அறிந்திலேன்
விண்டு தேன்துளிக் கும்விரைத் தாரினாய். கoஉ

வேறு

1521 முலைவைத் ததடத் திடைமுள் கலுறின்
தலைவைத் துநிலத் தடிதை வருவாய்
சிலைவித் தகனே தெருளேன் அருளாய்
உலைவித் தனையென் னுயிர்கா வலனே. கoங

1522 கடல்நித் திலம்வைத் தகதிர்ம் முலையின்
இடன்எத் துணையத் துணையும் எழுதி
உடனொத் துறைவான் உழைவா ரலனேல்
மடனொத் துளதென் னுயிர்வாழ் வதுவே. ௧௦௪

1523 பெறுமன் பினுள்என் பதுபே சினலால்
அறுமன் பினள்என் றறைவா ரிலையால்
இறுமென் பொடிணைந் துணைவேற் கருளி
நறுமென் கமழ்தா ரவனே நணுகாய். ௧௦௫

1524 நனசீ றடிநோ வநடந் துசெலேல்
எனதா வியகத் துறைவா யெனும்நீ
புனைதா ரவனே பொயுரைத் தனையால்
வினையேன் ஒழியத் தனியே கினையே. ௧௦௬

1525 பருமுத் துறையும் பணைவெம் முலையின்
திருமுத் தகலந் திளையா தமையா
எரிமொய்த் தனலும் இகல்வேல் எரிபுண்
மருமத் தனலும் வகைசெய் தனையே. ௧௦௭

1526 புனமா மயிலே பொழிலே புனலே
வனமார் வழையே வரையே திரையே
இனமா மணிசூழ் எரிபூ ணவனைத்
துனயான் பெறுகோ தொழுதேன் உரையீர். ௧௦௮

1527 கொடுவெஞ் சிலைவாய்க் கணையிற் கொடிதாய்
நடுநா ளிரவில் நவைதான் மிகுமால்
நெடுவெண் ணிலவின் நிமிர்தேர் பரியா(து)
அடுமால் வழிநின் றறனே அருளாய். ௧௦௯

1528 கயலால் இவையென் றுகவிழ்ந் துகிடந்(து)
அயலேன் அறியா மையுரைத் ததெலாம்
இயலா ததுவோ இனியேற் கினியீர்
உயலா வதுகண் மலர்காள் உரையீர். ௧௧௦

1529 நெறிநீர் வளையும் நிழல்நித் திலமும்
பொறிநீ ரபுனைந் தெழுதிப் புகழும்
வெறிதா ரவன்எவ் வழியே கினன்நீர்
அறிவீர் உரையீர் அமர்தோ ளிணைகாள். ௧௧௧

1530 இழுதார் சுடர்வேல் இளையான் அகலத்(து)
உழுதீர் உடன்வெம் முலைகாள் வயிரத்
தொழுவாய் விடையைத் தொடர்கிற் றிலிர்என்(று)
அழுதாள் தடமா கவணங் கிழையே. ககஉ

1531 தகைவா டியதன் நிழல்கண் ணுகுநீர்
வகைவா டிவருந் தியழு வதுகண்(டு)
அகையேல் அமர்தோ ழியமேல் அவரோ
பகையா பவரென் றனள்பால் மொழியே. ககந

1532 வெறிமா லைகள்வீழ்ந் துநிலம் புதையப்
பொறிமா லைபுனை நிழல்கா ணலளாய்
நெறிநா டியபோ யினள்நீ டினள்கண்(டு)
எறிவால் வளைகொண் டுவரும் இனியே. ககச

1533 மடமா மயிலே குயிலே மழலை
நடைமாண் அனமே நலமார் கிளியே
உடனா டுமென்ஐ யனையென் றுருகாத்
தொடையாழ் மழலை மொழிசோர்ந் தனளே. ககரு

வேறு

1534 மல்லுறை அலங்கல் மார்பன் பிரிவெனும் எரியுள் வீழ்ந்து
கல்லுறை நாகு வேய்த்தோட் கதிர்மணி முறுவற் செவ்வாய்
வில்லுறை புருவ மாதர் வெந்தனள் கிடப்ப மின்தோய்
இல்லுறை தெய்வம் நோக்கி இரங்கினின் றுரைக்கும் அன்றே.

1535 புண்ணவாம் புலவு வாட்கைப் பொலன்கழற் புனைந்தபைந்தார்க்
கண்ணவாம் வனப்பி னானைக் காமனை கண்ட போழ்தும்
பண்ணவாம் பவளச்செவ்வாய்ப் படாமுலைப் பரவையல்குற்
பெண்ணவா நிற்கு மென்றாற் பிணையனாட் குய்த லுண்டோ.

1536 கடத்திடைக் கவளந்தேனெய் கனியைத்தோய்த் தினிய அற்றத்
தடக்கையாற் கொடுத்துப் புல்லுந் தவழ்மதக் களிறுநீங்கின்
மடப்பிடிக் குய்த லுண்டோ வாலடிக் குஞ்சி சூட்டுங்
கொடைக்கையான்பிரிந்த பின்றைக்கோதையாட்குய்தலுண்டோ.

1437 முயங்கினான் சொன்னவண்டாய் முகிழ்முலைத்தெய்வஞ்சேர
உயங்குவாள் உணர்ந்து கேள்வற் கூனமும் பிரிவும் அஞ்சி
இயங்குவான் நின்ற ஆவி தாங்கினள் என்ப போலும்
வயங்குபொன் ஈன்ற நீல மாமணி முலையி னாளே. கககூ

1538 வஞ்சவாய்க் காமன் சொன்ன மணிநிற வண்டு காள்நீர்
துஞ்சுவேன் துயரந் தீரத் தொழுதகு தெய்வ மாவீர் [றாள்
மஞ்சுதோய் செம்பொன் மாடத் தென்மனை தன்னு ளென்
பஞ்சிமேல் மிதிக்கும் போதும் பனிக்குஞ்சீ றடியி னாளே.

1539 நொந்தெடுக் கலாதுவீங்கும் வனமுலை நுசுப்பிற்றேய்ந்தோர்
பந்தெடுக் கலாத நங்கை பால்கடை வெண்ணெய்ப் பாவை
வெந்துடன் வெயிலுற் றாங்கு மெலிந்துக விளங்கும் வெள்ளி
வந்துவான் இட்டசுட்டி வனப்பொடு முளைத்ததன்றே. கஉக

1540 எரிநுதி யுற்ற மாவின் இளந்தளிர் போன்று மாழ்கிப்
புரிநரம் பிசையிற் றள்ளிப் புன்கணுற் றழுத லாலே
அரிகுரற் கொண்ட பூசல் அகத்தவர்க் கிசைப்ப ஈண்டித்
திருவிரி கோதை நற்றாய் நிப்புதி சேர்ந்து சொன்னாள்.

1541 விழுத்திணைப் பிறந்துவெய்ய வேட்கைவேரரிந்துமெய்ந்நின்
இழுக்கமொன் றானு மின்றி எய்திய தவத்தின் வந்து [(று)
வழுக்குத லின்றி விண்ணோன் வச்சிர நுதியின் இட்ட
எழுத்தனான் தந்த இன்பம் இன்னும்நீ பெறுதி என்றாள்.

1542 பிறங்கின கெடுங்கள் யாவும் புணர்ந்தவர் பிரிவர் பேசின்
இறங்குபு வீழும் மேலா யோங்கிய எண்ணில் யோனிப்
பிறந்தவர் சாவர் செத்தார் பிறப்பவே என்ன நோக்கிக்
கறங்கிசை வண்டு பாடுங் கோதைநீ கவலல் என்றாள். கஉச

1543 எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப் புள்ளி யற்றால்
பிரிவினிற் பிறந்த துன்பம் பெருங்கட லனைய தொன்றால்
உருகிநைந் துடம்பு நீங்கின் இம்மையோ டும்மை யின்றி
இருதலைப் பயனும் எய்தார் என்றுயாம் கேட்டு மன்றே.

1544 மன்னுநீர் மொக்கு ளொக்கும் மானிட ரிளமை இன்பம்
மின்னினொத் திறக்குஞ் செல்வம் வெயிலுறு பனியினீங்கும்
இன்னிசை யிரங்கு நல்யாழ் இளியினும் இனிய சொல்லாய்
அன்னதால் வினையின் ஆக்கம் அழுங்குவதென்னையென்றாள்.

1545 பஞ்சிறை கொண்ட பைம்பொற் கலைபுறஞ் சூழ்ந்து வைத்து
நஞ்சிறை கொண்ட நாகப் படம்பழித் தகன்ற அல்குல்
வெஞ்சிறைப் பள்ளி யாக விழுமுலைத் தடத்து வைகத்
தஞ்சிறைப் படுக்க லாதார் தம்பரி வொழிக என்றாள்.

1546 வாசமிக் குடைய தாரான் வண்டினுக் குரைத்த மாற்றப்
பாசத்தால் ஆக்கப் பட்ட ஆவியள் அல்ல தெல்லாம்
பேசின்ஓர் பிணையல் மாலை பிசைந்திடப் பட்ட தொத்தாள்
தூசுலாம் பரவை யல்குற் றாமணிப் பாவை யன்னாள். கஉஅ

1547 பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதியம் ஒத்து
மெய்யெரி துயரின் மூழ்க விதிர்விதிர்த் துருகி நையும்
மையிருங் குழலி னாள்தன் மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டுங் காணாள் காளையுங் காலிற் சென்றான்.

1548 காழகச் சேற்றுட் டம்பால் கதிர்மணிக் குடத்தின் ஏந்தி [ள்
வீழ்தரச் சொரிவ தேபோல் விளங்கொளித் திங்கட் புத்தே
சூழிருட் டொழுதி மூழ்கத் தீங்கதிர் சொரிந்து நல்லார்
மாழைகொள் முகத்திற் றோன்றி வளைகடல் முளைத்த தன்றே.

1549 ஏறனாற் கிருளை நீங்கக் கைவிளக் கேந்தி யாங்கு
வீறுயர் மதியந் தோன்ற விரைவொடு போய பின்றை
மாறிலாப் பரிதி வட்டம் வருதிரை முளைத்த ஆங்கண்
ஆறுசெ லொருவற் கண்ணல் அணிகலம் அருள லுற்றான்.

வேறு

1550 எவ்வூரீர் எப்பதிக்குப் போந்தீர்நும் மனைவியர்தாம்
எனைவர் மக்கள்
ஒவ்வாதார் தாமெனைவர் ஒப்பார்மற் றெனைவர்நீர்
உரைமின் என்றாற்(கு)
இவ்வூரேன் இப்பதிக்குப் போந்தேனென் மனைவியரும்
நால்வர் மக்கள்
ஒவ்வாதார் தாமில்லை ஒப்பான் ஒருவனென
உரைத்தான் சான்றோன். கஙஉ

1551 ஒப்பான் ஒருமகனே நால்வர் ஒருவயிற்றுட்
பிறந்தான் என்ன
நக்கான் பெருஞ்சான்றோன் நம்பிபோல் யாருலகில்
இனியார் என்ன

மிக்கான் உரைப்பதுவும் மிக்கதே போலுமால்
வினவிக் கேட்பேன்
தக்காய் குறித்த துரையென்றான் தானுரைப்பக்
கேட்கின் றானே. கருரு

1552 நற்றானஞ் சீலம் நடுங்காத் தவமறிவர்
சிறப்பிந் நான்கும்
மற்றாங்குச் சொன்ன மனைவிய ரிந்நால்வர்
வயிற்றுட் டோன்றி
உற்றான் ஒருமகனே மேற்கதிக்குக் கொண்டுபோம்
உரவோன் தன்னைப்
பெற்றார் மகப்பெற்றார் அல்லாதார் பிறர்மக்கள்
பிறரே கண்டீர். கருசா

1553 படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்மெய்
பனிப்ப நோற்றிட்(டு)
உடனாக ஐம்பொறியும் வென்றார்க் குவந்தீதல்
தான மாகும்
திடனாகத் தீந்தேனுந் தெண்மட்டும் உயிர்க்குழாம்
ஈண்டி நிற்றற்(கு)
இடனாகும் ஊனுமிவை துறத்தலே சீலமென்(று)
உரைத்தார் மிக்கார். கருரு

1554 ஓவா திரண்டுவவும் அட்டமியும் பட்டினிவிட்
டொழுக்கங் காத்தல்
தாவாத் தவமென்றார் தண்மதிபோல் முக்குடைக்கீழ்த்
தாதை பாதம்
பூவே புகைசாந்தஞ் சுண்ணம் விளக்கிவற்றாற்
புனைதல் நாளும்
ஏவா இவைபிறவும் பூசனையென் றீண்டிய நூல்
கரைகண் டாரே. கருசு

1555 இந்நால்வர் துணைவியராக் காதல் மகனிவனை வுடையார் போகிப்
பொன்னார மார்பிற் புரந்தரராய்ப் பூமி முழுதும் ஆண்டு
மன்னாகி முக்குடைக்கீழ் வாமன் சிறப்பியற்றி வரம்பி லின்பம்
பின்னா விளைவித்துப் பிறவா வுலகெய்தல் பேச லாமே.

1556 மட்டார்பூம் பிண்டி வளங்கெழு முக்குடைக்கீழ் மாலே கண்டீர்
முட்டாதஇன்பப் புதாத்திறக்குந் தாளுடையமூர்த்திபாதம்
எட்டானும் பத்தானும் இல்லாதார்க் கிவ்வுலகிலின்பமேபோல்
ஒட்டாவே கண்டீர் வினையவனைத் தேருதார்க் குணர்ந்தீ ரன்றே.

1057 வேற்றுவ ரில்லா நுமரூர்க்கே செல்லினும்
வெகுண்டீர் போல
ஆற்றுணாக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே
யல்லீர் போலும்
கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட்
செல்லும் போழ்தின்
ஆற்றுணாக் கொள்ளீர் அழகலால் அறிவொன்றும்
இலிரே போலும். ௧௩௯

1558 அளைவது காமம் அடுநறவும் நெய்யொழுகும்
ஊனும் பின்னு
விளைவது தீவினையே கண்டீர் இவைமூன்றும்
விடுமின் என்றால்
தளையவிழ் கோதையார் தாமஞ்சேர் வெம்முலைபோல்
வீங்கிக் கண்சேர்ந்(து)
உளைய உறுதி யுரைப்பாரை யோர்பாவம்
உணரா ரேகாண். ௧௪௦

1559 இழுதன்ன வெண்ணிணத்த செந்தடிக்கே யேட்டைப்பட்
டிரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தார் ஒட்டை மரச்செவியர்
கேளார் பால்போன்(று)
ஒழுகி யமுதூறும் நல்லறத்தை ஓர்கிலர்ஊன்
செய்கோட் டக்குக்
கழுகுண்ணா வள்ளூர மேசுமந்து புள்ளிற்கே
புறஞ்செய் கின்றார். ௧௪௧

1560 கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணாள்
அதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே யென்கின்றீர் ஆங்கதற்குப்
பருவ மன்றென்

செய்கோ எனச்சிறந்தாள் போற்றிறவாக் கட்டுரையாற்
குறித்த எல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே கொடுத்துண்டல்
புரிமின் கண்டீர். கசசஉ

வேறு

1561 பனிமதி பொழிகதிர் பருகும் ஆம்பல்போல்
முனிமதி முகத்தியர் முறுவல் நம்பினர்
துனிவளர் கதிகளுட் டோன்றி நாடகங்
கனியநின் றுடுவர் கடையில் காலமே. கசசங

1562 நிழல்நிமிர் நெடுமதி நிகரில் தீங்கதிர்ப்
பழனவெண் டாமரை பனிக்கு மாறுபோற்
குழல்நிமிர் கிளவியார் கோலம் அஞ்சினர்
தொழுநிமிர்ந் தமரராய்த் துறக்கம் ஆள்வரே. கசசச

வேறு

1563 இன்னவா றுறுதி கூறி எரிமணி வயிரம் ஆர்ந்த
பொன்னவிர் கலங்க ளெல்லாம் பொலிவொடு புகன்று நீட்டிச்
சென்மின்நீரென்று கூற வலங்கொண்டு தொழுது சென்றான்
வில்மரீஇ நீண்ட தோளான் வெயிற்கடம் நீந்த லுற்றான்.

7. கனகமாலையார் இலம்பகம்

1564 இரங்கு மேகலை யல்குல் இன்கனித் தொண்டையந் துவர்வாய்
அரங்கக்கூத்திகண் அன்பின் மனையவட் டுறந்துசெல் பவர்போற்
பரந்த தீம்புனல் மருதம் பற்றுவிட் டினமயி லகவு [தான்.
மரங்கொல் யானையின் மதநா றருஞ்சுரம் அவன்செலற் கெழுந்

1565 கலவ மாமயி லெருத்திற் கடிமலர் அவிழ்ந்தன காயா
உலக மன்னவன் திருநாள் ஒளிமுடி யணிந்துநின் றவர்போற்
பலவும் பூத்தன கோங்கம் பைந்துகில் முடியணிந் தவர்பின்
உலவு காஞ்சகி யவர்போற் பூத்தன மரவமங் கொருங்கே.

1566 ஓங்கு மால்வரை வரையா டுழக்கலின் உடைந்துகு பெருந்
தாங்கு சந்தனந் தளரத் தழுவி வீழ்வன தகைசால் [தேன்
ஆங்கண் மாலுல களப்பான் ஆழி சங்கமொ டேந்தி
தேங்கொள் மார்பிடைத்திளைக்குஞ் செம்பொ னரமொத் துளவே.

1567 வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரைபெரும்
ஊழ்ந்துதோலுரிப் பனபோ லொத்த மற்றவற் றருவி [பாம்(பு)
தாழ்ந்து வீழ்ந்தவை முழவிற் றதும்பின மதுகரம் பாடச்
சூழ்ந்து மாமயில் ஆடி நாடகந் துளக்குறுத் தனவே. ௪

1568 கருவி தேனெனத் தூங்குங் கதிரணி யிறுங்கொடு தினைசூழ்
பொருவில்யானையின்பழுப்போற் பொங்குகாய்க்குலையவரை
அருவி ஐவனங் கரும்பும் அடக்கருங் கவைக்கதிர் வரகும்
உருவளட்பய றுழுந்தும் அல்லவும் எல்லையின் றுளவே. ௫

1569 யானை வெண்மருப் புலக்கை யறையுரல் ஐவனம் இடித்த
தேனெய் வாசவற் குவவித் தீங்கனி வாழையின் பழனும்
ஊனை யுண்டவ ருருகும் பசுந்தினைப் பிண்டியும் ஒருங்கே
மானின் நோக்கியர் நோக்கி வழிதொறும் ஈவதவ் வழியே. ௬

1570 குறிஞ்சி யெல்லையின் நீங்கிக்
கொடிமுல்லை மகள்மொழிந் தாடச்
செறிந்த பொன்னிதழ்ப் பைந்தார்க்
கொன்றையஞ் செல்வற்குக் குரவம்

அறிந்து பாவையைக் கொடுப்பத்
தோன்றி அஞ்சுடர் ஏந்தி
நிறைந்த பூங்குருந் துகுதேன்
நீர்பெய் தார்த்தன சுரும்பே. எ

1571 அரக்குண் பஞ்சிகள் திரட்டி அருமணி மரகதப் பலகைப்
பரப்பி யிட்டன போலக் கோபங்கள் பயிர்மிசைப் பரவ
உரைத்த மென்தயிர்ப் பித்தைக் கோவலர் தீங்குழல் உலவ
நிரைக்கண் மாமணி கறங்க நீள்நிலங் கடந்தனன் நெடியோன். அ

1572 வள்ளி வாரிய குழியின் வளர்பொன்னும் வயிரமும் இமைக்குஞ்
சுள்ளி வேலியின் நீங்கித் துறக்கம்புக் கிடுமெனச் சூழ்ந்து
வெள்ளி வெண்டிரள்விசித் து நிலத்தொடு தறிபுடைத் தவைபோல்
துள்ளி வீழுய ரருவி வனகிரி தோன்றிய தவணே. கூ

1573 அண்ணல் தான்செலு முன்னல் அணிமலர்ப் பூம்பொழி லதனுள்
வண்ண மாச்சுனை மாநீர் மணிதெளித் தனையது ததும்பித்
தண்ணென் தாமரை கழுநீர் நீலந் தாதவிழ் ஆம்பல்
எண்ணில் பன்மலர்களுளி இனவண்டு பாண்முரன் றுளதே.

வேறு

1574 கானத்தின் ஏகு கின்றான் கடிபொழிற் கவின்கண் டெய்தித்
தானத்தில் இருக்க லோடுங் தையலா ளொருத்தி தானே
வானத்தின் இழிந்து வந்த வானவர் மகளும் ஒப்பாள்
நானமும் பூவுஞ் சாந்தும் நாறவந் தருகு நின்றாள். கக

1575 குறிஞ்சிப்பூங் கோதை போலுங்
குங்கும முலையி னாள்தன்
நிறைந்தபொற் கலாபந் தோன்ற
நெடுந்துகில் விளிம்போன் றேந்திச்
செறிந்ததோர் மலரைக் கிள்ளித்
தெறித்திடாச் சிறிய நோக்கா
நறும்புகைத் தூது விட்டு
நகைமுகங் கோட்டி நின்றாள். கஉ

1576 அணிகல அரவத் தாலும் அமிழ்துறழ் நாற்றத் தாலும்
பணிவருஞ் சிங்க நோக்கிற் பணையெருத் துறழ நோக்கி

மணிமலர் நாகஞ் சார்ந்து வழையொடு மரவ நீழற்
றுணிவருஞ் சாயல் நின்றாள் தோன்றல்தன் கண்ணிற் கண்டான்.

1577 கண்டவன் கண்ணின் நோக்க நடுங்கித்தன் காதிற் றாழ்ந்த
குண்டலஞ் சுடர வொல்கிக் கொடிநடுக் குற்ற தொப்ப
நுண்துகிற் போர்வை சோர நுழைமழை மின்னின் நிற்ப
எண்திசை மருங்கும் நோக்கி இயக்கிகொல் இவள்மற் றென்றான்.

1578 எண்ணத்தில் இயக்கி யென்றே யிருப்பமற் றெழுத லாகா
வண்ணப்பூங் கண்கள் அம்பா வாணுதற் புருவம் வில்லா
உண்ணிறை யுடைய எய்வான் உருவச்சா தகத்துக் கேற்பப்
பெண்ணலங் கிடந்த பேதை பெண்ணலங் கனிய நின்றாள்.

1579 முறுவல்முன் சிறிய தோற்று முகைநெறித் தனைய வுண்கட்
குறுநெறி பயின்ற கூந்தல் குறும்பல்கா லாவிக் கொள்ளாச்
சிறுநுதற் புருவம் ஏற்றுச் சேர்துகிற் றானை சோர
அறியுந ராவி போழும் அநங்கனங் கணையும் எய்தாள். கசு

1580 வடுப்பிள வனைய கண்ணாள் வல்லவன் எழுதப் பட்ட
படத்திடைப் பாவை போன்றாள் நோக்கின ளாகி நிற்ப
அடிப்பொலிந் தார்க்குஞ் செம்பொன் அணிமணிக் கழலினான் அம்
மடத்தகை குறிப்பு நோக்கி மனத்திது சிந்திக் கின்றான்.

வேறு

1581 கடிமாலை சூடிக் கருப்பூரம் முக்கித்
தொடைமாலை மென்முலையார் தோள்தோய்ந்த மைந்தர்
கடைமாலை மற்றவரே கண்புதைப்பச் செல்லும்
நடைமாலைத் திவ்வுலகம் நன்றரோ நெஞ்சே. கஅ

1582 நாவி அகலம் எழுதி நறுநுதலார்
ஆவி தளிர்ப்ப அவர்தோள்மேற் றுஞ்சினார்
தூவி யொழிபுள்ளிற் றோன்றித் துயருழப்பக்
காவிநெடுங் கண்புதைத் தாங்ககல்வர் நெஞ்சே. ககூ

1583 இன்புகை யார்ந்த இழுதார்மென் பள்ளிமேல்
அன்புருகு நல்லா ரவர்தோள்மேற் றுஞ்சினார்
தம்புலன்கள் குன்றித் தளரத்தங் காதலார்
அன்புருகு கண்புதைத் தாங்ககல்வர் நெஞ்சே. உ०

வேறு

1584 என்பினை நரம்பிற் பின்னி உதிர்ந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந்தோலைப்போர்த்து மயிர்புறம் பொலியவேய்ந்திட்(டு)
ஒன்பது வாயி லாக்கி ஊன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்சன் நல்லன் மயங்கினர் மருள என்றான். உக

1585 வினைப்பெருந் தச்சன் நல்லன் மெய்ம்மைநாம் நோக்க லுற்றால்
எனக்குற்றுக் கிடந்த தென்றாங் கிருகணும் புதைத்து வைக்கும்
நினைப்பினாற் பெரியு ரென்னான் நீந்தினர் கலைக ளென்னான்
மனத்தையுங் குழையச் செத்தும் மாண்பினன் மாதோ என்றான்.

1586 என்றவன் இருப்ப மாதர் என்வர விசைப்பி னல்லால்
ஒன்றுமற் றருகல் செல்லான் என்றெடுத் தோது கின்றாள்
மன்றலென் தோழி மாருள் வனத்திடைப் பண்ணை யாடக்
குன்றிடைக்குளிர்க்கு மின்போற் குழாமறை முகட்டிற்செல்வான்.

1587 மயிலினம் இரிய ஆங்கோர் மடமயில் தழுவிக் கொண்ட
வெயிலிளஞ் செல்வன் போல விஞ்சையன் எற்கொண் டேகத்
துயிலிய கற்பி னாள்தன் துணைவிகண் டிடுவித் திட்டாள்
அயிலியல் காட்டுள் வீழ்ந்தேன் அநங்கமா வீணை யென்பேன்.

1588 தாயிலாக் குழவி போலச் சாதுயர் எய்து கின்றேன்
வேயுலாந் தோளி னார்தம் விழுத்துணைக் கேள்வ நிற்கண்(டு)
ஆயினேன் துறக்கம் பெற்றேன் அளித்தரு ளாது விட்டால்
தீயினுள் அமிர்தம் பெய்தாங் கென்னுயிர் செகுப்பல் என்றாள்.

1589 மணியெழு அனைய தோளும் வரையென அகன்ற மார்பும்
தணிவருங் கயத்துப் பூத்த தாமரை அனைய கண்ணும்
பணிவரும் பரிதி யன்ன முகமுமென் றயர்ந்து காமப்
பிணியெழுந் தவலிக் கின்ற பேதைநீ கேளி தென்றான். உகூ

1590 போதொடு நானம் மூழ்கிப் பூம்புகை தவழ்ந்து முல்லைக்
கோதைகண் படுக்குங் கூந்தல் குரைவளி பித்தோ டையே
ஏதஞ்செய் மலங்கள்நெய்த்தோர் இறைச்சியென்பீ ருள்மூளை
கோதஞ்செய் குடர்கள் புன்தோல் நரம்பொடுவழும்பிதென்றான்.

1591 விழுக்கொடு வெண்ணஞ் சல்லா
உகிர்மயிர் உமிழ்கட் பீளைப்
புழுப்பயில் குரம்பை பொல்லாத்
தடிதடிக் கிடந்த போழ்தின்
விழித்துயார் நோக்கு கிற்பார்
பிள்ளையார் கண்ணுட் காக்கை
கொழிப்பரும் பொன்னிற் றோன்றுங்
கொள்கைத்தாற் கொடியே யென்றான். ௨௮

1592 உருவமென் றுரைத்தி யாயின் நிறைந்ததோற் றுருத்தி தன்னைப்
புருவமுங் கண்ணும் மூக்கும் புலப்பட எழுதி வைத்தால்
கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம [றான்.
எரியெழ விகற்பித் திட்டார் இறைச்சிப்போர் இதனை யென்

வேறு

1593 காதல் மாமன் மடமகளே கருங்குழல்மேல் வண்டிருப்பினும்
ஏத முற்று முரியுநுசுப் பென்றென் றான் இயல்பேத்துவேன்
ஓதம் போல உடன்றுடன்று நையநீ யொண்டாமரைக்
கோதை போல்வா யொளித்தொழிதல் கொம்பே குணனாகுமே.

1594 வண்ணத் திங்கள் மதிமுகத்த வாளோ கருங்கயல்களோ
உண்ணுங் கூற்றோ ஒளிவேலோ போதேர் உணர்கலேனால்
பண்ணின் தீஞ்சொலாய் படாமுலைப் பாவாய் கொடியேபாங்கின்
உண்ணுந் தேனே யமிர்தேயென் இன்னுயிரே எங்கணாயோ.

1595 இலவம் போதேர் எழிற்றகைய சீறடிகள் அஞ்சியொல்கிப்
புலவன் சித்திரித்த பொற்சிலம்பு நகப்பூ நிலத்துமேல்
உலவும் போழ்து மென்னாவி மலர்மேல் மிதித்தொதுங்குவாய்
கலவ மஞ்ஞை யனையாய்கட் காத லொழிக லேனால். ௩௨

1596 பணிசெ யாயத்துப் பந்தாடு கின்றாயைக் கண்டுமாழ்கிப்
பிணிசெய் நோயேன் யான்கிடப்பப் பிறர்வா யதுகேட்டலுந்
துணிக போது மெனவிடுத்தாய் போந்தேன் துயருழப்பநீ
மணிசெய் மேகலை யாய்மாற்றந் தாராய் மறைந்தொழிதியோ. ௩௩

1597 இயக்கி நின்னோ டிணையொக்கும் என்று நலஞ்செகுப்பான்
மயக்கிக் கொண்டுபோய் வைத்தாய்என் மாதரைத் தந்தருளுநீ
நயப்ப வெல்லாந் தருவலெனத் தொழுது நல்யானைதன்
வயப்பிடி கெடுத்து மாழாந்த தொப்ப மதிமயங்கினான். ௩௪

1598 மல்லற் றொல்வளத்து மத்திம
நன்னாட்டு வண்டாமரை
புல்லும் பேரூர்ப் புகழ்த்தத்தன்
காதற் சினதத்தைக்குஞ்
செல்வ நாமற்குஞ் சித்திரமா
மாலைக்குஞ் சுற்றத்தார்க்கும்
அல்லல் செய்தேன் அவண்சென்றால்
என்னுரைக்கேன் என்செய்கேனே. ௩௫

1599 உண்ணு நீர்வேட் டுசைந்தேனென வுரைப்பக் காட்டுள்நாடி
நண்ணிப் பொய்கை தலைப்பட்டு நற்றா மரையிலையினுட்
பண்ணி நீர்கொண்டு வந்தேன் படாமுலைப் பாவாயென்(று)
அண்ணல் ஆற்றா தழுதழுது வெந்துருகி நைகின்றானே.

1600 குழைகொள் வாள்முகத்துக் கோல்வளையைக்
காணான் குழைந்தழுகின்ற
அழகன் சொல்லு மணிசெய்கோதை
காமமுங் கண்டுங்கேட்டும்
முழவுத் தோளான் முறுவலித்
தீங்கே யிருநீயென்(று)
இழைவச் சொல்லி யிளையான்
இளையானை யெய்தினானே. ௩௭

1601 என்னை கேளீர் என்னுற்றீர் என்னபெயரீர் என்றாற்குப்
பொன்னங்குன்றிற் பொலிந்ததோள் நம்பியொரு பொற்பூங்கொடி
என்னுநீ ராளை யீங்கேகெடுத் தேன்என பாவத்தாற்
பன்னூற் கேள்வி யுடையேன்யான் பவதத்த னென்பேனென்றான்.

வேறு

1602 கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கும் நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்
புகழுமாம் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர்
இரங்குவ தென்னை யென்றான். ௩௯

1603 அன்புநா லாக இன்சொல் அலர்தொடுத் தமைந்த காதல்
இன்பஞ்செய் காமச் சாந்திற் கைபுனைந் தேற்ற மாலை
நன்பகற் சூட்டி விள்ளா தொழுகினும் நங்கை மார்க்குப்
பின்செலும் பிறர்கணுள்ளம் பிணையனார்க் கடிய தன்றே. ௪௦

1604 பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை யுடைய வல்ல ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப்பத் தங்கை யிட்டால் இந்திரன் மகளு மாங்கே [றே.
வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போல் மெலிந்துபின் நிற்கு மன்

1605 சாமெனிற் சாதல் நோதல்
தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப்
பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை என்றுஞ் சொல்லார்
கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார்
சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார். ௪௧

1606 அன்னள்நின் தோழி யையா அவளென்னைக்கண்டகண்ணாற்
பின்னைத்தான் பிறரை நோக்காப் பெருமட மாது தன்னை
என்னையான் இழந்து வாழு மாறென இரங்கி னானுக்(கு)
அன்னளோ என்று நக்கான் அணிமணி முழவுத் தோளான்.

வேறு

1607 இனையல் வேண்டாஇம் மந்திரத்தை யோதியோர் வில்லேவள(வு)
அனைய எல்லை சென்றால் இயக்கி கொணர்ந்தருளுமீ [தலும்
புனைசெய் கோல்வளையைக் கைப்படுதி யென்றாங் கவன்போ
அனைய மாதரைக் கண்டாங் கடிபுல்லி வீழ்ந்தாற்றினான்.

1608 பட்ட வெல்லாம் பரியா துரைத்தான் அவளுங்கேட்டாள்
விட்டாள் ஆர்வம் அவன்கண் இவன்மேல் மைந்துறவினால்
மட்டார் கோதை மனை துறந்தாள் மைந்தனும் மங்கைமேலே
ஒட்டி விள்ளா ஆர்வத்த னாகி யுருவம்ஒழிந்தான். ௪௫

வேறு

1609 மெழுகு செய்படம் வீழ்முகில் மத்தகத்(து)
ஒழுகும் வெள்ளரு வித்திர ளோடைசூழ்ந்(து)

இழுகு பொன்மதத் தின்வரைக் குஞ்சரம்
தொழுது வேய்முதற் றாசங்கொண் டேறினன். ௪௬

1610 நிரைத்த தீவினை நீங்க நெடுங்கணார்
வரைக்கண் ஏறலின் வாலரிப் பொற்சிலம்(பு)
உரைத்து மின்னிருள் மேற்கிடந் தாலுமொத்(து)
அரைத்த லத்தகம் ஆர்ந்ததொர் பாலெலாம். ௪௭

1611 சரிந்துங் கோதையுந் தண்ணறுஞ் சுண்ணமும்
ஆய்ந்த பூம்புகை யும்அவி யுஞ்சுமந்(து)
ஏந்து பொன்விளக் கேந்தி யிடம்பெறு
மாந்தர் சும்மை மலிந்ததொர் பாலெலாம். ௪௮

1612 துறந்த மன்னர்தம் தூமுடி தோள்வளை
நிறங்கொள் ஆரம்பைம் பூணிழற் குண்டலம்
பிறங்கு வெங்கதிர் மின்னொடு பின்னிவீழ்ந்(து)
உறங்கு கின்றன போன்றவொர் பாலெலாம். ௪௯

1613 கருவித் தேன்கலை கையுறக் கீண்டுடன்
மருவிப் பைங்கறி வாரிப் பழந்தழீஇ
வெருவி நாகம் பிளிற்ற விரைந்துராய்
அருவி நின்றதி ரும்மொரு பாலெலாம். ௫௦

1614 வெங்க திர்க்கட வுள்வியன் தேர்வரைத்
தங்கு சந்தனக் கோட்டிடைப் பட்டெனப்
பொங்கு மான்குளம் பிற்குடை பொற்றுகள்
மங்கு லாய்த்திசை யாவையும் மல்கின்றே. ௫௧

1615 சுனைய நீலமுஞ் சுள்ளியுஞ் சூழ்மலர்
நனைய நாகமுங் கோங்கமும் நாறிணர்ச்
சினைய சண்பகம் வேங்கையொ டேற்றுபு
முனைவன் மேற்றுதி முற்றெடுத் தோதினன். ௫௨

வேறு

1616 முனிமை முகடாய மூவா முதல்வன்
தனிமைத் தலைமை தனதுதான் என்ப
தனிமைத் தலைமை தனதுதான் என்றுற்
பனிமலர் தூய்நின்று பழிச்சாவா றென்னே. ௫௩

1617 மலரேந்து சேவடிய மாலென்ப மாலால்
அலரேந்தி அஞ்சலிசெய் தஞ்சப் படுவான்
அலரேந்தி அஞ்சலிசெய் தஞ்சப் படுமேல்
இலரே மலரெனினும் ஏத்தாவா றென்னே. ௫௪

1618 களிசேர் கணையுடைய காமனையுங் காய்ந்த
அளிசேர் அறவாழி அண்ணல்இவன் என்பர்
அளிசேர் அறவாழி அண்ணல் இவனேல்
விளியாக் குணத்துதிநாம் வித்தாவா றென்னே. ௫௫

வேறு

1619 இன்னணம் ஏத்தி இறையடி கைதொழு(து)
அன்னம் உறங்கும் அணிவரை மேல்நின்று
பொன்னனங் கழலான் இழிந்து பொழிமழை
மின்னின் நடந்து மிகுசுரஞ் சென்றான். ௫௬

1620 மாலைக் கதிர்வேல் மலங்க மணிமலர்க்(கு)
ஓலை விடுகண் உருகு கொடியிடை
ஏலங் கமழ்குழல் ஏழை யவரன்ன
ஆலைக் கரும்பின் அகநா டணைந்தான். ௫௭

வேறு

1621 வழைச்சறு சாடிமட் டயின்று மள்ளர்தாங்
கழைக்கரும் பெறிந்துகண் ணுடைக்கும் எந்திரம்
மழைக்குர லெனமயில் அகவ வார்செந்நெற்
புழைக்கடைப் புனல்அலைத் தொழுகும் பொற்பிற்றே. ௫௮

1622 தாமரை மலர்தலை யெடுத்துத் தண்கமழ்
தூமலர்க் குவளைகால் அணைத்துத் தோலடிக்
காமரு பெடைதழீஇ அன்னங் கண்படுந்
தேமலர்த் தடந்தழீஇத் திசைகள் மல்கின்றே. ௫௯

1623 கண்பயில் இளங்கமு கெருத்திற் காய்பரீஇக்
கொண்டிள மந்திகள் எறியக் கோட்டிடைத்
திண்கனி முசுக்கலை சிதறுந் தேம்பொழில்
மண்டமர் கடந்தவன் மகிழ்வொ டேகினான். ௬௦

1624 களிறுமாய் கதிர்ச்செநெற் கழனி நாட்டிடை
ஒளிறுவேல் நரபதி நகரம் ஒழ்பியெனப்
பிளிறுவார் இடிமுர சார்ப்பப் பெய்கழல்
வெளிறிலாக் கேள்வியான் விருப்பொ டெய்தினான். ௬௧

1625 புறநகர் மணமகன் ஒருவன் போதர்வான்
இறைமகன் வினாயினான் என்ன பேரவே
துறைவளர் நாட்டொடு நகரஞ் சொல்லென
அறிகவென் றலரிவாய் கமழக் கூறினான். ௬௨

1626 மத்திம தேசமா நாடு மற்றிந்நாட்(டு)
எத்திசை நிதியமும் இறைகொண் டில்லவர்க்(கு)
உய்த்தும்ஊர் கொடுப்பவர் ஏம மாபுரம்
இத்திசைக் கையநீ புதியை போன்மென. ௬௩

1627 அன்னதே யென்றலின் அடிசிற் காலமால்
என்னொடு பேசினாய் தவிர்மற் றீங்கெனப்
பொன்னகர்ப் புக்கபின் அறிவல் போகென்றான்
வில்மரீஇ வாங்கிய வீங்கு தோளினான். ௬௪

1628 புணர்மருப் பியானையின் புயல்கொள் மும்மதம்
மணமகள் கதுப்பென நாறு மாநகர்த்
துணைமலர்க் கண்ணியுஞ் செம்பொன் மாலையும்
இணைமலர்த் தாரினான் இடறி யேகினான். ௬௫

1629 வண்டுகொப் புளித்துணும் மாலை மார்பனைக்
கண்டுவப் பளித்தவர் கடைக்கண் ஏக்கற
மண்டபப் பளிக்கறை மருங்கின் மாநிழல்
கொண்டவற் களித்ததோர் குளிர்கொள் பொய்கையே.

வேறு

1630 வண்சிறைப்பவளச்செவ்வாய்ப்பெடையன்னமடமைகூரத்
தண்கய நீருட் கண்ட தன்னிழல் பிறிதென் றெண்ணிக்
கண்டனங் கள்வ மற்றுன் காதலி தன்னை நீர்க்கீழ்ப்
பண்டையம் அல்லம் வேண்டா படுக்கவென் றாடிற் றன்றே.

1631 செயிர்ப்பொடு சிவந்து நோக்கிச் சேவலின் அகலச் சேவல்
அயிர்ப்பதென் நின்னை யல்லால் அறியலே னன்றி மூக்கின்

உயிர்ப்பதுன் பணியி னாலே ஊடல்நீ யென்று பல்காற்
பயிர்ப்பறச் சிறகிற் புல்லிப் பணிந்துபாண்செய்த தன்றே.

1632 கலையுணர் மகளிர் நெஞ்சிற் காமத்திற் கனிந்த ஊடல்
நிலையுணர் மைந்தர் நீக்கி நெறியினாற் புணர்ந்த தொப்ப
அலர்மிசைப்பெடையின் ஊடல் அன்புகொள்சேவல்நீக்கிக்
குலவிய புணர்ச்சி நோக்கிக் குன்றனான் சிந்திக் கின்றான்.

1633 தன்னையான் முகத்தைநோக்கிற் றன்முலை முகத்தை நோக்கும்
பின்னையான் பலவும்பேசிற் றானென் றுமிழற் றும்பைம்பூட்
பொன்னவாஞ்சுணங்குபோர்த்த்பொங்கிளமுலையினாளென்
முன்னையாள் போன்றுதத்தை முகத்துளேதோன்றுகின்றாள்.

வேறு

1634 பரிவுற் றாற்பய னின்றியும் பாவைமார்
முரிவுற் றார்களின் மூர்ச்சனை செய்பவாற்
பிரிவிற் றோன்றிய பேரன் பெனப்படும்
எரியின் மூழ்கி இறந்து படுங்கொலோ. ௭௧

1635 வாளி யம்பன வாட்டடங் கண்ணிதன்
தோளும் மென்முலைப் பாரமுந் தொன்னலம்
நாளும் நாளினும் நைந்துநைந் துள்சுடப்
பூளை மெல்லணை மேற்புர ளுங்கொலோ. ௭௨

1636 உருகி வாடியென் னுற்றது கொல்எனக்
கருகி வாடிய காமரு கோதைதன்
இருகண் நீரும் இடைமுலை பாய்ந்துகக்
குருகு மேய்தட மாகஅ ழுங்கொலோ. ௭௩

1637 வண்டு வாழ்பயில் கோதை மணமுதற்
கண்ட ஞான்றுதன் கண்ணெனுங் கைகளால்
நொண்டு கொண்டு பருகிய நோக்கமொன்(று)
உண்டென் ஆவி உருக்கி யிடுவதே. ௭௪

1638 காத லாள்உட லுள்ளுயிர் கைவிடின்
ஏதம் என்னுயி ரெய்தி யிறக்குமற்(று)
ஆத லாலழி வொன்றிலள் அல்லதூஉம்
மாதர் விஞ்சையும் வல்லவள் அல்லளோ. ௭௫

1639 காதல் மிக்குழிக் கற்றவுங் கைகொடா
ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்
தாது துற்றுபு தங்கிய வண்டனுர்க்(கு)
ஏதம் இற்றென எண்ணுமென் னெஞ்சரோ. எசு

1640 நறவெங் கோதையர் நன்னலங் காதலான்
மறவெங் காமத்து வந்துற்ற தீவினைப்
பறவைத் தேர்நர கத்துப் பதைக்குங்கால்
அறிவ னல்லதங் கார்சர ணுகுவார். எஎ

1641 வேட்கை யூர்தர் விம்முற வெய்திய
மாட்சி யுள்ளத்தை மாற்றி மலர்மிடை
காட்சி யின்பொய்கைக் காமர் நலனுண்டு
மீட்டும் அங்கிருந் தான்விடை யேறனன். எஅ

வேறு

1642 நேரார் நேரும் நீள்நிதி துஞ்சுங் நிறைகோயில்
ஆரா வெம்போ ராய்தட மித்தன் அரசற்கும்
நாரார் கற்பின் நாகிள வேய்த்தோள் நளினைக்குஞ்
சீராற் றேன்றிச் செல்வமொ டெல்லாந் திருத்தக்கான். எகூ

1643 விண்டார்த் தேய்க்கும் வெம்பரி மான்தேர் விசயன்என்(று)
உண்டாய் நின்றான் தன்புகழ் ஊழி உலகேத்த
வண்டார் சோலை மாமணம் நாறப் புகுகின்றான்
கண்டான் சேர்ந்தான் காளையைக் கல்விக் கடலானே. அ௦

1644 இங்நாட் டிவ்வூர் இவ்விடம் எய்தார் இவண்வாழ்வார்
எங்நாட் டெவ்வூர் எப்பெய ராய்நீ உரையென்றற்(கு)
அங்நாட் டவ்வூர் அப்பெய ரல்லாப் பெயர்சொன்னன்
பொய்ங்நாட் டேனும் பொய்யல வாற்றுற் புகழ்வெய்யோன்.

1645 வாமான் திண்தேர் வள்ளலும் உள்ளம் மிகைகொண்டெங்
கோமாற் குப்பெண் கொள்பயன் மிக்கான் கொலைவேலான்
ஏமா றில்லா இந்திர னேயும் இவனெவ்வான்
போமா றுய்வென் பொற்பொடு கூடும் வகையென்றான்.

1646 பூங்கழ லானைப் புண்ணிய நம்பி முகம்நோக்கி
ஈங்கிது நின்னு டிப்பதி நின்னூர் இதுநின்இல்

வீங்கிய திண்டோள் வெல்புக ழாய்நின் கிளையென்றாற்(கு)
ஆங்கது எல்லாம் அண்ணலும் நேர்ந்தாங் கமைகென்றான்.

வேறு

1647 மன்னவன் சிறுவன் ஆங்கோர் மாங்கனி உண்ண லுற்று
மின்னவிர் கணையிற் பல்காற் பிழைப்பெய்து மீண்டு நிற்பப்
பொன்னவிர் கழலி னான்அப் பொருசிலை கணையின் வாங்கி
இன்னமிர் தூறு கின்ற இருங்கனி யறவெய் திட்டான். அசு

1648 எய்தஅக் கணையும் மாவின் இருங்கனி யதுவும் பூமிக்(கு)
எய்தஅச் சிலையின் எல்லை அணுகலும் ஏந்தல் நோக்கி
எய்தஅவ் விடத்து நின்றே எய்தஅத் தடக்கை கொண்டாற்(கு)
எய்தச்சென் றையன் ஆரத் தழுவிக்கொண் டிதனைச் சொன்னான்.

1649 வண்சிலை கொண்ட வாறும் வார்கணை தொடுத்த வாறுங்
கண்கணை வைத்த வாறுங் கற்செய்தோள் இருந்த வாறுந்
திண்சரம் விட்ட வாறுஞ் சென்றுகோல் போந்த வாறுங்
கண்டெலாம் வியந்து நோக்கி வில்லுடைக் கடவு ளென்றான்.

1650 மராமரம் ஏழும் எய்த வாங்குவிற் றடக்கை வல்வில்
இராமனை வல்லன் என்ப திசையலாற் கண்ட தில்லை
உராமனம் இவன்க ணின்றி உவக்குமா செய்வல் என்று
குராமலர்க் காவின் நீங்கிக் கோயிலே கொண்டு புக்கான். அஎ

1651 வழிவரல் வருத்தம் ஓம்பி வயிரப்பூண் அணிந்த மார்பன்
அழிகவுள் யானை வேந்தற் கவன்திறம் அறியச் சொன்னான்
மொழியெதிர் விரும்பி மன்னன் முரிவிற் றடக்கை யாற்குக்
கழிபெரு முகமன் கூறிக் காதலங் காளை யென்றான். அஅ

1652 கிலுத்தங்கூர்ப் பரங்க ளென்னும் இரண்டினுட் கிலுத்தஞ் சார்ந்து
நலத்தகு விரல்கள் ஐந்தின் இம்பர்மூ விரலின் நீளஞ்
சிலைத்தழும் பியானைத் தோலில் நூற்றுரை சிறுமீன் ஒத்த
இலக்கணக் கிடக்கை கண்டே ஏவினுக் கரசன் என்றான்.

1653 அண்ணலஞ் சிலைவ லாருள் அமோகமா ஆசா னிற்பின்
விண்ணகு வெள்ளி வெற்பின் விஞ்சையர் உலகின் அல்லால்
மண்ணகத் தில்லை யென்பார் வாயினை மடங்க வந்தான்
புண்ணகத் துறையும் வேலான் எனப்புகழ்ந் தரசன் சொன்னான்.

1654 விற்றிறல் நம்பி தேற்றுன் விருந்தினன் இவனு மன்றி
மற்றுமோர் நால்வ ருள்ளார் மாண்பினுல் வளர்ந்த தில்லை
கொற்றம்நீ கொடுக்கல் வேண்டுங் குறையெனக் குரிசில் நேர்ந்தான்
அற்றைநா ளாதி யாக அவர்களும் பயிற்று கின்றுர். கூகூ

வேறு

1655 கழலிற் செந்தா மரையடிகள் புல்லித்தங் காதல்கூர
நிழலின் நீங்கார் நினைத்தன நினைப்பின் அமைவான் ஆக்கி
அழலிற் சாரா தகலாதொழுக வொருநாள் அவன்போகிப்
பொழிலின்மிக் கதனிற் புக்கான்மண மகளிர்போலப் பொலிந்ததே.

1656 பாசிப்பா சத்துப் பைம்பொன்
நிரைத்தாலி பூத்தவேங்கை
மாசில்வெண் துகிலை நீர்தோய்த்து
மேற்போர்த்த வண்ணமேபோற்
காசின்மட் டொழுகப் பூத்தஅழிஞ்சில்
கண்ணுர் கவின்கொண்டன
பேசிற்செந் தலைய வெண்கறைய
புன்கம் பொரியணிந்தவே. கூ௩

1657 கோடு தைவாக் குழிசியோ டாரங் கொளக்குயிற்றிய
ஓடு தேர்க்கால் மலர்ந்தன வகுளம் உயர்சண்பகங்
கூடு கோழிக் கொழுமுள் அரும்பின அங்கோசிக
ஆடை பூத்தன பாதிரி வெண்கடம்பு பந்தணிந்தவே. கூச

1658 வெருகு வேட்பச் சிரிப்பனபோல்
முகைத்த முல்லைவெய்ய
அரவு பைத்தா வித்தன்ன
அங்காந்தள் அவிழ்ந்தலர்ந்த
குரவங் கொண்ட குறும்பூழ்போற்
கொழுங்கால் முகைசுமந்த
குருதிக் கூரெயிறு கூத்தியர்கட்
கொண்ட கொடித்தளவமே. கூரு

1659 சொன்னநன் மலரும் அல்லனவும் வீழ்பலவின் சூழ்சுளைகளும்
நன்மை நூலின் நயந்தோன்ற நன்பொன்விர லின்நுதியினுற்
பன்மணியு முத்தும் பவளமும் பைம்பொன்னும் கோத்தாலொப்ப
என்ன அமரரும் மருளத் தொடுத்தான் இனமாலையே. கூகூ

1660 ஊனுண் சிங்கக் குழவி எயிற்றே ரொளிஎயிற்றினன்
தேனுண் போதிற் பிணையலும் பந்தும் புனைந்து தேமார்ந்த
நானந் தோய்த்து நனைகலவை நாறு மதந்தெளித்தபின் [ள்.
பானுண் தீஞ்சொல்லா ளோர்படுவி வண்டார்ப்ப வந்திறைஞ்சின

1661 நெடிய வாட்கண்கள் வாயா
இமைப்பெனுஞ் சொல்லின்மற்றெங்
கொடியிற் கொத்தஇவை யென்றாள்
நம்பியுங் கொள்களென்றான்
வடுவும் வேலும் மலருங்
கயலும் வனப்பழித்தகண்
அடியஞ் சிலம்பினாட் குய்த்திறைஞ்சிக்
காட்ட அவள்கொண்டாள். ௬௮

1662 கொண்டு கோதை மலரெழுத்துமெல்
விரலின்மேற் றாங்கிநோக்கும்
வண்டு சேர்ந்த குழலாள்
வருமுலைகள் பாயவண்டார்
விண்டு தேன்துளிப்ப வேற்றடங்கண்
தாமாடு நாடகங்
கண்டு வாழாதவர் வாழ்க்கையெல்லாஞ்
சவரர் வாழ்க்கையே. ௬௯

1663 ஆம்பல் நாறும் அரக்கார் பவளவா யார்அமுதன்னார்
பாம்பு பைத்தாங் கனைய பவழப்பட வரவல்குலார்
தாம் பலரு மருட்ட அகில்தவழுந் தண்பூவணைக் [வே.
காம்பின் மென்தோள் கவின்வளர வைகல் கலப்பென்ப

1664 ஆகந் தானேர் மணிப்பலகை யாகமுலைகள் நாயாகப்
போகக் கேற்ற புனைபவழ அல்குல் கழகமாக
ஏக இன்பக் காமக் கவறாடல் இயைவதன்றேல்
ஆக நோற்றிட் டடங்கல் ஆண்மைக் கழகென்பவே.

வேறு

1665 பின்னி விட்ட பிடித்தடக்கை
யிரண்டு போன்று திரண்டழகார்
கன்னிக் கலிங்கம் அகிலார்ந்து
கவவிக் கிடந்த குறங்கினாள்

மின்னுக் குழையும் பொற்றோடும்
மிளிர எருத்தம் இடங்கோட்டி
என்னும் இமையாள் நினைந்திருந்தாள்
இயக்கி யிருந்த எழிலொத்தாள். ௧௦௨

1666 கொடுவெஞ் சிலையைக் கொளையமைத்துக்
கோதிநீர்ப் பகழி கொளவாங்கிக்
கடுவெங் குறவன் எயப்பட்ட
கன்னிப் பிணையின் நிலைகலங்கித்
தொடிதோள் நடப்பத் தோள்தேம்பத்
துணைவெம் முலைகள் பசப்பூர
நெடுமாத் தோகை மென்சாயல்
நெஞ்சிற் கிவ்வா றுரைக்கின்றாள். ௧௦௩

1667 ஒன்றே எயிற்ற தொருபெரும்பேய்
உலகம் விழுங்க அங்காந்து
நின்றாற் போல நிழலுமிழ்ந்து
நெடுவெண் திங்கள் எயிறிலங்க
இன்றே குருதி வானவாய்
அங்காந் தென்னை விழுங்குவான்
அன்றே வந்த திம்மாலை
அளியேன் ஆவி யாதாங்கொல். ௧௦௪

1668 வருந்தி யீன்றாள் மறந்தொழிந்தாள்
வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள்
முருந்தின் காறுங் கூழையை
முனிவார் நின்னை என்முனிவார்
பொருந்திற் றன்றால் இதுவென்னாய்
பொன்றும் அளித்திவ் வுயிரென்னாய்
இருந்து சோலைக் கருங்குயிலே
சிலம்ப இருந்து கூவுதியால். ௧௦௫

1669 பெருவெண் திங்கள் மாலகப்பூ
மலைந்து பெட்ப நகுகின்ற(து)
உருவு கொண்ட குரலன்றில்
உயிர்மேல் ஆம்பல் உலாய்நிமிரும்

ஒருபெண் பாலேன் யானாக
உலக மெல்லாம் பகையாகி
எரிகோன் றீன்ற இலைப்பலிபோல்
இருத்தி யால்என் இன்னுயிரே. ௧௦௬

1670 வேம்என் நெஞ்சம் மெய்வெதும்பும்
விடுக்கும் ஆவி வெய்துயிர்க்கும்
பூமென் குழலார் புறநோக்கி
நகுவார் நகுவ தாயினேன்
தாம மார்பன் தான்புனைந்த
தண்ணென் மாலை புணையாக
யாமக் கடலை நீந்துவேன்
யாரு மில்லாத் தமியேனே. ௧௦௭

1671 செம்பொற் கடம்பன் செவ்வேலுங்
காமன் சிலையிற் றொடுத்தலர்ந்த
அம்பும் வென்ற வரிநெடுங்கண்
அம்மா மதிவாள் முகத்தினாள்
வம்பு பூத்து முருகுலாய்த்
தேன்கொப் புளித்து நின்றதோர்
கொம்பு வெந்தீ யிடைப்பட்ட
தொத்தாள் விரைசெய் கோதையே. ௧௦௮

வேறு

1672 மணிநிற மாமை சாயல் வளையொடு வண்டு மூசும்
அணிநிறப் போர்வை யாய அரும்பெறல் நாணும் விற்றுப்
பணிநலம் புதிய துண்டான் பன்மலர் மாலை கொண்டேன்
பிணிநிறப் புறஞ்சொ லென்னும் பெருமிஞி றார்ப்பஎன்றாள்.

1673 காதலான் காதல் போல அகன்றுநீண் டலர்ந்த வாட்கட்
போதுலாங் கோதை மாதர் புனைந்தலர் தொடுத்த மாலை
ஆதலால் அலர தாகா தொழியுமே அழுங்கல் என்று
மாதுலாம் மழலைச் செவ்வாய் மடக்கிளி மொழிந்த தன்றே.

வேறு

1674 என்னையுள் ளம்பிணித் தென்நலங் கவர்ந்தவீர்ந் தாரினான்
தன்னையா னும்பிணிப் பேனெனத் தன்மணிச் செப்பினுள்

முன்னுமாலைகொடுத் தவனுக்குத் தீயெனத் தொழுதுகொண்(டு)
அன்னமென்ன வொதுங்கிச்சிலம்பரற்றச்சென் றணுகினாள்.

1675 அணுகிமுன் நின்றஅ நங்கவி லாசினி அங்கைகூப்பிப்
பிணையல்நீட் டப்பெருந்தகையஃ தேலான் முகம்நோக்கலுந்
துணையில்தோ கையென்நங் கைக்குத் தொங்கல்தொடுப் பாயும்நீ
மணிசெய் மென்தோள் மருந்துநீ ஆருயிரும் நீயேயென்றாள்.

வேறு

1676 மன்னர் கோயில் உறைவார் பொறிசெறித்த மாண்பினரே
என்ன அஞ்சினா யென்றவனை நக்காட்கஃ தன்றுகோதாய்
இன்ன கொள்கையேற் கேலா தென்ன இலங்கெயிற்றினாள்
அன்ன மன்ன நடையினாள் தான்வருந்து மெனநேர்ந்தான்.

1677 குலிக மார்ந்த கொழுந்தாமரை யன்ன வண்கைநீட்டி
ஒலியல் ஏற்றான்இஃ தூழ்வினையால் உள்ளஞ் சுடுமாலென்ன
விலைகொள் பைம்பூண் இளமுலையாள் போகிக் கனகமாலை
மெலிய வெம்பி நைகின்றாள் உய்யும் வகைதொடங்கினாள்.

1678 நீர்செய் காந்த மணிக்கூந்தளம் பாவை நீண்டழகிய
வேர்செய் சாந்திற் கழுநீர் விரைகமழும் பூக்கள்கோத்த
வார்செய்தண் தாமரை வளையமை வரையின் வெள்ளருவிநீர்
சீர்செய் கோமகளைச் சேர்த்தினாள் சீதஞ்செய்யா தொழிந்தனவே.

1679 பவ்வத் தங்கட் பிறந்துபனி பெயர்க்குந்தண் ணாற்றதாகி
எவ்வ மன்னர் படஉலகம் விற்கும் அருமணியினைச் [ம்
செவ்வன் நூலிற் சித்திரிக்கப் பட்டதனைச்சேர்த்திப்பின்னு
மவ்வல் நாறுங் குழலாட்கு மற்றும் இவைகள்நாடினாள். ககசூ

1680 களிசெய் கோசிக நீர்விழக் கடிமாலை மேல்தொடர்ந்துகீழ்
நளிசெய் தண்பூஞ் சலஞ்சயன மாக்கிநன் னீர்பிலிற்றும்வாய்க்
குளிர்கொள்சாந் தாற்றிபொன்னால வட்டங்கொண் டேந்திவீசச்
சளிகொள்சந்தின் கொழுஞ்சாந்தம் ஆகமெங்கும் மெழுகினாளே.

1681 கொம்மை வெம்முலையிற் சாந்தங் குளிர்செயா தாவிவாட்ட
அம்மென் மாலை முகங்கரிய நீர்துளும்ப நின்றுநீடி
வெம்மை மிக்கது வீரன் தொடுத்த விளங்குமாலை
பொம்ம லோதிக்குத் தானே துணையாம் புணையாயிற்றே.

1682 வாச நீலங் கழுநீர் குவளை படைசாற்றிவந்(து)
ஓச னைக்க ணுடையும் நெடுங்கட் கனகமாலை
தாசிது தாகத் தாமம் புணையாகச் செல்லுநாளுட்
காசில் கல்விக் கடலைக் கரைகண்டார் காளைமாரே. ௧௧௯

வேறு

1683 பொருசரஞ் சலாகை வெய்ய புகன்றனர் துரக்கு மாறும்
வருகணை விலக்கு மாறும் வாளமர் நீந்து மாறும்,
கருவியுட் கரக்கு மாறுங் கணைபுறங் காணு மாறும்
விரியமற் றவர்க்குக் காட்ட வீற்றிருந் தவருங் கற்றார். ௧௨௦

1684 வேலுடைத் தடக்கை யார்கள் வேழமேற் சென்ற போழ்திற்
காலிடைக் கரக்கு மாறுங் கையிடைத் திரியு மாறும்
வாலிடை மறியு மாறும் மருப்பிடைக் குளிக்கு மாறும்
நூலிடைக்கிடந்தவாறே நுனித்தவன் கொடுப்பக் கொண்டார்.

1685 கொடிநெடுந் தேரின் போருங் குஞ்சரங் குறித்த போருங்
கடுநடைப் புரவிப் போருங் கரப்பறக் கற்று முற்றி
இடனறிந் திலங்கும் வைவாள் இருஞ்சிலை குந்தம் மூன்றும்
உடனறிந் தும்ப ரார்க்கும் உரைப்பருந் தகைய ரானார்.

1686 தானையு ளன்றி நின்ற தனியிடம் ஒற்றி மன்னர்
தானைமேற் சென்ற போழ்தும் வென்றியிற் றளர்த லின்றித்
தானையைஉடைக்கும்வெம்போர்த் தருக்கினார்மைந்தரென்று
தானைசூழ் மன்னற் குய்த்தார் மன்னனுந் தருக என்றான்.

1687 மழையொடு சூழ்ந்து கொண்ட வான்துகள் சிலையின் நீக்கிக்
குழைமுக நெற்றி நக்கக் கோலவிற் பகழி வாங்கி
இழைபகஇமைப்பின்எய்திட் டெறிந்துமின்திரிவவேபோல்
விழைவுறு குமரர் புக்குச் சாரியை வியத்த ரானார். ௧௨௪

1688 விசயனே விசயன் விற்போர்க்
கதம்பனே முருகன் வேற்போர்த்
திசையெலாம் வணக்கும் வாட்போர்க்
கந்தணன் செம்பொ னாமன்
அசைவிலான் யானைத் தேர்போர்க்
கசலனே அசல கீர்த்தி
வசையிலான் புரவிச் சேனனென்
றியாவரும் புகழப் பட்டார். ௧௨௫

1689 காவலன் மக்கள் ஆக்கங் கண்டுகண் குளிர்ந்து நோக்கி
ஏவலான் அரச னொன்றோ இருபிறப் பாளர் அல்லார்க்(கு)
ஆவதன் றின்ன மாட்சி அவனையான் நிகளம் பெய்து
காவல்செய்திடுவல்வல்லே காளையைக்கொணர்மின்என்றான்.

1690 கல்வியுங் கொடிது போலுங் காவலன் காளை தன்னை
ஒல்லலன் சிறைசெய் கின்றான் என்றவன் கருதிற் றோரார்
பல்சனம் பரிந்து நிற்பப் பார்த்திப குமரன் சேர்ந்தான்
வில்வலாற்கொண்டுவேந்தன் வேறிருந்திதனைச் சொன்னான்.

1691 புண்முழு திறைஞ்சுங் கோட்டுப்
பொருகளி றனைய தோன்றல்
மண்முழு தன்றி வானும்
வந்துகை கூடத் தந்தாய்
கண்முழு துடம்பிற் பெற்றேன்
காளைகைம் மாறு காணேன்
பண்முழு துடற்றுஞ் தீஞ்சொற்
பாவைநின் பாலள் என்றான். கஉஅ

1692 முடிகெழு மன்னன் சொல்ல
மொய்கொள்வேற் குரிசில் தேற்றான்
வடிவமை மனனொன் றாக
வாக்கொன்றா மறுத்த லோடுந்
தடிசுவைத் தொளிறும் வேலான்
தன்கையால் முன்கை பற்றி
இடிமுர சனைய சொல்லால்
இற்றெனச் செப்பு கின்றான். கஉ௯

1693 பூவியல் கோயில் கொண்ட பொன்னனா ளனைய நங்கை
காவியங் கண்ணி வந்து பிறத்தலுங் கணிகள் ஈண்டி
மூவியல் திரித லின்றிச் சாதகம் முறையிற் செய்தார்
ஏவியல் சிலையி னாய்க்கே உரியளென் றுரைப்ப நேர்ந்தான்.

1994 வாருலா முலையி னாட்கும் வரிசிலைத் தடக்கை யாற்கும்
சீருலாங் கோலஞ் செய்தார் செப்பினார் வதுவை நன்னாள்
பாரெலாம் அறிய நின்று படாமுர சார்ப்பத் தீவேட்(டு)
ஏருலாங் கோதை யின்பத் திளநலம் பருகு கின்றான். க௩க

1695 மோட்டிளங் குரும்பை யன்ன முலைக்கடாக் களிறு முத்தஞ்
சூட்டிய ஓடை பொங்க நாணெனுங் தோட்டி மாற்றி.
ஆட்டிய சாந்த மென்னும் முகபடாம் அழித்து வெம்போர்
ஓட்டற ஓட்டிப் பைந்தார் உழக்கியிட் டுவந்த அன்றே.

1696 ஒண்மணிக் குழைவில் வீச ஒளிர்ந்துபொன் ஞாலை மின்ன
வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான்சிலம் பொலிப்ப முத்துங்
கண்ணியும் பசும்பொன் நாணுங் கதிர்முலை புடைப்பக் காமர்
அண்ணலங் குமரன் தன்னோ டாயிழை யாடி னாளே. ௧௱௩

1697 மூசுதேன் வாரி யல்குற் பட்டபின் முலைகளென்னும் [ட்கண்
மாசறு கந்தின் மென்தோள் மணித்தொடர்க் கொளுத்தி வா
ஆசறு வயிரத் தோட்டி நுதலணிந் தமுதச் செவ்வாய்
காசறு கவள மாகக் களிறுகோட் பட்ட தன்றே. ௧௱௪

1698 ஒப்பிணை தனக்கி லாதான் உறுவரை யகல மூழ்கிச்
செப்பிணை யனைய செங்கேழ் வனமுலை பொருது சேப்பக்
கற்பக மரத்தைப் புல்லிக் கைவிடா தொழிந்து காமத்
துப்புர வுமிழுங் காம வல்லியின் தோற்றம் ஒத்தாள். ௧௱௫

1699 காய்வுறு வேட்கை தன்னாற் கங்குலும் பகலும் விள்ளான்
வேய்வெறுத் தமைந்ததோளாள் விழுத்தின ரமுதமென்று
சேய்நலங் கடந்த செல்வன் திருநலந் தெளித்திட் டாற்ற[ள்.
வாய்விடாள் பருகியிட்டாள் மடக்கிள்ளை மருட்டுஞ்சொல்லா

1700 திரையிடைக் கொண்ட இன்னீ ரமுதுயிர் பெற்ற தென்னும்
உரையுடைக் கோதை மாதர் ஒளிநலம் நுகர்ந்து நாளும்
வரையுடை மார்பன் அங்கண் வைகினன் என்ப மாதோ
கரைகட லனைய தானைக் காவலன் காத லானே. ௧௱௭

1701 வாளினால் மிடைந்த கண்ணாள் வருமுலைத் தடத்துள் வைகித்
தோளினால் மிடைந்து புல்லித் தொண்டைவாய் அமுதம் மாந்திக்
காளைசெல் கின்ற நாளுட் கட்டியங் காரன் மூதூர்
மீளிவேற் குரிசிற் குற்றூர்க் குற்றது விளம்ப லுற்றேன்.

1702 வெண்மதி யிழந்த மீன்போல் விடலைக்குத் தம்பி மாழாந்(து)
ஒண்மதிச் சூழ்ச்சி மிக்கான் உள்ளுழி யுணர்தல் செல்லான்
புள்மிதித் திடைந்த போது பொழிந்தமட் டொழுகு நன்னாட்(டு)
உள்மதி வருந்த நாடி ஒளிநகர் எய்தி னானே. ௧௱௯

1703 வெள்ளிவெண் மலைக்கு வேந்தன் ஒருமகள் வேற்கட் பாவை
ஒள்ளிழை யவளைக் கேட்பான் உறுவலி செல்லும் ஆங்கண்
வள்ளிதழ்க் கோதை தானே யிட்டதோர் வண்ணந் தன்னைக்
கொள்ளத்தான் முரல லுற்றுக் கோலமை வீணை கொண்டாள்.

1704 ஆடகச் செம்பொன் ஆணி ஆன்நெய்வார்ந் தனைய திண்கோல்
மாடகம் நொண்டு கொண்டு மாத்திரை நிறைய வீக்கிச்
சூடகம் அணிந்த முன்கைத் தொகுவிரல் சேப்ப எற்றித்
தோட்டலர் கோதை கீதந் துணிவினிற் பாடு கின்றாள். கசக

வேறு

1705 இறுமருங்குல் போதணியின் என்றினைந்து கைபின்
நறுமலர்கள் சிந்துவார் நண்ணார் துறந்தார்
நண்ணார் துறப்ப நனிவளையுந் தோள்துறப்பக்
கண்ணோவா முத்துறைப்பத் தோழி கழிவேனே. கசஉ

1706 பூமாலை சூடிற் பொறையாற்றா நுண்மருங்குல்
ஏமாரா தென்றினைவார் எண்ணார் துறந்தார்
எண்ணார் துறப்ப எழில்வளையுந் தோள்துறப்ப
மண்ணார்வேற் கண்துயிலா தோழி மருள்வேனே. கசங

1707 வண்டூத அம்மருங்குல் நோமென்று பூமாலை
கொண்டோச்சுங் காதலார் கூடார் துறந்தார்
கூடா ரவர்துறப்பக் கோல்வளையுந் தோள்துறப்பத்
தோடார்பூங் கண்துயிலா தோழி துயர்வேனே. கசச

வேறு

1708 ஊன்தகர்த் திட்ட போன்றும் ஊடெரி முளைப்ப போன்றுந்
தோன்றுபூ இலவத் தங்கண் தொகையணில் அனைய பைங்காய்
கான்றமென் பஞ்சி யார்ந்த மெல்லணை யாழ்கை நீக்கித்
தேன்தயங் கிணர்பெய் கோதை சிந்தையில் நீட்டி னாளே.

வேறு

1709 நுண்ணிய வரியொடு திரண்டு நோக்குநர்
கண்மனங் கவற்றிய காமர் தொண்டைவாய்
அண்ணலை நினைந்துவெய் துயிர்ப்ப ஆய்நலம்
வண்ணத்தின் மழுங்கிவாட் கண்ணி வாடினாள். கசரு

1710 மின்தவழ் மணிவரை மாலை மார்பனைப்
பொன்தவழ் இளமுலை பொருது புல்லுநாள்
என்றுகொல் எனநினைந் திருந்த செவ்வியுட்
சென்றனன் சீவகற் கிளைய செல்வனே. கசஎ

வேறு

1711 ஐவிலின் அகல நின்றாங் கடிதொழு திறைஞ்சி னாற்கு
மைவிலை பெற்ற கண்ணாள் மைந்தனை மருண்டு நோக்கிக்
கைவிலுங் கணையு மில்லாக் காமன்போ லிருக்க என்ன
மொய்வெல்லுங் குருதி வேலான் மூவிற்கண் இறைஞ்சி நின்றான்.

1712 திங்கள்வாண் முகமும் நோக்கான் திருமுலைத் தடமும் நோக்கான்
அங்கதிர்க் கலாபம் மின்னும் அணியல்குற் பரப்பும் நோக்கான்
செங்கயற் கண்ணி னாள்தன் சீறடிச் சிலம்பு நோக்கி
எங்குளார் அடிகள் என்னா இன்னணம் இயம்பி னானே.

1713 பொறிகுலாய்க்கிடந்த மார்பிற் புண்ணியன்பொன் றினானேல்
வெறிகுலாய்க் கிடந்த மாலை வெள்வளை முத்தம் நீக்கி
நெறியினால் நோற்ற லொன்றோ நீளெரி புகுத லொன்றோ
அறியலென் கொழுநன் மாய்ந்தால் அணிசுமந் திருப்ப தென்றான்.

1714 காய்தழல் கவரப் பட்ட கற்பக மரத்திற் கன்றி
ஆய்கழற் குரிசில் வாடி அற்புத்தீ யழலுள் நிற்ப
வாய்மொழிந் துரைக்க லுற்றாள் வளைகுழற் கற்றை வண்தார்த்
தோய்பிழி துளிக்குங் கண்ணிச் சுரும்புசூழ் கொம்ப னாளே.

1715 மதுமுகத் தலர்ந்த கோதை மாற்றம்மைந் தற்கு ரைப்பாள்
கொதிமுகக் குருதி வைவேற் குரிசிலோ நம்மை உள்ளான்
விதிமுக மணங்கள் எய்தி வீற்றிருந் தின்பம் உய்ப்ப
மதிமுகம் அறியும் நாமே வாடுவ தென்னை யென்றாள். கருஉ

1716 வேண்டிய தெமக்கு நேரின் வில்வலாய் நுமைய னாரைக்
காண்டியென் றுரைப்பக் காளை எழுமையும் அடிமை நேர
மாண்டதோர் விஞ்சை ஓதி மதிமுகந் தைவந் திட்டாள்
நீண்டது பெரிது மன்றி நினைத்துழி விளக்கிற் றன்றே.

1717 பொற்புடை அமளி யங்கட் பூவணைப் பள்ளி மேலாற்
கற்பக மாலை வேய்ந்து கருங்குழற் கைசெய் வானை

முற்படக் கண்டு நோக்கி முறுவல்கொள் முகத்த ஞகி[ருன்.
விற்படை நிமிர்ந்த தோளான் தொழுதுமெய் குளிர்ந்து நின்

வேறு

1718 செய்த விஞ்சையைத் தேமொழி மாற்றலும்
மையல் நெஞ்சொடு வண்டிமிர் தாரினுன்
பொய்ய தன்மையிற் பூங்கழ லானடிக்(கு)
எய்து கேன்அரு ளாயென் றிறைஞ்சினுன். கடுரு

1719 மதுக்கை மாலையும் வண்டிமிர் சாந்தமும்
புதுக்கச் சார்ந்தபொன் வாளுஞ் சுரிகையும்
கதுப்பின் நானமுங் காமர் கலங்களும்
பதிக்கண் தம்மெனப் பாவையும் ஏவினுள். கடுசு

1720 மணியின் மேற்புறம் போர்த்தன்ன மாக்கதிர்
துணிய வீசுங் துளங்கொளி மேனியன்
பணியிற் பல்கலங் தாங்குபு சென்றபின்
அணிசெய் கோதையங் காமினி ஓதினுள். கடுஎ

1721 சாந்தி னுல்மெழு கித்தட மாமலர்
ஆய்ந்த தாமங்கள் நாற்றி அகிற்புகை
ஏந்தி யிட்டிளே யாரொடு நீங்கினுள்
காந்தி வண்டுணுங் கற்பகக் கோதையே. கடுஅ

1722 தூமம் ஆர்ந்த துகிலணைப் பள்ளிமேற்
காமன் தம்பியிற் காளை கிடந்தபின்
ஏம மாபுரத் திட்டதோர் மாதெய்வம்
நாம நல்லொளி நந்தனே யென்பவே. கடுசு

1723 மின்னும் பூணும் மிளிர்கதிர் ஆரமும்
பொன்னும் பூத்ததொர் கற்பகப் பூமரம்
அன்ன காளை யமர்துயில் தேறினுன்
மன்னும் வெஞ்சுடர் மாக்கல் இவர்ந்ததே. கசு௦

வேறு

1724 செய்யவாய் நெடிய கண்ணுள்
செல்கெனப் பணிக்கப் பட்ட
வெய்யவாட் டடக்கை வீரன்
இருத்தலும் விசயன் என்பான்

கையவாஞ் சிலையி னானைக்
கண்டுவந் தருகு சேர்ந்தான்
பையவாய்ப் பரந்த அல்குற்
பாவையர்க் கமிர்தம் அன்னான். கசுக

1725 தெய்வமே கமழு மேனித் திருவொளி கலந்த மார்பின்
ஐயநீ யாரை யென்றாற் கவனுரை கொடாது விட்டான்
பையவே பெயர்ந்து போகிப் பனிமலர்க் கோதை மார்பின்
மையலங் களிறு போலும் மைத்துனற் கிதனைச் சொன்னான்.

1726 சந்தனக் களியும் பூவுந் தமனியக் குடத்துள் நீருங்
கெந்தநா றகிலும் முத்துங் கிளரொளி விளக்கும் ஏந்தி
அந்தில்விற் பயிற்றுந் தானம் வழிபட ஆங்குச் சென்றாள்
மந்திர மடந்தை யன்னாள் வசுந்தரி வந்து சொன்னாள்.

1727 ஆரகிற் சேக்கை நீங்கி வெறுநிலத் தடிகள் தாமே
நீரதிற் கிடந்த தென்கொல் என்றுயான் நினைந்து போகிச்
சேர்துணை கழறச் சென்றேன் செல்வியோ டாங்குக் கண்டேன்
போர்பல கடந்த வேலோய் மாயங்கொல் போற்றி என்றாள்.

1728 கணைகடி கண்ணி சொல்லக் காணிய யானுஞ் சென்றேன்
மணியிலங் கொண்பொன் வைவாள் கேடக மருங்குவைத்த
இணைகடி சிய மன்னன் இளமையும் வனப்பும் ஏரும் [ன்.
துணையமை வடிவுஞ் சொல்லின் நிற்பொறி யொற்றிக்கொண்டா

1729 நீண்டதோள் நெடிய செங்கண் நீலமாய்ச் சுரிந்த குஞ்சி
பூண்டதோ ளார மேனிப் பொன்னுரைத் திட்ட தொக்குங்
காண்டகு காதிற் றாழ்ந்த குண்டலங் குவளைப் பைந்தார்
ஆண்டகை அழகன் யார்கொல் அறியலென் அவனை யென்றான்.

1730 இனத்திடை ஏறு போலும் எறுழ்வலி யுரைத்த மாற்றம்
மனத்திடை மகிழ்ந்து கேட்டு மைந்தன்நந் தட்டனேயாம்
புனத்திடை மயில னாளாற் பொருளுரை பெற்று வந்தான்
எனத்தவி ராது சென்றாங் கெய்தினன் என்ப அன்றே.

1731 கருமுகிற் பொடித்த வெய்யோன் கடலிடை நடப்பதேபோல்
திருமுகஞ் சுடர நோக்கிச் சீவகன் சென்று சேர்ந்தான்
தருமனை யரிதிற் கண்ட தனஞ்சயன் போலத் தம்பி
திருமலர்த் தடக்கை கூப்பிச் சேவடி தொழுது வீழ்ந்தான்.

1732 தாமரைத் தடக்கை கூப்பித் தாள்முதற் கிடந்த தம்பி
தாமரைத் தடத்தை யொத்தான் தம்முனும் பரிதி யொத்தான்
தாமரைக் குணத்தி னானை மும்முறை தழுவிக் கொண்டு
தாமரைச் செங்க ணானுந் தன்னுறு பரிவு தீர்ந்தான். கசுகூ

1733 என்னுறு நிலைமை யோரா தெரியுறு தளிரின் வாடிப்
பொன்னுறு மேனி கன்றிப் போயினீர் பொறியி லாதேன்
முன்னுற இதனை யோரேன் மூரிப்பேர் ஒக்கல் எல்லாம்
பின்னுறு பரிவு செய்தேன் பேதையேன் கவலல் என்றான்.

1734 ஆக்கமுங் கேடும் உற்றீர் அடிகளே அல்லீர் மேலைப்
பூக்குலாம் அலங்கல் மாலைப் புட்கொடி யாற்கும் உண்டே
வீக்குவார் முலையி னார்போல் வெய்துயிர்த் துருகி நைய
நோக்கினீர் என்னை யென்றான் நுதியழற் குட்டம் ஒப்பான்.

1735 குரவரைப் பேண லின்றிக் குறிப்பிகந் தாய பாவம்
தரவந்த பயத்தி னல்இத் தாமரைப் பாதம் நீங்கிப்
பருவருந் துன்பம் உற்றேன் பாவியேன் என்று சென்னி
திருவடி மிசையின் வைத்துச் சிலம்பனொந் தழுதிட் டானே.

1736 பரிந்தழு கின்ற தம்பி பங்கயம் அனைய செங்கண்
பொருந்துப் துடைத்து வேண்டா புலம்புதல் காளையென்று
மருந்தனாள் உறையுங் கோயில் மடுத்துடன் கொண்டு புக்கான்
அருந்ததிக் கற்பி னாளை அடிபணிந் தவனுங் கண்டான்.

1737 கொழுநனைக் குறிப்பி னாலே குமரன்யா ரென்று நோக்கக்
கழுமிய கற்பி னாய்நின் மைத்துனன் ஐய னென்ன
எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்றம் என்றாள்
கொழுமலர்த் தடங்கட் செவ்வாய்க் குவிமுலைக் கொம்பனாளே.

1738 குடவரை யனைய மார்பிற் குங்குமம் எழுதிக் கோல
வடவரை வைரச் சாதி வாலொளி கலந்த பைம்பூண்
தடவரை மார்பின் மின்னத் தம்பியோ டமிர்தம் உண்டான்
படஅர வல்கு லாளும் பான்மையால் விருந்து செய்தாள்.

1739 விருந்தவள் செய்த பின்றைத் தம்பியுந் தானும் வேறா
இருந்துழி என்னைக் காணா துற்றதை எவன்கொல் என்று
பொருந்தினார் செய்த தெல்லாம் புரைவிடுத் துரைமோ என்னக்
கருங்கழற் செங்கட் பைந்தார்க் காளையீ துரைக்கின் றானே.

1740 புண்ணுமிழ் குருதி போர்த்த பொருகளம் போன்று தோன்றி
அண்ணலங் கதிரும் அத்த மடைந்துசெவ் வான்கொள் அந்தித்
திண்ணெனக் களத்தின் நீங்கித் தொன்னகர்ப் புறத்துத் தொக்கே
எண்ணுமின் செய்வ தென்றான் பதுமுகன் எரியும் வேலான்.

1741 மின்னென மிளிரும் பைம்பூட் புத்திசேன் வெகுண்டு வெய்ய
கல்நவில் தோளி னானைக் காண்கலே மாயின் இன்னே
மன்னனை வாளி னானே வானகங் காட்டி மூதூர்
தன்னையுஞ் சவட்டிப் போகிச் சாமியைச் சார்தும் என்றான்.

1742 சிலையொடு திரண்ட திண்தோள் தேவமா தத்தன் என்பான்
மலையுடை யுருமிற் சீறி மாற்றலன் உயிரை உண்டல்
இலையுடைக் கண்ணி யீர்க்கிஃ தெளிதுநங் குரிசில் உண்மை
உலைவினோ டின்மை யாராய்ந் தொறுப்பதே துணிமின் என்றான்.

1743 பவ்வத்துப் பிறந்த வெய்ய பரிதிபோற் றிறலி னாற்குத்
தெவ்வரைக் கிழங்கி னோடுந் தின்றுநீ சொன்ன வாறே
எவ்வத்தைத் தணித்தும் என்றான் சிறிதத்தன் என்ன லோடு
மவ்வல மணந்த தண்தார்ப் பதுமுகன் இதனைச் சொன்னான்.

1744 நம்பிநந் தட்டன் கேட்க நங்கட்குக் குரவ ருள்ளார்
தம்பரி வகற்றி யோம்பி நீர்க்கடன் மரபு தாங்கிக்
கம்பஞ்செய் பரிவு நீங்கிக் கற்பிப்பார்க் குவாத்துச் சொல்லார்
இம்பரிவ் வுலக மொப்பாய்க் கென்னையான் உரைப்ப தென்றான்.

1745 ஓம்படை சாற்றற் பால துள்ளவர்க் காகும் அன்றே
ஆம்புடை யென்க ணில்லை அங்கையென் கண்க ளாகத்
தேம்படு தாரி னீர்க்குஞ் செல்வற்குஞ் செய்வ செய்தேன்
காம்படு காட்டுத் தீயிற் கனன்றுடன் எழுக என்றேன். ௧௮௨

1746 கோட்டிளங் குழவித் திங்கள் இரண்டன்ன எயிற்றுக் கோளே
வேட்டதோர் சிங்கஞ் சூழ்ந்த வேங்கையின் இனத்தின் வெய்ய
வாட்படை யெழுந்து வாழ்க சீவகன் என்னும் ஆங்கண்
பாட்டினை யொருவன் எங்கள் பரிவறப் பாடி னானே. ௧௮௩

1747 வருவர்நங் கேள்வர் இன்னே வாள்நுதற் பசலை தீர
உருகிநைந் துடன்று முன்கை வளையுக மெலிய வேண்டா
அருவிமும் மதத்த யானை அதிர்ந்துழிக் காரென் றெண்ணித்
தெரிவில பேதை முல்லை பூத்தன தெளியி தென்றான். ௧௮௪

1748 பாட்டினைக் கேட்ட லோடும் பழம்பகை நட்பு மாமே
ஓட்டியுங் கோறும் அன்றே நம்பிதான் உண்மை பெற்றான்
நாட்டிடம் பரந்து போகி நாடுதும் நாங்கள் என்னா
ஈட்டமும் வேறு மாகி இலைப்புரை கிளைத்திட் டேமே. ௧௮௫

1749 மணிபொதி துகிலிற் றோன்றும் மஞ்சுசூழ் வரைகள் நாடி
அணிநகர் யான்சென் றெய்தி மாலைதன் மனையைச் சேர்ந்தேன்
துணைமலர்க் காந்தள் ஊழ்த்துச் சொரிவபோற் றோன்றி முன்கை
அணிவளை நலத்தோ டேக அங்ஙன மிருந்து நைவாள். ௧௮௬

1750 என்னைக்கண் டடிசில் ஆக்க ஐயர்க்கென் றவலம் நீங்கப்
பொன்னைக்கண் டனைய சாய லவர்புரிந் தடிசி லேந்தத்
துன்னினோ யுற்ற மஞ்ஞைத் தோற்றம்போல் இருந்த நங்கை
பின்னைநாட் குவளை நீர்வீழ் பெற்றிய கண்ண ளாகி. ௧௮௭

1751 அடிகளை யின்றி நீரே உண்ணவும் வல்லீ ரானீர்
கடியிர்நீர் ஐய னீரே எனக்கசிந் துருகிக் காய்பொற்
கொடிதுக ளார்ந்த வண்ணங் குழைந்துமா நிலத்து வீழ்ந்த
பெடைமயிற் சாய லாள்தன் பேதுகண் டாங்கு மீண்டேன்.

1752 செல்வனை யின்று நாடிச் சேவடி தொழுத லொன்றோ
அல்லதிவ் வுடம்பு நீங்க வேற்றுல கடைத லொன்றோ
எல்லையிவ் விரண்டின் ஒன்றை இப்பகல் முடிப்பல் என்னா
மல்லிகைக் கோதை யைம்பால் மலைமகள் மனையைச் சேர்ந்தேன்.

1753 மணியொலி வீணை பண்ணி மாண்டகோல் தடவ மாதர்
அணிமுலைத் தடத்தின் ஒற்றி வெப்பரால் தட்ப மாற்றிப்
பிணைமலர்க் கோதை கீதம் பாடயான் பெரிதும் பேதுற்(று)
இணைமலர்க் கண்ணிக் கொவ்வா இளிவரு கிளவி சொன்னேன்.

1754 சொல்லிய என்னை நோக்கித் துளங்கல்நும் அடிகள் பாதம்
புல்லயான் புணர்ப்ப லென்று பொழுதுபோய்ப் பட்ட பின்றை
எல்லிருள் விஞ்சை ஓதி இவ்வழி இடுவித் திட்டாள்
சொல்லுமின் அடிகள் நீரும் போந்தவா றெனக்கும் என்றான்.

1755 தாதையார் உவப்பச் செய்வான் தாழ்கச்சிற் பிணிப்புண் டைய
போதரா நின்ற போழ்திற் போர்ப்புலிக் குழாத்திற் சீறிக்
காதல்நஞ் சுற்ற மெல்லாங் கையிலங் கெஃகம் ஏந்திச்
சாதலே புரிந்து தோன்றுந் தன்மைஅந் நகரிற் கண்டேன்.

1756 கண்டபின் நின்னைக் காண்பேன் கருவரை உலம்பிப் பல்கால்
விண்டுவும் உடைய வாலின் வெடித்துராய் வெகுண்டு நோக்கா
எண்டிசை யோரும் எள்கக் குஞ்சரம் இரியப் பாயும்
ஒண்டிறற் சிங்க மன்ன கதழொளி யுடற்சி கண்டேன். ௧௬௫

1757 சினந்தலைப் பெருக்கித் தீக்கோள் உறுப்பினைச் சுருக்கித் தீப்போல்
அனன்றுநில் லாத கண்ணால் நிறுத்தின செவியிற் றாகி
முனம்புக அடக்கிப் பின்போந் திருந்துபாய் வரன்அ மைந்த
இனந்தலைப்புலியோ டொக்குந் தோழர்நின் னிடத்திற் கண்டேன்.

1758 கூடநீர் நின்ற பெற்றி கண்டிப்பால் நோக்கு வேற்கோர்
கேடகம் வாளொ டேந்திக் கெடுகஇந் நகரம் என்னா
மாடத்தின் உச்சி நின்ற மலைமகள் தன்மை கண்டே
ஆடவர்க் குழுவை யொப்பாய் அஞ்சினேன் அதன்கண் என்றான்.

1759 பெண்ணிடர் விடுப்ப வாழ்விற்
சாதலே பெரிது நன்றென்(று)
எண்ணினேன் நமர்கள் வீயும்
இயல்பினால் நெருங்கப் பட்டுக்
கண்ணிநான் இயக்கன் தன்னைச்
சிந்தித்தேன் கடவுள் வாழ்த்தி
அண்ணல்வந் தழுங்கத் தோன்றி
ஆங்கென்னைக் கொண்டு போந்தான். ௧௬௬

1760 மந்திர மூன்றுந் தந்து வானவன் விடுப்பச் செல்வேற்(கு)
இந்திர திருவிற் சூழ்ந்த இனமழைக் குழாத்தின் வேழங்
கொந்தழற்காட்டுத்தீயால் வளைப்புண்டகுழாத்தைநோக்கிச்
சிந்தித்துக் கவன்று நிற்பத் திருமழை பொழிந்த தன்றே.

1761 வெல்களிற் றச்சம் நீக்கி விரைவொடு வனத்தின் ஏகிப்
பல்லவ தேயம் நண்ணித் தனபதி யென்னும் மன்னன்
நல்வனப் புடைய தேவி திலோத்தமை பெற்ற நம்பி
செல்வன்மற் றுலோகபாலன் திருமகள் பதுமை யென்பாள்.

1762 அரிகுரற் கோழி நாமத் தரவவட் கடித்த தாகத்
திருவிழை யவளைத் தீர்த்தேன் தீர்விலா நண்பு வேண்டிப்
பொருகளி யானை மன்னன் புனையிழை யவளைத் தந்தான்
இருமதி கழிந்த பின்றை இடையிராப் பொழுதிற் போந்தேன்

1763 ஓவிப்புள் நடையி னாளை வஞ்சித்துத் தக்க நாட்டை
மேவியான் காண லுற்றுச் சார்தலும் இப்ப ருள்ளான்
தூவிப்பொன் மாட மூதூர்ச் சுபத்திரன் என்னைக் கண்டே
ஆவிக்கண் அறிவு போல அளவளா யன்பு பட்டான். ௨00

1764 பண்ணமை தேரின் ஏறி அவனுடையான் இருந்து போகி
விண்ணுயர் செம்பொன் மாடத் திழிந்தவண் விளங்கப் புக்கேன்
வெண்ணிலா முத்தஞ் சூழ்ந்த வெம்முலைத் தடங்க ணாளை
மண்ணெலாஞ் செல்ல நின்ற மகிழ்ச்சியின் மகிழ்ந்து தந்தான்.

1765 அவ்வழி இரண்டு திங்கள் கழிதலும் அவனின் நீங்கி
இவ்வழி நாடு காண்பான் வருதலும் இறைவன் கண்டே
செவ்வழி பாட ராகிச் சிலைத்தொழில் சிறுவர் கற்ப
மைவழி நெடுங்க ணாளைத் தந்தனன் மதலை என்றான். ௨0௨

1766 தான்உழந் துற்ற எல்லாந் தம்பியை உணரக் கூறித்
தேன்உழந் தரற்றுந் தாரான் குரவரைச் சிந்தித் தாற்கு
வான்இழிந் தாங்குக் கண்ணீர் மார்பகம் நனைப்பக் கையால்
ஊன்உமிழ்ந் திலங்கும் வேலான் ஒற்றிமற் றிதனைச் சொன்னான்.

1767 திண்பொருள் எய்த லாகும் தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடுபெண்டிர் மக்கள் யாவையும் நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா உடன்பிறப் பாக்க லாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரிய தென்றான்.

வேறு

1768 தேனிற் பாலெனச் செல்வன் தம்பியோ(டு)
ஆனி யம்பல கழிய ஆயிடை
வேனிற் குன்றெனத் தோழர் வெந்துமெய்
ஊனின் நைகின்றார் செய்வ துன்னினார். ௨0௫

1769 நீடு மின்இனி நாங்கள் செய்வதென்(று)
ஈடி னாலிருந் தெண்ணி நால்வரும்
ஆடு மஞ்ஞையஞ் சாயற் றத்தைமெய்
வாட லொன்றிலள் வஞ்ச மாங்கொலோ. ௨0௬

1770 கள்ளம் உண்டெனிற் காண்டும் நாமென
மெள்ள எய்தினார் வினவக் கூறினாள்

வள்ளற் குற்றதும் மறைந்த வண்ணமும்
வெள்ளி வெண்மலை வேந்தன் பாவையே. ௨௦௭

1771 மற்ற வள்சொலக் கேட்ட மைந்தர்கள்
இற்ற தம்முயி ரியல்பிற் பேர்த்தவண்
பெற்ற மாந்தரிற் பெரிது மெய்குளிர்ந்(து)
அற்ற மின்மையின் அவலம் நீங்கினார். ௨௦௮

1772 திருவின் சாயல்தன் சீற டிச்சிலம்(பு)
உருவக் குஞ்சிவா யுறுத்தி ஒய்யென
உருகும் உள்ளத்தின் உடம்பு வீங்கினார்
பருகு காதலிற் பாடி யாடினார். ௨௦௯

வேறு

1773 பைத்தர வத்திரை சிந்திய பல்கதிர்
மொய்த்தெரி நித்திலம் வைத்தன பல்லினள்
இத்திரு வின்னுரு வந்தொழு தார்தம(து)
எத்துய ருங்கெடும் என்றின சொன்னார். ௨௧௦

1774 ஐயனை யாமவண் எய்துவம் ஆயிழை
நொய்தின் உரைபொரு ளுண்டெனில் நொய்தென
மையெழுத் தூசியின் மாண்டதோர் தோட்டிடைக்
கைவளர் கோதை கரந்தெழுத் திட்டாள். ௨௧௧

1775 ஆங்குருக் காரரக் கிட்டதன் மீமிசைப்
பூங்குழை யாற்பொறி யொற்றுபு நீட்டத்
தேங்குழ லாள்தொழு தாள்திசை செல்கெனப்
பாங்கர்அங் குப்படர் குற்றனர் அன்றே. ௨௧௨

1776 வேந்திரி யக்கணை வித்திய வெஞ்சிலைக்
காய்ந்திரிக் கும்புரு வக்கருங் கண்ணியர்
ஆய்ந்தரிக் குந்நற வம்மலர் மாலையை
வேய்ந்தரிக் கும்மினி ரார்ப்ப விடுத்தாள். ௨௧௩

வேறு

1777 அலங்கு வெண்மதி ஐப்பசி அடையஅப் பகலே
நிலங்கொண் டோங்கின நிரம்பிய புகர்சுழி யுடைய

ஊலம்பி முன்னிரு தாள்களும் உமிழ்வன போல்வ
விலங்கு பாய்வன விடுகணை விலக்குவ கலிமா. உகச

1778 அள்ளற் சேறரு மணல்புனல் அருவரைப் படினும்
உள்ளம் போற்செல்வ உரன்அசை வில்லன அமருட்
கொள்ளி மண்டிலம் போற்கொடி படத்திரிந் திடுவ
வெள்ளி மால்வரைத் தாழ்வதின் மேம்படப் பிறந்த. உகரு

1779 ஈரைஞ் ஞூற்றினை யிருபதின் முரணிய தொகைய
வீரர் ஏறின விளங்கொளிப் பக்கரை அமைந்த
தாரும் புட்டிலும் அரற்றுவ சாமரை அணிந்த
ஒருங் கூடின மள்ளரும் ஒலித்தெழுந் தனரே. உகசு

வேறு

1780 வடித்த போத்தொடு வன்செலல் அத்திரி
கடுத்த ஒட்டகங் காற்செல்வ யாவையும்
நொடிப்பின் மாத்திரை நூற்றுவில் ஏகுவ
எடுத்த பண்டம் இயைந்துடன் என்பவே. உகஎ

1781 ஞாலம் விற்பன பைங்கிளி நன்னிறத்(து)
ஆலு மாபவ ளக்குளம் பார்ந்தன
காலின் நொய்யன கண்வெளவு காட்சிய
நால்குப் பண்ணினர் நால்வரும் ஏறினர். உகஅ

1782 நாளும் புள்ளும் நயத்தகு நன்னிலைக்
கோளும் ஓரையுங் கொண்ட நிமித்தமும்
ஆளு மாந்தரின் ஆய்ந்துகொண் டாயிடைத்
தாளின் ஊக்குபு சாத்தொ டெழுந்தவே. உகசு

1783 பறையுஞ் சங்கும் பரந்தொலித் தார்த்தெழ
உறைகொள் வாளினொ டொண்சுடர் வேல்மினச்
சிறைய ழிந்ததொர் செம்புனல் போன்றவண்
அறைக டற்படை ஆர்ப்பொ டெழுந்தவே. உஉ0

1784 காய்த்த செந்நெலின் தாழ்கதிர் நெற்றிமேற்
பூத்த முல்லையின் போது பொழிந்துக
நீத்த நீர்வயல் அன்னமும் நாரையும்
ஏத்தல் சால்முரு டார்ப்ப இரிந்தவே. உஉக

1785 அளகு சேவலொ டாடியங் காய்க்குலை
மிளகு வார்கொடி யூசல் விருப்புறாஉஞ்
சுளகு வார்செவித் தூங்குகைக் குஞ்சரம்
இளகு காடிள கப்பரி கொண்டவே. ௨௨௨

1786 அருவிக் குன்றமும் ஐவனச் சாரலும்
குருவி ஆர்த்தெழு கொய்புனக் கானமும்
திருவிற் றீர்ந்தவர் தேயமுந் தேர்ந்துபோய்ப்
பரிவின் மாதவர் பள்ளியுள் விட்டதே. ௨௨௩

வேறு

1787 வண்டுதுயில் கொண்டுகுயில் ஆலிமயில் அகவி
விண்டுமது விட்டுவிரி போதுபல பொதுளிக்
கொண்டுதளிர் வேய்ந்துசினை தாழ்ந்துநனை யார்ந்தொன்(று)
உண்டுபொழில் இமையவர்க ளுலகம்உறு வதுவே. ௨௨௪

1788 காவிகழு நீர்குவளை ஆம்பல்கடிக் கமலம்
தூவிமட நாரைதுணை அன்னம்பயில் முதுமீன்
மேவியுறை வண்டினொடு மல்கிவிழை தகைய
வாவியொடு காவினிடை மாந்தர்பதி கொண்டார். ௨௨௫

1789 ஐயருறை பள்ளியிடம் ஆண்டழகர் காணச்
செய்கழலர் தாரரவர் எங்குந்திரி கின்றார்
கொய்தகைய பூம்பொதும்பர்க் குளிருமரப் பலகைச்
செய்யவளிற் சிறிதுமிகை செய்யவளைக் கண்டார். ௨௨௬

1790 அந்நுண்துகிற் கல்அரத்தம் அல்குலது வருத்தச்
செந்நுண்துகில் உத்தரியம் புதைந்துசுவல் வருத்த
மைந்நுண்குழற் சிறுவன்மனம் வருத்தவடி வேற்கண்
கைந்நொண்டன கவற்சிநனி வருத்தக்கலுழ்ந் தாற்றாள்.

1791 மாசொடு மிடைந்துமணி நூற்றனைய ஐம்பால்
பூசுதலு மின்றிப்பிணி கொண்டுபுறந் தாழ
வாசமலர் மறைந்தவழி வாமனடிக் கேற்றித்
தோசமறத் துதிகள்மனத் தோதித்தொழு திருந்தாள்.

1792 சிந்திப்பலென் சிறுவன்திற மினியென்றெழில் நெடுங்கண்
வந்துபனி வார்ந்துமுலைக் கலிங்கமது நனைப்ப

அந்திவிருந் தாள்அவளுக் கடைந்து மனம்நடுங்கி
வந்தித்திருந் தார்மகிழ்ந்து காதல்மிக மாதோ. ௨௨௯

1793 வரையுடுத்த பள்ளியிட மாகஅதில் மேயோள்
விரையுடுத்த போதுறையும் வேல்நெடுங்க ணாள்கொல்
உரையுடுத்த நாவுறையும் ஒண்ணுதல்கொல் அன்றித்
திரையுடுத்த தேமொழிகொல் என்றுதெரி கல்லார். ௨௩௦

1794 மங்கலம் இழந்ததிரு மாமகளை யொப்பீர்
இங்குவர வென்னைகுலம் யாதடிகட் கென்ன
எங்குலமும் எம்வரவும் வேண்டில் எளிதன்றே
நுங்குலமும் நும்வரவும் நீருரைமின் என்றாள். ௨௩௧

1795 மோட்டுமுது நீர்மலங்கு மொய்த்த இள்வாளை
பூட்டுசிலை யிறவினொடு பொருதுதுயில் மடியும்
ஈட்டமுடை யவர்களுறை யிராசபுரம் என்னும்
நாட்டமுடை நகரமெம தாகும்உறை பதியே. ௨௩௨

1796 பொன்னுடைய மார்பிற்புகழ் மந்திரி பொலந்தார்த்
தன்னுடைய நுண்ணுணர்விற் சாகரற்குத் தக்காள்
கொன்னெடிய வாட்கட்குரு தத்தைசிறி தத்தன்
மன்னடுங்க வீங்குதிரள் தோள்மடங்க லன்னான். ௨௩௩

1797 அளப்பரிய நான்மறையி னான்அசலன் என்பான்
கிளைக்குந்திரு வொப்புடைய திலோத்தமைதன் சிறுவன்
விளைத்திரும்பு மேய்ந்தொழிந்த மிச்சில்வரை மார்பன்
இளைப்பல்இவன் தேசுரைப்பிற் புத்திசேனிவ் விருந்தான்.

1798 செட்டிதன பாலன்மனை யாள்சினவு வாட்கட்
பட்டம்நுதல் மின்னின்நகு பவித்திரைக்குத் தோன்றி
மட்டுமலர் மார்பின்மத யானையெயி றுழுதரிங்(கு)
இட்டகுறி தார்திவளப் பதுமுகன்இவ் விருந்தான். ௨௩௫

1799 பொன்னகருள் வேந்தன்பெய ராற்பொறியும் பெற்றான்
வில்மரிய தோள்விசய தத்தன்உயிர்க் கவசம்
பின்னரிய கற்பினவள் பிரீதிமதி காதற்
றன்மகனென் யானடிகள் தேவதத்தன் என்பேன். ௨௩௬

1800 எங்கள்வினை யால்இறைவன் வீடியஅஞ் ஞான்றே
எங்களுயிர் நம்பியொடு யாங்கள்பிறந் தேமா
எங்கள்தமர் நம்பிக்கிவர் தோழரென ஈந்தார்
எங்கெழிலென் ஞாயிறென இன்னணம் வளர்ந்தேம். ௨௩௭

1801 யாண்டுநிறைந் தேகியபின் நந்தன்அவற் கிளையார்
மாண்டகுணத் தார்நபுல விபுலரொடு மன்னும்
ஈண்டவளர்ந் தேந்தவிசி னுச்சிமிசை யெய்தித்
தீண்டரிய வெம்மையொடு திக்கயங்கள் எனவே. ௨௩௮

1802 விற்றொழிலும் வாட்டொழிலும் வீணைபொரு தொழிலும்
மற்றொழிலுந் தேர்த்தொழிலும் வாரணத்தின் தொழிலும்
நற்றொழில வாசியொடு நன்கலைகள் நீந்திக்
கற்றனங்கள் யாமுமுடன் கற்பனக ளெல்லாம். ௨௩௯

1803 வெஞ்சிலையின் வேடர்தொறு மீட்டு விசும்பேகும்
விஞ்சையரை யன்மகளை வீணைபொரு தெய்திக்
குஞ்சரமும் வென்றுகுண மாலைநலன் உண்ட
நம்பியவன் நாமமெவ னென்னின் இதுவாமே. ௨௪0

1804 கந்துக்கடன் என்றநகர்க் காதிமுது நாய்கன்
முந்திப்பெறப் பட்டமகன் மூரிச்சிலைத் தடக்கைச்
சிந்திப்பவர் அவலமறு சீவகன்என் தோழன்
அந்திலொரு நாளவனை அரசனொரு தவற்றால். ௨௪௧

1805 தொடிகள்தவழ் வீங்குதிரள் தோளிறுக யாத்துக்
கடிகள்தவழ் குழல்மகளிர் கசிந்துமனங் கரியக்
கொடிகள்தவழ் மாடநகர்க் கொல்ல எனமாழ்கி
இடிகள்தவழ்ந் திட்டபட நாகமென வீழ்ந்தாள். ௨௪௨

வேறு

1806 மாதவப் பெருமை வண்ணம் மாநகர் நம்பிக் குற்ற
ஏதத்தைக் கேட்ட லோடும் இருகணும் பிறழ்ந்து மாழ்கிக்
காதற்றம் மகனுக் குற்ற நவையெனக் கலங்கி வீழ்ந்தார்
ஆதலால் நங்கை யாரே அருள்பெரி துடைய ரென்றார். ௨௪௩

1807 மாழ்குபு மயங்கி வீழ்ந்த மாபெருந் தேவி தன்னை
ஆழ்துயர் அவித்தற் கொத்த அரும்பெறல் யோகம் நாடிக்

தாழ்பரிந் தரைத்த சாந்தின் களிதரு நீரிற் றேற்ற
யாழ்புரை கிளவி ஆற்றாள் மயங்கிவீழ்ந் தரற்று கின்றாள்.

வேறு

1808 கைம்மாண் கடற்படையுட் காவலனை ஆண்டொழியப்
பொய்ம்மா மயிலூர்ந்து போகிப் புறங்காட்டுள்
விம்மாந்து யான்வீழ வீழ்ந்தேன் துணையாகி
எம்மானே தோன்றினாய் என்னை யொளித்தியோ. ௨௪௫

1809 கையா ரிலங்கெஃகிற் கந்துக் கடன்கொடுபோய்
மொய்யார் உவகையனாய் முற்றிழைக்குத் தான்கொடுப்ப
நையாள் வளர்த்த சுநந்தை நவைபுறஎன்
ஐயாஎன் ஐயாஎன் ஐயா அகன்றனையே. ௨௪௬

1810 மின்னிரைத்த பைம்பூண் விளங்கிலைவேல் வேந்தன்
முன்உரைத்த மூன்று கனவும் புணையாக
என்உயிரைத் தாங்கி யிருந்தேன் வலியாகா(து)
என்அரசே என்பூசல் கேளா திறந்தனையே. ௨௪௭

1811 கோவம்மா வாகிக் குடியோம்பி நின்குடைக்கீழ்ப்
பாவமே செய்தேன் பரிவெலாம் நீங்கினாற்
போவம்மா என்றுரைப்பப் போவேன்முன் போயினாய்
ஆவம்மா அம்மாஎன் அம்மா அகன்றனையே. ௨௪௮

1812 கோமான் மகனே குருகுலத்தார் போரேறே
ஏமாங் கதத்தார் இறைவாஎன் இன்னுயிரே
காமா கடலுட் கலங்கவிழ்த்தேன் கண்ணுள்நீர்
பூமாண் புனைதாராய் நோக்காது போதியோ. ௨௪௯

1813 கந்தார் களியானைக் காவலனார் கான்முளையை
வந்தார்வாய்த் தீதின்மை கேட்டு மறைந்திருந்து
நொந்தேன் பலகால்இந் நோயோடே வீகின்றேன்
அந்தோ அறனேமற் றாற்றேனால் ஆற்றேனால். ௨௫௦

1814 முன்னொருகால் என்மகனைக் கண்டேன்என் கண்குளிரப்
பின்னொருகாற் காணப் பிழைத்ததென் தேவிர்காள்
என்னொப்பார் பெண்மகளிர் இவ்வுலகிற் றோன்றற்கென்(று)
அன்னப் பெடைநடையாள் ஆய்மயில்போல் வீழ்ந்தனளே.

1815 புண்மல்கு மத்தகத்த போர்வேழம் பொறப்பழித்த
மண்மல்கு தாரான் பெருமாட்டி வாய்மொழிகேட்(டு)
உள்மல்கு நெஞ்சினராய் ஒய்யெனவே வெய்துயிராக்
கண்மல்கு நீரார் முகமுகங்கள் நோக்கினரே. உருஉ

1816 கண்டீர் கருமம் விளைந்தவா றென்றாய்
வண்டாரார் வண்கடகம் மின்னத்தங் கைம்மறித்துக்
கொண்டாங் கடல்வேலி கிழமகனைக் கூற்றமாய்
உண்டாம் உயிரென் றுவப்பெழுந் தாடினரே. உருங

1817 வீழ்ந்து மயில்போல் விசயை கிடந்தாளைத்
தாழ்ந்து பலதட்பந் தாஞ்செய்ய வேல்பெற்றுப்
போழ்ந்தகன்ற கண்ணுள் புலம்பா எழுந்திருப்பச்
சூழ்ந்து தொழுதிறைஞ்சிச் சொன்னார் அவன்திறமே. உருச

வேறு

1818 கொலைக்களங் குறுகலுங் கொண்டோர் தெய்வதம்
நிலைக்களம் இதுவென நீக்க நீங்கினான்
இலக்கண மடப்பிடி யிமைந்தோர் போதகம்
மலைக்கணத் திடைமகிழ்ந் தனைய மைந்தனே. உருரு

1819 பூவுடைத் தெரியலான் போர்வை நீத்தினிக்
கோவுடைப் பெருமக னுதல் கொண்டனம்
சேவடி சேர்ந்தனந் தொழுது சென்றென
மாவடு நோக்கியுள் மகிழ்ந்து கூறினாள். உருசு

வேறு

1820 தரணி காவலன் சச்சந்தன் என்பவன்
பரணி நாட்பிறந் தான்பகை யாவையும்
அரணி லான்என்கண் தங்கிய அன்பினல்
இரணி யன்பட்ட தெம்மிறை எய்தினான். உருஎ

1821 விசையை யென்றுல கோடிய வீறிலேன்
பசையி னற்றுஞ்சி யான்பட்ட தீதெலாம்
இசைய நம்பிக் கெடுத்துரைத் தென்னுழை
அசைவின் றையனைத் தம்மின் எனச்சொன்னாள். உருஅ

1822 கோதை வேல்நம்பிக் கல்லதை இப்பொருள்
யாதுங் கூறன்மின் யாரையுந் தேறன்மின்
ஏதம் இன்னன இன்னணம் எய்தலாற்
பேதை யாரொடும் பெண்ணொடும் பேசன்மின். உருகூ

1823 பகைவர் உள்ளமும் பாம்பின் படர்ச்சியும்
வகைகொள் மேகலை மங்கையர் நெஞ்சமும்
மிகைசெல் மேகத்து மின்னுஞ்செந் நில்லலா
புகைசெய் வேலினிர் போற்றுபு சென்மினே. உகூ0

வேறு

1824 வணக்கருஞ் சிலையி னானை ஒருமதி யெல்லை நாளுட்
குணத்தொடுமலிந்தபாதங் குறுகயாங்கொணர்ந்தபின்றைப்
பணித்ததே செய்து பற்றார் பகைமுதல் அடர்த்தும் என்றார்
மணிக்கொடி மாசுண் டன்னாள் மற்றதே துணிமி னென்றாள்.

1825 பொறிதவம் நெருங்க நோற்றுப் புகரறநிறைந்தகொள்கைச்
செறிதவ விசயை பாதஞ் சென்னியின் வணங்கி மீண்டு
வெறிகமழ் சோலை நண்ணி வேண்டிய அடிசில் கைதொட்(டு)
எறிபடை யெழுக என்றார் வளையெழுந் தார்த்த அன்றே.

1826 பைந்துகில் மகளிர் தேன்சோர் பவளவாய் திகழ நாணிச்
சிந்தித்துக்கூந்தல் வாங்கிச் செவ்வணந் துடைப்பதேபோல்
இந்திர கோபங் கௌவி இறகுளர் கின்ற மஞ்ஞை
அந்தரத் திவர்ந்த பாய்மா வரும்பொற்று ரரவத் தாலே.

1827 சாந்தின்மேற் றெடுத்த தீந்தேன் தண்மதிக் கோடு போழப்
போந்துமட் டருவி வீழும் பொன்னெடுங் குன்றும் அந்தண்
ஏந்துபூங் காவு சூழ்ந்த இரும்புனல் யாறும் நீந்தி
மாந்தரே மலிந்த நாடு மடுத்துடன் சென்ற தன்றே. உகூச

1828 மதுக்குலாம் அலங்கன் மாலை மங்கையர் வளர்த்த செந்தீப்
புதுக்கலத் தெழுந்த தீம்பாற் பொங்கலி னுரையிற் பொங்கிக்
கதிர்த்துவெண் மாடந் தோன்றுஞ் செவ்வெயிற் காதம் நான்கில்
நதிக்கரைச் சென்று விட்டார் நச்செயிற் றரவோ டொப்பார்.

வேறு

1829 மான்அயா நோக்கியர் மருங்குல் போல்வதோர்
கானயாற் றடைகரைக் கதிர்கண் போழ்கலாத்

தேனையாம் பூம்பொழிற் றிண்ணை வெண்மணற்
றானையா நால்வருந் தணப்பின் றெய்தினார். ௨௬௬

1830 வார்ந்துதேன் துளித்துமட் டுயிர்த்து வார்மணல்
ஆர்ந்துபோ தருந்தவி சடுத்த தொத்துமேல்
தூர்ந்துதேன் வண்டொடு துதைந்துள் புக்கவர்
போந்துபோக் கரியதப் பொழிலின் பெற்றியே. ௨௬௭

1831 தாதணி கொழுநிழ லிருந்து தண்மதுப்
போதணி யலங்கல்தாழ் பொருவின் மார்பனை
யாதுநாம் அடைதிறம் உரைமின் நீரெனக்
காதலாற் பதுமுகன் கண்டு கூறினான். ௨௬௮

1832 திருக்கிளர் மன்னவன் சேனை மாநகர்
பொருக்கொளி யினநிரை கோடுங் கொண்டபின்
முருக்கொளி மலரடி மூரி மொய்ம்பனைச்
செருக்களத் தெதிர்ப்படச் சிதைவ தில்லையே. ௨௬௯

1833 சேட்குலாஞ் சிலையொடு திளைத்த பின்னவர்
வாட்கலாம் வலித்தமர் தொடங்கின் வல்லையே
மீட்கலாம் விருப்புடைத் தெழுக என்றுதன்
ஆட்கெலாஞ் செப்பினன் அலர்ந்த தாரினான். ௨௭௦

வேறு

1834 இருங்கடல் மணிநிரை யெய்திநாம் கொண்டபின்
அருங்கடி யணிநகர் ஐயன்அங் கில்லையேற்
பெரும்படை தான்வரிற் பின்றிநீங் கிற்பழி
தரும்படித் தன்றியுஞ் சாற்றுவல் கேண்மினோ. ௨௭௧

1835 மஞ்சுசூழ் விசும்பிடை மணந்துமின் மிளிர்வபோல்
வஞ்சமில் மறவர்வாள் மிளிர்ந்துபாய் குருதியுட்
குஞ்சரங் குளிப்பதோர் நீத்தமா மாதலால்
எஞ்சலில் கொள்கையீர் எண்ணிச்சூழ் மின்களே. ௨௭௨

1836 என்றனன் புத்திசேன் என்னுநான் மறையினான்
நன்றதே பொருளென நால்வரும் இருந்துழி
ஒன்றிமுன் விடுத்தவர் மூவரொற் றாட்கள்வந்(து)
இன்றிதாற் பட்டதென் றியம்புகின் றார்கள். ௨௭௩

1837 வளையசுந் தரமெனும் வாரண மூல்வரை
முளையிளந் திங்கள்போல் முத்துடைக் கோட்டது
கிளையிளம் பிடிகளுஞ் ஞாற்றிடைக் கேழரக்
களையஅஞ் சனவரை யனையதக் களிறரோ. உஎச

1838 கடுமதக் களிப்பினுற் காரென முழங்கலின்
விடுகலார் பாகரும் வெருவரக் கொன்றிடப்
பிடியொடுங் கந்தணை வின்றிநீ ருருள்பிளந்(து)
அடுகளி றந்தப்போ திகைபரிந் தழன்றதே. உஎரு

1839 கண்ணுமிழ் தீயினுற் சுடநிறங் கரிந்தபோற்
பண்ணுமிழ் வண்டுலாய்ப் பரத்தரா நின்றசீர்
அண்ணலங் களிற்றினை அடக்கினுன் சீவகன்
வண்ணமே கலையினர் மனமெனப் படிந்ததே. உஎசு

1840 இறுவரை இவர்வதோ ரிலங்கெயிற் றரியென
உறுவரை மார்பினுன் தூசங்கொண் டொய்யெனப்
பெறலருங் குஞ்சரம் ஏறலிற் பெருஞ்சனம்
அறைகடற் றிரையொலித் தாங்கென ஆர்த்ததே. உஎஎ

1841 அங்கையந் தலத்தினுல் அப்புதா தையெனக்
கொங்கலர் கண்ணியான் கொம்மைதான் கொட்டலும்
பொங்கிய உவகையிற் பொலிந்துமாக் களிறவன்
தங்கிய பயிர்த்தொழில் தடக்கையாற் செய்ததே. உஎஅ

1842 கொட்டையம் புரோசைதான் இருவடங் கொண்டுடன்
கட்டினுன் கருவலித் தடக்கையாற் றூட்டியும்
இட்டனன் இரண்டுடன் இமிழ்க்கொளீஇ யிலங்குபொற்
பட்டமும் பனிவரை மின்னெனக் கட்டினுன். உஎகூ

1843 கச்சையும் வீக்கினன் கறங்கிரு மணியணிந்(து)
அச்சுறு கொழுந்தொடர் யாப்பழித் தடியிணை
உச்சியும் புரோசையுட் குளிப்பவுய்த் துறுவலி
மெச்சிமேல் வேந்தனும் விழைதகத் தோன்றினுன். உஅ೦

1844 கோற்றூடிப் புரிசையுட் கொற்றவன் நின்றையன்
ஏற்றியல் காண்டும்நாம் இவண்தரு கென்னவே
காற்றெனக் கடலெனக் கருவரை யுருமெனக்
கூற்றெனக் குஞ்சரங் கொண்டுபுக் கானரோ. உஅக

1845 குழவியஞ் செல்வனோர் குன்றுகொண் டொய்யென,
அழகிதாப் பறப்பதே போலவும் ஆர்புயல்
மழையையூர்ந் தோடுமோர் வானவன் போலவும்
எழுதலா காவணம் இருந்தனன் என்பவே. ௨௮௨

1846 வணைகலத் திகிரியும் வாழுயிர் மேற்செலுங்
கணைகடுங் கதழ்பரிக் காலசக் கரமும்போல்
வினைதரு வட்டமும் வீதியும் பத்தியும்
இனையவை ஏமுற இமைப்பினின் இயற்றினான். ௨௮௩

1847 ஒருவனே களிறுமொன் றேருநூ றாயிரம்
திரிவவே போன்றன திசையெலாங் குஞ்சரக்(கு)
உரியவன் இவனலால் உலகினில் இலனென
அரிதுணர் வேத்தவை அமைகமற் றென்றதே. ௨௮௪

1848 வள்ளுகிர் நுதியினால் வரிநுதல் உறுத்தலும்
உள்ளுணர் குஞ்சரம் ஒய்யென நிற்றலும்
எள்ளரும் இருமணி கிணினென இசைத்தன
வெள்ளநீர்ப் பெருஞ்சனம் வியந்துகை விதிர்த்ததே. ௨௮௫

1849 என்மனம் நின்மனம் என்றிரண் டில்லையால்
தன்மனத் துளபொருள் தான்தனக் குரைப்பதொத்(து)
உன்மனம் என்மனம் என்பதொத் திழைத்ததால்
நன்மனக் குஞ்சரம் நம்பியோ டென்மரும். ௨௮௬

1850 தேவனே மகனலன் செல்வன்மற் றென்மரும்
பாவையே நோற்றனள் பாரில்மற் றென்மரும்
கோவனும் மக்களுங் குளிர்ந்துதோள் நோக்கினார்
ஓவென வையகத் தோசைபோய் உயர்ந்ததே. ௨௮௭

1851 பிண்டமுண் ணும்பெருங் களிறுபூட் டிய்யவண்
பண்டரும் ஓவரும் பாடமா நகர்தொழக்
கொண்டதன் தம்பியுந் தானுங்கோ யில்புகக்
கண்டனங் கண்ணினே என்றுகண் டவர்சொனார். ௨௮௮

1852 பாத்தில்சீர்ப் பதுமுகன் படிவவொற் றாளர்சொற்(கு)
ஒத்தெனக் கொழுநிதி கொடுத்தனன் உவகையில்
தூத்திரைச் சுறாவினம் தொக்கபோல் மறவரும்
ஏத்தருஞ் சிலைகைவாள் இலங்குவேல் ஏந்தினார். ௨௮௯

1853 வேல்நிரை வாண்மதில் பிளந்துவெஞ் சமத்திடைத்
தேர்நிரை களிற்றின்மேற் றிண்குளம் பழுத்துவ
ஆன்நிரை வளைப்பதோர் பொருளெனச் சிரித்துடன்
மாநிரை பண்ணினர் வடித்தநூற் கேள்வியார். ௨௬௦

வேறு

1854 விடையுடை யினநிரை விழுங்கல் மேயினர்
துடியொடு சிறுபறை துவைத்த வால்வளை
முடியுல குறநிமிர்ந் தார்த்த மொய்கழல்
அடுபடை யிளையரும் அரணம் வீசினர். ௨௬௧

1855 காந்தளங் கடிமலர்க் கண்ணி நெற்றியர்
ஆய்ந்தளந் தியற்றிய அத்துண் ஆடையர்
வேய்ந்துணி அலமரும் புறத்தர் வெஞ்சுடர்
ஏந்தெழில் நவியமும் ஏந்து தோளினர். ௨௬௨

1856 கோனுடை யினநிரை காக்குங் கோவலர்
தேனுடு கடிச்சுரும் பாற்றுந் தேமலர்க்
கானிடை யினநிரைக் காவல் போற்றுமின்
ஆனிடை அழித்தபுள் என்று கூறினர். ௨௬௩

1857 விடுபொறி அரவென விளங்கு வெஞ்சிலை
அடுகணை சிதறினர் ஆர்த்த வால்வளை
கடுகின காலியல் இவுளி காண்டலும்
முடுகுபு கோவலர் முந்து காற்பெய்தார். ௨௬௪

1858 அளைச்செறி இரும்புலி யனைய ஆடவர்
வளைத்தனர் இனநிரை வன்கண் ஆயரும்
விளைத்தனர் வெருவாத் தக்க வெஞ்சொலால்
ஊளைத்தனர் பூசல்விட் டுணர்த்த ஓடினர். ௨௬௫

வேறு

1859 தேர்த்தொகைத் தானை மன்னன் சீவகற் கிளைய நம்பி
வார்த்தொகை முழவம் அன்ன மல்லுறழ் தோளி னானை
நீர்த்தொகைக் கழனி நாடும் நெடுநகர்ப் பெயரும் நுங்கள்
சீர்த்தொகைக் குலனு மெல்லாந் தெரிந்தெமக் குரைமோ என்றான்.

1860 திருக்குறிப் பன்ன தாயின் செப்புவல் அடிகள் செம்பொன்
அரித்தசும் பொழுகு குன்றத் தருவியின் வெரீஇய மஞ்ஞை
பரித்தவை பழன நாரைப் பார்ப்பொடு மருதிற் சேக்கும்
உரைத்தகு நாடும் ஊருங் குலத்தொடும் உணர என்றான்.

1861 பொருகயல் உகளிப் பாயப் பூஞ்சிறைக் குமரி யன்னம்
குருகினோ டிரியச் செந்நெற் கொழுங்கதிர் குவளை யெற்ற
முருகுவிண் டிரியத் தீந்தேன் முழங்குநீர்க் கழனி நன்று(டு)
எரியுமிழ்ந் திலங்கும் வேலோய் ஏமமாங் கதம தென்றான்.

1862 பூந்துகிற் கொடுத்த தீந்தேன் அகிற்புகை பொன்ன னார்தங்
கூந்தலிற் குளித்த வண்டு கொப்புளித் திட்ட வாசம் [(து)
மாந்தர்மேற் றவழ்ந்துமாடம் இருள்படப்புதையுஞ்செல்வத்
ஏந்துபொன் இஞ்சி மூதூர் இராசமா புரம தென்றான்.

1863 எங்குலம் அடிகள் கேட்க என்றலும் எழுந்தோர் பூசல்
பொங்களைப் புரவி வெள்ளம் போக்கற வளைத்து முற்றி
இங்குள நிரையை யெல்லாங் கவர்ந்ததென் றிட்ட போழ்தே
திங்கள்வெண் குடையி னான்றன் திருச்செவிக் கிசைத்த தன்றே.

1864 எரித்திறல் வென்றி வேந்தற் கிற்றென இசைப்பச் சீறி
மருப்புறக் கந்து பாய்ந்து முழங்குமால் களிறு போலத்
திருக்கிளர் மணிசெய் பொற்றூண் தீப்படப் புடைத்துச் செங்கண்
உருத்தெரி தவழ நோக்கி உடல்சினங் கடவச் சொன்னான்.

1865 நாற்கடற் பரப்பும் வந்து நன்னகர்க் கண்ணுற் றென்ன
வேற்கடற் றானை பாய்மா விளங்கொளி யிவுளித் திண்டேர்
கூற்றென முழங்கும் ஓடைக் குஞ்சரக் குழாத்தோ டேகிப்
பாற்கடற் பரப்பின் வல்லே படுநிரை பெயர்க்க என்றான்.

1866 கண்ணகன் கடலங் கோடும் பறைகளும் முழங்கி யார்ப்ப
விண்ணகத் தியங்கு மேகக் குழாமென நிரைத்த வேழம்
திண்ணுகப் புரவித் திண்டேர் விரைந்தன நிரந்த பாய்மா
மண்ணக மலிரக் காலாட் கடல்கிளர்ந் தெழுந்த தன்றே.

1867 பால்நிறக் கவரி நெற்றிப் பசுங்கிளி நிறத்த பாய்மாத்
தானுறப்பண்ணித் திண்டேர்த் தம்பிகோல் கொள்ள ஏறிக்
கூன்நிறக் குழவித் திங்கட் குளிர்கதி ரார மார்பிற்
றேன்நிறங் கொண்ட கண்ணிச் சீவக குமரன் சொன்னான்.

1868 மன்னவன் நிரைகொண் டாரை வளநகர்த் தந்து மன்னன்
பொன்அவிர் கழலிற் றங்கள் புனைமுடி யிடுவி யேனேல்
இன்னிசை யுலகந் தன்னுள் என்பெயர் சேற லின்றாய்க்
கன்னியர் மகளிர் நெஞ்சிற் காமம்போற் கரக்க என்றான்.

1869 பார்மலி பரவைத் தானைப் பரப்பிடைப் பறப்ப தேபோல்
நீர்மலி கடாத்தகொண்மூ நெற்றிமேல் மின்னின் நொய்தாத்
தார்மலி மார்பன்திண்டேர் தோன்றலுந் தறுகண்மைந்தன்
சீர்மலி பகழி யேந்திப் பதுமுகன் சிலைதொட் டானே. ௩௦௬

1870 குடைநிழற் கொற்ற வேந்தன் ஒருமகற் காணக் குன்றா
அடிநிழல் உறைய வந்தேம் அடியம்யாம் என்ன எய்த
விடுகணை சென்று தேர்மேற் பின்முனா வீழ்த லோடுந்
தொடுகழற் குரிசில் நோக்கித் தூத்துகில் வீசி னானே. ௩௦௭

1871 ஏந்தலைத் தோழ ரெல்லாம் இணையடி தொழுது வீழச்
சேந்ததன் கண்ணி னானுந் திண்ணெழிற் றோளி னானும்
வாய்ந்தஇன் சொல்லி னானும் மாலைதாழ் முடியி னானும்
ஆய்ந்தவன் சிறப்புச்செய்தான் அவலநோய் அவருந் தீர்ந்தார்.

1872 கழலவாய்க் கிடந்த நோன்றாட் காளைதன் காத லாரை
நிழலவா யிறைஞ்சி நீங்கா நெடுங்களிற் றெருத்தம் ஏற்றி
அழலவாய்க் கிடந்த வைவேல் அரசிளங் குமரர் சூழக்
குழலவாய்க் கிடந்த கோதை தாதையூர் கொண்டு புக்கான்.

வேறு

1873 வான்நக்கி நின்று நுடங்கும்கொடி மாட மூதூர்
பால்நக்க தீஞ்சொற் பவளம்புரை பாவை யன்ன
மான்நக்க நோக்கின் மடவார்தொழ மைந்தர் ஏத்த
யானைக் குழாத்தின் இழிந்தார்அரி மானோ டொப்பார். ௩௧௦

1874 செம்பொற் புளகத் திளஞாயிறு செற்ற கோயில்
வம்பிற் றுளும்பு முலைவாள்நெடுங் கண்மடவார்
நம்பப் புகுந்து நரதேவன் அருளின் எய்திப்
பைம்பொற் புளகக் களிற்றான்அடி தாம் பணிந்தார். ௩௧௧

1875 வல்லான் புனைந்த வயிரக்குழை வார்ந்து வான்பொற்
பல்பூண் எருத்திற் பரந்தஞ்சுடர் கால மன்னன்

மல்லார் திரள்தோள் மருமான்முகம் நோக்க மைந்தர்
எல்லாம் அடிகள் எனக்கின்னுயிர்த் தோழர் என்றான். ௩௧௨

1876 வீர்பொன் முடிமேல் வயிரம்உழச் சேந்த செல்வத்(து)
ஆர்பொன் அடிசூழ் மணியங்கழல் ஆனை வேந்தன்
கார்மின் நுடங்கும் இடைநங்கையைக் காண்கசென்றென்(று)
ஏர்மின்னு தாரான் அருளத்தொழு தேகி னாரே. ௩௧௩

1877 தழுமுற்றும் வாராத் திரள்தாமங்கள் தாழ்ந்த கோயில்
முழுமுற்றுந் தானே விளக்காய்மணிக் கொம்பின் நின்றாள்
எழுமுற்றுந் தோளார் தொழுதார்இன ரென்று நோக்கக்
கழுமிற்றுக் காதல் கதிர்வெள்வளைத் தோளி னாட்கே. ௩௧௪

1878 துறக்கம் இதுவே யெனுந்தொன்னகர் மன்னன் மங்கை
தெறுக்கொண்ட கள்வர் இவரோஎனச் சொல்லி நக்காங்(கு)
ஒறுக்கப் படுவார் இவரென்றங் கசதி யாடி
வெறுக்கைக் கிழவன் மகளென்ன விருந்து செய்தாள். ௩௧௫

1879 அருந்தீத் தொழிலே புரிந்தான்மறை யாய வெல்லாம்
விருந்தா விரிப்பான் அவன்சீவக சாமி வேறா
இருந்தாற்கோ ரோலை கொடுத்தான்எரி குண்ட லத்தாற்
பொருந்தார் பொறியைப் புறம்நீக்குபு நோக்கு கின்றான்.

வேறு

1880 மற்றடிகள் கண்டருளிச் செய்கமல ரடிக்கீழ்ச்
சிற்றடிச்சி தத்தையடி வீழ்ச்சிதிரு வடிகட்(கு)
உற்றடிசில் மஞ்சனத்தை உள்ளுறுத்த காப்பும்
பொற்புடைய வாகவெனப் போற்றியடி வீழ்ந்தேன். ௩௧௭

1881 வயிரமணிக் கலன்கமழுங் கற்பகநன் மாலை
உயிரைமதஞ் செய்புமதுத் தண்டோடுடை யாடை
செயிரில்நறுஞ் சாந்துசிலை அம்புமணி அயில்வாள்
மயிரெலியம் போர்வையொடெம் மன்னன்விடுத் தானே.

1882 வந்தவனை யாருமறி யாமல்மறை யாகத்
தந்துதரன் கேட்பஇது சாமிவலித் தானு
ஐந்துமதி யெல்லையினை யாண்டுடைய னாகி
அந்திலகன் றான்தமரொ டாங்கணெனச் சொன்னேன். ௩௧௯

1883 பட்டபழி வெள்ளிமலை மேற்பரத்தில் அஞ்சித்
தோட்டுவிடுத் தேன்அவனைத் தீதுபிற சொல்லிப்
பட்டபழி காத்துப்புக ழேபரப்பி னல்லால்
விட்டலர்ந்த கோதையவ ரால்விளைவ துண்டோ. ௩௨௦

1884 அல்லதுவும் எங்கைகுண மாலையவள் ஆற்றாள்
செல்லுமதி நோக்கிப்பக லேசிறியை யென்னும்
பல்கதிரை நோக்கிமதி யேபெரியை யென்னும்
எல்லியிது காலையிது என்பதறி கல்லாள். ௩௨௧

1885 அரவுவெகுண் டனையஅகல் அல்குல்நிலம் புல்லித்
திருவில்வளைந் தனையதிரு மேகலையின் நீங்கிப்
புருவமதி முகமும்புகழ் தோளும்புணர் முலையும்
உருவமழிந் தடிச்சியுள ளாங்கொல்உணர் கல்லேன். ௩௨௨

1886 நாளைவரும் மையலென நன்றெனவி ரும்பி
நாளையெனும் நாள்அணிமைத் தோபெரிதுஞ் சேய்த்தோ
நாளையுரை என்றுகிளி யோடுநகச் சொல்லும்
நாளினுமிந் நங்கைதுயர் நாளினுமற் றிதுவே. ௩௨௩

வேறு

1887 நோக்கவே தளிர்த்து நோக்கா திமைப்பினும் நுணுகு நல்
பூக்கமழ் அமளி சேக்கும் புதுமண வாள ஞர்தாம் [லார்
நீப்பிலார் நெஞ்சி னுள்ளார் ஆதலால் நினைத்தல் செல்லேன்
போக்குவல் பொழுதந் தாந்தம் பொன்னடி போற்று கென்றாள்.

1888 இலவம்பூ அரக்குண் டன்ன பஞ்சிமெல் லடியி னாள்தன்
புலவிச்சொற் பொறித்த ஓலை திருமுடி துளக்கி நோக்கித்
தலைவைத்த காப்பு விஞ்சை கொண்டபின் தூமஞ் சூழ்ந்து
கொலைவைத்த குருதி வேலான் தோழரைக் குறுகி னானே.

1889 அடிகள்நீர் அரச ராதல் அறிந்திலேம் மேலை நாட்கண்
தொடியணி தோளும் நல்ல ஆகமும் புல்லி நும்மைக்
குடிவழி வந்த தோலாக் கந்துகன் மகனென் றெண்ணி
அடிகள்நாம் இகழ்ந்த வெல்லாம் அருளுக என்று நின்றார்.

வேறு

1890 எங்கோமற் றென்திறம்நீர் கேட்டதென்றாற் கெரிமணிப்பூட்
செங்கோன் மணிநெடுந்தேர்ச் செல்வன் காதற் பெருந்தேவி
தங்காத் தவவுருவந் தாங்கித் தண்டா ரணியத்துள்
அங்காத் திருந்தாளைத் தலைப்பட் டைய அறிந்தேமே.

1891 என்னைமற் றென்னைநீர் மொழிந்த தென்னை எனவிரும்பி
முன்னை மொழிந்தாற்போல் முறையின் றெல்லாம் உடன்மொழிய
மன்னாரஞ் சிந்துவபோல் மலர்ந்த செந்தா மரைக்கண்ணீர்
பொன்னார மார்பின்மேற் பொழியப் புன்கண் உற்றானே.

1892 அஃதே அடிகளும் உளரோ என்றாற் கருளுமா(று)
இஃதா இருந்தவா றென்றார்க் கென்னைப் பெறவல்லார்க்(கு)
எய்தா இடருளவே எங்கெங் கென்றத் திசைநோக்கி
வெய்தா அடிதொழுது வேந்தன் கோயிற் கெழுந்தானே.

1893 இலைவிரவு பூம்பைந்தார் வேந்தன் ஏந்தல் குலங்கேட்பான்
மலைவிரவு பூண்மார்பின் மைந்தன் தோழர் முகம்நோக்கிக்
கொலைவிரவு கூர்நுதிவேற் குமர னென்னக் குருகுலத்தான்
கலைவிரவு தீஞ்சொல்லாற் காம னென்றார் கமழ்தாரார். ஙஙo

1894 அண்ணல் குருகுலத்தான் என்றால் யான்முன் கருதியதென்
எண்ணம் வெளிப்பட்டான் கரந்த மைந்தன் எரிசெம்பொன்
வண்ண வரைமார்பம் முயங்கி நுண்ணூல் மதியாரோ(டு)
எண்ணி வியநெறியால் விடுத்தான் கோயில் புக்கானே.

1895 விள்ளா வியனெடுந்தேர் வேந்தன் காதல் மடமகளே
கள்ளாவி கொப்புளிக்குங் கமழ்பூங் கோதாய் என்மனத்தின்
உள்ளாவி யுள்ளாய்நீ யொழிந்தா யல்லை யெனக்கையிற்
புள்ளாவிச் செங்கழுநீர்க் குவளை செய்தாள் புனைபூணாள்.

1896 வார்முயங்கு மென்முலைய வளைவேய்த் தோளாள் மனமகிழ
நீர்முயங்கு கண்குளிர்ப்பப் புல்லி நீள்தோ ளவன்நீங்கத்
தேர்முயங்கு தானையான் சிறுவர் சேடார் அகன்மார்பந்
தார்முயங்கிக் கூந்தல்மா இவர்ந்தான் சங்கம் முரன்றவே.

8. விமலையார் இலம்பகம்

1897 முருகுகொப் புளிக்குங் கண்ணி முறிமிடை படலை மாலைக்
குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தல்மா இவர்ந்துசெல்ல
உருவவெஞ் சிலையினாற்குத் தம்பியீ துரைக்கு மொண்பொற்
பருகுபைங் கழலி னாருட் பதுமுகன் கேட்க என்றே. க

1898 விழுமணி மாசு மூழ்கிக் கிடந்ததிவ் வுலகம் விற்பக்
கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிரொளி மறையக் காப்பின்
தழுவினீர் உலக மெல்லாந் தாமரை யுறையுஞ் செய்யாள்
வழுவினார் தம்மைப் புல்லாள் வாழ்கநுங் கண்ணி மாதோ.

1899 தொழுததங் கையி னுள்ளுந் துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதுகண் ணரிந்துகொல்லும் படையுடன்ஒடுங்கும்பற்றா(து)
ஒழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற் றாரே.

1900 தோய்தகை மகளிர்த் தோயின் மெய்யணி நீக்கித் தூய்நீர்
ஆய்முது மகளிர் தம்மால் அரில்தபத் திமிரி யாட்டி
வேய்நிறத் தோளி னார்க்கு வெண்துகில் மாலை சாந்தந்
தானல கலங்கள் சேர்த்தித் தடமுலை தோய்க என்றான்.

1901 வண்ணப்பூ மாலை சாந்தம் வாலணி கலன்கள் ஆடை
கண்முகத் துறுத்தித் தூய்மை கண்டலாற் கொள்ள வேண்
அண்ணலம்புள்ளோ டல்லால் ஆயிரம் பேடைச்சேவல் [டா
உண்ணுநீ ரமுதங் காக்க ஊகமோ டாய்க என்றான். ரு

1902 அஞ்சனக் கோலின் ஆற்றா நாகம்ஓ ரருவிக் குன்றிற்
குஞ்சரம் புலம்பி வீழக் கூர்நுதி யெயிற்றிற் கொல்லும்
பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காக்க வேண்டும் அரும்பொரு ளாக என்றான்.

1903 பொருந்தலாற் பல்லிபோன்றும் போற்றலாற் றாயரொத்தும்
அருந்தவர் போன்றுகாத்தும் அடங்கலால் ஆமைபோன்றுந்
திருந்துவேற் றெவ்வர் போலத் தீதற எறிந்தும் இன்ப
மருந்தினால் மனைவியொத்தும் மதலையைக் காமின்என்றான்.

1904 பூந்துகில் மாலை சாந்தம் புனைகலம் பஞ்ச வாசம்
ஆய்ந்தளந் தியற்றப் பட்ட அடிசில்நீர் இன்ன வெல்லாம்

மாந்தரின் மடங்க லாற்றற் பதுமுகன் காக்க என்றாங்(கு)
ஏந்துபூண் மார்பன் ஏவ இன்னணம் இயற்றி னானே. அ

வேறு

1905 சிறுகண்யா னையினஞ் சேர்ந்துசே வகங்கொளத்
துறுகலென் றுணர்கலாத் துள்ளிமந் திம்மக
நறியசந் தின்துணி நாறவெந் தனகள்கொண்(டு)
எறியவெள் கிம்மயிர்க் கவரிமா இரியுமே. கூ

1906 புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவளமே அனையன பன்மயிர்ப் பேரெலி
அகழுமிங் குலிகம்அஞ் சனவரைச் சொரிவன
கவளயா னையின்நுதற் றவழுங்கச் சொத்தவே. க0

1907 அண்ணலங் குன்றின்மேல் வருடைபாய்ந் துழக்கலின்
ஒண்மணி பலவுடைந் தொருங்கவை தூளியாய்
விண்ணுளு வுண்டென வீழுமா நிலமிசைக்
கண்ணகல் மரமெலாங் கற்பகம் ஒத்தவே. கக

1908 மானிடம் பழுத்தன கிளுத்தமற் றவற்றயற்
பால்முராட் பயம்பிடைப் பனைமடிந் தனையன
கானிடைப் பாந்தள்கண் படுப்பன துயிலெழ
ஊனுடைப் பொன்முழை யாளிநின் றுலம்புமே. கஉ

1909 சாரலந் திமிசிடைச் சந்தனத் தழைவயின்
நீரதீம் பூமரந் நிரந்ததக் கோலமும்
ஏர்இல வங்கமும் இன்கருப் பூரமும்
ஒருநா விகலந் தோசனை கமழுமே. கங

1910 மைந்தரைப் பார்ப்பன மாமகண் மாக்குழாம்
சந்தன மேய்வன தவழ்மதக் களிற்றினம்
அந்தழைக் கீரடெலாந் திளைப்பஆ மானினம்
சிந்தவால் வெடிப்பன சிங்கமெங் கும்முள. கச

1911 வருக்கையின் கனிதொறும் வானரம் பாய்ந்துராய்ப்
பொருப்பெலாம் பொன்கிடந் தொழுகிமேற் றிருவில்வீழ்ந் [(து)
ஒருக்குலாய் நிலமிசை மிளிர்வவொத் தொளிர்மணி
திருக்கிளர் ஒளிகுலாய் வானகஞ் செகுக்குமே. கரு

1912 வீழ்பனிப் பாறைகள் நெறியெலாம் வெவ்வெயிற்
போழ்தலின் வெண்ணெய்போற் பொழிந்துமட் டொழு
தாழ்முகில் சூழ்பொழிற் சந்தனக் காற்றசைந்(து) [குவ
ஆழ்துயர் செய்யுமவ் வருவரைச் சாரலே. கசு

1913 கூகையுங் கோட்டமுங் குங்கும மும்பரந்(து)
ஏகலா காகிலத் தல்கிவிட் டெழுந்துபோய்த்
தோகையும் அன்னமுந் தொக்குடன் ஆர்ப்பதோர்
நாகநின் காவினுள் நயந்துவிட் டார்களே. கஎ

வேறு

1914 பூத்தகில் தவழும் போர்வை பூசுசாந் தாற்றி பொன்னாற்
கோத்துநீர் பிலிற்றுங் காந்தங் குங்கும வயிரப் பொற்கோய்
சாத்துறி பவழக் கன்னல் சந்தன ஆல வட்டம்
நீத்தவ ரிடத்து நாற்றி நிழல்மணி யுலகஞ் செய்தார். கஅ

1915 நித்தில முலையி னார்தம் நெடுங்கணால் நோக்கப் பெற்றுங்
கைத்தலந் தீண்டப் பெற்றுங் கனிந்தன மலர்ந்த காண்க
வைத்தலர் கொய்யத் தாழ்ந்த மரமுயி ரில்லை யென்பார்
பித்தல ராயிற் பேய்கள் என்றலாற் பேச லாமோ. கசு

1916 பொறிமயில் இழியும்பொற்றூர் முருகனிற்பொலிந்துமாவின்
நெறிமையின் இழிந்துமைந்தன் மணிக்கைமத்திகையின்நீக்கி
வெறுமையி னவரைப் போக்கி வெள்ளிடைப் படாத நீரால்
அறிமயில் அகவுங் கோயில் அடிகளைச் செவ்வி யென்றான்.

1917 எல்லிருட் கனவிற் கண்டேன் கண்ணிடன் ஆடும் இன்னே
பல்லியும் பட்ட பாங்கர் வருங்கொலோ நம்பி யென்று
சொல்லினள் தேவி நிற்பப் பதுமுகன் தொழுது சேர்ந்து
நல்லடி பணிந்து நம்பி வந்தனன் அடிகள் என்றான். உக

1918 எங்கணுன் ஐயன் என்றாட் கடியன்யான் அடிகள் என்னுப்
பொங்கிவில் உமிழ்ந்து மின்னும் புனைமணிக் கடகம் ஆர்ந்த
தங்கொளித் தடக்கை கூப்பித் தொழுதடி தழுவி வீழ்ந்தான்
அங்கிரண் டற்பு முன்னீர் அலைகடல் கலந்த தொத்தார்.

1919 திருவடி தொழுது வீழ்ந்த சிறுவனைக் கண்ட போழ்தே
வருபனி சுமந்த வாட்கண் வனமுலை பொழிந்த தீம்பால்

முருகுடை மார்பிற் பாய்ந்து முழுமெயும் நனைப்ப மாதர்
வருகஎன் களிறென் றேத்தி வாங்குபு தழுவிக்கொண்டாள்.

1920 காளையாம் பருவம் ஓராள் காதல்மீக் கூர்த லாலே
வாளையாம் நெடிய கண்ணுள் மகனைமார் பொடுங்கப் புல்லித்
தாளையா முன்பு செய்த தவத்ததுவிளைவி லாதேன்
தோளையாத்தீர்ந்ததென்றாள் தொழுதகுதெய்வம்அன்னாள்.

1921 வாட்டிறற் குரிசில் தன்னை வாளமரகத்துள் நீத்துக்
காட்டகத் தும்மை நீத்த கயத்தியேற் காண வந்தீர்
சேட்டிளம் பரிதி மார்பிற் சீவக சாமி யீரே
ஊட்டரக் குண்ட செந்தா மரையடி நோவ என்றாள். ௨௫

1922 கெடலருங் குரைய கொற்றங் கெடப்பிறந் ததுவு மன்றி
நடலையுள் அடிகள் வைக நட்புடை யவர்கள் நைய
இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன் தந்த துன்பக்
கடலகத் தழுந்த வேண்டா களைகஇக் கவலை யென்றான்.

1923 யான்அலன் ஔவை யாவாள் சுநந்தையே ஐயற் கென்றுங்
கோன்அலன் தந்தை கந்துக் கடனெனக் குணத்தின் மிக்க
பால்நிலத் துறையுந் தீந்தேன் அனையவாய் அமிர்தம் ஊற
மான்நலங் கொண்ட நோக்கி மகன்மன மகிழச் சொன்னாள்.

1924 எனக்குயிர்ச் சிறுவன் ஆவான் நந்தனே ஐயன் அல்லை
வனப்புடைக் குமரன் இங்கே வருகென மருங்கு சேர்த்திப்
புனக்கொடி மாலை யோடு பூங்குழல் திருத்திப் போற்றார்
இனத்திடை யேற னுக் கின்னளி விருந்து செய்தாள்.

1925 சிறகராற் பார்ப்புப் புல்லித் திருமயில் இருந்த தேபோல்
இறைவிதன் சிறுவர் தம்மை இருகையி னானும் புல்லி
முறைமுறை குமரர்க் கெல்லாம் மொழியமை முகமன் கூறி
அறுசுவை யமிர்த மூட்டி அறுபகல் கழிந்த பின்னாள். ௨௬

வேறு

1926 மரவம் நாகம் மணங்கமழ் சண்பகம்
குரவங் கோங்கங் குடம்புரை காய்வழை
விரவு பூம்பொழில் வேறிருந் தாய்பொருள்
உருவ மாதர் உரைக்குமி தென்பவே. ௩௦

1927 நலிவில் குன்றொடு காடுறை நன்பொருட்
புலிய ஞர்மகட் கோடலுழ் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொள் மன்னர் வழக்கென நேர்பவே. நக

1928 நீதி யாலறுத் தந்நிதி யீட்டுதல்
ஆதி யாய அரும்பகை நாட்டுதல்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே. நஉ

1929 ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலுஞ் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே. நந

1930 வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றியுங் கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னைப்பொருள் செய்யுமே. நச

1931 பொன்னின் ஆகும் பொருபடை அப்படை
தன்னின் ஆகுந் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே. நரு

1932 நிலத்தின் நீங்கி நிதியினுந் தேய்ந்துநங்
குலத்திற் குன்றிய கொள்கையம் அல்லதூஉங்
கலைக்க ணாளரும் ஈங்கில்லை காளைநீ
வலித்த தென்னென வள்ளலுங் கூறுவான். நசு

வேறு

1933 எரியொடு நிகர்க்கும் ஆற்றல் இடிக்குரற் சிங்கம் ஆங்கோர்
நரியொடு பொருவ தென்றூற் சூழ்ச்சிநற் றுணையொ டென்
பரிவொடு கவல வேண்டா பாம்பவன் கலுழன் ஆகுஞ் [னும்
சொரிமதுச் சுரும்புண் கண்ணிச் சூழ்கழல் நந்தனென்றான்.

1934 கெலுழனே நந்தன் என்னக் கிளரொளி வனப்பி னானைக்
கலுழத்தன் கையாற் நீண்டிக் காதலிற் களித்து நோக்கி

வலிகெழு வயிரத் தூண்போற் றிரண்டுநீண் டமைந்த திண்டோள்
கலிகெழு நிலத்தைக் காவா தொழியுமோ காளைக் கென்றாள்.

1935 இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும் மதிவல்லார்க் கரிய துண்டே
தடத்திடைக் காக்கை யொன்றே ஆயிரங் கோடி கூகை
இடத்திடைஅழுங்கச்சென்றாங் கின்னுயிர் செகுத்ததன்றே.

1936 இழைபொறை யாற்ற கில்லா திட்டிடை தளர நின்ற
குழைநிற முகத்தி னார்போற் குறித்ததே துணிந்துசெய்யார்
முழையுறை சிங்கம்பொங்கி முழங்கிமேற்பாய்ந்துமைதோய்
வழையுறை வனத்து வன்கண் நரிவலைப் பட்ட தன்றே. ௪௦

1937 ஊழிவாய்த் தீயொடொப்பான் பதுமுகன்உரைக்கும்ஒன்னார்
ஆழிவாய்த் துஞ்ச மற்றெம் ஆற்றலான் நெருங்கி வென்று
மாழைநீள் நிதியந் துஞ்சு மாநிலக் கிழமை யெய்தும்
பாழியாற் பிறரைவேண்டேம் பணிப்பதேபாணி என்றான்.

1938 பொருவருங் குரைய மைந்தர் பொம்மென உரறி மற்றித்
திருவிருந் தகன்ற மார்பன் சேவடி சேர்ந்த யாங்கள்
எரியிருந் தயரும் நீர்மை யிருங்கதிர் ஏற்ற தெவ்வர்
வருபனி யிருளு மாக மதிக்களம் அடிகள் என்றார். ௪௨

வேறு

1939 கார்தோன்ற வேமலரும் முல்லை கமலம் வெய்யோன்
தேர்தோன்ற வேமலருஞ் செம்மல்நின் மாமன் மற்றுன்
சீர்தோன்ற வேமலருஞ் சென்றவன் சொல்லினோடே
பார்தோன்ற நின்ற பகையைச்செறற் பாலை யென்றாள். ௪௩

1940 நன்றப் பொருளே வலித்தேன்மற் றடிகள் நாளைச்
சென்றப் பதியுள் எமர்க்கேயென துண்மை காட்டி
அன்றைப் பகலே அடியேன்வந் தடைவன் நீமே
வென்றிக் களிற்று னுழைச்செல்வது வேண்டும் என்றான்.

1941 வேற்றைவந் தன்ன நுதிவெம்பரற் கானம் முன்னி
நூற்றைவ ரோடு நடந்தாள்நுதி வல்வில் மைந்தன்
காற்றிற் பரிக்குங் கலிமான்மிசைக் காவல் ஓம்பி
ஆற்றற் கமைந்த படையோடதர் முன்னி னானே. ௪௫

1942 மன்றற் கிடனா மணிமால்வரை மார்பன் வான்கண்
நின்றெத் திசையும் அருவிப்புனல் நீத்தம் ஓவாக்
குன்றுங் குளிர்நீர்த் தடஞ்சூழ்ந்தன கோல யாறுஞ்
சென்றப் பழனப் படப்பைப்புனல் நாடு சேர்ந்தான். சசு

வேறு

1943 காவின்மேற் கடிமலர் நெகிழ்ந்த நாற்றமும்
வாவியுள் இனமலர் உயிர்த்த வாசமும்
பூவிரி கோதையர் புனைந்த சாந்தமும்
ஏவலாற் கெதிரெதிர் விருந்து செய்தவே. சஎ

1944 கரும்பின்மேற் றொடுத்ததேன் கலிகொள் தாமரைச்
சுரும்பின்வாய்த் துளித்தலிற் றுவைத்த வண்டொடு
திருந்தியாழ் முரல்வதோர் தெய்வப் பூம்பொழிற்
பொருந்தினன் புனைமணிப் பொன்செய் பூணினன். சஅ

1945 பொறைவிலங் குயிர்த்தன பொன்செய் மாமணிச்
செறிகழல் இளைஞருஞ் செல்லல் நீங்கினர்
நறைவிரி கோதையர் நாம வேலினற்(கு)
அறுசுவை நால்வகை யமுதம் ஆக்கினர். சகூ

1946 கட்டியின் அரிசியும் புழுக்குங் காணமும்
புட்டில்வாய்ச் செறித்தனர் புரவிக் கல்லவும்
நெட்டிருங் கரும்பொடு செந்நெல் மேய்ந்துநீர்
பட்டன வளநிழற் பரிவு தீர்ந்தவே. ருo

1947 குழிமதுக் குவளையங் கண்ணி வார்குழற்
பிழிமதுக் கோதையர் பேண இன்னமு(து)
அழிமதக் களிறனன் அயின்ற பின்னரே
கழிமலர் விழித்தகண் கமலம் பட்டவே. ருக

1948 எரிமணி இமைத்தன எழுந்த தீம்புகை
புரிநரம் பிரங்கின புகன்ற தீங்குழல்
திருமணி முழவமுஞ் செம்பொற் பாண்டிலும்
அருமணி யின்குரல் அரவஞ் செய்தவே. ருஉ

1949 தெளித்தஇன் முறுவலம் பவளஞ் செற்றவாய்க்
களிக்கயல் மழைக்கணார் காமங் காழ்கொளீஇ

விளித்தஇன் னமிர்துறழ் கீதம் வேனலான்
அளித்தபின் அமளியஞ் சேக்கை எய்தினான். ருங

1950 தீங்கரும் பனுக்கிய திருந்து தோள்களும்
வீங்கெழிற் றோள்களு மிடைந்து வெம்முலை
பூங்குளிர் தாரொடு பொருது பொன்னுக
ஈங்கனங் கணையிரு ளெல்லை நீந்தினான். ருச

1951 கணைகதிர்க் கடவுள்கண் விழித்த காலையே
நணைமலர்த் தாமரை நக்க வண்கையாற்
புணைகதிர்த் திருமுகங் கழுவிப் பூமழை
முனைவனுக் கிறைஞ்சினான் முருக வேளனான். ருரு

1952 நாட்கடன் கழித்தபின் நாம வேலினான்
வாட்கடி எழில்நகர் வண்மை காணிய
தோட்பொலி மணிவளைத் தொய்யில் மாதரார்
வேட்பதோர் வடிவொடு விரைவின் எய்தினான். ருசு

1953 அலத்தகக் கொழுங்களி இழுக்கி அஞ்சொலார்
புலத்தலிற் கனைந்தபூண் இடறிப் பொன்னிதழ்
நிலத்துகு மாலைகால் தொடர்ந்து நீள்நகர்
செலக்குறை படாததோர் செல்வம் மிக்கதே. ருஎ

வேறு

1954 கத்தி கைக்கழு நீர்கமழ் கோதையர்
பத்தி யிற்படு சாந்தணி வெம்முலை
சித்தி யிற்படர் சிந்தையி னுரையும்
இற்றி சைப்படர் வித்திடு நீரவே. ருஅ

1955 வஞ்சி வாட்டிய வாண்மின் நுசுப்பினர்
பஞ்சி ஊட்டிய பாடகச் சீறடி
குஞ்சி சூட்டிய மைந்தர் குழாமலால்
இஞ்சி வட்டம் இடம்பிறி தில்லையே. ருகூ

1956 மின்னின் நீள்கடம் பின்நெடு வேள்கொலோ
மன்னும் ஐங்கணை வார்சிலை மைந்தனோ
என்ன னோஅறி யோம்உரை யீரெனப்
பொன்னங் கொம்பனை யார்புலம் பெய்தினார். கூ0

1957 விண்ண கத்திளை யான்அன்ன மெய்ப்பொறி
அண்ண லைக்கழி மீன்கவர் புள்ளென
வண்ண வார்குழல் ஏழையர் வாள்நெடுங்
கண்ணெ லாங்கவர்ந் துண்டிடு கின்றவே. ௬௧

வேறு

1958 புலாற்றலைத் திகழும் வைவேற் பூங்கழற் காளி னானை [திக்
நிலர்த்தலைத் திகழும் பைம்பூண் நிழல்மணி வடத்தோ டேங்
குலாய்த்தலைக் கிடந்து மின்னுங் குவிமுலை பாய வெய்தாய்க்
கலாய்த்தொலைப் பருகுவார்போற் கன்னியர் துவன்றினாரே.

1959 வேல்நெடுங் கண்கள் அம்பா விற்படை சாற்றி யெங்கும்
தேநெடுங் கோதை நல்லார் மைந்தனைத் தெருவில் எய்ய
மான்நெடு மழைக்கண் நோக்கி வானவர் மகளும் ஒப்பாள்
பால்நெடுந் தீஞ்சொ லாளோர் பாவைபந் தாடு கின்றாள். ௬௩

வேறு

1960 குழல்மலிந்த கோதைமாலை பொங்கவெங் கதிர்ம்முலை
நிழல்மலிந்த நேர்வடங் நிழற்படப் புடைத்தர
எழில்மணிக் குழைவில்வீச இன்பொனோலை மின்செய
அழன்மணிக் கலாபமஞ் சிலம்பொடார்ப்ப ஆடுமே. ௬௪

1961 அங்கையங் தலத்தகத்த ஐந்துபங் தமர்ந்தவை
மங்கையாட மாலைசூழும் வண்டுபோல வந்துடன்
பொங்கிமீ தெழுந்துபோய்ப் பிறழ்ந்துபாய்த லின்றியே
செங்கயற்கண் புருவந்தம்முள் உருவஞ்செய்யத் திரியுமே.

1962 மாலையுட் கரந்தபந்து வந்துகைத் தலத்தவாம்
ஏலநா றிருங்குழற் புறத்தவாண் முகத்தவாம்
நூலினேர் நுசுப்புநோவ வுச்சிமாலை யுள்ளவாம்
மேலெழுந்த மீநிலத்த விரலகைய ஆகுமே. ௬௬

1963 கொண்டுநீங்கல் கோதைவேய்தல் குங்குமம் அணிந்துராய்
எண்டிசையும் ஏணியேற் றிலங்கநிற்றல் பத்தியின்
மண்டலம் வரப்புடைத்தன் மயிலிற்பொங்கி இன்னணம்
வண்டுந்தேனும் பாடமாதர் பந்துமைந்தற் றாடுமே. ௬௭

1964 பந்துமைந்தற் றாடுவாள் பணைம்முலையிற் குங்குமஞ்
சுந்தரப் பொடிதெளித்த செம்பொற்சுண்ணம் வாணுதற்
றந்துசுட்டி யிட்டசாந்தம் வேரின்வார்ந் திடைம்முலை
இந்திர திருவின்நெக் குருகியென்ன வீழ்ந்தவே. ௬௮

1965 நன்மணிச் சிலம்பினோடு கிண்கிணிந் நகந்நகும்
மின்மலர்ந்த முல்லைமாலை நக்கிமிக் கிறந்தெழுந்து [பாய்ந்து
பொன்மலர்ந்த கோதைபந்து பொங்கியொன்று போந்து
வில்மலர்ந்த வேலினான்முன் வீதிபுக்கு வீழ்ந்ததே. ௬௯

1966 வீழ்ந்தபந்தின் மேல்விரைந்து மின்னின்நுண் நுசுப்பினாள்
சூழ்ந்தகாசு தோன்றஅந் துகில்நெகிழ்ந்து பூங்குழல்
தாழ்ந்துகோதை பொங்கிவீழ்ந்து வெம்முலைகள் தைவரப்
போழ்ந்தகன்ற கண்ணிவந்து பூங்கொடியின் நோக்கினாள்.

வேறு

1967 மந்தார மாலை மலர்வேய்ந்து மகிழ்ந்து தீந்தேன்
கந்தாரஞ் செய்து களிவண்டு முரன்று பாடப்
பந்தார்வஞ் செய்து குவளைக்கண் பரப்பி நின்றாள்
செந்தா மரைமேற் றிருவின்னுரு எய்தி நின்றாள். ௭௧

1968 நீர்தங்கு திங்கள் மணிநீள்நிலந் தன்னுள் ஓங்கிச்
சீர்தங்கு கங்கைத் திருநீர்த்தண் துவலை மாந்திக்
கார்தங்கி நின்ற கொடிகாளையைக் காண்ட லோடு
பீர்தங்கிப் பெய்யா மலரிற்பிறி தாயி னாளே. ௭௨

1969 பெண்பா லவர்கட் கணியாய்ப் பிரியாத நாணுந்
திண்பால் நிறையுந் திருமாமையுஞ் சேர்ந்த சாயல்
கண்பாற் கவினும் வளையுங்கவர்ந் திட்ட கள்வன்
மண்பால் இழிந்த மலரைங்கணை மைந்தன் என்றாள். ௭௩

1970 என்றாள் நினைந்தாள் இதுபோலுமிவ் வேட்கை வண்ணஞ்
சென்றே படினுஞ் சிறந்தார்க்கும் உரைக்க லாவ(து)
அன்றா யரிதாய் அகத்தேசுட் டுருக்கும் வெந்தீ
ஒன்றே உலகத் துறுநோய்மருந் தில்ல தென்றாள். ௭௪

1971 நிறையாதும் இல்லை நெருப்பிற்சுடுங் காமம் உண்டேற்
குறையா நிறையின் ஒருகுன்றியுங் காமம் இல்லை

புறையாய் அறையும் பசப்பென்று பகர்ந்து வாடி
அறைவாய்க் கடல்போல் அகன்காமம் அலைப்ப நின்றாள்.

1972 நெஞ்சங் கலங்கி நிறையாற்றுப் படுத்து நின்றாள்
அஞ்செங் கழுநீர் அலர்ந்தம்மதி வாண் முகத்தே
வஞ்சம் வழங்கா தவன்கண்களின் நோக்க மாதோ
தஞ்சம் வழங்கித் தலைக்கொண்டது காம வெந்தீ. ௭௬

1973 பூவுண்ட கண்ணாள் புருவச்சிலை கோலி எய்ய
ஏவுண்ட நெஞ்சிற் கிடுபுண்மருந் தென்கொல் என்னா
மாவுண்ட நோக்கின் மடவாளை மறித்து நோக்கிக்
கோவுண்ட வேலான் குழைந்தாற்றல னாயி னானே. ௭௭

1974 காமக் கடுநோய்க் கனல்சூழ்ந்துடம் பென்னு மற்றிவ்
ஈமத்தி னோடும் உடனேசுட ஏக லாற்றான்
தூமத்தின் ஆர்ந்த துகிலேந்திய அல்குல் தாதை
பூமொய்த் திருந்த கடைமேற்புலம் புற்றி ருந்தான். ௭௮

வேறு

1975 நாவிநோய் செய்த நறுங்குழலாள் நாள்நீலக்
காவிநோய் செய்த கருங்கயற்கட் பூங்கொடிஎன்
ஆவிநோய் செய்த அணங்கென் றறியாதேன்
மேவிநோய் தீர வினாத்தருவார் இல்லையே. ௭௯

1976 தெண்ணீர்ப் பனிக்கயத்து மட்டலர்ந்த தேங்குவளைக்
கண்ணீர்மை காட்டிக் கடல்போல் அகன்றஎன்
உண்ணீர்மை யெல்லாம் ஒருநோக்கி னிற்கவர்ந்த
பெண்ணீர்மை மேனாட் பிறந்தும் அறியுமோ. ௮௦

1977 கருங்குழலுஞ் செவ்வாயுங் கண்மலருங் காதும்
அரும்பொழுகு பூண்முலையும் ஆருயிர்க்கே கூற்றம்
விருந்தினராய் வந்தாரை வெற்றுடலா நோக்கும்
பெருந்திருவி யார்மகள்கொல் பேர்யாதாங் கொல்லோ. ௮௧

1978 வாருடுத்த வெம்முலைய வண்டார்பூங் கோதையைப்
பேர்கொடுத்தார் பெண்ணென்றார் கூற்றமே யென்றிட்டால்
தாருடுத்த நீள்மார்பர் தம்முயிர்தாம் வேண்டுபவேல்
நீருடுத்த இந்நகரை நீத்திட் டொழியாரோ. ௮௨

1979 பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும்
திங்கள் முகத்திலங்கச் செவ்வா யெயிறிலங்கக்
கொங்குண் குழல்தாழக் கோட்டெருத்தஞ் செய்தநோக்(கு)
எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுமே. ௮௩

1980 வாளார் மதிமுகத்த வாளோ வடுப்பிளவோ
தாளார் கழுநீரோ நீலமோ தாமரையோ
நீள்வேலோ அம்போ கயலோ நெடுங்கண்ணே
கோளார்ந்த கூற்றமோ கொல்வான் தொடங்கினவே. ௮௪

வேறு

1981 என்றாங்கொல் மாதர் நலமெய்துவ தென்று சிந்தித்(து)
ஒன்றார்க் கடந்தான் புலம்புட்கொண் டிருத்த லோடும்
அன்றே அமைந்த பசும்பொன்அட ராறு கோடி
குன்றமல் விற்றான் குளிர்சாகர தத்தன் என்பான். ௮௫

1982 திருமல்க வந்த திருவேயெனச் சேர்ந்து நாய்கன்
செருமல்கு வேலாய்க் கிடமாலிது என்று செப்ப
வரிமல்கு வண்டுண் டறைமாமலர்க் கண்ணி மைந்தன்
எரிமல்கு செம்பொ னிலமாமனொ டேறி னானே. ௮௬

1983 நம்பன் சிறிதே இடைதந்திது கேட்க நாளும்
அம்பொன் நகருள் அமைந்தேன்மற் றெனக்க மைந்தாள்
கம்பம் இலாதாள் கமலைக்கு விமலை யென்பாள்
செம்பொன் வியக்கு நிறத்தாள்திரு வன்ன நீராள். ௮௭

1984 பூம்பாவை வந்து பிறந்தாள்அப் பிறந்த போழ்தே
ஆம்பால எல்லாம் அறிவாரன் றெழுதி யிட்டார்
தூம்பியாது மில்லாக் குளம்போன் றதென் தோமில்பண்டம்
கூம்பாத செல்வக் கொடியேயிது கேண்மோ என்றான்.

1985 மங்கைக் குரியான் கடையேறும்வந் தேற லோடும்
வங்கந் நிதியம் உடன்வீழுமற் றன்றி வீழா(து)
எங்குந் தனக்கு நிகரில்லவன் ஏற்ற மார்பம்
நங்கைக் கியன்ற நறும்பூவணைப் பள்ளி என்றான். ௮௯

1986 ஏழாண்டின் மேலும் இரண்டாண்டிரண் டெய்தி நின்றாள்
வீழா நிதியும் உடன்வீழ்ந்தது வில்வ லாய்க்கே
ஊழாயிற் றெல்குந் நுசுப்பஃக உருத்து வீங்கிச்
சூழாரம் வைத்த முலையாள்நலஞ் சூழ்க என்றான். ௯௦

வேறு

1987 ஏற்ற கைத்தொடி வீழ்ந்தென ஏந்தலைத்
தேற்றி னான்திரு மாநலஞ் செவ்வனே
தோற்ற மாதருந் தோன்றலைக் காண்டலும்
ஆற்றி னாள்தன தாவியுந் தாங்கினாள். ௯௧

1988 அம்பொற் கொம்பனை யாளையும் வார்கழற்
செம்பொற் குன்றனை யானையுஞ் சீர்பெறப்
பைம்பொன் நீள்நகர்ப் பல்லியம் ஆர்த்தெழ
இம்ப ரில்லதோர் இன்பம் இயற்றினார். ௯௨

1989 கட்டில் ஏறிய காமரு காளையும்
மட்டு வாயவிழ் மாமலர்க் கோதையும்
விட்டு நீங்குத லின்மையின் வீவிலார்
ஒட்டி யீருடம் போருயிர் ஆயினார். ௯௩

1990 நிலவு வெண்கதிர் நீர்மையம் பூந்துகில்
கலவங் கண்புதை யாது கனற்றலின்
உலக மூன்றும் உறுவிலைத் தென்பவே
புலவு வேற்கண்ணி னாள்முலைப் போகமே. ௯௪

1991 தேன்அ வாங்கமழ் கண்ணியுந் தெவ்வர்தம்
ஊன்அ வாங்கதிர் வேலுறு காளையும்
கூன்அ வாங்கடி நாறுமென் பள்ளிமேல்
வான்அ வாம்வகை யால்வைகி னார்களே. ௯௫

வேறு

1992 வெண்மதி நெற்றி தேய்த்து விழுத்தழும் பிருப்ப நீண்ட
அண்ணல்நன் மாடத் தங்கண் அகிற்புகை யமளி யேறிப்

பண்ணமை மகர வீணை நரம்புரீஇப் பாவை பாட
மண்ணமை முழவுத் தோளான் மகிழ்ச்சியுள் மயங்கினானே.

1993 இன்னரிச் சிலம்பொ டேங்கிக் கிண்கிணி இகலி ஆர்ப்பப்
பொன்னரி மாலை தாழப் பூஞ்சிகை அவிழ்ந்து சோர
மின்னிருங் கலாபம் வீங்கி மிளிர்ந்துகண் இரங்க வெம்பித்
துன்னருங் களிகொள் காமக் கொழுங்கனி சுவைத்து விள்ளான்.

1994 தொழித்தவண் டிமிருங் கோதை துணைமுலைமுழாலிற் பூம்பட்(டு)
அழித்துமட் டொழுகுந் தாரான் மணிவள்ளத் தாய்ந்த தேறல்
எழிற்பொலி மாதர்க் கேந்த இனிதினின் நுகர்ந்து காமக்
கொழித்திரை கடலுள் மூழ்கிக் கோதைகண் துயின்ற அன்றே.

1995 பாசிலை சுருட்டி மைந்தன் கொடுக்கிய பரந்து மின்னுந்
தூசுலாம்அல்குல்தீண்டத் துயிற்கண்கள் விழித்ததோற்றம்
வாசவான் குவளை மெல்ல வாய்விடா நின்ற தொக்கும்
ஏசுவ தொன்று மில்லா இணைவட முலையி னாட்கே. கூகூ

1996 கங்குற்பாற் புகுந்த கள்வன் இவனெனக் கதுப்பிற் றாழ்ந்த
தொங்கலான் முன்கை யாத்துச் சொல்லுநீ வந்த தென்ன
நங்கையான் பசித்துவந்தேன் எப்பொருள் நயப்ப தென்றாட்(கு)
அங்கலுழ் மேனி யாய்நின் அணிநல அமிழ்தம் என்றான்.

1997 செயிர்த்தவள் சிவந்து நோக்கிச் சீறடி சென்னி சேர்த்தி
அயிர்ப்பதென்பணிசெய்வேனுக் கருளிற்றுப்பொருளதென்ன
உயிர்ப்பதும் ஓம்பி யொன்றும் உரையலை யாகி மற்றிப்
பயிர்ப்பில்பூம் பள்ளி வைகு பகட்டெழில் மார்ப என்றாள்.

1998 உள்ளிழு துடைய வெம்பி உற்பல வுருவு கொண்ட
வெள்ளியிற் புனைந்த கோல விளக்கொளி வெறுவி தாக
வள்ளிதழ்க் கோதை வல்லான் வட்டிகை நுதியின் வாங்கிப்
பள்ளிமேல் எழுதப் பட்ட பாவைபோ லாயி னாளே. கO௨

வேறு

1999 மங்கையர் பண்ணிய மருத யாழ்குழல்
நங்கையைப் பிரியுமிந் நம்பி இன்றெனா
அங்கதற் கிரங்கின ஆரும் பேதுறக்
கங்குல்போய் நாட்கடன் கழிந்த தென்பவே. கOந

2000 ஏந்துபூங் கோதைகள் திருத்தி ஏர்படச்
சாந்துகொண் டிளமுலை யெழுதித் தையல்தன்
காந்தள முகிழ்விரல் கையி னாற்பிடித்(து)
ஆய்ந்தவட் கிதுசொலும் அலங்கல் வேலினான். க௦௪

2001 பூவினுட் டாழ்குழற் பொன்செ யேந்தல்குல்
மாவினுட் டாழ்தளிர் மருட்டு மேனியாய்
காவினுட் டோழரைக் கண்டு போதர்வேன்
ஏவினுட் டாழ்சிலை எறிந்த கோலினே. க௦௫

2002 என்றவன் உரைத்தலும் எழுது கண்மலர்
நின்றநீ ரிடைமணிப் பாவை நீந்தலின்
மன்றல்நா றரிவையைத் தெருட்டி மாமணிக்
குன்றனான் கொடியவள் குழைய ஏகினான். க௦௬

9. சுரமஞ்சரியார் இலம்பகம்

2003 வாளிரண்டு மாறுவைத்த போல்மழைக்கண் மாதரார்
நாளிரண்டு சென்றவென்று நையமொய்கொள் காவினுள்
தோளிரண்டும் அன்னதோழர் தோன்றலைப் புணர்ந்தபின்
தாளிரண்டும் ஏத்திநின்று தையல்நாமம் வேண்டினார். ௧

2004 பாடுவண் டிருந்தவன்ன பல்கலை அகலல்குல்
வீடுபெற் றவரும்வீழும் வெம்முலை விமலையென்(று)
ஆடுவான் அணிந்தசீர் அரம்பையன்ன வாணுதல்
ஊடினும் புணர்ந்ததொத் தினியவள் உளாளரோ. ௨

2005 அம்பொரைந் துடைய்யகாமன் ஐயனென்ன அந்தணன்
நம்புநீர ரல்வர்நன் குரங்குநீர ராயினும்
தங்குரவ்வர் தாங்கொடுப்பின் நெஞ்சுநேர்ந்து தாழ்வர்தாம்
பொங்கரவ்வ அல்குலார் எனப்புகன்று சொல்லினான். ௩

2006 அற்றுமன்று கன்னியம் மடந்தைமார் அணிநலம்
முற்றினாரை நீடுவைப்பின் மூள்கும்வந்து பாவமும்
குற்றமற்று மாகுமென்று கோதைசூழ்ந்து கூறினார்க்(கு)
உற்றடுத் தயாவுயிர்த் தொழிதல்யார்க்கும் ஒக்குமே. ௪

வேறு

2007 மதுக்குடம் விரிந்தன மாலை யாரொடும்
புதுக்கடி பொருந்துதி புக்க ஊரெலாம்
விதிக்கிடை காணலாம் வீதி மாநகர்
மதிக்கிடை முகத்தியோர் மடந்தை ஈண்டையாள். ௫

2008 ஆடவர் தனதிடத் தருகு போகினும்
நாடிமற் றவர்பெயர் நயந்து கேட்பினும்
வீடுவல் உயிரென வெகுளும் மற்றவள்
சேடியர் வழிபடச் செல்லுஞ் செல்வியே. ௬

2009 காமனே செல்லினுங் கனன்று காண்கிலாள்
வேமெனக் குடம்பெனும் வேய்கொள் தோளியை
ஏமுறுத் தவள்நலம் நுகரின் எந்தையை
யாமெலாம் அநங்கமா திலகன் என்றுமே. ௭

வேறு

2010 தாசியர் முலைகள் தாக்கத் தளையவிழ்ந் துடைந்த தண்தார்
வாசங்கொண் டிலங்கு முந்நூல் வலம்படக் கிடந்த மார்ப
பேசிய பெயரி னாளைப் பேதுறு தொழிவே னாகின்
ஆசுமன் பிலாத புன்பெண் கூந்தல்யான் அணைவல் என்றான்.

2011 வண்டுதேன் சிலைகொள் நாணா மாந்தளிர் மலர்கள் அம்பாக்
கொண்டவன்கோட்டந்தன்னுட்கொடியினைக்கொணர்ந்துநீல
உண்டது காற்றி ஆண்பேர் ஊட்டுவல் உருவக் காமன் [ம்
கண்டபொற் படிவஞ் சார்ந்து கரந்திரு நாளை என்றான்.

வேறு

2012 இழைக்கண் வெம்முலை இட்டிடை ஏந்தல்குல்
மழைக்கண் மாதரை மாலுறு நோய்செய்வான்
முழைக்கண் வாளரி யேறன மொய்ம்பினான்
உழைக்க ணாளர்க் குரைத்தெழுந் தானரோ. ௧௦

2013 சோருங் காரிகை யாள்சுர மஞ்சரி
ஆரஞ் சூடிய அம்முலைப் பூந்தடந்
தாரும் மார்பமுந் தண்ணெனத் தோய்வதற்(கு)
ஓரும் உள்ளம் உடன்றெழு கின்றதே. ௧௧

வேறு

2014 கடைந்தபொற் செப்பெனக் கதிர்த்து வீங்கின
வடஞ்சுமந் தெழுந்தன மார்க்கண் வெம்முலை
மடந்தைதன் முகத்தஎன் மனத்தின் உள்ளன
குடங்கையின் நெடியன குவளை யுண்கணே. ௧௨

2015 எத்தரு மல்லிகை மாலை ஏந்திய
பூத்தலைக் கருங்குழற் புரியி னாற்புறம்
யாத்துவைத் தலைக்குமிவ் வருளி லாள்நலங்
காய்த்தியென் மனத்தினைக் கலக்கு கின்றதே. ௧௩

2016 சில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சிறடிச்
செல்விதன் திருநலஞ் சேரும் வாயில்தான்
அல்லலங் கிழவனோர் அந்த ணாளனைச்
செல்வல்யான் தெளிதக வுடைத்தென் றெண்ணினான். ௧௪

2017 அணங்கர வுரித்ததோல் அனைய மேனியன்
வணங்குநோன் சிலையென வளைந்த யாக்கையன்
பிணங்குநூல் மார்பினன் பெரிதோர் புத்தகம்
உணர்ந்துமூப் பெழுதின தொப்பத் தோன்றினான். கரு

2018 வெண்ணரை யுடம்பினன் விதிர்த்த புள்ளியன்
நுண்ணவிர் அறுவையன் நொசிந்த நோக்கினன்
கண்ணவிர் குடையினன் கைத்தண் டூன்றினன்
பெண்ணலங் காதலிற் பேயும் ஆயினான். கசு

2019 யாப்புடை யாழ்மிட றென்னுந் தோட்டியால்
தூப்புடை யவள்நலந் தொடக்கும் பாகனாய்
மூப்பெனு முகபடாம் புதைந்து முற்றிழை
காப்புடை வளநகர் காளை எய்தினான். கஎ

2020 நற்றொடி மகளிரும் நகர மைந்தரும்
எற்றிவன் மூப்பென இரங்கி நோக்கவே
பொற்றொடி வளநகர் வாயில் புக்கனன்
பற்றிய தண்டொடு பைய மெல்லவே. கஅ

வேறு

2021 தண்டுவலி யாகநனி தாழ்ந்துதளர்ந் தேங்கிக்
கண்டுகடை காவலர்கள் கழறமுகம் நோக்கிப்
பண்டையிளங் காலுவப்பன் பாலடிசில் இந்நாள்
கண்டுநயந் தார்தருவ காதலிப்பல் என்றான். ககூ

2022 கையிற்றொழு தார்கழிய மூப்பிற்செவி கேளார்
மையலவர் போலமனம் பிறந்தவகை சொன்னார்
பையநடக் கென்றுபசிக் கிரங்கியவர் விடுத்தார்
தொய்யில்முலை யவர்கள்கடை தோன்றல்நனி புக்கான். உ0

2023 கோதையொடு தாழ்ந்துகுழல் பொங்கிஞிமி றார்ப்ப
ஓதமணி மாலையொடு பூண்பிறழ ஓடி
ஏதமிது போமினென என்னுமுரை ஈயான்
ஊதவுகு தன்மையினொ டொல்கியுற நின்றான். உக

2024 நச்சுவிசித் தியாத்தகதிர் முலையர்மணி யயில்வாள்
நச்சுநனை யம்புசிலை நடுங்கவுடன் ஏந்தி
அச்சமுறுத் தமுதுபுளித் தாங்குத்தம தீஞ்சொல்
வெச்சென்றிடச் சொல்லிவிரி கோதையவர் சூழ்ந்தார். உஉ

2025 பாவமிது நோவவுரை யன்மின்முது பார்ப்பார்
சாவர்தொடி னேகடிது கண்டவகை வண்ணம்
ஓவியர்தம் பாவையினொ டொப்பரிய நங்கை
ஏவல்வகை கண்டறிதும் என்றுசிலர் சொன்னார். உந

2026 கையவளை மையகுழல் ஐயரிய வாட்கண்
மையுமிடை வெய்யமுலை நங்கையொரு பார்ப்பான்
உய்வதிலன் ஊழின்முது மூப்பினொடும் வந்தான்
செய்வதுரை நொய்தினெனச் சேறுமெழு கென்றாள். உச

2027 மாலைபல தாழ்ந்துமதுப் பிலிற்றிமணங் கமழுங்
கோலஅகிற் றேய்வைகொழுஞ் சாந்தமுலை மெழுகிப்
பாலைமணி யாழ்மழலை பசும்பொனிலத் திழிவாள்
சோலைவரை மேலிழியுந் தோகைமயில் ஒத்தாள். உரு

2028 சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்புநடை கற்பதென வந்தாள். உசு

2029 வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட
அந்தில்அத னுயபயன் என்னைமொழி கென்றாள்
முந்திநலி கின்றமுது மூப்பொழியும் என்றான். உஎ

2030 நறவிரிய நாறுகுழ லாள்பெரிது நக்குப்
பிறருமுள ரோபெறுநர் பேணிமொழி கென்னத்
துறையறிந்து சேர்ந்துதொழு தாடுநரில் என்றற்(கு)
அறிதிர்பிற நீவிரென ஐயமிலை என்றான். உஅ

2031 செத்தமரம் மொய்த்தமழை யாற்பெயரும் என்பார்
பித்தரிவர் உற்றபிணி தீர்த்துமென எண்ணி
அத்தமென மிக்கசுடர் அங்கதிர் சுருக்கும்
மொய்த்தமணி மாடமிசை அத்தக வடைந்தாள். உகூ

2032 வடிவமிது மூப்பிளிது வார்பவள வல்லிக்
கடிகைதுவர் வாய்கமலுங் கண்ணொடடி வண்ணம்
கொடிதுபசி கூர்ந்துளது கோல்வளையி னீரே
அடிசில்கடி தாக்கியிவ ணேகொணர்மின் என்றாள். ௩௦

2033 நானமுரைத் தாங்குநறு நீர்அவனை யாட்டி
மேனிகிளர் வெண்துகிலும் விழுப்பொனியல் நூலும்
பால்நலங்கொள் தீங்கிளவி பவித்திரமும் நல்கத்
தானமர்ந்து தாங்கியமை தவிசின்மிசை இருந்தான். ௩௧

2034 திங்கள்நலஞ் சூழ்ந்ததிரு மீன்களெனச் செம்பொற்
பொங்குகதிர் மின்னுபுகழ்க் கலங்கள்பல பரப்பி
இங்குசுவை யின்னமிர்தம் ஏந்தமிகு சான்றோன்
எங்குமிலை இன்னசுவை என்றுடன் அயின்றான். ௩௨

2035 தமிழ்தழிய சாயலவர் தங்குமலர்த் தூநீர்
உமிழ்கரகம் ஏந்தஉர வோன்அமர்ந்து பூசி
அமிழ்தனைய பஞ்சமுக வாசம்அமைத் தாய்ந்த
கமழ்திரையுங் காட்டஅவை கொண்டுகவுள் அடுத்தான். ௩௩

2036 வல்லதெனை யென்னமறை வல்லன்மட வாய்யான்
எல்லையெவன் என்னப்பொருள் எய்திமுடி காறும்
சொல்லுமினும் நீவிர்கற்ற காலமெனத் தேன்சோர்
சில்லென்கிளிக் கிளவியது சிந்தையிலன் என்றான். ௩௪

2037 இன்னவர்கள் இல்லைநிலத் தென்றுவியந் தேத்தி
அன்னமன மென்னடையி னாள்அமர்ந்து நோக்கப்
பின்னையிவள் போகுதிறம் பேசுமென எண்ணித்
தன்னஞ்சிறி தேதுயின்று தாழஅவள் நக்காள். ௩௫

2038 கோலமணி வாய்க்குவளை வாட்கண்மட வாளைச்
சாலமுது மூப்புடைய சாமிமுகம் நோக்கிக்
காலுமிக நோஞ்சிறிது கண்ணுந்துயில் குற்றேன்
ஏலங்கமழ் கோதையிதற் கென்செய்குரை என்றான். ௩௬

2039 மட்டுவிரி கோதைமது வார்குழலி னாள்தன்
பட்டுநிணர் கட்டில்பரி வின்றியுறை கென்றாள்
இட்டஅணை மேலினிது மெல்லென அசைந்தான்
கட்டழல்செய் காமக்கட லைக்கடைய லுற்றான். ௩௭

2040 காலையொடு தாழ்ந்துகதிர் பட்டது கலங்கி
மாலையொடு வந்துமதி தோன்றமகிழ் தோன்றி
வேலனைய கண்ணியர்தம் வீழ்துணைவர் திண்டோள்
கோலமுலை யால்எழுதக் கூடியதை அன்றே. ௩௮

2041 ஏந்துமலர்ச் சேக்கையகில் வளர்த்தவிடு புகையும்
வாய்ந்தமலர்க் கோதைஅமிர் துயிர்க்குநறும் புகையுங்
கூந்தல்அகிற் புகையுந்துகிற் கொழுமென்நறும் புகையும்
வாய்ந்தவரை மழையின்உயர் மாடத்தெழுந் தனவே. ௩௯

2042 ஆசில்அடு பாலமிர்தஞ் சிறியஅயின் றம்பூங்
காசில்கடி மாலைகலம் நொய்யமதி கவற்குந்
தூசுநறுஞ் சாந்தினிய தோடிவைகள் தாங்கி
மாசில்மட வார்கள்மணி வீணைநரம் புளர்ந்தார். ௪௦

2043 பூஞ்சதங்கை மாலைபுகழ்க் குஞ்சிப்பொரு வில்லார்
வீங்குதிரள் தோளுந்தட மார்பும்விரை மெழுகித்
தீங்கரும்பு மென்றனைய இன்பவளச் செவ்வாய்த்
தேங்கொளமிர் தார்ந்துசெழுந் தார்குழையச் சேர்ந்தார்.

2044 பொன்னறையுள் இன்னமளிப் பூவணையின் மேலான்
முன்னியதன் மன்றலது முந்துற முடிப்பான்
மன்னுமொரு கீதமது ரம்பட முரன்றாற்(கு)
இன்னமிர்த மாகஇளை யாரும்அது கேட்டார். ௪௨

வேறு

2045 மன்மதன் மணிக்குரல் மருட்டுமென்று மால்கொள்வார்
இன்னதன் றியக்கரின் இயக்கவந்த தென்றுதம்
பின்னுமுன்னும் நோக்குவார் பேதுசால எய்துவார்
கன்னிதன் மனத்திழைத்த காளைநாமம் வாழ்த்துவார். ௪௩

2046 கொம்பினொத் தொதுங்கியுங் குழங்கல்மாலை தாங்கியும்
அம்பினொத்த கண்ணினார் அடிக்கலம் அரற்றவும்
நம்பிதந்த கீதமே நயந்துகாண ஓடினார்
வெம்புவேட்கை வேனிலானின் வேறலானு மாயினான். ௪௪

2047 தாமமாலை வார்குழற் றடங்கணார்க் கிடங்கழி
காமனன்ன காளைதன் கருத்தொடொத்த தாகலான்

மாமலர்த் தெரியலான் மணிமிடற் றிடைக்கிடந்த
சாமகீத மற்றுமொன்று சாமிநன்கு பாடினன். சுரு

2048 கள்ளமூப்பின் அந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளிவென்ற நுண்ணிடை மழைமலர்த் தடங்கணர்
புள்ளுவம் மதிமகன் புணர்த்தவோசை மேற்புகன்(று)
உள்ளம்வைத்த மாமயிற் குழாத்தினோடி யெய்தினர். சசு

வேறு

2049 இனிச்சிறி தெழுந்து வீங்கி இட்டிடை கோறும் நாங்கள்
எனக்கொறு கொறுப்ப போலும் இளமுலைப் பரவை யல்குற்
கனிப்பொறை மலிந்த காமர் கற்பக மணிக்கொம்பொப்பாள்
பனிப்பிறைப் பூணினன்தன் பாண்வலைச் சென்று பட்டாள்.

2050 அடிக்கலம் அரற்ற அல்குற் கலைகலந் தொலிப்ப வந்து
முடிப்பதென் பெரிது மூத்தேன் முற்றிழை யரிவை யென்ன
வடிக்கணாள் நக்கு நாணித் தோழியை மறைந்து மின்னுக்
கொடிக்குழாத்திடையோர்கோலக் குளிர்மணிக்கொம்பின்னின்றாள்.

2051 இளையவற் காணின் மன்னோ என்செய்வீர் நீவிர் என்ன
விளைமதுக் கண்ணி மைந்தர் விளிகெனத் தோழி கூற
முளையெயிற் றிவளை யாரும் மொழிந்தன ரில்லை யென்றே
உளைவது பிறிது முண்டோ ஒண்டொடி மாதர்க் கென்றான்.

2052 வாய்ந்தஇம் மாதர் சுண்ணஞ் சீவகன் பழித்த பின்றைக்
காய்ந்தனள் என்று கூறக் காளைமற் றிவட்குத் தீயான்
மாய்ந்தனன் போலும் என்ன மாதரார் ஒருங்கு வாழ்த்தி
ஆய்ந்தனம் ஐயன் உய்ந்தான் அறிந்தனம் அதனை என்றார்.

2053 காலுற்ற காம வல்லிக் கொடியெனக் கலங்கி நங்கை
மாலுற்று மயங்க யாங்கள் மடக்கிளி தூது விட்டேம் [டே
சேலுற்ற நெடுங்கட் செவ்வாய்த் தத்தைதன் செல்வங் கண்
பாலுற்ற பவளச் செவ்வாய்த் தத்தையாற் பரிவு தீர்ந்தேம்.

2054 அன்பொட்டி எமக்கோர் கீதம்
பாடுமின் அடித்தி யாரும்
முன்பட்ட தொழிந்து நங்கண்
முகவியர் முனிவு தீர்ந்தார்

பொன்தொட்டேம் யாமும் நும்மைப்
போகொட்டோம் பீடல் கேளா(து)
என்பட்டு விடினும் என்றார்
இலங்குபூங் கொம்பொ டொப்பார். ருஉ

2055 பாடுதும் பாவை பொற்பே பற்றிமற் றெமக்கு நல்கின்
ஆடமைத் தோளி னீர்அஃ தொட்டுமேற் கேண்மின் என்ன
நாடியார் பேயைக் காண்பார் நங்கைகாள் இதுவும் ஆமே
ஆடுவ தொன்று மன்றிவ் வாண்மகன் உரைப்ப தென்றார்.

2056 பட்டுலாய்க் கிடந்த செம்பொன் பவளமோ டிமைக்கும் அல்குல்
ஒட்டினுள் அதனை ஓரா தலம்பொரு தோளி னானும்
பட்டவாள் நுதலி னய்க்குப் பாடுவல் காமன் தந்த
தொட்டிமை யுடைய வீணைச் செவிச்சுவை யமிர்தம்என்றான்.

2057 வயிரவில் உமிழும் பைம்பூண் வனமுலை மகளிர் தம்முள்
உயிர்பெற எழுதப் பட்ட ஓவியப் பாவை யொப்பாள்
செயிரில்வாண் முகத்தை நோக்கித் தேன்பொதிந் தமுத மூறப்
பயிரிலா நரம்பிற் கீதம் பாடிய தொடங்கி னானே. ருரு

வேறு

2058 தொடித்தோள் வளைநெகிழத் தொய்யில் முலைமேல்
வடிக்கேழ் மலர்நெடுங்கண் வார்புயலுங் காலும்
வார்புயலுங் காலும் வளைநெகிழும் நந்திறத்த(து)
ஆர்வமுறு நெஞ்சம் அழுங்குவிக்கும் மாலை. ருசு

2059 ஐதேந் தகலல்குல் ஆவித் தழலுயிராக்
கைசோர்ந் தணலான் றிக் கண்ணீர் கவுள்அலைப்பக்
கண்ணீர் கவுள்அலைப்பக் கையற்று யாம்இனையப்
புண்ஈரும் வேலிற் புகுந்ததால் மாலை. ருஎ

2060 அவிழ்ந்தேந்து பூங்கோதை யாகத் தலர்ந்த
முகிழ்ந்தேந்து பூண்முலைமேற் பொன்பசலை பூப்பப்
பொன்பசலை பூப்பப் பொருகயற்கண் முத்தரும்ப
அன்புருகு நெஞ்சம் அழுங்குவிக்கும் மாலை. ருஅ

வேறு

2061 பாடினான் தேவ கீதம் பண்ணினுக் கரசன் பாடச்
சூடக மகளிர் சோர்ந்து செருக்கிய மஞ்ஞை யொத்தார்

ஆடகச் செம்பொற் பாவை அந்தணற் புகழ்ந்து செம்பொன்
மாடம்புக் கங்கற் பேணி வரங்கொள்வல் நாளை என்றாள்.

2062 மட்டலணி பெண்ணை ஈன்ற மணிமருள் குரும்பை மான
உடலணி யாவி னைய உருத்தெழு முலையி னாளும்
அடலணி தோழி மாரும் ஆர்வத்திற் கழும இப்பாற்
கடலணி திலகம் போலக் கதிர்திரை முளைத்த தன்றே.

2063 பொன்னியல் மணியுந் தாருங் கண்ணியும் புனைந்து செம்பொன்
மின்னியற் பட்டஞ் சேர்த்தி ஆன்நெய்பால் வெறுப்பவூட்டி
மன்னியற் பாண்டில் பண்ணி மடந்தைகோல் கொள்ள வையம்
இன்னியற் பாவையேற்பத் தோழியோ டேறி னாளே. சுக

2064 ஆடவர் இரிய ஏகி அஞ்சொல்லார் சூழக் காமன்
மாடத்துள் இழிந்து மற்றவ் வள்ளலை மறைய வைத்துச்
சூடமை மாலை சாந்தம் விளக்கொடு தூபம் ஏந்திச்
சேடியர் தொழுது நிற்பத் திருமகள் பரவும் அன்றே. சுஉ

2065 பொன்னிலஞ் சென்னி புல்ல இடமுழந் தாளை யூன்றி
மின்னவிர் மாலை மென்பூங் குழல்வலத் தோளின் வீழக்
கன்னியங் கமுகின் கண்போற் கலனணி எருத்தங் கோட்டித்
தன்னிரு கையுங் கூப்பித் தையலீ துரைக்கும் அன்றே.சுஙு

2066 தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையி னய்யோர்
காமம்இங் குடையேன் காளை சீவகன் அகலஞ் சேர்த்தின்
மாமணி மகரம் அம்பு வண்சிலைக் கரும்பு மான்தேர்
பூமலி மார்ப ஈவல் ஊரொடும் பொலிய என்றாள். சுச

2067 மட்டவிழ் கோதை பெற்றுப் மனமகிழ் காத லானை
இட்டிடை நோவ நில்லா தெழுகென ஏந்தல் தோழன்
பட்டிமை உரைத்த தோராள் பரவிய தெய்வந் தன்வாய்
விட்டுரைத் திட்ட தென்றே வேற்கணாள் பரவி மீண்டாள்.

2068 அடியிறை கொண்ட செம்பொன் ஆடகச் சிலம்பி னாள்அக்
கடியறை மருங்கின் நின்ற மைந்தனைக் கண்டு நாணி
வடியுறு கடைக்கண் நோக்க நெஞ்சுசுதுட் கென்ன வஞ்சிக்
கொடியுற ஒசிந்து நின்றாள் குழைமுகத் திருவோ டொப்பாள்.

2069 இலங்குபொன் ஞேலை மின்ன இன்முகஞ் சிறிது கோட்டி
அலங்கலுங் குழலுந் தாழ அருமணிக் குழையோர் காதிற்

கலந்தொளி கான்று நின்று கதிர்விடு திருவில் வீச
நலங்கனிந் துருகி நின்றாள் நாமவேற் காமர் கண்ணாள். ௬௯

2070 எரிமணிக் கலாபத் திட்ட இந்திர நீலம் என்னும்
ஒருமணி உந்தி நேரே ஒருகதிர் உமிழ்வ தேபோல்
அருமணிப் பூணி னாள்தன் அவ்வயி றணிந்த கோலத்
திருமயி ரொழுக்கம் வந்தென் திண்ணிறை கவர்ந்த தன்றே.

2071 தேறினேன் தெய்வ மென்றே தீண்டிலே னாயின் உய்யேன்
சீறடி பரவ வந்தேன் அருளெனத் தொழுது சேர்ந்து
நாறிருங் குழலி னாளை நாகணை விடையிற் புல்லிக் [றே.
கோல்தொடுத் தநங்கன் எய்யக் குழைந்துதார் திவண்ட தன்

2072 கலைபுறஞ் சூழ்ந்த அல்குற் கார்மயிற் சாய லாளும்
மலைபுறங் கண்ட மார்பின் வாங்குவிற் றடக்கை யானும்
இலைபுறங் கொண்ட கண்ணி இன்தமி ழியற்கை யின்பம்
நிலைபெற நெறியிற் றுய்த்தார் நிகர்தமக் கிலாத நீரார். ௭௰

2073 குங்குமங் குயின்ற கொம்மைக் குவிமுலை குளிர்ப்பத் தைவந்(து)
அங்கலுழ் மேனி யல்குற் காசுடன் திருத்தி அம்பொற்
பொங்குபூஞ் சிலம்பிற் போர்த்த பூந்துகள் அவித்து மாதர்
கொங்கலர் கோதை சூட்டிக் குழல்நலந் திருத்தி னானே. ௭௧

வேறு

2074 வானார் கமழ்மதுவுஞ் சாந்தும்ஏந்தி
மதுத்துளித்து வண்டுஞ் சுரும்பும்மூசுந்
தேனார்பூங் கோதாய் நினக்குக்காமன்
சிலையிரண்டுஞ் செவ்வனே கோலித்தந்தான்
தானாரப் பண்ணித் தடறுநீக்கித்
தண்குருதி தோய்த்துத் தகைமைசான்ற
ஊனார்ந்த ஓரிணை யம்புந்தந்தான்
என்னை யுளனாக வேண்டினானே. ௭௨

2075 கண்ணக்க கண்ணிக் கமழ்பூங்குழற்
கரும்பேர்தீஞ் சொல்லாள் கதிர்முலைகளின்
வண்ணக்கு வானும் நிலனுமெல்லாம்
விலையே மழைமின்னு நுசுப்பினாளைப்

பெண்ணுக் கணியாக வேண்டிமேலைப்
        பெரியோர் பெருமான் படைத்தானென்று
புண்ணக்க வேலான் புகழ நாணிப்
        பூநோக்கிப் பூக்கொசிந்த கொம்பொத்தாளே. எரு

வேறு

2076 இறங்கிய மாதர் தன்னை எரிமணிக் கடகக் கையாற் [ன்
குறங்கின்மேற் றழுவி வைத்துக் கோதையங் குருதி வேலா
அறந்தலை நீங்கக் காக்கும் அரசன்யா னாக நாளைச்
சிறந்தநின் நலத்தைச் சேரே னுய்விடிற் செல்க என்றான்.

2077 வில்லிடு மணிசெய் ஆழி மெல்விரல் விதியிற் கூப்பி
நல்லடி பணிந்து நிற்ப நங்கைநீ நடுங்க வேண்டா
செல்கெனச் சிலம்பு செம்பொற் கிண்கிணி மிழற்ற ஒல்கி
அல்குற்கா சொலிப்ப ஆயம் பாவைசென் றெய்தி னாளே.

2078 பருமணிப் படங்கொள் நாகப் பையெனப் பரந்த அல்குல்
எரிமணிப் பூணி னானுக் கின்னலம் ஒழிய ஏகித்
திருமணிச் சிவிகை யேறிச் செம்பொன்நீள் மாடம் புக்காள்
விரிமணி விளங்கு மாலை வெம்முலை வேற்க ணாளே. எகூ

2079 திருவிற்றான் மாரி கற்பான் துவலைநாட் செய்வ தேபோல்
உருவிற்றாய்த் துளிக்குந் தேறல் ஓங்குதார் மார்பன் தோழர்
பொருவிற்ற நம்பி காம திலகனென் றிருந்த போழ்திற்
செருவிற்றாழ் நுதலி னாள்கண் மணத்திறஞ் செப்பு கின்றார்.

2080 கனைகடல் அமுதந் தேனுங் கலந்துகொண் டெழுதப் பட்ட
புனைகொடி பூத்த தேபோற் பொறுக்கலா நுசுப்பிற் பாவை
நனைகுடைந் துண்டு தேக்கி நன்மணி வண்டு பாடும்
புனைகடி மாலை மாதர் திறத்தித மொழிந்து விட்டார். எஅ

2081 ஐயற்கென் றுரைத்த மாற்றங்
        கேட்டலும் அலங்கல் நாய்கன்
வெய்யதேன் வாய்க்கொண் டாற்போல்
        விழுங்கலோ டுமிழ்தல் தேற்றான்
செய்வதென் நோற்றி லாதேன்
        நோற்றிலாள் திறத்தின் என்று
மையல்கொண் டிருப்ப அப்பாற்
        குமரிதன் மதியிற் சூழ்ந்தாள். எகூ

2082 பொற்பமை தாமக் கந்து பொருந்திய மின்னுப் போல
எற்பக எரியும் மாலைப் பவளத்தூண் பொருந்தி இன்னீர்க்
கற்பெனும் மாலை வீசி நாணெனுங் களிவண் டோப்பிச்
சொற்புக ரின்றித் தோழிக் கறத்தினோ டரிவை நின்றாள்.

2083 வழிவளர் மயிலஞ் சாயல் பவழப்பூம் பாவை யன்ன
கழிவளர் கயற்கண் நங்கை கற்பினை அறிந்து தோழி
அழிமது மாலை சேர்த்தி அடிபணிந் தார வாழ்த்திப்
பொழிமதுப்புயலைங்கூந்தற் செவிலியைப் பொருந்திச்சொன்னாள்.

2084 நனைவளர் கோதை நற்றாய் நங்கைக்கீ துள்ளம் என்று
சுனைவளர் குவளை யுண்கட் சுமதிக்குச் செவிலி செப்பக்
கனையிருட் கனவிற் கண்டேன் காமர்பூம் பொய்கை வற்ற
அனையதாங் கன்னி நீரின் றற்றதாம் நங்கைக் கென்றாள்.

2085 கெண்டையுஞ் சிலையுந் திங்கள் இளமையுங் கிடந்து தேங்கொள்
தொண்டையங் கனியும் முத்துந் தொழுதக அணிந்து தூங்குங்
குண்டல முடைய திங்கள் இதுவெனு முகத்தி தாதை
வண்புகழ்க் குபேர தத்தன் கேட்டனன் மனைவி சொன்னாள்.

2086 செருவிளைத் தனலும் வேலோய் சிறுமுதுக் குறைவி தானே
பெருவளைப் பிட்டுக் காத்த கற்பிது போலும் ஐயன்
கரிவிளைத் தாய்ந்த சுண்ணம் வாட்டினன் என்று கண்டாய்
திருவிளை தேம்பெய் மாரி பாற்கடற் பெய்த தென்றாள்.

2087 கேட்பது விரும்பி நாய்கன் கிளைக்கெலாம் உணர்த்தி யார்க்
வேட்பன அடிசில் ஆடை விழுக்கலன் மாலை சாந்தங் [கும்
கோட்குறை வின்றி ஆக்கிக் குழுமியங் கறங்கி ஆர்ப்ப
நாட்கடி மாலை யாற்கு நங்கையை நல்கி னானே. அ௫

2088 பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண்கிணி யார்ந்த பாதத்(து)
அரிவையர் ஆடல் மிக்கார் அருமணி வீணை வல்லார்
உரியநூற் றெண்மர் செம்பொன் ஒன்றரைக் கோடி மூன்றார்
எரியழல் முன்னர் நேர்ந்தேன் என்மகட் கென்று சொன்னான்.

2089 மாசறு மணியும் முத்தும் வயிரமும் ஒளிரும் மேனி
ஆசறு செம்பொன் ஆர்ந்த அலங்கலங் குன்ற னானும்
தூசுறு பரவை யல்குற் றுளங்குபூங் கொம்ப னாளும்
காசறக் கலந்த இன்பக் கடலகத் தழுந்தி னாரே. அ௭

2090 பொன்வரை பொருத யானைப் புணர்மருப் பனைய ஆகித்
தென்வரைச் சாந்து மூழ்கித் திரள்வடஞ் சுமந்து வீங்கி
மின்வளர் மருங்குல் செற்ற வெம்முலை மணிக்கண் சேப்பத்
தொன்னலம் பருகித் தோன்றல் துறக்கம்புக் கவர்கள் ஒத்தான்.

2091 வரிக்கழற் குரிசில் மார்பும் மடந்தைவெம் முலையுந் தம்முட்
செருச்செய்து திளைத்துப் போரிற் சிலம்பொலி கலந்தபாணி
அரிப்பறை அனுங்க ஆர்க்கும் மேகலைக் குரலோ டண்டிப்
புரிக்குழல் புலம்ப வைகிப் பூவணை விடுக்க லானே. அகூ

2092 மணியியல் வள்ளத் தேந்த மதுமகிழ்ந் தனந்தர் கூர
அணிமலர்க் குவளைப் பைம்போ தொருகையின் அருளி அம்பொற்
பிணையனாள் அருகு சேரிற் பேதுறும் நுசுப்பென் றெண்ணித்
திணையமை தோள்கள் தம்மால் தோன்றல்தான் புல்லி னானே.

2093 மல்லலங் கங்கை போலும் பலர்முயங் கார மார்பிற்
புல்லன்மின் போமின் வேண்டா என்றவள் புலந்து நீங்க
முல்லையங்கோதையொன்றும்பிழைப்பிலேன் முனியல் நீயென்(று)
அல்லலுற் றரத்தம் ஆர்ந்த சீறடி தொழுதிட் டானே. கூக

2094 வட்டிகைப் பாவை நோக்கி மகிழ்ந்திருந் திலிரோ என்னாத்
தொட்டிமை புருவந்தோன்றச் சுவரையே பொருந்திநின்றாய்
கட்டழ குடைய நங்கை நீயெனக் கருதிக் கண்ணான்
ஒட்டியான் நோக்கிற் றென்றான் ஒருபிடி நுசுப்பி னாட்கே.

2095 நுண்துகில் நெகிழ்ந்த அல்குல் மணிபரந் திமைப்ப நொந்து
கண்களை இடுகக் கோட்டிக் காமத்திற் செயிர்த்து நோக்கிக்
குண்டலம் இலங்கக்கோதை கூந்தலோ டவிழ்ந்து சோர[ள்.
ஒண்தொடி ஊடி நின்றாள் ஒளிர்மணிப் பூங்கொம் பொப்பா

2096 கிழவனைப் பாடி வந்தென் கீழ்ச்சிறை யிருப்பக் கண்டேன்
எழுதிய பாவை நோக்கி இமையவித் திருப்பக் கண்டேன்
ஒழிகஇக் காமம் ஒரூர் இரண்டகம் ஆயிற் றென்றாங்(கு)
அழுதகண் ணீர்கள் மைந்தன் ஆவிபோழ்ந் திட்ட அன்றே.

2097 அலங்கல்தா தவிழ அஞ்செஞ் சீறடி யணிந்த அம்பூஞ்
சிலம்பின்மேற் சென்னி சேர்த்திச் சிறியவர் செய்த தீமை
புலம்பலர் பொறுப்பர் அன்றே பெரியவர் என்று கூறி
இலங்குவேற் கண்ணி ஊடல் இளையவன் நீக்கி னானே. கூடு

2098 யாழ்கொன்ற கிளவி யாள்தன் அமிழ்துறழ் புல்வி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து காதற்
சூழ்கின்ற தாம மார்பன் தையலோ டாடி விள்ளான் [தான்.
ஊழ்சென்ற மதியம் வெய்யோன் ஒட்டியொன் றாய தொத்

2099 பச்சிலைப் பட்டும் முத்தும் பவளமும் இமைக்கும் அல்குல்
நச்சிலை வேற்கண் மாதர் நகைமுக முறுவல் மாந்தி
இச்சையுங் குறிப்பும் நோக்கி எய்வதே கரும மாகக் [ன்.
கைச்சிலை கணையோ டேந்திக் காமன்இக் கடையைக் காப்பா

2100 கடிப்பிணை காது சேர்த்திச் சிகழிகைக் காதம் நாறத்
தொடுத்தலர் மாலை சூட்டிக் கிம்புரி முத்த மென்றோள்
அடுத்தணிந் தாகஞ் சாந்தின் அணிபெற எழுதி அல்குல்
உடுத்தபொற் கலாபந் தைவந் தொளிவளை திருத்தி னானே.

2101 இலங்குவெள் ளருவிக் குன்றத் தெழுந்ததண் தகரச் செந்தீ
நலங்கிளர் அகிலுந் தேனுங் கட்டியும் நன்கு கூட்டிப்
புலம்பற வளர்த்த அம்மென் பூம்புகை அமளி யங்கண்
விலங்கர சனைய காளை வெள்வளைக் கிதனைச் சொன்னான்.

2102 கருமம்நீ கவல வேண்டா கயற்கணாய் பிரிவல் சின்னாள்
அருமைநின் கவினைத் தாங்கல் அதுபொருள் என்று கூறப்
பெருமநீ வேண்டிற் றல்லால் வேண்டுவ பிறிதொன் றுண்டோ
ஒருமைநின் மனத்திற் சென்றேன் உவப்பதே உவப்ப தென்றாள்.

2103 நாணொடு மிடைந்த தேங்கொள் நடுக்குறு கிளவி கேட்டே
பூண்வடுப் பொறிப்பப் புல்லிப் புனைநலம் புலம்ப வைகேன்
தேன்மிடை கோதை என்று திருமகன் எழுந்து போகி
வாள்மிடை தோழர் சூழத் தன்மனை மகிழ்ந்து புக்கான்.

2104 புரவியுங் களிறும் நோக்கிப் பொன்னெடுந் தேரும் நோக்கி
இரவினும் பகலும் ஓவா தென்மகன் யாண்டை யானென்(று)
அழுதகண் ணீரி னாலே கைகழீஇ அவலிக் கின்ற
மெழுகெரி முகந்த தொக்குந் தாய்மெலி வகற்றி னானே.

2105 ஒற்றரும் உணர்த லின்றி உரையவித் துறப்பி னாலே[ள்வார்
சுற்றத்தார்க் குரைப்ப ஈண்டித் தொக்குடன் தழுவிக் கொ
எற்றுவார் இனைந்து சோர்வார் நம்பியோ நம்பி என்னா
உற்றுடன் றழுத கண்ணீர் காலலைத் தொழுகிற் றன்றே.

2106 கந்துகன் கழறக் கல்லென் கடற்றிரை அவிந்த வண்ணம்
வந்தவர் புலம்பு நீங்க மறைபுறம் படுமென் றெண்ணி
எந்தைதான் இறந்த நாளின் றெனநகர் இயம்பி யாரும்
அந்தமில் உவகை தன்னால் அகங்குளிர்ப் பெய்தி னாரே.

2107 செங்கயல் மழைக்கட் செவ்வாய்த் தத்தையும் மகிழ்ந்து தீஞ்சொல்
எங்கையைச் சென்று காண்மின் அடிகளென் றிரந்து கூற
மங்கல வகையிற் சேர்ந்து மதுத்துளி அறாத மாலை
கொங்கலர் கண்ணி சேர்த்திக் குங்குமம் எழுதி னானே.

2108 தீவினை யுடைய என்னைத் தீண்டன்மின் அடிகள் வேண்டா
பாவியேன் என்று நொந்து பரிந்தழு துருகி நையக்
காவியங் கண்ணி யொன்றுங் கவலல்யான் உய்ந்த தெல்லாம்
நாவியே நாறு மேனி நங்கைநின் தவத்தின் என்றான். ௧௦௬

2109 அன்னமென் நடையும் நோக்குஞ் சாயலும் அணியும் எரும்
மின்னினுண் ணுசுப்பும் வெய்ய முலைகளும் முகமுந் தோன்
என்மனத் தெழுதப் பட்டா யாயினும் அரிவை கேளாய் [ற
உன்னையான் பிரிந்த நாள்ஓர் ஊழியே போன்ற தென்றான்.

2110 இளையவள் மகிழ்வ கூறி இன்துயி லமர்ந்து பின்னாள்
விளைபொரு ளாய வெல்லாந் தாதைக்கே வேறு கூறிக்
கிளையவர் சூழ வாமான் வாணிகன் ஆகிக் கேடில்
தளையவிழ் தாம மார்பன் தன்னகர் நீங்கி னானே. ௧௦௮

10. மண்மகள் இலம்பகம்

2111 குடம்புரை செருத்தற் குவளைமேய் கயவாய்க்
குவிமுலைப் படர்மருப் பெருமை
நடந்தவா யெல்லாம் நறுமலர் மரையின்
நாகிலைச் சொரிந்தஅந் தீம்பால்
தடஞ்சிறை யன்னங் குருகொடு நாரைப்
பார்ப்பினம் ஓம்புதண் மருதம்
மடங்கல்போற் றிறலார் மாமணி கறங்க
வளவயற் புள்ளெழக் கழிந்தார். க

2112 புரிவளை அலறிப் பூசலிட் டீன்ற
பொழிகதிர் நித்திலம் உழக்கி
வரிவளை சூழும் வலம்புரி யினத்துட்
சலஞ்சலம் மேய்வன நோக்கி
அரிதுணர் அன்னம் பெடையெனத் தழுவி
அன்மையின் அலமரல் எய்தித்
திரிதரு நோக்கந் தீதிலார் நோக்கி
நெய்தலுங் கைவலத் தொழிந்தார். உ

2113 கோட்டிளங் கலையும் கூடுமென் பிணையுங்
கொழுங்கதிர் மணிவிளக் கெறிப்பச்
சேட்டிளங் கொன்றைத் திருநிழற் றுஞ்சச்
செம்பொறி வண்டவற் றயலே
நாட்டிளம் பிடியார் நகைமுகம் பருகும்
நல்லவர் போல்மலர் பருகும்
மோட்டிள முல்லை மொய்ம்மலர்க் கானம்
முருகுவந் தெதிர்கொள நடந்தார். ந

2114 குழவிவெண் திங்கட் கோட்டின்மேற் பாயக்
குளிர்புனல் சடைவிரித் தேற்கும்
அழலவிர் சூலத் தண்ணலே போல
அருவிநீர் மருப்பினின் ஏறியக்
கழைவளர் குன்றிற் களிறுநின் றாடுங்
கடிநறுஞ் சந்தனச் சாரல்
இழைவளர் முலையார் சாயல்போற் றோகை
இறைகொள்பூங் குறிஞ்சியும் இறந்தார். ச

2115 ஊன்றலைப் பொடித்தாங் கனையசெஞ் சூட்டின்
ஒளிமயிர் வாரணம் ஒருங்கே
கான்றபூங் கடம்பின் கவட்டிடை வளைவாய்ப்
பருந்தொடு கவர்குரல் பயிற்றும்
ஆன்றவெம் பாலை அழல்மிதித் தன்ன
அருஞ்சுரஞ் சுடர்மறை பொழுதின்
ஊன்றினர் பாய்மா ஒளிமதிக் கதிர்போற்
சந்தனம் ஒருங்குமெய் புதைந்தே. ௫

2116 நிலையிலா உலகில் நின்ற வண்புகழை
வேட்டவன் நிதியமே போன்றும்
இலைகுலாம் பைம்பூண் இளமுலைத் தூதின்
இன்கனித் தொண்டையங் துவர்வாய்க்
கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும்
கடவுளர் வெகுளியே போன்றும்
உலைவிலார் நில்லா தொருபக லுள்ளே
உருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார். ௬

2117 புதுக்கலம் போலும் பூங்கனி ஆலும்
பொன்னிணர்ப் பிண்டியும் பொருந்தி
மதுக்கலந் தூழ்த்துச் சிலம்பிவீழ் வன்போல்
மலர்சொரி வகுளமும் மயங்கிக்
கதிர்த்ததண் பூணி கம்புள்தாழ் பீலிக்
கனைகுரல் நாரை வண்டானம்
எதிர்த்ததண் புனல்சூழ் இன்னதிக் கரைமேல்
இளையவர் அயாவுயிர்த் தெழுந்தார். ௭

2118 அள்ளிலைப் பலவின் அளிந்துவீழ் சுளையும்
கனிந்துவீழ் வாழையின் பழனும்
புள்ளிவாழ் அலவன் பொறிவரிக் கமஞ்சூல்
ஞெண்டினுக் குய்த்துநோய் தணிப்பான்
பள்ளவாய் நந்தும் ஆமையும் பணித்துப்
பன்மலர் வழிபடக் குறைக்கும்
வெள்ளநீர்ப் படப்பை விதையம்வந் தடைந்தே
வேந்தனுக் குணர்த்தமுன் விடுத்தார். ௮

2119 வீட்டிடந் தோறும் வில்லக விரல்போற்
பொருந்திநின் றொருங்கெதிர் கொள்கென்(று)
ஏட்டின்மேற் பொறித்துத் திருவெழுத் திட்டாங்
கிறைவனும் தமர்களைப் பணிப்ப
நாட்டகத் தமிர்தும் நளிகட லமிர்தும்
நல்வரை யமிர்தமும் அல்லாக்
காட்டகத் தமிர்துங் காண்வரக் குவவிக்
கண்ணகன் புறவெதிர் கொண்டார். ௯

2120 பொருமத யானைப் புணர்மருப் பேய்ப்பப்
பொன்சுமந் தேந்திய முலையார்
எரிமலர்ச் செவ்வாய் திறந்துதேன் ஊற
ஏத்துவார் பூக்கள்தூய்த் தொழுவார்
வருகுலைக் கமுகும் வாழையும் நடுவார்
வரையுமிழ் ஆவிபோல் மாடத்(து)
அருநறைப் புகையும் ஏந்துவார் ஊர்தோ
றமரர்தம் உலகம்ஒத் ததுவே. ௧௦

வேறு

2121 பாடின் அருவிப் பயங்கெழு மாமலை
மாட நகரத்து வாயிலுங் கோயிலும்
ஆடம் பலமும் அரங்கமுஞ் சாலையும்
சேடனைக் காணிய சென்றுதொக் கதுவே. ௧௧

2122 பல்கதிர் ஆரமும் பூணும் பருமித்துக்
கொல்சின வெங்தொழிற் கோடேந் திளமுலை
நல்லெழில் மங்கையர் நன்னுதற் சூட்டிய
வெல்கதிர்ப் பட்டம் விளங்கிற் றொருபால். ௧௨

2123 சுண்ணமுஞ் சூட்டுஞ் சொரிந்துகு வார்குழற்
கண்ணி மகாரொடு காற்சிலம் பார்த்தெழ
அண்ணலைக் காணிய ஆர்வத்திற் போதரும்
வண்ண மகளிர் வனப்பிற் றொருபால். ௧௩

2124 எதிர்நலப் பூங்கொடி எள்ளிய சாயற்
கதிர்நல மங்கையர் கால்தொடர்ந் தோட
முதிரா இளமுலை முத்தொடு பொங்க
அதிரரிக் கிண்கிணி ஆர்க்கும் ஒருபால். ௧௪

2125 கருங்கண் இளமுலை கச்சற வீக்கி
மருங்குல் தளர மழைமருள் மாடம்
நெருங்க இறைகொண்ட நேரிழை யார்தம்
பெருங்கண் அலம்வரும் பெற்றித் தொருபால். கரு

2126 மின்னு குழையினர் கோதையர் மின்னுயர்
பொன்வரை மாடம் புதையப் பொறிமயில்
துன்னிய தோகைக் குழாமெனத் தொக்கவர்
மன்னிய கோலம் மலிந்த தொருபால். கசு

2127 பாடல் மகளிரும் பல்கலை யேந்தல்குல்
ஆடல் மகளிரும் ஆவண வீதிதொ(று)
ஓட உதிர்ந்த அணிகலம் உக்கவை
நீடிருள் போழும் நிலைமைத் தொருபால். கஎ

2128 கோதையுந் தாரும் பிணங்கக் கொடுங்குழைக்
காதல் மகளிரும் மைந்தருங் காணிய
வீதியும் மேலும் மிடைந்து மிடைமலர்த்
தாதடுத் தெங்குந் தவிசொத் ததுவே. கஅ

2129 மானக் கவரி மணிவண் டகற்றஅங்(கு)
யானை யெருத்தத் தமர குமரனிற்
சேனைக் கடலிடைச் செல்வனைக் கண்டுவந்(து)
ஏனை யவரும் எடுத்துரைக் கின்றார். ககூ

2130 தேமலர் அங்கட் டிருவே புகுதக
மாமலர்க் கோதை மணாளன் புகுதக
காமன் புகுதக காளை புகுதக
நாம எழில்விஞ்சை நம்பி புகுதக. உ௦

2131 மின்தோய் வரைகொன்ற வேலோன் புகுதக
இன்தேன் கமழ்தார் இயக்கன் புகுதக
வென்றோன் புகுதக வீரன் புகுதக
என்றே நகரம் எதிர்கொண் டதுவே. உக

2132 இடிநறுஞ் சுண்ணஞ் சிதறி எச்சாருங்
கடிகமழ் மாலையுங் கண்ணியுஞ் சிந்தித்
துடியடு நுண்ணிடைத் தொண்டையஞ் செவ்வாய்
வடியடு கண்ணியர் வாழ்த்துபு நிற்பார். உஉ

2133 சுரும்பிமிர் மாலை தொழுவனர் நீட்டி
இரும்பிடி நின்நடை கற்ற எமக்கு
விரும்பினை யாய்விடின் மெல்ல நடமோ
கருங்கணிற் காமனைக் காணமற் றென்பார். உங

2134 மடநடைப் பெண்மை வனப்பென்ப தோராய்
கடுநடை கற்றாய் கணவன் இழப்பாய்
பிடியலை பாவி யெனப்பூண் பிறழ்ந்து
புடைமுலை விம்மப் புலந்தனர் நிற்பார். உச

2135 மயிர்வாய்ச் சிறுகட் பெருஞ்செவி மாத்தாட்
செயிர்தீர் திரள்கைச் சிறுபிடி கேள்வன்
அயிரா வணத்தொடு சூளுறும் ஐயன்
உயிர்கா வலற்கொண் டுதவநில் என்பார். உரு

2136 கருணைக் கவளந் தருதுங் கமழ்தார்
அருமை யழகிற் கரசனை நாளைத்
திருமலி வீதியெஞ் சேரிக் கொணர்மோ
எரிமணி மாலை இளம்பிடி என்பார். உசு

2137 என்னோர் மருங்கினும் ஏத்தி எரிமணிப்
பொன்னார் கலையினர் பொற்பூஞ் சிலம்பினர்
மின்னார் குழையினர் கோதையர் வீதியுள்
மன்ன குமரனை வாழ்த்தி மகிழ்ந்தார். உஎ

வேறு

2138 விளங்குபாற் கடலிற்பொங்கி வெண்டிரை எழுவவேபோல்
துளங்கொளி மாடத் துச்சித் துகிற்கொடி நுடங்கும் வீதி
உளங்கழிந் துருவப் பைந்தார் மன்னவன் கோயில் சேர்ந்தான்
இளங்கதிர்ப் பரிதி பௌவத் திறுவரை இருந்த தொத்தான்.

2139 இழையொளி பரந்த கோயில் இனமலர்க் குவளைப் பொற்பூ
விழைதகு கமல வட்டத் திடைவிராய்ப் பூத்த தேபோற்[ற
குழையொளிர் முகமுங் கோலக் கொழுங்கயற் கண்ணுந் தோன்
மழைமின்னுக் குழாத்தின் மாலை மங்கையர் மயங்கி நின்றார்.

2140 எரிக்குழாஞ் சுடரும் வைவேல் ஏந்தலைக் கண்டு கோலத்
திருக்குழாம் அனைய பட்டத் தேவியர் மகிழ்ந்து செய்ய

அரிக்குழாம் நெடுங்க ணாரக் கொப்புளித் துமிழ அம்பூ
விரைக்குழா மாலைத் தேனும் வண்டுமுண் டொழுக நின்றார்.

2141 அலங்கல்தா தவிழ்ந்து சோர அல்குற்பொற் றோரை மின்னச்
சிலம்பின்மேற் பஞ்சி யார்ந்த சீறடி வலத்த தூன்றி
நலந்துறை போய நங்கை தோழியைப் புல்லி நின்றாள் [ள்.
இலங்கொளி மணித்தொத்தீன்ற எந்துபொற்கொடியொ டொப்பா

2142 தாமரைப் போதிற் பூத்த தண்ணாறுங் குவளைப் பூப்போற்
காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண் தம்மால்
தேமலர் மார்பி னானை நோக்கினாள். செல்வன் மற்றப்
பூமலர்க் கோதை நெஞ்சம் மூழ்கிப்புக் கொளித்திட் டானே.

வேறு

2143 விண்ணாறு செல்வார் மனம்பே துறப் போந்து வீங்கிப்
பண்ணாறு சொல்லாள் முலைபாரித்த என்று நோக்கக்
கண்ணாறு சென்ற களியைங்கணைக் காமன் அன்ன
புண்ணாறு வேலான் மனமூழ்கினள் பொன்ன னாளே. ௩௩

2144 மைதோய் வரையின் இழியும்புலி போல மைந்தன்
பெய்தாம மாலைப் பிடியின்னிழிந் தேகி மன்னர்
கொய்தாம மாலைக் கொழும்பொன்முடி தேய்த்தி லங்குஞ்
செய்பூங் கழலைத் தொழுதான்சென்னி சேர்த்தி னானே. ௩௪

2145 பொன்னங் குவட்டிற் பொலிவெய்தித் திரண்ட திண்டோள்
மன்னன் மகிழ்ந்து மருமானை விடாது புல்லித்
தன்அன்பு கூரத் தடந்தாமரைச் செங்கண் முத்தம்
மின்னும் மணிப்பூண் விரைமார்பம் நனைப்ப நின்றான். ௩௫

2146 ஆனாது வேந்தன் கலுழ்ந்தானெனக் கோயி லெல்லாந்
தான்யாது மின்றி மயங்கித்தடங் கண்பெய் மாரி
தேனார் மலரீர்த் தொழுகச்சிலம் பிற்சி லம்புங்
கானார் மயிலின் கணம்போற்கலுழ் வுற்ற தன்றே. ௩௬

வேறு

2147 பகைநரம் பிசையுங் கேளாப் பைங்கதிர்ப் பசும்பொற்கோயி
வகைநலம் வாடி எங்கும் அழுகுரல் மயங்கி முந்நீர் [ல்
அகமடை திறந்த தேபோல் அலறக்கோக் கிளைய நங்கை
மிகைநலத் தேவி தானே விலாவணை நீக்கி னாளே. ௩௭

2148 பல்கதிர் மணியும் பொன்னும் பவழமுங் குயிற்றிச் செய்த
செல்வப்பொற் கிடுகு சூழ்ந்த சித்திர கூட மெங்கும்
மல்குபூந் தாமந் தாழ்ந்து மணிப்புகை கமழ வேந்தன்
வெல்புகழ் பரவ மாதோ விதியுளி எய்தி னானே. ௫௮

2149 எரிமணி யடைப்பைசெம்பொற் படியகம் இலங்கு பொன்வா
கருமணி முகடு வேய்ந்த கஞ்சனை கவரி கொண்ட [ள்
வருமுலை மகளிர் வைத்து வான்தவி சடுத்து நீங்கப்
பெருமகன்எண்ணங்கொள்வான் அமைச்சரோடேறினானே.

2150 உலந்தநா ளவர்க்குத் தோன்றா தொளிக்குமீன் குளிக்குங் கற்பிற்
புலந்தவேல் நெடுங்கட் செவ்வாய்ப் புதவிநாட் பயந்த நம்பி
சிலம்புநீர்க் கடலந் தானைச் சிறிதத்தற் கரசு நாட்டிக்
குலந்தரு கொற்ற வேலான் கொடிநகர் காக்க என்றான். ௬௦

2151 மாற்றவன் ஒற்றர் ஒற்றா வகையினில் மறைய நம்பிக்(கு)
ஆற்றிய தோழர்க் கெல்லாம் அணிகலம் அடிசில் ஆடை
வேற்றுமை யின்றி வேண்டுட் டமைத்தனன் அருளி இப்பால்
ஏற்றுரி முரசம் நாண எறிதிரை முழக்கிற் சொன்னான்.

2152 கட்டியங் காரன் நம்மைக் காண்பதே கரும மாக
ஓட்டித்தான் விடுத்த ஓலை யுள்பொருள் உரைமி னென்னத்
தொட்டுமேற் பொறியைநீக்கி மன்னனைத் தொழுதுதோன்ற
விட்டலர் நாகப் பைந்தார் விரிசிகன் கூறும் அன்றே. ௬௨

2153 விதையத்தார் வேந்தன் காண்க கட்டியங் காரன் ஓலை [ல்
புதையஇப் பொழிலைப் போர்த்தோர் பொய்ப்பழி பரந்த தென்மே
கதையெனக் கருதல்செய்யான் மெய்யெனத் தானுங்கொண்டான்
சிதையஎன் நெஞ்சம்போழ்ந்து தெளிப்பினுந் தெளிநர் யாரே.

2154 படுமணிப் பைம்பொற் சூழிப் பகட்டினம் இரியப் பாய்ந்து
கொடிநெடுந் தேர்கள் நூறிக் கொய்யுளை மாக்கள் குத்தி
இடுகொடி அணிந்த மார்பர் இருவிசும் பேறச் சீறி
அடுகளிற் றசனி வேகம் அலமர அதனை நோனான். ௬௪

2155 நூற்றுவர் பாகர் தம்மைப் பிளந்துயி ருண்ட தென்னும்
மாற்றத்தைக் கேட்டுச்சென்று மால்களி றடக்கிமேற்கொண்
ஆற்றலங் கந்து சேர்த்தி யாப்புற வீக்கும் போழ்திற் (டு)
கூற்றென முழங்கிவீழ்த்துக் கொல்லக்கோல் இளகிற்றன்றே.

2156 தனக்குயான் உயிரும் ஈவேன் தான்வரப் பழியும் நீங்கும்
எனக்கினி இறைவன் தானே இருநிலக் கிழமை வேண்டி
நினைத்துத்தான் நெடித்தல் செல்லா தென்சொலே தெளிந்து நொய்
சினக்களி யானை மன்னன் வருகெனச் செப்பி னானே. [தாச்

2157 ஓலையுட் பொருளைக் கேட்டே ஒள்ளெயி றிலங்க நக்குக்
காலனை அளியன் தானே கையினால் விளிக்கும் என்னா
நால்வலீர் இவனைக் கொல்லும் நுண்மதிச் சூழ்ச்சி ஈதே
போல்வதொன் றில்லை யென்றான் புனைமணிப் பொன்செய்பூணான்.

2158 கள்ளத்தால் நம்மைக் கொல்லக் கருதினான் நாமுந் தன்னைக்
கள்ளத்தால் உயிரை யுண்ணக் கருதினேம் இதனை யாரும்
உள்ளத்தால் உமிழ வேண்டா உறுபடை வந்து கூட
வள்ளுவார் முரசம் மூதூர் அறைகென அருளி னானே. சஅ

2159 கட்டியங் காரனோடு காவலன் ஒருவ னானான்
விட்டுநீர் நெல்லும் பொன்னும் வழங்குமின் விளைவ கூறின்
ஒட்டலன் இறைவன் சொன்னீர் நாநும அல்ல என்னக்
கொட்டினான் தடங்கண் வள்வார்க் குளிறிடி முரசம் அன்றே.

2160 விண்டவர் உடலங் கீறிச் சுவைத்துநின் றழலும் வேழம்
ஒண்கொடி யுருவத் திண்டேர் ஒளிமயிர்ப் புரவி பண்ணி
வண்கழல் அணிந்து மள்ளர் வாள்வலம் பிடித்து நாளைத்
தெண்டிரைப் பரப்பு நாணத் திருநகர்த் தொகுக என்றான்.

2161 ஏற்றுரி போர்த்த வள்வார் இடிமுர சறைந்த பின்னாட்
காற்றெறி கடலிற் சங்கும் முழவமும் முரசும் ஆர்ப்பக்
கூற்றுடன் றனைய தானை கொழுநிலம் நெளிய ஈண்டிப்
பாற்கடற் பரப்பின் வெள்வாட் சுடரொளி பரந்த தன்றே.

2162 புதையிருள் இரியப் பொங்கிக் குங்குமக் கதிர்கள் ஓக்கி
உதையத்தின் நெற்றி சேர்ந்த ஒண்சுடர்ப் பரிதி போலத்
துதையொளி மாடத் துச்சி வெண்குடை நீழற் றோன்றி
விதையத்தார் வென்றி வேந்தன் விழுப்படை காணு மன்றே.

வேறு

2163 அரும்பனைத் தடக்கை யபராகத் திரம்வால்
எயிறிவை யைந்தினுங் கொல்வ
கருங்கடற் சங்குங் கறந்தஆன் பாலுங்
கனற்றிய காலுகி ருடைய

பெரும்புலி முழக்கின் மாறெதிர் முழங்கிப்
பெருவரை கீண்டிடுந் திறல
திருந்தியே முறுப்புந் திண்ணிலந் தோய்வ
தீயுமிழ் தறுகணிற் சிறந்த. ருந

2164 கவிழ்மணிப் புடைய கண்ணிழல் நாறிற்
கனன்றுதந் நிழலொடு மலைவ
அவிழ்புயல் மேகம் அனையமும் மதத்த
அறுபதிற் றறுபதாம் நாகம்
புகழ்பருந் தார்ப்பப் பூமதம் பொழிவான்
நின்றனஇ ராயிரங் கவுள்வண்(டு)
இகழ்மதஞ் செறித்தஇ ராயிரத் தைஞ்ஞூ
றிளையவும் அத்துணைக் களிறே. ருச

2165 குந்தமே அயில்வாள் குனிசிலை மூன்றுங்
குறைவிலார் கூற்றெடும் பொருவார்
அந்தரம் ஆறு யானைகொண் டேறப்
பறக்கெனிற் பறந்திடுந் திறலார்
முந்தமர் தம்முள் முழுமெயும் இரும்பு
மேய்ந்திட வெஞ்சமம் விளைத்தார்
கொந்தழல் அஞ்சாக் குஞ்சரம் இவர்ந்தார்
கோடியே விருத்தியா வுடையார். ருரு

2166 குங்கும நறுநீர் பந்திநின் றாடுங்
குதிரையா றாயிரத் திரட்டி
பொங்குவெண் மயிர்சூழ் பொற்படைப் பொலிந்த
அறுபதி னாயிரம் புரவி
வெங்கணை தவிர்ப்ப வெள்ளிவெண் படைய
வாய்விடின் நிலவரை நில்லாப்
பைங்கதிர்க் கொட்டைக் கவரிசூழ்ந் தணிந்த
பகரினத் தொகையன பாய்மா. ருசு

2167 வேய்நிறக் கரும்பின் வெண்ணிறப் பூப்போல்
மிடைந்தொளிர் குந்தமும் வாளும்
தோம்நிலை அரவின் தோற்றமே போலுஞ்
சிலைகளும் பிறகளுந் துறைபோய்

ஊனமொன் றில்லார் உயர்குடிப் பிறந்தார்
ஆயிரம் அடுகளங் கண்டார்
பானிலாப் பூணர் படைத்தொழிற் கலிமாப்
பண் ணுறுத் தேறின ரவரே. ருஎ

வேறு

2168 தறுகண் ஆண்மைய தாமரை நிறத்தன தகைசால்
மறுவில் வான்குளம் புடையன மாளுவத் தகத்த
பறையின் ஆலுவ படுசினை நாவலின் கனிபோற்
குறைவில் கோலத்த குளிர்புனற் சிந்துவின் கரைய. ருஅ

2169 பார சூரவம் பல்லவம் எனும்பதிப் பிறந்த
வீர ஆற்றல விளைகடுந் தேறலின் நிறத்த
பாரிற் றேர்செலிற் பழிபெரி துடைத்தென நாணிச்
சோரும் வார்புயல் துளங்கவிண் புகுவன துரகம். ருகூ

2170 பீலி மாமயி லெருத்தெனப் பெருவனப் புடைய
மாலை மாரட்டத் தகத்தன வளரிளங் கிளியே
போலு மேனிய பொருகடற் கலத்தின்வந் திழிந்த
கோல நீர்ப்பவ ளக்குளம் புடையன குதிரை. கூ0

2171 இன்ன பொங்குளைப் புரவிபண் ணுறுத்தன இயல்தேர்
பொன்னும் வெள்ளியும் மணியினும் புனைந்துவெண் மதியம்
தன்னை யூர்கொண்ட தகையனதொகைசொலின் அறுநூ(று)
என்னும் ஈறுடை யிருபதி னுயிரம் இறையே. கூக

2172 நொச்சி மாமலர் நிறத்தன நொடிவரு முந்நீர்
உச்சி மாக்கதிர் போற்சுடும் ஒளிதிகழ் அயில்வாள்
எச்சத் தல்லவும் எறிபடை பயின்றுதம் ஒன்னார்
நிச்சங் கூற்றினுக் கிடுபவர் தேர்மிசை யவரே. கூஉ

வேறு

2173 எயிற்றுப்படை யாண்மையினின் இடிக்கும்புலி யொப்பார்
பயிற்றியவில் வாள்பணிக்கும் வேலொடுடன் வல்லார்
துயிற்றியபல் கேள்வியினர் தூற்றிக்கொளப் பட்டார்
அயிற்றுப்படை யார்கள்மத யானைகதன் அறுப்பார். கூங

2174 காலனொடு சூழ்ந்தகடு நோய்களையும் ஒப்பார்
ஆலுங்கடல் தூர்த்தல்மலை அகழ்தலிவை வல்லார்
ஞாலமறி ஆண்டொழிலர் நான்கிலக்கம் உள்ளார்
மேலுநும ராலுரிமை யுட்சிறப்புப் பெற்றார். சுச

2175 சிங்கத்துரி போர்த்தசெழுங் கேடகமும் வாளும்
பொங்கும்அயில் வேலும்பொரு வில்லுமுடன் பரப்பி
மங்குலிடை மின்னுமதி யுஞ்சுடரும் போல
வெங்கட்டொழிற் கூற்றுமரண் சேரவிரிந் தன்றே. சுரு

வேறு

2176 செம்பொன் நீள்முடித் தேர்மன்னர் மன்னற்குப்
பைம்பொன் ஆழிதொட் டான்படை காட்டினான்
அம்பொன் ஒண்கழ லான்அயி ராவணம்
வெம்ப ஏறினன் வெல்கென வாழ்த்தினார். சுசு

2177 சிறுவெண் சங்கு முரன்றன திண்முர(சு)
அறைபு மாக்கடல் காரென ஆர்த்தன
நெறியின் நல்கின புள்ளும் நிமித்தமும்
இறைவன் கண்வலன் ஆடிற் றியைந்தரோ. சுஎ

2178 மல்லல் யானைக் கறங்கு மணியொலி
அல்ல தைங்கதி மான்கொழுந் தாரொலி
கல்லெ னார்ப்பொலி மிக்கொளிர் வாண்மினிற்
செல்லு மாக்கடல் போன்றது சேனையே. சுஅ

2179 மாலை மாமதி வெண்குடை மல்கிய
கோலக் குஞ்சி நிழற்குளிர் பிச்சமும்
சோலை யாய்ச்சொரி மும்மதத் தால்நிலம்
பாலை போய்மரு தம்பயந் திட்டதே. சுகூ

2180 மன்றல் மாமயில் ஆர்த்தெழ மானினங்
கன்றி னோடு கலங்கின காற்பெய
வென்றி வேற்படை அஞ்சி வனத்தொடு
குன்றெ லாங்குடி போவன போன்றவே. எ௦

2181 படுகண் முழவின் இமிழருவி வரையுங் காடும் பலபோகி [ன்
இடுமண் முழவின் இசையோவா ஏமாங் கதநாட் டெய்தியபி
நெடுவெண் ணிலவின் நெற்றிதோய் நிழலார் செம்பொற்புரிசையே
கடிமண் காவல் கருதினான் கோயி லாகக் கருதினான். ௭௧

2182 போக மகளிர் வலக்கண்கள்
துடித்த பொல்லாக் கனாக்கண்டார்
ஆக மன்னற் கொளிமழுங்கிற்
றஞ்சத் தக்க குரலினாற்
கூகை கோயிற் பகற்குழறக்
கொற்ற முரசம் பாடவிந்து
மாக நெய்த்தோர் சொரிந்தெங்கும்
மண்ணும் விண்ணும் அதிர்ந்தவே. ௭௨

2183 கூற்றம் வந்து புறத்திருந்த
தறியான் கொழும்பொன் உலகாள்வான்
வீற்றிங் கிருந்தேன் எனமகிழ்ந்து
வென்றி வேழம் இருநூறுங்
காற்றிற் பரிக்குந் தேர்நூறுங்
கடுங்கால் இவுளி ஆயிரமும்
போற்றி விடுத்தான் புனைசெம்பொற்
படையே அணிந்து புனைபூணான். ௭௩

2184 மன்னன் ஆங்கோர் மதவேழம்
வாரி மணாளன் என்பதூஉம்
மின்னுக் கொடித்தேர் விசயமும்
புரவி பவன வேகமும்
பொன்னிற் புனைந்து தான்போக்க
நிகழ்வ தோரான் மகிழ்வெய்தி
முன்யான் விட்ட இனக்களிற்றின்
இரட்டி விடுத்தான் எனப்புகழ்ந்தான். ௭௪

வேறு

2185 வீங்குநீர் விதையத் தார்கோன் கட்டியங் காரன் தன்னோ(டு)
ஆங்கவன் ஒருவ னாகி அன்பெனும் அயில்கொள் வாளால்
வாங்கிக்கொண் டுயிரையுண்பான் வஞ்சத்தாற் சூழ்ந்தவண்ணம்
ஓங்குநீர் ஓத வேலிக் குணர யாம் உரைத்தும் அன்றே.

2186 பெருமகன் காதற் பாவை பித்திகைப் பிணையல் மாலை
திருமகள் நோக்கி னாரை உயிரொடும் போக டாத
திருமக ளவட்குப் பாலான் அருந்திரி பன்றி எய்த
அருமகன் ஆகு மென்ன அணிமுர சறைவித் தானே. எசு

2187 ஆய்மதக் களிறு திண்டேர் அணிமணிப் புரவி அம்பொற்
காய்கதிர்ச் சிவிகை செற்றிக் கலந்தவை நுரைக ளாகத்
தோய்மழை யுலக வெள்ளந் தொன்னகர்த் தொக்க தேபோல்
ஆய்முடி அரச வெள்ளம் அணிநகர் ஈண்டிற் றன்றே. எஎ

2188 நல்லவள் வனப்பு வாங்க நகைமணி மாலை மார்பர்
வில்லன்றே உவனிப் பாரும் வெங்கணை திருத்து வாரும்
சொல்லுமின் எமக்கும் ஆங்கோர் சிலைதொட நாளென்பாரும்
பல்சரம் வழங்கு வாரும் பரிவுகொள் பவரும் ஆனார். எஅ

2189 பிறையெயிற் றெரிகட் பேழ்வாய்ப் பெருமயிர்ப் பைம்பொற் பன்றி
அறையெனத் திரியும் ஆய்பொற் பூமியில் நிறைந்து மன்னர்
உறுகணை யொன்றும் வில்லும் உடன்பிடித் துருவ நேமிப்
பொறிதிரி வதனை நோக்கிப் பூமுடி துளக்கி நின்றார். எகூ

2190 ஏந்தெழில் ஆகஞ் சாந்தின் இடுகொடி எழுதிக் காதிற்
காய்ந்தெரி செம்பொற் றோடுங் கனமணிக் குழையும் மின்ன
வேந்தருள் வினிதை வேந்தன் வெஞ்சிலை தளர வாங்கி
ஆய்ந்தபொற் பன்றி நெற்றி அருந்துகள் ஆர்ப்ப எய்தான்.

2191 குடர்தொடர் குருதிக் கோட்டுக் குஞ்சர நகரத் தார்கோன்
சுடர்நுதற் பட்டம் மின்னச் சுரும்பிமிர் கண்ணி சிந்த
அடர்கதிர்ப் பசும்பொற் பூணும் ஆரமும் அகலத் தொல்கப்
படர்சிலை குழைய வாங்கிப் பன்றியைப் பதைப்ப எய்தான்.

2192 வார்மதுத் துளிக்கு மாலை மணிமுடித் தொடுத்து நாலக்
கார்மதங் கடந்த வண்கைக் காம்பிலிக் காவல் மன்னன்
ஏர்மதக் கேழல் எய்வான் ஏறலும் பொறியின் ஏறுண்(டு)
ஆர்மதக் களிற்று வேந்தர்க் கருநகை யாக வீழ்ந்தான். அஉ

2193 முலைவட்டப் பூணும் முத்தும் மூழ்கலிற் கிழிந்து பொல்லா
இலைவட்டத் தாம மார்பிற் கோசலத் திறைவன் எய்த
குலைவட்டக் குருதி யம்பு வானின்மேற் பூசல் உய்ப்பான்
சிலைவட்டம் நீங்கி விண்மேற் செவ்வனே எழுந்த தன்றே.

2194 ஊடியூ மடந்தை போல உறுசிலை வாங்க வாரா(து)
ஆடெழு அனைய திண்டோள் அவந்திமன் அதனை நோனான்
நாடெழுந் தார்ப்ப மற்றந் நன்சிலை முரித்திட் டம்பே
வாடினன் பிடித்து நின்றான் மணமகன் போல நின்றான்.

2195 பில்கித்தேன் ஒழுகுங் கோதைப் பிறர்மனை யாள்கட் சென்ற
உள்ளத்தை உணர்வின் மிக்கான் ஒழித்திடப் பெயர்ந்த தே
மல்லல்நீர் மகத ராசன் எய்தகோல் மருள ஓடிப் [போல்
புல்லியப் பொறியை மோந்து புறங்கொடுத் திட்ட தன்றே.

2196 தென்வரைப் பொதியில் ஆரம் அகிலொடு தேய்த்த தேய்வை
மன்வரை அகலத் தப்பி மணிவடந் திருவில் வீச
மின்னென விட்ட கோலை விழுங்கக்கண் டழுங்கி வேர்த்துக்
கல்மலிந் திலங்குதிண்டோட் கலிங்கர்கோன் மெலிந்துமீண்டான்.

2197 கல்மழைப் பொற்குன் றேந்திக் கணநிரை அன்று காத்து
மன்னுயிர் இன்று காக்கும் வாரண வாசி மன்னன்
மின்னிழை சுடர வாங்கி விட்டகோல் உற்று ருதாய்
மன்னுயிர் நடுங்க நாணி மண்புக்கு மறைந்த தன்றே. அஎ

2198 எரிகதிர்ப் பைம்பொற்சுண்ணம் இலங்கமெய்ம் முழுதும்அப்பிப்
புரிகழல் அணிந்த நோன்றாட் போதன புரத்து வேந்தன்
அரிதினிற் றிகிரி ஏறித் திரிந்துகண் சுழன்று சோர்ந்து
விரிகதிர்க் கடவுள்போல வெறுநிலத் தொலிப்ப வீழ்ந்தான்.

2199 மலையச்செஞ் சாந்தும் முந்நீர் வலம்புரி ஈன்ற முத்தும்
இலைவைத்த கோதை நல்லார் இளமுலைப் பொறியும் ஆர்ந்து
சிலைவைத்த மார்பிற் றென்னன் திருமணிப் பன்றி நோக்கித்
தலைவைத்த தம்பு தானுந் தரணிமேற் பாதம் வைத்தான்.

2200 விற்றிறல் விசயன் என்பான் வெங்கணை செவிட்டி நோக்கி
ஒற்றுபு திருத்திக் கைம்மேல் உருட்டுபு நேமி சார்ந்தாங்(கு)
உற்றதன் சிலையின் வாய்ப்பெய் துடுவமை பகழி வாங்க
இற்றுவில் முறிந்து போயிற் றிமைப்பினில் இலங்கித் திட்டான்.

2201 குண்டலம் இலங்க வாங்கிக் குனிசிலை உறையின் நீக்கிக்
கொண்டவன் கொழும்பொற் றாரும் ஆரமும் மிளிர ஏறிக்
கண்டுகோல் நிறைய வாங்கிக் காதுற மறித லோடும்
விண்டுநாண் அற்ற தாங்கே விசயனும் வீக்கம் அற்றான். கூக

2202 உளைவனப் பிருந்த மான்தேர் ஒளிமுடி மன்ன ரெல்லாம்
வளைவனப் பிருந்த தோளாள் வருமுலைப் போகம் வேண்டி
விளைதவப் பெருமை ஓரார் விற்றிறல் மயங்கி யாருங்
களைகலார் பொறியை ஆங்கோர் ஆறுநாள் கழிந்த அன்றே.

வேறு

2203 பனைக்கை யானை மன்னர் பணியப் பைம்பொன் முடியிற்
கனைக்குஞ் சுரும்பார் மாலை கமழ மதுவுந் தேனும்
நனைக்குங் கழலோன் சிறுவன் நாம வெள்வேல் வலவன்
நினைக்க லாகா வகையால் நேரா ருயிர்மேல் எழுந்தான். ௬௩

2204 காரின் முழங்குங் களிறுங் கடலின் முழங்குந் தேரும்
போரின் முழங்கும் புரவிக் கடலும் புகைவாட் கடலும்
சீரின் முழங்கு முரசும் அலறுஞ் சிறுவெண் சங்கும்
நீரின் முழங்க முழங்கு நீல யானை இவர்ந்தான். ௬௪

2205 கல்லார் மணிப்பூண் மார்பிற் காமன் இவனே என்ன
வில்லார் கடலந் தானை வேந்தர் குழாத்துட் டோன்றப்
புல்லான் கண்ணின் நோக்கிப் புலிகாண் கலையிற் புலம்பி
ஒல்லா னொல்லா னாகி உயிர்போ யிருந்தான் மாதோ. ௬௫

2206 புலியாப் புறுத்திக் கொண்டேன் போக்கி விட்ட பிழைப்பும்
வலியார் திணிதோள் மதனன் அவனைப் பிழைத்த பிழைப்பு
நலியும் என்னை நலியும் என்னக் களிற்றின் உச்சி [ம்
இலையார் கடகத் தடக்கை புடைத்து மெய்சோர்ந் திருந்தான்.

2207 மைபூத் தலர்ந்த மழைக்கண் மாழை மானேர் நோக்கிற்
கொய்பூங் கோதை மடவார் கொற்றங் கொள்கென் றேத்தப்
பெய்பூங் கழலான் வேழத் திழிந்து பிறைபோற் குலாய
செய்பூண் சிலைநாண் எறிந்தான் சேரார் நாள்உக் கனவே.

வேறு

2208 கனிபடு மொழியி னாள்தன் காரிகை கவற்ற வந்து
குனிசிலை தோற்ற மன்னர் கொங்குகொப் புளிக்கும் நீலப்
பனிமலர்க் காடு போன்றார் படர்சிலை தொடாத வேந்தர்
இனிதினின் மலர்ந்த ஏரார் தாமரைக் காடு போன்றார்.

2209 போர்த்தகல் விசும்பில் வந்து பொறித்திரி பன்றி மூன்றும்
நீர்த்தகப் புணர்ந்த போழ்தின் நெடுந்தகை மூன்றும் அற்று
சூர்த்துடன் வீழ நோக்கிச் சுடுசரஞ் சிதற வல்லான் [ச்
ஓர்த்தொன்றே புணர்ப்ப நாடி ஒருபகல் காறும் நின்றான்.

2210 பொறியின்மேல் ஏறல் தேற்றான் நாணினுற் போதல் செய்யான்
நெறியின்வில் ஊன்றி நிற்ப நிழல்மணிப் பன்றி அற்று
மறியுமோ என்று முன்னம் மணிமுடி சிதறி வீழ்ந்த
செறிகழல் மன்னர் நக்குத் தீயத்தீ விளைத்துக்கொண்டார்.

2211 சிரற்றலைமணிகள்வேய்ந்த திருந்துபொற்றிகிரிச்செம்பொன்
உரற்றலை யுருவப் பன்றி இடம்வலம் திரிய நம்பன்
விரற்றலைப் புட்டில் வீக்கி வெஞ்சிலை கணையோ டேந்திக்
குரற்றலை வண்டு பொங்கக் குப்புற்று நேமி சேர்ந்தான்.

2212 ஒள்ளழல் வயிரப் பூணும் ஒளிர்மணிக் குழையும் மின்ன
ஒள்ளழற் கொள்ளி வட்டம் போற்குலாய்ச் சுழலப் பொன்
ஒள்ளழல் நேமி நக்க மண்டில மாக நின்றான் [ஞாண்
ஒள்ளழற் பரிதி மேல்ஓர் பரிதிநின் றதனை ஒத்தான்.

2213 அருந்தவக் கிழமை போல இருதவில் அருத நாண்வாய்த்
திருந்தினார் சிந்தைபோலுந் திண்சரஞ் சுருக்கி மாறாய்[(கு)
இருந்தவன் பொறியும்பன்றி யியற்றரும் பொறியும்அற்றாங்
ஒருங்குடன் உதிர எய்தான் ஊழித்தீ யுருமொ டொப்பான்.

2214 இலங்கெயிற் றேனம் ஏவுண் டிருநிலத் திடித்து வீழக்
கலங்குதெண் திரையுங் காருங் கடுவளி முழக்கும் ஒப்ப
உலம்புபு முரசங் கொட்டி ஒய்யெனச் சேனை ஆர்ப்பக்
குலம்பகர்ந் தறைந்து கோமான் கோவிந்தன் கூறி னானே.

2215 வானிடை ஒருவன் தோன்றி மழையென முழங்கிச் சொல்லுந்
தேனுடை அலங்கல் வெள்வேற் சீவகன் என்னுஞ் சிங்கம்
கானுடை அலங்கல் மார்பிற் கட்டியங் காரன் என்னும்
வேல்மிடை சோலை வேழத் தின்னுயிர் விழுங்கும் என்றான்.

வேறு

2216 விஞ்சையர் வெம்படை கொண்டுவந் தாயென
அஞ்சுவ லோஅறி யாயென தாற்றலை

வெஞ்சம மாக்கிடின் வீக்கறுத் தின்னெடு
வஞ்சனை வஞ்சம் அறுத்திடு கென்றான். கoசு

2217 சூரியற் காண்டலுஞ் சூரிய காந்தமஃ(து)
ஆரழல் எங்ஙனங் கான்றிடும் அங்ஙனம்
பேரிசை யான்இசை கேட்டலும் பெய்ம்முகிற்
காரிடி போல்மத னன்கனன் றிட்டான். கoஎ

2218 காற்படை யுங்களி றுங்கலி மாவொடு
நூற்படு தேரும் நொடிப்பினிற் பண்ணி
நாற்பணை யுந்தொகுத் தான்மக்கள் நச்சிலை
வேற்படை வீரரோர் நூற்றுவர் தொக்கார். கoஅ

2219 விற்றிற லான்வெய்ய தானையும் வீங்குபு
செற்றெழுந் தான்படை யுஞ்சின மொய்ம்பொடு
மற்றவர் மண்டிய வாளமர் ஞாட்பினுள்
உற்றவர்க் குற்ற தெல்லாமுரைக் குற்றேன். கoகூ

வேறு

2220 அத்தமால் வரையினை அனைய தோன்றல
மத்தகத் தருவியின் மணந்த ஓடைய
முத்துடை மருப்பின முனைக்கண் போழ்வன
பத்தியிற் பண்ணின பருமயானையே. ககo

2221 கோல்பொரு கொடுஞ்சிலை குருதி வெம்படை
மேலவர் அடக்குபு வேழம் ஏறலின்
மாலிரு விசும்பிடை மணந்த ஒண்கொடி
கால்பொரு கதலிகைக் கானம் ஒத்தவே. கஙக

2222 குடையுடை நிழலின கோலம் ஆர்ந்தன
கிடுகுடைக் காப்பின கிளர்பொற் பீடிகை
அடிதொடைக் கமைந்தன வாய தேர்க்குழாம்
வடிவுடைத் துகில்முடி வலவர் பண்ணினர். ககஉ

2223 கொய்யுளைப் புரவிகள் கொளீஇய திண்ணுகம்
பெய்கயி றமைவரப் பிணித்து முள்ளுறீஇச்
செய்கயி றுய்ந்தன சிலையும் அல்லவும்
கையமைத் திளைஞருங் கருவி வீசினார். கககூ

2224 பறந்தியல் தருக்கின பரவை ஞாட்பினுட்
கறங்கெனத் திரிவன கவரி நெற்றிய
பிறந்துழி அறிகெனப் பெரிய நூலவர்
குறங்கெழுத் துடையன குதிரை என்பவே. ௧௧௨௪

2225 கொல்நிலைக் குந்தமுஞ் சிலையுங் கூர்நுதி
மின்னிலை வாளொடு மிலேச்சர் ஏறலிற்
பொன்னரிப் புட்டிலுந் தாரும் பொங்குபு
முன்னுருத் தார்த்தெழப் புரவி மொய்த்தவே. ௧௧௨௫

2226 மாலையுங் கண்ணியும் மலைந்த சென்னியர்
ஆலுபு செறிகழல் ஆர்க்குங் காலினர்
பாலிகை இடையறப் பிடித்த பாணியர்
சாலிகை யுடம்பினர் தறுக ணாளரே. ௧௧௨௬

2227 போர்மயிர்க் கேடகம் புளகத் தோற்பரம்
வார்மயிர்க் கிடுகொடு வள்ளித் தண்டையும்
நேர்மரப் பலகையும் நிரைத்த தானையோர்
போர்முகப் புலிக்கடல் புகுந்த தொத்ததே. ௧௧௨௭

வேறு

2228 பார்நனை மதத்த பல்பேய் பருந்தொடு பரவச் செல்லும்
போர்மதக் களிறு பொற்றேர் நான்கரைக் கச்சம் ஆகும்
ஏர்மணிப் புரவி ஏழா மிலக்கம்ஏழ் தேவ கோடி
கார்மலி கடலங் காலாள் கற்பகத் தாரி னற்கே. ௧௧௨௮

2229 நிழல்மணிப் புரவித்திண்டேர் நிழல்துழாய்க் குனிந்துகுத்து [ம்
அழல்திகழ் கதத்த யானை ஐந்தரைக் கச்சம் ஆகும்
எழில்மணிப் புரவி ஏழா மிலக்கம்ஏழ் தேவ கோடி
கழல்மலிந் திலங்குங் காலாள் கட்டியங் காரற் கன்றே. ௧௧௨௯

வேறு

2230 குலங்கெழு மகளிர்தங் கோலம் நீப்பவும்
மலங்குளைப் புரவியுங் களிறும் மாளவும்
நிலமகள் நெஞ்சுகை யெறிந்து நையவும்
புலமகன் சீறினன் புகைந்த தெஃகமே. ௧௨௰

2231 குனில்பொரக் குளிறின முரசம் வெள்வளை
பணைபரந் தார்த்தன பம்பை வெம்பின
இணையில எழுந்ததாழ் பீலி எங்கணும்
முணையினற் கடலக முழக்கம் ஒத்தவே. ௨உ௬

2232 முடிமனர் எழுதரு பருதி மொய்களி(று)
உடைதிரை மாக்கலம் ஒளிறு வாட்படை
அடுதிற லெறிசுறு வாகக் காய்ந்தன
கடலிரண் டெதிர்ந்ததோர் காலம் ஒத்ததே. ௨உ௨

2233 அருங்கணை யடக்கிய ஆவ நாழிகை
பெரும்புறத் தலமரப் பிணித்த கச்சினர்
கருங்கழல் ஆடவர் கருவில் வாய்க்கொளீஇச்
சொரிந்தனர் கணைமழை விசும்பு தூர்ந்ததே. ௨உ௩

2234 நிணம்பிறங் ககலமுந் தோளும் நெற்றியும்
அணங்கருஞ் சரங்களின் அழுத்தி ஐயென
மணங்கமழ் வருபுனல் மறலு மாந்தரிற்
பிணங்கமர் மலைந்தனர் பெற்றி இன்னதே. ௨உ௪

2235 கழித்தனர் கனலவாள் புகைந்து கண்கள் தீ
விழித்தன தீந்தன இமைகள் கூற்றெனத்
தெழித்தனர் திறந்தனர் அகலம் இன்னுயிர்
அழித்தனர் அயிலவர் அரவம் மிக்கதே. ௨உ௫

2236 பொருங்களத் தாடவர் பொருவில் பைந்தலை
அரும்பெறற் கண்ணியோ டற்று வீழ்வன
கருங்கனிப் பெண்ணையங் கானங் கால்பொர
இருங்கனி சொரிவன போன்ற என்பவே. ௨உ௬

2237 பணைமுனிந் தாலுவ பைம்பொற் றுரின
கணைவிசை தவிர்ப்பன கவரி நெற்றிய
துணையமை இளமைய தோற்றம் மிக்கன
இணைமயிர்ப் புரவியோ டிவுளி ஏற்றவே. ௨உ௭

2238 கூருளி முகம்பொரக் குழிசி மாண்டன
ஆரொளி அமைந்தன ஆய்பொற் சூட்டின
காரொளி மின்னுமிழ் தகைய காவியற்
றேரொடு தேர்தமுட் சிறந்து சேர்ந்தவே. ௨உ௮

2239 அஞ்சனம் எழுதின கவளம் ஆர்ந்தன
குஞ்சரங் கூற்றொடு கொம்மை கொட்டுவ
அஞ்சன வரைசிற குடைய போல்வன
மஞ்சிவர் குன்றென மலைந்த வேழமே. கஉகூ

2240 மாக்கடற் பெருங்கலங் காலின் மாறுபட்(டு)
ஆக்கிய கயிறிரிந் தோடி எங்கணும்
போக்கறப் பொருவன போன்று தீப்படத்
தாக்கின அரசுவாத் தம்முள் என்பவே. கஙo

2241 விடுசரம் விசும்பிடை மிடைந்து வெய்யவன்
படுகதிர் மறைந்திருள் பரந்த தாயிடை
அடுகதிர் அயிலொளி அரசர் மாமுடி
விடுகதிர் மணியொளி வெயிலிற் காய்ந்தவே. கஙக

2242 பூண்குலாம் வனமுலைப் பூமி தேவிதான்
காண்கலேன் கடியன கண்ணி னாலெனாச்
சேண்குலாங் கம்பலஞ் செய்ய தொன்றினான்
மாண்குலாங் குணத்தினான் மறைத்திட் டாளரோ. கஙஉ

வேறு

2243 கலைக்கோட்ட அகலல்குற் கணங்குழையார் கதிர்மணிப்பூண்
முலைக்கோட்டால் உழப்பட்ட மொய்ம்மலர்த்தார் அகல்மார்பர்
மலைக்கோட்ட எழில்வேழந் தவநூறி மதயானைக்
கொலைக்கோட்டால் உழப்பட்டுக் குருதியுட் குளித்தனரே.

2244 மணமாலை மடந்தையர்தம் மெல்விரலாற் றொடுத்தணிந்த
இணர்மாலை யிருங்குஞ்சி ஈர்ங்குருதிப் புனலலைப்ப
நிணமாலைக் குடர்சூடி நெருப்பிமையா நெய்த்தோரிற்
பிணமாலைப் பேய்மகட்குப் பெருவிருந் தயர்ந்தனரே.

2245 தோலாப்போர் மறமன்னர் தொடித்தோள்கள் எடுத்தோச்சி
மேலாள்மேல் நெருப்புமிழ்ந்து மின்னிலங்கும் அயில்வாளாற்
காலாசோ டறஎறிந்த கனைகழற்கால் அலைகடலும்
நீலநீர்ச் சுறாஇனம்போல் நெய்த்தோருட் பிறழ்ந்தனவே.

2246 கருவியூ டுளங்கழிந்து கணைமொய்ப்பக் கதஞ்சிறந்து
குருவிசேர் வரைபோன்ற குஞ்சரங் கொடியணிந்த

உருவத்தேர் இறமுருக்கி உருள்நேமி சுமந்தெழுந்து
பருதிசேர் வரைபோலப் பகட்டினம் பரந்தனவே. ௧௫௬

2247 மாலைவாய் நெடுங்குடைமேல் மதயானைக் கைதுணிந்து
கோலம்நீள் கொழுங்குருதி கொளவீழ்ந்து கிடந்தன
மேலைநீள் விசும்புறையும் வெண்மதியம் விசும்பிழுக்கி
நீலமா சுணத்தோடு நிலத்திழிந்த தொத்தனவே. ௧௫௭

2248 அஞ்சன நிறம்நீக்கி அரத்தம்போர்த் தமருழக்கி
இங்குலிக இறுவன்ரைபோன் றினக்களி றிடைமிடைந்த
குஞ்சரங்கள் பாய்ந்திடலிற் குமிழிவிட் டுமிழ்குருதி
இங்குலிக அருவிபோன் றெவ்வாயுந் தோன்றினவே. ௧௫௮

2249 குஞ்சரந் தலையடுத்துக் கூந்தல்மாக் காலணையாச்
செஞ்சோற்றுக் கடன்நீங்கிச் சினவுவாள் பிடித்துடுத்த
பஞ்சிமேற் கிடந்துடைஞாண் பகைத்திலங்கக் கிடந்தாரை
அஞ்சிப்போந் தினநரியோ டோரிநின் றலறுமே. ௧௫௯

2250 காதலார்க் கமிர்தீந்த கடற்பவளங் கடிகைவாய்
ஏதிலாப் புள்ளுண்ணக் கொடேமென்று வாய்மடித்துக்
காதணிந்த பொற்றோடுங் குண்டலமும் நகநகா
வீழ்தைதந்த வரைமார்பர் விஞ்சையர்போற் கிடந்தனரே.

2251 குடர்வாங்கு குறுநரிகள் கொழுநிணப் புலாற்சேற்றுள்
தொடர்வாங்கு கதநாய்போற் றோன்றின தொடித்திண்டோள்
படர்தீரக் கொண்டெழுந்த பறவைகள் படநாகம்
உடனேகொண் டெழுகின்ற உவணப்புள் ஒத்தனவே.

2252 வரையோடும் உருமிடிப்ப வளையெயிற்றுக் கொழுங்குருதி
நிரையுளை அரிநன்மா நிலமிசைப் புரள்வனபோற் [ழிந்(து)
புரையுறுபொன் மணியோடை பொடிப்பொங்கப் பொருத
அரைசோடும் அரசுவா அடுகளத்துள் ஆழ்ந்தனவே. ௧௬௨

2253 தடம்பெருங் குவளைக்கட் டாழ்குழலார் சாந்தணிந்து
வடந்திளைப்பப் புல்லிய வரைமார்பம் வாள்புல்ல
நடந்தொழுகு குருதியுள் நகாக்கிடந்த எரிமணிப்பூண்
இடம்படு செவ்வானத் திளம்பிறைபோற் றோன்றினவே.

வேறு

2254 சூளமா கிருளைப் போழ்ந்து கதிர்சொரி கடவுட் டிங்கள்
கோளரா விழுங்கமுந்நீர்க் கொழுந்திரைக் குளித்ததேபோல்
நீளமர் உழக்கி யானை நெற்றிமேற் றத்தி வெய்ய [ற்றான்.
வாளின்வாய் மதனன் பட்டான் விசயன்போர் விசயம் பெ

2255 மன்மதன் என்னுங் காளை மணியொலிப் புரவித் தேர்மேல்
வில்மழை சொரிந்து கூற்றிற் றெழித்தனன் தலைப்பெய் தார்ப்பக்
கொன்மலி மார்பன் பொற்றேர் தொடுஞ்சிலை அறுப்பச்சீறிப்
பொன்வரைப் புலியிற் பாய்ந்து பூமிமேற் றோன்றி னானே.

2256 நெற்றிமேற் கோல்கள் மூன்று நெருப்புமிழ்ந் தழுந்த எய்ய
சுற்றுபு மாலை போலத் தோன்றல்தன் னுதலிற் சூடிப் [ச்
பொற்றதோர் பவழந் தன்மேற் புனைமணி அழுத்தி யாங்குச்
செற்றெயி றழுந்தச் செவ்வாய் கௌவிவாள் உரீஇ னானே.

2257 தோளினால் எஃகம் ஏந்தித் தும்பிமேல் இவரக் கையால்
நீளமாப் புடைப்பப் பொங்கி நிலத்தவன் கவிழ்ந்து வீழக்
கீளிரண் டாகக் குத்தி யெடுத்திடக் கிளர்பொன் மார்பன்
வாளினாற் றிருகி வீசி மருப்பின்மேற் றுஞ்சி னானே. கசஎ

2258 நனைகலந் திழியும் பைந்தார் நான்மறை யாளன் ஃபைம்பொற்
புனைகலக் குப்பை யொப்பான் புத்திமா சேனன் பொங்கி
வனைகலத் திகிரித் தேர்மேல் மன்னரைக் குடுமி கொண்டான்
கனையெரி அழலம் பெய்த கண்ணுதல் மூர்த்தி யொத்தான்.

2259 சண்பகப் பூங்குன் றொப்பான் தேவமா தத்தன் வெய்தா
விண்புக உயிரைப் பெய்வான் வீழ்தரு கடாத்த வேழம்
மண்பகு இடிக்குஞ் சிங்கம் எனக்கடாய் மகதர் கோமான்
தெண்கடற் றானை ஓட நாணிவேல் செறித்திட் டானே.

2260 சின்னப்பூ அணிந்த குஞ்சிச் சிறிதத்தன் சினவு பொன்வாள்
மன்னருட் கலிங்கர் கோமான் மத்தகத் திறுப்ப மன்னன்
பொன்னவிர் குழையும் பூணும் ஆரமுஞ் சுடர வீழ்வான்
மின்னவிர் பருதி முந்நீர்க் கோளொடும் வீழ்வ தொத்தான்.

2261 கொடுஞ்சிலை புழுவன்மான்றேர்க்கோவிந்தன்என்னுஞ்சிங்கம்
முடங்கருஞ் சிற்றத் தப்பின் மாரட்ட னென்னும் பொற்குன்(று)
இடந்துபொற் றூளி பொங்கக் களிற்றொடும் இறங்கி வீழ
அடர்த்தெரி பொன்செய்அம்பின் அழுன்றிடித்திட்டதன்றே.

2262 கோங்குபூத் துதிர்ந்தகுன்றிற் பொன்னணி புளகம்வேய்ந்த
பாங்கமை பருமயானைப் பல்லவ தேச மன்னன்
தேங்கமழ் தெரியற் றீம்பூந் தாரவன் ஊர்ந்த வேழம்
காம்பிலிக் கிறைவன் ஊர்ந்த களிற்றொடு மலைந்த தன்றே.

2263 கொந்தழல் பிறப்பத் தாக்கிக் கோடுகள் மிடைந்த தீயால்
வெந்தன விலையி லாத சாமரை வீர மன்னன்
அந்தரம் புதைய வில்வாய் அருஞ்சரம் பெய்த மாரி
குந்தத்தால் விலக்கி வெய்ய கூற்றென முழங்கி னானே.

2264 மற்றவன் உலோக பாலன் வயங்குபொற் பட்டம் ஆர்ந்த
நெற்றிமேல் எய்த கோலைப் பறித்திட உமிழ்ந்தநெய்த்தோர்
உற்றவன் களிற்றிற் பாயத் தோன்றுவான் உதயத் துச்சி
ஒற்றைமாக் கதிரை நீட்டி ஒண்சுடர் இருந்த தொத்தான்.

2265 கொடுமரங் குழைய வாங்கிக் கொற்றவன் எய்த கோல்கள்
நெடுமொழி மகளிர் கோல நிழல்மணி முலைகள் நேர்பட்(டு)
உடனுழ உவந்த மார்பம் மூழ்கலிற் சிங்கம் போலக்
கடல்மருள் சேனை சிந்தக் காம்பிலி மன்னன் வீழ்ந்தான்.

2266 பொன்னிறக் கோங்கம் பொற்பூங் குன்றெனப் பொலிந்தமேனி
நன்னிற மாவின் மேலான் நலங்கொள்தார் நபுலன் என்பான்
மின்னிற எஃகம் ஏந்தி வீங்குநீர் மகதை யார்கோன்
கொன்னிறக் களிற்றினெற்றிக் கூந்தல்மாப்பாய்வித்தானே.

2267 ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறிதல் ஓம்பி
நாந்தக வுழவன் நாணி நக்குநீ அஞ்சல் கூண்டாய்
காய்ந்திலேன் என்று வல்லே கலினமாக் குன்றிற் பொங்கிப்
பாய்ந்ததோர் புலியின்மற்றோர் பகட்டின்மேற்பாய்வித்தானே.

2268 கைப்படை யொன்று மின்றிக் கைகொட்டிக் குமரன் ஆர்ப்ப
மெய்ப்படை வீழ்த்த நாணி வேழமும் எறிதல் செல்லான்
மைப்படை நெடுங்கண் மாலை மகளிர்தம் வனப்பிற் சூழ்ந்து
கைப்படு பொருளி லாதான் காமம்போற் காளை மீண்டான்.

வேறு

2269 மண்காவலே மகிழாதிவ்வ் உடனேபுகழ் ஒழிய
விண்காவலே மகிழ்வீர்களி உளிரோவென விபுலன்
வண்காரிருள் மின்னேயுமிழ் செய்வாயதோர் அயில்வாள்
கண்காவல கழுகோம்புவ துயரானனி வினவும். கருகூ

2270 வீறின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயில் உழவன்.

2271 ஒன்ருயினும் பலவாயினும் ஓரோச்சினுள் எறிய
வென்ருயின மதவேழமும் உளவோவென வினவிப் [ப்பச்
சேபான்தாழ்வரைப் புலிப்போத்தெனப் பொலிதார்மிஞிருர்
சென்ருன்இகல் களிருயிரம் இரியச்சின வேலோன். கசுக

2272 புடைதாழ்குழை பொருவில்லுயர் பொன்ஞேலியொடெரிய
உடைநாணொடு கடிவட்டினொடொளிர்வாளினொடொருவன்
அடையாகிக வெறிநீயென அதுவோஎன நக்கான்
கிடையாயினன் இவனேயெனக் கிளர்ஆணழ குடையான்.

2273 இன்னீரின திரைமேலிரண் டிளவெஞ்சுடர் இகலி
மின்னேடவை சுழன்ருயிடை விளையாடுகின் றனபோற்
பொன்னாணினர் பொருவில்லுயர் புனைகேடகந் திரியாக்
கொன்வாளினர் கொழுந்தாரினர் கொடிமார்பினர் திரிந்தார்.

2274 விருந்தாயினை எறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற்(கு)
அரும்பூணற எறிந்தாங்கவன் நினதூழினி எனவே
எரிந்தாரயில் இடைபோழ்ந்தமை உணராதவன் நின்ருன்
சொரிந்தார்மலர் அரமங்கையர் தொழுதார்விசும் படைந்தான்.

வேறு

2275 நித்திலக் குப்பை போல நிழலுமிழ்ந் திலங்கு மேனிப்
பத்திப்பூண் அணிந்த மார்பிற் பதுமுகன் பைம்பொற் சூழி
மொய்த்தெரி யோடை நெற்றி மும்மதக் களிற்றின் மேலான்
கைத்தலத் தெஃகம் ஏந்திக் காமுகற் கண்டு காய்ந்தான்.

2276 மாற்றவன் சேனை தாக்கித் தளர்ந்தபின் வன்கண் மள்ளர்
ஆற்றலோ டாண்மை தோன்ற ஆருயிர் வழங்கி வீழ்ந்தார்
காற்றினாற் புடைக்கப் பட்டுக் கடலுடைந் தோடக் காமர்
ஏற்றிளஞ் சுறாக்கள் எங்குங் கிடந்தவை போல ஒத்தார்.

2277 துாசுலாம் பரவை யல்குற் றுணைமுலை மகளிர் ஆடும்
ஊசல்போற் சேனை ஓடப் பதுமுகன் களிற்றை உந்தி
மாசில்சீர் மழையின் நெற்றி மாமதி நுழைவ தேபோற்
காய்சினக் களிற்றின் நெற்றி ஆழிகொண் டழுத்தி னானே.

2278 பெருவலி யதனை நோனான் பிண்டிபா லத்தை ஏந்தி
அருவரை நெற்றிப் பாய்ந்த ஆய்மயிற் றோகை போலச்
சொரிமதக் களிற்றின் கும்பத் தழுத்தலின் தோன்றல் சீறிக்
கருவலித் தடக்கை வாளிற் காளையை வெளவி னானே. ௧௬௮

2279 தீமுகத் துமிழும் வேற்கட் சில்லரிச் சிலம்பி னார்தங்
காமுகன் களத்து வீழக் கைவிரல் நுதியிற் சுட்டிப்
பூமுக மாலை மார்பன் பொன்னணி கவசம் மின்னக்
கோமுகன் கொலைவல் யானை கூற்றெனக் கடாயி னானே.

2280 சாரிகை திரியும் யானை உழக்கலிற் றரணி தன்மேல்
ஆர்கலிக் குருதி வெள்ளம் அருந்துகள் கழுமி எங்கும்
வீரியக் காலிற் பொங்கி விசும்புபோர்த் தெழுதப் பட்ட
போர்நிலைக் களத்தை ஒப்பக் குருதிவான் போர்த்த தன்றே.

2281 சென்றது தடக்கை துாணி சேந்தகண் புருவங் கோலி
நின்றவிற் குனிந்த தம்பு நிமிர்ந்தன நீங்கிற் றாவி
வென்றிகொள் சரங்கள் மூழ்கி மெய்ம்மறைத் திட்டு மின்தோய்
குன்றின்மேற் பவழம் போலக் கோமுகன் தோன்றி னானே.

2282 பனிவரை முளைத்த கோலப் பருப்புடைப் பவழம் போலக்
குனிமருப் புதிரந் தோய்ந்த குஞ்சரங் கொள்ள உந்திக்
கனிபடு கிளவி யார்தங் கதிர்முலை பொருந்து சேந்த
துனிவரை மார்பன் சீறிச் சுடுசரஞ் சிதறி னானே. ௧௭௨

2283 பன்னலம் பஞ்சிக் குன்றம் படரெரி முகந்த தொப்பத்
தன்னிரு கையி னானுந் தடக்கைமால் யானை யாலும்
இன்னுயிர் பருகிச் சேனை எடுத்துக்கொண் டிரிய ஓட்டிக்
கொன்முரண் தோன்றவெம்பிக் கொலைக்களிற் றுழவன் ஆர்த்தான்.

2284 தருக்கொடு குமரன் ஆர்ப்பத் தன்சிலை வளைய வாங்கி
ஒருக்கவன் கையும் வாயும் உளங்கிழித் துடுவந் தோன்றச்
சுருக்குக்கொண் டிட்ட வண்ணந் தோன்றலெய் திடுதலோடும்
மருப்பிறக் களிறு குத்த வயிரந்தான் கழிந்த தன்றே.

2285 நித்தில மணிவண் டென்னும் நெடுமதக் களிறு பாய
முத்துடை மருப்புவல்லே உடைந்துமுத் தொழுகு குன்றின்
மத்தக யானை வீழ்ந்து வயிரங்கொண் டொழிந்த தாங்குப்
பத்திரக் கடிப்பு மின்னப் பதுமுகன் பகடு பேர்த்தான்.

2286 பத்திரக் கடிப்பு மின்னப் பங்கியை வம்பிற் கட்டிக்
கொத்தலர்த் தும்பை சூடிக் கோவிந்தன் வாழ்க என்னாக்
கைத்தலத் தெஃகம் ஏந்திக் காளைபோய் வேறு நின்றான்
மத்தக யானை மன்னர் வயிறெறி தவழ்ந்த தன்றே. கஎசு

2287 மேகலைப் பரவை யல்குல் வெள்வளை மகளிர் செஞ்சாந்(து)
ஆகத்தைக் கவர்ந்து கொண்ட அணிமுலைத் தடத்துவைகிப்
பாகத்தைப் படாத நெஞ்சிற் பல்லவ தேச மன்னன்
சேவகன் சிங்க நாதன் செருக்களங் குறுகி னானே. கஎஎ

2288 புனைகதிர் மருப்புத் தாடிமோதிரஞ் செறித்துப் பொன்செய்
கனைகதிர் வாளை ஏந்திக் கால்கழல் அணிந்து நம்மை
இனையன பட்ட ஞான்றால் இறைவர்கள் நினைப்ப தென்று
முனையழல் முளிபுற் கானம் மேய்ந்தென நீந்தி னானே.

2289 தாரணி பரவை மார்பிற் குங்குமம் எழுதித் தாழ்ந்த
ஆரமும் பூணும் மின்ன அருவிலைப் பட்டி னங்கண்
ஏர்படக் கிடந்த பொன்ஞாண் இருள்கெட விழிப்ப வெய்ய
பூரண சேனன் வண்கைப் பொருசிலை ஏந்தி னானே. கஎகூ

2290 ஊனமர் குறடு போல இரும்புண்டு மிகுத்த மார்பிற்
றேனமர் மாலை தாழச் சிலைகுலாய்க் குனிந்த தாங்கு
மானமர் நோக்கி னாரும் மைந்தருங் குழீஇய போருட்
கானமர் காமன் எய்த கணையெனச் சிதறி னானே. கஅ0

2291 வண்டலை மாலை தாழ மதுவுண்டு களித்து வண்கைப்
புண்தலை வேலை ஏந்திப் போர்க்களங் குறுகி வாழ்க
கண்படு காறும் எந்தை கட்டியங் காரன் என்றே
உண்டொலை யார்க வேலென் றுறுவலி தாக்கி னானே. கஅக

2292 கூற்றென வேழம் வீழாக் கொடிநெடுந் தேர்கள் நூறு
ஏற்றவர் தம்மைச் சீறு எந்திர நூழில் செய்யா
ஆற்றலங் குமரன் செல்வான் அலைகடற் றிரையின் நெற்றி
ஏற்றுமீன் இரியப் பாய்ந்த எறிசுறா வேறு போன்றான்.

2293 மாலைக்கண் ஆம்பல் போல மகளிர்தங் குழாத்திற் பட்டார்
கோலவாட் போருட் பட்டாற் குறுமுயற் கூடு கண்டு
சாலத்தாம் பனிக்கும் பொய்கைத் தாமரை நீர ராயின்
ஞாலத்தார் ஆண்மை என்னும் எனநகா வருகின் றானே.

2294 முடிச்சடை முனிவன் அன்று வேள்வியிற் கொண்ட வேற்கண்
மடத்தகை மகளிர் கோல வருமுலை உழக்கச் சேந்து
கொடிப்பல அணிந்த மார்பிற் கோவிந்தன் வாழ்க என்று
நடத்துவான் அவனை நோக்கி நகாச்சிலை பாரித் தானே.

2295 போர்த்தநெய்த் தோர னாகிப் புலாற்பருந் தார்ப்பச் செல்வான்
சீர்த்தகை யவனைக் கண்டென் சினவுவேல் இன்னும் ஆர்ந்தின்(று)
ஊர்த்துயி ருன்னை யுண்ணக் குறைவயி றாரும் என்றாங்(கு)
ஆர்த்தவாய் நிறைய எய்தான் அம்புபெய் தூணி ஒத்தான்.

2296 மொய்ப்படு சரங்கள் மூழ்க முனையெயிற் றுளி போல
அப்பணைக் கிடந்த மைந்தன் அருமணித் திருவில் வீசும்
செப்பிள முலையி னார்கண் சென்றுலாய்ப் பிறழச் சிந்திக்
கைப்பட எடுத்திட் டாடும் பொலங்கழற் காயும் ஒத்தான்.

2297 புனைகதிர்ப் பொன்செய் நாணிற் குஞ்சியைக் கட்டி நெய்த்
நனைகதிர் எஃகம் ஏந்தி நந்தன்வாழ் கென்ன நின்ற [தோர்
வினையொளிர் காளை வேலைக் கடக்கலார் வேந்தர் நின்றார்
கனைகடல் வேலை எல்லை கடக்கலா வண்ணம் நின்றார். ௧௮௭

2298 நின்றஅப் படையு ளானே ஒருமகன் நீலக் குஞ்சி
மன்றல மாலை நெற்றி மழகளி றன்றி வீழான் [விட்டான்
வென்றியங் கொளிறும் வெள்வேல் மின்னென வெகுண்டு
சென்றவேல் விருந்து செங்கண் மறவனுக்கெதிர்கொண் டானே.

2299 மான்வயி றார்ந்து நோக்கும் வெருவுறு மருளின் நோக்கிற்
றேன்வயி றார்ந்த கோதைத் தீஞ்சொலார் கண்கள் போலும்
ஊன்வயி றார்ந்த வெள்வேல் ஒய்யெனப் பறித்து நக்கான்
கான்வயி றார்ந்து தேக்கிக் களிவண்டு கனைக்குந் தாரான்.

2300 விட்டழல் சிந்தி வெள்வேல் விசும்பின்வீழ் மின்னின்னொய்தாக்
கட்டழல் நெடுங்கண் யாதும் இமைத்திலன் மகளிர் ஓச்சு
மட்டவிழ் மாலை போல மகிழ்ந்துபூண் மார்பத் தேற்றுக்
கட்டழல் எஃகஞ் செல்லக் கால்நெறி யாயி னானே. ௧௬௦

2301 கவிமதங் கடந்து காமர் வனப்புவீற் றிருந்த கண்ணார்
குவிமுலை நெற்றித் தீந்தேன் கொப்புளித் திட்ட பைந்தார்ச்
செவிமதக் கடலங் கேள்விச் சீவகன் கழல்கள் வாழ்த்திச்
சவிமதுத் தாம மார்பிற் சலநிதி தாக்கி னானே. ௧௬௧

2302 குஞ்சரங் குனிய நூறித் தடாயின குருதி வாள்தன்
நெஞ்சகம் நுழைந்த வேலைப் பறித்துவான் புண்ணுள் நீட்டி
வெஞ்சமம் நோக்கி நின்று மிறைக்கொளி திருத்து வாற்கண்(டு)
அஞ்சிமற் றரசர் யானைக் குழாத்தொடும் இரிந்திட் டாரே.

2303 தோட்டுவண் டொலியல் மாலைத்
துடியிடை மகளிர் ஆய்ந்த
மோட்டுவெண் முத்த மின்னும்
முகிழ்முலை யுழுது சாந்தங்
கோட்டுமண் கொண்ட மார்பங்
கோதைவாள் குளித்து மூழ்கிக்
கோட்டுமண் கொள்ள நின்றான்
குரிசில்மண் கொள்ள நின்றான். ௧௬௩

2304 எரிமணிக் குப்பை போல இருளற விளங்கு மேனித்
திருமணிச் செம்பொன் மார்பிற் சீவகன் சிலைகை யேந்தி
அருமணி யரச ராவி அழலம்பிற் கொள்ளை சாற்றி
விரிமணி விளங்கு மான்தேர் விண்தொழ ஏறி னானே.

2305 கருவளி முழக்குங் காருங் கனைகடல் ஒலியுங் கூடி
அருவலிச் சிங்க ஆர்ப்பும் ஆங்குடன் கூடிற் றென்னச்
செருவிளை கழனி மள்ளர் ஆர்ப்பொடு சிவணிச் செம்பொற்
புரிவளை முரசம் ஆர்ப்பப் போர்த்தொழில் தொடங்கி னானே.

2306 அரைசர்தம் முடியும் பூணும் ஆரமும் வரன்றி ஆர்க்கும்
முரைசமுங் கொடியுந் தாரும் பிச்சமுஞ் சுமந்து மாவும்
விரைபரித் தேரும் ஈர்த்து வேழங்கொண் டொழுகி வெள்ளக்
குரைபுனற் குருதி செல்லக் குமரன்விற் குனிந்த தன்றே.

2307 கேழ்கிளர் எரிகட் பேழ்வாய்க் கிளர்பெரும் பாம்பி னேடும்
சூழ்கதிர்க் குழவித் திங்கள் துறுவரை வீழ்வ தேபோல்
தாழிருந் தடக்கை யோடுந் தடமருப் பிரண்டும் அற்று
வீழ்தரப் பரந்த அப்பு நிழலிற்போர் மயங்கி னரே. ௧௯௭

2308 ஆடவர் ஆண்மை தோற்றும் அணிகிளர் பவளத் திண்கை
நீடெரி நிலக்கண் ணுடிப் போர்க்களத் துடைந்த மைந்தர்
காடெரி கவரக் கல்லென் கவரிமா இரிந்த வண்ணம்
ஓடக்கண் டுருவப் பைந்தார் அரிச்சந்தன் உரைக்கின் றனே.

2309 மஞ்சிவர் மின்ன னார்தம் வாலரிச் சிலம்பு சூழ்ந்து
பஞ்சிகொண் டெழுதப் பட்ட சீறடிப் பாய்தல் உண்ட
குஞ்சியங் குமரர் தங்கள் மறம்பிறர் கவர்ந்து கொள்ள
அஞ்சியிட் டோடிப் போகின் ஆண்மையார் கண்ண தம்மா.

2310 உழையினம் உச்சிக் கோடு கலங்குத லுற்ற போதே
விழைவற விதிர்த்து வீசி விட்டெறிந் திடுவ தொப்பக்
கழலவர் உள்ளம் அஞ்சிக் கலங்குமேல் அதனை வல்லே
மழைமினின் நீக்கி யிட்டு வன்கண்ணர் ஆப அன்றே. ௨௦௦

2311 தற்புறந் தந்து வைத்த தலைமகற் குதவி வீந்தாற்
கற்பக மாலை சூடிக் கடியர மகளிர்த் தோய்வர்
பொற்றசொல் மாலை சூட்டிப் புலவர்கள் புகழக் கல்மேல்
நிற்பர்தம் வீரந் தோன்ற நெடும்புகழ் பரப்பி என்றான்.

2312 பச்சிறும் பெஃகிட் டாங்குப் படையைக்கூர்ப் பிடுதலோடும்
கச்சையுங் கழலும் வீக்கிக் காஞ்சனத் தளிவம் வாய்க்கிட்(டு)
அச்சுற முழங்கி ஆரா அண்ணலங் குமரன் கையுள்
நச்செயிற் றம்பு தின்ன நாளிரை யாக லுற்றார். ௨௦௨

2313 வடதிசை எழுந்த மேகம் வலனுராய் மின்னுச் சூடிக்
குடதிசைச் சேர்ந்து மாரி குளிறுபு சொரிவ தேபோற்
படர்கதிர்ப் பைம்பொற் றிண்தேர்பாங்குற இமைப்பின் ஊர்ந்தான்
அடர்சிலை அப்பு மாரி தாரைநின் றிட்ட தன்றே. ௨௦௩

2314 அற்றுவீழ் தலைகள் யானை யுடலின்மேல் அழுந்தி நின்ற
பொற்றதிண் சரத்திற் கோத்த பொருசரந் தாள்க ளாகத்
தெற்றிமேற் பூத்த செந்தா மரைமலர் போன்ற செங்கண்
மற்றத்தா துரிஞ்சி யுண்ணும் வண்டினம் ஒத்த அன்றே.

வேறு

2315 திங்களோடுடன் குன்றெலாந் துளங்கி மாநிலஞ் சேர்வபோற்
சங்க மத்தகத் தலமரத் தரணி மேற்களி றழியவும்
பொங்கு மாநிரை புரளவும் பொலங்கொள் தேர்பல முறியவும்
சிங்கம்போற்றெழித் தார்த்தவன் சிறுவர்தேர்மிசைத் தோன்றினர்.

2316 சந்த னஞ்சொரி தண்கதிர்த் திங்க ளந்தொகை தாம்பல
குங்கு மக்கதிர்க் குழவியஞ் செல்வ னோடுடன் பொருவபோல்
மங்குல் மின்னென வள்ளல்தேர் மைந்தர் தேரொடு மயங்கலின்
வெங்கண் வில்லுமிழ் வெஞ்சர மிடைந்து வெங்கதிர்மறைந்ததே.

2317 குருதி வாளொளி அரவினாற் கொள்ளப் பட்டவெண்திங்கள்போல்
திருவநீர்த்திகழ்வலம்புரிவாய்வைத் தாங்கவன்தெழித்தலும்
பொருவில் கீழ்வளி முழக்கினாற் பூமிமேற்சனம் நடுங்கிற்றே
அரவ வெஞ்சிலை வளைந்ததே யண்ணல் கண்ணழ லுமிழ்ந்ததே.

2318 கங்கை மாக்கடற் பாய்வதே
போன்று காளைதன் கார்முகம்
மைந்தர் ஆர்த்தவர் வாயெலாம்
நிறைய வெஞ்சரங் கான்றபின்
நெஞ்சம் போழ்ந்தழ லம்புண
நீங்கி னாருயிர் நீள்முழைச்
சிங்க ஏறுகள் கிடந்தபோற்
சிறுவர் தேர்மிசைத் துஞ்சினர். உ௦அ

2319 நிவந்த வெண்குடை வீழவும் வேந்தர் நீள்விசும் பேறவும்
உவந்து பேய்க்கணம் ஆடவும் ஓரி கொள்ளை கொண் டுண்ணவும்
கவந்தம் எங்கணும் ஆடவும் களிறு மாவொடு கவிழவும்
சிவந்த சீவக சாமிகண் புருவ மும்முரி முரிந்தவே. உ௦௯

2320 பொய்கை போர்க்களம் புறவிதழ் புலவு வாட்படை புல்லிதழ்
ஐய கோல்களி றகவிதழ் அரசர் அல்லிதன் மக்களா
மையில் கொட்டையம் மன்னனுமலர்ந்த தாமரை வரிசையாற்
பைய உண்டபின் கொட்டைமேற் பவித்திரத் தும்பி பறந்ததே.

வேறு

2321 கலைமுத்தங் கொள்ளும் அல்குற் கார்மழை மின்ன னார்தம்
முலைமுத்தங் கொள்ளச் சாந்தம் அழிந்துதார் முருகும்விம்மு

முலைமுத்தங் கொள்ளு மார்பின் முன்னனுங் கண்டுகாய்ந்தான்
சிலைமுத்தங் கொள்ளுந் திண்டோட் செம்மலுந் தீயிற்சேர்ந்தான்.

2322 தன்மதந் திவண்ட வண்டு தங்கிய காட்டுள் வேழம்
பின்மதஞ் செறித்திட் டஞ்சிப் பிடிமறந் திரிந்து போகும்
வென்மதக் களிற்று வெய்ய அசனிவே கத்தின் மேலான்
மின்னுமிழ் மாலை வேந்தன் வீரற்கு விளம்பி னானே. உகஉ

2323 நல்வினை யுடைய நீரார் நஞ்சுணின் அமுதம் ஆகும் [ம்
இல்லையேல் அமுதும் நஞ்சாம் இன்னதால் வினையின் ஆக்க
கொல்வல்யான் இவனையென்றும் இவன்கொல்லும் என்னை யென்றும்
அல்லன நினைத்தல் செல்லார் அறிவினாற் பெரிய நீரார்.

2324 அகப்படு பொறியி னாரை ஆக்குவார் யாவர் அம்மா
மிகப்படு பொறியி னாரை வெறியராச் செய்ய லாமோ
நகைக்கதிர் மதியம் வெய்தா நடுங்கச்சுட் டிடுதல் உண்டே
பகைக்கதிர்ப் பரிதி சந்து மாவியும் பயத்தல் உண்டே. உகச

2325 புரிமுத்த மாலைப் பொற்கோல் விளக்கினுட் பெய்த நெய்யும்
திரியுஞ்சென் றற்ற போழ்தே திருச்சுடர் தேம்பு மல்லால்
எரிமொய்த்துப் பெருக லுண்டோ இருவினை சென்று தேய்ந்தாற்
பரிவுற்றுக் கெடாமற் செல்வம் பற்றியார் அதனை வைப்பார்.

2326 நல்லொளிப் பவளச் செவ்வாய் நன்மணி எயிறு கோலி
வில்லிட நக்கு வீரன் அஞ்சினா யென்ன வேந்தன்
வெல்வது விதியின் ஆகும் வேல்வரின் இமைப்பே னாயிற்
சொல்லிநீ நகவும் பெற்றாய் தோன்றல்மற் றென்னை என்றான்.

2327 பஞ்சிமெல் அடியி னார்தம் பாடகந் திருத்திச் சேந்து
நெஞ்சுநொந் தழுத கண்ணீர் துடைத்தலின் நிறைந்த கோல
அஞ்சனக் கலுழி அஞ்சே றாடிய கடக வண்கை
வெஞ்சிலை கொண்டு வெய்ய உருமென முழங்கிச் சொன்னான்.

வேறு

2328 இல்லாளை அஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற்
புல்லாள னாக மறந்தோற்பின் எனப்பு கைந்து
வில்வா ளழுவம் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்
கொல்யானை யுந்திக் குடைமேலுமொர் கோல்தொ டுத்தான்.

2329 தொடுத்தாங்க அம்பு தொடைவாங்கி விடாத முன்னம்
அடுத்தாங்க அம்புஞ் சிலையும்அதன் நாணும் அற்றுக்
கடுத்தாங்கு வீழக் கதிர்வான்பிறை யம்பின் எய்தான்
வடித்தாரை வெள்வேல் வயிரம்மணிப் பூணி னானே. உகக

2330 அம்புஞ் சிலையும் அறுத்தானென் றழன்று பொன்வாள்
வெம்பப் பிடித்து வெகுண்டாங்கவன் தேரின் மேலே
பைம்பொன் முடியான் படப்பாய்ந்திடு கென்று பாய்வான்
செம்பொன் னுலகின் இழிகின்றவோர் தேவன் ஒத்தான்.

2331 மொய்யார் குழலார் முலைப்போர்க்கள மாய மார்பிற்
செய்யோன் செழும்பொற் சரஞ்சென்றன சென்ற தாவி
வெய்தா விழியா வெருவத்துவர் வாய் மடியா
மையார் விசும்பின் மதிவீழ்வது போல வீழ்ந்தான். உஉக

வேறு

2332 கட்டியங் காரன் என்னுங் கலியர சழிந்த தாங்குப்
பட்டஇப் பகைமை நீங்கிப் படைத்தொழி லொழிக என்னாக்
கொட்டினர் முரசம் மள்ளர் ஆர்த்தனர் குருதிக் கண்ணீர்
விட்டழு தவன்கண் ஆர்வம் மண்மகள் நீங்கி னாளே. உஉஉ

2333 ஒல்லெனீ ருலகம் அஞ்ச ஒளியுமிழ் பரிதி தன்னைக்
கல்லெனக் கடலின் எற்றிக் கவுட்படுத் திட்டு நாகம்
பல்பகல் கழிந்த பின்றைப் பன்மணி நாகந் தன்னை
வல்லைவாய் போழ்ந்து போந்தோர் மழகதிர் நின்ற தொத்தான்.

2334 கோட்டுமீன் குழாத்தின் மள்ளர் ஈண்டினர் மன்னர் சூழ்ந்தார்
மோட்டுமீன் குழாத்தின் எங்குந் தீவிகை மொய்த்த முத்த
ஆட்டுநீர்க் கடலின் ஆர்த்த தணிநகர் வென்றி மாலை [ம்
கேட்டுநீர் நிறைந்து கேடில் விசயைகண் குளிர்ந்த அன்றே.

2335 அணிமுடி அரசர் மாலை அழல்நுதி வாள்க ளென்னும்
மணிபுனை குடத்தின் நெய்த்தோர் மண்ணுநீர்மருள ஆட்டிப்
பணைமுலைப் பைம்பொன் மாலைப் பாசிழைப் பூமி தேவி
இணைமுலை ஏக மாக நுகரிய எய்தி னாளே. உஉரு

11. பூமகள் இலம்பகம்

2336 கண்ணாடி யன்ன கடிமார்பன் சிவந்து நீண்ட
கண்ணாடி வென்று களங்கண்டு நியம முற்றிக்
கண்ணாடி வண்டு பருங்கமழ் மாலை மூதூர்க்
கண்ணாடு யானையவர் கைதொழச் சென்று புக்கான். க

2337 கூடார் புலியும் முழைக்கோளரி யேறும் அன்ன
கூடார் மெலியக் கொலைவேல்நினைந் தானை யேத்திக்
கூடார மாலைக் குவிமென்முலைக் கோதை நல்லார்
கூடார மாட மயில்போலக் குழீயி னாரே. உ

வேறு

2338 மாலைச் செற்றான் மக்களொ டெல்லாம் உடனேஇம்
மாலைச் செற்றான் வைந்நுனை யம்பின் இவனென்பார்
மாலைக் கின்றே மாய்ந்தது மாயாப் பழியென்பார்
மாலைக் கேற்ற வார்குழல் வேய்த்தோள் மடநல்லார். ௩

2339 நாகந் நெற்றி நன்மணி சிந்தும் அருவிபோல்
நாகந் நெற்றிந் நன்மணி யோடை நறவிம்மும்
நாகந் நெற்றிந் நன்மலர் சிந்தி நளிர்செம்பொன்
நாகந் நெற்றி மங்கைய ரொத்தார் மடநல்லார். ௪

2340 கோள்திக் கோடுங் கூம்புயர் நாவாய் நெடுமாடங்
கோடிப் பட்டிற் கொள்கொடி கூடப் புனைவாரும்
கோடித் தானைக் கொற்றவற் காண்பான் இழைமின்னக்
கோடிச் செம்பொற் கொம்பரின் முன்முன் தொழுவாரும்.

2341 அம்புகை வல்வில் ஆர்கழல் மள்ளர் திறலேத்த
அம்புகைக் கொண்டால் ஆரிவற் கீண்டு நிகராவார்
அம்புகை யார்ந்த அந்துகில் அல்குல் அவிர்கோதாய்
அம்புகைக் காணும் ஐயனைக் கையிற் றொழுதென்பார். ௬

2342 மைத்துன நீண்ட மாமணி மாடம் மிசையேறி
மைத்துன நீண்ட வாட்டடங் கண்ணார் மலர்தூவ
மைத்துன மன்னர் மால்களி றேறிப் புடைசூழ
மைத்துன நீண்ட மாமணி வண்ணன் அவனொத்தான். ௭

வேறு

2343 ஊது வண்டரற் றிம்உயர் தாமரைப்
போது பூங்கழு நீரொடு பூத்துடன்
வீதி மல்கின போல்மிளிர் வேற்கணும்
மாத ரார்முகப் பூவும் மலர்ந்தவே. அ

2344 வீணை வித்தகன் வேந்தடு வீங்குதோள்
காணுங் காரிகை யார்கதிர் வெம்முலைப்
பூணும் ஆரமும் ஈன்றபொன் பூத்தலர்ந்(து)
யாணர் ஊர்அம ராபதி போன்றதே. கூ

2345 தேம்பெய் கற்பகத் தாரவன் சேர்தலும்
பூம்பெய் கோதைப் புரிசைக் குழாம்நலம்
ஓம்பு திங்கள் உலந்து சுடர்கண்ட
ஆம்ப லாய்மலர்க் காடொத் தழிந்ததே. க0

வேறு

2346 மாகம் முழக்கின் மணிநாகம் பதைப்ப வேபோல்
ஆகம் மறவர் அகன்கோயில்புக் கம்பொன் மாலைத்
தோகைம் மடவார் துவர்வாய்துடித் தஞ்ச வெம்பா
வேகம் உடைத்தாய் விழியாத்தெழித் தேகு கென்றார். கக

2347 செய்பாவை யன்னார் சிலம்பார்க்குமென் சீற டியார்
செய்பூந் தவிசின் மிசையல்லது சேற லில்லார்
மையார்ந்த கண்ணீர் மணிப்பூண்முலை பாய விம்மா
வெய்தா மடவார் வெறுவெந்நிலத் தேகி னாரே. கஉ

2348 நெருப்புற்ற போல நிலமோந்துழிச் செய்ய வாகிப்
பருக்கென்ற கோல மரற்பல்பழம் போன்று கொப்புள்
வருத்தம் மிழற்றிப் பசும்பொற்சிலம் போசை செய்யச்
செருக்குற்ற பஞ்சின் மலர்ச்சீறடி நோவச் சென்றார். கங

2349 பொற்பூண் சுமந்து பொருகோட்டை அழித்து வெம்போர்
கற்பார் எழுந்த முலையார் களங்கண்டு நீங்கி
நற்பூண் அணிந்த முலையார்நிலை கால்ச ரிந்து
நெற்றிந் நிறுத்து வடம்வைத்த முலையி னாரும். கச

2350 செங்காற் குழவி தழீஇயினார் திங்கள் புக்க நீரார்
அங்கால் முலையின் அரும்பால்வரப் பாயி னாரும்

பைங்காசும் முத்தும் பவழத்தொடு பைம்பொன் ஆர்ந்த
பொங்கார் முலையார் திருமுற்றம் நிறைந்து புக்கார். ௧௫

2351 பெய்யார் முகிலிற் பிறழ்பூங்கொடி மின்னின் மின்னு
நெய்யார்ந்த கூந்தல் நிழற்பொன்னரி மாலை சோரக்
கையார் வளையார் புலிகண்ணுறக் கண்டு சோரா
நையாத் துயரா நடுங்கும்பிணை மான்கள் ஒத்தார். ௧௬

2352 வட்டம் மலர்த்தா ரவனாலருள் பெற்று வான்பொற்
பட்டம் அணிந்தாள் இவர்தங்களுள் யாவள் என்ன
மட்டார் அலங்கல் அவன்மக்களுந் தானும் மாதோ
பட்டார் அமருட் பசும்பொன்முடி சூழ என்றார். ௧௭

2353 மாலை றனையானொடு மக்களுக் கஃதோ என்னு
வேலேறு பெற்ற பிணையின்நனி மாழ்கி வீழ்ந்து
சேலேறு சின்னீ ரிடைச்செல்வன போன்று செங்கண்
மேலேறி மூழ்கிப் பிறழ்ந்தாழ்ந்த இறந்து பட்டாள். ௧௮

2354 ஐவாய் அரவின் அவிராரழல் போன்று சீறி
வெய்யோன் உயிர்ப்பின் விடுத்தேன்என் வெகுளி வெந்தீ
மையார் அணல மணிநாகங் கலுழன் வாய்ப்பட்(டு)
உய்யா வெனநீ ருடன்றுள்ளம் உருகல் வேண்டா. ௧௯

2355 மண்கேழ் மணியின் நுழையுந்துகில் நாவின் வாய்த்த
நுண்கேழ் நுசுப்பின் மடவீர்நும்மை நோவ செய்யேன்
ஒண்கேழ்க் கழுநீர் ஒளிமுத்தம் உமிழ்வ தேபோற்
பண்கேழ் மொழியீர் நெடுங்கண்பனி வீழ்த்தல் வேண்டா.

2356 என்உங்கட் குள்ளம் இலங்கீர்வளைக் கையி னீரே
மன்இங்கு வாழ்வு தருதும்அவற் றானும் வாழ்மின்
பொன்இங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின் என்றான்
வில்நீங்க வீங்கி விழுக்கந்தென நீண்ட தோளான். ௨௧

2357 தீத்தும்மும் வேலான் திருவாய்மொழி வான்மு ழக்கம்
வாய்த்தங்குக் கேட்டு மடமஞ்ஞைக் குழாத்தின் ஏகிக்
காய்த்தெங்கு சூழ்ந்த கரும்பார்தம் பதிகள் புக்கார்
சேய்ச்செந் தவிசும் நெருப்பென்றெழுஞ் சீற டியார். ௨௨

2358 காதார் குழையுங் கடற்சங்கமுங் குங்கு மமும்
போதார் அலங்கற் பொறையும்பொறை யென்று நீக்கித்
தாதார் குவளைத் தடங்கண்முத் துருட்டி விம்மா
மாதார் மயிலன்னவர் சண்பகச் சாம்பல் ஒத்தார். உ௩

2359 ஆய்பொற் புரிசை யணியாரகன் கோயில் எல்லாம்
காய்பொற் கடிகைக் கதிர்க்கைவிளக் கேந்தி மள்ளர்
வேய்பொன் அறையும் பிறவும்விரைந் தாய்ந்த பின்றைச்
சேய்பொற் கமல மகள்கைதொழச் சென்று புக்கான். உ௪

2360 முலையீன்ற பெண்ணைத் திரள்தாமங்கள் தாழ்ந்து முற்று
மலையீன்ற மஞ்சின் மணிப்பூம்புகை மல்கி விம்மக்
கலையீன்ற சொல்லார் கமழ்பூவணைக் காவல் கொண்டார்
கோலையீன்ற வேற்கண் ணவர்கூடிய மார்பற் கன்றே. உ௫

2361 போர்க்கோலம் நீக்கிப் புகழ்ப்பொன்னின் எழுதப் பட்ட
வார்க்கோல மாலை முலையார்மண் ணுறுப்ப ஆடி
நீர்க்கோலஞ் செய்து நிழல்விட்டுமிழ் மாலை மார்பன்
தார்க்கோல மான்தேர்த் தகைமாமற் றெழுது சொன்னன்.

2362 எண்கொண்ட ஞாட்பின் இரும்பெச்சிற் படுத்த மார்பர்
புண்கொண்டு போற்றிப்புறஞ்செய்கெனப்பொற்பநோக்கிப்
பண்கொண்ட சொல்லார்தொழப் பாம்பணை யண்ணல்போல
மண்கொண்ட வேலான் அடிதைவர வைகி னனே. உ௭

வேறு

2363 வாள்க ளாலே துகைப்புண்டு வரைபுண் கூர்ந்த போல்வேழம்
நீள்கால் விசைய நேமித்தேர் இமைத்தார் நிலத்திற் காண்கலாத்
தாள்வல் புரவி பண்ணவிழ்த்த யானை ஆவித் தாங்கன்ன
கோள்வாயெஃகம்இடம்படுத்தகொழும்புண்மார்பர்உயாவுயிர்த்தார்.

2364 கொழுவாய் விழுப்புண் குரைப்பொலியும்
கூந்தல் மகளிர் குழைசிதறி
அழுவார் அழுகைக் குரலொலியும்
அதிர்கண் முரசின் முழக்கொலியும்

குழுவாய்ச் சங்கின் குரலொலியும்
கொலைவல் யானைச் செவிப்புடையும்
எழுவார் யாழும் ஏத்தொலியும்
இறைவன் கேளாத் துயிலேற்றான். உகூ

2365 தொடித்தோள் மகளிர் ஒருசாரார்
துயரக் கடலுள் அவர்நீந்த
வடிக்கண் மகளிர் ஒருசாரார்
வரம்பி லின்பக் கடல்நீந்தப்
பொடித்தான் கதிரோன் திரைநெற்றிப்
புகழ்முப் பழநீர்ப் பளிங்களைஇக்
கடிப்பூ மாலை யவரேந்தக்
கமழ்தா மரைக்கண் கழீஇயினான். ௩௦

2366 முனைவற்றொழுது முடிதுளக்கி முகந்துசெம்பொன் கொளவீசி
நினையலாகா நெடுவாழ்க்கை வென்றிக்கோல விளக்காகப் [சி
புனையப்பட்ட அஞ்சனத்தைப் புகழ எழுதிப் புனைபூணான்
கனைவண் டார்க்கும் அலங்கலுங் கலனும் ஏற்பத் தாங்கினான்.

2367 முறிந்த கோல முகிழ்முலையார் பரவ மொய்யார் மணிச்செப்பில்
உறைந்த வெண்பட் டுடுத்தொளிசேர் பஞ்சவாசங் கவுட்கொண்டு
செறிந்த கழுநீர்ப் பூப்பிடித்துச் சேக்கைமரீஇய சிங்கம்போல்
அறிந்தார்தமக்கும் அகங்கனாய் அண்ணல்செம்மாந் திருந்தானே.

2368 வார்மீ தாடி வடஞ்சூடிப் பொற்பார்ந் திருந்த வனமுலையார்
ஏர்மீ தாடிச் சாந்தெழுதி இலங்கு முந்நீர் வலம்புரிபோற்
கார்மீ தாடிக் கலம்பொழியுங் கடகத் தடக்கைக் கழலோனைப்
போர்மீ தாடிப் புறங்கண்ட புலால்வேல் மன்னர் புடைசூழ்ந்தார்.

வேறு

2369 தொல்லை நால்வகைத் தோழருந் தூமணி நெடுந்தேர்
மல்லற் றம்பியும் மாமனும் மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் தாதையுஞ் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத் தொக்கது வளங்கெழு கோயிலுள் ஒருங்கே. ௩௪

2370 துளங்கு வெண்மதி உகுத்தவெண் கதிர்தொகுத் ததுபோல்
விளங்கு வெள்ளியம் பெருமலை யொழியவந் தெழிலார்
வளங்கொள் மாநகர் மழகதிர் குழீஇயின போலக்
களங்கொண் டீண்டினர் கதிர்முடி விஞ்சையர் பொலிந்தே.

2371 எண்ணம் என்னினி எழில்முடி யணிவது துணிமின்
கண்ண னாரொடு கடிகையும் வருகென வரலும்
பண்ணி னார்முடி பழிச்சிய மணிபொனிற் குயிற்றி
அண்ண லாய்கதிர் அலம்வரப் புலமகள் நகவே. ௩௬

2372 விரியு மாலையன் விளங்கொளி முடியினன் துளங்கித்
திருவின் மால்வரைக் குலவிய தனையதோர் தேந்தார்
அருவி போல்வதோர் ஆரமும் மார்பிடைத் துயல
எரியும் வார்குழை யிமையவன் ஒருவன்வந் திழிந்தான்.

2373 கொம்மை யார்ந்தன கொடிபட எழுதின குவிந்த
அம்மை யார்ந்தன அழகிய மணிவட முடைய
வெம்மை செய்வன விழுத்தகு முலைத்தட முடைய
பொம்மெ லோதியர் பொழிமின்னுக் கொடியென இழிந்தார்.

2374 மையல் யானையின் படுமதங் கெடப்பகட் டரசன்
செய்த மும்மதம் போற்றிசை திசைதொறுங் கமழுந்
தெய்வ வாசத்துத் திருநகர் வாசங்கொண் டொழிய
வெய்யர் தோன்றினர் விசும்பிடைச் சிறப்பொடும் பொலிந்தே.

2375 வெருவி மாநகர் மாந்தர்கள் வியந்துகை விதிர்ப்பப்
பரிதி போல்வன பாற்கடல் நூற்றெட்டுக் குடத்தாற்
பொருவில் பூமழை பொன்மழை யொடுசொரிந் தாட்டி
எரிபொன் நீள்முடி கவித்தனன் பவித்திரற் றெழுதே. ௪௦

2376 தேவ துந்துபி தேவர்கட் கோகையுய்த் துரைப்பான்
ஆவி யம்புகை அணிகிளர் சுண்ணமோ டெழுந்த
நாவின் ஏத்தினர் அரம்பையர் நரம்பொலி உளர்ந்த
காவல் மன்னரும் கடிகையுங் கடவது நிறைத்தார். ௪௧

2377 திருவ மாமணிக் காம்பொடு திரள்வடந் திளைக்கும்
உருவ மாமதி யிதுவென வெண்குடை யோங்கிப்
பரவை மாநிலம் அளித்தது களிக்கயல் மழைக்கட்
பொருவில் பூமகட் புணர்ந்தனன் இமையவன் எழுந்தான்.

வேறு

2378 மின்னுங் கடற்றிரையின் மாமணிக்கை
வெண்கவரி விரிந்து வீசப்
பொன்னங் குடைநிழற்றப் பொன்மயமாம்
உழைக்கலங்கள் பொலிந்து தோன்ற
மன்னர் முடியிறைஞ்சி மாமணியங்
கழல்ஏந்தி அடியீ டேத்தச்
சின்ன மலர்க்கோதைத் தீஞ்சொலார்
போற்றிசைப்பத் திருமால் போந்தான். சங

2379 மந்தார மாமாலை மேற்றொடர்ந்து
தழுவாராத் தாமம் மல்கி
அந்தோவென் றஞ்சிறைவண் டேக்கற
இன்புகைபோய்க் கழுமி யாய்பொற்
செந்தா மரைமகளே யல்லதுபெண்
சாராத திருவின் மிக்க
சிந்தா மணியேய்ந்த சித்திரமா
மண்டபத்துச் செல்வன் புக்கான். சச

2380 பைங்கண் உளையெருத்திற் பன்மணி
வாளெயிற்றுப் பவள நாவிற்
சிங்கா சனத்தின்மேற் சிங்கம்போற்
றேர்மன்னர் முடிகள் சூழ
மங்குல் மணிநிற வண்ணன்போல்
வார்குழைகள் திருவில் வீசச்
செங்கட் கமழ்பைந்தார்ச் செஞ்சுடர்போற்
றேர்மன்னன் இருந்தான் அன்றே. சரு

வேறு

2381 வார்பிணி முரசம் நாண வான்அதிர் முழக்கம் ஏய்ப்பத்
தார்பிணி தாம மார்பன் தம்பியை முகத்துள் நோக்கி
ஊர்பிணி கோட்டஞ் சீப்பித் தருதவன் ஆண்ட நாட்டைப்
பார்பிணி கறையின் நீங்கப் படாமுர சறைவி என்றான். சசு

2382 கடவுள ரிடனுங் காசில் கணிபெறு நிலனுங் காமர்
தடவளர் முழங்குஞ் செந்தீ நான்மறை யாளர் தங்கள்

இடவிய நிலத்தோ டெல்லாம் இழந்தவர்க் கிரட்டி யாக
உடனவை விடுமின் என்றான் ஒளிநிலா உமிழும் பூணான்.

2383 என்றலுந் தொழுது சென்னி நிலனுறீஇ எழுந்து போகி
வென்றதிர் முரசம் யானை வீங்கெருத் தேற்றிப் பைம்பொற்
குன்றுகண் டனைய கோலக் கொடிநெடு மாட மூதூர்ச்
சென்றிசை முழங்கச் செல்வன் திருமுர சறைவிக் கின்றான்.

2384 ஒன்றுடைப் பதினை யாண்டைக் குறுகடன் இறைவன் விட்டான்
இன்றுளீர் உலகத் தென்றும் உடனுளீ ராகி வாழ்மின்
பொன்றுக பசியும் நோயும் பொருந்தலில் பகையும் என்ன
மன்றல மறுகு தோறும் மணிமுர சார்த்த தன்றே. சகூ

2385 நோக்கொழிந் தொடுங்கி னீர்க்கும் நோய்கொளச் சாம்பி னீர்க்கும்
பூக்குழல் மகளிர்க் கொண்டான் புறக்கணித் திடப்பட் டீர்க்
கோத்தரு நிதியம் வாழக் கொற்றவன் நகரோ டென்ன[குங்
வீக்குவார் முரசங் கொட்டி விழுநகர் அறைவித் தானே. ருo

2386 திருமகன் அருளப் பெற்றுத் திருநிலத் துறையு மாந்தர்
ஒருவனுக் கொருத்தி போல உளமகிழ்ந் தொளியின் வைகிப்
பருவரு பகையும் நோயும் பசியுங்கெட் டொழிய இப்பால்
பெருவிறல் வேந்தர் வேந்தற்குற்றது பேச லுற்றேன். ருக

12. இலக்கணையார் இலம்பகம்

2387 அலங்கல் ஏந்திய குங்கும அருவரை மார்பன்
கலந்த காரிகை யவர்களைத் தருகென அருள
இலங்கு மாலைவெள் ளருவிய எழில்வரை மணந்த
புலழ்பு நீள்சுரம் போய்க்கொணர்ந் தருளொடுங் கொடுத்தார்.

2388 மோடு கொள்நிலா முளைத்தெழு பரிதிகண் டறியாப்
பாடு வண்டொடு பறவையும் நடுக்குறுங் காப்பின்
மாட மாமணிச் சிவிகையின் மயிலென இழிந்தார்
வீடு கண்டவர் போன்றுமின் இடுகொடி யனையார். ௨

2389 அன்று சூடிய மாலையர் ஆடிய சாந்தர்
பொன்றி வாடிய மேனியர் பொன்நிறை சுருங்கார்
சென்று காதலன் திருவிரி மரைமல ரடிமேல்
ஒன்றி வீழ்ந்தனர் குவளைக்கண் உவகைமுத் துகவே. ௩

2390 இலங்கு பூண்வரை மார்புற எடுத்தவன் முயங்க
மலங்கி வாட்கண்கள் வருபனி சுமந்துடன் வெருவிக்
கலங்கு நீரிடைக் கலக்குறு கருங்கய லிணைபோல்
புலம்பி ஓடின செவியுற நெடியன பொலிந்தே. ௪

2391 வேனல் வாய்ப்பட்டு விரிமுகை தளிரொடு கரிந்த
கானக் கார்முல்லை கார்மழைக் கெதிர்ந்தன போல
மான மங்கையர் வாட்டமும் பரிவுந்தங் கணவன்
தேனெய் மார்பகந் தீண்டலுந் தீர்ந்தொளி சிறந்தார். ௫

2392 சேலுண் கண்ணியர் சிலம்பொடு திலகமுந் திருத்தி
மாலை நல்லன மதுக்கமழ் தகையன மிலைச்சிக்
கோல மென்முலைக் குங்கும மிடுகொடி யெழுதிச்
சோலை வேய்மருள் தோள்முத்துந் தொழுதக அணிந்தார். ௬

2393 நஞ்சு மேய்ந்திளங் களிக்கயல் மதர்ப்பன போல
அஞ்சி வாட்கண்கள் மதர்த்தன அலர்ந்துடன் பிறழப்
பஞ்சு சூழ்மணி மேகலை பரிந்தவை சொரிய
வஞ்சி நுண்ணிடை கவின்பெற வைகினன் மாதோ. ௭

2394 அரிபொற் கிண்கிணி அணிகிளர் சிலம்பொடு சிலம்புந்
திருவச் சிறடிச் செழுமலர்க் கொழுங்கயல் மழைக்கண்
ஊருவ நுண்ணிடை ஒளிமணி வருமுலை யுருவார்
எரிபொன் மேகலை இலக்கணை கடிவினை கொடிவாம். அ

2395 ஆழி மால்கட லகன்பெருங் கேள்விகள் துறைபோய்
ஊழி னன்றியும் உறுவினை ஓரையின் முடிப்பான்
சூழி யானையுந் துளங்குபொற் சிவிகையும் உடையான்
வேழ வேந்தற்கு விழுப்பெருங் கணிவிரித் துரைத்தான். கூ

2396 ஓங்கு கொற்றவற் கோதிய உயர்பெரு நாளால்
வீங்கு வெள்ளியங் குன்றென விளங்கொளி யுடைய
தேங்கொள் மாலையுந் திலகமும் அணிந்ததிண் குணத்த
பாங்கிற் பண்ணின நூற்றெட்டுப் படுமதக் களிறே. க0

2397 விளங்கு வெண்டுகில் உடுத்துவெண் சாந்துமெய் பூசித்
துளங்கு மஞ்சிகை துளைச்சிறு காதினுட் டுளங்க
வளங்கொள் மாலைகள் சூடிமுத் தணிந்துவண் முரசங்
களங்கொள் வேழத்தின் ஏற்றினர் கடிமுர சறைவான். கக

2398 கேண்மின் கேண்மின்கள் யாவரும் இனியன கேண்மின்
பூண்மின் நித்தில மணிவடம் பூசுமின் சாந்தம்
வாண்மின் நுண்ணிடை வருந்தினுஞ் சூட்டணிந் தழகார்
ஆண மாகிய அருவிலை வண்ணப்பட் டுடுமின். கஉ

2399 பிள்ளை வெண்பிறைச் சிறுநுதற் பெரும்பட்டம் அணிமின்
உள்ள மேனியும் ஒளிர்மணிக் கலங்களிற் புனைமின்
வள்ளல் வாய்மொழி ஆன்படு பாலமிர் தல்லால்
உள்ள மேவினும் பிறவுணப் பெறீர்எழு நாளும். கங

2400 வாழை மல்கிய மணிக்குலைக் கமுகொடு நடுமின்
தாழ நாற்றுமின் தாமங்கள் அகிற்குடம் பரப்பி
யாழின் பாடலும் ஆடலும் அரங்குதோ றியற்றிப்
போழு மால்விசும் பெனப்பல பொலங்கொடி எடுமின். கச

2401 மாலை வாண்முடி மன்னவன் மணவினை எழுநாள்
சீல மில்லன சினக்களி றகற்றுகென் றணிந்த
கோல மார்முர சிடியுமிழ் தழங்கென முழங்க
நீல மாக்கடல் நெடுநகர் வாழ்கென அறைந்தார். கரு

வேறு

2402 முரசம் ஆர்த்தபின் மூவிரு நாள்கள்போய்
விரைவொ டெங்கணும் வெள்வளை விம்மின
புரையில் பொன்மணி யாழ்குழல் தண்ணுமை
அரவ வானின் அதிர்ந்த அணிமுழா. ௧௬

2403 விண்வி ளக்குவ போல்விரி பூந்துகள்
கண்வி ளக்கிக் கலந்தவெண் சாந்தினால்
மண்வி ளக்கி மலர்ப்பலி சிந்தினார்
பண்வி ளக்கிய பைங்கிளி யின்சொலார். ௧௭

2404 ஆய்ந்த மோட்டின ஆன்படு பால்உலை
போந்து பொங்கிய ஆவியி னாற்பொலிந்(து)
ஏந்து மாடங்கள் தாமிழின் என்பன
பூந்து கில்புறம் போர்த்தன போன்றவே. ௧௮

2405 திருவின் நல்லவர் செம்மலர்ச் சீறடிப்
பரவி யூட்டிய பஞ்சரத் தக்களி
விரவி மீநிலஞ் சேர்ந்தொளி பூத்துராய்க்
குருதி வானிலங் கொண்டது போன்றதே. ௧௯

2406 பால்வெண் திங்கள் மணிக்கை படுத்தவை
போலும் ஆடியின் நோக்கிப் பொலங்கலக்
கோலஞ் செய்பவர் கோல வெறிப்பினால்
மாலை வண்டினம் மாலைக்கண் கொண்டவே. ௨௦

2407 போக மாமழை போழ்ந்து புதத்தொறும்
மாகம் ஏந்துவ போல்மணித் தோரணம்
மாக நாற்றின தாம மணிக்குடம்
ஏக மாநகர் வீதிநி ரைத்தவே. ௨௧

2408 ஆடல் மங்கையர் கிண்கிணி யார்ப்பொலி
பாட லின்னொலி பண்ணமை யாழொலி
மோடு கொள்முழ வின்முழக் கீண்டிய
மாட மாநகர் மாக்கடல் ஒத்ததே. ௨௨

2409 சுந்த ரத்துகள் பூந்துகள் பொற்றுகள்
அந்த ரத்தெழும் இன்புகை யாலரோ

இந்தி ரன்நகர் சாறயர்ந் திவ்வழி
வந்தி ருந்தது போல்மலி வுற்றதே. ௨௩

வேறு

2410 நிரந்து கன்னலும் நெய்யும் நீந்தப்பெய்(து)
இரந்து பாலமிர் தெங்கும் ஊட்டுவார்
பரந்து பூந்துகில் பன்ம ணிக்கலம்
சுரந்து கொள்கெனச் சுமக்க நல்குவார். ௨௪

2411 வருக்கை யின்பழம் வாழை யின்கனி
திருக்கொள் மாங்கனி தெளித்த தேறலின்
கருப்புச் சாற்றொடு கலந்து கைசெய்து
புரித்த தெங்கிள நீரும் பூரிப்பார். ௨௫

2412 கூந்தல் ஏந்திய கமுகங் காய்க்குலை
ஆய்ந்த மெல்லிலை பளிதம் ஆதியா
மாந்தர் கொள்ளைகொண் டுண்ண மாநிலம்
ஏந்த லாம்படித் தன்றி ஈட்டுவார். ௨௬

2413 தூமம் ஆர்ந்தன துப்பு ரவ்வுகள்
ஏம மாயின ஏந்தி நிற்றலான்
நாம நன்னகர் நன்பொற் கற்பகங்
காம வல்லியும் களங்கொண் டிட்டதே. ௨௭

2414 வழுவின் மாந்தரும் மாவும் மல்கிய
தொழுதி தன்னையான் சுமக்க லேனென
முழுது மண்மகள் முற்றும் வாய்திறந்(து)
அழுதிட் டாள்நெய்யும் பாலு மாகவே. ௨௮

வேறு

2415 கொடியெழுந் தலமருங் கோயில் வாயில்கள்
மடலெழுந் தலமருங் கமுகும் வாழையும்
மடியிருந் துகிலுடை மாக்க ணுடியும்
புடைதிரள் பூர்ண குடமும் பூத்தவே. ௨௯

2416 கடிமலர் மங்கையர் காய்பொற் கிண்கிணி
உடைமணி பொற்சிலம் பொலிக்குங் கோயிலுள்
குடைநிழல் மன்னர்தங் கோதைத் தாதுவேய்ந்(து)
அடிநிலம் பெறுததோர் செல்வம் ஆர்ந்ததே. ௩௰

2417 துளங்குபொற் குழைகளுந் தோடுஞ் சுண்ணமுங்
கிளர்ந்தகில் சாந்துபூக் கமழ்ந்து கேழ்கிளர்
இளங்கதிர் எறிமணிப் பூணும் ஆரமும்
விளங்கிமேல் உலகினை வெறுப்பித் திட்டதே. ௩௧

2418 விரிந்துவான் பூத்தென விதானித் தாய்கதிர்
அருங்கலப் பொடியினால் ஆய்பொற் பூமகள்
மருங்குல்போற் குயிற்றிய நகரின் மங்கலப்
பெருந்தவி சடுத்தனர் பிணையல் மாலையார். ௩௨

2419 நலங்கிளர் காணமும் மணியும் நன்பொனும்
வலம்புரி முத்தமுங் குவித்த மங்கலம்
இலங்கின மணிவிளக் கெழுந்த தீம்புகை
கலந்தஆ யிரத்தெண்மர் கவரி ஏந்தினார். ௩௩

2420 மங்கலப் பெருங்கணி வகுத்த ஓரையால்
மங்கல மன்னவன் வாழ்த்த ஏறலும்
மங்கல அச்சுதந் தெளித்து வாய்மொழி
மங்கலக் கருவிமுன் உறுத்தி வாழ்த்தினார். ௩௪

2421 முழங்கின இன்னியம் மொய்த்த தேத்தொலி
கொழுங்கயற் கண்ணினார் கொண்டு பொன்னகல்
இழிந்தனர் திருமயிர் ஏற்ப நீரதில்
நிழன்றன சாமரை நிரைசங் கார்த்தவே. ௩௫

2422 பாற்கடல் முளைத்ததோர் பவளப் பூங்கொடி
போற்சுடர்ந் திலங்கொளிப் பொன்செய் கோதையை
நாட்கடி மயிர்வினை நன்பொற் றாமரைப்
பூக்கடி கோயிலாள் புலம்ப ஆக்கினார். ௩௬

வேறு

2423 விரைத்தலை மாலை சூட்டி மின்னனார் அங்கைசேப்ப
அரைத்தசாந் தணிந்த கோட்ட ஆயிரத் தெட்டு வேழம்
நிரைத்தன மண்ணு நீர்க்கு முரசொடு முழவம் விம்ம
வரைத்தலைத் துவலை போன்று மதம்நிலம் நனைப்ப அன்றே.

2424 கான்முகம் புதைத்ததெண்ணீர் கவர்ந்துபொற் குடங்களார்த்
ஊன்முகம் புதைத்தவேற்கண் ணவர்களிற் றுச்சியேற்றி [தி

வான்முகம் புதைத்த பன்மீன் மதியென மருண்டு நோக்கத்
தேன்முகம் புதைத்த மாலைக் குடைநிழற் றிருவிற் றந்தார்.

2425 இழைத்தபொன் னகரின் வெள்ளி யிடுமணை மன்னர் ஏத்தக்
குழைப்பொலிந் திலங்குகாதிற் கொற்றவன் இருந்தபின்றை
மழைக்கவின்றெழுந்தவார்கொள் மணிநிறஅறுகைநெய்தோய்த்(து)
எழிற்குழை திருவில் வீச மகளிர்நெய் யேற்று கின்றார்.

2426 மின்னுமிழ் வயிரக் கோட்டு விளங்கொளி இமயமென்னும்
பொன்னெடுங் குன்றம் போலப் பூமிமேல் நிலவி வையம்
நின்னடி நிழலின் வைக நேமியஞ் செல்வ னாகி
மன்னுவாய் திருவோ டென்று வாழ்த்திநெய் யேற்றி னாரே.

வேறு

2427 நீடு நீர்மணி நீரும் அல்லவும்
ஆடு நீரன அத்து மண்களும்
ஊடு மின்னனார் உரிஞ்சி ஆட்டினார்
கூடி இன்னியங் குழுமி ஆர்த்தவே. சக

2428 திருவ மன்னவன் சென்னித் தேர்மன்னர்
பொருவெண் பொற்குடம் உமிழும் பொங்குநீர்
பரிதி தன்னொளி மறையப் பான்மதி
சொரியுந் தீங்கதிர்த் தோற்றம் ஒத்தவே. சஉ

2429 துளங்கு மாமணித் தூண்கள் நான்கினால்
விளங்கு வெள்ளிவேய்ந் தாய்ந்த மாலைசூழ்
வளங்கொள் மாமணிக் கூடஞ் சேர்த்தினார்
இளங்க திர்கொலோ இருந்த தென்னவே. சங

2430 ஆய்ந்த பால்நிறம் ஆய்பொற் கம்பலம்
வேய்ந்த பொங்கணை வெண்பொற் கட்டில்மேல்
நீந்தி நித்தில விதான நீழலாற்(கு)
ஏந்தி னார்அணி ஏந்து நீர்மையார். சச

2431 ஈரங் கொன்றபின் இருள்ம ணிச்சுடர்
நீர வாய்நிழல் உமிழுங் குஞ்சியை
ஆர கிற்புகை வெறியி னாலமைத்(து)
ஏர்ப டச்செய்தார் எழுதிற் றென்னவே. சரு

2432 ஈடில் சந்தனம் ஏந்து தாமரைத்
தோடின் பயில்வினாற் பூசித் தூமலர்
வீடு பெற்றன இன்றொ டென்னவே
சூடி னான்அரோ சுரும்புண் கண்ணியே. சசு

2433 மற்ப கம்மலர்ந் தகன்ற மார்பின்மேல்
விற்ப கக்குலாய் ஆரம் வில்விடக்
கற்ப கம்மலர்ந் தகன்ற தோவெனப்
பொற்ப கப்பொலங் கலங்கள் தாங்கினான். சஎ

2434 உருவம் ஆர்ந்தன உரோமப் பட்டுடுத்(து)
எரியும் வார்குழை சுடர இந்திர
திருவி லன்னதார் திளைப்பத் தேங்குழல்
அரிபெய் கண்ணியர்க் கனங்க னாயினான். சஅ

2435 தாவில் தாழ்வடந் தயங்க நீருறீஇ
மேவி அச்சுதந் தெளித்த பின்விரைந்(து)
ஆவி யம்புகை சுழற்றி யாடியும்
வீவில் வெஞ்சுடர் விளக்குங் காட்டினார். சகூ

2436 உவரி மாக்கடல் ஒல்லென் வெண்திரை
இவரி எழுவபோன் றிலங்கு மாமயிர்க்
கவரித் தொகைபல வீசுங் காவலர்
இவர்இத் தொகையென்ப தின்றி யாயினார். ருo

2437 அறுகு வெண்மலர் அளாய வாசநீர்
இறைவன் சேவடி கழுவி ஏந்திய
மறுவில் மங்கலங் காட்டி னார்மணக்
குறைவில் கைவினைக் கோலம் ஆர்ந்ததே. ருக

வேறு

2438 ஊனிமிர் கதிர்வெள்வேல் உறைகழித் தனபோலுங்
தேனிமிர் குவளைக்கட் டிருமகள் அணையாளைப்
பானிமிர் கதிர்வெள்ளி மணைமிசைப் பலர்வாழ்த்தி
வானிமிர் கொடியன்னார் மணியணை மிசைவைத்தார். ருஉ

2439 வரைவிளை வளர்பொன்னே வலம்புரி ஒருமணியே
திரைவிளை அமிர்தம்மே திருவிழை யெனஏத்தி

வரிவளை முழவிம்மு மணிகிளர் ஒலிஐம்பால்
அரைவிளை கலைநல்லார் அறுகினெய் யணிந்தனரே. ௫௩

2440 கள்ளவிழ் கமழ்கோதைக் காவலன் திருமகளை
வெள்ளணி மதயானை விழுமணிக் குடமேற்றித்
தெள்ளறல் மண்ணுநீர் ஆட்டினர் தேமலர்மேல்
ஒள்ளிழை யவளொத்தாள் உருவநுண் ணுசுப்பின்னாள்.

2441 வான்மலர் நுரைசூடி மணியணி கலன்சிந்தாத்
தானிள மணலெக்கர்த் தவழ்கதிர் மணியாரம்
ஏனைய நறுஞ்சுண்ணங் குங்குமம் இடுங்களியாத்
தேனினம் இசைபாடத் தீம்புனல் நடந்தஃதே. ௫௫

2442 நான்றபொன் மணிமாலை நகுகதிர்ப் பவளத்தூண்
ஊன்றின ஒளிமுத்தம் மண்டபத் தொளிர்திங்கள்
கான்றன கதிர்காய்த்தும் வட்டணைக் கதிர்முத்தம்
ஈன்றபொன் விதானத்தின் நீழலுய்த் திரீஇயினரே. ௫௬

2443 மையணி மதயானை மத்தக அகலல்குல்
நெய்யணி குழல்மாலை நிழலுமிழ் குழைமங்கை
மெய்யணி கலன்மாலை மின்னிருந் துகிலேந்திக்
கையணி குழல்மாலைக் கதிர்முலை யவர்சூழ்ந்தார் ௫௭

2444 அவ்வளை யவிராழிக் கால்பொலிந் தழகார்ந்த
மைவிளை கழுநீர்க்கண் விலாசியும் மணியல்குற்
கைவளை யலங்கார மாலையுங் கமழ்கோதை
நைவள மிகுசாயல் நங்கையைப் புனைகின்றார். ௫௮

2445 யானையுள் அரசன்தன் அணிகிளர் வலமருப்பீர்ந்(து)
ஊனமில் ஒளிர்செம்பொன் பதித்தொளி மணியழுத்தி
வான்மணம் உறச்செய்த மங்கல மணிச்சீப்புத்
தான்முகில் கழிமதிபோற் றன்னுறை நீக்கினளே. ௫௯

வேறு

2446 மைந்நூற் றனைய மாவீ ழோதி
வகுத்தும் தொகுத்தும் விரித்துங்
கைந்நூற் றிறத்திற் கலப்ப வாரிக்
கமழும் நானக் கலவை

ஐந்நூற் றிறத்தின் அகிலின் ஆவி
அளைந்து கமழ வூட்டி
எந்நூற் றிறமும் உணர்வாள் எழிலேற்
றிமிலின் ஏற்ப முடித்தாள். சுo

2447 கரும்புந் தேனும் அமிழ்தும் பாலுங்
கலந்த தீஞ்சொல் மடவாட்(கு)
அரும்பும் இலையும் மயக்கி யாய்ந்த
முல்லைச் சூட்டு மிலைச்சித்
திருந்துந் திங்கள் சூழ்ந்த மின்னிற்
செம்பொற் பட்டஞ் சேர்த்தி
விரும்பும் முத்தம் மாலை நான்ற
விழுப்பொன் மகரஞ் செறித்தாள். சுக

2448 கள்ளுந் தேனும் ஒழுகுங் குவளைக்
கமழ்பூ நெரித்து வாங்கிக்
கிள்ளை வளைவா யுகிரிற் கிள்ளித்
திலகந் திகழப் பொறித்துத்
தெள்ளும் மணிசெய் சுண்ணம் இலங்கத்
திருநீர் நுதலின் அப்பி
உள்ளம் பருகி மதர்த்த வாட்கண்
உருவம் மையிற் புனைந்தாள். சுஉ

2449 நாகம் மருப்பின் இயன்ற தோடுந்
நலங்கொள் சுறவுக் குழையும்
போக நீக்கிப் பொருவில் திருவில்
உமிழ்ந்து மின்னுப் பொழியும்
ஏக மாகி யெரியும் மணியின்
இயன்ற கடிப்பு வாங்கி
மேக விசும்பிற் றேவர் விழைய
விளங்கச் சேர்த்தி னாளே. சுௌ

வேறு

2450 விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை தெளிர்க்கு முன்கை
நலங்கிளர் பவள நன்பொன் விரல்மணி யாழி மின்னக்
கலந்தின்று பணைத்த தோளுங் கவின்வளர் கழுத்தும் ஆர்ந்த
வலம்புரி ஈன்ற முத்தம் மணிநிலா நக்க அன்றே. சுச

2451 மாமணி முகடு வேய்ந்த மரகத மணிச்செப் பன்ன
தூமணி முலைகள் தம்மைத் தொழுதகக் கமழுஞ் சாந்திற்
காமரு காம வல்லிக் கொடிகவின் கொண்டு பூத்துத்
தூமணிக் கொழுந்து மென்றோட் டியல்வர எழுதி னாளே.

2452 நாண்சுமக் கலாத நங்கை நகைமின்னு நுசுப்பு நோவப்
பூண்சுமக் கலாத பொன்ஞாண் வடத்தொடு புரள நோக்கிப்
பாண்குலாய் வண்டு பாடும் படுகணை மறந்து காமன்
காண்கிலேன் கடிய என்னா உருகிமெய் கரந்திட் டானே. ௬௯

2453 அவாக்கிடந் தகன்ற அல்குல் அணிகிளர் திருவிற் பூப்பத்
தவாக்கதிர்க் காசு கண்டார் ஆவியைத் தளரச் சூட்டிக்
கவாய்க்கிடந் தணங்கு நாறுங் கண்கொளாப் பட்டு டுத்தாள்
ஊவாக்கதிர்த் திங்கள் அம்மென் கதிர்விரித் தடுத்த தொத்தாள்.

2454 இடைச்செறி குறங்கு கௌவிக் கிம்புரி இளக மின்னும்
புடைச்சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம்போ டார்ப்ப
நடைச்சிறு பாதங் கோல மணிவிரல் அணிந்து நாகத்
துடைச்சிறு நாவிற் றேகை இரீஇனள் மாலை சேர்ந்தாள்.

2455 அம்மலர் அடியுங் கையும் அணிகிளர் பவள வாயும்
செம்மலர் நுதலும் நாவுந் திருந்தொளி உகிரோ டங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி யிட்டாள்
அம்மலர்க் கண்டம் உள்ளிட் டரிவையைத் தெரிவை தானே.

2456 வாண்மதர் மழைக்கண் நோக்கி வருமுலைத் தடமும் நோக்கிக்
காண்வர அகன்ற அல்குற் கண்விருப் புற்று நோக்கிப்
பாணுவண் டரற்றுங் கோலச் சிகழிகைப் படியும் நோக்கி
ஆண்விருப் புற்று நின்றார் அவ்வளைத் தோளி னாரே. ௭௰

வேறு

2457 தெருள்கலான் படைத்தவன் காணிற் செவ்வனே
மருளிலா தவர்களும் மருள்வர் மம்மர்நோய்
இருளிலார் எங்ஙனம் உய்வர் இன்னதால்
அருளிலார் அவள்நலம் அணிந்த வண்ணமே. ௭௧

2458 அலர்ந்தஅந் தாமரை யல்லிப் பாவையைப்
புலந்துகண் சிவந்தன போன்று நீர்பிரிந்(து)

இலங்கிமின் உமிழ்ந்துலா மேனி ஏந்துபொன்
மலர்ந்ததோர் கற்பக மணிக்கொம் பாயினள். எஉ

2459 மருள்தகு மல்லிகை மாலை வல்லவன்
பொருள்தகத் தொடுத்தன புனைந்த பூஞ்சிகை
இருள்துணித் திடையிடை இயற்றி வெண்ணிலாச்
சுருள்துணித் தொருவழித் தொகுத்த தொத்ததே. எஙு

2460 கோமகள் உருவமாய்க் கூற்றம் போந்தது
போமின்நம் உயிருயக் கொண்டு போய்மனங்
காமினம் எனக்கலை சிலம்பு கிண்கிணி
தாமனும் வாயினற் சாற்று கின்றவே. எச

2461 அருளிலார் இவள்தமர் அன்ன ராயினும்
உருள்திரை யுலகெலாம் உருளும் இன்றெனக்
கருதின கவரிசாந் தாற்றி வெண்குடை
அரிவையை மறைத்தன ஆல வட்டமே. எரு

வேறு

2462 கரும்பே தேனே அமிர்தே காமர் மணியாழே
அரும்பார் மலர்மேல் அணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே. எசு

2463 அம்மெல் அனிச்சம் மலரும் அன்னத் தூவியும்
வெம்மை யாமென் றஞ்சி மெல்ல மிதியாத
பொம்மென் இலவப் பூம்போ தனகின் அடிபோற்றி
இம்மென் கலையார் இடுவென் றேத்த ஒதுங்கினள். எஎ

2464 தூமாண் தூமக் குடமா யிரமாய்ச் சுடர்பொற்றூண்
தாமா யிரமாய்த் தகையார் மணித்தூண் ஒருநூறாய்ப்
பூமாண் தாமத் தொகையாற் பொலிந்த குளிர்பந்தர்
வேமா னியர்தம் மகளின் விரும்ப நணிசேர்ந்தாள். எஅ

2465 தேனர் காமன் சிலையுங் கணையுந் திறைகொண்ட
வானர் மதிவாண் முகமும் மடமான் மதர்நோக்கும்
கோனர் மகள்தன் வடிவும் நோக்கிக் குடைமன்னர்
ஆனர் கண்ணு டழல்போய் அமையா ரானரே. எகூ

வேறு

2466 வண்டலர் கோதை வாட்கண் வனமுலை வளர்த்த தாயர்
கண்டுயிர் உண்ணுங் கூற்றங் கயிறுரீஇக் காட்டி யிட்டார்
உண்டுயிர் சிலர்கள் வாழ்கென் றுத்தரா சங்கம் வைத்தார்
தெண்டிரை வேலி யெங்குந் தீதின தாக மாதோ. ௮௦

2467 கண்ணினால் இன்று கண்டாங் கூற்றினைக் காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத் தொருபிடி நுசுப்பிற் றீஞ்சொல்
வண்ணித்த லாவ தில்லா வருமுலை மதர்வை நோக்கிற்
பெண்ணுடைப் பேதை நீர்மைப்பெருந்தடங் கண்ணிற் றம்மா.

2468 அரத்தகம் மருளிச் செய்த சீறடி அளிய தம்மாற்
குரற்சிலம் பொலிப்பச் சென்னிக் குஞ்சிமேல் மிதிப்ப நோற்றான்
திருக்குலாய்க் கிடந்த மார்பிற் சீவகன் நாங்கள் எல்லாந்
தரித்திலேந் தவத்தை என்று தார்மன்னர் ஏமுற் றாரே.

2469 கோவிந்தன் என்னுஞ் செம்பொற் குன்றின்மேற் பிறந்து கூர்வேற்
சீவகன் என்னுஞ் செந்நீர்ப் பவளமா கடலுட் பாய்வான்
பூவுந்தி யமுத யாறு பூங்கொடி நுடங்கப் போந்து
தாவிரி வேள்விச் சாலை மடுவினுட் டாழ்ந்த தன்றே. ௮௩

2470 சாணிடை நெடிய வாட்கண் தளையவிழ் குவளை பூப்பப்
பூணுடை முலையின் பாரம் பொறுக்கலாச் சுளிவின் மேலும்
நாணட நடுங்கிக் கையால் நகைமுகம் புதைத்த தோற்றம்
சேணிடை அரவு சேர்ந்த திங்களை யொத்த தன்றே. ௮௪

2471 முத்துமிழ் திரைகள் அங்கம் மொய்கொள்பா தாலம் முத்தீ
ஒத்தன வேலை வேள்வி ஒலிகடல் நான்கும் நாண
வைத்தநான் மறையும் நீந்தி வான்குணம் என்னுஞ் சாலி
வித்திமேல் உலகத் தின்பம் விளைத்துமெய் கண்ட நீரார்.

2472 தருமணல் தீருப்பை ஆர்ந்த சமிதையிம் மூன்றி ஞனும்
விரிமலர் அணிந்த கோல வேதிகை யியற்றி ஆன்நெய்
ஒருமணி அகலுட் பெய்தோர் பொன்னகல் ஆர்ந்த தூபம்
இருமணி அகலுள் நீர்பெய் திடவயின் இரீஇயி னாரே. ௮௬

2473 நெற்பொரி நிறையப் பெய்து நிழலுமிழ் செம்பொன் மூழிக்
கற்புரி கடவுள் ஆன்பால் அவியொடு கலப்ப வைத்து

முற்பெரி யானை யாகத் தருப்பையான் முடிந்து மூன்று
பொற்புரிவரையும்பொய்தீர் சமிதைகள்இரண்டும்வைத்தார்.

2474 மந்திர விதியின் மாண்ட சிறுவிரற் றருப்பை சூழ்ந்து
முந்துநா மொழிந்த நெய்யை முனைமுதிர் தருப்பை தன்னுன்
மந்திரித் தமைய முக்கால் மண்ணிமற் றதனை நீக்கிச்
சிந்தித்து மறையிற் செந்தீத் தண்டிலத் தங்கண் வைத்தார்.

2475 தண்டிலத் தகத்திற்சாண்மேல் எண்விரற்சமிதைநானுன்(கு)
எண்டிசை யவரும் ஏத்தத் துடுப்புநெய் சொரித லோடும்
கொண்டழற் கடவுள் பொங்கி வலஞ்சுழன் றெழுந்த தென்ப
தெண்டிரை வேலி யெங்குந் திருவிளை யாட மாதோ. அசு

2476 கரையுடைத் துகிலிற் றூன்றுங் காஞ்சன வட்டின் முந்நீர்த்
திரையிடை வியாழந் தோன்றத் திண்பிணி முழவுஞ் சங்கும்
முரைசொடு முழங்கி யார்ப்ப மொய்கொள்வேல் மன்னரார்ப்ப
அரைசருள் அரசன் ஆய்பொற் கலசநீர் அங்கை யேற்றான்.

2477 குளிர்மதி கொண்ட நாகங் கோள்விடுக் கின்ற தேபோல்
தளிர்புரை கோதை மாதர் தாமரை முகத்தைச் சேர்ந்த
ஒளிர்வளைக் கையைச் செல்வன் விடுத்தவள் இடக்கை பற்றி
வளரெரி வலங்கொண் டாய்பொற் கட்டில்தான் ஏறினனே.

2478 விளங்கொளி விசும்பிற் பூத்த அருந்ததி காட்டி ஆன்பால்
வளங்கொளப் பூத்த கோல மலரடி கழீஇய பின்றை
இளங்கதிர்க் கலத்தின் ஏந்த அயினிகண் டமர்ந்தி ருந்தான்
துளங்கெயிற் றழுவைதொல்சீர்த் தோகையோடிருந்ததொத்தான்.

வேறு

2479 பொன்னங் காழிற் பொலிந்த முத்து விதானம் புணர்ந்து
மன்னு மாலை பலதாழ்ந்து மணப்புகை விம்மி மல்கிய [தேன்
அன்னத் தூவி அடர்பஞ்சி அவிர்மயி ராதி யாகப்
பன்னிச் சொன்ன பதினைந்தும் படுத்தார் பாவை மார்களே.

வேறு

2480 பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண்கொ ளாதன
எலிமயிர்ப் போர்வைவைத் தெழினி வாங்கினர்
ஒலிமயிர்ச் சிகழிகை உருவக் கொம்பனர். கூசு

2481 விழுத்தகு மணிச்செவி வெண்பொற் கைவினை
எழிற்பொலி படியகம் இரண்டு பக்கமும்
தொழிற்பட வைத்தனர் துளும்பு மேகலைக்
கழித்தவேல் இரண்டுகண் டனைய கண்ணினர். ௩௫

வேறு

2482 அங்கருங் காலி சீவி ஊறவைத் தமைக்கப் பட்ட
செங்களி விராய காயுஞ் செம்பழுக் காயுந் தீந்தேன்
எங்கணுங் குளிர்த்த இன்னீர் இளம்பசுங் காயும் மூன்றும்
தங்களி செய்யக் கூட்டித் தையலார் கைசெய் தாரே. ௩௬

2483 கைசெய்து கமழும் நாறுங் காழ்க்கும்வெள் ளிலையுங்காமம்
எய்தநன் குணர்ந்த நீரார் இன்முக வாசம் ஊட்டிப் [ணங்
பெய்தபொற் செப்பும் மாலைப் பெருமணிச் செப்புஞ் சுண்
தொய்யறப் பெய்த தூநீர்த் தொடுகடற் பவளச் செப்பும்.

2484 தாமணி நானச் செப்புஞ் சலஞ்சலக் கலன்பெய் செப்பும்
தூமணித் துகில்க ளார்ந்த வலம்புரித் துலங்கு செப்பும்
காமநீர்க் காம வல்லி கவின்கொண்டு வளர்ந்த தேபோல்
நாமவேல் நெடுங்கட் பாவை நயப்பன ஏந்தி னரே. ௩௮

2485 விரிகதிர் ஆரம் மின்னித் தாரெனுந் திருவில் வீசிக்
குரிசில்மா மேகம் பெய்த கொழும்புயற் காம மாரி
அரிவைதன் நெஞ்ச மென்னும் அகன்குளம் நிறைந்து வாட்கட்
கரியமை சேறு சிந்திக் கலிங்குகள் திறந்த அன்றே. ௩௯

2486 தோக்கையங் துகிலி னுள்தன் துணைமுலை பொருது சேந்த
ஏக்கொசி விலாத வில்லான் இடுகொடி யகலம் இன்தேன்
தேக்கிவண் டிமிருங் கோதை செல்வன்தார் உழக்க நைந்து
பூக்கொய்து துவண்ட கொம்பின் பொற்பினள் ஆயி னளே.

2487 அணித்தகு பவளம் ஏற்பக் கடைந்துமுத் தழுத்தி அம்பொன்
துணித்தடி விளிம்பு சேர்த்தித் தொழுதகச் செய்த வண்கை
மணிச்சிறற் சிறகு நாண வகுத்தசாந் தால வட்டம்
பணித்தகு மகளிர் வீசிப் பாவையைக் குளிர்ப்பித் தாரே.

வேறு

2488 சேந்து நீண்டசெழுந் தாமரைக் கண்களின்
ஏந்தி மாண்டமுலைக் கண்களின் எழுதிச்
சாந்தம் ஆகமெழு கித்தகை மாமலர்
ஆய்ந்து சூட்டிஅவன் அஞ்சலி செய்தான். ௧௦௨

2489 மணிசெய் வீணைமழ லைக்குழல் பாண்டிலொ(டு)
அணிசெய் கோதையவர் பாடிய கீதம்
பணிவில் சாயல்பரு கிப்பவ ளக்கொடி
மணியும் முத்துமலர்ந் திட்டதொத் தாளே. ௧௦௩

2490 எய்த்து நீர்ச்சிலம் பின்குரல் மேகலை
வித்தி மாதர்வருத் தம்விளைத் தாளெனத்
தத்து நீர்த்தவ ளைக்குரற் கிண்கிணி
உய்த்தொர் பூசலுடன் இட்டன அன்றே. ௧௦௪

2491 ஏந்தி நாங்களுட னேஇடு பூசலை
வேந்தர் வேந்தன்கொடுங் கோல்மன்ன னாகி
ஆய்ந்து கேட்டும்அரு ளானென் றவிந்தன
சாந்தும் ஏந்துமுலை யாள்கலந் தாமே. ௧௦௫

வேறு

2492 வீடுமலி யுலகினவர் போலவிளை யாடும்
தோடுமலி கோதையொடு துதைந்தவரை மின்போல்
ஆடுகொடி அணிந்தஉயர் அலங்கல்வரை மார்பன்
கூடுமயிர் களையும்வகை கூறலுறு கின்றேன். ௧௦௬

2493 உச்சிவரை வளர்ந்திளமை ஒழிந்தஉயர் திண்காழ்
இச்சவிய அல்லவென எழுதியவை யூன்றிக்
கச்சுவிளிம் பணிந்ததொழிற் கம்பல விதானும்
நச்சுமணி நாகருறை நாகமென விரித்தார். ௧௦௭

2494 முத்தகம் நிறைந்தமுளை யெயிற்றுமத யானை
மத்தகமுந் திருமகள்தன் வடிவுபட மாதோ
ஒத்த்கலம் எண்முழமென் றேதிநகர் இழைத்தார்
மொய்த்தெரிசெம் பொற்றுகளின் நூல்முடிவு கண்டார்.

2495 உழுந்துபய றுப்பரிசி யப்பமருங் கலங்கள்
கொழுந்துபடக் கூப்பிகனி ஆயிர மரக்கால்
செழுந்துபடச் செந்நெல்நிறைத் தந்நுண்கொடி அறுகின்
கொழுந்துகுறைத் தணிந்துகிளை வேற்கணவர் அமைத்தார்.

2496 செங்கயல் இரட்டைதிரு வார்சுடர்க ணாடி
பொங்குகொடி வார்முரசம் தோட்டிபுணர் கும்பம்
மங்கலங்கள் எட்டுமிவை மணியிற்புனைந் தேந்தி
அங்கயற்கண் அரிவையர்கள் தென்கிழக்கில் நின்றார்.

2497 வெள்ளுருவ மாலைவட கீழிருவர் மின்போல்
ஒள்ளுருவ வாளுருவி நின்றனர்தென் மேல்பால்
உள்ளுருக நோக்கியுயர் உழுத்தகலும் ஏந்திக்
கள்ளுருவ மாலையவர் கைதொழுது நின்றார். ௧௧௧

2498 தோரைமலர் நீரறுகு துளும்புமணித் தாலம்
ஆரவட மேற்றிசைக்கண் இருந்தஅவிர் பஞ்சிச்
சீர்நிறைய வரையகலங் திருத்தத்திரு நோக்கும்
வாரமுறைக் கருவிவடக் கிருந்தனகள் மாதோ. ௧௧௨

2499 பால்நுரையின் நொய்யஅணைப் பைங்கதிர்கள் சிந்தித்
தான்இரவி திங்களொடு சார்ந்திருந்த தேபோல்
வேல்நிரைசெய் கண்ணியொடு மெல்லென இருந்தான்
வான்உயர ஓங்குகுடை மன்னர்பெரு மானே. ௧௧௩

வேறு

2500 குளநெல் முன்றிற்கனி தேன்சொரி சோலைக் குளிர்மணி
வளமை மல்கிளரி யம்மட மந்திகை காய்த்துவான்
இளமை யாடியிருக் கும்வனத் தீர்ஞ்சடை மாமுனி
கிளையை நீங்கிக்கிளர் சாபத்தின் நாவிதன் ஆயினான். ௧௧௪

2501 ஆய்ந்த கேள்வியவன் கான்முளை யாய்வழித் தோன்றினான்
தோய்ந்த கேள்வித்துறை போயலங் காரமுந் தோற்றினான்
வேந்தன்தன் னாற்களிற் றார்த்தி சிறப்பொடு மேயினான்
வாய்ந்த கோலம்முடை யான்பெரு மஞ்சிகர்க் கேறனான்.

வேறு

2502 முத்தில வடமும் பூணும் ஆரமும் நிழன்று தாழ
ஒத்தொளிர் குழைகள் காதின் நான்றுபொன் னூசலாடப்
பைத்தா வல்குற் பாவை கரகநீர் சொரியப் பாங்கின்
வித்தகன் பூசி வெள்வேல் வேந்தனுக் கிறைஞ்சி னானே.

2503 நச்செயிற் றரவின் நோக்கின் மன்னரை நடுங்க நோக்கி
வச்சிர வண்ணன் காப்ப வாழியர் ஊழி என்று
அச்சுதங் கொண்டு மன்னன் அடிமுடித் தெளித்து நங்கை
உச்சிவண் டிமிரு மாலை ஒளிமுடிச் சிதறி னானே. ௧௧௭

2504 வாக்கினிற் செய்த பொன்வாள் மங்கல விதியின் ஏந்தி
ஆக்கிய மூர்த்தத் தண்ணல் வலக்கவுள் உறுத்தி ஆர்ந்த
தேக்கணின் அகிலின் ஆவி தேக்கிடுங் குழலி னாளை
நோக்கலன் நுனித்து நொய்தா இடக்கவுள் உறுத்தி னானே.

2505 ஆய்ந்தபொன் வாளைநீக்கி அவிர்மதிப் பாகக்கல்மேற்[ஞாண்
காய்ந்தவாள் கலப்பத் தேய்த்துப் பூநிறீஇக் காமர் பொன்
தோய்ந்ததன் குறங்கில் வைத்துத் துகிலினிற் றுடைத்துத் தூய்தா
வாய்ந்ததைப் புரட்டி மாதோ மருள்தகப் பற்றி னானே.

வேறு

2506 ஏற்றி யும்இழித் தும்இடை யொற்றியும்
போற்றிச் சந்தனம் பூசுகின் றானெனக்
கூற்ற னான்முகங் கோலஞ்செய் தான்கடற்
றோற்றுஞ் செஞ்சுடர் போலச் சுடர்ந்ததே. ௧௨௦

2507 கோதைப் பாரத்தி னானுந்தன் நாணினும்
ஏதி லான்முகம் நோக்கும் இளிவினும்
பாதம் நோக்கிய பால்மதி வாண்முகம்
ஏத மின்றி எடுத்தனன் மெல்லவே. ௧௨௧

2508 உருவச் செங்கயல் ஒண்ணிறப் புள்வெரீஇ
இரிய லுற்றன போன்றிணைக் கண்மலர்
வெருவி ஓட விசும்பிற் குலாவிய
திருவிற் போற்புரு வங்கள் திருத்தினான். ௧௨௨

2509 ஆரம் மின்ன அருங்குயந் தான்களைந்(து)
ஒரும் ஒண்டிறற் சுத்தரி கைத்தொழில்
நீரிற் செய்தடி யேத்துபு நீங்கினன்
தாரன் மாலைத் தயங்கிணர்க் கண்ணியான். கஉநு

வேறு

2510 அன்னப் பெடைநடுக்கி அசைந்து தேற்று நடையாளும்
மன்னர் குடைநடுக்கும் மாலை வெள்வேல் மறவோனும்
மின்னு மணிக்குடத்தின் வேந்தர் ஏந்தப் புனலாடிப்
பொன்னங் கடிமலருந் துகிலுஞ் சாந்தும் புனைந்தாரே.

2511 எஞ்சுற்றம் என்றிரங்கா தாக மெல்லாங் கவர்ந்திருந்து
தஞ்சுற்றம் வேண்டாத முலைக்கீழ் வாழ்வு தளர்கின்ற
நஞ்சுற்ற வேல்நெடுங்கட் பாவை நல்கூர் சிறுநுசுப்பிற்(கு)
அஞ்சுற் றழிப்புலர்ந்தாங் கணிந்தார் அம்ம மணிவடமே.

2512 சுடுமண் மிசைமாரி சொரியச் சூழ்ந்து சுமந்தெழுந்து
நெடுநன் னிமிராவி நாறு நெய்தோய் தளிர்மேனி
துடிநுண் ணிடைப்பெருந்தோட் டுவர்வா யேழை மலர்மார்பன்
கடிநன் மலர்ப்பள்ளி களிப்பக் காமக் கடலாழ்ந்தான். கஉகு

வேறு

2513 வழங்கு தாரவன் மார்பிடை மட்டுகப்
புழுங்கு கோதைபொற் பின்திறம் பேசலாம்
விழுங்கு மேகம் விடாது தழீஇக்கிடந்(து)
ஒழிந்த மின்னுக் கொடியொத் தொழிந்திட்டாள்.

2514 தாம மார்பனுந் தையலும் மெய்யுணர்(வு)
ஆமி தென்றறி யாது களித்தவர்
தூமங் கொப்புளிக் குந்துகிற் சேக்கைமேற்
காமன் ஆப்பணைக் கள்ளுக வைகினார். கஉஅ

வேறு

2515 மாதர்தன் வனப்பு நோக்கி மகிழ்ந்துகண் இமைத்தல் செல்லான்
காதலித் திருப்பக் கண்கள் கரிந்துநீர் வரக்கண் டம்ம
பேதைமை பிறரை யுள்ளி அழுபவர்ச் சேர்த லென்றாள்
வேதனை பெருகி வேற்கண் தீயுமிழ்ந் திட்ட அன்றே. கஉகூ

2516 நாறுசாந் தழித்து மாலை பரிந்துநன் கலன்கள் சிந்திச்
சீறுபு செம்பொன்ஆழி மணிவிரல் நெரித்து விம்மா
ஏறியும் இழிந்தும் மூளும் புருவங்கள் முரிய நொந்து
தேறுநீர் பூத்த செந்தா மரைமுகம் வியர்த்து நின்றாள்.

2517 இற்றதென் ஆவி என்னா எரிமணி இமைக்கும் பஞ்சிச்
சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்பச் சேந்து
பொற்றதா மரையிற் போந்து கருமுத்தம் பொழிப வேபோல்
உற்றமை கலந்து கண்கள் வெம்பனி உகுத்த அன்றே.

2518 கொண்ட பூண்நின்னைச் சார்ந்து குலாய்க்கொழுந் தீன்ற கொம்பே
கண்டுகண் கரிந்து நீரா யுகுவது கரக்க லாமே
பண்டியான் செய்த பாவப் பயத்தையார்க் குரைப்பென் தேன்காள்
வண்டுகாள் வருடி நங்கை வரந்தர மொழிமின் என்றான்.

2519 பூவையுங் கிளியுங் கேட்டுப் புழைமுகம் வைத்து நோக்கிக்
காவலன் மடந்தை யுள்ளங் கற்கொலோ இரும்பு கொல்லோ
சாவம்யாம் உருகி ஒன்றுந் தவறிலன் அருளு நங்கை
பாவையென் றிரத்தும் என்ற பறவைகள் தம்முட் டாமே.

2520 பெற்றகூழ் உண்டு நாளும் பிணியுழந் திருத்தும் பேதாய்
முற்றிமை சொல்லின் நங்கை மூன்றுநாள் அடிசில் காட்டாள்
பொற்றொடி தத்தை யீரே பொத்தும்நும் வாயை என்றே
கற்பித்தார் பூவை யார்தங் காரணக் கிளவி தம்மால். ௧௩௪

2521 பழியொடு மிடைந்த தேனுஞ் சீறடி பரவி னாற்கு
வழிபடு தெய்வ மாகி வரங்கொடுத் தருளல் வேண்டும்
ஒழிபடைக் களிறு போல உயங்கவும் உருகி நோக்காப்
பிழிபடு கோதை போலாம் பெண்டிரைக் கெடப்பிறந்தாள்.

2522 ஈன்றதா யானும் ஆக இதனைக்கண் டுயிரை வாழேன்
நான்றுயான் சாவல் என்றே நலக்கிளி நூலின் யாப்ப
மான்றவள் மருண்டு நக்காள் வாழிய வரம்பெற் றேனென்(று)
ஆன்றவன் ஆரப் புல்லி அணிநலம் பரவி னானே. ௧௩௬

வேறு

2523 நிறையோத நீர்நின்று நீள்தவமே செய்யினும் வாழி நீலம்
அறையோ அரிவை வரிநெடுங்கண் ஒக்கிலையால் வாழி நீலம்

கண்ணொவ்வா யேனுங் களித்து நகுதிநின்
வண்ணம் இதுவோ மதுவுண்பார் சேரியையோ வாழி நீலம்.

வேறு

2524 பாண்குலாய்ப் படுக்கல் வேண்டா பைங்கிளி பூவை யென்னும்
மாண்பிலா தாரை வைத்தார் என்னுறார் என்று நக்கு
நாண்குலாய்க் கிடந்த நங்கை நகைமுக அமுதம் ஈந்தாள்
பூண்குலாய்க் கிடந்த மார்பிற் பொன்னெடுங் குன்றனாற்கே.

2525 நலங்குவித் தனைய மாதர் நன்னலம் ஆய எல்லாம்
புலம்புவித் தருளின் நீங்கிப் பகைப்புலம் புக்க வேந்திற்
கலங்குவித் தனைய நம்பி கவர்ந்திடக் கலாபம் ஏங்கச்
சிலம்புநொந் திரங்கத் தேன்தார் பரிந்துதேன் எழுந்ததன்றே.

2526 திருநிறக் காம வல்லி திருக்கவின் கொண்டு பூத்துப்
பெருநிறங் கவினி யார்ந்த கற்பகம் பிணைந்த தேபோல்
அருநிறக் குரிசில் மார்பத் தசைந்தனள் அலங்கல் வேலும்
நெரிபுறத் தடற்று வாளும் நீலமும் நிகர்த்த கண்ணாள்.

வேறு

2527 மணிக்கண் மாமயிற் சாயல் மாதரும்
அணிக்கந் தன்னதோள் அரச சீயமும்
பிணித்த காதலாற் பின்னிச் செல்வுழிக்
கணித்த நாள்களேழ் கழிந்த காலையே. கசக

2528 சூட்டுஞ் சுண்ணமும் அணிந்து சுந்தரம்
ஓட்டி ஒண்பொனால் ஓங்கு தாரொடு
பூட்டிக் குண்டலம் பொற்பப் பெய்தபின்
மோட்டு முத்தொளிர் வடம்வ ளாயினார். கசஉ

2529 பால்நு ரைய்யன பைந்து கில்அணிந்(து)
ஆனி ரைய்யினத் தலங்கல் ஏறனான்
மானி ரைய்யினம் மருளும் நோக்கினார்
ஊனு யிருண்ணும் ஒருவ னாயினான். கசங

2530 சுநந்தை தன்மகன் சுடர்பொற் சூழித்தேன்
இனங்க வர்ந்துண இலிற்று மும்மதத்(து)
அநங்க னன்னகை யானை ஏறினான்
குனிந்த சாமரை குளிர்சங் கார்த்தவே. கசச

வேறு

2531 இரும்பிடி நூறு சூழ இறுவரை நின்ற தேபோற்
கரும்பொடு காய்நெற் றுய்த்துக் கருப்புரக் கந்தின் நின்ற
சுரும்புசூழ் மதத்த சூளா மணியெனுஞ் சூழி யானைப்
பெருந்தகைப் பிணையல் மன்னர் முடிமிதித் தேறி னானே.

2532 சட்டகம் பொன்னிற் செய்து தண்கதிர் வெள்ளி வேய்ந்து
வட்டநல் வைரம் வாய்ப்ப நிரைத்துமேல் மணிகள் சேர்த்திச்
சுட்டுதற் கரிய முத்தின் தொத்துவாய் நாற்றி முந்நீர்ப்
பட்டவான் பவளக் காம்பின் குடைநிழற் பரிதி யொத்தான்.

2533 மடற்பனைக் குழாத்திற் பிச்சம் நிரைத்தன மன்னர் சூழ்ந்து
புடைக்களி றேறித் திங்கட் பொழிகதிர்க் குப்பை யன்ன
எடுத்தெறி கவரி வீச இயம்பல முழங்கி ஆர்ப்பக்
கடற்படை வெள்ளஞ் சூழக் காவலன் வீதி சேர்ந்தான்.

2534 அடிநிலம் உறுதல் நாணி அருவருத் தமரின் ஆலித்(து)
இடுமயிர் சிறக ராக எழுந்துமேற் பறப்ப போலப்
படுமழைத் துளியிற் பாய்மாப் பரந்தன நிரந்த பொற்றேர்
இடைநில மின்றி வேழம் ஈண்டின மள்ளர் தொக்கார்.

2535 கொழுமடற் பெண்ணை ஈன்ற குரும்பையுஞ் செப்புங் கொன்ற
இழைமுலைத் தடத்தி னாள்தன் கணவனைக் காண ஏகிக்
கழுமொலி யரவ வானங் கனைபெயல் கடற்பெய் தன்ன
குழுமொலி யரவம் ஈண்டிக் கொடிநகர் பொலிந்த தன்றே.

2536 ஒள்ளிலைச் சூலந் தெண்ணீர் உலாமுகில் கிழிக்கும் மாடக்
கொள்கொடிக் குழாத்தி னாலுங் கொழுநறும் புகையி னாலுந்
தெள்ளுறு சுண்ணத் தாலுந் தேமலர்த் துகளி னாலும்
புள்ளினம் பொழுது காணா புலம்பிக்கூ டடைந்த அன்றே.

2537 பைந்தொடி மகளிர் பாங்கர் பரிந்துநூல் சொரிந்த காசு
சிந்தின தழலென் றஞ்சிச் சிறையன்னம் நிலத்தைச் சேரா
இந்திர கோப மாமென் றிளமயில் குனிந்து குத்திச்
சிந்தையிற் றேம்பத் தாமே திருமணி நக்க அன்றே. கடுக

2538 வெள்ளைமை கலந்த நோக்கிற் கிண்கிணி மிழற்றி ஆர்ப்பப்
பிள்ளைமை காதல் கூரப் பிறழ்ந்துபொற் றோடு வீழத்

துள்ளுபு செலீஇயதோற்றந் தொடுகழற் காமன்காமித்(து)
உள்ளுயி ரறியப் பெண்ணாய்ப் பிறந்ததோர் தோற்றம் ஒத்தார்.

2539 தன்நெறி வளரக் காமன் தான்முலை யிரண்டும் ஆகி
முன்னரே வளர்கின் றாற்போல் முகிழ்முலை முத்தம் ஏந்திப்
பொன்எறி மணியிற் பொங்கிக் குழல்புறம் புடைப்ப ஓடிப்
பின்நிறீஇ வைத்த போலப் பெதும்பையர் விதும்பி நின்றார்.

2540 அணிநிலா வீசு மாலை அரங்குபுல் லென்னப் போகித்
துணிநிலா வீசு மாலைப் பிறைநுதற் றோழி சேர்ந்து
மணிநிலா வீசு மாலை மங்கையர் மயங்கி நின்றார்
பணிநிலா வீசும் பைம்பொற் கொடிமணி மலர்ந்த தொத்தார்.

2541 வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை நோக்கி னாரை
உள்ளுயிர் உண்ணுங் கூற்றின் உடன்றுகண் கரிந்து பொங்கக்
கள்ளுயிர் உண்ணு மாலைக் கதுப்பொரு கையின் ஏந்தி
நள்ளிருள் விளக்கிட் டன்ன நங்கைமார் மல்கி னாரே. கருடு

2542 மட்டொளித் துண்ணும் மாந்தர் மாண்புபோல் மறைந்துவண்ணப்
பட்டொளித் தொழியஅல்குற் பசுங்கதிர்க் கலாபந்தோன்றக்
குட்டநீர்க் குவளைக் கண்கள் விருந்துண விரும்பி நின்றார்
அட்டுந்தேன் அணிந்த மாலைப் பவளக்கொம் பணிந்த தொத்தார்.

2543 பெரும்பொருள் நீதிச் செங்கோற் பெருமகன் ஆக்கம் போல
பரந்திட லின்றி மேலாற் படாமுலை குவிந்த கீழால் [ப்
அரும்பொருள் நீதி கேளா அரசனிற் சுருங்கி நந்து
மருங்குநொந் தொழிய வீதி மடந்தையர் இடங்கொண் டாரே.

2544 செல்வர்க்கே சிறப்புச் செய்யுந் திருந்துநீர் மாந்தர் போல
அல்குற்கும் முலைக்கும் ஈந்தார் அணிகலம் ஆய எல்லாம்
நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றம் என்றுநுண் ணுசுப்பு நைய
ஒல்கிப்போய் மாடஞ் சேர்ந்தார் ஒருதடங் குடங்கைக் கண்ணார்.

2545 கார்வளர் மின்னு வீசுங் குண்டலங் காய்பொன் ஓலை
ஏர்வளர் பட்டம் ஏற்ப அணிந்திருள் சுமந்து திங்கள்
நீர்வளர் நீலம் பூத்து நிரைத்தபோல் நிரைத்த மேலால்
வார்வளர் முலையி னார்தம் மாழைவாண் முகங்கள் மாதோ.

2546 குறையணி கொண்ட வாறே கோதைகால் தொடர ஓடிச்
சிறையழி செம்பொன்உந்தித் தேன்பொழிந்தொழுகவந்திப்
பறையிசை வண்டு பாடப் பாகமே மறைய நின்றார் [தார்.
பிறையணி கொண்ட அண்ணல் பெண்ணோர்பால் கொண்டதொத்

2547 பொன்னரி மாலை பூண்டு பூஞ்சிகை குலாவி முன்கை
மின்னரிச் சிலம்பு தொட்டு விருப்பொடு விரைந்துபோவான்
கன்னியர் ஆடி நோக்கித் தம்மைத்தாம் கண்டு நாணிப்
பின்னவை யணிந்துசெல்வார் இடம்பெறா தொழிந்துபோனார்.

2548 முத்துலாய் நடந்த கோல முலைமுதல் முற்றம் எல்லாம்
வித்திய வேங்கை வீயும் விழுப்பொனும் விளங்கக் காமத்
தொத்துநின் றெரிந்து கண்டார் கண்சுடச் சுடர்ந்து நின்றார்
ஒத்தொளிர் காம வல்லி ஒருங்குபூத் தலர்ந்த தொத்தார்.

2549 உகிர்வினை செய்து பஞ்சி ஒள்ளொளி அரத்த மூட்டி
அகில்கமழ் அங்கை சேப்ப அரிவையர் அலங்கல் தாங்கி
வகிர்படு மழைக்கண் சின்னீர் மாக்கயல் எதிர்ந்த வேபோல்
முகில்கிழி மின்னின் நோக்கி முரிந்திடை குழைந்து நின்றார்.

2550 முனித்தலைக் கண்ணி நெற்றிச் சிறார்முலை முழாலிற் பில்கிப்
புனிற்றுப்பால்] பிலிற்றித் தேமா வடுஇறுத் தாங்குப் பாய
நுனித்துக்கண் அரக்கி நோக்கா தொசிந்துநின் றார்களன்றே
கனிப்பொறை மலிந்து நின்ற கற்பகப் பூங்கொம் பொத்தார்.

2551 அவிரிழை சுடர முல்லை அலங்கலங் கூந்தல் சோரத்
தவிர்வெய்ய காமந் தாங்கித் தடமுலைக் கால்கள் சாய
இவர்தரு பிறவி யெல்லாம் இன்னம்ஆ கென்று நின்றார்
சுவர்செய்தாங் கெழுதப்பட்ட துகிலிகைப்பாவையொத்தார்.

2552 வேரிநா றலங்கல் மாலை மின்னிழை மயங்கி எங்கும்
பூரித்துப் புதவந் தோறுங் குவளையும் நிரையும் பூத்துப்
பாரித்துப் பைம்பொன் நாகர் உலகிவண் வீழ்ந்த தேபோல்
மாரிமா மயிலனாரும் மைந்தரும் மயங்கி னாரே. ௧௬௬

2553 கோதைதாழ் குடையின் நீழற் கொற்றவன் பரிதி யாக
மாதவர் முகங்க ளென்னுந் தாமரை மலர்ந்த தெண்ணீர்க்
காதம்நான் ககன்ற பொய்கைக் கடிநகர் குவளை பூத்துப்
பேதுறு கின்ற போன்ற பெருமழைக் கண்கள் மாதோ.

2554 மாந்தரும் மாவுஞ் செல்ல மயங்கிமேல் எழுந்த நீறு
தேந்தரு கோதை யார்தந் தெண்மட்டுத் துவலை மாற்ற
ஆய்ந்தபொன் நகரம் எங்கும் அணிகல ஒளியி னாலே
காய்ந்துகண் கலப்பப் பூத்த கற்பகம் ஒத்த தன்றே. கசுஅ

2555 பெண்பெற்ற பொலிசை பெற்றார் பிணையனார் பெரியயாமும்
கண்பெற்ற பொலிசை பெற்றாம் இன்றெனக் கரைந்து முந்நீர்
மண்பெற்ற ஆயுள் பெற்று மன்னுவாய் மன்ன என்னாப்
புண்பெற்ற வேலி னான்மேற் பூமழை தூவி னாரே. கசுகூ

வேறு

2556 சுண்ணமேற் சொரிவார் தொழுதுதொங்கல் வீழ்ப்பார்
தண்ணென் சந் தனநீர் ஆர்ந்துதேன் துளும்பும்
வண்ணப்பந் தெறிவார் வளையொலிப்ப ஓச்சிக்
கண்ணிவிட் டெறிவார் கலவைநீர் தெளிப்பார். கஎ0

2557 முந்துசூர் தடிந்த முருகன்நம்பி என்பார்
ஐந்துருவ அம்பின் அநங்கனென் றயர்வார்
கந்துகன் வளர்த்த சிங்கங்காண்மின் என்பார்
சிந்தையிற் களிப்பார் சேண்நெடிய கண்ணார். கஎக

2558 தேசிக முடியுந் திருந்துபட் டுடையும்
பாசமாக நின்று பன்மலர்க் கழுநீர்
மூசிவண் டிமிரும் மொய்யலங்கல் தாழக்
காசில்காமஞ் செப்பிக் கண்ணினால் இரப்பார். கஎஉ

2559 வண்டறைந்த தாரான் வண்ணங்கண்ட பின்றைக்
கண்டிலேனென் மாமை கைவளையொ டென்பார்
ஒண்டொடி இவன்தன் உருவுகண்டு வாழ்வார்
பெண்டிராய்ப் பிறந்தார் பெரியர்போத என்பார். கஎஙு

வேறு

2560 கொழித்திரை ஓத வேலிக் குமரனைப் பயந்த நங்கை
விழுத்தவம் உலக மெல்லாம் விளக்கிநின் றிட்ட தென்பார்
பிழிப்பொலி கோதை போலாம் பெண்டிரிற் பெரியள் நோற்றாள்
சுழித்துநின் றழுத கற்பிற் சுநந்தையே யாக என்பார். கஎச

2561 சாந்தகங் கிழிய மாலைத் தடமுலை ஞெமுங்கப் புல்லிச்
சேர்ந்தெழு நங்கை மாரே திருநங்கை மார்கள் அல்லார்
கூந்தலும் முலையும் முத்துங் கோதையுஞ் சுமந்து ஞவான்
போந்தஅந் நங்கை மார்கள் பொய்ந்நங்கை மார்கள் என்பார்.

2562 இடம்பட அகன்று நீண்ட இருமலர்த் தடங்கண் என்னுங்
குடங்கையின் நொண்டு கொண்டு பருகுவார் குவளைக் கொம்பின்
உடம்பெலாங் கண்க ளாயின் ஒருவர்க்கு மின்றி ஏற்ப
அடங்கவாய் வைத்திட் டாரப் பருகியிட் டிமின் என்பார்.

2563 முலைமுதல் துறந்த அன்றே மூரித்தாள் ஆளி யானைத்
தலைநிலம் புரள வெண்கோ டுண்டதே போன்று தன்கைச்
சிலையிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி
நிலவுமிழ் குடையின் நீழற் றுஞ்சுக வையம் என்பார். கஎஎ

வேறு

2564 இந்நகரப் புறங்காட்டில் இவன்பிறந்த வாறும்
தன்னிகரில் வாணிகனிற் றான்வளர்ந்த வாறும்
கைந்நிகரில் வேந்தர்தொழப் போந்ததுவுங் கண்டால்
என்னைதுவஞ் செய்யா திகழ்ந்திருப்ப தென்பார். கஎஅ

2565 பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி யுறினுந்
திருமுயங்கல் இல்லையெனில் இல்லைபொருள் ஈட்டம்
ஒருமுழமுஞ் சேறலில ரேனும்பொருள் ஊர்க்கே
வரும்வழி வினைய்உழந்து வாழ்கதவம் மாதோ. கஎகூ

2566 நஞ்சுகுடித் தாலும்நவை யின்றுதவம் நின்றால்
அஞ்சியொளித் தாலும்அரண் இல்லைதவம் உலந்தால்
குஞ்சரத்தின் கோட்டிடையும் உய்வர்தவம் மிக்கார்
அஞ்சலிலர் என்றும்அற னேகளைகண் என்பார். கஅ௦

வேறு

2567 முரல்வாய சூற்சங்க முடமுட் டாழை முகைவிம்முங்
கரைவாய முத்தீன்று கானல் மேயுங் கடற்சேர்ப்பன்
உரைவாய நகர்பரவப் போகி ஒண்பொன் எயில்சூழ்ந்த
விரைவாய பூம்பிண்டி வேந்தன் கோயிற் கெழுந்தானே.

2568 அருகு மயில்அகவ அன்னம் ஏங்கக் குயில்கூவக்
குருகு பொறையுயிர்க்கும் கொடுமுட் டாழை வெண்டோட்டு
முருகு பொறையுயிர்க்கும் மொய்பூங் காவிற் படைநீக்கித்
திருகு கனைகழலான் செம்பொற் கோயில் சேர்ந்தானே.

2569 திறந்த மணிக்கதவம் திசைக ளெல்லாம் மணந்தேக்கி
மறைந்த அகிற்புகையால் மன்னர் மன்னன் வலஞ்செய்து
பிறந்தேன் இனிப்பிறவேன் பிறவா தாயைப் பெற்றேனென்(று)
இறைஞ்சி முடிதுளக்கி ஏத்திக் கையாற் றொழுதானே.

வேறு

2570 திருமறு மார்பினை திலகமுக் குடையினை
அருமறை தாங்கிய அந்தணர் தாதையை
அருமறை தாங்கிய அந்தணர் தாதைநின்
எரிபுரை மரைமலர் இணையடி தொழுதும். ௧௮௪

2571 உலகுணர் கடவுளை உருகெழு திறலினை
நிலவிரி கதிரணி நிகரறு நெறியினை
நிலவிரி கதிரணி நிகரறு நெறியைநின்
அலர்கெழு மரைமலர் அடியிணை தொழுதும். ௧௮௫

2572 மறுவற உணர்ந்தனை மலமறு திகிரியை
பொறிவரம் பாகிய புண்ணிய முதல்வனை
பொறிவரம் பாகிய புண்ணிய முதல்வநின்
நறைவிரி மரைமலர் நகும்அடி தொழுதும். ௧௮௬

வேறு

2573 நந்தா விளக்குப் புறமாகென நான்கு கோடி
நொந்தார்க் கடந்தான் கொடுத்தான்பின்னை நூறு மூதூர்
கந்தார் கடாத்த களிறுங்கொடித் தேர்கள் நூறுஞ்
செந்தா மரைமேல் நடந்தான்அடி சேர்த்தி னானே. ௧௮௭

2574 வாடாத மாலை மணிமாலைபொன் மாலை முத்தம்
நீடார மாலை நிழல்மாண்ட பவழ மாலை
மாடார்ந் திழியும் அருவிம்மலர் பொற்ப ஏற்றிக்
கூடார்க் கடந்தான் வலங்கொண்டிடஞ் சென்று புக்கான்.

வேறு

2575 உலமரும் நெஞ்சின் ஒட்டா மன்னவர் ஊர்ந்த யானை
வலமருப் பீர்ந்து செய்த மணிகிளர் கட்டில் ஏறி
நிலமகள் கணவன் வேந்தர் குழாத்திடை நிவந்தி ருந்தான்
புலமகள் புகழப் பொய்தீர் பூமகட் புணர்ந்து மாதோ. ௧௮௯

2576 எத்துணைத் தவஞ்செய் தான்கொல் என்றெழுந் துலகம் ஏத்
வித்திய புகழி னாற்கு விருந்தர சியற்றி நாடும் [த
ஒத்தனன் நல்கித் தன்னை உழந்தனள் வளர்த்த தாய்க்குச்
சித்திரத் தேவிப் பட்டந் திருமகன் நல்கி னானே. ௧௯௦

2577 இனக்களி யானை மன்னர் இளவுடை யானென் றேத்தத்
தனக்கிளை யானை நாட்டித் தான்தனக் கென்று கூறிச்
சினக்களி யானை மன்னர் மகளிரைச் சேர்த்தி நம்பன்
மனக்கினி துறைக என்று வளங்கெழு நாடும் ஈந்தான்.

2578 ஆழ்கடல் வையத் தில்லா அருநிதி அரசு நல்ல
சூழ்மணி ஆழி செம்பொற் சூட்டொடு கண்ணி காதற்
றோழர்கட் கருளித் தொல்லை உழந்தவர் தம்மைத் தோன்ற
வாழ்கென நிதியும் நாடும் மன்னவன் கொடுப்பித் தானே.

2579 வளர்த்தகைத் தாயர் தம்மை வருகென அருளித் தங்கள்
கிளைக்கெலாஞ் சிறப்புச் செய்து கேட்டவர் மருள ஐந்தூர்
விளைத்துள கெடாத வைகல் ஆயிரம் இறுப்புத் தண்டக்
கொளக்கொடுத் தயாவு யிர்த்தான் கொற்றவன் என்ப அன்றே.

2580 கைத்தலை மந்தி கொண்ட கைம்மகப் போன்று தன்கண்
பத்திமை விடாது மேனாட் படைக்கலம் நவின்ற பொற்றேர்
மைத்துன மன்னர்க் கெல்லாம் வளநிதி மணிசெய் மான்தேர்
தத்துநீர் மிசைச்செல் மாவுந் தவழ்மதக் களிறும் ஈந்தான்.

2581 கோமகன் கோல மான்தேர்க் கோவிந்தன் என்னுங் கோய்
மாமற்கு மடங்க லாற்றற் கட்டியங் காரன் என்ற [தார்
தீமகன் உடைய வெல்லாந் தேர்ந்தனன் கொடுத்துச் செல்வன்
ஓவலில் கறவை ஒத்தான் உலோகமா பாலற் கன்றே. ௧௯௫

2582 பேரிடர் தன்கண் நீக்கிப் பெரும்புணை யாய தோழற்(கு)
ஓரிடஞ் செய்து பொன்னால் அவனுரு இயற்றி ஊரும்

பாரிடன் பரவ நாட்டி அவனது சரிதை யெல்லாம்
தாருடை மார்பன் கூத்துத் தான்செய்து நடாயி னானே.

2583 ஊன்விளை யாடும் வைவேல் உறுவலி சிந்தித் தேற்பத்
தான்விளை யாடி மேனாள் இருந்ததோர் தகைநல் ஆலைத்
தேன்விளை யாடு மாலை யணிந்துபொற் பீடஞ் சேர்த்தி
ஆன்விளை யாடும் ஐந்தூர் அதன்புறம் ஆக்கி னானே. ௧௯௭

வேறு

2584 கொட்ட மேகம மூங்குளிர் தாமரை
மொட்டின் வீங்கிய வெம்முலை மொய்குழல்
அட்டுந் தேனழி யும்மது மாலையார்
பட்டம் எண்மரும் பார்தொழ எய்தினார். ௧௯௮

2585 பஞ்சி சூழல்குற் பல்வளை வீங்குதோள்
வஞ்சி நுண்ணிடை வம்பணி வெம்முலை
விஞ்சை யன்மகள் சீறடி வீழ்ந்தனர்
அஞ்சி லோதி அரும்பவிழ் கோதையார். ௧௯௯

2586 வீடில் ஐந்தரைக் கோடி விருத்திமேல்
நாடி ஆயிரம் நாடொறும் நங்கைமார்க்(கு)
ஆடு சாந்தடி சிற்புறம் ஆக்கினான்
கோடு வாலொளிக் குங்குமக் குன்றனான். ௨௦௦

2587 ஆனை மும்மதம் ஆடிய காடெலாம்
மானை நோக்கியர் வாய்மது ஆடின
வேனல் மல்கிவெண் தேர்சென்ற வெந்நிலம்
பானல் மல்கிவெண் பாலன்னம் பாய்ந்தவே. ௨௦௧

2588 மாரி மல்கி வளங்கெழு மண்மகள்
வாரி மல்கி வரம்பில ளாயினாள்
ஆரி யாஅடி சிற்றளி யான்செய்வார்க்(து)
ஏரி யாயின எங்கணும் என்பவே. ௨௦௨

2589 ஏக வெண்குடை இன்னிழற் றண்ணளி
மாக மாய்க்கடல் எல்லை நிழற்றலாற்
போக பூமியும் பொன்கிளர் பூமுடி
நாகர் நாகமும் நாணி யொழித்தவே. ௨௦௩

2590 வண்டு மேய்ந்து வரிமுரல் பூஞ்சிகைக்
கெண்டை வென்றகண் ணூர்களுங் கேள்வரும்
உண்டு மூத்திடை யூறிலர் சேறலாற்
பண்டை யூழியிற் பார்மலி வுற்றதே. ௨0௪

வேறு

2591 செருநாடு செஞ்சுடர்வேற் றிருகு செம்பொற் கழைகழற்கால்
திருநாடு தேம்பைந்தார்ச் செல்வன் செவ்வி பெறுதொழிந்து
பெருநாட் டளுங்கலங்கள் சுமந்து பேரும் இடம்பெறுஅ(து)
ஒருநாட் டரசுணங்க உரவோன் கொற்றம் உயர்ந்ததே.

வேறு

2592 வலையவர் முன்றிற் பொங்கி வாளென வாளை பாயச்
சிலையவர் குரம்பை யங்கண் மானினஞ் சென்று சேப்ப
நிலைதிரிந் தூழி நீங்கி உத்தர குருவும் ஆகிக் [றே.
கொலைகடிந் திவற லின்றிக் கோத்தொழில் நடாத்தும் அன்

2593 கதங்கனல் யானை நெற்றிக் கட்டிய பட்ட மேபோல்
மதங்கமழ் கோதை யல்குல் மனுக்கிடந் திமைத்துக் காமப்
பதம்பல பார்க்குஞ் சாயற் பாவைமற் றநங்க மாலை
விதம்படக் கருதி மாதர் விளைத்தது விளம்ப லுற்றேன்.

வேறு

2594 ஈர்ந்தண் கோதை இளையார்குழாத்
திடையாள் எங்கோன் அடிசேர்வலென்(று)
ஆர்ந்த செந்தா மரைமுகத்தினுள்
அடிகள் வந்தீங் ககன்கடையுளாள்
சார்ந்த சாயற் றடமாமுலைத்
தையல் வல்லே வருகென்றான்
சேர்ந்து மன்னர் முடிவயிரவிற்
றிளைக்குஞ் செம்பொற் செறிகழலினன். ௨0௮

2595 அருவி லைநன் கலஞ்செய்போர்வை
அன்னம் நாண அடியொதுங்கிச்சென்(று)
உருவம் ஒவ்வா தொசியுநுசுப்
பொல்கக் கோமான் அடிதொழுதபின்
மருவின் சாயல் மணிமெல்விரல்
கூப்பி யோலை மரபின்நீட்ட
இரவி யென்ன விளங்குமொளி
இறைவன் கொண்டாங் கதுநோக்குமே. ௨௦௯

2596 அடிகள் கண்டாங் குவந்தருளுக
அநங்க மாலை யடிவீழ்ச்சிமுன்
கொடிய வேலான் கொதித்தரங்கின்
நீக்கிக் கோயிற் சிறைவைத்தபின்
கடிசெய் பைந்தார் கமழ்மாலைவேற்
கந்து கற்குச் சிறுவயான்இப்
படிய னல்காய் பசுமணிகள்வேய்ந்
தோங்கும் பைம்பொற் செறிகழலினய். ௨௧௦

2597 என்ன நாளும் அரற்றப்பொருன்
விடுப்பப் போகி யினமழைகள்மொய்த்(து)
அன்னந் துஞ்சும் அடிக்குடிலினுள்
அன்று யான்கொண்ட நாடகத்தினைத்
துன்னி நம்பி யுருவுதீட்டித்
தொங்கல் வேய்ந்து தொழுதாற்றநீ
மன்னர் மன்ன மதிதோய் குடையாய்
மகளிர் காமம் மறைத்தொழிதியோ. ௨௧௧

2598 கண்கள் துஞ்சா கதிர்முத்தமே
காலுங் கையார் வளைகழலுமால்
பண்கொள் சொல்லார் மாமைநீங்கிப்
பைம்பொன் போர்த்த படாமுலைகளும்
மண்கொள் வேல்மன்னர் நண்பின்மையை
வையக் கெல்லாம் உடனறையவோ
பெண்கள் ஆவி விடுத்தொழிபவோ
பெரியோர் நண்படைந் தார்பெயர்பவோ. ௨௧௨

2599 அறனி மூலாய் உலகளிக்கும்நின்
ஆர மாலை யணிவெண்குடைப்
புறனி ழலின் அயலெனேயான்
புல்லா மன்னர் நிணம்பொழியும்வேல்
மறனி ழல் மதயானையாய்
வந்தஎன் தோழி வாமலேகை
திறனழி யாமை இன்னேவிடுத்
தருளுக தேர் வேந்தர்வேந்தனே. உகா

2600 புள்ளும் யாழுங் குழலும்ஏங்கப்
புனைந்து வல்லான் நினைந்தியற்றிய
பள்ளிச் செம்பொற் படையமளிமேல்
மழலை மணியாழ் தான்வெளவிக்
கொள்ளுந் தீஞ்சொல் அலங்கா ரப்பூங்
கொடியைப் புல்லி மணிக்குவட்டினை
எள்ளி வீங்கித் திரண்ட தோள்மேற்
குழைவில் வீச இருந்தானே. உகச

2601 அங்கை சேப்பக் குருகிரங்க
அலங்க லம்பூங் குழல்துயல்வர
மங்கை நல்லார் பவளஅம்மி
அரைத்த சாந்த மலர்பெய்மாலை
பொங்கு தூமக் கொழுமென்புகை
புரிந்த பஞ்ச முகவாசமுந்
தங்கு தாம மார்பினற்குந்
தைய லாட்குங்கொண் டேந்தினரே. உகரு

2602 அருளு மாறென்னை அநங்கமாலை
அடித்தி தோழி யன்றேயெனத்
தெருள லான்செல்வக் களிமயக்கினற்
றிகைக்கும் என்றென் அறிவளக்கிய
மருளிற் சொன்னய் மறப்பனேயான்
நின்னை என்ன மகிழ்ஐங்கணை
உருளு முத்தார் முகிழ்முலையினள்
உள்ளத் துவகை தோற்றினளே. உகசு

2603 முறுவற் றிங்கள் முகஅரங்கின்மேல்
முரிந்து நீண்ட புருவக்கைகள்
நெறியின் வட்டித்து நீண்ட உண்கண்
சென்றும் வந்தும் பிறழ்ந்துமாடப்
பொறிகொள் பூஞ்சிலம்பும் மேகலைகளும்
புணர்ந்த இன்னியங்கள் ஆர்ப்பவேந்தன்
அறியும் நாடகங் கண்டான்பைந்தார்
அலர்ந்து மாதர் நலங்குழைந்ததே. ௨௧௭

2604 நான்ம ருப்பின் மதயானை
நறிய பைந்தா மரைமடந்தையைத்
தேன்ம தர்ப்பத் திளைத்தாங்கவன்
திருவின் சாயல் நலங்கவர்ந்தபின்
ஊன்ம தர்த்த ஒளிவேற்கண்ணார்
பரவ இவ்வா றெழுகுமன்றே
வான கத்து நிலத்துமில்லா
வண்ண மிக்க மணிப்பூணினான். ௨௧௮

வேறு

2605 நரம்புமீ திறத்தல் செல்லா நல்லிசை முழவும் யாழும்
இரங்குதீங் குழலும் ஏங்கக் கிண்கிணி சிலம்பொ டார்ப்பப்
பரந்தவாள் நெடுங்கட் செவ்வாய்த் தேசிகப் பாவை கோல
அரங்கின்மேல் ஆடல் காட்டி அரசனை மகிழ்வித் தாளே.

2606 கடற்படை மன்னர் தம்மைக் காதலின் விடுத்துக் காமன்
தொடுத்தகோல் மார்பிற் றங்கத் தூமலர்க் கொம்ப னாளை
வடித்தஇன் னமிர்தின் ஆரப் பருகலின் மழைக்கட் செவ்வாய்
துடித்துவண் டுண்ணத் தூங்குஞ் செந்தளி ரொத்த தன்றே. ௨௨௦

2607 இளமையங் கழனிச் சாயல் ஏருழு தெரிபொன் வேலி
வளமுயங் குருவமென்தோள் வரம்புபோய் வனப்புவித்திக்
கிளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந் தீன்ற காம
விளைபயன் இனிதிற் றுய்த்து வீணைவேந் துறையு மாதோ.

13. முத்தி இலம்பகம்

1. விசயமாதேவியார் துறவு

2608 நீரேந்தி நெய்ம்மிதந்து நிணம்வாய்ப் பில்கி யழல்விம்மிப்
போரேந்திப் பூவணிந்து புலவு நாறும் புகழ்வேலோன்
காரேந் திடிமுரசம் ஆர்ப்பக் காய்பொற் கலன்சிந்திப்
பாரேந்திச் செல்லுநாட் பட்ட தாம்நாம் பகர்வதே. க

2609 விண்பாற் சுடர்விலக்கி மேகம் போழ்ந்து விசும்பேந்தி
மண்பாற் றிலகமாய் வான்பூத் தாங்கு மணிமல்கிப்
பண்பால் வரிவண்டுந் தேனும் பாடும் பொழிற்பிண்டி
எண்பால் இகந்துயர்ந்தாற் கிசைந்த கோயில் இயன்றதே. உ

2610 அடிசிற் கலங்கழீஇக் கருனை யார்ந்த இளவாளை
மடுவின் மதர்த்துணரா வாழைத் தண்டிற் பலதுஞ்சும்
நெடுநீர்க் கழனிசூழ் நியமஞ் சேர்த்தி விழவயர்ந்து
வடிநீர் நெடுங்கண்ணார் கூத்தும் பாட்டும் வகுத்தாரே. ங

2611 அல்லி யரும்பதமும் அடகுங் காயுங் குளநெல்லும்
நல்ல கொழும்பழனுங் கிழங்குந் தந்து நவைதீர்த்தார்க்(கு)
இல்லையே கைம்மாறென் றின்ப மெல்லாம் அவர்க்கீந்தாள்
வில்லோன் பெருமாட்டி விளங்கு வேற்கண் விசையையே. ச

2612 தனியே துயருழந்து தாழ்ந்து வீழ்ந்த சுடுகாட்டுள்
இனியாள் இடர்நீக்கி ஏமஞ் சேர்த்தி உயக்கொண்ட
கனியார் மொழியாட்கும் மயிற்குங் காமர் பதிநல்கி
முனியாது தான்காண மொய்கொள் மாடத் தெழுதுவித்தாள்.

2613 அண்ணல் பிறந்தாங் கைஞ்ஞூற் றைவர்க் களந்தான்பால்
வண்ணச் சுவையமுதம் வைக நாளுங் கோவிந்தன்
வெண்ணெய் உருக்கிநெய் வெள்ள மாகச் சொரிந்தூட்டப்
பண்ணிப் பரிவகன்றாள் பைந்தார் வேந்தற் பயந்தாளே. சு

2614 தோடார் புனைகோதை சுநந்தை சேர்ந்து தொழுதாளைப்
பீடார் பெருஞ்சிறுவற் பயந்தீர் வம்மின் எனப்புல்லி
நாடார் புகழாளை நாண மொழிகள் பலகூறிக்
கோடாக் குருகுலத்தை விளக்கிட் டாளை விளக்கினாள். எ

2615 மறையொன் றுரைப்பனபோல்மலர்ந்து நீண்டுசெவிவாய்வைத்(து)
உறைகின்ற ஓடரிக்கண் உருவக் கொம்பின் எண்மரும்
இறைவி அடிபணிய எடுத்துப் புல்லி உலகாளுஞ்
சிறுவர்ப் பயந்திறைவற் றெளிவீர் என்றாள் திருவன்னாள்.

2616 பொங்கு மணிமுடிமேற் பொலிந்தெண் கோதைத் தொகை
கங்குற் கனவகத்தே கண்ணுட் டோன்றி வந்தீர்நீர் [யாகிக்
எங்கும் பிரியற்பீர் என்று கண்கண் மலர்ந்திருந்து
கொங்குண் நறும்பைந்தார்க் கோமான் இங்கே வருகென்றாள்.

2617 சிங்கம் நடப்பதுபோற் சேர்ந்து பூத்தூய்ப் பலர்வாழ்த்தத்
தங்கா விருப்பிற்றம் பெருமான் பாதம் முடிதீட்டி
எங்கோ பணியென்ன அஞ்சா நடுங்கா இருவிற்கட்
பொங்க விடுதவிசில் இருந்தான் போரே றனையானே. க0

வேறு

2618 கொற்றவி மகனை நோக்கிக் கூறினள் என்ப நங்கோக்(கு)
உற்றது பிறர்கள் கூற உணர்ந்தனை ஆயின் நானும் [பிற்
இற்றென உரைப்பக் கேண்மோ இலங்குபூண் அலங்கல் மார்
செற்றவர்ச் செகுத்த வைவேற் சீவக சாமி என்றாள். கக

2619 நாகத்தால் விழுங்கப் பட்ட நகைமதிக் கடவுள் போலப்
போகத்தால் விழுங்கப்பட்டுப் புறப்படான் புன்சொல் நாணன்
ஆகத்தான் அமைச்சர் நண்ணூற் றோட்டியா லழுத்தி வெல்லும்
பாகர்க்குந் தொடக்க நில்லாப் பகடுபோற் பொங்கி யிட்டான்.

2620 நுண்மதி போன்று தோன்றா நுணுகிய நுசுப்பி னார்தங்
கண்வலைப் பட்ட போழ்தே கடுநவை யரவோ டொக்கும்
பெண்மையைப் பெண்மை என்னார் பேருணர் வுடைய நீரார்
அண்ணலைத் தெருட்டல் தேற்றா தமைச்சரும் அகன்று விட்டார்.

2621 கற்சிறை யழித்து வெள்ளங் கடற்கவா யாங்குக் கற்றார்
சொற்சிறை யழித்து வேந்தன் துணைமுலை துறத்தல் செல்லான்
விற்சிறை கொண்ட போலும் புருவத்து விளங்கு வேற்கண்
நற்சிறைப் பட்டு நாடும் நகரமுங் காவல் விட்டான். கஉ

2622 பிளிறுவார் முரசத் தானைப் பெருமகன் பிழைப்பு நாடிக்
களிறுமென் றுமிழப் பட்ட கவழம்போற் றகர்ந்து நில்லா(து)

ஒளிறுவேற் சுற்ற மெல்லாம் உடைந்தபின் ஒருவ னானன்
வெளிறுமுன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்த லாமோ.

2623 வனைகலக் குயவன் நாணின் மன்னரை யறுத்து முற்றிக்
கனைகுரல் உருமின் ஆர்ப்பக் காவலன் நின்னை வேண்டி[கான்
வினைமயிற் பொறியின் என்னைப் போக்கிவிண் விரும்பப் புக்
புனைமுடி வேந்த போவல் போற்றென மயங்கி வீழ்ந்தான்.

2624 சீதநீர் தெளித்துச் செம்பொற் றிருந்துசாந் தாற்றி தம்மால்
மாதரார் பலரும் வீச வளர்ந்தெழு சிங்கம் போலப்
போதொடு கலங்கள் சோர எழுந்துபொன் னார மார்பன்
யாதெனக் கடிகள் முன்னே அருளிய தென்னச் சொன்னாள்.

2625 பிறந்துநாம் பெற்ற வாணாள் இத்துணை யென்ப தோன்றும்
அறிந்திலம் வாழ்து மென்னும் அவாவினுள் அழுந்து கின்றாம்
கறந்துகூற் றுண்ணு ஞான்று கண்புதைத் திரங்கி னல்லால்
இறந்தநாள் யாவர் மீட்பார் இற்றெனப் பெயர்க்க லாமோ.

2626 சுமைத்தயிர் வேய்ந்த சோற்றிற் றுய்த்தினி தாக நம்மை
அமைத்தநாள் என்னும் நாகம் விழுங்கப்பட் டன்ன தங்கண்
இமைத்தகண் விழித்த லின்றி இறந்துபா டெய்து கின்றாம்
உமைத்துழிச் சொறியப்பெற்றும் ஊதியம் பெரிதும் பெற்றும்.கக

2627 கடுவளி புடைக்கப் பட்ட கணமழைக் குழாத்தின் நாமும்
விடுவினை புடைக்கப் பாறி வீற்றுவீற் றாயி னல்லால்
உடனுறை பழக்க மில்லை ஒழிமதி யத்தை காதல்
வடுவுடைத் தென்று பின்னும் மாபெருந் தேவி சொன்னாள்.

வேறு

2628 முருந்தனைய தூமுறுவல் முற்றிழையார் சேரி
இருந்திளமைக் கள்ளுண் டிடைதெரித லின்றிக்
கருந்தலைகள் வெண்டலைக ளாய்க்கழியா முன்னே
அருந்தவமுந் தானமும் ஆற்றுமினே கண்டீர். உக

2629 உடற்றும் பிணித்தீ யுடம்பினுயிர் பெய்திட்(டு)
அடுத்துணர்வு நெய்யாக ஆற்றல்துவை யாகக்
குடித்துண்ணுங் கூற்றங் குடில்பிரியா முன்னே
கொடுத்துண்மின் கண்டீர் குணம்புரிமின் கண்டீர். உஉ

2630 உழந்தாலும் புத்தச்சொன் றிட்டூர்தல் தேற்று(து)
இழந்தார் பல்லால் இடும்பைநீர் யாற்றுள்
அழுந்துமால் அப்பண்டி அச்சிறு முன்னே
கொளுஞ்சிலங் கூலியாக் கொண்டூர்மின் பாகீர். உ௩

2631 பிறந்தவர்க ளெல்லாம் அவாப்பெரிய ராகித்
துறந்துபுகழ் வேண்டாரோர் துற்றவிழும் ஈயார்
அறங்கரிது சேய்த்தென்ப தியாதும்அறி யாரேல்
வெறும்பொருள தம்மா விடுத்திடுமின் என்றாள். உ௪

வேறு

2632 முல்லை முகைசொரிந்தாற் போன்றினிய
பாலடிசில் மகளி ரேந்த
நல்ல கருணையால் நாள்வாயும்
பொற்கலத்து நயந்துண் டார்கள்
அல்லல் அடைய அடகிடுமின்
ஓட்டகத்தென் றயில்வார்க் கண்டுஞ்
செல்வம் நமரங்காள் நினையன்மின்
செய்தவமே நினைமின் கண்டீர். உ௫

2633 அம்பொற் கலத்துள் அடுபால்
அமர்ந்துண்ணு அரிவை அந்தோ
வெம்பிப் பசிநலிய வெவ்வினையின்
வேறுயோர் அகல்கை யேந்திக்
கொம்பிற் கொளஓசிந்து பிச்சை
யெனக்கூறி நிற்பாட் கண்டும்
நம்பன்மின் செல்வம் நமரங்காள்
நல்லறமே நினைமின் கண்டீர். உ௬

2634 வண்ணத் துகிலுடுப்பின் வாய்விட்
டழுவதுபோல் வருந்தும் அல்குல்
நண்ணுச் சிறுகூறை பாகமோர்
கைபாக முடுத்து நாளும்
அண்ணுந் தடகுரீஇ அந்தோ
வினையேயென் றழுவாட் கண்டும்
நண்ணன்மின் செல்வம் நமரங்காள்
நல்லறமே நினைமின் கண்டீர். உ௭

2635 மைதிரண்ட வார்குழல்மேல் வண்டார்ப்ப
மல்லிகைமென் மாலை சூடிக்
கைதிரண்ட வேலேந்திக் காமன்போற்
காரிகையார் மருளச் சென்றார்
ஐதிரண்டு கண்டங் குரைப்பவோர்
தண்டூன்றி அறிவிற் றள்ளி
நெய்திரண்டாற் போலுமிழ்ந்து நிற்கும்
இளமையோ நிலையா தேகாண். உஅ

வேறு

2636 என்றலுஞ் சுநந்தை சொல்லும் இறைவிதான் கண்டதையா
நன்றுமஃ தாக அன்றே ஆயினு மாக யானும்
ஒன்றினன் துறப்பல் என்ன ஒள்ளொளி தவழ்ந்த வெண்ணெய்க்
குன்றுபோல் யாதுமின்றிக் குழைந்துமெய்ம் மறந்து நின்றான்.

வேறு

2637 ஓருயிர் ஒழித்திரண் டுடம்பு போவபோல்
ஆரியன் ஒழியஅங் கௌவை மார்கள்தாஞ்
சீரிய துறவொடு சிவிகை ஏறினார்
மாரியின் மடந்தைமார் கண்கள் வார்ந்தவே. ௩௦

2638 நன்மயிற் பொறியின்மேற் போய நாளினும்
புன்மையுற் றழுகுரல் மயங்கிப் பூப்பரிந்(து)
இந்நகர் கால்பொரு கடலின் எங்கணும்
மன்னனின் ஆகுலம் மயங்கிற் றென்பவே. ௩௧

2639 அழுதுபின் அணிநகர் செல்ல ஆயிரந்
தொழுதகு சிவிகைகள் சூழப் போயபின்
இழுதமை எரிசுடர் விளக்கிட் டன்னவள்
பழுதில்சீர்ப் பம்மைதன் பள்ளி நண்ணினாள். ௩௨

2640 அருந்தவக் கொடிக்குழாஞ் சூழ அல்லிபோல்
இருந்தறம் பகர்வுழி இழிந்து கைதொழு(து)
ஒருங்கெமை உயக்கொண்மின் அடிகள் என்றனள்
கருங்கயல் நெடுந்தடங் கண்ணி யென்பவே. ௩௩

வேறு

2641 ஆழல் முளரி யன்ன அருந்தவம் அரிது தானஞ்
சீர்கெழு நிலத்து வித்திச் சிலநீர் கொடுப்பிற் றீந்தேன்
பார்கெழு நிலத்துள் நாறிப் பல்புகழ் ஈன்று பின்னால்
தார்கெழு தேவ ரின்பந் தையலாய் விளைக்கும் என்றாள். ௩௪

2642 அறவுரை பின்னைக் கேட்டும் அடிகள்மற் றெமக்கு வல்லே
துறவுதந் தருளு கென்னத் தூநகர் இழைத்து மேலால்
நறவிரி தாமம் நாற்றி வானகம் விதானித் தாய்ந்து
திறவிதிற் றவிசு தூபந் திருச்சுடர் விளக்கிட் டாரே. ௩௫

வேறு

2643 பாலினாற் சீறடி கழுவிப் பைந்துகில்
நூலினால் இயன்றன நுனித்த வெண்மைய
காலனைக் கண்புதைத் தாங்கு வெம்முலை
மேல்வளாய் வீக்கினார் விதியின் என்பவே. ௩௬

2644 தேனுலா மாலையுங் கலனுஞ் சிந்துபு
பால்நிலாக் கதிரன அம்மென் பைந்துகில்
தானுலாய்த் தடமுலை முற்றஞ் சூழ்ந்தரோ
வேனிலான் வருநெறி வெண்முள் வித்தினார். ௩௭

2645 முன்னுபு கீழ்த்திசை நோக்கி மொய்ம்மலர்
நன்னிறத் தவிசின்மே லிருந்த நங்கைமார்
இன்மயிர் உகுக்கிய இருந்த தோகைய
பன்மயிற் குழாமொத்தார் பாவை மார்களே. ௩௮

2646 மணியியல் சீப்பிடச் சிவக்கும் வாணுதல்
அணியிருங் கூந்தலை ஔவை மார்கள்தாம்
பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னநூல்
துணிபொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார். ௩௯

2647 கன்னியர் ஆயிரர் காய்பொற் கொம்பனார்
பொன்னியற் படலிகை ஏந்திப் பொன்மயிர்
நன்னிலம் படாமையே அடக்கி நங்கைமார்
தொன்மயிர் உகுத்தநன் மயிலிற் றோன்றினார். ௪௦

2648 பொற்குடங் திருமணி பொழியப் பெய்தபோல்
எற்புடம் பெண்ணிலாக் குணங்க ளால்நிறைத்(து)
உற்றுடன் உயிர்க்கருள் பரப்பி ஓம்பினார்
முற்றுடன் உணர்ந்தவன் அமுத முன்னினார். ௪௧

2649 புகழ்ந்துரை மகிழ்ச்சியும் பொற்பில் பல்சனம்
இகழ்ந்துரைக் கிரக்கமும் இன்றி அங்கநூல்
அகழ்ந்துகொண் டரும்பொருள் பொதிந்த நெஞ்சினார்
திகழ்ந்தெரி விளக்கெனத் திலக மாயினார். ௪௨

வேறு

2650 அலைமணிக் கவரி மான்தேர் அடுகளி யானை பாய்மா
நிலநெளி கடலந் தானை நிரந்துபூச் சுமப்ப மன்னன்
சிலைமலர் தானும் ஏந்திச் சென்றுசீர் பெருக வாழ்த்தி
இலமலர்ப் பஞ்சிப் பாதத் தெழில்முடி தீட்டி னானே. ௪௩

2651 கடியவை முன்பு செய்தேன் கண்ணினாற் காணச் சின்னாள்
அடிகளிந் நகரி னுள்ளே உறைகென அண்ணல் கூற
முடிகெழு மன்னற் கொன்று மறுமொழி கொடாது தேவி
படிமம்போன் றிருப்ப நோக்கிப் பம்மைதான் சொல்லி னாளே. ௪௪

2652 காதலன் அல்லை நீயுங் காவல நினக்கு யாமும்
ஏதில மென்று கண்டாய் இருந்தது நங்கை யென்னத்
தாதலர் தாம மார்பன் உரிமையுந் தானும் மாதோ
போதவிழ் கண்ணி யீர்த்துப் புனல்வரப் புலம்பி னானே.

2653 ஏதில னாயி னாலும் இறைவர்தம் அறத்தை நோக்கக்
காதலன் அடிக ளென்னக் கண்கனிந் துருகிக் காசில்
மாதவ மகளி ரெல்லாம் மாபெருந் தேவி யாரை
ஏதமொன் றில்லை நம்பிக் கின்னுரை கொடுமின் என்றார்.

2654 திரைவளர் இப்பி யீன்ற திருமணி யார மார்பின்
வரைவளர் சாந்த மார்ந்த வயிரக்குன் றனைய திண்தோள்
விரைவளர் கோதை வேலோய் வேண்டிய வேண்டினேமென்(று)
உரைவிளைத் திரைப்பக் காளை உள்ளகங் குளிர்ந்து சொன்னான்.

2655 அடிகளோ துறக்க வொன்றும் உற்றவர் யாதும் அல்லர்
சுடுதுயர் என்கட் செய்தாய் சுநந்தைநீ ஔவை யல்லை [னா
கொடியைநீ கொடிய செய்தாய் கொடியையோ கொடியை யென்
இடருற்றோர் சிங்கந் தாய்முன் இருந்தழு கின்ற தொத்தான்.

2656 சென்றதோ செல்க இப்பால் திருமக ளனைய நங்கை
இன்றிவள் துறப்ப யான்நின் அரசுவந் திருப்பே னாயின்
என்றெனக் கொழியும் அம்மா பழியென இலங்கு செம்பொற்
குன்றனான் குளிர்ப்பக் கூறிக் கோயில்புக் கருளு கென்றாள்.

2657 பந்தட்ட விரலி னார்தம் படாமுலை கிழித்த பைந்தார்
நந்தட்டன் தன்னை நோக்கி நங்கையா ரடிகள் சொன்னார்
நொந்திட்டு முனிய வேண்டா துறந்திலம் நும்மையென்னக்
கந்தட்ட திணிதிண் தோளான் கற்பக மலர்ந்த தொத்தான்.

2658 துறந்தஇந் நங்கை மார்தந் தூமல ரனைய பாதம்
உறைந்தஎன் சென்னிப் போதின் மிசையவென் றேப்ப ஏத்திக்
கறந்தபா லனைய கந்திக் கொம்படுத் துருவப் பைம்பூண்
பிறங்குதார் மார்பன் போந்து பெருமணக் கோயில் புக்கான்.

2659 வடிநிரை நெடிய கண்ணார் மாமியர் விடுப்ப ஏகிக்
கடிநிரை சிவிகை யேறிக் கதிர்மணிக் குடைப்பின் செல்ல
உடைதிரைப் பரவை யன்ன ஒளிறுவேல் மறவர் காப்பக்
கொடிநிரைக் கோயில் புக்கார் குங்குமக் கொடிய னாரே. ௫௨

வேறு

2660 முழுதுல கெழிலேத்து மூரிவேற் றானை மன்னன்
தொழுதகு பெருமாட்டி தூமணிப் பாவை யன்னாள்
பொழிதரு மழைமொக்குட் போகம்விட் டாசை நீக்கி
வழிவரு தவமெய்தி வைகினள் தெய்வ மன்னாள். ௫௩

2. நீர்விளையாட்டணி

வேறு

2661 உடைதிரை முத்தஞ் சிந்த ஓசனிக் கின்ற அன்னம்
படர்கதிர்த் திங்க ளாகப் பரந்துவான் பூத்த தென்னா
அடர்பிணி யவிழும் ஆம்பல் அலைகடற் கானற் சேர்ப்பன்
குடைகெழு வேந்தற் கிப்பால் உற்றது கூற லுற்றேன். ௫௪

2662 துறவின்பாற் படர்த லஞ்சித் தொத்தொளி முத்துத் தாமம்
உறைகின்ற உருவக் கோலச் சிகழிகை மகளி ரின்பத்(து)
இறைவனை மகிழ்ச்சி செய்து மயக்குவான் அமைச்சர்எண்ணி
நிறையநீர் வாவி சாந்தீங் கலந்துடன் பூரித் தாரே. ௫௫

2663 நீரணி மாட வாவி நேர்ப்புணை நிறைத்து நீள்நீர்ப்
போரணி மாலை சாந்தம் புனைமணிச் சிவிறி சுண்ணம்
வாரணி முலையி னார்க்கும் மன்னற்கும் வகுத்து வாவி
ஏரணி கொண்ட இந்நீர் இறைவகண் டருளு கென்றார். ௫௬

2664 கணமலை யரசன் மங்கை கட்டியங் கார னாகப்
பணைமுலை மகளி ரெல்லாம் பவித்திரன் படைய தாக
இணைமலர் மாலை சுண்ணம் எரிமணிச் சிவிறி யேந்திப்
புணைபுறந் தழுவித் தூநீர்ப் போர்த்தொழில் தொடங்கி னாரே.

2665 தூமலர் மாலை வாளாச் சுரும்பெழப் புடைத்துந் தேன்சோர்
தாமரைச் சதங்கை மாலை சக்கர மென்ன வீழ்த்துங்
காமரு கணைய மாகக் கண்ணிகள் ஒழுக விட்டுந்
தோமர மாகத் தொங்கல் சிதறுபு மயங்கி னாரே. ௫௮

2666 அரக்குநீர்ச் சிவிறி யேந்தி ஆயிரந் தாரை செல்லப்
பரப்பினாள் பாவை தத்தை பைந்தொடி மகளி ரெல்லாந்
தரிக்கில ராகித் தாழ்ந்து தடமுகிற் குளிக்கு மின்போல்
செருக்கிய நெடுங்கண் சேப்பச் சீதநீர் மூழ்கி னாரே. ௫௯

2667 தானக மாட மேறித் தையலார் ததும்பப் பாய்வார்
வானகத் திழியுந் தோகை மடமயிற் குழாங்கள் ஒத்தார்
தேனினம்இரியத்தெண்ணீர் குளித்தெழுந்திருவின் அன்னார்
பால்மிசைச் சொரியுந்திங்கள் பனிக்கடல் முளைத்த தொத்தார்.

2668 கண்ணிகொண்டெறியஅஞ்சிக் கால்தளர்ந் தசைந்தசோர்வார்
சுண்ணாமுஞ் சாந்தும் வீழத் தொழுதணை ரிரந்து நிற்பார்
ஒண்மலர் மாலை யோச்ச ஒசிந்துகண் பிறழ ஒல்கி
வெண்ணெயிற் குழைந்து நிற்பார் வேற்கணா ராயி னாரே.

2669 கூந்தலை ஒருகை யேந்திக் குங்குமத் தாரை பாயப்
பூந்துகில் ஒருகை தாங்கிப் புகுமிடங் காண்டல் செல்லார்
வேந்தனைச் சரணென் றெய்த விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக் கார்மழை பொழிவதொத்தான்.

2670 வீக்கினான் தாரை வெய்தாச் சந்தனத் தளிர்நன் மாலை
ஒக்கினார் கண்ணி சுண்ணம் உடற்றினார் உருவச் சரீந்திற்
றூக்கமழ் துகிலுந் தோடும் மாலையுஞ் சொரியப் போர்தோற்
ஆக்கிய அநங்கன் சேனை ஆறலா றுயிற் றன்றே. [(று)

2671 அன்னங்க ளாகி அம்பூந் தாமரை யல்லி மேய்வார்
பொன்மயி லாகிக் கூந்தல் போர்த்தனர் குனிந்து நிற்பார்
இன்மலர்க் கமல மாகிப் பூமுகம் பொருந்த வைப்பார்
மின்னுமே கலையுந் தோடுங் கொடுத்தடி தொழுது நிற்பார்.

2672 பண்ணுரை மகளிர் மாலை பைந்துகில் கவர்ந்து கொள்ளக்
கண்ணுரை மகளிர் சோர்ந்து காரிருள் திவளு மின்போல்
பெண்ணுரைப் பிடிக்கைக் கூந்தற் பொன்னரி மாலை தாழ
வெண்ணுரை உடுத்துநின்றார் வேந்தன்நோக் குண்ணநின்றான்.

2673 தன்படை யுடையத் தத்தை சந்தனத் தாரை வீக்கி
ஒன்பது முகத்தி னோடி உறுவலி அகலம் பாயப்
பொன்படு சுணங்கு போர்த்த பொங்கிள முலையிற் றாவான்
முன்படு குலிகத் தாரை முழுவலி முறுக்க லுற்றான். ௬௬

2674 மெய்ப்படு தாரை வீழின் நோமிவட் கென்ன அஞ்சிக்
கைப்படை மன்னன் நிற்பக் கதுப்பயல் மாலை வாங்கிச்
செப்பட முன்கை யாப்பத் திருமகன் தொலைந்து நின்றான்
பைப்புடை யல்கு லாளைப் பாழியாற் படுக்க லுற்றே. ௬௭

2675 அடுத்தசாந் தலங்கல் சுண்ணம் அரும்புனல் கவர அஞ்சி
உடுத்தபட் டொளிப்ப ஒண்பொன் மேகலை யொன்றும்பேசா
திடப்பமற் றரசன் நோக்கிக் கெட்டதுன் துகில்மற் றென்ன
மடத்தகை நாணிப் புல்லி மின்னுச்சேர் பரிதி யொத்தான்.

2676 விம்மகிற் புகையில் மேவி உடம்பினை வேது செய்து
கொம்மென நாவி நாறுங் கூந்தலை உலர்த்தி நொய்ய
அம்மல ரோமப் பூம்பட் டுடுத்தபின் அனிச்ச மாலை
செம்மலர்த் திருவி னன்னார் சிகழிகைச் சேர்த்தி னாரே. ௬௯

3. இருது நுகர்வு

வேறு

2677 கார்கொள் குன்றன கண்கவர் தோளினன்
நீர்கொள் நீரணி நின்று கனற்றலின்
வார்கொள் மென்முலை வம்பணி கோதையார்
ஏர்கொள் சாயலுண் டாடுமற் றென்பவே. ௭0

முதுவேனில்

2678 வேனில் வாய்க்கதிர் வெம்பலின் மேனிலைத்
தேனு லாங்குளிர் சந்தனச் சேற்றிடைத்
தானு லாய்த்தட மென்முலைத் தங்கினன்
பால்நி லாக்கதிர் பாய்தரு பள்ளியே. ௭௧

2679 முழுது மெய்ந்நல மூழ்கலின் நீர்சுமந்(து)
எழுது கண்ணிரங் கப்புரு வக்கொடி
தொழுவ போல்முரி யச்சொரி பூஞ்சிகை
அழுவ போன்றணி நித்திலம் உக்கவே. ௭௨

2680 எழுத்தின் பாடலும் ஆடலும் என்றிவை
பழுத்த கற்பகப் பன்மணிக் கொம்பனார்
அழுத்தி யன்ன அணிவளைத் தோள்மிசைக்
கழிக்கும் ஐங்கணைக் காமற்குங் காமனே. ௭௩

கார்

2681 நீர்து ளும்பு வயிற்றின் நிழல்முகில்
பார்து ளும்ப முழங்கலிற் பல்கலை
ஏர்து ளும்ப வெரீஇயிறை வற்றழீஇக்
கார்து ளும்புகொம் பிற்கவின் எய்தினர். ௭௪

2682 இழிந்து கீழ்நிலை இன்னகிற் சேக்கைமேற்
கிழிந்து சாந்தழி யக்கிளர் மென்முலை
தொழிந்து மட்டொழு கத்துதை தார்பொர
அழிந்த மேகலை அஞ்சிலம் பார்த்தவே. ௭௫

2683 தேனி றாலன தீஞ்சுவை யின்னடை
ஆன றாமுலைப் பாலமு தல்லதொன்
றூனு மேவலர் அச்சுற வெய்திய
மான றாமட நோக்கியர் என்பவே. ௭௬

கூதிர்

வேறு

2684 கூதிர்வந் துலாவலிற் குவவு மென்முலை
வேதுசெய் சாந்தமும் வெய்ய தேறலும்
போதவிழ் மாலையும் புகையுஞ் சுண்ணமுங்
காதலித் தார்களுங் குவளைக் கண்ணினார். எஎ

2685 சுரும்புநின் றருமலர்த் தொங்க லார்கலின்
அரும்புகின் றூர்கடல் அமிர்த மேயெனு
விரும்புகின் றூன்இள வேனில் வேந்தன்ஐஞ்
சரங்கள்சென் றழுத்தலிற் றரணி மன்னனே. எஅ

2686 குழைமுகம் இடவயிற் கோட்டி ஏந்திய
அழல்நிறத் தேறலுண் மதிகண் டையென
நிழல்முகப் பகைகெடப் பருகி நீள்விசும்(பு)
உழல்கென நோக்குவாள் மதிகண் டூடினாள். எகூ

2687 பருகினேற் கொளித்துநீ பசலை நோயொடும்
உருகிப்போ யின்னுமற் றுளையென் றுள்சுடக்
குருதிகண் கொளக்குண மாலை ஊடினாள்
உருவத்தார் உறத்தழீஇ உடற்றி நீக்குவான். அ௦

2688 நங்கைநின் முகவொளி எறிப்ப நன்மதி
அங்கதோ உள்கறுத் தழகிற் றேய்ந்தது
மங்கைநின் மனத்தினால் வருந்தல் என்றவள்
பொங்கிள வனமுலை பொருந்தி னானரோ. அக

முன்பனி

வேறு

2689 கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்க யப்பகைப் பருவம் வந்தென
எங்கும் இல்லன எலிம யிர்த்தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார். அஉ

2690 கூந்த லின்புகைக் குவவு மென்முலைச்
சாந்த மேந்திய தமால மாலையும்

ஆய்ந்து தாங்கினர் அரவ மேகலை
காய்ந்து நித்திலங் கடிய சிந்தினர். ௮௩

2691 அளிந்த தீம்பழம் இஞ்சி யார்ந்தநீர்
விளைந்த வல்விளை வரிசி வேரியும்
வளைந்த மின்னனார் மகிழ்ந்து சண்பகம்
உளைந்து மல்லிகை ஒலியல் சூடினர். ௮௪

2692 தொத்து டைம்மலர்த் தொங்கல் கண்பொர
முத்து டைம்முலைக் கண்கள் கொந்தளன்(று)
எய்த்த டிச்சிலம் பிரங்கும் இன்குரல்
கைத்தெ டுத்தலிற் காமந் தாழ்ந்ததே. ௮௫

2693 பொன்ப னிப்புறம் பொற்பி னர்நலம்
அன்பன் இத்தலை அணங்க அத்தலை
முன்ப னித்தலை முழுதும் நீங்கிப்போய்ப்
பின்ப னித்தலை பேண வந்ததே. ௮௬

பின்பனி

2694 வெள்ளி லோத்திரம் விளங்கும் வெண்மலர்க்
கள்செய் மாலையார் கண்கொ ளாத்துகில்
அள்ளி யேந்திய அரத்த அல்குலார்
ஒள்ளெ ரிம்மணி உருவப் பூணினர். ௮௭

2695 செங்கெ ருப்புணுஞ் செவ்வெ லிம்மயிர்
அங்கெ ருப்பள வாய்பொற் கம்பலம்
மன்னர் உய்ப்பன மகிழ்ந்து தங்கினர்
என்ன ரொப்புமில் லவர்கள் என்பவே. ௮௮

2696 ஆட லின்சுவை அமர்ந்து நாடொறும்
பாடல் மெய்ந்நிறீஇப் பருகிப் பண்சுவைத்(து)
ஓடு மாமதி யுரிஞ்சும் ஒண்பொனின்
மாடக் கீழ்நிலை மகிழ்ந்து வைகினர். ௮௯

வேறு

2697 புரிக்குழல் மடந்தையர் பொம்மல் வெம்முலை
திருக்கழற் குரிசில்தார் திளைக்கும் போரினுட்
செருக்குரற் சிறுபறை சிலம்பு கிண்கிணி
அரிப்பறை மேகலை யாகி ஆர்த்தவே. ௯0

2698 ஏச்செயாச் சிலைநுதல் ஏழை மார்முலைத்
தூச்செயாக் குங்குமந் துதைந்த வண்டினம்
வாய்ச்சியால் இட்டிகை செத்து மாந்தர்தம்
பூச்செயா மேனிபோற் பொலிந்து தோன்றுமே. கூக

இளவேனில்

வேறு

2699 குரவம் பாவை கொப்புளித்துக் குளிர்சங் கீர்ந்த துகளேபோல்
மரவம் பாவை வயிறுரப் பருகி வாடை யதுநடப்ப
விரவித் தென்றல் விடு தூதா வேனி லாற்கு விருந்தேந்தி
வரவுநோக்கிவயாமரங்கள் இலையுழ்த்திணரீன் றலர்ந்தனவே.

2700 இளிவாய்ப் பிரசம் யாழாக இருங்கட் டும்பி குழலாகக்
களிவாய்க்குயில்கள் முழவாகக் கடிபூம் பொழில்கள்அரங்காகத்
தளிர்போல்மடவார் தணந்தார்தந் தடந்தோள் வளையும்மாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில் விருந்தா ஆடல்தொடங்கினன்.

2701 வேனிலாடும் விருப்பினுல் வியன்காய் நெல்லிச் சாந்தரைத்து
நானவெண்ணெய் கதுப்புரைத்து நறுநீ ராடி அமிர்துயிர்க்குந்
தேன ரகிலின் புகைசேர்த்தி வகுத்து நாவிக் குழம்பளைஇ
ஆனுப்பளித நறுஞ்சுண்ணம் உகிரின் உழுதாங்கணிந்தாரே.

2702 முத்தார் மருப்பி னிடைவளைத்த
முரண்கொள் யானைத் தடக்கையின்
ஒத்தே றுடைய மல்லிகையின்
ஒலியல் மாலை யுறுப்படக்கி
வைத்தார் மணிநூற் றனவைம்பால்
வளைய முடித்து வான்கழுநீர்
உய்த்தாங் கதனுட் கொளவழுத்திக்
குவளைச் செவித்தா றுறுத்தாரே. கூரு

2703 புகையார் வண்ணப் பட்டுடுத்துப்
பொன்னங் கலைகள் புறஞ்சூழ்ந்து
நகையார் கவுள கிண்கிணியுஞ்
சிலம்பும் நாய்நாச் சீறடிமேற்

பகைகொண் டார்போற் சுமாஅய்க்கண்பின்
பருஉக்காம் பணைய கணைக்கால்சூழ்ந்
தகையார்ந் திலங்கும் பரியகந்
தாமே கவினிச் சேர்த்தினார். ௯௬

2704 பிடிக்கைவென்று கடைந்தனபோற்
பஞ்சி யார்ந்த திரள்குறங்கு
சூடித்துக் கிடந்த கவின்வளருங்
காய்பொன் மகரங் கதிர்முலைமேல்
உடுத்த சாந்தின் மிசைச்செக்கர்
ஒளிகொள் முந்நாட் பிறையேய்ப்பத்
துடிக்குங் கதிர்சேர் துணைமுத்தந்
திருவில் உமிழ்ந்து சுடர்ந்தனவே. ௯௭

2705 குழியப் பெரிய கோல்முன்கை
மணியார் காந்தட் குவிவிரல்மேற்
கழியப் பெரிய அருவிலைய
சிறிய மணிமோ திரங்கனலத்
தழுவப் பெரிய தடமென்தோட்
சலாகை மின்னத் தாழ்ந்திலங்கும்
விழிகண் மகர குண்டலமுந்
தோடுங் காதில் மிளிர்ந்தனவே. ௯௮

2706 நாணுள் ளிட்டுச் சுடர்வீசு
நன்மா ணிக்கம் நகுதாலி
பேணி நல்லார் கழுத்தணிந்து
பெருங்கண் கருமை விருந்தூட்டி
நீணீர் முத்த நிரைமுறுவல்
கடுச்சுட் டுரிஞ்சக் கதிருமிழ்ந்து
தோணீர்க் கடலுட் பவளவாய்த்
தொண்டைக் கனிகள் தொழுதனவே. ௯௯

2707 மாலை மகளிர் அணிந்ததற்பின்
பஞ்ச வாசங் கவுட்கொண்டு
சோலை மஞ்ஞைத் தொழுதிபோல்
தோகை செம்பொன் நிலந்திவளக்

காலிற் சிலம்புங் கிண்கிணியுங்
கலையும் ஏங்கக் கதிர்வேலும்
நீலக் குவளை நிரையும்போற்
கண்ணார் காவி விருந்தாரே. ௧௦௦

2708 மணிவண் டொன்றே நலம்பருக
மலர்ந்த செந்தா மரைத்தடம்போல்
அணிவேல் மன்னன் நலம்பருக
அலர்ந்த வம்பார் மழைக்கண்ணார்
பணியார் பண்ணுப் பிடியூர்ந்து
பருஉக்காற் செந்நெற் கதிர்சூடித்
தணியார் கழனி விளையாடித்
தகைபா ராட்டத் தங்கினார். ௧௦௧

4. புதல்வர்ப் பேறு

2709 எண்ணற் கரிய குங்குமச்சேற்
றெழுந்து நான நீர்வளர்ந்து
வண்ணக் குவளை மலரளைஇ
மணிக்கோல் வள்ளத் தவனேந்த
உண்ணற் கினிய மதுமகிழ்ந்தார்
ஒலியல் மாலை புறந்தாழக்
கண்ணக் கழுநீர் மெல்விரலாற்
கிழித்து மோந்தார் கனிவாயார். ௧௦௨

2710 இவ்வா றெங்கும் விளையாடி
இளையான் மார்பின் நலம்பருகிச்
செவ்வாய் விளர்த்துத் தோள்மெலிந்து
செய்ய முலையின் முகங்கருகி
அவ்வாய் வயிறு கால்வீங்கி
அணிச்ச மலரும் பொறையாகி
ஒவ்வாப் பஞ்சி மெல்லணைமேல்
அசைந்தார் ஒண்பொற் கொடியன்னார். ௧௦௩

2711 தீம்பால் சுமந்து முலைவீங்கித்
திருமுத் தீன்ற வலம்புரிபோற்
றாம்பேர் தோளார் களிறீன்றார்
கடைகள் தோறுங் கடிமுரசங்

தாம்பாற் பட்ட தனிச்செங்கோற்
றரணி மன்னன் மகிழ்தூங்கி
ஓம்பா தொண்பொன் சொரிமாரி
உலகம் உண்ணச் சிதறினான். க0ச

2712 காடி யாட்டித் தராய்ச்சாறுங்
கன்னல் மணியும் நறுநெய்யுங்
கூடச் செம்பொன் கொளத்தேய்த்துக்
கொண்டு நாளும் வாயுறீஇப்
பாடற் கினிய பகுவாயுங்
கண்ணும் பெருக உகிருறுத்தித்
தேடித் தீந்தேன் திப்பிலிதேய்த்
தண்ணா வுரிஞ்சி மூக்குயர்த்தார். க0ரு

2713 யாழுங் குழலும் மணிமுழவும்
அரங்க மெல்லாம் பரந்திசைப்பத்
தோழன் விண்ணோன் அவட்டோன்றி
வயங்காக் கூத்து வயங்கியபின்
காழார் வெள்ளி மலைமேலுங்
காவல் மன்னர் கடிநகர்க்கும்
வீழா ஓகை அவன்விட்டான்
விண்பெற் றாரின் விரும்பினார். க0சு

2714 தத்தம் நிலனும் உயர்விழிவும்
பகையும் நட்புந் தந்தசையும்
வைத்து வழுவில் சாதகமும்
வகுத்த பின்னர்த் தொகுத்தநாட்
சச்சந் தணனே சுதஞ்சணனே
தரணி கந்துக் கடன்விசயன்
தத்தன் பரதன் கோவிந்தன்
என்று நாமந் தரித்தாரே. க0எ

2715 ஐயாண் டெய்தி மையாடி
அறிந்தார் கலைகள் படைநவின்றார்
கொய்பூ மாலை குழல்மின்னுங்
கொழும்பொற் றோடுங் குண்டலமும்

ஐயன் மார்கள் துளக்கின்றி
ஆலுங் கலிமா வெகுண்டூர்ந்தார்
மொய்யா ரலங்கல் மார்பற்கு
முப்ப தாகி நிறைந்ததே. கoஅ

5. சோலை நுகர்வு

வேறு

2716 பூநிறை செய்த செம்பொற் கோடிகம் புரையும் அல்குல்
வீநிறை கொடிய னாரும் வேந்தனும் இருந்த போழ்தில்
தூநிறத் துகிலின் மூடிப் படலிகை கொண்டு வாழ்த்தி
மாநிறத் தளிர்நன் மேனி மல்லிகை மாலை சொன்னாள்.

2717 தடமுலை முகங்கள் சாடிச் சாந்தகங் கிழிந்த மார்பிற்
குடவரை யனைய கோலக் குங்குமக் குவவுத் தோளாய்
தொடைமலர் வெறுக்கை யேந்தித் துன்னினன் வேனில்வேந்தன்
இடமது காண்க என்றாள் இறைவனும் எழுக என்றான்.

2718 முடித்தலை முத்த மின்னு முகிழ்முலை முற்ற மெல்லாம் [மூக்
பொடித்துப்பொன் பிதிர்ந்த ஆகத் திளையவர் புகழ்ந்து சூ
கடுத்தவாள் கனல வேந்திக் கன்னியர் காவல் ஓம்ப
இடிக்குரற் சீயம் ஒப்பான் இழையொளி விளங்கப் புக்கான்.

2719 இலங்குபொன் னார மார்பின் இந்திரன் உரிமை சூழக்
கலந்தபொற் காவு காண்பான் காமுறப் புக்க தேபோல்
அலங்குபொற் கொம்ப னாரும் மன்னனும் ஆட மாதோ
நலங்கவின் கொண்ட காவும் நல்லொளி நந்திற் றன்றே.

2720 புலவியுள் மகளிர் கூந்தற் போதுகுக் கின்ற தேபோற்
குலவிய சிறகர்ச் செங்கட் கருங்குயில் குடையக் கொம்பர்
நிலவிய தாது பொங்க நீள்மலர் மணலிற் போர்த்துக்
கலவியிற் படுத்த காய்பொற் கம்பலம் ஒத்த தன்றே. ககரு

2721 காசுநூல் பரிந்து சிந்திக் கம்பலத் துக்க தேபோல்
மூசுதேன் வண்டு மொய்த்து முருகுண்டு துயில மஞ்ஞை
மாசில்பூம் பள்ளி வைகி வளர்ந்தெழு மகளி ரொப்பத்
தூசுபோற் சிறக ரன்னந் தொழுதியோ டிரியச் சேர்ந்தார்.

2722 காதிக்கண் அரிந்து வென்ற உலகுணர் கடவுள் காலத்(து)
ஆதிக்கண் மரங்கள் போன்ற அஞ்சொலீர் இதனி னுங்கள்
காதலிற் காண லுற்ற இடமெலாங் காண்மின் என்றான்
நீதிக்கண் நின்ற செங்கோல் நிலவுவீற் றிருந்த பூணான்.

2723 வானவர் மகளி ரென்ன வார்கயிற் றாசல் ஊர்ந்துங்
கானவர் மகளி ரென்னக் கடிமலர் நல்ல கொய்துந்
தேனிமிர் குன்ற மேறிச் சிலம்பெதிர் சென்று கூயுங்
கோனமர் மகளிர் கானிற் குழாமயில் பிரிவ தொத்தார்.

2724 நெடுவரை யருவி யாடிச் சந்தனம் நிவந்த சோலைப்
படுமதங் கவரும் வண்டு பைந்தளிர்க் கவரி ஏந்திக்
பிடிமகிழ்ந் தோப்ப நின்ற பெருங்களிற் றரசு நோக்கி
வடிமதர் மழைக்கண் நல்லார் மன்னனை மகிழ்ந்து நின்றார்.

2725 கொழுமடற் குமரி வாழைத் துகிற்சுருள் கொண்டு தோன்
செழுமலர்க் காம வல்லி செருக்கயல் சிறப்ப மாகக் [றச்
கழுமணிச் செம்பொ னாழிக் கைவிரல் உகிரிற் கிள்ளி
விழுமுலைச் சூட்டி நின்றார் விண்ணவர் மகளி ரொத்தார்.

2726 கடைதயிர்க் குரல வேங்கை கண்ணுறச் சென்று நண்ணி
மிடைமயிர்க் கவரி நல்லான் கன்றுணக் கண்டு நிற்பார் [றார்
புடைதிரண் டெழுந்த பொம்மல் வனமுலை பொறுக்க லாற்
நடைமெலிந் திகலி அன்ன நன்னடை நயந்து நிற்பார்.கக௯

2727 எம்வயின் வருக வேந்தன் இங்கென இரங்கு நல்யாழ் [ழச்
வெம்மையின் விழையப் பண்ணி எஃகுநுண் செவிகள் வீ
செம்மையிற் கனிந்த காமத் தூதுவிட் டோத முத்தம்
வெம்முலை மகளிர் வீழ்பூம் பொதும்பருள் விதும்பி னாரே.

2728 பிடிமருள் நடையி னார்தம் பெருங்கவின் குழையப் புல்லித்
தொடைமலர்க் கண்ணி சேர்த்திச் சுரும்புண மலர்ந்த மாலை
உடைமது ஒழுகச் சூட்டி உருவத்தார் குழைய வைகிக்
கடிமலர் மகளி ரொத்தார் காவலன் களிவண் டொத்தான்.

2729 இழைந்தவர் நலத்தை எய்தி இனந்திரி ஏறு போலக்
குழைந்ததார் நெகிழ்ந்த தானைக் கொற்றவன் பெயர்ந்து போகி
வழிந்துதேன் வார்ந்து சோரும் வருக்கையின் நீழல் சேர்ந்தான்
விழைந்தஅக் கடுவன் ஆங்கோர் மந்தியை விளித்த தன்றே.

2730 அளித்திள மந்தி தன்னை ஆர்வத்தால் விடாதுபுல்லி[யார்ந்து
ஒளித்தொரு பொதும்பர்ச் சேர்ந்தாங் கொருசிறை மகிழ்ச்சி
தளிர்த்தலைப் பொதும்பர் நீங்கித் தம்மினம் இரண்டுஞ் சேர்ந்த
களித்தலைக் கூட்டங் காதல் மந்திகண் டிருந்த தன்றே.

2731 பரத்தையர்த் தோய்ந்த மார்பம்
பத்தினி மகளிர் தீண்டார்
திருத்தகைத் தன்று தெண்ணீர்
ஆடிநீர் வம்மின் என்ன
உரைத்ததென் மனத்தி லில்லை
உயர்வரைத் தேனை யுண்பார்
வருத்துங்காஞ் சிரமும் வேம்பும்
வாய்க்கொள்வார் யாவர் சொல்லாய். கஉ௭

2732 ஈங்கினி என்னை நோக்கி எவன்செய்தி எனக்கு வாணாள்
நீங்கிற்றுச் சிறிது நிற்பிற் காண்டியால் நீயும் என்னத்
தூங்கித்தான் துளங்க மந்தி தொழுத்தையேன் செய்த தென்று
தாங்குபு தழுவிக் கொண்டு தன்னைத்தான் பழித்த தன்றே.

2733 கண்ணினுற் குற்றங் கண்டுங் காதலன் தெளிப்பத் தேறிப்
பெண்மையாற் பழித்த மந்தி பெருமகிழ் உவகை செய்வான்
திண்ணிலைப் பலவின் தேங்கொள் பெரும்பழங் கொண்டு கீறிப்
பண்ணுறு சுளைகள் கையாற் பகுத்துணக் கொடுத்த தன்றே.

2734 இன்கனி கவரு மந்தி கடுவனோ டிரிய ஆட்டி
நன்கனி சிலதன் உண்ண நச்சுவேல் மன்னன் நோக்கி
என்பொடு மிடைந்த காமம் இழிபொடு வெறுத்து நின்றான்
அன்புடை அரிவை கூட்டம் பிறனுழைக் கண்ட தொத்தே.

2735 கைப்பழம் இழந்த மந்தி கட்டியங் கார னொத்த(து)
இப்பழந் துரந்து கொண்ட சிலதனும் என்னை யொத்தான்
இப்பழம் இன்று போகத் தின்பமே போலும் என்று
மெய்ப்பட உணர்வு தோன்றி மீட்டிது கூறி னானே. கஉஅ

2736 மெலியவர் பெற்ற செல்வம் வேரொடுங் கீழ்ந்து வெளவி
வலியவர் கொண்டு மேலை வரம்பிகந் தரம்பு செய்யுங்
கலியுது பிறவி கண்டாம் காலத்தால் அடங்கி நோற்று
நலிவிலா உலக மெய்தல் நல்லதே போலும் என்றான். கஉகூ

2737 நல்வினை யென்னும் நன்பொற் கற்பக மகளி ரென்னும்
பல்பழ மணிக்கொம் பீன்று பிரிசில்வண் டுண்ணப் பூத்துச்
செல்வப்பொற் சிறுவ ரென்னுந் தாமங்கள் தாழ்ந்து நின்ற(து)
ஒல்கிப்போம் பாவக் காற்றின் ஒழிகஇப் புணர்ச்சி என்றான்.

2738 வேட்கைமை யென்னும் நாவிற் காமவெந் தேறல் மாந்தி
மாட்சியொன் றானும் இன்றி மயங்கினேற் கிருளை நீங்கக்
காட்டினார் தேவ ராவர் கைவிளக் கதனை யென்று
தோட்டியாற் றொடக்கப் பட்ட சொரிமதக் களிற்றின் மீண்டான்.

2739 கைந்நிறை எஃகம் ஏந்திக் கனமணிக் குழைவில் வீச
மைந்நிற மணிவண் டார்ப்ப வார்தளிர் கவரி வீச [தான்
மெய்ந்நெறி மகிழ்ந்து நின்றான் வேனில்வாய்க் காம னைத்
தொய்ந்நிற மாலை வேய்ந்து முருகுலா முடியி னானே. கஙஉ

2740 நடுச்சிகை முத்துத் தாமம் வாணுதல் நான்று நக்கப்
படுத்தனர் பைம்பொற் கட்டில் பாடினர் கீதந் தூபம்
எடுத்தனர் எழுந்து தேனார் எரிமணி வீணை ஆர்த்த
கொடிப்பல பூத்துச் சூழ்ந்த குங்குமக் குன்றம் ஒத்தான்.

2741 மெள்ளவே புருவங் கோலி விலங்கிக்கண் பிறழ நோக்கி
முள்ளெயி றிலங்கச் செவ்வாய் முறுவற்றா தாதி யாக [ந்த
அள்ளிக்கொண் டுண்ணக் காமங் கனிவித்தார் பணிவிற் றாழ்
வள்ளிதழ் மாலை மார்பன் வச்சிர மனத்தன் ஆனான். கஙச

2742 முலைமுகஞ் சுமந்த முத்தத் தொத்தொளிர் மாலை யாரும்
மலைமுகந் தனைய மார்பின் மன்னனும் இருந்த போழ்திற்
கொலைமுகக் களிற னாற்கு நாழிகை சென்று கூறக்
கலைமுக மல்லர் புல்லிக் கமழும்நீ ராட்டி னாரே. கஙரு

2743 வெண்துகில் மாலை சாந்தம் விழுக்கலம் விதியிற் சேர்த்தி
நுண்துகிற் றிரைகள் சேர்ந்த நூற்றுலா மண்ட பத்துக்
கண்திரள் முத்த மென்றோட் காவிக்கண் மகளிர் போற்றி
எண்திசை மருங்கும் ஏத்த இனிதினின் ஏறி னானே. கஙசு

2744 நெய்வளங் கனிந்து வாசம் நிறைந்துவான் வறைகள் ஆர்ந்து
குய்வளங் கழுமி வெம்மைத் தீஞ்சுவை குன்ற லின்றி
ஐவருள் ஒருவ னன்ன அடிசில்நூல் மடையன் ஏந்த
மைவரை மாலை மார்பன் வான்சுவை அமிர்தம் உண்டான்.

2745 கைப்பொடி சாந்தம் ஏந்திக் கரகநீர் விதியிற் பூசி
மைப்படு மழைக்கண் நல்லார் மணிச்செப்பின் வாசம் நீட்டச்
செப்படு பஞ்சவாசந் திசையெலாங் கமழ வாய்க்கொண்(டு)
ஒப்புடை உறுவர் கோயில் வணங்குதும் எழுக என்றான்.

6. அறிவர் சிறப்பு

2746 ஒருபகல் பூசி னோராண் டொழிவின்றி விடாது நாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற்கரும் வாசவெண்ணெய்
அரிவையர் பூசி யாடி அகிற்புகை யாவி ஊட்டித்
திருவிழை துகிலும் பூணுந் திறப்படத் தாங்கி னாரே.

2747 நற்றவஞ் செய்த வீரர் உளவழி நயந்து நாடும்
பொற்றதா மரையி னுளிற் பூஞ்சிகை முத்தம் மின்னக்
கொற்றவற் றொழுது சேர்ந்தார் கொம்பனார் வாமன் கோயில்
மற்றவன் மகிழ்ந்து புக்கு மணிமுடி துளக்கி னானே. ௧௪௰

வேறு

2748 கடிமலர்ப் பிண்டிக் கடவுள் கமலத்(து)
அடிமலர் சூடி யவர்உலகில் யாரே
அடிமலர் சூடி யவர்உலக மேத்த
வடிமலர் தூவ வருகின்றார் அன்றே. ௧௪௧

2749 முத்தணிந்த முக்குடைக்கீழ் மூர்த்தி திருவடியைப்
பத்திமையால் நாளும் பணிகின்றார் யாரே
பத்திமையால் நாளும் பணிவார் பகட்டெருத்தின்
நித்தில வெண்குடைக்கீழ் நீங்காதார் அன்றே. ௧௪௨

2750 கருமக் கடல்கடந்த கைவலச் செல்வன்
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் யாரே
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் வான்தோய்
திருமுத் தவிராழிச் செல்வரே அன்றே. ௧௪௩

வேறு

2751 வண்ண மாமலர் மாலை வாய்ந்தன
சுண்ணங் குங்குமந் தூமத் தாற்புனைந்(து)
அண்ணல் சேவடி அருச்சித் தானரோ
விண்ணில் இன்பமே விழைந்த வேட்கையான். ௧௪௪

7. அறவுரை

2752 இலங்கு குங்கும மார்பன் ஏந்துசீர்
நலங்கொள் சாரணர் நாதன் கோயிலை
வலங்கொண் டாய்மலர்ப் பிண்டி மாநிழற்
கலந்த கல்மிசைக் கண்டு வாழ்த்தினன். கசரு

2753 உரிமை தன்னொடும் வலங்கொண் டோங்குசீர்த்
திருமகன் பணிந் திருப்பச் செய்தவர்
இருநி லம்மனற் கின்ப மேயெனப்
பெருநி லம்மனன் பெரிதும் வாழ்த்தினன். கசசா

2754 தெருள லேன்செய்த தீவி னையெனும்
இருள்வி லங்கநின் றெரியும் நீள்சுடர்
அருளு மின்னெனக் கடிகள் என்றனன்
மருள்வி லங்கிய மன்னர் மன்னனே. கசஎ

வேறு

2755 பாற்கடற் பனிமதி பரவைத் தீங்கதிர்
மேற்பட மிகநனி சொரிவ தொப்பவே
நூற்கடல் மாதவன் நுனித்த நல்லறங்
கோற்கடன் மன்னனுக் குரைக்கும் என்பவே. கசஅ

வேறு

2756 தேனெய் தோய்ந்தன தீவிய திருமணி யனைய
வானின் உய்ப்பன வரகதி தருவன மதியோர்
ஏனை யாவரும் அமுதெனப் பருகுவ புகல்வ
மான மில்லுயர் மணிவண்ணன் நுவலிய வலித்தான்.

2757 அருமை யின்னெய்தும் யாக்கையும் யாக்கைய தழிவுந்
திருமெய் நீங்கிய துன்பமுந் தெளிபொருட் டுணிவுங்
குருமை யெய்திய குணநிலை கொடைபெறு பயனும்
பெருமை வீட்டொடும் பேசுவல் கேளிது பெரியோய்.

8. பெறுதற் கருமை

2758 பர்வை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுள்
திரைசெய் தென்கடல் இட்டதோர் நோன்கழி சிவணி
அரச அத்துளை யகவயிற் செறிந்தென அரிதால்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே.

2759 விண்டு வேய்நரல் ஊன்விளை கானவ ரிடனுங்
கொண்டு கூர்ம்பனி குலைத்திடு நிலைக்களக் குறும்பும்
உண்டு நீரென உரையினும் அரியனை ஒருவி
மண்டு தீம்புனல் வளங்கெழு நாடெய்தல் அரிதே. ௧௫௨

2760 வில்லின் மாக்கொன்று வெண்ணிணத் தடிவிளிம் படுத்த
பல்லி னார்களும் படுகடற் பரதவர் முதலா
எல்லை நீங்கிய இழிதொழில் இழிகுலம் ஒருவி
நல்ல தொல்குலம் பெறுதலும் நரபதி அரிதே. ௧௫௩

2761 கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென வழிநாள்
அருவி போற்றொடர்ந் தருதன அரும்பிணி அழலுட்
கருவிற் காய்த்திய கட்டளைப் படிமையிற் பிழையா
உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே. ௧௫௪

2762 காமன் அன்னதோர் கழிவனப் பறிவொடு பெறினும்
நாம நாற்கதி நவைதரு நெறிபல ஒருவி
வாமன் நூல்நெறி வழுவறத் தழுவின ரொழுகல்
ஏம வெண்குடை இறைவமற் றியாவதும் அரிதே. ௧௫௫

9. நிலையாமை

2763 இன்ன தன்மையின் அருமையின் எய்திய பொழுதே
பொன்னும் வெள்ளியும் புணர்ந்தென வயிற்றகம் பொருந்தி
மின்னும் மொக்குளு மெனநனி வீயினும் வீயும்
பின்னை வெண்ணிணயிற் றிரண்டபின் பிழைக்கவும் பெறுமே.

2764 வெண்ணெ யாயது வீங்குபு கூன்புற யாமை
வண்ணம் எய்தலும் வழுக்கவும் பெறுமது வழுக்கா(து)
ஒண்மை வாண்மதி உருவொடு திருவெனத் தோன்றிக்
கண்ண னாழக் கவிழினுங் கவிழுமற் றறிநீ. ௧௫௭

2765 அழித வின்றியங் கருநிதி இரவலர்க் கார்த்தி
முழுதும் பேர்பெறும் எல்லையுள் முரியினும் முரியும்
வழுவில் பொய்கையுள் மலரென வளர்ந்துமை யாடிக்
கெழீஇயி னாரொடுங் கிளையழக் கெடுதலுஞ் செயுமே. ௧௫௮

2766 கெடுதல் அவ்வழி இல்லெனிற் கேள்விகள் துறைபோய்
வடிகொள் கண்ணியர் மனங்குழைந் தநங்கனென் றிரங்கக்
கொடையுங் கோலமுங் குழகுந்தம் அழகுங் கண்டேத்த
விடையிற் செல்வுழி விளியினும் விளியுமற் றறிநீ. ௧௫௯

2767 எரிபொன் மேகலை இலங்கரிச் சிலம்பொடு சிலம்பும்
அரிபொற் கிண்கிணி அணியிழை அரிவையர்ப் புணர்ந்து
தெரிவில் போகத்துக் கூற்றுவன் செகுத்திடச் சிதைந்து
முரியும் பல்சனம் முகம்புடைத் தகங்குழைந் தழவே. ௧௬௦

2768 கோதை மங்கையர் குவிமுலைத் தடத்திடைக் குளித்துக்
காதல் மக்களைக் கண்டுவந் தினிதினிற் கழிப்பப்
பேது செய்பிணிப் பெரும்புலி பாய்ந்திடப் பிணமாம்
ஓத மாக்கடல் உடைகலத் தவருற்ற துறவே. ௧௬௧

2769 காமம் பைப்பயக் கழியத்தங் கடைப்பிடி சுருங்கி
ஊமர் போலத்தம் உரையவிந் துறுப்பினில் உரையாத்
தூய்மை யில்குளந் தூம்புவிட் டாம்பொருள் உணர்த்தி
ஈமம் ஏறுதல் ஒருதலை இகலமர் கடந்தோய். ௧௬௨

2770 தேங்கொள் பூங்கண்ணித் திருமுடித் திலகவெண் குடையோய்
ஈங்கி தன்றியும் இமையவர் அமையலர்க் கடந்த
தாங்கு மாவண்கைச் சக்கர மிக்குயர் பிறரும்
யாங்க ணாரவர் ஊரொடு பேரமக் குரையாய். ௧௬௩

10. நரககதித் துன்பம்

வேறு

2771 வெவ்வினை செய்யு மாந்தர் உயிரெனும் நிலத்து வித்தி
அவ்வினை விளையுள் உண்ணும் அவ்விடத் தவர்கள் துன்பம்
இவ்வென உரைத்து மென்று நினைப்பினும் பனிக்கு முள்ளஞ்
செவ்விதிற் சிறிது கூறக் கேண்மதி செல்வ வேந்தே. ௧௬௪

2772 ஊழ்வினை துரப்ப ஓடி ஒன்றுமூழ்த் தத்தி னுள்ளே
சூழ்குலைப் பெண்ணை நெற்றித் தொடுத்ததீங் கனிக ளூழ்த்து
வீழ்வன போல வீழ்ந்து வெருவரத் தக்க துன்பத்(து)
ஆழ்துயர் உழப்ப ஊனும் அருநவை நஞ்சு கண்டாய். கசுரு

2773 இட்டிவேல் குந்தங் கூர்வாள் எரிநுனைச் சுரிகை கூட
நட்டவை நிரைத்த பூமி நவையுடை நரகர் பொங்கி
உட்பட எழுந்து வீழ்ந்தாங் கூன்தகர்த் திட்ட வண்ணம்
எட்டெலாத் திசையுஞ் சிந்திக் கிடப்பவால் அடக்க மில்லார்.

2774 வெந்தடி தின்ற வெந்நோய் வேகத்தான் மீட்டு மாலைப்
பைந்தொடி மகளி ராடும் பந்தென எழுந்து பொங்கி
வந்துடைந் துருகி வீழ்ந்து மாழ்குபு கிடப்பர் கண்டாய்
கந்தடு வெகுளி வேகக் கடாமுகக் களிற்று வேந்தே. கசுஎ

2775 வயிரமுள் நிரைத்து நீண்ட வார்சினை இலவம் ஏற்றிச்
செயிரிற்றீ மடுப்பர் கீழாற் சென்னுனைக் கழுவில் ஏற்றி
மயிருக்கொன் றாக வாங்கி அகைத்தகைத் திடுவர் மன்னா
உயிரைப்பே துறுக்கு மாந்தர் உயிரைப்பே துறுக்குமாறே.

2776 துடிக்குரற் குரல பேழ்வாய்த் தொடர்ப்பிணி யுறுத்த செந்
மடுத்திட வைர வூசி வாளெயி றழுந்தக் கௌவிப் [நாய்
புடைத்திட அலறி யாற்றார் பொன்றினும் பொன்றல் செல்லார்
உடுப்பினம் வேட்டஞ் செய்தார் உழப்பவாற் றுன்ப மாதோ.

2777 வாளைமீன் தடிகள் தின்றார் வருகென உருக வெந்த [றார்
பாளத்தைக் கொடிற்றி னேந்திப் பகுத்துவாய் புகுத்த லாற்
ஊளைக்கொண் டோடு கின்றார் உள்ளடி ஊசி பாயத்
தாளொற்றித் தப்பி வீழ்ந்தார் தறிவலை மானிற் பட்டார்.

2778 காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி
ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்த பாவத்(து)
ஊதுலை யுருக வெந்த ஒள்ளழற் செப்புப் பாவை
ஆதகா தென்னப் புல்லி அலறுமால் யானை வேந்தே. களக

2779 சிலையினால் மாக்கள் கொன்று செழுங்கடல் வேட்ட மாடி
வலையினால் மீன்கள் வாரி வாழுயிர்க் கூற்ற மான
கொலைநரைக் கும்பி தன்னுட் கொந்தழல் அழுத்தி யிட்டு
நலிகுவர் நாளும் நாளும் நரகரை நாம வேலோய். களஉ

2780 பாரகங் கழுநர் போலப் பரூஉத்தடி பலரும் ஏந்தி
வீரநோய் வெகுளி தோற்றி விழுப்பற அதுக்கி யிட்டுக்
காரகற் பொரிப்பர் கண்ணுட் சுரிகையை நடுவர் நெஞ்சிற்
பாரக்கூர்ந் தறிகள் நட்டுப் பனையெனப் பிளப்பர் மாதோ.

2781 நாப்புடை பெயர்த்த லாற்றார் நயந்துநீர் வேட்டு நோக்கிப்
பூப்புடை யணிந்த பொய்கை புக்குநீர் உண்ண லுற்றாற்
சீப்படு குழம்ப தாகிச் செல்லலுற் றந்தோ என்னக்
கூப்பிடு குரலாய் நிற்பர் குறைப்பனைக் குழாங்க ளொத்தே.

2782 நறுமலர்த் தாமம் நான்று நானநீர் பிலிற்றும் பந்தர்க்
குறுகலுங் குடநெய் பெய்த கொந்தழல் போன்று பொங்கிப்
பறையல கனைய வெண்பற் பசுங்கழற் குண்டு பைங்கண்
உறுதுயர் நரகர் தம்மை உருகச்சுட் டிடுங்கள் அன்றே.

2783 வெந்துருக் குற்ற செம்பின் விதவையுள் அழுத்தி யிட்டும்
எந்திர ஊசல் ஏற்றி எரியுண மடுத்துஞ் செக்கிற்
சுந்தெழுந் தரைத்தும் போகச் சுண்ணமா நுணுக்கி யிட்டு
மந்தரத் தனைய துன்பம் வைகலும் உழப்ப மாதோ. கஎசு

2784 உழும்பகட் டெருது போல உரனறு தாள ராகிக் [பட்டும்
கொழுங்களி அளற்றுள் வீழ்ந்துங் கொழும்புகை மடுக்கப்
அழுந்துமிந் நரகந் தன்னுட் செல்பவர் யார்கொல் என்னின்
எழுந்தவண் டிமிரும் பைந்தார் இறைவநீ கேண்மோ என்றான்.

2785 கொல்வதே கன்றி நின்றார் கொடியவர் கடிய நீரார்
இல்லையே இம்மை யல்லால் உம்மையும் உயிரும் என்பார்
அல்லதுந் தவமு மில்லை தானமும் இழவென் பாருஞ்
செல்பஅந் நரகந் தன்னுள் தீவினைத் தேர்கள் ஊர்ந்தே.

11. விலங்குகதித் துன்பம்

வேறு

2786 எரிநீர வேநரகம் அந்நரகத் துன்பத்(து)
ஒருநீர வேவிலங்கு தாமுடைய துன்பம்
பெருநீர வாட்டடங்கட் பெண்ணணங்கு பூந்தார்
அருநீர வேந்தடர்த்த அச்சணங்கு வேலோய். கஎசுஅ

2787 கழைபொதிர்ப்பத் தேன்சொரிந்து காய்த்தினைக ளார்த்து
மழைதவழுங் குன்றில் வயமா முழங்க
உழையளிய தாமுறாஉந் துன்பங்கள் நின்மேல்
விழைவயரா வேந்துறாஉந் துன்பமே கண்டாய். ௧௮௦

2788 நிணம்பிலிற்றும் வாயர் நெருப்பிமைக்குங் கண்ணர்
குணம்நஞ்சர் கூற்றனைய கோணாய் மடுப்பக்
கணமஞ்ஞை யஞ்சிக் கழுத்தொளிப்ப கண்டாய்
மணமல்கு பூந்தார் மழைதழீஇய கையாய். ௧௮௧

2789 மண்ணார மஞ்சள் உரிஞ்சிமலர் சூட்டிக்
கண்ணார் மறியறுத்துக் கையால் உதிரந்தூய்
உண்ணீரே தேவீர் உவந்தென்ப திவ்வுலகம்
நண்ணார்க் கடந்தோய் நமனுலகின் நான்மடங்கே. ௧௮௨

2790 மங்கை மனுவனைய மென்சூல் மடவுடும்பு
செங்கண் வரிவரால் செந்நீர் இளவாளை
வெங்கருனை புல்லுதற்கு வேறுவே றூக்குறைப்ப
அங்காந் தழுகின்ற தார்கண்ணே நோக்குமே. ௧௮௩

2791 கடலரணம் ஆகாது காடரண மாகா
குடலரணம் ஆகாது குன்றரண மாகா
அடுதுயரம் ஊர்ந்தலைப்ப ஆங்கரணங் காணாப்
படுதுயரத் தாலே பதைத்தளிய வேமே. ௧௮௪

2792 முழுப்பதகர் தாள்தரந்து முட்டாற்றிற் குத்தி
உழப்பெருது பொன்றப் புடைத்துழுது விட்டாற்
கழித்துண்ணுங் காக்கை கடிவோரும் இன்றிப்
புழுச்சொரியத் துன்பம் பொறுக்கலா பொன்றும். ௧௮௫

2793 நிரம்பாத நீர்யாற் றிடுமணலுள் ஆழ்ந்து
பெரும்பார ஆடவர்போற் பெய்பண்டந் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றிக் தாள்தவழ்ந்து வாங்கி
உரங்கெட் டுறுப்பழுகிப் புல்லுண்ணா பொன்றும். ௧௮௬

2794 போழ்மதிபோற் கூரிரும்பிற் பூநுதல்கள் போழ்ந்திடவுங்
காழ்நுதியிற் குத்துண்டுங் கார்மழைபோல் நின்றதிர்ந்தும்
வீழ்பிடிகள் சிந்தித்தும் வெந்நோய்தம் உள்சுடவெந்(து)
ஆழத்த கந்திளக யானை அலம்வருமே. ௧௮௭

2795 எரிவளைப்ப வெம்புகையுண் டின்னுயிர்விட் டேகும்
அரிவளைப்பக் குஞ்சரமும் ஆளிபோல் நீராம்
வரிவளைக்கும் வெண்மயிர்க்கும் முத்திற்கும் மாந்தர்
திருவளைத்த மார்ப செகுத்திடுவர் தேங்கார். கஅஅ

2796 வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினைசெய் ஆடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோற்
கோளிமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்தும் இன்னணமே
நாளுலப்பித் திட்டார் நமரலா தார்எல்லாம். கஅகூ

2797 கொல்வாருங் கூட்டுட் செறிப்பாரும் ஆடவர்கள்
அல்லாரும் நாய்வேட்டம் ஆடாத மாத்திரையே
அல்லாத பைங்கிளியும் பூவையும் ஆதியா
எல்லாங் கிளைபிரித்திட் டேமுறுநோய் செய்பவே. ககூ0

2798 மல்லல் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரே யன்றிப் பகுத்துணாப் பாவிகளும்
அல்குல் விலைபகரும் ஆய்தொடிய ராதியார்
வில்பொருதோள் மன்னா விலங்காய்ப் பிறப்பவே. ககூக

12. மக்கட்கதித் துன்பம்

2799 தம்மை நிழல்நோக்கித் தாங்கார் மகிழ்தூங்கிச்
செம்மை மலர்மார்ப மட்டித் திளையார்தோள்
கொம்மைக் குழகாடுங் கோல வரைமார்பர்
வெம்மை மிகுதுன்பம் வேந்தே சிலகேளாய். ககூஉ

2800 ஈருட் டடிமுடி யீண்டு மலப்பண்டப்
போர்வை புழுமொய்ப்பப் பொல்லாக் குடர்சூடிச்
சார்தற் கரிதாகித் தானின் றரூஅள்ளல்
நீர்வாய்ச் சுரம்போந்தார் தம்மை நினையாரோ. ககூங

2801 அஞ்சொல் மடவார்தம் ஆர்வக் களிபொங்க
நெஞ்சத் தயிலேற்றும் நீள்வெங் கழுவூர்ந்தும்
குஞ்சிக் களியானைக் கோட்டால் உழப்பட்டும்
துஞ்சிற் றுலகந்தோ துன்பக் கடலுள்ளே. ககூச

2802 பண்ணார் களிறேபோற் பாயோங் குயர்நாவாய்
கண்ணார் கடல்மண்டிக் காற்றிற் கவிழுங்கால்
மண்ணார் மணிப்பூணோய் மக்கள் உறுந்துன்பம்
நண்ணா நரகத்தில் நான்கா மடியன்றே. ௧௯௫

2803 செந்தீப் புகையுண்டுஞ் சேற்றுள் நிலைநின்றும்
அந்தோ வெனமாற்றால் ஆற்றப் புடையுண்டும்
தந்தீ கெனமுன்கை வீக்கத் தளர்வுற்றும்
நொந்தார் குடிச்செல்வர் நோன்மை நுகம்பூண்டார். ௧௯௬

2804 கண்சூன் றிடப்பட்டும் கால்கை களைந்தாங்கே
அண்பல் இறக்கையால் ஆற்றத் தகர்பெற்றும்
நுண்சாந் தரைப்பார்போல் நோவ முழங்கையாற்
புண்செய் திடப்பட்டும் புன்கண் உழப்பவே. ௧௯௭

2805 மாலைக் குடைமன்னர் வையம் அகற்றுவான்
காலைக் கதிதுன்பங் காவல் பெருந்துன்பஞ்
சோலை மயிலன்னார் தோள்சேர் விலராயின்
வேலைக் கடலேபோல் துன்பம் விளையுமே. ௧௯௮

2806 ஊன்சேர் உடம்பென்னும் ஓங்கல் மரச்சோலை
தான்சேர் பிணியென்னுஞ் செந்தீக் கொடிதங்கிக்
கான்சேர் கவினென்னுங் காமர் மலர்வாடத்
தேன்சேர் மலர்மார்ப தீத்திட் டிறக்குமே. ௧௯௯

2807 கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை
விட்டு நடப்பனபோற் சிந்தும் விளைந்துசீ
அட்டும் உயவுநோய் அல்லாப் பிறநோயும்
பட்டார் உறுதுன்பம் பன்னிச் சொலலாமோ. ௨௦௦

வேறு

2808 வேட்டன பெறுமை துன்பம் விழைநரைப் பிரிதல்துன்பம்
மோட்டெழில் இளமை நீங்கி மூப்புவந் தடைதல் துன்பம்
எட்டெழுத் தறித லின்றி எள்ளற்பா டுள்ளிட் டெல்லாஞ்
சூட்டணிந் திலங்கும் வேலோய் துன்பமே மாந்தர்க் கென்றான்.

13. தேவகதித் துன்பம்

2809 திருவிற்போற் குலாய தேந்தார்த் தேவர்தந் தன்மை செப்பிற்
கருவத்துச் சென்று தோன்றார் கானிலந் தோய்தல் செல்லார்
உருவமேல் எழுத லாகா ஒளியுமிழ்ந் திலங்கும் மேனி
பருதியின் இயன்ற தொக்கும் பன்மலர்க் கண்ணி வாடா.

2810 அங்கையும் அடியும் நோக்கிற் றாமரை அலர்ந்த தொக்கும்
பங்கய மனைய செங்கண் பருவொளிப் பவழஞ் செவ்வாய்
செங்கதிர் முறுவல் முத்தின் தெளிநகை திகழுஞ் செய்யாள்
வெங்கடை மழைக்கண் நோக்கி வெய்துறத் திரண்ட அன்றே.

2811 தாணெடுங் குவளைக் கண்ணித் தலையவிழ் கோதை மாலை
வானூண்முடி வைர வில்லும் வார்குழை சுடரு மார்பிற்
பூணிடை நிலவு மேனி மின்னொடு பொலிந்த தேவர்
ஊனுடை அமிர்தம் வேட்டால் உண்பது மனத்தி னாலே.

2812 சிதரரி யொழுகி யோடிச் செவியுறப் போழ்ந்து நீண்ட
மதரரி மழைக்கண் அம்பா வாங்குவிற் புருவ மாகத்
துதைமணிக் கலாப மின்னித் தொன்மலர்க் காமன் அம்பு
புதைமலர் மார்பத் தெய்யப் பூவணை மயங்கி வீழ்வார். ௨௦௫

2813 பூத்ததை கொம்பு போன்று பொன்னிழை சுடரு மேனி
வீத்தருங் கொடிய னாரை யிருநடு வாகப் புல்லிக்
காய்த்தியிட் டுள்ளம் வெம்பிக் கடைந்திடு கின்ற காமம்
நீத்துநீர்க் கடலை நீந்தும் புணையென விடுத்தல் செல்லார்.

2814 பொங்கல்வெம் முலைக ளென்னும் போதொடு பொருது பூந் [தார்
அங்கலந் தொடையல் மாலை கிழிந்தழ கழிய வைகிக்
கொங்கலர் கோதை நல்லார் குரைகடல் அமிர்த மாகத்
தங்கலர் பருகி யாரார் தாழ்ந்துகண் இமைத்தல் செல்லார்.

2815 கருவியின் னிசைகள் ஆர்ப்பக் கற்பக மரத்தின் நீழற்
பொருகய லனைய கண்ணும் புருவமும் அரவஞ் செய்ய
அரவமே கலைகள் அம்பொற் கிண்கிணி சிலம்பொ டார்ப்பத்
திருவனார் ஆடல் கண்டுந் திருவொடு திளைத்து மானார். ௨௦௮

2816 பனிமுகில் முளைத்த நான்கு பசுங்கதிர்த் திங்க ளொப்பக்
குனிமருப் புழுது மேகங் குஞ்சரங் குனிந்து குத்த [ங்கத்
இனிதினின் இலங்கு பொற்றோ டேற்றுமின் குழைகள்பொ
துனிவிலர் களிற்றோ டாடித் தொழுதகக் கழிப்பர் வேந்தே.

2817 கடிகைவா ளாரம் மின்னக் கற்பகக் காவு கண்டுந்
தொடிகவின் அறாத மென்தோள் தேவியர் சூழ வாமன்
அடிகையிற் றொழுது பூத்தூய் அஞ்சலி செய்து வீடே
முடிகஇப் பிறவி வேண்டேம் முனிவனென் றிரப்ப அன்றே.

2818 மலங்குவித் தாவி வாட்டி வாய்நிறை யுயிர்தம் பெய்த
இலங்குபொற் கலச மன்ன எரிமணி முலைகள் பாயக்
கலந்தனர் சென்ற பின்னாட் கதிர்கழன் றிருந்த வெய்யோன்
புலம்புபோற் புலம்பித் தேவர் பொற்புகுத் திருப்பஅன்றே.

2819 எல்லை மூவைந்து நாள்கள் உளவென இமைக்குங் கண்ணும்
நல்லெழில் மாலை வாடும் நஞ்சுடை யமிர்துண் டாரிற்
பல்பகற் றுய்த்த இன்பம் பழுதெனக் கவல்ப கண்டாய்
பில்கித்தேனொழுகும் பைந்தார்ப்பெருநில வேந்தர்வேந்தே.

2820 தேவரே தாமு மாகித் தேவராற் றொழிக்கப் பட்டும்
ஏவல்செய்திறைஞ்சிக் கேட்டும்அணிகமாப் பணிகள் செய்தும்
நோவது பெரிதுந் துன்பம் நோயினுட் பிறத்தல் துன்பம்
யாவதுந் துன்ப மன்று யாக்கைகொண் டவர்கட் கென்றான்.

14. நற்காட்சி

வேறு

2821 கொங்குவிம்மு குளிர்பிண்டிக் குழவிஞாயிற்றெழிலேய்ப்பச்
சிங்கஞ் சுமந்த மணியணைமேற் றேவர் ஏத்திச் சிறப்பயர
எங்கும் உலகம் இருள்நீங்க இருந்த எந்தை பெருமானார்
தங்கு செந்தா மரையடியென் தலைய வேயென் தலையவே.

2822 இலங்கு செம்பொன் எயில்மூன்றும்
எரிபொன் முத்தக் குடைமூன்றும்
வலங்கொண் டலர்தூஉய் அடியேத்தும்
வைய மூன்றும் படைமூன்றுங்

கலங்கா துயர்ந்த அதிசயங்கள்
மூன்றுங் காமர் நூல்மூன்றும்
நலங்கொள் தீம்பால் குணக்கடலும்
உடையார் நம்மை யுடையாரே. உகரு

2823 மன்றல் நாறுமணி முடிமேல்
மலிந்த சூளா மணிபோலும்
வென்றோர் பெருமான் அறவாழி
வேந்தன் விரிபூந் தாமரைமேற்
சென்ற திருவா ரடியேத்தித்
தெளியும் பொருள்க ளோரைந்தும்
அன்றி ஆறும் ஒன்பானும்
ஆகும் என்பார் அறவோரே. உகசு

2824 பெரிய இன்பத் திந்திரனும்
பெட்ட செய்கைச் சிறுகுரங்கும்
உரிய செய்கை வினைப்பயத்தை
உண்ணும் எனவே உணர்ந்தவனை
அரிய ரென்ன மகிழாதும்
எளிய ரென்ன இகழாதும்
இருசார் வினையுந் தெளிந்தாரே
இறைவன் நூலுந் தெளிந்தாரே. உகஎ

2825 உறுவர்ப் பேணல் உவர்ப்பின்மை
உலையா இன்பந் தலைநிற்றல்
அறிவர் சிறப்பிற் கெதிர்விரும்பல்
அழிந்தோர் நிறுத்தல் அறம்பகர்தல்
சிறியா ரினத்துச் சேர்வின்மை
சினங்கை விடுதல் செருக்கவித்தல்
இறைவன் அறத்து ளார்க்கெல்லாம்
இனிய ராதல் இதுதெளிவே. உகஅ

2826 செறியச் சொன்ன பொருள்தெளிந்தார்
சேரார் விலங்கிற் பெண்ணாகார்
குறுகார் நரகம் ஒரேழுங்
கீழ்முத் தேவர் குழாந்தீண்டார்

அறியா துரைத்தேன் அதுநிற்க
ஆறே நரகம் ஆகாத
பொறியார் போக பூமியுள்
விலங்கும் ஆவர் ஒருசாரார். ௨௧௯

15. சீலம்

வேறு

2827 எத்தருந் திருமணி இலங்கு நீர்மைய
கோத்தன போற்குணம் நாற்றுக் கோடியுங்
காத்தன காவல பதினெண் ணாயிரம்
பாத்தன பண்ணவர் சீலம் என்பவே. ௨௨௦

2828 மொய்யமர் ஞாட்பினுள் முரண்கொள் மன்னவர்
மெய்புகு பொன்னணி கவசம் ஒப்பன
மையலும் பொறிமதம் வாட்டி வைகலுஞ்
செய்வினை நுணுக்குவ சீலம் என்பவே. ௨௨௧

2829 மணித்துணர் அனைய தங் குஞ்சி வண்கையாற்
பணித்தனர் பறித்தலிற் பரவை மாநிலந்
துணித்தொரு துணிசுமந் தனைய திண்பொறை
அணித்தகு முடியினாய் ஆதி யாகவே. ௨௨௨

வேறு

2830 பெரியவாட் டடங்கட் செவ்வாய்ப் பிறர்மனை பிழைக்கு மாந்தர்
மரீஇயவாய்ப் புறஞ்சொற் கூர்முள் மத்திகைப் புடையு மன்றி
ஒருவர்வாய் உமிழப் பட்ட தம்பலம் ஒருவர் வாய்க்கொண்(டு)
அரியவை செய்ப வையத் தாண்பிறந் தார்க ளன்றே. ௨௨௩

2831 ஒழுக்கமே யன்றித் தங்கள் உள்ளுணர் வழிக்கு மட்டும்
புழுப்பயில் தேனு மன்றிப் பிறவற்றின் புண்ணும் மாந்தி
விழுப்பயன் இழக்கு மாந்தர் வெறுவிலங் கென்று மிக்கார்
பழித்தன ஒழித்தல் சீலம் பார்மிசை யவர்கட் கென்றான்.

16. தானம்

2832 நன்னிலத் திட்ட வித்தின் நயம்வர விளைந்து செல்வம்
பின்னிலம் பெருக ஈனும் பெறலருங் கொடையும் பேசிற்

பூன்னிலத் திட்ட வித்திற் புற்கென விளைந்து போகம்
மின்னெனத் துறக்குந்தானத் தியற்கையும் விரித்துமன்றே.

2833 ஐவகைப் பொறியும் வாட்டி யாமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கும்நின் றெரிய விட்டுப்
பொய்கொலை களவு காமம் அவாஇருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.

2834 வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தி னுலும்
பூச்சிறு சாந்தம் ஏந்திப் புகழ்ந்தடி பணிந்த போழ்துந்
தூக்கிஇவ் விரண்டும் நோக்கித் தொல்வினை என்று தேறி
நாச்செறு பராவு கொள்ளார் நமர்பிறர் என்றும் உள்ளார்.

2835 பாற்கதிர்த் திங்கட் கொட்பிற் பருமித்த களிறு போல
நீர்க்கதி கொண்டு கண்ணுல் நுகத்தள வெல்லை நோக்கி
மேற்கதிக் கேணி யாய விழுத்தவர் மனையில் வந்தாற்
காற்கொசி கொம்பு போலக் கைதொழு திறைஞ்சி மாதோ.

2836 தொடிக்கையால் தொழுது வாழ்த்தித் தூமணி நிலத்து ளேற்றிப்
பொடிப்புனை துகிலின் நீக்கிப் புகழ்ந்தடி கழீஇய பின்றை
அடுத்தசாந் தகிலி னுவி ஆய்மலர் அருச்சித் தானர்
கொடுப்பர் நாலமிர்த மூன்றிற் குணம்புரிந் தடங்கினுர்க்கே.

2837 ஒன்பது வகையின் ஓதிற் றுத்தமர்க் காகும் ஆர்ந்த
இன்பதம் அருளி ஈதல் இடையென மொழிப யார்க்குந்
துன்புற விலங்கு கொன்று சொரிந்துசோ றூட்டி னுர்க்கும்
நன்பொருள் வழங்கி னுர்க்கும் பயன்நமக் கறிய லாகா.

17. தானப்பயன்

வேறு

2838 கூற்றுநா அலறுவ தனைய கூரிலை
ஏற்றநீர்த் துளும்புவாள் இறைவ ஈங்கினிப்
போற்றினை கேள்மதி பொருந்திப் புண்ணியர்க்(கு)
ஆற்றிய கொடைப்பயன் அறியக் கூறுவாம். உ௩க

2839 கடிப்புவார் அங்குலி கொளீஇய கைதூரந்(து)
அடுத்துவார் மயிர்த்துதி அலற வூதலிற்

பொடித்தபொற் றாமரை யனைய பொங்கழல்
இடைக்கிடந் தெவ்வளை விரும்பு காய்ந்ததே. ௨௯௨

2840 காய்ந்தஅவ் வளவினாற் றெளவு நீரதொத்(து)
ஆய்ந்தறி கொடையின தளவிற் புண்ணியந்
தோய்ந்துயிர் உடம்பிவண் ஒழியத் தொக்கநாள்
வீந்துபோய் வயிற்றகம் விதியின் எய்துமே. ௨௯௩

2841 திங்கள்நா ளொன்பதும் வயிற்றிற் சேர்ந்தபின்
வங்கவான் துகில்பொதி மணிசெய் பாவைபோல்
அங்கவர் இரட்டைக ளாகித் தோன்றலும்
சிங்கினார் இருமுது குரவர் என்பவே. ௨௯௪

2842 இற்றவர் தேவராய்ப் பிறப்ப ஈண்டுடல்
பற்றிய விசும்பிடைப் பரவு மாமுகில்
தெற்றென வீந்தெனச் சிதைந்து போகுமால்
மற்றஅம் மக்கள்தம் வண்ணஞ் செப்புவாம். ௨௯௫

2843 பிறந்தஅக் குழவிகள் பிறர்கள் யாவரும்
புறந்தர வின்றியே வளர்ந்து செல்லுநாள்
அறைந்தனர் ஒன்றிலா ஐம்ப தாயிடை
நிறைந்தனர் கலைகுணம் உறுப்பும் நீரவே. ௨௯௬

வேறு

2844 சோலைமீன் அரும்பித் திங்கட் சுடரொடு பூத்த தேபோல்
மாலையுங் கலனும் ஈன்று வடகமுந் துகிலும் நான்று
காலையும் இரவும் இல்லாக் கற்பக மரத்தின் நீழற்
பாலையாழ் மழலை வேறாய்ப் பன்மணிக் கொம்பின் நின்றாள்.

2845 இலங்குபொற் குவடு சாந்தம் எழுதிய தனைய தோள்மேல்
நலங்கிளர் குழைகள் நான்று சாந்தின்வாய் நக்கி மின்னக்
கலங்கலந் தகன்ற மார்பிற் கற்பக மாலை தாழ
விலங்கர சனைய காளை வேனில்வேந் தென்னச் சேர்ந்தான்.

2846 குண்டலங் குலவி மின்னப் பொன்னரி மாலை தாழத்
தெண்கடல் அமிர்திற் செய்த பாவையிற் பாவை நிற்ப
விண்டலர் மாலை மார்பன் விதியினாற் சென்று மாதோ
கண்டனன் கலந்த உள்ளங் காதலின் ஒருவ ரானார். ௨௯௯

2847 கொதிநுனைக் காமன் அம்பு கொப்புளித் துமிழ்ந்து காம
மதுநிறை பெய்து விம்மு மணிக்குடம் இரண்டு போல
நுதிமுக முத்தஞ் சூடி நோக்குநர் ஆவி வாட்ட
விதிமுலை வெய்ய வாகித் தாரொடு மிடைந்த அன்றே.

2848 இமைத்தநுங் கண்கள் என்னை இகழ்ந்தனிர் என்று சீற
அமைத்துநின் அழகு கோலம் ஆரவுண் டறுக்க லாற்றா(து)
இழைத்தன அஞ்சி யென்ன இளையவள் சிலம்பிற் குஞ்சி
நமைத்தபூந் தாமந் தோய நகைமுக விருந்து பெற்றான்.

2849 இன்அகி லாவி விம்மும் எழுநிலை மாடஞ் சேர்ந்தும்
பொன்மலர்க் காவு புக்கும் புரிமணி வீணை ஓர்த்தும்
நன்மலர் நான வாவி நீரணி நயந்துஞ் செல்வத்
தொன்னலம் பருகிக் காமத் தொங்கலாற் பிணிக்கப்பட்டார்.

2850 பூமுற்றுந் தடங்க ளானும் பொன்னெடுங் குன்ற னானும்
காமுற்று நினைந்த எல்லாங் கற்பக மரங்கள் ஏந்தத்
தாமுற்றுக் கழிப்பர் தான மிடையது செய்த நீரார்
ஏமுற்றுக் கரும பூமி இருநிதிக் கிழமை வேந்தே. ௨௪௩

2851 அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினால் அலறு முந்நீர்த்
தடங்கடல் நடுவுட் டீவு பலவுள அவற்றுட் டோன்றி
உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வர்
மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேல் மன்னர் ஏறே.

18. சீலப்பயன், காட்சிப்பயன்

2852 செப்பிய சீல மென்னுந் திருமணி மாலை சூழ்ந்தார்
கப்பத்துள் அமர ராவர் காட்சியின் அமிர்தம் உண்டார்
ஒப்பநீ ருலக மெல்லாம் ஒருகுடை நிழற்றி இன்பங்
கைப்படுத் தலங்க லாழிக் காவல ராவர் கோவே. ௨௪௫

19. வீடுபேறு

வேறு

2853 வீட்டின தியற்கைநாம் விளம்பிற் றீங்கதிர்ப்
பாட்டரும் பனிமதி பழித்த முக்குடை
மோட்டிருங் கொழுமலர்ப் பிண்டி மூர்த்திநூல்
ஈட்டிய பொருளகத் தியன்ற தென்பவே. ௨௪௬

2854 உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்
தெள்ளிதின் அப்பொருள் தெளிதல் காட்சியாம்
விள்ளற இருமையும் விளங்கத் தன்னுளே
ஒள்ளிதிற் றரித்தலே ஒழுக்கம் என்பவே. உசஎ

2855 கூடிய மும்மையுஞ் சுடர்ந்த கொந்தழல்
நீடிய வினைமரம் நிரைத்துச் சுட்டிட
வீடெனப் படும்வினை விடுதல் பெற்றதங்(கு)
ஆடெழிற் றோளினாய் அநந்த நான்மையே. உசஅ

2856 கடையிலா அறிவொடு காட்சி வீரியம்
கிடையிலா இன்பமுங் கிளந்த அல்லவும்
உடையதங் குணங்களோ டோங்கி விண்தொழ
அடைதலால் மேலுல கறியப் பட்டதே. உசகூ

20. பிறவிகளறவுரை

2857 மாதவன் எனப்பெயர் வரையி னவ்வரை
ஏதமில் எயிறணி பவள வாய்த்தொடுத்(து)
ஆதியில் அறவுரை அருவி வீழ்ந்தென
மாதுயர் மலங்கெட மன்னன் ஆடினான். உருய

2858 எல்லையில் அறவுரை இனிய கேட்டபின்
தொல்லைஎம் பிறவியுந் தொகுத்த பாவமும்
வல்லையே பணிமினம் அடிகள் என்றனன்
மல்லைவென் றகன்றுபொன் மலர்ந்த மார்பினான். உருக

2859 கதிர்விடு திருமணி அங்கைக் கொண்டதொத்(து)
எதிர்வதும் இறந்ததும் எய்தி நின்றதும்
அதிர்வறு தவவிளக் கெறிப்பக் கண்டவன்
பதாறு திருமொழி பணிக்கும் என்பவே. உருஉ

வேறு

2860 முழுநீர் வளைமேய் தலின்முத் தொழுகிப்
பொழிநீர் நிலவின் இருள்போழ்ந் தரிசிக்
கழுநீர் ஒழுகக் கழுநீர் மலருந்
தழுநீ ரதுதா தகியென் றுளதே. உருங

2861 கயல்பாய்ந் துகளக் கடியன் னம்வெரீஇ
வியல்நீள் சுடர்வெண் மதிசேர் வதுபோல்
அயலே அலர்தா மரைசேர்ந் துறையும்
வயல்சூழ்ந் தனஊர் வளமார்ந் தனவே. உருச

2862 அவணத் தவர்கூந் தல்அகிற் புகையைச்
சிவணிச் சிறுகால் கமுகம் பொழில்சேர்ந்(து)
உவணுய்த் திடமஞ் செனநின் றுலவும்
பவணத் தொருபாங் கினதால் அளிதோ. உருரு

2863 மதியுஞ் சுடரும் வழிகா ணலுறுப்
பொதியும் அகிலின் புகையுங் கொடியும்
நிதியின் கிழவன் இனிதா உறையும்
பதிபொன் னகரின் படிகொண் டதுவே. உருகூ

வேறு

2864 ஏம மாகிய துப்புர வெய்திய
பூமி மாதில கம்மெனும் பொன்கிளர்
நாம நன்னகர் வீதிகள் தாமெலாம்
காம வல்லி கிடந்தன போன்றவே. உருஎ

வேறு

2865 ஸ்பங்கழல் மன்னர் மன்னன் பவணமா தேவன் என்பான்
சங்கினுள் முத்தம் ஒப்பாள் சயமதி பயந்த நம்பி
ஐங்கணைக் காமன் அன்னன் அசோதரன் அரச சீயம்
தங்கிய கேள்வி யாற்குத் தையலார்ச் சேர்த்தி னரே. உருஅ

2866 இளமுலை பொருது தேந்தார் எழில்குழைந் தழிய வைகிக்
கிளைநரம் பிசையுங் கூத்துங் கிளர்ந்தவை கனற்ற நாளும்
வளைமயங் குருவ மென்தோள் வாய்நலம் பருகி மைந்தன்
விளைமதுத் தேறல் மாந்தி வெற்றிப்போர் அநங்க னானன்.

2867 இலங்கரி பரந்த வாட்கண் இளையவர் புலவி நீங்கச்
சிலம்பெனும் வண்டு பாடச் சீறடிப் போது புல்லி
அலங்கல்வாய்ச் சென்னி சேர்த்தி அரிமதர் மழைக்கண்பில்க
நலங்கவர்ந் துண்டு நண்ணார் நாமுறக் கழிக்கும் மாதோ.

வேறு

2868 மங்கையர் தம்மொடு மடங்கல் மொய்ம்பினன்
பங்கயப் பனித்தடஞ் சேரப் பார்ப்பனம்
செங்கயற் பேரினம் இரியச் செவ்வனே
பொங்கிமேற் பறந்துவிண் புதைந்த தென்பவே. உகூக

வேறு

2869 வேய்ந்தவெண் தாமரைக் தோகை போல
விசும்பிற் பறக்கின்ற வெள்ளை யன்னம்
ஆய்ந்த முகிலாடைத் திங்கட் கண்ணி
ஆகாய மென்னும் அரிவை சாயல்
தோய்ந்ததன் காதலன் பற்ற அற்றுச்
சொரிகின்ற மேகலைபோல் வீழ்ந்த வாளை
பாய்ந்து துகைப்பக் கிழிந்த கூழைப்
பனித்தா மரைசூழ் பகற்கோ யிலே. உகூஉ

வேறு

2870 விரும்புபொற் றட்டிடை வெள்ளிக் கிண்ணமார்ந்(து)
இருந்தன போன்றிள அன்னப் பார்ப்பினம்
பொருந்துபொற் றாமரை ஒடுங்கிப் புக்கொளித்(து)
இருந்தகண் டான்இளங் கோக்கள் நம்பியே. உகூங

2871 உரிமையுட் பட்டிருந் தொளிக்கின் றார்களைப்
பெருமநீ கொணர்கெனப் பேசு காஞ்சுகி
ஒருமகற் கீந்தனன் கோயில் புக்கனன்
எரிமுயங் கிலங்குவேற் காளை என்பவே. உகூச

2872 வடமலைப் பொன்னனார் மகிழ்ந்து தாமரைத்
தடமுறை வீர்க்கிவை தடங்கள் அல்லவே
வடமுலை எனநடாய் வருடிப் பாலமு(து)
உடனுறீஇ யோம்பினார் தேம்பெய் கோதையார். உகூரு

வேறு

2873 கண்டா னொருநாட் கதிர்மாமுடி மன்னர் மன்னன்
தண்டா மரைசூழ் தடத்திற்பிரித் தார்கள் யாரே

ஒண்தார் இளங்கோவென் றுழையுவர் கூற வல்லே
கொண்டங்கு வம்மின் கொலைவேலவன் தன்னை என்றான்.

2874 படுகண் முழவும் பசும்பொன்மணி யாழும் ஏங்க
இடுகுந் நுசுப்பி னவராட இருந்த நம்பி
அடிகட் கடிகள் அருளிற்றென் றிறைஞ்ச வல்லே
கடிவிம்மு தாரான் கழல்கையிற் றொழுது சேர்ந்தான். உகஎ

வேறு

2875 அணிசேர் இடக்கை விரலால் வலத்தோள்
மணிசேர் வளைவாய் வதின்வைத் துவலத்(து)
அணிமோ திரஞ்சூழ் விரல்வாய் புதையாப்
பணியா முடியாற் பணிந்தான் இளையோன். உகஅ

வேறு

2876 கிளைப்பிரி வருஞ்சிறை இரண்டுங் கேட்டியேல்
விளக்கிய வித்தனுய் இருமற் றீங்கெனத்
திளைக்குமா மணிக்குழை சுடரச் செப்பினன்
வளைக்கையார் கவரிகொண் டெறிய மன்னனே. உகக

வேறு

2877 அறம்பெரிய கூறின் அலங்கலணி வேலோய்
மறம்புரிகொள் நெஞ்சம்வழி யாப்புகுதந் தீண்டிச்
செறும்பெரிய தீவினைகள் சென்றுகடி தோடி
உறும்பெரிய துன்பம் உயிர்க்கொலையும் வேண்டா. உஎ0

2878 மெய்யுரை விளங்குமணி மேலுலக கோபுரங்கள்
ஐயமில நின்றபுகழ் வையகத்து மன்னும்
மையல்வினை மாநரக கோபுரங்கள் கண்டீர்
பொய்யுரையும் வேண்டா புறத்திடுமின் என்றான். உஎக

2879 முளரிமுக நாகமுளை எயிறுமுழு தீற
அளவில்துயர் செய்வரிவண் மன்னர்அத னாலும்
விளைவரிய மாதுயரம் வீழ்கதியுள் உய்க்கும்
களவுகட னாகக் கடிந்திடுதல் சூதே. உஎஉ

2880 மடத்தகைய நல்லார் மனங்கரிய மாற்றார்
பிடர்த்தலையொள் வாள்போற் பிறர்மனைகள் சேரின்

எடுப்பரிய துன்பத் திடைப்படுவர் இன்று
நடுக்குடைய காமம் விடுத்திடுதல் நன்றே. ௨௭௩

2881 தெருளிற்பொருள் வானுலகம் ஏறுதற்குச் செம்பொன்
இருளில்படு கால்புகழ்வித் தில்லையெனின் எல்லா
அருளும்நக வையம்நக ஐம்பொறியும் நையப்
பொருளும்நக ஈட்டும்பொருள் யாதும்பொரு ளன்றே.

2882 பொய்யொடு மிடைந்தபொரு ளாசையுரு ளாவம்
மைபடும் வினைத்துகள் வழக்குநெறி மாயஞ்
செய்தபொருள் பெய்தகலன் செம்மைசுடு செந்தீக்
கைதவம் நுனித்தகவ ருடல்ஒழி கென்றான். ௨௭௫

2883 காமமுடை யார்கறுவொ டார்வமுடை யாரும்
தாமமொடு சாந்துபுனை வார்பசியின் உண்பார்
ஏமமுடை யார்களிவர் அல்லர்இவை யில்லா
வாமனடி யல்லபிற வந்தியன்மின் என்றான். ௨௭௬

2884 பூவைகிளி தோகைபுணர் அன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையின் நீங்கியழ வாங்கிக்
காவல்செய்து வைத்தவர்கள் தங்கிளையின் நீங்கிப்
போவர்புகழ் நம்பியிது பொற்பிலது கண்டாய். ௨௭௭

வேறு

2885 அல்லித்தா ளற்ற போழ்தும் அறுதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் உடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்(று)
எல்லையில் துன்ப வெந்தீச் சுட்டெரித் திடுங்கள் அன்றே.

2886 அறவிய மனத்த ராகி ஆருயிர்க் கருளைச் செய்யிற்
பறவையும் நிழலும் போலப் பழவினை உயிரோ டாடி
மறவியொன் றானு மின்றி மனத்ததே சுரக்கும் நல்லான்
கறவையிற் கறக்குந் தம்மாற் காமுறப் பட்ட வெல்லாம்.

2887 நெடுமணி யூபத்திட்ட தவழ்நடை யாமை நீணீர்த் [போற்
தொடுமணிக் குவளைப் பட்டந் துணையொடு நினைப்பதே
கடுமணிக் கயற்கண் நல்லார் காமமும் பொருளுஞ் சிந்தித்(து)
அடுமணி யாவி நீப்பார் அறிவினாற் சிறிய நீரார். ௨௮௦

2888 வீறழி வினைசெய் காலன் வைரவாள் வலையிற் பட்டாற்
சாறழி குவளை மாலை யவரையுந் தனமும் நீக்கி [ன்
ஆறிழி வரையிற் றோன்றும் அறம்நனி நினைப்பர்செம்பொ
ஏறெழில் நெறியின் ஏறி இருவிசும் பாளும் நீரார். ௨௮௧

2889 துன்னிமற் றறத்தைக் கேட்டே துகில்நெருப் புற்றதேபோல்
மின்னுத்தார் மார்பன் மெய்வெந் தாலியி னுருகிப்பெண்பால்
அன்னப்பார்ப் பன்று கொண்ட தடத்திடை விடுவித் திட்டான்
பின்னைத்தன் கிளைகள் கூட்டம் பெருந்தகை வித்தி னானே.

2890 மெய்ப்படு முதுபுண் தீர்ப்பான் மேவிய முயற்சி போல
ஒப்புடைக் காமந் தன்னை உவர்ப்பினோ டொழித்துப் பாவம்
இப்படித் திதுவென் றஞ்சிப் பிறவிநோய் வெருவி னானே
மைப்படு மழைக்கண் நல்லார் வாய்க்கொண்ட அமுதம் ஒப்பான்.

2891 ஆளியாற் பாயப் பட்ட அடுகளி யானை போல
வாளிவிற் றடக்கை மைந்தன் வாய்விட்டுப் புலம்பிக் காம
நாளினும் நஞ்சு துய்த்தேன் நச்சறை யாக நன்பொற்
றோளியர்த் துறந்து தூய்தாத் தவஞ்செய்வலடிகள் என்றான்.

2892 சிறுவன்வாய் மொழியைக் கேட்டே
தேர்மன்னன் தானுஞ் சொன்னான்
உறுகளிற் றுழவ மற்றுன்
ஒளிமுடித் தாயம் எய்தி
அறைகடல் வேலி காத்துன்
அலங்கல்வேற் றாயம் எல்லாம்
பெறுதகு புதல்வற் கீந்து
பின்னைநீ துறத்தி என்றான். ௨௮௫

2893 கொலைச்சிறை உய்ந்து போகும் ஒருவனைக் குறுக ஓடி
அலைத்தனர் கொண்டு பற்றி அருஞ்சிறை அழுத்து கின்றார்
தொலைப்பருஞ் சுற்றத் தாரோ பகைவரோ அடிகள் என்ன
விலைப்பெரு மணியை முந்நீர் நடுக்கடல் வீழ்த்த தொத்தான்.

2894 காதல மல்லம் மேனாள் கழிந்தநம் பிறவி தம்முள்
ஏதிலம் யாங்கள் எல்லாம் இனிக்கொளும் உடம்பி னானும்
ஆதலாற் சுற்ற மில்லை அதுபட்ட வாறென் றம்பூந்
தாதலர் மார்பன் அற்புத் தளையறப் பரிந்திட் டானே.

2895 நற்பொறி குயிற்றி வல்லான் செய்ததோர் நன்பொற் பாவை
பொற்பொறி கழல எல்லாப் பொறிகளுங் கழல்வ தேபோற்
சொற்பொறி சோர எல்லாப் பொறிகளுஞ் சோர்ந்து நம்பன்
இற்பொறி இன்பம் நீக்கி இரா்யிரர் சூழச் சென்றான். உஅ௯

2896 தணக்கிறப் பறித்த போதுந் தான்அளே விடுத்தல் செல்லா
நிணப்புடை உடம்பி னுரை யாதினால் நீக்க லாகும்
மணப்புடை மாலே மார்பன் ஒருசொலே ஏது வாகக் [ன்.
கணேக்கவின் அழித்தகண்ணார்த் துறந்துபோய்க்கடவுளானு

2897 தூமமார்ந் தணங்கு நாறுஞ் சுரும்புசூழ் தாரி னானும்
தாமமார் ஒலியல் ஐம்பாற் சயமதித் திருவும் ஆர்ந்த
காமமா சுண்ட காதற் கதிர்வளேத் தோளி னாரும்
நாமநாற் கதியும் அஞ்சி நற்றவத் துச்சி கொண்டார். உ௯௦

வேறு

2898 ஆசாரம் நாணத் தவஞ்செய்தலர்க் கற்ப கத்தார்ச்
சாசார னென்னுந் தகைசால்ஒளித் தேவர் கோவாய்
மாசார மாய மணிவானுல காண்டு வந்தாய்
தூசார்ந்த அல்குற் றுளும்புநலத் தாரோ டென்றான். உ௯க

2899 மின்னார் சிலம்பிற் சிலம்புங்குர லன்னம் மேனாள்
மன்னா பிரித்தாய் பிரிந்தாய்சிறை வைத்த தனாற்
பொன்னார மார்ப சிறைப்பட்டனே போலு மென்றான்
இன்னாப் பிறவிப் பிணிக்கின்மருந் தாய சொல்லான். உ௯உ

வேறு

2900 மஞ்சிவர் மணிவரை யனேய மாதவன்
வஞ்சமில் அறவுரை பொதிந்த வாய்மொழி
அஞ்சினன் இருந்துழி அம்பு வீழ்ந்தென
நஞ்சுமிழ் வேலினான் நடுங்க வீழ்ந்ததே. உ௯௩

2901 வாரணி மணித்துடி மருட்டு நுண்ணிடைக்
காரணி மயிலனார் சூழக் காவலன்
ஏரணி மணிமுடி இறைஞ்சி ஏத்தினான்
சீரணி மாதவர் செழும்பொற் பாதமே. உ௯௪

2902 நலத்திரு மடமகள் நயந்த தாமரை
நிலத்திருந் திருசுடர் நிமிர்ந்து செல்வபோல்
உலப்பருந் தவத்தினால் ஓங்கு சாரணர்
செலத்திரு விசும்பொளி சிறந்த தென்பவே. உகூரு

21. தாயத்தீர்வு

2903 சாரணர் போயபின் சார்தம் ஏந்திய
வாரணி வனமுலை வஞ்சிக் கொம்பனார்
போரணி புலவுவேற் கண்கள் பூத்தன
நீரணி குவளைநீர் நிறைந்த போன்றவே. உகூகூ

2904 பொன்வரை நிலாக்கதிர் பொழிந்து போர்த்தபோல்
தென்வரைச் சந்தனந் திளைக்கு மார்பினான்
மின்னிவர் நுசுப்பினர் மெலிய மெல்லவே
இன்னுரை கொடான்கொடிக் கோயில் எய்தினான். உகூஎ

2905 அஞ்சுரை பொழிந்தபா லன்ன மென்மயிர்ப்
பஞ்சிமெல் லணையின்மேற் பரவை யல்குலார்
மஞ்சிவர் மதிமுகம் அழுங்க வைகினர்
நஞ்சுயிர்த் தணிகலங் கரிந்து நையவே. உகூஅ

வேறு

2906 வெள்ளெயிற் றரவு மேய்ந்த மிச்சிலின் மெலிந்து மேகப்
புள்வயிற் பிறந்த புட்போல் ஒன்றலா துரைத்தல் தேற்றார்
கள்வயிற் றலர்ந்த கோதைக் கலாபவில் உமிழும் அல்குல்
ஒள்ளெயிற் றவர்கள் பொன்பூத் தொளிமணி உருவம் நீத்தார்.

2907 கிளிச்சொலின் இனிய சொல்லார் கிண்கிணி சிலம்போ டேங்கக்
குளித்துநீ ரிரண்டு கோலக் கொழுங்கயல் பிறழ்ப வேபோற்
களித்துநீர் சுமந்து வாட்கண் கலாய்ப்பிறழ்ந் தலமந் தாட
அளித்ததா ரலங்க லாழி அவன்துற வுரைத்தும் அன்றே.

2908 புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற
கனைகுரல் உருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த
துனைகுரல் முரசத் தானைத் தோன்றலைத் தம்பி னென்றான்
நனைமல ரலங்கற் கண்ணி நந்தனுந் தொழுது சேர்ந்தான்.

2909 கொடியணி யலங்கல் மார்பிற் குங்குமக் குன்ற மன்னான்
அடிபணிந் தருளு வாழி அரசருள் அரச என்னப்
படுசின வெகுளி நாகப் பைத்தலை பனித்து மாழ்க
இடியுமிழ் முரசம் நாண இன்னணம் இயம்பி னானே. ௩௦௨

2910 ஊனுடைக் கோட்டு நாகான் சுரிமுக ஏற்றை ஊர்ந்து
தேனுடைக் குவளைச் செங்கேழ் நாகிளந் தேரை புல்லிக்
கானுடைக் கழனிச் செந்நெற் கதிரணைத் துஞ்சு நாடு
வேல்மிடை தானைத் தாயம் வீற்றிருந் தாண்மோ என்றான்.

2911 கரும்பலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழன நாடுஞ்
சுரும்புலாங் கண்ணி விண்ணோர் துறக்கமும் வீடும் வேண்
அரும்புலா யலர்ந்த அம்மென் தாமரை யனைய பாதம்[டேன்
விரும்பியான் வழிபட் டன்றோ வாழ்வதென் வாழ்க்கை யென்றான்.

2912 குன்றென மருண்டு கோல மணிவண்டுங் குழாங்கொள் தேனு
சென்றுமொய்த் திமிரும் யானைச் சீவகற் கிளைய நம்பி [ம்
மன்றல்வீற் றிருந்து மின்னு மணிக்குவ டனைய தோளான்
ஒன்றுமற் றரசு வேண்டான் உவப்பதே வேண்டி னானே.

2913 பொலிவுடைத் தாகு மேனும் பொள்ளலிவ் வுடம்பென் றெண்ணி
வலியுடை மருப்பி னல்லால் வாரணந் தடக்கை வையா(து)
ஒலியுடை உருமுப் போன்று நிலப்படா தூன்தின் வைவேற்
கலிகடிந் துலகங் காக்குங் காளையைக் கொணர்மி னென்றான்.

2914 கழுமணி யார மார்பிற் காவலன் மக்கள் காய்பொன்
எழுவளர்ந் தனைய திண்டோள் இளையவர் தம்முள் மூத்த
தழுமலர்க் கொம்பு போலுந் தத்தைநாட் பயந்த நம்பி
விழுமணிப் பூணி னானை வீற்றிரீஇ விதியிற் சொன்னான்.

2915 பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாங்
கோல்வளை யாமற் காத்துன் குடைநிழற் றுஞ்ச நோக்கி
நூல்விளைந் தனைய நுண்சொற் புலவரோ டறத்தை யோம்பின்
மேல்விளை யாத இன்பம் வேந்தமற் றில்லை கண்டாய். ௩௦௮

2916 வாய்ப்படுங் கேடும் இன்றாம் வரிசையின் அரிந்து நாளுங்
காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின்
வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞால மெல்லாம் நிதிநின்று சுரக்கு மன்றே. ௩௦௯

2917 நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர் இரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி என்றான். ௩௧௦

2918 ஆர்வலஞ் சூழ்ந்த ஆழி அலைமணித் தேரை வல்லான்
நேர்நிலத் தூரு மாயின் நீடுபல் காலஞ் செல்லும்
ஊர்நிலம் அறிதல் தேற்றா தூருமேல் முறிந்து வீழும்
தார்நில மார்ப வேந்தர் தன்மையும் அன்ன தாமே. ௩௧௧

2919 காய்ந்தெறி கடுங்கற் றன்னைக் கவுட்கொண்ட களிறு போல
ஆய்ந்தறி வுடைய ராகி அருளொடு வெகுளி மாற்றி [டாய்
வேந்தர்தாம் விழைப வெல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்
நாந்தக உழவ ரேறே நன்பொரு ளாவ தென்றான். ௩௧௨

2920 குடிபழி யாமை ஓம்பிற் கொற்றவேல் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுதல் அஞ்சி
நொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்தம் நீந்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு கொழித்துணர் குமர என்றான்.

2921 சேல்நடந் தாங்கு மோடிச் சென்றுலாய்ப் பிறழும் வாட்கண்
மான்மட நோக்கின் மாதர் மாலைநாட் பயந்த மைந்தன்
கானடந் தனைய மான்தேர் காளையைக் காவல் மன்னன்
தானுடன் அணிந்து தன்போல் இளவர சாக்கி னானே.

2922 கூரெயி றணிந்த கொவ்வைக் கொழுங்கனிக் கோலச் செவ்
வரணி மயிலஞ் சாயல் இலக்கணை ஈன்ற சிங்கஞ் [வாய்
சீருடைச் செம்பொற் கண்ணிச் சிறுவனைச் செம்பொன்மாரி
பேரறைந் துலக முண்ணப் பெருநம்பி யாக என்றான்.

2923 தன்கழல் தொழாத மன்னர் தாஞ்சுமந் தேந்தி நின்ற
பொன்திகழ் உருவிற் றம்பி புதல்வனைத் தந்து போற்றி
மின்திகழ் முடியுஞ் சூட்டி வீற்றிரீஇ வேந்து செய்தான்
குன்றினங் குழீஇய போலுங் குஞ்சரக் குழாத்தி னானே.

2924 நிலஞ்செதிள் எடுக்கு மான்தேர் நித்திலம் விளைந்து முற்றி
நலஞ்செய்த வைரக் கோட்ட நாறுமும் மதத்த நாகம் [ம்
குலஞ்செய்த குமரர்க் கெல்லாங் கொடுத்தனன் நிதியும் நாடு
உலஞ்செய்த வைரக் குன்றம் ஓரிரண் டனைய தோளான்.

2925 நாற்கிடங் கொடுத்தகேள்வி நுண்செவிமண்கொள் ஞாட்பில்
வேற்கிடங் கொடுத்த மார்பின் வில்வலான் தோழர் மிக்கள்
நாற்கடல் வளாகங் காக்கும் நம்பிதன் கண்க ளாகப்
பாற்கடற் கேள்வி யாரைப் பழிப்பற நாட்டி னானே. ௩க௮

2926 காவலர் அகல மென்னுங் கழனியுள் உழுது காமர்
மாவலம் விளைத்த கோட்டு மழகளிற் றரச னன்னான்
பூவலர் கொடிய னாரை விடுக்கிய கோயில் புக்கான்
தூவலர் ஒலிய லார்தம் வலக்கண்கள் துடித்த அன்றே.

22. துறவுணர்த்தல்

2927 செம்பொனாற் செறிய வேய்ந்து திருமணி முகடு கொண்ட
வெம்புகீள் சுடருஞ் சென்னி விலங்கிய மாடம் எய்தி
அம்பொனாற் றெளிந்த பாவை யனையவர் தம்மி னென்றான்
பைம்பொனல் வளர்க்கப் பட்ட பனைதிரண் டனைய தோளான்.

வேறு

2928 தின்பளித மாலைத்திரள் தாமந்திகழ் தீம்பூ
நன்கொளிசெய் தாமநறும் பூநவின்ற தாமும்
பொன்தெளித்த தாமம்புரி முத்தமிளிர் தாமம்
மின்தெளித்த மின்னுமணி வீழ்ந்ததிரள் தாமம். ௩உக

2929 ஈன்றமயில் போல்நெடிய தாமத்திடை எங்கும்
மான்றுமணம் விம்முபுகை மல்கிநுரை யேபோல்
தோன்றுமணிக் கால்அமளித் தூவணையின் மேலார்
மூன்றுலகம் விற்குமுலை முற்றிழையி னாரே. ௩உஉ

2930 இன்னதருள் என்றிளையர் ஏத்தஞிமி றார்ப்ப
மின்னினிடை நோவமிளிர் மேகலைகள் மின்னப்
பொன்னரிய கிண்கிணியும் பூஞ்சிலம்பும் ஏங்க
மன்னனடி சேர்ந்திறைஞ்சி வாழியென நின்றார். ௩உ௩

2931 கலவமயில் கால்குவித்த போலுங்கமழ் ஐம்பால்
நிலவுமணி மேகலை நிலாவுமிழும் பைம்பூண்
இலவமலர் வாயினணி கூரெயிற்றி னீரே
உலவுமனம் வைத்துறுதி கேண்மினம் இதென்றான். ௩உ௪

வேறு

2932 வாயழல் உயிர்க்கும் ஆழி மன்னவன் குறிப்பு நோக்கி
வேயழத் திரண்ட மென்றோள் வெம்முலைப் பரவை யல்குற்
றேய்பிழி அலங்க லார்தந் தொன்னலந் தொலைந்து வாடிக்
காயழற் கொடியைச் சேர்ந்த கற்பக மாலை யொத்தார். ௯௨௫

2933 கருங்கடற் பிறப்பின் அல்லால் வலம்புரி காணுங் காலைப்
பெருங்குளத் தென்றுந் தோன்றா பிறைநுதற் பிணைய னீரே
அருங்கொடைத் தானம் ஆய்ந்த அருந்தவந் தெரியின் மண்மேல்
மருங்குடை யீவர்கட் கல்லால் மற்றையர்க் காவ துண்டே.

2934 அட்டுநீர் அருவிக் குன்றத் தல்லது வயிரந் தோன்றா
குட்டநீர்க் குளத்தின் அல்லால் குப்பைமேற் குவளை பூவா
விட்டுநீர் வினவிக் கேண்மின் விழுத்தகை யவர்கள் அல்லாற்
பட்டது பகுத்துண் பாரிப் பார்மிசை இல்லை கண்டீர்.

2935 நரம்பொலி பரந்த கோயில் நன்னுதல் மகளிர் தூவும்
பெருபலிச் சோற்றின் ஈதல் பெரிதரி தாகு மேனுஞ் [ம்
சுரும்பொலி கோதை யார்தம் மனைவயிற் றாண்டொ றாட்டு
அரும்பலி யனைத்தும் ஈயின் அதுபொருட் குன்று கண்டீர்.

2936 அற்றவர் வருத்தம் நீக்கி ஆருயிர் கொண்டு நிற்குந்
துற்றவிழ் ஈதல் செம்பொற் றுறக்கத்துக் கேணி யாகும்
உற்றுயிர் ஓம்பித் தீந்தேன் ஊனொடு துறப்பின் யார்க்கும்
மற்றுரை யில்லை மண்ணும் விண்ணும்நம் அடிய அன்றே.

வேறு

2937 மாலைப் பந்தும் மாலையும் ஏந்தி மதுவார்பூஞ்
சோலைம் மஞ்ஞைச் சூழ்வளை யார்தோள் விளையாடி
ஞாலங் காக்கும் மன்னவ ராவார் நறவுண்ணுச்
சீலங் காக்குஞ் சிற்றுப கார முடையாரே. ௯௩0

2938 மாசித் திங்கள் மாசின சின்னத் துணிமுள்ளின்
ஊசித் துன்ன மூசிய ஆடை உடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார். ௯௩௧

வேறு

2939. காட்டகத் தொருமகன் துரக்கு மாக்கலை
ஓட்டுடைத் தாமெனின் உய்யும் நங்களை
ஆட்டியிட் டாருயிர் அளைந்து கூற்றுவன்
ஈட்டிய விளைமதுப் போல உண்ணுமே. ௩௩௨

2940 புள்ளுவர் கையினும் உய்யும் புள்ளுள
கள்ளவிழ் கோதையீர் காண்மின் நல்வினை
ஒள்ளியான் ஒருமகன் உரைத்த,தென்னன்மின்
தெள்ளியீர் அறத்திறந் தெரிந்து கொண்மினே. ௩௩௩

2941 மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும்
தேய்தலும் உடைமையைத் திங்கள் செப்புமால்
வாய்புகப் பெய்யினும் வழுக்கி நல்லறங்
காய்வது கலதிமைப் பால தாகுமே. ௩௩௪

2942 புள்ளிநீர் வீழ்ந்தது பெருகிப் புன்புலால்
உள்வளர்ந் தொருவழித் தோன்றிப் பேரறம்
உள்குமேல் முழுப்புலாற் குரம்பை உய்ந்துபோய்
வெள்ளநீர் இன்பமே விளைக்கும் என்பவே. ௩௩௫

2943 பாற்றுளி பவளநீர் பெருகி ஊன்திரண்(டு)
ஊற்றுநீர்க் குறும்புழை உய்ந்து போந்தபின்
சேற்றுநீர்க் குழியுளே அழுந்திச் செல்கதிக்(கு)
ஆற்றுணாப் பெறுதழு தலறி வீழுமே. ௩௩௬

2944 திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்
வருந்தினும் அறத்தினை மறத்த லோம்புமின்
கரும்பெனத் திரண்டதோட் கால வேற்கணீர். ௩௩௭

2945 மந்திரம் மருந்திவை யில்லை யாய்விடின்
ஐந்தலை யரவினை யாவர் தீண்டுவார்
சுந்தரச் சுரும்புசூழ் மாலை யில்லையேல்
மைந்தரும் மகளிரை மருங்கு சேர்கிலார். ௩௩௮

2946 பொன்துலாம் பொன்னனீர் தருதும் பாகுநீர்
தின்றலாற் சிறுவரை யானுஞ் சொற்சில

இன்றெலாம் எம்மருங் கிருந்து பேசினல்
வென்றுலாம் வேற்கணீர் விழுத்தக் கீர்களே. ௩௩௯

வேறு

2947 மெய்ப்படு சாந்தும் பூவும் மிகநனி கமழு மேனுங்
கைப்படு சாந்தும் பூவுங் கொண்டலாற் கலக்க லாகா[தோற்
ஐப்படு பித்து நெய்த்தோர் அசும்புசோர் அழுகற் புன்
பொய்ப்பட உரைத்த துண்டோ பொன்னனீர் நம்முள் நாமால்.

2948 அனிச்சத்தம் போது போலத்
தொடுப்பவே குழைந்து மாழ்கி
இனிச்செத்தாம் பிறந்த போழ்தே
என்றுநாம் இதனை எண்ணித்
தனிச்சித்தம் வைத்தல் தேற்றும்
தளர்ந்துகண் பரப்பி நோக்கிப்
பனித்துமென் றுற்ற போழ்தே
பழுதிலா அறிவின் என்னும். ௩௪௧

2949 நீல்நிறங் கொண்ட ஐம்பால் நிழல்மணி உருவம் நீங்கிப்
பால்நிறங் கொண்டு வெய்ய படாமுலை பையிற் றூங்கி
வேல்நிற மழைக்கண் தாமும் இமைகுறைந் தழுகி மேனி
தான்நிறங் கரக்குங் காலந் தையலீர் மெய்ய தன்றே. ௩௪௨

வேறு

2950 குஞ்சரம் அயாவுயிர்த் தனைய குய்கமழ்
அஞ்சுவை யடிசிலை அமர்ந்துண் டார்கள்தாம்
இஞ்சிமா நகரிடும் பிச்சை ஏற்றலால்
அஞ்சினேன் துறப்பல்யான் ஆர்வம் இல்லையே. ௩௪௩

23. அந்தப்புரவிலாவணை

2951 ஒருவர்தம் வலிகெடும் உடன்று பொங்கிமேல்
இருவர்மற் றியைந்தெழுந் திருப்பின் என்பபோல்
உருவநுண் ணுசுப்பிற இருந்த ஒண்மணிப்
பரியகட் படாமுலைப் பைம்பொற் கொம்பனீர். ௩௪௪

2952 காதலம் கழிந்தநாள் இதனின் இப்புறம்
ஏதிலம் என்றசொற் செவிச்சென் றெய்தலும்
மாதரார் மழைமலர்த் தடங்கண் மல்குநீர்
போதுலாம் மார்பின்வாய்ப் பொழிந்து வீழ்ந்தவே. ௬௪௫

வேறு

2953 செருக்கி நிணந்தின்று சிவந்து மன்னர் உயிர்செற்ற [ண்
நெருப்புத் தலைநெடுவேற் கண்ணார் கண்ணீர் நிழல்மணிப்பூ
பரப்பி னிடைப்பாய்ந்து குளமாய்ப் பாலார் படாமுலையை
வருத்தி மணிநெடுங்கோட் டருவி போல வீழ்ந்தனவே.

2954 அழலேந்து வெங்கடுஞ்சொல் உருமே றுண்டாங் கலர்சிந்தி
நிழலேந்து பூங்கொடிகள் நிலஞ்சேர்ந் தாங்கு நிலஞ்சேர்ந்து
கழலேந்து சேவடிக்கீழ்க் கண்ணீர் வெள்ளங் கலந்திரப்பக்
குழலேங்கு மாறேங்கி அழுதார் கோதை மடவாரே. ௬௪௭

வேறு

2955 குலிகஅஞ் சேற்றுள் நாறிக் குங்கும நீருள் ஓங்கிப்
பொலிகென வண்டு பாடப் பூத்ததா மரைகள் போலும் [ப்
ஒலிகழல் அடிகள் நுங்கீழ்ப் பிழைத்ததென் உரைமின்என்னு
புலிநிழற் பட்ட மான்போற் போகுயி ராகி நின்றார். ௬௪௮

2956 அருந்தவி சாகி எம்மைச் சுமந்தயா வுயிர்த்த ஆண்மைப்
பெருந்தகு குறங்கு காள்நீர் பெண்ணுயிர் அளிய தாமே
வருந்துமால் என்று நோக்கீர் வாடுமால் ஆவி என்னீர்
விருந்தினர் போல நின்றீர் வெற்றுடல் காண்மின் என்பார்.

2957 கோதையுந் துகிலும் ஏந்திக் குங்குமம் எழுதிக் கொய்பூந்
தாதுகொண் டளகத் தப்பித் தடமுலை வருடிச் சேர்ந்து
காதல்கொண் டிருந்த காமர் கைவிரல் அளிய நீரும்
ஏதில ராகிக் கோமான் எண்ணமே எண்ணி னீரே. ௬௫௦

2958 பஞ்சிகொண் டெழுதி யார்ந்த சீறடி பனித்தல் அஞ்சிக்
குஞ்சிமேல் ஏற்ற கோமான் கொப்புளித் திட்ட எம்மை
வஞ்சித்தீர் மணிசெய் தோள்காள் வாங்குபு தழுவிக் கொள்ளீர்
நெஞ்சம்நீர் வலியீ ராகி நிற்பிரோ நீரும் என்பார். ௬௫௧

2959 முட்டிவட் டனைய கோல முத்துலாய்க் கிடந்து மின்ன
மட்டுவிட் டலர்ந்த கோதை மதுவொடு மயங்கி நாளும்

ஒட்டியிட் டுறைய எங்கட் குயரணை யாய மார்பம்
நட்புவிட் டொழியு மாயின் நன்மையார் கண்ண தம்மா.

2960 மாக்கவின் வளரத் தீண்டி மணிநகை நக்கு நாளும்
பூக்கவின் ஆர்ந்த பைந்தார் புனைமதுத் தேனொ டேந்தித்
தாக்கிளம் முலைகள் தம்மை நெருக்கினய் தரணி மன்னின்
நீக்கினீ எம்மை நோக்காய் நீத்தியோ நீயும் என்பார்.

2961 அன்னமே தோகை நல்யாழ் அமுதமே ஆய்ந்த தீந்தேன்
இன்னரே நங்கை மாரென் றேத்திய பவளச் செந்நா
என்னைநீ கண்ட தெம்மை இரண்டுநா வாயி னுயே
மன்னன்போல் ஈர மின்றி வலித்தனை வாழி என்பார்.

2962 பூணினல் நெருங்க நொந்து பொதிர்த்தன வெம்பி யென்று
நாணினல் வருத்தந் தீர்ப்பான் நன்முலைக்கண்கள் தம்மைப்
பேணிநீர் எழுதி ஓம்பிப் பேரின்பங் கொண்டு தந்தீர்
காண்மினே இன்றெம் வண்ணங் கண்ணிலீர் கண்களென்பார்.

2963 சென்னிமேல் மிதித்த அஞ்செஞ் சீறடித் திருவில் வீச
மின்னிவாள் ஆரஞ் சிந்த வெறுநிலத் துறைந்து நீஎம்
இன்னகை முறுவல் பார்த்தாய் இன்றெம தாவி பார்த்தாய்
மன்னிய மாலை வண்டார் மணிமுடி வாழி என்பார். ௩௫௬௫

2964 வீங்குபாற் கடலும்நஞ்சாய் விளைந்ததால் விரிந்த வெய்யோன்
பாங்கிலா இருளை ஈன்று பார்மறைத் திட்ட தாலோ
தீங்கதிர்த் திங்கள் செந்தீச் சொரிந்ததால் திசைக ளெல்லாந்
தாங்குமா றென்னை ஆவி தரிக்கிலேம் தேவிர் காளோ.

வேறு

2965 விண்ணோர் மடமகள்கொல் விஞ்சை மகளேகொல்
கண்ணார் கழிவனப்பிற் காந்தருவ தத்தையென்(று)
எண்ணுய வாள்நெடுங்கண் மெய்கொள்ள வமுற்றுப்
பண்ணுற் பயின்றீர் இனிஎன் பயில்வீரே. ௩௫௬௮

2966 கொல்வேல் நெடுங்கட் குணமாலை குஞ்சரத்தால்
அல்லல்நோ யுற்றுளுக் கன்று களிறடர்த்துப்
புல்லிப் புணர்முலையின் பூங்குவட்டின் மேலுறைந்தாய்
எல்லேமற் றெம்பெருமாற் கின்றிவளும் இன்னுளோ.

2967 தூம்புடைய வெள்ளெயிற்றுத் துத்தி அழல்நாகப்
பாம்புடைய நோக்கிப் பதுமை பவளவாய்
தேம்புடைய இன்னமுதாச் சேர்ந்தாய்க் கினியதுவே
ஆம்புடைய நஞ்சடங்கிற் றின்றாறிற் றாகாதோ. ௩௬௦

2968 தாழ்ந்துலவி மென்முலைமேல் தண்ணாரம் வில்விலங்கப்
போழ்ந்தகன்ற கண்ணினால் ஏப்பெற்றுப் போகலாய்
தாழ்ந்தமரர் இன்னமிர்தந் தக்கநாட் டாகாதே
வீழ்ந்ததென வீழ்ந்தாய்நீ இன்றதுவும் விட்டாயோ. ௩௬௧

2969 கண்ணே கயலோ கழுநீரோ காவியோ
பெண்ணே அமுதோ பிணையோ எனப்பிதற்றித்
துண்ணென் சிலைத்தொழிலுங் காட்டிமுன் இன்புற்றீர்
புண்மேற் கிழிபோற் றுறத்தல் பொருளாமோ. ௩௬௨

2970 பொன்னகர வீதி புகுந்தீர் பொழிமுகிலின்
மின்னின் இடைநுடங்க நின்றாள்தன் வேல்நெடுங்கண்
மன்னன் நகரெல்லாம் போர்ப்ப வலைப்பட்டார்க்(கு)
இன்னே ஒளியிழந் தின்னா இடுகினவோ. ௩௬௩

2971 செங்கச் சிளமுலையார் திண்கறையூர் பல்லினார்
மங்கையர்கள் காப்ப மகிழ்ந்தாளை நீமகிழ்ந்து
பங்கயமே போல்வாளைப் பார்ப்பானாய்ப் பண்ணணைத்துத்
தங்கினாய் கோவே துறத்தல் தகவாமோ. ௩௬௪

2972 புல்லார் உயிர்செகுத்த பொன்னந் திணிதோளாய்
மல்லார் அகன்மார்ப மட்டேந்தி வாய்மடுத்திட்(டு)
எல்லாருங் காண இலக்கணையோ டாடினாய்
அல்லாந் தவள்நடுங்க அன்பின் அகல்வாயோ. ௩௬௫

24. கோயில் விலாவணை

2973 கல்லேர் மரனும் இரங்கக் கலுழ்ந்துருகி
எல்லாத் திசைதோறும் ஈண்டி இளமயில்போற்
சொல்லாத் துயர்வார் தொழுவார் அழுவாராய்
அல்லாந் தகன்கோயில் ஆழ்கடல்போல் ஆயிற்றே. ௩௬௬

2974 பூப்பரிவார் பொன்செய் கலம்பரிவார் பொன்வளையை
நீப்பிர் எனப்புடைப்பார் நீள்தாமஞ் சிந்துவார்

எப்பெற்ற மான்பிணைபோல் ஏங்குவார் இன்னுயிரைக்
காப்பரேற் காவலனார் காவாரோ இன்றென்பார். ௩௬௭

2975 கழுநீருந் தாமரையுங் கண்டனவே போலும்
முழுநீர்வேற் கண்ணும் முகமும் உலறிச்
செழுநீர் மணிக்கொடிகள் காழகஞ் சேர்கொம்பாய்
அழுநீர வாயலறி அல்லாப்ப போன்றாரே. ௩௬௮

வேறு

2976 பண்ணார் பணைமுழவம் பாடவிந்து பன்மணியாழ்
மழலை நீங்கிப்
புண்ணார் புனைகுழலும் ஏங்கா புனைபாண்டில்
இரங்கா வான்பூங்
கண்ணார் ஒலிகவுள கிண்கிணியும் அஞ்சிலம்புங்
கலையும் ஆரா
மண்ணார் வலம்புரியும் வாய்மடங்கிக் கோன்கோயில்
மடிந்த தன்றே. ௩௬௯

2977 அணியார் மணியரக்கு வட்டமுத்தி வைத்தனைய
செங்கண் மாத்தாட்
பிணியார் பெருந்துருத்தி யன்ன பெருங்கவுள
பிறையேர் கோட்ட
பணியார் கமழ்கடாத் தண்ணல் அரசுவாப்
பண்ணார் பாய்மா
இணையாது மில்லாத கண்ணீர்வீழ்த் துண்ணாநின்
றினைந்த தாமே. ௩௭௦

2978 கழித்த கடிப்பிணையுங் கைவளையும் மாலையுங்
களைந்து முத்துந்
தெழித்த நறுஞ்சாந்துஞ் சுண்ணமும் பன்மணியுங்
கலனுஞ் சிந்தி
விழித்து வியன்கோயில் பன்மீன் பரந்திமைக்கும்
பனியார் வானம்
பழித்துப் பசும்பொன் னுலகு குடிபோயிற்
றொத்த தன்றே. ௩௭௧

2979 அழலார் சுரையெயிற்று வெஞ்சினவா யைந்தலை
சுமந்த நாகம்
நிழலார் திருமணியுந் தேவர் திருமுடிமேல்
நிலவி வீசுஞ்
சுழலார் பசும்பொன்னும் வேய்ந்து சொரிகதிர்மென்
பஞ்சி யார்ந்த
கழலான் நகரம் அமுது கடைகடல்போற்
கலங்கிற் றன்றே. ௩௭௨

25. நகர விலாவணை

வேறு

2980 நீர்நிறை குளத்து மாரி சொரிந்தென நறுநெய் துள்ளும்
நேர்நிறை பொரியுங் குய்யும் வறைகளும் நிவந்த வாசம்
பார்நிறை அடிசிற் பள்ளி தளியொடு சாலை யெல்லாம்
ஊர்நிறை உயிர்த்த வின்றி உயிர்சென்ற போன்ற அன்றே.

2981 கோட்புலிச் சுழல்கண் அன்ன
கொழுஞ்சுவைக் கருணை முல்லை
மோட்டிள முகையின் மொய்கொள்
கொக்குகிர் நிமிரல் வெண்சோ(று)
ஊட்டுறு கறிகொள் தேமாங்
கனிசுவைத் தயிரொ டேந்தி
வேட்டவர்ப் பெறுது வீதி
வெறுநிலங் கிடந்த அன்றே. ௩௭௪

2982 மைந்தர்தம் வண்கை யான்முன்
மணிவள்ளத் தெடுத்த தேறல்
பைந்துகில் மகளிர் மேவார்
பாசிழை பசும்பொன் மாலை
சிந்தியே கரந்தார் சொற்போல்
மெய்யின்கட் சேற லின்றாய்ச்
சந்தனச் சாந்தொ டாரந்
தாங்கலின் இழந்த அன்றே. ௩௭௫

2983 தாழிவாய் மறைக்குந் தண்ணென் தடம்பெருங் குவளைக்
மூழிவாய் முல்லை மாலை முலைமுகம் முரிந்து நக்க [கண்ணார்

யாழின்வாய் முழவம் விம்ம ஆட்டொழிந் தயர்ந்து தீந்தேன்
ஊழிவாய்க் கொண்ட தொக்கும் பாடலும் ஒழிந்த தன்றே.

2984 அருங்கலம்நிறைந்தஅம்பூம் பவழக்கால்திகழும்பைம்பொற்
பெருங்கிடு கென்னுங் கோலப் பேரிமை பொருந்தி மெல்ல
ஒருங்குடன் நகர மெல்லாம் உறங்குவ தொத்த தொல்லென்
கருங்கடல் கல்லென் சும்மை கரந்ததும் ஒத்த தன்றே.

2985 கலைநுலாய் நிமிர்ந்த அல்குற் கடல்விளை அமுத மன்னார்
முலையுலாய் நிமிர்ந்த மொய்தார் முழவுமுத் துரிஞ்சிமின்னச்
சிலையுலாய் நிமிர்ந்த மார்பன் திருநகர் தெருள்க லாதாய்
நிலையிலா உலகின் தன்மை நீர்மைமீக் கூறிற் றன்றே. ௩௭௮

வேறு

2986 கூந்தல் அகிற்புகையும் வேள்விக் கொழும்புகையும்
ஏந்து துகிற்புகையும் மாலைக் கிடும்புகையும்
ஆய்ந்த பொருளொருவர்க் கீயா அதிலோப
மாந்தர் புகழேபோல் தோன்றா மறைந்தனவே. ௩௭௯

2987 புல்லுண் புரவி புலம்பு விடுகுரல்போல்
நல்லவளை போழரவம் நாரை நரல்குரல்போற்
கல்லா இளையர் கலங்காச் சிரிப்பொலியுங்
கொல்யானைச் சங்கொலியுங் கூடா தொழிந்தனவே. ௩௮0

2988 பொற்புடைய பூமாலை சாந்தம் புனைகலன்கள்
கற்புடைய மங்கையரிற் காவ லவையிழந்த
நற்புடைய தேனார் நறவும் புலமில்லார் [வே.
சொற்பொருள்போல் வேட்கப் படாசோர்ந் தொழிந்தன

2989 தீம்பால் கிளிமறந்து தேவர் அவிமடங்கித்
தூம்பார் நெடுங்கைம்மாத் தீங்கரும்பு துற்றாவாய்
ஆம்பால் உரைமடங்கி யாரும் பிறர்பிறராய்க்
காம்பார் நடுவிருட்கட் காடேபோல் ஆயிற்றே. ௩௮௨

2990 நீர்முழங்கு நீல நெடுமேக மால்யானைத்
தேர்முழங்கு தானைத் திருமாலின் முன்துறப்பான்
பார்முழங்கு தெண்டிரைபோற் செல்வந்தம் பாலர்க்கீந்(து)
ஊர்முழுதும் நாடும் உரவோன்தாள் சேர்ந்தவே. ௩௮௩

26. துறவு வலியுறுத்தல்

வேறு

2991 கொல்லுலைப் பொங்கழற் கிடந்த கூரிலை
மல்லல்வேல் இரண்டொரு மதியுள் வைத்தபோற்
செல்லநீண் டகன்றகஞ் சிவந்த கண்ணினார்
அல்லலுற் றழுபவர்க் கரசன் சொல்லினான். ௩௮௪

வேறு

2992 நற்றவம் பரவை ஞாலம் நாமுடன் நிறுப்பின் வையம்
அற்றமில் தவத்திற் கென்றும் ஐயவி அனைத்தும் ஆற்றா(து)
இற்றென வுணர்ந்து நிற்பிற் றிருமகள் என்றும் நீங்காள்
பற்றொடே நிற்பின் என்றுந் திருமகள் பற்றல் செல்லாள்.

2993 உப்பிலிப் புழுக்கல் காட்டுட் புலைமகன் உகுப்ப ஏகக்
கைப்பலி உண்டு யானும் வெள்ளில்மேற் கவிழ நீரும்
மைப்பொலி கண்ணின் நீரால் மனையகம் மெழுகி வாழ
இப்பொருள் வேண்டுகின்றீர் இதனைநீர் கேண்மின்என்றான்.

2994 கொல்சின யானை பார்க்குங் கூருகிர்த் தறுகண் ஆளி
இல்லெலி பார்த்து நோக்கி இறப்பின்கீழ் இருத்த லுண்டே
பல்வினை வெள்ளம் நீந்திப் பகாவின்பம் பருகின் அல்லால்
நல்வினை விளையுள் என்னும் நஞ்சினுட் குளித்த லுண்டே.

2995 ஆற்றிய மக்க ளென்னும் அருந்தவ மிலார்க ளாகிற்
போற்றிய மணியும் பொன்னும் பின்செலா பொன்ன னீரே
வேற்றுவ ரென்று நில்லா விழுப்பொருள் பரவை ஞாலம்
நோற்பவர்க் குரிய வாகும் நோன்மினம் நீரும் என்றான்.

2996 காதலஞ் சேற்றுட் பாய்ந்த மதியெனுங் கலங்கல் நீரை
ஊதுவண் டுகுத்த தாரான் உவர்ப்பினின் உரிஞ்சித் தேற்ற
மாதரார் நெஞ்சந் தேறி மாதவஞ் செய்தும் என்றார்
காதலான் காத லென்னும் நிகளத்தால் நெடுங்க ணாரே.

2997 தூமஞ்சால் கோதை யீரே தொல்வினை நீத்தம் நீந்தி
நாமஞ்சால் கதியின் நீங்கி நன்பொன்மேல் உலகின் உச்சி
ஏழஞ்சால் இன்பம் வேண்டின் என்னொடு வம்மின் என்றான்
காமஞ்சாய்த் தடர்த்து வென்ற காஞ்சனக் குன்றம் அன்னான்.

2998 நாடகம் நயந்து காண்பார் நலங்கிளர் கண்கள் மூன்றும்
ஆடகக் கலத்து ளான்பால் அமிர்தினை நயந்துண் பாரை
நீடகம் வெகுண்டுங் கையாற் பிடித்தும்நீ றட்டி யிட்டேங்
கோடகம் அணிந்த கோல முடியினைத் துறத்தும் என்றார்.

வேறு

2999 சாந்தங் கிழிய முயங்கித் தடமலராற்
கூந்தல் வழிபட்ட கோவேநீ செல்லுலகில்
வாய்ந்தடியேம் வந்துன் வழிபடுநாள் இன்றேபோற்
காய்ந்தருளல் கண்டாய் எனத்தொழுதார் காரிகையார்.

27. தேவிமார் துறவு

வேறு

3000 தெண்டிரை நீத்தம் நீந்தித் தீங்கதிர் சுமந்து திங்கள்
விண்படர்ந் தனைய மாலை வெண்குடை வேந்தர் வேந்தன்
கண்டிரள் முத்த மாலைக் கதிர்முலை நங்கை மாரை
வெண்டிரை வியக்குங் கேள்வி விசயைகண் அபயம் வைத்தான்.

3001 கடிமலர் நிறைந்து பூத்த கற்பகக் கொம்புங் காமர்
வடிமலர் மலர்ந்த காம வல்லியுந் தம்மைத் தாமே
உடைமலர் கொய்து போக உகுத்திடு கின்ற தொத்தார்
படைமலர் நெடுங்கண் நல்லார் பாசிழை நீக்கு கின்றார்.

3002 தழுமலர்த் தாமம் நான்று சந்தகில் மணந்து விம்முஞ்
செழுமணி நிலத்துச் செம்பொற் றிருமுத்த விதான நீழல்
எழுமையும் பெறுக என்னும் எழில்முலை நெற்றி சூழ்ந்தார்
கழுமிய துகிலிற் காமன் கண்புடைத் திரங்க மாதோ.

3003 நறும்புகை நான நாவிக் குழம்பொடு பளிதச் சுண்ணம்
அறிந்தவர் ஆய்ந்த மாலை அணிந்தபைங் கூந்தல் ஆய்பொன்
நிறந்தரு கொம்பு நீலக் கதிர்க்கற்றை உமிழ்வ வேபோற்
செறிந்திருந் தகுத்துச் செம்பொற் குணக்கொடி யாயி னரே.

28. பெரிய யாத்திரை

வேறு

3004 இலம்பெரி தெனஇரந் தவர்கட் கேந்திய
கலஞ்சொரி காவலன் கடகக் கையிணை
புலம்புரிந் துயர்ந்தன இரண்டு பொன்னிற
வலம்புரி மணிசொரி கின்ற போன்றவே. ௩௬௭

3005 என்பரிந் தெரிதலைக் கொள்ள ஈண்டிய
அன்பரிந் திடுகலா உலகம் ஆர்கென
மின்சொரி வெண்கலம் வீசும் வண்கைகள்
பொன்சொரி தாமரைப் போது போன்றவே. ௩௬௮

3006 பூந்துகில் புனைகல மாலை பூசுசாந்(து)
ஆய்ந்துல குணஉவந் தருளி மாமணி
காந்திய கற்பகக் கானம் ஆயினன்
ஏந்திய மணிமுடி இறைவன் என்பவே. ௩௬௯

வேறு

3007 தேய்பிறை உருவக் கேணித் தேறுநீர் மலர்ந்த தேனார்
ஆய்நிறக் குவளை அஞ்சிக் குறுவிழிக் கொள்ளும் வாட்கண்
வேய்நிறை அழித்தமென்தோள் விசயையைத்தொழு தவாழ்த்திச்
சேய்நிறச் சிவிகை சேர்ந்தான் தேவர்கொண் டேகி னாரே.

29. சமவசரண வருணனை

வேறு

3008 நரம்பெழுந் திரங்கின வீணை நன்குழல்
பரந்துபண் ணுயிர்த்தன பைய மெல்லவே
விரந்துபட் டியம்பின முழவம் வீங்கொலி
சுரந்தன சுடர்மணிப் பாண்டில் என்பவே. ௪௦௧

3009 மங்குலாய் அகிற்புகை மணந்து கற்பகப்
பொங்குபூ மாலைகள் பொலிந்து பூஞ்சுணந்
தங்கிஇத் தரணியும் விசும்புந் தாமரோ
செங்கதிர்த் திருமணிச் செப்புப் போன்றவே. ௪௦௨

வேறு

3010 திலக முக்குடைச் செல்வன் திருநகர்
பலரும் ஏத்தினர் பாடினர் ஆடினர்
குலவு பல்லியங் கூடிக் குழுமிநின்(று)
உலக வெள்ளம் ஒலிப்பது போன்றவே. ௩௦௩

3011 கான்நி ரைத்தன காவொடு பூம்பொய்கை
தேன்இ ரைத்தன செம்பொன் நெடுமதில்
மேல்நி ரைத்தன வெண்கொடி அக்கொடி
வான்உ ரிப்பன போன்று மணந்தவே. ௩௦௪

3012 கோலம் முற்றிய கோடுயர் தூபையுஞ்
சூலம் நெற்றிய கோபுரத் தோற்றமும்
ஞாலம் முற்றிய பொன்வரை நன்றரோ
காலம் உற்றுடன் கண்ணுற்ற போன்றவே. ௩௦௫

3013 வாயிற் றோரணங் கற்பக மாலைதாழ்ந்(து)
ஏயிற் றிந்திரன் பொன்னக ரின்புறம்
போயிற் றேஅகி லின்புகை போர்த்துராய்
ஞாயிற் றொள்ளொளி நைய நடந்ததே. ௩௦௬

3014 செய்ய தாமரைப் பூவினுள் தேங்கமழ்
பொய்யில் சீர்த்திவெண் தாமரை பூத்தபோன்(று)
ஐயஞ் செய்தடு பால்நிறப் புள்ளினம்
மையில் தாமரை மத்தகஞ் சேர்ந்தவே. ௩௦௭

3015 மல்லன் மாக்கட லன்ன கிடங்கணித்(து)
ஒல்லென் சும்மைய புள்ளொலித் தோங்கிய
செல்வ நீர்த்திருக் கோயில்இம் மண்மிசை
இல்லை யேற்றுறக் கம்மினி தென்பவே. ௩௦௮

வேறு

3016 விளங்கொளி விசும்பறுத் திழிந்து மின்னுதார்த்
துளங்கொளி மணிவண்ணன் தொழுது துன்னினான்
வளங்கெழு மணிவரை நெற்றிப் பாற்கடல்
இளங்கதிர்ப் பரிதியொத் திறைவன் தோன்றினான். ௩௦௯

3017 வினையுதிர்த் தவர்வடி வின்ன தென்னவே
வனைகதிர்த் தடக்கைவைத் திருந்த வாமனார்
கனைகதிர்த் திருமுகம் அருக்க னாகவான்
புனைமலர் தாமரை பூத்த தொத்தவே. சகO

3018 இரிந்தன இருவினை இலிர்த்த மெய்ம்மயிர்
சொரிந்தன கண்பனி துதித்துக் காதலால்
அரிந்தது மணிமிட றலர்பெய்ம் மாரிதூஉய்த்
திரிந்தனன் வலமுறை திலக மன்னனே. சகக

3019 முத்தொளிர் தாமமும் உருவ மாமணித்
தொத்தொளிர் தாமமுஞ் சொரிபொற் றாமமும்
தத்துநீர்த் தண்கடற் பவளத் தாமமும்
வைத்தபூந் தாமமும் மலிந்து தாழ்ந்தவே. சகஉ

3020 மணிவரை எறிதிரை மணந்து சூழ்ந்தபோல்
அணிமயிர்க் கவரிகள் அமரர் ஏந்தினார்
துணிமணி முக்குடை சொரிந்த தீங்கதிர்
பணிமணிக் காரிருள் பருகு கின்றதே. சகங

3021 முழாத்திரள் மொய்ம்மலர்த் தாமந் தாழ்ந்துமேல்
வழாத்திரு மலரெலா மலர்ந்து வண்டினங்
குழாத்தொடும் இறைகொளக் குனிந்து கூய்க்குயில்
விழாக்கொள விரிந்தது வீரன் பிண்டியே. சகச

3022 பிண்டியின் கொழுநிழற் பிறவி நோய்கெட
விண்டலர் கனைகதிர் வீரன் தோன்றினான்
உண்டிவண் அறவமிர் துண்மி னோவெனக்
கொண்டன கோடணை கொற்ற முற்றமே. சகரு

3023 வானவர் மலர்மழை சொரிய மன்னிய
ஊனிவர் பிறவியை ஒழிக்கும் உத்தமன்
தேனிமிர் தாமரை திளைக்குஞ் சேவடி
கோனமர்ந் தேத்திய குறுகி னானரோ. சகசு

3024 குருகுலஞ் சீவக குமரன் கோத்திரம்
மருகலில் காசிபம் அடிகள் வாழிஎன்(று)
எரிமணி முடிநில முறுத்தி ஏத்தினான்
புரிமணி வீணைகள் புலம்ப என்பவே. சகஎ

3025 மன்னவன் துறவெனத் துறத்தல் மாண்பெனப்
பொன்வரை வாய்திறந் தாங்குப் புங்கவன்
இன்னுரை எயிறுவில் உமிழ வீழ்ந்தது
மின்னியோர் வியன்மழை முழங்கிற் றொத்ததே. சகஅ

30. சீவகன் துறவு

வேறு

3026 காய்களிற்றி னிடைமருப்பிற் கவளம்போன் றேமாராக்
கதியுட் டோன்றி
ஆய்களிய வெவ்வினையின் அல்லாப்புற் றஞ்சினேன்
அறிந்தார் கோவே
வேய்களிய வண்டறைய விரிந்தலர்ந்த தாமரையின்
விரைசேர் போதின்
வாயொளியே பெறநடந்த மலரடியை வலங்கொண்டார்
வருந்தார் போலும். சகக

வேறு

3027 சேடார் செம்பொற் றிருமணி வைரத் தொத்தணிந் துலகோம்பும்
வாடா மாலை வார்தளிர்ப் பிண்டி வாமநின் குணம்நாளும்
பாடா தாரைப் பாடா துலகம் பண்ணவர் நின்னடிப்பூச்
சூடா தார்தாள் சூடார் மாலைச் சுடர்மணி நெடுமுடியே.

வேறு

3028 வைய மூன்றும் உடனேத்த வளரும் திங்கள் வாளெயிற்(று)
ஐய அரிமா மணியணைமேல் அமர்ந்தோய் நின்னை அமராதார்
வெய்யவெந்நோய் வினையுகைப்ப வீழ்ந்து துன்பக்கடலழுந்தி
நெய்கை நுண்ணூல் நாழிகையின் நிரம்பா நின்று சுழல்வரே.

3029 தொழுதிப் பன்மீன் குழாஞ்சூழத்
துளும்பா திருந்த திங்கள்போல்
முழுதும் வைய முடனேத்த
முதுவாய் வலவை யாயிருந்(து)
அழுது வினைகள் அல்லாப்ப
அறைந்தோய் நின்சொல் அறைந்தார்கள்
பழுதில் நறுநெய்க் கடற்சுடர்போற்
பல்லாண் டெல்லாம் பரியாரே. சஉஉ

3030 செழும்பொன் வேய்ந்து மணியழுத்தித்
திருவார் வைரம் நிரைத்ததனுள்
கொழுந்தும் மலருங் கொளக்குயிற்றிக்
குலாய சிங்கா தனத்தின்மேல்
எழுந்த பரிதி இருந்தாற்போல்
இருந்த எந்தை பெருமானே
அழுந்தேன் வந்துன் அடியடைந்தேன்
அருவாய்ப் போதல் அழகிதோ. ௪௨௫

வேறு

3031 குண்டலமும் பொற்றோடும் பைந்தாருங் குளிர்முத்தும்
வண்டலம்பு மாலையும் மணித்தொத்தும் நிலந்திவள
விண்டலர்பூந் தாமரையின் விரைததும்ப மேல்நடந்த
வண்டலர்பூந் திருவடியை மணிமுடியின் வணங்கினான்.

3032 நிலவிலகி உயிரோம்பி நிமிர்ந்தொளிர்ந்து பசிபகைநோய்
உலகமிருள் கெடவிழிக்கும் ஒண்மணி அறவாழி
அலகையிலாக் குணக்கடலை அகல்ஞான வரம்பானை
விலையிலா மணிமுடியால் விண்வியப்ப இறைஞ்சினான். ௪௨௬

3033 தூய்த்திரள் மணித்தாமஞ் சொரிந்துபொன் நிலம்நக்கப்
பூத்திரள் மணிமாலைப் போர்ச்சிங்கம் போதகம்போல்
ஏத்தரிய குணக்கடலை இகலின்ப வரம்பானைத் [திருந்தான்.
தோத்திரத்தால் துதித்திறைஞ்சித் துறப்பேனென் றெழுந்

வேறு

3034 முடியணி அமரரும் முலைநல் லார்களும்
புடைபணிந் திருந்தஅப் புலவன் பொன்னகர்
கடிமலர்க் கற்பகங் காம வல்லியோ(டு)
இடைவிராய் எங்கணும் பூத்த தொத்ததே. ௪௨௭

3035 ஒத்தொளி பெருகிய உருவப் பொன்னகர்
வித்தகன் வலஞ்செய்து விழுப்பொற் பூமிபோய்
முத்தக மயிரென வளர்த்த கைவினைச்
சித்திரக் காவகம் செல்வன் எய்தினான். ௪௨௮

3036 ஏமநீர் உலகமோர் இம்மிப் பாலென
நாமவேல் நரபதி நீக்கி நன்கலந்
தூமமார் மாலையுந் துறக்கின் றானரோ
காமனார் கலங்கழிக் கின்ற தொத்ததே. ௪௨௯

3037 மணியுறை கழிப்பது போல மங்கலப்
பணிவரும் பைந்துகில் நீக்கிப் பாற்கடல்
அணிபெற அரும்பிய அருக்க னாமெனத்
திணிநிலத் தியன்றதோர் திலக மாயினான். ௪௩0

3038 மலிந்தநன் மாலைகள் வண்ணப் பூந்துகில்
நலிந்துமின் நகுமணி நன்பொற் பேரிழை
மெலிந்தனென் சுமந்தென நீக்கி மேல்நிலைப்
பொலிந்ததோர் கற்பகம் போலத் தோன்றினான். ௪௩௧

3039 திருந்திய கீழ்த்திசை நோக்கிச் செவ்வனே
இருந்ததோர் இடிக்குரற் சிங்கம் பொங்கிமேற்
சுரிந்ததன் னுளைமயிர் துறப்ப தொத்தனன்
எரிந்தெழும் இளஞ்சுடர் இலங்கு மார்பினான். ௪௩௨

3040 அஞ்சுடர்த் தாமரைக் கையி னால்மணிக்
குஞ்சிவெண் படலிகைக் குமரன் நீப்பது
செஞ்சுடர்க் கருங்கதிர்க் கற்றை தேறுநீர்
மஞ்சுடை மதியினுட் சொரிவ தொத்ததே. ௪௩௩

3041 வேலைவாய் மணியிலை ஊழ்த்து வீழ்ப்பதோர்
காலைவாய்க் கற்பக மரத்திற் காவலன்
மாலைவாய் அகில்தவழ் குஞ்சி மாற்றலிற்
சோலைவாய்ச் சுரும்பினந் தொழுது சொன்னவே. ௪௩௪

3042 தங்கிடை யிலாத்திருக் கேசந் தன்னையுங்
கொங்குடைக் கோதையுங் கொய்து நீக்கினாய்
நுங்கடை நோக்கிநாம் வாழும் வாழ்க்கையும்
எங்கிடை யவரினி எங்குச் செல்பவே. ௪௩௫

3043 என்றன தேனினம் இரங்கு வண்டொடு
சென்றன விடுக்கிய செல்வன் பொன்மயிர்
இன்றொடு தொழுதனம் நும்மை யாமென
மன்றலுண் டவைவலங் கொண்டு சென்றவே. ௪௩௬

3044 மேற்படு கற்பக மாலை வேய்ந்துபொன்
ஏற்புடைப் பட்டிகை எடுத்துக் கொண்டுபோய்
நாற்கடல் கடந்தவன் நமோவென் றிட்டிடப்
பாற்கடற் பனிமதி போல வீழ்ந்ததே. ௪௩௭

வேறு

3045 ஏவா இருந்த அடிகளிவர்வாய்ச்சொற்
கோவா மணிகொழித்துக் கொண்டாலே போலுமால்
சாவா கிடந்தார் செவிச்சார்த்தின் அப்பொழுதே
மூவா அமரராய் முத்தணிந்து தோன்றுவரே. ௪௩௮

3046 தோளா மணிகுவித்தாற் போன்றிலங்கு தொல்குலத்துச்
சூளா மணியாய்ச் சுடர இருந்தானை
வாளார் முடிவைர விற்றிளைத்து வண்டாற்றுந்
தாளார ஏத்திப்போய்த் தன்கோயில் புக்கானே. ௪௩௯

3047 புக்கான் சுதஞ்சணனும் பொற்றா மரைமகளிர்
தொக்காலே போலுந்தன் தேவிக் குழாஞ்சூழ
மிக்கான் குணம்பாடி ஆடி மிகுதீம்பால்
தொக்க கடல்போற் சுதங்கள் நிறைந்தனவே. ௪௪௦

3048 பற்றார்வஞ் செற்றம் முதலாகப் பாம்புரிபோல்
முற்றுந் துறந்து முனிகளாய் எல்லாரும்
உற்றுயிர்க்குத் தீம்பால் சுரந்தோம்பி உள்ளத்து
மற்றிருள் சேரா மணிவிளக்கு வைத்தாரே. ௪௪௧

3049 கோமான் அடிசாரக் குஞ்சரங்கள் செல்வனபோற்
பூமாண் திருக்கோயிற் புங்கவன்தாள் சேர்ந்தேத்தித்
